It has also been alleged that the Harijans of the area were not given adequate protection, even though it was known that there was considerable tension between the Thevars and the Harijans. I have already explained in detail the elaborate Police arrangements which were made for ensuring peace in the area, from the time of the last general elections. In fact, at present the entire Special Armed Police of this State and 4 companies which the Andhra State has very kindly lent us in this emergency are deployed in that area. They will be kept there till the people of that locality feel assured that their life and property will be safe. Honourable Members will however agree with me that police arrangements alone cannot ensure lasting peace unless the people of the locality learn to sink their petty differences and live in harmony as common citizens of a free country.

It has been alleged that these clashes are not really communal in their origin but political. This controversy is as unnecessary as it is unedifying. The only political element in these regrettable incidents is that the deep-rooted communal animosities in this area have been deliberately worked up by interested political groups. Unfortunate as these happenings are, it is even more tragic that these should have been exploited by interested parties for their own political propaganda.

In any case, may I now appeal to all sections of this House, to help remove this rancour, which is a blot on the fair name of Tamilnad. I would also request this House to endorse my appeal to the Members of both the communities involved in the clashes, not to fritter away their energies in this manner. The need of the hour is that all energies should be canalized towards the constructive tasks now being undertaken in this area.

I would also like to place on record Government's deep sympathy with the families of those who lost their lives during the riots and also to those other victims who have suffered injuries or losses to property.

There are certain things which should be kept above politics, above the petty wrangling of political groups, there are certain problems towards solving which all public workers should unite in common endeavour irrespective of party affiliations. It is the duty of all those who cherish the interests of our country to help in creating in the riot-affected areas an atmosphere of good-will, sympathy and mutual understanding. I have already referred to the twofold programme taken up by Government to meet the situation. The first is to take all steps to restore law and order and ensure protection to the people. The second is the implementation of schemes, intended to raise the economic, social and cultural levels

[Sri M. Bhaktavatsalam] [26th October 1957

of life, in these areas which have for long remained obstinately backward. In this formidable task, Government will not only be willing but happy, to have the help and constructive co-operation of all public workers.

It is my hope and prayer, and I am sure it is also the hope and prayer of the Honourable Members here present, that the ugly incidents which have ravaged the area will never recur, and that all the communities in the district will in future be able to live in complete amity and peace.

SRI M. KALYANASUNDARAM: Sir, . . .

MR. SPEAKER: There cannot be any discussion on the statement made by the Hon. Minister.

SRI M. KALYANASUNDARAM: Sir, I am not rising to discuss the statement. I am only trying to make a suggestion to the Chair. It would be better if a copy of the statement made by the Hon. Minister is circulated to the Members before this evening as it contains some useful information which will be helpful for further study of the matter.

MR. SPEAKER: I would like to know from the Hon. Minister whether there is any objection to the suggestion made by the hon. Member.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I think hon. Members would perhaps desire a Tamil version of the statement to be circulated to them. I shall arrange to get it translated, copied and circulated to them. But, it may not be possible to circulate it before this evening. I shall, however, arrange to have it circulated to them on the 28th morning.

SRI M. KALYANASUNDARAM: Pending the circulation of the Tamil translation of the statement, I suggest that copies of the statement in English may be circulated to at least the leaders of all parties before this evening.

SRI K. VINAYAKAM: Sir, the statement just now read by the Hon. Minister is too long to be assimilated by just hearing it. It is a good piece of literature and I would like the Hon. Minister to arrange to circulate the English copies of the statement to the Members beforehand so that we may be prepared for the discussion.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I shall try to get the English copy of the statement circulated to the Members before the House rises to-day.

SRI A. VEDARATHNAM PILLAI: இந்த முதுகளத்தூர் சம்பவம் இரு வகுப்பினர்களுக்குள்ளே ஏற்பட்டது. அது மரவர்களுக்கும் பள்ளர்களுக்கும். . . ஒரு சின்ன திருத்தம். . . ஒரு தவறு இருக்கிறது. கனம் மந்திரி அவர்கள் அறிக்கையிலே தேவர் என்று சொல்லியிருப்பது பல ஜாதி . . .



26th October 1957]

MR. SPEAKER: கனம் மந்திரி அவர்கள் இந்த ஸ்டேட்மெண்ட் கொடுத்த பிறகு எந்தவிதமான கேள்வியோ அல்லது திருத்தமோ செய்யக்கூடாது என்று 81-வது விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை தாங்கள் தயவு செய்து கேட்டுக்கொள்ளவேண்டும். இந்த ஸ்டேட்மெண்ட் விவாதத்திற்கு வரும்போது கேள்விகள் கேட்கலாம் அல்லது திருத்தப் பிரேரணைகள் கொடுக்கலாம். இந்த நேரத்தில் அப்படி ஒன்றும் செய்யக் கூடாது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I shall try to have the English copy of the statement circulated to the Members before the House rises to-day. I shall also try to get the Tamil version of the statement circulated to the Members on the 28th morning.

## V.—BUSINESS OF THE HOUSE *RE* BUSINESS ADVISORY COMMITTEE'S DECISION ON THE SITTINGS OF THE PRESENT SESSION.

MR. SPEAKER: The Hon. Leader of the House, however dissatisfied he is with the decisions of the Business Advisory Committee, will now place those decisions before the House for its approval.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, the Business Advisory Committee met yesterday and the following recommendations have been made by it for the acceptance of this House.

" The House will sit up to and inclusive of the 16th November 1957." These dates have been fixed with reference to the elections which have got to take place to the Council of States.

" The House will sit from 9 a.m. to 1-30 p.m. from the 26th October 1957 onwards.

The 31st October 1957, the 7th and the 14th November 1957 are allotted for the transaction of non-official business."

The statement made by the Hon. Minister for Home this morning on the law and order situation in Ramanathapuram district will be discussed on the 28th and 29th October 1957.

" The White Paper " on Local Administration will be considered on the 4th and 5th November 1957.

The Report of the Legislature Committee on Education will be considered on the 6th and 8th November 1957.

Government Bills will be taken on the following days:—

| | |
|---|---|
| 29th October 1957 | The Madras District Boards (Amendment) Bill, 1957. |
| 30th October 1957 | The Motor Vehicles (Madras Amendment) Bill, 1957. |
| 1st November 1957 and | The Madras (Transferred Territory) Re-enacting Bill, 1957. |

[Sri C. Subramaniam] [26th October 1957

| | |
|---|---|
| 2nd November 1957 | The Madras Repealing and Amending Bill, 1957. |
| | The Madras (Transferred Territory) Extension of Laws Bill. |
| | The Madras Registration of Veterinary Practitioners Bill, 1957. (As passed by the Council.) |
| | The Madras Money Lenders Bill, 1957. |

Then, we have the Supplementary Statement of Expenditure for 1957–58. In accordance with the assurance which I had already given, viz., that the supplementary grants will not be sought once for all towards the end of the year, but they will be placed before the House at least twice—once during the November-December session and again during the budget session, the following programme has been fixed :—

| | |
|---|---|
| "Presentation of the Supplementary Statement of Expenditure. | Monday, 11th November 1957. |
| General discussion and Voting of Demands for Grants. | Friday, 15th November 1957. |
| Consideration of the Appropriation Bill .. | Saturday, 16th November 1957." |

I hope the House will agree to the programme recommended by the Business Advisory Committee.

SRI M. KALYANASUNDARAM : Sir, I had suggested that the Language Commission report may be taken up for discussion in this House. May I know whether any provision has been made for that?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is the difficulty of not attending the Business Advisory Committee meeting. I hope that the hon. Member will give us the benefit of his presence at least in future meetings of the Committee. We do not have sufficient number of copies of the report of the Language Commission for purposes of study and discussion here now. I have, however, made a suggestion that I may informally meet the Leaders of all parties and discuss this subject and decide what action should be taken in the Assembly as such. I hope the hon. Member Sri Kalyanasundaram will be satisfied with the procedure to be adopted by me in this matter.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, 28th and 29th October 1957 have been allotted for the discussion of the No Confidence Motion. Now, it is stated that the statement of the Hon. Minister for Home will also be discussed on the 28th and 29th October 1957. So . . .

MR. SPEAKER : I presume that in the discussion on the No Confidence Motion, all those items will figure in the speeches made by the hon. Members. Therefore, allotment of separate dates



26th October 1957] [Mr. Speaker]

for the discussion of the report may not be necessary. Anyway, let us see the trend of discussion on the 28th and 29th October 1957 and then we can decide.

I suppose the House agrees with the recommendations of the Business Advisory Committee.

The recommendations of the Business Advisory Committee were put and carried.

## VI.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1957.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I beg to present the Report [a] of the Select Committee on the Madras General Sales Tax (Amendment) Bill, 1957 (L.A. Bill No. 10 of 1957).

### (2) THE MADRAS DISTRICT BOARDS (AMENDMENT) BILL, 1957.

MR. SPEAKER : The Hon. Srimathi Lourdhammal Simon will move the Bill.

SRI M. KALYANASUNDARAM : The amendments given notice of by hon. Members have not yet been circulated.

MR. SPEAKER : Sri Kalyanasundaram's amendment is with me here. There is another amendment given notice of by Sri N. K. Palanisami. The difficulty was, as usual, the Bill appeared in the *Fort St. George Gazette* and the Assembly Secretariat could not get sufficient number of copies. It was presumed that the publication in the Gazette was enough. Evidently, hon. Members did not read the Gazette thoroughly. In the circumstances, I will allow hon. Members to give notice of amendments up to 11-30 a.m. to-day.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Mr. Speaker, Sir, I beg to introduce the Madras District Boards (Amendment) Bill[b], 1957, and move—

"that the Bill be taken into consideration at once."

The House may be aware that the term of office of the Members of all district boards in this State will expire on 31st October 1957, afternoon. While moving Demand No. XXVI during the last budget session, I made a statement about the future of district boards in this State. Therein I stated that the Government proposed to introduce a Bill during this session with a view to authorising the postponement of elections to these bodies which have now fallen due. The reason which prompted the Government to take this decision was that it is likely that some time next year, district boards would have to be abolished altogether or reconstituted in a manner different from that at present in force and that the time

[a] Printed as Appendix on pages 78–81 infra.
[b] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 16th October 1957.

[Srimathi Lourdhammal Simon] [26th October 1957

labour and expenditure of public funds involved in holding elections now would not be justified. A decision regarding the permanent set-up of local administration throughout the State including the important question whether the district boards should be continued or not will have to be taken shortly. The revised White Paper on Local Administration which will be placed to-day or tomorrow before this House contains among other things the provisional conclusions of Government regarding the future of district boards. It is proposed to transfer the functions now performed and the powers now exercised by the district boards to the Panchayat Unions which will be formed in every National Extension Service Block in the State. Final decisions will be taken on these important proposals only after the matter is thoroughly discussed by the Legislature. It is, therefore, proposed to postpone the elections to district boards and to appoint Special Officers to take charge of all district boards with effect from the date of expiry of the term of office of the existing members.

The Bill which is now before the House is intended to provide the statutory sanction necessary for these purposes. The sanction is sought for only a limited period, that is to say, up to 31st October 1958. Before this period expires, proposals for permanent legislation on the future organisation of Local Administration in this State will be placed before the Legislature.

MR. SPEAKER : The question is—

"that the Madras District Boards (Amendment) Bill, 1957, be taken into consideration at once."

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

"that the Madras District Boards (Amendment) Bill, 1957, be referred to a Select Committee with instructions to report before the 28th of this month."

10.20 a.m. கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா இந்தமாதிரி திடீரென்று வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மந்திரி சபைக்குப் பல வேலைகள் இருந்திருக்கலாம். ஆகவே இந்தப் பிரச்சனை—ஜில்லா போர்டுகளை எவ்வாறு திருத்தி அமைக்க வேண்டுமென்ற பிரச்சனையானது—கடந்த இரண்டு வருஷ காலமாக ஆலோசனையில் இருந்து வந்தபோதிலும்கூட அதன்மேல் எந்த மாதிரியான முடிவு எடுப்பது என்பதைத் தீர்மானிப்பதற்கு மந்திரி சபைக்கு அவகாசம் இல்லாததால் இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

காலாகாலத்தில் தேர்தலை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தாலும் நவம்பர் முதல் தேதி அன்று புதிதாக தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் புது ஜில்லா போர்டுகளை அமைக்க வழி ஏற்பட்டிருக்கும். அதற்கும் இவர்கள் தயார் செய்யவில்லை. ஆனால் மந்திரி அவர்கள் சுற்றுப்பிரயாணத்தின்போது பல விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சிக்காரர்களுக்கு வேண்டுமானால் இந்த விஷயம் எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்பது தெரியாமல் இருந்திருக்கும். மந்திரி சபையில் உள்ளவர்களுக்கு இவ்விஷயம் எப்படி ஆகப்போகிறது. மந்திரி சபையில் இருக்கக்கூடிய மெஜாரிடி பலத்தை வைத்துக்கொண்டு என்ன தீர்மானத்தைக் கொண்டுவரலாம் என்பதை நிச்சயிக்கக்கூடிய வசதி அவர்களுக்கு இருக்கிறது. ஆகையால் இந்தச் சபை முன்பு இந்த மசோதாவைக் கொடுவரவேண்டுமானால் என்ன என்ன திட்டங்களைப்



26th October 1957] [Sri M. Kalyanasundaram]

போடவேண்டுமோ அதை எல்லாம் போட்டு அக்டோபர் மாதம் முடியும் தருவாயில் நம் மீது இந்தமாதிரி ஒரு மசோதாவைக் கொண்டுவந்து சுமத்தி இருப்பது பொருத்தம் இல்லை என்று நினைக்கிறேன்.

சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் எந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும் அதன் முடிவு எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியும் எனச் சொல்வார்கள். அதே மனோபாவம்தான் இந்த மசோதாவைத் தயாரிப்பதிலிருந்து இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

ஜில்லா போர்டுகளை நிர்வாகம் செய்கிறவர்கள் யாரும் இல்லை. ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள்தான் அங்கும் நிர்வாகம் செய்கிறார்கள். அதுதான் சிறந்தது என்பது என்னுடைய அபிப்பிராயம். தனிப்பட்ட அதிகாரிகள் எப்படி நடந்து கொள்வதாக இருந்தாலும், அவர்கள் மோசமாகவே நடக்கிறார்கள் என்றாலும்கூட அதுவே சிறந்து இருக்கும் என்பதே என் அபிப்பிராயம். ஆகவே இப்போது ஜில்லா போர்டுகளையே கலைப்பது என்றாலும்—இல்லை வேறு ஸ்பெஷல் அதிகாரிகளை நியமிப்பது என்றாலும் சரியில்லை. ஜில்லா போர்டுகளைக் கலைப்பதானால் அப்படிக் கலைப்பதற்குள், ஜில்லா போர்டுகளின் காலம் அக்டோபர் மாதத்தோடு முடிவு அடைவதனால் இதற்கு இடையில் இருக்கும் காலத்தில் என்ன ஸ்தாபனம் வரவேண்டும் என முடிவு செய்வதுதான் இப்போது நம் முன்னால் இருக்கக்கூடிய விஷயம். அதுவும் அவசரம் அவசரமாக முடிவு செய்யப்படவேண்டிய விஷயம். அதற்கு இந்த மசோதா சரியில்லை என்பதுதான் எனது அபிப்பராயம். இந்த மசோதாவில் ஒரு விஷயத்தை மட்டும் என்னால் ஒப்புக்கொள்ளமுடியும். அக்டோபர் 31ந் தேதிக்குள் இப்போது தேர்தலை நடத்த முடியும் என்பது சாத்தியமில்லை. அப்படிச் செய்ய வேண்டும், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்கள் நவம்பர் முதல் தேதியில் புதிதாக ஜில்லா போர்டுகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது என் நோக்கம் இல்லை. அவசரமாக ஒன்றைச் செய்தாலும் சரியாகச் செய்ய முடியாது. ஆனால் இப்போது இருக்கக்கூடிய ஜில்லா போர்டுகளினுடைய ஆயுள் காலத்தையே இன்னும் 6 மாத காலத்திற்கு நீட்டக்கூடிய அதிகாரம் நமக்கு இருக்கிறது. அந்த அதிகாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர அவற்றைக் கலைத்துவிட்டு ஸ்பெஷல் ஆபீசர்களைப் போடுவது என்பது சரியல்ல என்பது என் அபிப்பிராயம்.

இப்போது இருக்கக்கூடிய ஜில்லா போர்டுகள் கேவலமாக நடந்ததாகவோ, மோசமாக நடந்ததாகவோ நமக்கு புகார் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. அதை உடனே கலைத்துவிட்டு ஸ்பெஷல் ஆபீசர்களைப் போடவேண்டிய நிர்ப்பந்தம் என்ன என்பதைப் பற்றியும் மந்திரி அவர்கள் கொடுத்த அறிக்கையில் காணோம். பின்னால் பேசுகின்ற சந்தர்ப்பத்தில் இதைப்பற்றிப் பேசுவார்களோ, என்னவோ. எனக்குத் தெரியவில்லை. இப்போது இருக்கக்கூடிய ஜில்லா போர்டுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டிய அவசியம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. 11-ஏ செக்ஷன் பிரகாரம் இன்னும் 6 மாத காலத்திற்கு இப்போது இருக்கக் கூடிய ஜில்லா போர்டுகளின் ஆயுள் காலத்தை நீடிப்பதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படிச் செய்ய மந்திரி அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கலாம். இவர்கள் நினைத்திருந்தால் எந்த மாதிரியான ஸ்தாபனம் ஜில்லா போர்டுகளைக் கலைத்துவிட்டு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானித்திருக்க முடியும். அதுதான் இல்லை என்றாலும் இடையில் நான் சொல்கிறமாதிரியாகச் செய்திருந்தாலும் ஆட்சேபனை இருந்திருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். தேர்தலை வேண்டுமானால் 6 மாத காலத்திற்கு ஒத்திப்போட்டு, வேண்டுமானால் ஜில்லா போர்டு பதவி காலத்தை நீடித்து போர்டின் அதிகாரத்தை எடுத்துக்கொள்வதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. அப்படி ஜில்லா போர்டு காலத்தை நீடிப்பதாக இருந்தால், ஸ்பெஷல் ஆபீசரை நியமிப்பது கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏனென்றால் ஸ்தல ஸ்தாபன அபிவிருத்தி திட்ட வேலைகளெல்லாம் ஓரளவு பதவி காலத்திலேயே நிறைவேற்றப்பட வேண்டும்.

[Sri M. Kalyanasundaram] [26th October 1957

இந்த நிலைமையில் ஸ்பெஷல் ஆபீசரை நியமித்தால் அவர்களுக்கு ஜில்லா போர்டின் அடிப்படை கொள்கைப்பற்றி ஒன்றும் தெரியாமல் இருக்கும். ஆதலால் திட்டவேலைகள் மேலும் மேலும் வளர்ச்சி அடைவதற்கு இல்லாமல் தடை ஏற்படும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த திட்ட வேலைகளெல்லாம் பதவி காலத்திலேயே ஓரளவு நிறைவேறறப் படவேண்டும். இவைகளெல்லாம் இன்னும் 6 மாதத்திற்கு ஒத்திப் போட்டு அபிவிருத்தி வேலைகளை தொடர்ந்து செய்வதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மசோதாவை பரிசீலனைக்கு செலக்ட் கமிட்டிக்கு விட்டு அதன் ரிபோர்ட்டை 28ம் தேதிக்குள் சமர்ப்பிக்கும்படியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே இந்த திருத்தத்தை சபைமுன் கொண்டுவருகிறேன்.

* SRI K. VINAYAKAM: Mr. Speaker, Sir, I rise to oppose the amendment of the hon. Member Sri Kalyanasundaram and support the Bill that is under discussion. Sir, I speak out of practical experience, for I happen to be a Member of the District Board of Chingleput.

Sir, District Boards have been constituted some years ago with a laudable purpose but now they have outlived that laudable purpose. No useful or utilitarian service is being turned out by the existing district boards in the sence, that the development work in the State has been delegated to bodies like Community Development Project and Nation Extension Service. Virtually powers have been taken away from the existing District Boards except the power relating to the appointment and transfer of teachers from one area to another—just to quote an anecdote 'kicking the football from one area to the other area'. Sir, good work was being turned out in the days when institutions of this type were not in vogue but now what is the work actually turned out by the district boards. Even the power regarding laying of roads has been taken away from them. Even the power relating to the opening of institutions like veterinary centres, maternity centres, hospitals and dispensaries, has been taken away from their operation and entrusted to Block Development institutions. The only work that is now left with the district boards is the appointment of teachers and the opening of some schools under the Five-Year Plan. Even the opening of schools is not in the power of the district board, with the result that the district board meetings are a mere farce. I have been attending meetings every month. The only work that is turned out by the members, President and the Vice-President of the Board is 'manoeuvring' in respect of the appointment and transfer of teachers . . .

MR. SPEAKER: That might not be a correct word for the hon. Member to use.

SRI K. VINAYAKAM: Sir, I have been strong in my expressions. That is the actual state of affairs.

MR. SPEAKER: The hon. Member is casting aspersion on the President of the district board.

SRI K. VINAYAKAM: I will use soft language, Sir. That is the only work turned out by the district board now. Most of the district boards suffer for want of good finance. They always complain of tender finance and then they approach the Government for money to augment their finances. Actually very little work is now entrusted to the district board. Even the proposal of the district board to the public to contribute 25 per cent of the amount intended for a scheme is not received warmly by them, with the result that the District Boards do not serve the laudable purpose for which they had been contemplated in the beginning. Therefore, it is right and it is proper that they should be completely abolished.



26th October 1957] [Sri K. Vinayakam]

But what next, is the question. The Government should bear it in mind, the types of institutions that have got to be created in the political vacuum that would result naturally by the abolition of district boards. Sir, these district boards have been serving one good purpose by creating and developing second line of leaders to take up administration of the State. I have perused the list of the Cabinet Ministers in the past and most of the Ministers from the days of the Justice Party up to now were at one time or other President of the district board. They were trained in the administration in a smaller sphere. After acquiring qualities of good leadership and good administration, they have got opportunities of getting into the Cabinet. This has been so in the case of the Raja of Panagal, Sri B. Muniswami Naidu, Sri K. V. Reddi and lastly now Mr. Bhaktavatsalam who was once the President of the Chingleput District Board. So, Sir, a good avenue for training for leadership is there but that scope will be removed if the Government abolish the district boards. But the Government should create institutions of such type which could be useful in giving training for second line leadership . . .

SRI N. K. PALANISAMI: On a point of order, Sir.

SRI K. VINAYAKAM: I am not yielding.

MR. SPEAKER: The only person who could say that he would not yield is the Minister. The hon. Member Mr. Vinayakam has not yet become a Minister.

SRI N. K. PALANISAMI: Sir, the hon. Member has been saying something which is not relevant to the subject under discussion now.

MR. SPEAKER: The hon. Member has been saying that the district board is a training ground.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, even the Minister should yield to a point of order.

MR. SPEAKER: Yes, the Minister also should yield to the point of order. I thank the hon. Leader of the Opposition for having come to my rescue.

SRI K. VINAYAKAM: Sir, opportunities must be given to the public to get themselves trained in political work so as to be in a position to fill up the political vacuum that would be created. Suitable legislation should be brought forward so that there will not be any paucity of leadership. In this connection, I would

suggest very humbly—if my suggestion would find its way to the Cabinet—that they should revive the defunct taluk board system. That would give sufficient opportunities for younger men and for younger politicians to develop their innate qualities of leadership. Sir, I was told that the existing block development areas would be constituted as a unit for the purpose of forming a committee where the officials will have the ruling voice. Sir, officials should not be entrusted with undue powers of relegating the non-officials into the background, just to give suggestions here and there, more often to be ignored. The Government should bear all these points in mind. I support the Bill. I say that elections to the district boards need not be held and that the boards can be summarily bundled up or abolished for ever.

10-40 a.m. MR. SPEAKER: I wish to fix the time-limit for general discussion till 11-30, since many Members want to take part. I am not fixing any time-limit for each speaker, but I would request the Members to be as brief as possible.

* SRI A. A. RASHEED: I cannot understand why anybody should feel sorry for the abolition of the district boards. In a majority of cases, they have failed to justify their continuance or even their existence. It is but proper that they should go unhonoured, unwept and unsung. But I would like to know from the Hon. Minister what the interim arrangement is that she is going to make for the performance of functions which the district boards were performing up till now. Special Officers must not be trusted. An advisory committee consisting of the M.L.As. representing each district should be constituted, and the Special Officer should be asked to take its advice. The M.L.As. know the needs of their constituencies better than the Special Officers.

On the one hand we want to abolish district boards. But on the other hand the Inspector of Local Boards or the Regional Inspectors are not prompt in forming panchayats in villages. I have known cases in which application for the constitution of a panchayat has been made two years ago and yet no action has been taken. Unless the officers concerned are prompt in constituting panchayats, how can we justify the abolition of district boards? I think the Hon. Minister should issue instructions to the effect that panchayat boards should be constituted as and when the applications are received. Thank you, Sir.

* SRI S. LAZAR: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சரவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை ஆதரித்தும், கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்த திருத்தப் பிரேரணையை எதிர்த்தும் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த தீர்மானம் குறித்து பேசக்கூடிய நேரத்திலே, ஏதோ ஜில்லா போர்ட் நிர்வாகத்தை நடத்தகூடிய தலைவர்கள் அல்லது மற்ற நிர்வாகஸ்தர்கள் சரியான முறையிலே நிர்வாகத்தை நடத்தாத காரணத்தினால்தான் இது நீங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகிறது என்று சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல. ஆனால் இப்பொழுது இருக்கக்கூடிய சூழ்நிலையிலே அவர்களுக்கு இருக்கக்கூடிய வரம்பிற்குட்பட்டு அவர்களுடைய வேலைகளை நல்லமுறையில் செய்து கொண்டுதான் வருகிறார்கள். ஆனால் வேறு பல ஸ்தாபனங்கள்





ஏற்பட்டு இவ்வளவுதூரம் செலவு செய்து ஒரு பெரிய ஸ்தாபனத்தை மேற்கொண்டு வைத்து நடத்த வேண்டியது அவசியமா இல்லையா என்ற ஒரு பிரச்னைதான் இன்றையதினம் கிளம்பியிருக்கிறது. அதைப்பற்றி பரிசீலனை செய்ய இன்னும் ஒரு ஆண்டு வரைக்கும் காலம் வேண்டுமென்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் தீர்மானத்தை கொண்டு கல்யாணசுந்தரம் அவர்கள் பேசக்கூடிய நேரத்திலே இரண்டு முக்கியமான காரணங்களை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே ஒன்று, தேர்ந்தெடுக்கபட்ட மக்களால் நடத்தப்படும் நிர்வாகந்தான் எந்த முறையிலும் சிறந்தது என்பது. ஆகவே, அவர்கள் அது தொடர்ந்து இருக்க வேண்டுமே தவிர தனிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பது என்பது பொருத்தமல்ல என்று சொன்னார்கள். ஆனால் இந்த சந்தர்ப்பத்திலே நாம் ஒன்றை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். தேர்தல் நேரத்தில் தேர்தலுக்கு நின்றபோது, பொது மக்களுடைய ஆதரவைப் பெற்ற நேரத்தில் மூன்று வருட காலம் வரைக்குந்தான் அவர்களது நம்பிக்கையைக் கேட்டோமே தவிர அதற்கு அப்பால் அல்ல என்பதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். பொது மக்கள் நம்மை தேர்ந்தெடுத்து அனுப்பிய நேரத்தில் மூன்று வருஷம் நீங்கள் எங்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்று சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். மூன்று வருஷ காலம் முடிந்தவுடன் அவர்கள் பதவியிலிருந்து நீங்குவது முறையே தவிர, தொடர்ந்து இருப்பது பொருத்தமல்ல. தனிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பது அவ்வளவு சரியல்ல என்ற காரணத்தையும் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நான் சொல்வது என்னவென்றால், தனிப்பட்ட அதிகாரிகள், இன்றையதினம் இருக்கக்கூடியவர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்களாவார்கள். இன்றைக்கு இருக்கும் அரசாங்கம், சமீபத்திலே ஒரு சில மாதங்களுக்கு முன்னால் தேர்தலில் நின்று தேர்தலில் வெற்றி பெற்று மக்களால் அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர்களால் நடத்தப்பட்டுவருவது. ஆகவே, எந்த ஒரு கக்ஷியின் மீது நம்பிக்கை இருக்கிறது என்று மக்கள் தெரிவித்தார்களோ அந்த கக்ஷியின் சார்பாக அமைந்திருக்கும் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட தனிப்பட்ட அதிகாரிகளை நாம் ஏற்றுக்கொள்வதுதான் முறை. அடுத்தபடியாக, அவர்கள் சொன்ன மற்றொரு காரணம், இப்பொழுது நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு தக்க நோட்டீஸ் கொடுக்கவில்லையென்பதாகும். நாம் அறிவோம், தேர்தல் நேரத்தில் நியமனப்பத்திரம் கொடுக்கச் சென்றபோது 1957 அக்டோபர் 31-ம் தேதிவரைக்குந்தான் பதவி காலம் கொடுக்கப்படும் என்பதை உணர்ந்துதான் தேர்தல் மனுக்களைத் தாக்கல் செய்தார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். அக்டோபர் 31-ம் தேதி அவர்கள் வெளியேற வேண்டும். அதற்கென்று தனிப்பட நோட்டிஸ் இப்பொழுது கொடுக்க வேண்டுமென்று சொல்வது பொருத்தமான வாதமல்ல என்று சொல்லிக்கொண்டு அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய தீர்மானத்தை சபை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்லி எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* SRI D. S. AUTHIMOOLAM: கனம் சபாநாயகர்அவர்களே, இந்த ஜில்லா போர்டுகளின் ஆயுளை இவ்வளவு குறுக்கி இப்பொழுது ஒரேயடியாக, ஜனநாயக பிரதிநிதிகளால் ஆளப்பட்ட ஒரு ஸ்தாபனத்தை ஒரு எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் என்ற முறையில் ஒரு ஜில்லா கலெக்டரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவது என்பது, எந்த ஜனநாயகத்தை விரும்பிப் பேசுகிறதோ காங்கிரஸ் அதை குழி தோண்டி புதைக்கும் செயல்தான் இது என்று வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட இந்த சபையின் பொறுப்பை ஒரு நிர்வாகஸ்தரின் கையில் ஒப்படைக்கவேண்டுமென்று சொல்வதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். போதியபணம், கிரண்ட் தொகையாக சர்க்காரினால் கொடுக்க முடியவில்லை என்ற காரணத்திற்காகத்தான், இந்தமாதிரி பொது ஜனப் பிரதிநிதிகள் இருந்தால் அடிக்கடி தொந்தரவுகள் செய்வார்கள், ஆகவே அதிலிருந்து தடுத்துக்கொள்ள இது ஒரு குறுக்கு வழி என்று அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது.

[Sri D. S. Authimoolam] [26th October 1957

ஜில்லா போர்ட் நிர்வாகம் இந்த தேசத்திலே வெள்ளைக்கார சர்க்காரால் கொடுக்கப்பட்ட நல்ல நிர்வாக ஸ்தாபனங்களில் ஒன்றாகும். அதிலும் முக்கியமாக, சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவிலுள்ள எந்த மாகாண ஜில்லாப் போர்ட்டுகளையும் விட இந்த மாகாணத்திலுள்ள ஜில்லா போர்ட் நிர்வாகந்தான் ரொம்பவும் சாலச் சிறந்தது. ஜில்லா போர்ட் நிர்வாகம் சென்ற காலத்தில், ஜஸ்டிஸ் பார்ட்டி காலத்திலிருந்து நாளது தேதிவரையில் நல்ல வேலைகள் பல செய்திருக்கின்றன. கிராமங்களில் நன்றாக பல ஆயிரக்கணக்கான மைல்கள் ரோடுகள் ஐந்தாறு வருஷங்களுக்கு மத்தியில் ஜில்லா போர்டுகள், காங்கிரஸ் ஜில்லா போர்ட் நிர்வாகத்தின் கீழும் நடந்திருக்கிறது. அது, காங்கிரஸ் சர்க்காருக்கே ஒரு பெருமையாகும். அந்த முறையில் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கும் ஒரு ஸ்தாபனத்திற்கு கிராண்ட் கொடுக்க முடியாது என்ற ஒரு காரணத்திற்காக அதைக் கலைத்து விட்டு அதன் நிர்வாகத்தை ஒரு கலெக்டரின் கையிலோ அல்லது ஒரு ஸ்பெஷல் ஆபீஸரின் கையிலோ ஒப்படைப்பது என்பது வருந்தத்தக்கதொரு விஷயமாகும். முக்கியமாக பணங்கள் கொடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஒரு முறையை நாம் ஆராய வேண்டும். கிராமாந்திரங்களில் இன்னும் பல சாலைகள் போட வேண்டியிருக்கிறது. அநேகமாக சாலைகள் எல்லாம் ஏராளமாக ரிப்பேர் செய்யவேண்டிய நிலைமையில் இருக்கின்றன. கிராமங்களில் உள்ள வைத்திய வசதிக்கான ஸ்தாபனங்கள் பல மூடப்பட்டுக்கிடக்கின்றன. அவைகளை திரும்ப நடை பெறும்படிச் செய்யவேண்டும். பொது ஜனப் பிரதிநிதிகள் இருந்தால்தான் அவைகள் நன்கு வேலை செய்யமுடியும். கம்யூனிட்டி ப்ராஜெக்ட்ஸ்-ம், நாஷனல் எக்ஸ்டென்ஷன் ஸ்கீமும் நடந்து வருகின்றன. ஆதலால் அதற்கும் ஜில்லா போர்ட் ஸ்தாபனத்திற்கும் உதவித் தொகை கொடுப்பது இயலாத காரியமாகும் என்று சொல்லலாம். அது ஓரளவு நடந்துகொண்டு இருந்தாலும், ஜில்லா போர்ட் நிர்வாகத்தின் கீழ் கிராமங்களுக்கு தேவைகள் ஏராளமாக இருக்கின்றன. மேற்கொண்டு ஜில்லா போர்ட் நிர்வாகத்தின்கீழ் ஆயிரக்கணக்கான ஆரம்பப் பள்ளிகளும் ஹைஸ்கூல்களும் உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. அவைகள் செவ்வனே நடைபெறவேண்டும். புதிதாக கட்டிட வசதிகள் வேண்டுமென்றாலும், பொதுஜனப் பிரதிநிதிகள் இருந்தால்தான் அந்தந்த இடங்களின் தேவைகளை கவனித்து அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய முடியும். ஆகவே எல்லா காரியங்களையும் ஒருயிடத்தில் (centralize) சென்ட்ரலைஸ் செய்வது என்ற கொள்கையை வைத்துக்கொள்ளக்கூடாது. இப்பொழுது எப்படி இந்திய சர்க்காரின் கையில் எல்லா அதிகாரமும், பணமும் இருக்கின்றதோ அதேமாதிரி இப்பொழுது பழையபடிக்கு கலெக்டர் என்ற ஒரு அதிகாரியின் கையில், அல்லது ஒரு ஸ்பெஷல் ஆபீஸரின் கையில் ஜில்லா போர்ட் என்ற ஸ்தாபனம் போய் சேர்ந்து சென்ட்ரலைஸ் ஆகிவிடும். " டிஸென்ட்ரலைஸ் " செய்யவேண்டியது காங்கிரஸ் அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கவேண்டும். அந்த முறையில் இந்த போர்ட் நிர்வாகத்தை கலெக்டரிடமோ அல்லது ஒரு ஸ்பெஷல் ஆபீஸர் கையிலோ ஒப்படைப்பது என்பது வருந்தத் தக்கதொரு காரியமாகும். அதனால் நான் அதை எதிர்க்கிறேன். அப்படியில்லாவிட்டால் ஜனநாயகத்தைப்பற்றி பேசுவது மக்களுக்கு மத்தியில் செல்வாக்கு இழந்து போகும். கிராண்ட் தொகைகள் சரியான விதத்தில் கிடைக்காமல் இருந்து கொண்டு இருக்கிறது. இந்த காங்கிரஸ் நிர்வாகத்திலும் நிதி உதவி சரியான சமயத்தில் கிடைப்பதில்லை. ஐந்தாறு வருஷங்களாக இந்த கஷ்டங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. ரோடுகள் செப்பனிடுவதற்கான உதவியும் சரியான சமயத்தில் கிடைப்பதில்லை. பள்ளிக்கூடங்களுக்குள்ள உதவி தொகையும் சரியாக கிடைப்பதில்லை. ஜஸ்டிஸ் பார்டி காலத்தில் தான் பஞ்சாயத்துக்கள், ஜில்லா போர்டுகள் நன்றாக நடந்தன, திறமையாக நடந்தன, அவர்களுடைய காலத்தில் சரியாக நடந்துகொண்டிருந்தன. அப்போது இந்த உதவிகள் எல்லாம் சரியாக கிடைத்துக்கொண்டிருந்தது. இப்போது அவர்கள் வைத்திருந்த பணத்திலிருந்துதான் உதவி தொகையில்லாமல் ஜில்லா போர்டுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும் இப்போதுள்ள ஜில்லா போர்டுகள் பல விதமான லோக்கல் டெவலப்மெண்ட் ஸ்கீம்கள் செய்துவருகின்றன. பல இடங்களிலும் ஜில்லா போர்டுகளிலும் பல ஜில்லா போர்டு தலைவர்களின்



26th October 1957] [Sri D. S. Authimoolam]

முயற்சியினாலும் அந்தந்த இடங்களில் நல்ல வேலை செய்துவருகிறார்கள். அந்த வேலைகள் கணிசமான முறையில் வெற்றியும் பெற்றிருக்கின்றன. ஆகவே ஜனநாயகத்தின்பேரில் இந்த விதமான முடிவு செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

* SRI S. RAMASAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த சட்டத்தை சர்ச்சிக்கும்பொழுது தோழர் விநாயகம் அவர்களும் மற்றும் சிலரும் பேசியது மாதிரியுள்ள பேச்சுக்கள் எழும் என்று எதிர்பார்க்கவில்லை. இன்று இதை எந்த விதத்தில் மாற்றி அமைப்பது என்பதுபற்றி தீர்மானிக்காத காரணத்தால் மத்திய காலத்தில் இந்த ஸ்தலஸ்தாபனங்களை யாரிடம் ஒப்படைப்பது என்பதற்காகத்தான் இந்த சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சட்டம் கூறவில்லை. அதைப்பற்றி சர்ச்சிக்க வேண்டிய அவசியமும் இல்லை. சென்ற தடவை கலெக்டர் அவர்களிடம் ஒப்புக்கொடுத்த விஷயங்களைப்பற்றியே இப்பொழுது அவ்வாறு நடக்குமோ என தோழர் கல்யாணசுந்தரம் சொல்லியிருப்பார்கள் என்று நம்புகிறேன். சர்க்கார் இது சம்பந்தமாக என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதைப்பற்றி சர்ச்சிக்க வேண்டியதும் இல்லை. தோழர் விநாயகம் அவர்கள் பேசும்பொழுது செங்கல்பட்டு ஜில்லா போர்டு நிர்வாகம் அரசியல் பாடம் படிப்பதற்கு ஒரு அடிப்படையாக இருந்து வருகிறது என்று சொன்னார்கள். அரசாங்கத்தை நடத்துவதற்கு ஒரு பள்ளிக்கூடமாக இருந்தது என்று சொல்லும் காலத்தில் அவர் ஆங்கிலத்தில் " பொலிடிகல் ட்ரையினிங் க்ரௌண்ட் " என்று சொன்னார்கள். நிர்வாகத்துறையில் படித்துக்கொள்வதற்கு ஒரு ஸ்தாபனமாக இருந்தது என்ற அர்த்தத்தில்தான் அவ்விதம் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

SRI K. VINAYAKAM : I said political training as well as administrative training.

SRI S. RAMASAMI NAIDU : அவ்விதம் இருந்த காலம் போய் விட்டது. நல்லபடி இயங்காத ஜில்லா போர்டுகள் எல்லாம் சாகத்தான் வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லுகிற இந்த காரணங்களுக்காக சாகவேண்டிய அவசியமில்லை என்று சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே உள்ள மக்களுக்காக ஸ்தல ஸ்தாபனங்களை நல்ல எண்ணத்தோடு ஆளும் கட்சியினர் சில சீர்திருத்தங்களை கொண்டுவரப்போகிறார்கள் என்று எண்ணித்தான் நான் இதை ஒப்புக்கொள்ளுகிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை. அதல்லாமல் வெறும் வாத்தியாயர்களை மாற்றக்கூடிய வேலையை மாத்திரம் செய்துகொண்டிருக்கிற வேலையைத்தான் ஸ்தல ஸ்தாபனங்கள் செய்துகொண்டிருக்கிறது என்று கனம் அங்கத்தினர் சொன்னார்கள். அவர்கள் வாத்தியார்கள் விஷயத்தில் மாத்திரம் கவனம் செலுத்தியிருக்கிறார்களே தவிர வேறு ஒன்றிலும் கவனம் செலுத்தவில்லை என்றுதான் சொல்லுவேன். செங்கல்பட்டு ஜில்லாவை பொருத்தவரை மதிப்பிற்குறிய ராமசாமி முதலியார் அவர்கள் தலைவராக இருந்த காலத்திலும் அதற்கு பின் நண்பர் திரு. கோவிந்தராஜுலு நாயுடு இருந்தபோதிலும் பல நல்ல காரியங்கள் , செய்யப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் சென்னையில் இருக்கும் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். சில ஆசிரியர்களுடைய மாற்றம் பற்றிய சிபாரிசுகள் வெற்றியடையாமல் போனதினால்தான் இவ்விதம் கோபப்படுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இதற்காக கனம் அங்கத்தினர் அவர்கள் கோபப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். நாட்டிலுள்ள ஜில்லா போர்டுகளுக்கு பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது அதற்காகத் தான் கலைக்கப்படப் போகின்றன என்றும் இங்கு அங்கத்தினர்களால் சொல்லப்பட்டது. அதுவும் சரியான காரணம் அல்ல என்றே நினைக்கிறேன். பல வேலைகளுக்கும் சர்க்கார் பணம் கொடுத்துவருகிறார்கள். சர்க்கார் பண உதவியுடன்தான் இந்த ஸ்தாபனங்கள் நடக்கின்றன என்பது

எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதல்லாமல் பணம் கொடுக்கவேண்டுமென்பதற்காக இதை கலைக்க வேண்டுமென்பது சர்க்காரினுடைய நோக்கமல்ல என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். தோழர் கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இப்போது இருக்கும் ஜில்லா போர்டையே இன்னும் மூன்று மாத காலத்திற்கு நீட்டி கொடுத்தால் என்ன என்கிற ஆலோசனையும் பரிசீலிக்க வேண்டியதுதான். சர்க்கார் சொல்லுவதுபோல் உடனே எடுத்துவிடவேண்டும் என்றுள்ள முடிவை ஏற்றுக்கொள்ள முடியாதுதான். 3 மாத காலத்திற்கு சர்க்கார் இதை யோசித்து பார்க்கலாம் என்றே எனக்கும் தோன்றுகிறது. இதை எதிர்த்து ஒரு யோசனையை சர்க்கார் கட்சியிலிருந்து சொல்லுவதற்கு நான் தயாராக இல்லை என்றாலும் இதைப்பற்றியும் யோசிக்க வேண்டியது சர்க்காருடைய கடமை என்றே எண்ணுகிறேன். ஆனால் இப்போதுள்ள ஜில்லா போர்டுகள் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்ல முடியாது. இப்போது இருக்கும் பல கல்வி ஸ்தாபனங்கள், மருத்துவ ஸ்தாபனங்கள் ஜில்லா போர்டுகளினால் நடத்தப்படுகிறது. இன்னும் இதைப்பற்றி தோழர் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னது மாதிரி இதை இன்னும் சிறிது காலத்திற்கு நீட்டி கொடுத்து கொண்டு போகவேண்டிய காரியங்களைப்பற்றி கவனிக்க வேண்டியது அவசியம்தான். மேலும் இதைப்பற்றி விரிவான திட்டம் கொண்டு வரப்படுவதால் இதை தட்டி கழிக்கிறார்கள் என்று சொல்ல நான் தயாராக இல்லை. சர்க்கார் என்ன நோக்கத்தோடு அபிவிருத்தி திட்டங்களைக் கொண்டுவந்து புகுத்தியதோ அவற்றையெல்லாம் நிறைவேற்றி ஜில்லா போர்டு வெற்றி பெற செய்திருக்கின்றன. எங்கு சென்று பார்த்தாலும் நாட்டில் பலவிதமான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். பகுதி வளர்ச்சி திட்டங்கள் பல இருக்கின்றன. இவையெல்லாம் வெற்றிகரமாக நடைபெறவேண்டுமானால் பொதுமக்களிடையே தொடர்புள்ள ஒரு ஸ்தாபனம் அவசியம்தான் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆதலால் இந்த மசோதாவில் உள்ள ஒரு கருத்தை வைத்துக்கொண்டு இதைக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஸ்தல ஸ்தாபனங்கள் இப்போது இருப்பதை விட இன்னும் நல்ல முறையில் அமையவேண்டும் என்ற முறையில் தான் வேலை செய்து வருவதாக தெரிகிறது. இன்னும் நாலைந்து தினங்களில் இதைப்பற்றி விரிவான அறிக்கை நம் முன் வரவிருக்கிறது. ஆதலால் இதில் ஏதாவது உள் கருத்துக்கள் இருக்கலாம் என்று நினைத்து எதிர்க்க வேண்டுமென்று அவசியமில்லை. இப்போது இருக்கிற முறை நன்றாக இயங்கி வருகிறது. மேலும் நடுத்தர கல்வி, உயர்தர கல்வி இவைகள் எல்லாம் மக்களுக்கு பிரயோஜனப்படுகிற வகையிலும், பொதுமக்கள் சௌகரியத்திற்காக ரஸ்தாக்கள் அமைப்பதிலும் மற்றும் பல விஷயங்களிலும் சர்க்கார் நேரடியாக ஈடுபடாவிட்டாலும் கூட அதற்காக இருக்கிற அதிகாரிகள் எல்லாம் அந்தந்த ஜில்லா போர்டுகளோடு கலந்து ஆலோசித்துக்கொண்டு செய்து வருகிறார்கள் என்பது கனம் அங்கத்தினர்களுக்கும், இதில் அக்கறை கொண்டிருக்கிறவர்களுக்கும் தெரிந்திருக்கும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜில்லா போர்டுகளின் மூலம் நிறைவேற்றப்படும் திட்டங்களைக் கவனிக்குமிடத்து, பல துறைகளிலும்—கல்வியிலானாலும் சரி, மற்றத் துறைகளிலானாலும் சரி, ஆரம்பக் கல்வியிலானாலும் சரி, உயர்தர கல்வியிலானாலும் சரி, மருத்துவர் கல்வியிலானாலும் சரி, ஐந்தாண்டுத்திட்டத்தில் உள்ள பங்கிற்கு மேலே நான்கு பங்கு அதிகமாக ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனத்திலும் செய்திருக்கிறார்கள் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில், ரஸ்தா வேலைகளைச் செய்திருக்கும் ஜில்லா போர்டுகளின் பணியை அலசிப்பார்த்தால், ஐந்தாண்டுகளுக்குள்ளே அந்த ஜில்லாக்களில் எல்லா ஓடைகளுக்கும் பாலம் கட்டவும், ரஸ்தாக்களை மேம்படுத்தவும், ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது தெரியவரும். இந்த வேலைகளை இனிமேல் பிரிக்கப்படும் ஸ்தல ஸ்தாபனங்கள் எவ்வாறு மேற்கொள்ளப் போகின்றன, அவைகள் எவ்வாறு பிரிக்கப்படப்போகின்றன என்பது தெரியாத நிலையில் இந்த மசோதாவை ஆதரிக்க வேண்டியிருக்கிறதே என்ற மனக்கஷ்டத்தைத் தவிர எங்களுக்கு வேறு ஒன்றும் இல்லை. இருந்தாலும்கூட, பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கும் இந்த சர்க்கார் மக்களின் அபிலாஷைக்கு விரோதமாகச் செயல்



படாது என்ற நிச்சயம் இருப்பதால் இந்த மசோதாவை நாங்கள் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இருந்தாலும் சில நல்ல யோசனைகள் கொடுக்கப்பட்டால் அவைகளை ஏற்றுக்கொள்ள முடியுமா என்று சர்க்கார் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையிலும், ஒரு ஜில்லா போர்டு தலைவன் என்ற முறையிலும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சிலர் சொன்னது போன்று ஜில்லா போர்டுகளைக் கலைக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவைகளுக்கு பதிலாக நல்ல முறையில் வேறு ஸ்தாபனங்களை சர்க்கார் ஏற்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஜில்லா போர்டு தலைவர்களின் பதவிக் காலத்தை மூன்று வருஷங்களுக்கு மேல் நிர்ணயிக்க வேண்டுமென்பதுபற்றி இந்தப் பக்கத்திலுள்ள ஒரு கனம் அங்கத்தினர் கூறினார். மூன்று வருஷங்களுக்கு மேல் சர்க்கார் அனுமதிக்கவில்லை. நாங்கள் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் காங்கிரசின் சார்பில் பொதுமக்களிடமிருந்து பெருவாரியான வாக்குகளைப் பெற்றிருக்கிறோம். ஆகவே பொதுமக்கள் காங்கிரஸ் சர்க்காரை ஆதரிப்பார்கள். அப்படியிருக்கும்போது இன்னும் ஒரு மாதமோ மூன்று மாதங்களோ நாங்கள் ஜில்லா போர்டு தலைவர்களாக நீடித்திருந்தால் மக்களின் அபிமானத்தை இழந்தவர்களாகிவிடமாட்டோம். மேலும், ஜில்லா போர்டு தலைவர்களின் பதவிக் காலத்தை 5 வருஷங்களாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எந்த விதமான துர் எண்ணத்தின் பேரிலும் சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவரவில்லை என்பதையும் தெரிவித்துக் கொண்டு, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

**Sri P. G. KARUTHIRUMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை ஆதரித்துச் சில கருத்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இந்த மசோதாவிற்கு சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஒரு திருத்தத்தில் கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் இதே ஜில்லா போர்டுகள் கொஞ்ச நாட்களுக்கு நீடிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். கனம் நண்பர் ஸ்ரீ ராமசாமி நாயுடு அவர்கள் பேசிய போது, அவர்கள் எதைப்பற்றிக் குறிப்பாகப் பேசினார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**Sri K. ANBAZHAGAN** : கனம் சபாநாயகர் அவர்களே, **On a point of order Sir** நம்முடைய சட்டமன்றத்தில் கனம் உறுப்பினர்கள் பேசுகின்றபோது தங்களுடைய பேச்சுக்களில் பிற உறுப்பினர்களின் பெயர்களை வழக்கமாகக் குறிப்பிட்டு வருகிறார்கள். இவ்வாறு பிற உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிடுவது தவறு என்று சில சட்டமன்றங்களில் கருதப்பட்டுவரும் காரணத்தால், அப்படி பெயர்களைக் குறிப்பிடலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**Mr. SPEAKER** : அங்கத்தினர்களின் பெயர்களைக் குறிப்பிடலாம். இங்கிலாந்து தேசத்து சட்டமன்றத்தில் பிற அங்கத்தினர்களின் பெயர்களை அப்படியே குறிப்பிடுவது கிடையாது ; அவர்களுடைய தொகுதியின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களைக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இந்த நாட்டில் அங்கத்தினர்களை அவர்களுடைய பெயர்களைக் கொண்டே குறிப்பிடுவதுதான் வழக்கம். மேலும், அவர்களுடைய பெயர்களுடன் "கனம்" என்ற வார்த்தையைச் சேர்த்துக் குறிப்பிட்டால் அது மரியாதையாகத்தான் இருக்குமே தவிர, அப்படிக் குறிப்பிடுவது தவறில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**Sri P. G. KARUTHIRUMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது ஜில்லா போர்டுகளுக்கு ஸ்பெஷல் ஆபீசர்களை நியமிக்கும் சர்க்கார் கொள்கையை எடுத்துக்கொண்டால், இதுவரையிலும் நடந்து வரும் ஸ்தலஸ்தாபனங்கள் திறமையற்றவையாக இருந்துவருகின்றன என்று கருதி இந்த மசோதாவை சர்க்கார் கொண்டுவரவில்லை என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போதிருக்கும் நிலைமையில்,

நம் ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கமெல்லாம் என்ன ? சர்க்காரின் நோக்கமும் என்ன ? ஓரிடத்தில் அதிகமாக அதிகாரங்களைக் கொடுக்காமல் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆகவே, பல நூற்றாண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்துவந்த கிராமங்கள் சுகாதார வசதிகளும் ஆஸ்பத்திரி வசதிகளும் மற்ற வசதிகளும் பெற்றுப் பயனடையும்படி செய்வதற்காக தேசிய அபிவிருத்தித் திட்டங்களையும் சமுதாய நலத் திட்டங்களையும் நிறைவேற்றும்போது, மக்களிடத்தில் அதிகாரம் குவியும்படி செய்யவேண்டும் என்ற அடிப்படையில்தான் சர்க்கார் செயலாற்றி வருகிறார்கள். பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஜில்லா போர்டுகள் நிர்வாகம் இருந்த நிலைமையையும் இப்போது இருக்கும் நிலைமையையும்—அவைகளுடைய வேலைகளின் பளுவைப்பற்றி யோசித்துப் பார்த்தால்—ஒப்பிட்டுப் பார்த்தால் இது மிக மிக நன்றாக விளங்கும். உதாரணமாக, சுமார் 10–15 வருடங்களுக்கு முன்பு கோயம்புத்தூர் ஜில்லாவில் ஸ்தல ஸ்தாபனங்களின்கீழ் 10 உயர்தரப் பள்ளிக்கூடங்கள்தான் இருந்தன. ஆனால் இப்போது அங்கே 37 உயர்தரப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அங்கே இப்போது ஆயிரக்கணக்கான ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஆனால் வேலை அதிகமாகப் போகும்போது அந்த ஸ்தல ஸ்தாபனங்கள் சரிவர அவைகளை கவனிக்க முடிவதில்லை. காரணம் எல்லா இடங்களிலும் சௌகரியங்கள் கிடைப்பதில்லை. ஆகவே சமுதாய நலத் திட்டங்களையும், தேசிய அபிவிருத்தித் திட்டங்களையும் நிறைவேற்றும்போது மக்களிடையே விழிப்பு ஏற்படச் செய்து அவர்களுடைய ஒத்துழைப்பைப் பூரணமாகப் பெறுவதற்காக ஜில்லா போர்டுகளை நல்ல முறையில் பிரிப்பதற்கு ஸ்தல ஸ்தாபன வெள்ளை அறிக்கையில் யோசனை கூறப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் வழங்கவேண்டும். அப்போதுதான் அவை நன்றாக செயலாற்ற முடியும். மேலும், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களும் மற்ற திட்டங்களும் திறம்பட நிறைவேற்றப்படுவதற்கு மக்கள் அவற்றில் அக்கறை காட்ட வேண்டுமென்றால் பஞ்சாயத்துப் பகுதிகள் குறைந்த விஸ்தீர்ணமுள்ளவையாக இருக்கவேண்டும். இப்போதுள்ள ஸ்தலஸ்தாபன முறையை மாற்றியமைக்க வேண்டும் என்பதில் நம்மிடையே அபிப்பிராயபேதம் கிடையாது. அவைகளை மாற்றியமைக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சிக்காரர்களும் சொல்லவில்லை. அந்தக் காரியத்தை மூன்று மாதங்களோ ஆறு மாதங்களோ ஒத்திப்போட வேண்டும் என்றுதான் சொல்கிறார்கள். ஆகவே ஜில்லா போர்டுகளை மாற்றியமைக்கவேண்டும் என்பதுபற்றி அபிப்பிராயபேதம் இல்லை. அதை எப்போது செய்யவேண்டும் என்பது பற்றியும், அதைச் செய்யும்போது இடைக்காலத்தில் அந்த ஸ்தாபனங்களை யார் கவனித்துவருவது என்பது பற்றியும் அபிப்பிராயபேதம் இருக்கிறது. இடைக்காலத்தில் இதற்காக நியமிக்கப்படும் அதிகாரிகள் யதேச்சாதிகாரிகளாக நடந்து கொள்ளக்கூடாது என்று நாம் கருதுகிறோம். மக்களுக்கு சீக்கிரம் நன்மைகள் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் ஸ்தலஸ்தாபனங்களை சீக்கிரம் மாற்றியமைத்தாகவேண்டும். தேசிய அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் பல விதமான திட்டங்கள் இருக்கின்றன. இவைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் பல யூனிட்டுகள் அமைக்கப்படவேண்டி இருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களின் யோசனையையும் நம் யோசனைகளையும் கேட்டு திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது, ஒவ்வொரு ஜில்லாவிலும் 20–30 பிளாக்குகள் இருந்தால் காரியங்கள் நன்றாக நடப்பதற்கு அனுகூலமாக இருக்கும் ; அப்படி இருந்தால் எல்லா பிளாக்குகளிலும் ஏக காலத்தில் காரியங்கள் நடப்பதற்கு அனுகூலமாக இருக்கும். ஆனால் இந்த மசோதாவைப்பற்றிப் பேசும்போது அதைப்பற்றி விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை. இடைக்காலத்தில் ஸ்பெஷல் ஆபீசரை நியமிக்க வேண்டுமா வேண்டாமா என்பதுதான் இப்போது பிரச்னை. ஸ்பெஷல் ஆபீசர் எத்தகையவராக இருப்பார் என்பதுகூட மசோதாவில் குறிப்பிடப்படவில்லை. ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்களின் பதவிக் காலம் மூன்று வருடங்கள்தான் என்று நிர்ணயிப்பது நல்ல யோசனை. ஜில்லா போர்டு நிர்வாகத்தை தனிப்பட்ட அதிகாரியிடம் ஒப்படைப்பது பற்றியதுதான் இப்போதைய பிரச்னை. சட்ட சபை அங்கத்தினர்களாகிய



நாம் பிரதிநிதிகளாக இருந்து அறிவுடனும் ஆற்றலுடனும் செயலாற்றும் வரையில் அவரை யதேச்சாதிகாரியாக விடமாட்டோம் என்று நாம் உறுதிகொள்ளலாம்.

ஆகவே, நமக்கு இருக்கும் உரிமையை, நமக்கு இருக்கும் சக்தியை நமக்கு இருக்கும் அறிவைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஏதாவது தவறுகள் இருந்தால் அதைச் சர்க்காருக்குச் சொல்லலாம். இதில் பயப்பட வேண்டிய அவசியம் கிடையாது. இப்படி ஜில்லா போர்டுகளை மாற்றி அமைக்கும் நிலையிலே, வேண்டிய திட்டங்களை வெள்ளை அறிக்கையிலே கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் சொல்லலாம் என்று சொல்லி, சர்க்கார் கொண்டுவந்த மசோதாவை ஆதரிக்கிறேன். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல வகையினானே" என்று முன்னோர் சொன்னபடி காலத்திற்கேற்றபடி நாம் மாறுதல்களைச் செய்து திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும் என்ற முற்போக்குக் கருத்துக்களைக்கொண்ட நாட்டிலே, நாம் காலத்திற்கேற்றபடி மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டும் என்று கூறிக்கொண்டு இந்தத் திருத்தத்தை எதிர்க்கிறேன்.

**SRI K. RAMACHANDRAN**: கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்தல 11.11 a.m.
ஸ்தாபனங்கள் ஜனநாயக முறையிலே இயங்கவேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமையில்லை. ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய ஜில்லா போர்டுகளை எடுத்துக்கொண்டால், அவைகள் பரவலான ஜில்லா பூராவையும் நிர்வகிக்க வேண்டிய நிலையிலே பல விதமான ஊழல்கள் ஏற்படுகின்றன என்பது நாம் நிதர்சனமாகக் கண்டுவரக்கூடிய ஒரு விஷயமாகும். பொதுவாக ராமநாதபுரம் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், எங்கள் பகுதியிலே உபாத்தியாயர்கள் இல்லாத பள்ளிகளும், டாக்டர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகளும், ரோடுகள் இல்லாத கிராமங்களும் அநேகம் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த முறையிலே பார்க்கும்போது ஒரு ஜில்லா பரவலாக இருக்குமானால், பல பகுதிகளை ஒதுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஜில்லா போர்டுகள் நன்றாக வேலை செய்வது அதிலுள்ள அங்கத்தினர்களின் வலிமையையும் இணக்கத்தையும் பொருத்திருக்கிறது. இந்த ஜில்லா போர்டுகள் தேவையில்லை என்பதைப் பொருத்தவரையில் நானும் அதை ஒப்புக்கொள்கிறேன். இவைகளுக்கு பதிலாக சிறந்த முறையில் அதனுடைய பரப்பு குறைக்கப்பட்டு, விரைவாக முன்னேற்றம் செய்ய ஏற்பாடு செய்ய முடியும். ஆனாலும், இடைக்காலத்திலே கொண்டு வந்திருக்கிற சட்டத்திலே எத்தகைய ஆபீசரை ஸ்பெஷல் ஆபீசராக நியமிக்கப்படும் என்பதைப் பற்றிச் சரியான குறிப்பு இல்லை. அதில் என்ன சொல்லியிருக்கிறதென்றால், கலெக்டர், அல்லது ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர், அல்லது வேறு அதிகாரிகள் ஸ்பெஷல் ஆபீசராக நியமிக்கப்படுவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இடைக்காலம் என்று சொன்னால் அது குறுகிய காலமாகத்தான் இருக்கவேண்டும். ஒரு வருஷம் என்பது மிகவும் அதிகமான காலமாகும். மூன்று மாதத்திற்குள் இந்த வெள்ளை அறிக்கையை பரிசீலனை செய்து முடிவுகள் செய்து அமுலுக்குக் கொண்டுவரலாம். அதற்கு ஒரு வருஷம் தேவையில்லை. மூன்று மாதத்திற்குள்ளேயே செய்யலாம். இந்த இடைக்காலத்தில் புதிய ஆபீஸர்களைப் போட வேண்டிய அவசியமில்லை. அப்படிப் போடுவதில் போட்டிகள் ஏற்படும். இப்போது இருக்கக்கூடிய அதிகாரிகளையே, அதாவது ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர்கள், அல்லது கலெக்டர்கள், இவர்களை ஒவ்வொரு ஜில்லா போர்டுக்கும் ஸ்பெஷல் ஆபீசர்களாகப் போடலாம். அப்படிப் போட்டு, மூன்று மாதத்திற்குமேல் ஒரு வருஷத்திற்கு நீடித்தால் தவறுகள் ஏற்பட்டுவிடும். நாம் அதற்கான சட்டத்தைக் கொண்டுவந்து நிர்வாகத்தை மாற்றிவிட ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது இருக்கக்கூடிய சட்டப்படி அதில் குறிப்பிட்டுள்ள ஸ்பெஷல் ஆபீஸரைப்பற்றிச் சந்தேகப்படுகிறேன். ஏற்கனவே ஜில்லா போர்டு அங்கத்தினர்களாக இருப்பவர்களையே ஸ்பெஷல் ஆபீஸராக நியமிக்கலாம். அதற்கு அதில் இடமிருக்கிறது. அல்லது வேண்டியவர்களை நியமிக்கவும் இடமிருக்கிறது. அவசியமான இந்தத் திருத்தத்தை ஏற்று இப்போது ஸர்வீசிலே இருக்கின்ற ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர்களையும், அதற்குக் குறையாத ரேங்கில் உள்ளவர்களையும் நியமித்து வேண்டிய திருத்தங்களைக் கொண்டு வருவதற்காகவும், நீண்ட காலத்திற்குச்

[Sri K. Ramachandran] [26th October 1957

செல்லாமல் மூன்று மாத காலத்திற்குக் குறைக்கவும் இந்த மசோதாவை ஆய்வுக் குழுவுக்கு விடவேண்டும் என்ற கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்களின் திருத்தத்தை ஆதரித்து முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. NESAMONY : Mr. Speaker, Sir, I have very little experience of the administration of district boards for we had neither the fortune nor the opportunity of being administered by a district board. But I would like to point out one or two things by way of comments on this piece of legislation. I may be pardoned for putting it in a rather crude manner by saying that this piece of legislation attempts at putting the cart before the horse. We are all asked to discuss on the 4th and 5th November this voluminous white paper of 200 pages and then come to a conclusion as regards the future set-up of the local administration. Before the policy of the Government could be enunciated by a discussion on the white paper, we are now faced with a *fait accompli*. Of course with the change in times the policies that are now followed by the Government must change. More than the policies of the Government, the attitude of the officers running the administration must change. This is a vital point on which special emphasis must be laid.

In this connection, I shall just read out the Statement of Objects and Reasons and the relevant clause to show that there seems to be a little inconsistency in the whole piece of legislation. The Statement of Objects and Reasons says—

"The term of office of members of all district boards in the State is due to expire on the 1st November 1957. A decision regarding the permanent set-up of local administration throughout the State including the important question whether the district boards should be continued or not will have to be taken shortly. Pending such decision, it is proposed to postpone the elections to district boards and to appoint Special Officers to be in charge of the administration of district boards".

Sub-clause (i) of clause 2 says—

"to postpone the elections to every district board up to such date not being later than the 31st day of October 1958 as the State Government may fix".

What is the implication of this clause? If election is postponed, does it imply that the life of the district board is extended? Nothing is said about the abolition of the district board. Sub-clause (i) of clause 2 assumes the existence of the district board, and that election to it is postponed for a year. Hon. Members have been urging, from a reading of the Statement of Objects and Reasons, that this is an attempt to wipe off the district boards and hand them over to the Collector or any other officer who may be appointed by the Government. Then, sub-clause (ii) of clause 2 says—

"to appoint for any district board a Special Officer to exercise the powers, discharge the duties and perform the functions—

(a) of the district board until a board has been constituted".



26th October 1957] [Sri A. Nesamony]

The continuance of the district board is implied throughout the language of this clause. So, the fear that the district board is to be wiped out, according to the Statement of Objects and Reasons, is not borne out by the language of the clauses themselves. This is a point for the law officers of the Government and the Hon. Minister who introduced this Bill to consider. If, as a matter of fact, it is intended that all the district boards should be abolished and special officers appointed, wherein lies the need for postponing election? If the period of elections is extended, it necessarily implies the continuance of the district board. In that case, there is no place for these special officers to come in until the Government take powers under this legislation whereby they can abolish the district boards and appoint officers.

These are some of the points which I want to place before the Hon. Minister for consideration before the actual wording and the language of the clauses is adopted. Thank you, Sir.

SRI A GOVINDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, நண்பர் கலியாணசுந்தரம் மசோதாவை பொருக்குக் குழுவுக்கு விடவேண்டுமென்று கொண்டு வந்துள்ள பிரேரேபணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஜில்லா போர்டுகளை ஒழித்துவிடுவது என்ற நோக்கம் அரசாங்கத்திற்கு ஒரு வருஷ காலமாகவே ஆலோசனையில் இருந்து வந்திருக்கும் விஷயம். அப்படி இருந்தும் இந்த ஜில்லா போர்டுகள் முடிவடையும் இறுதியான காலகட்டத்தில், இந்த மசோதாவை உடனடியாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று வற்புறுத்துவது சரியல்ல என்பது என் கருத்து. நானும் தென்னாற்காடு ஜில்லா போர்டு உறுப்பினர் என்ற முறையில் ஹரிஜனங்களுக்கு ஜில்லா போர்டு மூலம் என்ன என்ன நன்மைகள் செய்ய வாய்ப்பு இருக்கிறது, வசதி இருக்கிறது என்பதை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட நெடுங்காலமாக ஜில்லாப் போர்டு ஜனநாயக முறையில் இயங்கும் ஸ்தாபனமாக இருந்து வந்திருக்கிறது. இந்த கடைசி கட்டத்தில் இரண்டு மூன்று தினங்களுக்குள் மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்பது, மெம்பர்களை வற்புறுத்துவது போல் இருக்கிறது. இதைப்பற்றி ஆளும் கட்சியிலேயே, மந்திரி சபையிலே கூட மாறுபட்ட அபிப்பிராயம் இருப்பதாக சந்தேகப்பட இடம் இருக்கிறது. பொதுவாக பொதுமக்கள் ஒன்று சொல்கிறார்கள். "இன்றைய தினம் மக்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய, குடி ஆட்சி நடக்கும் இந்த ஜில்லா போர்டுகளை, ஏன் பறிக்கிறார்கள்" என்று கேட்கிறார்கள். இதற்கு காரணம் இல்லாமல் இல்லை. வட ஆற்காடு ஜில்லாவில் காங்கிரஸ் முயற்சி செய்தும், ஜில்லா போர்டை கைப்பற்ற முடியவில்லை. அதே போல தஞ்சாவூரில் குன்னியூரார், மதுரையில் சிங்கராயர் அவர்களுடைய ஆட்சியை தடுக்க முடியாத நிலைமை இருந்தும் கூட, காங்கிரசே எங்கு பார்த்தாலும் மெஜாரிட்டியில் இருந்தும் கூட, ஆனாலும் மூன்று ஜில்லாக்களில் இந்த போர்டுகளை கைப்பற்றமுடியாத நிலைமையிருந்தும் கூட, முதல் மந்திரிக்கும் ஜில்லா போர்டு பிரசிடெண்டுக்கும் மாறுபட்ட அபிப்பிராயம் இருப்பதால் இந்த ஜில்லா போர்டுகளை ஒழிக்க முயற்சி செய்கிறார்கள் என்று பொது மக்கள் சொல்கிறார்கள். நண்பர் ராமசாமி நாயுடு பேசும்போது சர்க்கார் மசோதாவை ஆதரிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு, இவ்வளவு அவசரப்பட வேண்டாம், மூன்று மாத காலம் ஒத்திவைத்து யோசிக்கலாம் என்ற தொனியில் முடித்தார்.

ஜில்லா போர்டு நிர்வாகம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. ஒரு வருஷமாக சட்டசபையிலே கேள்வி நேரங்களிலே பதில் அளிக்கும் நேரத்தில் இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது, ஆலோசனையில் இருக்கிறது என்று கூறப்பட்டது. அதே நேரத்தில் வெளியில் சில மந்திரிகள் சில சில இடங்களில் மாறுபட்ட அபிப்பிராயம் சொல்லியும், சட்டசபையிலே வேறு அபிப்பிராயமும் சொல்லி இருக்கிறார்கள். இப்போது திடீரென ஸ்பெஷல் ஆபிசர் கையில் அதிகாரத்தைக் கொடுக்கிறோம் என்று

[Sri A. Govindasamy] [26th October 1957

சொல்வதைவிட நண்பர் கல்யாணசுந்தரம் சொன்னதைப் போல கொஞ்சம் பரிசீலிக்க, ஆலோசனை செய்ய இந்த மசோதாவை சென்ற சட்டசபையிலேயே கொண்டு வந்திருக்கலாம். அப்படி கொண்டு வராவிட்டாலும் இப்போதாவது, திறமை வாய்ந்த ஜில்லா போர்டு மெம்பர்களை கொண்ட ஒரு குழு அமைத்து, எந்த அளவுக்கு இப்போதிருக்கும் போர்டுகள் சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்பதை, பரிசீலனைக்கு விடவேண்டும் என்ற கருத்தைக் கொண்ட, நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை நானும் ஆமோதிக்கிறேன்.

இந்த ஜில்லா போர்டு நிர்வாகத்தை பரவலாக பஞ்சாயத்து மூலமாகக் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, எங்கே காங்கிரசுக்கு மெஜாரிட்டி இல்லையோ அந்த மாவட்டத்தில் மாடல் பஞ்சாயத்து யூனியன் "Inauguration" செய்து இருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் அமைக்கும் விஷயத்தில், சட்டம் நிறைவேற்றிய பிறகு, அரசாங்கத்திற்கு போதுமான மெஜாரிட்டி இருப்பதால், மசோதாவின் கீழ் எந்த விதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்களோ என்ற சந்தேகமும் இருக்கிறது. சட்டம் வரும்போது பரிசீலித்துக் கொள்ளலாம் என்று சொன்னாலும் கூட பஞ்சாயத்துக்கள் மூலமாக நிறைவேற்றலாம் என்று வரும்போது, ஆயிரம் ஜனத்தொகை கொண்ட பல கிராமங்களில் இன்னும் பஞ்சாயத்து போர்டுகள் நிறுவப்படவில்லை. பிளாக்கு லெவலில் செய்யப்போகிறோம் என்று சொன்னாலும் பல ஜில்லாக்களில் பிளாக்குகள் ஏற்படவில்லை. குறிப்பாக எங்கள் ஜில்லாவில் இதுவரையில் 9 பிளாக்குகள் இருந்தன. இந்த ஆண்டில் இரண்டு சேர்த்திருக்கிறார்கள். ஆக 11 பிளாக்குகள் இருக்கின்றன. இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள் எல்லா இடங்களிலும் பிளாக்குகள் வந்து விடும் என்று சொல்வதற்கில்லை. இப்படி இருக்கும்போது, இந்த மசோதாவை திடீரென்று அவசரப்பட்டு கொண்டு வந்திருக்க வேண்டியதில்லை. ஜில்லா போர்டுகள் நல்ல முறையில் வேலை செய்கிறதா இல்லையா என்பதற்கு நண்பர் ராமசாமி நாயுடு ஒரு நல்ல பதில் அளித்தார். அவர் ஜில்லா போர்டுகள் நன்மைகள் செய்ய முடியும், நல்ல காரியங்கள் செய்ய அவைகள் உறுதுணையாக இருக்க முடியும் என்று சொன்னார். பொதுவாக உபாத்தியாயர்களை போடுவதிலும், மாற்றுவதிலும், இவைகள் ஈடுபட்டிருக்கின்றன என்று சொன்னாலும், மற்ற காரியங்கள் செய்யவும் துணையாக இருக்கிறது. அப்படி இருக்கும்போது ஏன் இந்த ஜில்லா போர்டுகளை உடனடியாக மூடவேண்டுமென்ற முடிவுக்கு வரவேண்டும், என்பதை யோசிக்கவேண்டும். இதைப்பற்றி முன்னமேயே ரத்னசபாபதி முதலியார் கமிட்டி கருத்துகளை வெளியிட்டிருக்கிறது. அவைகளைப்பற்றி அரசாங்கத்தார் சிந்தித்ததாகவோ அல்லது யோசித்து ஒரு முடிவுக்கு வந்ததாகவோ தெரியவில்லை. சென்ற ஆண்டு வெளியிடப்பட்ட "White Paper" நமக்கு வழங்கப்பட்டது. அதை விவாதிக்காமலே சட்டசபை கலைந்தது. இந்த ஜில்லா போர்டுகளில் இதற்கு முன்னால் கூட Special Officers இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களால் எந்த காரியத்தையும் உடனடியாக நடத்த முடியாமல், காலம் கடத்த நேர்ந்திருக்கிறது. எல்லா Officer-களும் மோசமானவர்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் போதுமான மட்டும் வேலை நடப்பதில்லை. ஒவ்வொரு போர்டுக்கும் ஐம்பதுக்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் இருந்தும், வட்டாரங்களிலுள்ள நிர்வாகக் குறைகள் கவனிக்கப்படவேண்டும் என்று மெம்பர்களால் வற்புறுததுப்பட்டும் கூட, அவைகள் கவனிக்கப்படாமல் இருக்கும் நிலையில் ஒரு Special Officer இதை நிர்வகிக்க முடியுமா? சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல சட்டசபை அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு அட்வைசரி கமிட்டி நியமித்து அந்த கமிட்டி ஸ்பெஷல் ஆபீசருக்கு ஆலோசனை கூறி, அதன் பேரில் காரியங்கள் நடத்தப்பெற்றால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, நண்பர் கல்யாணசுந்தரம் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தின்படி இந்த மசோதாவை பரிசீலனைக்கு செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER**: இன்னும் சில அங்கத்தினர்கள் பேச வேண்டுமென்று விரும்புவதால் ஒவ்வொரு அங்கத்தினரும் 5 நிமிஷமே பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



26th October 1957]

**Srimathi T. N. ANANDANAYAKI**: Mr. Speaker, Sir, while supporting the Bill introduced by the Hon. Srimathi Lourdhammal Simon and opposing the amendment moved by the hon. Gentleman, Sri M. Kalyanasundaram, I would like to place before this House a few facts with your permission. As so many hon. Members have already mentioned, I am not such a fortunate Member of this House as to be a member of the district board also.

(Deputy Speaker in the Chair.)

Even though I am not so fortunate as to be a member of district board, I still feel I am a little bit fortunate in being a member of the Madras City Council which is a wider body than the District Boards. Having a little experience of the working of the Madras Corporation, I think I can with some authority speak on district board administration, also of course, not with so much of authority as Presidents of District Boards, present and past.

Coming to the amendment of Sri Kalyanasundaram, I would like to oppose it on two grounds. The first is this. He pointed out that the abolition of elected bodies like district boards was very much anti-democratic and that the Government which was championing the cause of democracy was trying to kill it indirectly by appointing special officers. I would like to point out that the hon. Member has not understood the spirit of the amending Bill itself. If the Government are against democracy, if they think of killing democratic principles by abolishing the District Boards, they could abolish them once for all. But according to the Bill, it is not so. For clause 2 clearly says that elections to District Boards will be postponed up to such date, not being later than 31st October 1958. So, the Government have fixed a date—31st October 1958—before which elections should be held either to District Boards or to other bodies which they propose to bring into existence in their place. So, if the Government are opposed to democratic principles, they would not fix this date. To call them anti-democratic seems to me to be meaningless, absurd and unjust also.

Coming to the next point . . .

**Sri M. KALYANASUNDARAM**: On a point of order. Although I do not attach much significance or importance to what the Lady Member says, yet, in order to preserve the dignity of the House, I would like to know whether 'absurd' is parliamentary.

**Srimathi T. N. ANANDANAYAKI**: It is quite parliamentary.

**Sri M. KALYANASUNDARAM**: I want your ruling, Sir.

**DEPUTY SPEAKER**: It is not unparliamentary.

**Srimathi T. N. ANANDANAYAKI**: The hon. Member, Sri Govindasamy said that the Government were afraid of the District Boards of Madurai, North Arcot and Tanjore. If they

are afraid, they will abolish them. But they are going to hold elections before 31st October 1958. They are not going to prevent the present Presidents of the Tanjore, Madurai and North Arcot District Boards from standing for election again. So, to impute motives to the Government that they are siding with some individuals is meaningless, I would say once again, and absurd.

Coming to the other point made by the hon. Member, let me tell him that the appointment of special officers is only a stop-gap arrangement. This is not killing democratic principles. No doubt, District Boards may go but the appointment of special officers is only a temporary measure. The Government are thinking of bringing a comprehensive Bill and in order just to see that the administration is not paralysed meanwhile, they want to appoint special officers. To say that such appointment will ruin democratic principles, is improper.

The hon. Member then said that as a result of this measure, developmental activities will be very much curtailed. He seems to think that the special officer will be hand-tied and mouth-shut and will not be allowed to do anything except to sign papers of a routine nature. In this connection, I am in entire agreement with what my hon. Friend, Sri Vinayakam said. After the coming into existence of the Community Development and National Extension Service blocks, most of the powers of District Boards have been taken away and to finance the huge developmental activities, they have to wait before the Government with a begging bowl for funds which are refused by Government with a cruel heart in a way. In such circumstances, to say that developmental activities will be curtailed, is a little bit of exaggeration, whatever be the actual experience of the Presidents of District Boards who are here. But one thing is certain. The transfer of teachers . . .

DEPUTY SPEAKER: The hon. Member has exceeded her time-limit.

SRIMATHI T. N. ANANDANAYAKI: Just one minute more and I shall finish my speech. The District Boards take cruel pleasure in sending their teachers from pillar to post and separating married couples working in the same building. When the new Blocks Boards come into existence, the teachers cannot be disturbed and transferred from one area to another so often. For this and other reasons, it is just and proper that these Boards should be abolished as early as possible and elections held to the new bodies that might come into existence before 31st October 1958.

SRI P. S. CHINNADURAI: மதிப்பிற்குறிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சபை முன்பாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் திருத்த மசோதாவின் அவசியத்தை நான் உணர்கிறேன். அக்டோபர் 31-ம் தேதியோடு ஜில்லா போர்டுகளின் பதவி காலம் முடிவடைகிறது. ஜில்லா போர்டுகள் தற்போதைய நிர்வாக அமைப்பு முறையிலேயே தொடர்ந்து நீடித்து நடத்தப்பட வேண்டுமா, அன்றி வேறு பல திருத்தங்கள் செய்து வேறு முறையான நிர்வாக அமைப்பைக்கொண்டுவர வேண்டுமா என்று ஆலோசித்து முடிவு கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு சிறிது அவகாசம் வேண்டியிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அத்தகைய ஒரு முடிவை எடுத்துக் கொள்ளுவதற்கு முன்பாக அக்டோபர் 31-ம் தேதிக்குப் பின்





அரசாங்கம் எடுத்துக்கொள்கிற முடிவை அமுல் நடத்துவதற்கு இடையே உள்ள காலத்திலே ஜில்லா போர்டுகள் இதுவரையில் நிர்வகித்து வந்த நிர்வாகப் பொறுப்புகளை யார் நிர்வகித்து வரவேண்டும் என்பது பற்றி அரசாங்கம் சரியானபடி தீர்மானிக்கவில்லை. இது பற்றி சரியான ஆலோசனைகள் மசோதாவிலே திட்ட வட்டமாக கொடுக்கப்படவில்லை என்பதைத் தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு விசேஷ அதிகாரியை நியமித்து அவர் பொறுப்பிலே ஜில்லா போர்டுகளின் நிர்வாகப் பொறுப்புகளை எல்லாம் விட்டுவிடலாம் என்று திட்ட வட்டமாக கூறுகின்றேமே என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லலாம். ஆனால் அது ஜனநாயக முறைக்கு ஏற்றதா என்று உண்மையிலேயே நான் அறிய விரும்புகிறேன். இங்கு இதுவரை பேசிய கனம் அங்கத்தினர்களிலே, குறிப்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களில் கணிசமான ஒரு பகுதியினர் வெளியிட்ட கருத்துகளை வைத்துப் பார்ப்போமேயானால், இந்த மசோதாவானது ஆட்சியாளர்களுடைய கட்சிக் கூட்டத்திலே கூட விவாதிக்கப்படவில்லை என்ற ஒரு எண்ணத்திற்குத்தான் என்னைப் போன்றவர்கள் வரவேண்டியிருக்கிறது. அதைப்பற்றிய கவலை எனக்கு வேண்டாம் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நினைக்கலாம். ஆனால் இந்தச் சபை முன்பு விவாதம் நடக்கும்போது ஆட்சியாளர் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பலர் கருத்துக்களை வெளியிடும்போது மசோதாவிற்கு எதிராக உள்ள கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த மசோதாவில் நல்ல பல திருத்தங்களை செய்வதற்குறிய ஆலோசனைகளை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை பார்க்கும்பொழுது, இந்தத் திருத்தங்களெல்லாம் வருவதற்குறிய அவசியமே இல்லாமல் செய்திருக்க முடியுமே என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இருந்தபோதிலும் இப்போது காலம் கடந்துவிடவில்லை. கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று ஒரு திருத்தத்தை பிரேரணை செய்திருக்கிறார்கள். இதன் அவசியத்தை ஆட்சியாளர் கட்சியைச் சேர்ந்தவர்கள் உணர வேண்டுமென்பது தான் என்னுடைய வேண்டுகோளாகும். அவ்வாறு செலக்ட் கமிட்டிக்கு விட்டு இதனை பரிசீலனை செய்வதற்குப் பதிலாக இப்பொழுதேகூட ஜனநாயக ரீதியிலே ஜில்லா போர்டுகளின் நிர்வாகத்தை இந்த இடைக்காலத்திலே நடத்துவதற்குறிய ஒரு ஆலோசனையை சரியானபடி ஏற்றுக்கொள்ளுவதற்கு ஆட்சியாளர் கட்சியினர்கள் முன் வருவார்களேயானால், குறிப்பாக கனம் அமைச்சர் அவர்கள் முன் வருவார்களேயானால், இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டிய அவசியம்கூட நேராமல் போகும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். தனிப்பட்ட அதிகாரிகளுடைய பொறுப்பிலே ஜில்லா போர்டுகளின் நிர்வாகம் முழுவதையும் விடுவதற்குப் பதிலாக, வேறு எதாவது ஒரு "அட்வைசரி போர்டு" என்ற முறையிலே ஒரு குழுவை அமைத்து, இப்பொழுது உள்ள ஜில்லா போர்டுகளுக்குப் பதிலாக அந்த ஆலோசனை குழுவின் ஆலோசனையின் பேரிலே நிர்வாக அதிகாரி தன்னுடைய பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டுமென்று எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆட்சியாளர் கட்சியைச் சேர்ந்தவர்களும்கூட பலர் வற்புறுத்தியிருக்கிறார்கள். இது கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இது பற்றி சபை முன்பு ஒரு திருத்தம் கொண்டுவர நான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அத்தகைய ஒரு திருத்தம் கொண்டு வருவதற்கு முன்பாக கனம் அமைச்சர் அவர்களும், கனம் சர்க்கார் கட்சித் தலைவர் அவர்களும், ஆட்சியாளர் தரப்பிலே அத்தனை பேர்களும் பெரிய மனது கொண்டு அத்தகைய ஒரு திருத்தத்தின் சாராம்சத்தை ஏற்றுக்கொண்டு, அதற்குறிய முறையிலே நிர்வாகத்தை தனி நபர்களின் பொறுப்பிலே விடுவதற்குப் பதிலாக ஜனநாயக ரீதியில் ஒரு கமிட்டியின் பொறுப்பிலே விடுவதற்கு வகை செய்வார்களேயானால், அவர்கள் இச்சபைக்கு மாத்திரமன்றி, இந்த ராஜ்யத்திற்கும், ஜனநாயகத்திற்கும் பெரியதோர் தொண்டு செய்தவர்கள் ஆவார்கள் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குறிய முறையிலே அவர்கள் ஒத்துக்கொள்வார்களேயானால், இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டிய அவசியம்கூட நேராமல் செய்யலாம். செலக்ட் கமிட்டிக்கு விடுவதன் மூலம் தாமதம்

ஏற்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் ஆட்சேபிக்கக்கூடும். அந்தத் தாமதத்தைக்கூட தவிர்ப்பதற்கு வகை இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

11-40 a.m. * SRI K. SATTANATHA KARAYALAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் பொறுக்குக் கமிட்டிக்கு இந்தத் திருத்த மசோதாவை அனுப்பவேண்டுமென்று திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன்.

ஜில்லா போர்டுகள் எல்லாம் அவசியம் இருக்க வேண்டுமா, அல்லது அவைகளை அகற்ற வேண்டுமா என்கிற விவாதத்திற்கு இன்று நான் போகவில்லை. அவைகளைப் பற்றி சாங்கோபாங்கமாய் பரிசீலனை செய்வதற்கு காலம் இருக்கிறது. அப்படிச் செய்யாமல் இன்னும் சில நாள் ஆயுள் தான் இருக்கிறதென்ற நேரத்தில் அவசரம் அவசரமாக இன்று ஒரு திருத்த மசோதா சபைமுன்பு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை கண்டிக்காமல் இருக்க முடியாது.

முன்பே சபையில் இது பற்றி ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதில் அளிக்கும் நேரத்தில் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் எனச் சொன்னார்கள். பரிசீலனை செய்வதற்கு இத்தனை காலதாமதம் ஆகவேண்டிய பெரிய காரியம் அதில் ஒன்றும் இல்லை. ஜில்லா போர்டுகள் இருக்க வேண்டுமா, இல்லை அவற்றைக் கலைத்துவிட்டு ஸ்தல ஸ்தாபனங்களுக்கே அந்த அதிகாரத்தைப் பிரித்துக் கொடுத்து விடலாமா என்பதைத் தீர்மானிப்பதற்கு நிறைய காலம் இருந்தது. சந்தர்ப்பம் இருந்தது. அவற்றையெல்லாம் விட்டு விட்டு சர்க்கார் இந்தக் கடைசி நேரத்தில் இதைப் போன்ற திருத்த மசோதாவை அவசரம் அவசரமாகக் கொண்டு வருவது வருந்தத் தக்கது. இது போலவே ஒவ்வொரு காரியத்திலும் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஜில்லா போர்டுகளைக் கலைத்து விட்டு அவைகளை விசேஷ அதிகாரிகளின் கையில், ஒப்படைப்பதற்குரிய ஒரு திருத்தம் சர்க்கார் தரப்பில் வந்திருக்கக்கூடிய மசோதாவில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்படி விசேஷ அதிகாரிகளின் கையில் இந்தப் பொறுப்புகளைத் தற்போது கொடுக்க வேண்டிய அவசியம் இவர்கள் முன்பே இந்த விஷயங்களை தக்கபடி பரிசீலனை செய்திருந்தால் நேர்ந்திருக்காது. பல நண்பர்கள் சொன்னது போல இப்போது உள்ள ஸ்தல ஸ்தாபனங்களின் ஆயுள் காலத்தையே இன்னும் சில மாதங்கள் நீடித்து விட்டு இடையில் இதை சாங்கோபாங்கமாகப் பரிசீலனை செய்து என்ன புது ஏற்பாடுகளைச் செய்ய நினைக்கிறோமோ அதைச் செய்யலாம். அப்படி எடுக்கக்கூடிய முடிவு நல்ல முறையில் இருக்குமென்று எதிர்பார்க்கிறேன். அந்த முறையில்தான் கல்யாணசுந்தரம் அவர்கள் பிரேரேபித்திருக்கும்படியான திருத்தத்தை ஆதரிக்கிறேன். இந்த திருத்த மசோதாவை உடனே சட்டமாக்கிவிட வேண்டுமென்ற நோக்கத்தோடு சர்க்காரும் போகாமல் இதற்கு இணக்கம் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

பொதுவாக மக்களுக்குக் கொடுத்திருக்கக் கூடிய அதிகாரத்தை கடுகளவேனும் எடுத்து விசேஷ அதிகாரிக்குக் கொடுப்பது என்பது—நல்ல பாரம்பரியமாக இருக்காது. அப்படியே எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் தீர்மானித்தால் அந்த அதிகாரிக்கு ஆலோசனை சொல்வதற்காக தற்சமயம் ஜில்லா போர்டுகளில் இருக்கக் கூடிய சில உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்கள், பாராளும் மன்ற உறுப்பினர்கள் இவர்களைக்கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை அங்கங்கே ஏற்படுத்தி அவர்களுக்கு உதவியாக இருக்கும்படி செய்வது மிகவும் நல்ல முறையாக இருக்கும். இது இடைக்காலத்திற்கு ஒரு நல்ல முறையாக அமையலாம் என்பதைக் குறிப்பிட்டு விட்டு தோழர் கல்யாணசுந்தரம் கொண்டு வந்த திருத்தப் பிரேரணையை ஆதரிக்கின்றேன்.

SRI A. E. CHANDRASEKARA NAYAGAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஸ்தல ஸ்தாபன திருத்த மசோதாவை ஆதரித்து ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அதாவது





ஜில்லா போர்டுகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்று ஒரு நண்பர் சொன்னார். நாம் அடிமையாக இருந்த காலத்தில் ஏதோ பேருக்காவது சுதந்திரம் வேண்டும் என ஸ்தல ஸ்தாபன போர்டுகள் தேவை என்று ஏற்படுத்தப்பட்டது. பூர்ண சுயராஜ்யம் வந்த பிறகு சுயராஜ்ய நாட்டில் அம்மாதிரியான ஜில்லா போர்டுகளுக்கு அவசியம் இல்லை. அதை முன்கூட்டியே நாம் கலைத்து விட்டு நல்ல முறையில் பரவலான ஜனநாயக நிர்வாகத்தை ஏற்படுத்தி இருக்கவேண்டும். ஆனால் காலம் தாழ்ந்து விட்டது. இப்போது அதைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

ஜனநாயகம் பரவலான முறையில் கிராமங்கள் தோறும் பரவவேண்டும் என்கிற நோக்கத்துடன் காங்கிரஸ் சர்க்கார் இந்த மசோதாவைக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்குப் பொதுமக்கள் அனைவரும் ஆதரவு அளிக்கிறார்கள். இதை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டும் இருக்கிறார்கள். ஜில்லா போர்டுகளைக் கலைத்து இதன் அதிகாரங்களை அங்கங்கே உள்ள பஞ்சாயத்து போர்டுகளுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான் நோக்கம். பஞ்சாயத்து போர்டுகளையும் அமைத்து வருகிறார்கள். குறுகிய இடத்தில் பரவலான ஜனநாயகம் அமைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தான் இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது. அதோடு நாஷனல் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம், ப்ளாக் டெவெலெப்மெண்டு ஸ்கீம் இது எல்லாம் வந்து கொண்டிருக்கிறது. அவைகள் பெரும்பாலான ஜில்லா போர்டுகளின் வேலைகளைத் தான் எடுத்துக் கொண்டு செய்து வருகின்றன. ஜில்லா போர்டின் ரோடு பராமரிப்பு வேலையும் பெரும்பாலும் ஹைவேஸ் இலாகாவிற்கு மாறிவிட்டது. இப்படிப்பட்ட சமயத்தில் ஜில்லா போர்டுகளை எடுத்து விட்டு பாக்கி இருக்கும்படியான பொறுப்புகளை பரவலான முறையில் விநியோகம் செய்தால் தான் நிர்வாகம் திறமையாக, நல்ல முறையில் ஜனநாயக முறையில் நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஸ்பெஷல் ஆபீசரைப் போடுவது பற்றி ஒரு சர்ச்சை உண்டாகி இருக்கிறது. அதாவது ஸ்பெஷல் ஆபீசர்கள் என்பவர்கள் எங்கோ அமெரிக்காவில் இருந்து வந்துவிடவில்லை. ஜனநாயக சர்க்காரின் கீழ், ஜனநாயக சர்க்காரின் உத்திரவுகளைத் தான் ஸ்பெஷல் ஆபீசர்கள் நிறைவேற்றிக்கொண்டிருக்கப்போகிறார்கள். இருக்கக் கூடிய ஜில்லா போர்டுகளை எல்லாம் அடியோடு கலைத்துவிட்டு அவற்றின் பொறுப்புக்களை எல்லாம் சரியான முறையில் அங்கங்கே உள்ள பஞ்சாயத்து போர்டுகளிடம், ஸ்தல ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்றால் முறையாக நிர்வாகத்தை மாற்றி அமைக்க இடையில் சிறிது காலம் தேவைப்படும். அந்தக் காலத்தில் அதிகாரிகளைத் தான் போடவேண்டும். அவற்றைக் கலைக்காமல் ஸ்பெஷல் ஆபீசர்களைப் போடாமல் அதிகாரங்களை நேரிடையாக மாற்ற வேண்டுமானால் அது சரியாக நடக்காது. ஆகவே தான் இந்த மசோதா இப்போது கொண்டுவர வேண்டியது அவசியமாக இருக்கிறது. இப்போது அக்டோபர் 31-ந் தேதியோடு ஜில்லா போர்டுகளின் காலம் முடிவடைவதால் ஸ்பெஷல் ஆபீசர்களைப் போடுவதில் ஆபத்து ஒன்றும் வந்து விடாது. இந்த ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டு இந்த மசோதாவை எல்லா மெம்பர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதாக நான் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* SRI P. S. K. LAKSHMIPATHI RAJ: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக் கூடிய திருத்த மசோதாவை ஆதரித்துப் பேசுகின்றேன். எனக்கு முன்னால் பேசிய பலர் பல கோணங்களில் விமர்சனம் செய்து இருக்கிறார்கள். இந்தத் திருத்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்குப் பிரேரிக்க வேண்டுமென்று திரு. கல்யாணசுந்தரம் அவர்கள், வழக்கமாக அவர்கள் கட்சி கையாளும் முறையில் ஒரு திருத்தம் பிரேரித்திருக்கிறார்கள். அவர்கள் கிராமவாசிகளுக்கு உரிமைகள் வேண்டும் என்று கூறுவது ஒருபுறம். கிராமவாசிகளுக்கு சர்க்கார் ஒன்றிரண்டு அதிகாரத்தைக் கொடுக்கவேண்டுமென்று மசோதா கொண்டு வந்தால் சட்ட சபையில் இம்மாதிரியாக அதைத் தடுத்து எதிர்ப்பது ஒருபுறம். நானே பலமுறை விவசாயிகளுக்கு, உழுகின்ற ஏழைகளுக்கு அதிக உரிமைகள் கொடுக்க ஜில்லா போர்டுகளை

எல்லாம் கலைத்துவிட்டு அதன் பொறுப்புக்களை கிராம பஞ்சாயத்துகளிடமே விட்டு விட வேண்டும் என அவர்கள் பேசிக் கேட்டிருக்கிறேன். அந்தக் கொள்கையை அனுசரித்து ஜில்லா போர்டுகளை நவம்பர் மாதம் முதல் கலைத்து விட சர்க்கார் ஒரு திருத்த மசோதா கொண்டு வருவதை அவர்கள் எதிர்க்கிறார்கள். ஜில்லா போர்டுகளைக் கலைத்து விட்டு பொறுப்புகளை ஸ்தல பஞ்சாயத்துக்களிடம் கொடுப்பதற்கு இடைக்காலத்தில் ஸ்பெஷல் ஆபீசர்களைப் போடுவது என்பதை அவர்கள் எதிர்ப்பது பெரிய விந்தையாக இருக்கிறது. இது எல்லாம் அவர்கள் தங்கள் கட்சி நோக்கத்தை வைத்துக் கொண்டு சொல்வதாகத் தான் தோன்றுகிறது. விருவிருப்பான பேச்சுக்களினால் ஜனங்களுடைய கருத்தைக் கவரலாம் என்கிற காலம் போய் விட்டது. அவர்கள் தங்கள் சொந்தச் சிந்தனையை இழந்து விட்டு நிற்கவில்லை என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். இப்படிப் பேசுவதன் மூலம் மக்கள் கருத்தைக் கவர்ந்து விடலாம் என எதிர்க்கட்சிக்காரர்கள் நினைத்தால் அவர்கள் ஏமாந்து தான் போகவேண்டும். இன்றைக்கு சட்ட சபையில் சர்க்கார் கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதா தான் சரியானது என்பதில் சந்தேகம் கிடையாது.

ஜில்லா போர்டுகளின் ஆயுள் காலம் முடிவு அடைகிறது. கடந்த ஐந்தாண்டு காலமாக தனிப்பட்ட முறையில் பல பல அபிவிருத்தித் திட்டங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. ஜில்லா போர்டுகளின் பொறுப்புக்களை எல்லாம் இந்த சமுதாய நலத்திட்டம், தேசிய விஸ்தரிப்புத் திட்டம் இவைகள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. இதற்கிடையில் ஜில்லா போர்டுகளின் பொறுப்புக்களை எல்லாம் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு பஞ்சாயத்துக்களுக்கு மாற்றுவது என்றால் ஜில்லா போர்டுகளை வைத்துக்கொண்டு இந்த அதிகார மாற்றம் செய்வது என்பது முடியாத காரியம் என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மை. ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டு அதிகாரத்தை அவர்கள் கையில் கொடுப்பது ஜனநாயகத்தையே பறிப்பதாகும் என்றும் ஜில்லா போர்டுகளின் ஆயுள் காலத்தையே நீட்டலாம் எனச் சொல்வதும் எனக்கு விநோதமாக இருக்கிறது. நானும் இந்த ஜில்லா போர்டில் அங்கத்தினனாக இருந்திருக்கிறேன். இந்த ஜில்லா போர்டுகள் நன்றாக நடக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் இருந்தவர்களிலே நானும் ஒருவன். ஜில்லா போர்டுகளில் கிடைக்கக்கூடிய பணம் ஒரு ரூபாய் என்றால் அதில் இரண்டணா தான் அபிவிருத்தி திட்டங்களுக்காக செலவிடப்படுகிறது. இது உலகம் அறிந்த உண்மை. ஜில்லா போர்டில் இருக்கும் தலைவர்களெல்லாம் திறமைசாலிகள் அல்ல. ஆனால், ஒரு சில தலைவர்கள் சிறந்தவர்களாக இருக்கிறார்கள். திறமைசாலிகளாகவும் இருக்கிறார்கள். இப்பொழுது ஜில்லா போர்டுகளில் என்ன நடக்கிறதென்றால், முக்கியமாக மருத்துவத்திற்காக காலரா முதலிய கேசுகளுக்காக உபயோகப்படுத்தும் மோட்டார் வாகனங்களை, அங்கிருப்பவர்கள் விளையாட கிராமத்திற்குச் செல்வதற்காக உபயோகப்படுத்தப்படுகிறது. நல்ல வேலைகள் நடப்பதாகத் தெரியவில்லை. மேலும் அங்கு இருக்கும் ஜீப்புகள் அவசர காரியங்களுக்கு உபயோகப்படுவதில்லை. ஷெ தலைவர்களை வால் பிடிக்கும் அங்கத்தினர்களுக்குப் பயன்படுகிறது. ஆதலால் இந்த ஜில்லா போர்டுகள் சீக்கிரம் ஒழிந்தால் எனக்கு மிகவும் சந்தோஷம். எதிர்க்கட்சி அங்கத்தினர் இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுடைய முக்கியமான நோக்கம் ஜில்லா போர்டின் பதவி காலத்தை நீடிக்கவேண்டும் என்பது தான். ஆனால் ஜில்லா போர்டுகளை ஒரே அடியாக ஒழித்து ஸ்பெஷல் ஆபீசர்களை நியமிக்கவேண்டும் என்பதுதான் என் கருத்து. அதற்கு இந்த மசோதா வகை செய்கிறது. ஆகவே இதை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

*Sri S. NAGARAJA MONIGAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது மதிப்பிற்குறிய அமைச்சர் கொண்டுவந்திருக்கும் ஸ்தல ஸ்தாபன மசோதாவை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன். அதே சமயத்தில் கம்யூனிஸ்ட் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்திரம் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன். தற்போது உள்ள அதிகாரத்தை பரவலாக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் புதிய முறையில் ஸ்தாபனங்களை ஏற்படுத்த தீவிரமாக பலரும் ஆலோசித்து இந்த மசோதா கொண்டுவரப்பட்டது. அவ்வாறு திட்டமிடுவதற்கு கொஞ்சகாலம்





தேவைப்படுவதனால், தேர்தலை ஒரு வருஷத்திற்கு ஒத்திப்போட்டு ஸ்பெஷல் ஆபீசரை நியமிப்பதற்கு இந்த மசோதா வகை தேடுகிறது. ஆனால் அதே சமயத்தில் எதிர்க்கட்சி அங்கத்தினர் பேசியபோது மூன்று காரணங்களைச் சொன்னார்கள். திடீரென்று இந்த மசோதா கொண்டுவரப்பட்டது, அரசாங்கம் தங்களுடைய மெஜாரிடி பலத்தைக் கொண்டு இந்த மசோதாவை அமுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். இது விஷயமாக ஏற்கனவே முன்பிருந்த சட்டசபையில் இதை தீர ஆலோசித்து ஒரு வெள்ளை காகிதத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அப்பொழுது கொண்டு வரப்படவேண்டிய மசோதாவை தேர்தல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டு இப்பொழுது கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த தேர்தல் நடந்து இப்பொழுது புது அங்கத்தினர்கள் ஏராளமாக வந்திருக்கிறார்கள். புதிய கருத்துக்களைக் கொடுக்க இன்று நமக்கு வெள்ளைக் காகிதத்தை அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது. மத்தியில் தேர்தல் வந்தபடியால் இது சமர்ப்பிக்கப்பட முடியாமல் போயிற்று. இதை அனுசரித்து காலதாமதம் ஏற்பட்டது. மக்களுக்கு பரவலாக அதிகாரத்தைக் கொடுப்பதற்காகவே இந்த மசோதாவை அரசாங்கம் கொண்டுவந்திருக்கிறதே தவிர வேறு அல்ல.

காங்கிரஸ் கட்சிதான் மெஜாரிடி பலத்தை வைத்துக்கொண்டு, இதைக் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். வாஸ்தவம்தான். சென்ற 15 ஆண்டுகளாக மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு பெருவாரியாக வாக்களித்து, காங்கிரஸ் அங்கத்தினர்கள் வந்திருக்கிறார்கள். ஆதலால் மக்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாகி இருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. சர்வாதிகாரத் தோரணையில் நடப்பதாக நினைப்பதற்கு அவசியம் இல்லை. அப்படி இருந்தாலும் அதைப் பார்த்துக்கொள்ள வாக்காளர்கள் அவர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் ஜில்லா போர்டுகளின் ஆயுளை மூன்று அல்லது ஆறு மாதத்திற்கு நீடிக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் சர்டிபிகேட் கொடுத்தார்கள் "இப்பொழுது இருக்கும் ஜில்லா போர்டுகளின் ஆயுட்காலத்தை மூன்று அல்லது ஆறு மாதத்திற்கு நீடிக்க வேண்டும்" என்று. இன்னும் அவர்கள் சொல்லலாம் "உங்கள் கட்சிக்காரர் தானே பெரும்பாலும் இருக்கிறார்கள், ஏன் ஸ்பெஷல் ஆபீசர்களைப் போடவேண்டும்" என்று. எங்கள் கட்சியிலே உள்ள ஸ்ரீ லக்ஷ்மிபதி ராஜ் கூட ஜில்லா போர்டுகள் நன்றாக நடை பெறவில்லை என்று சொன்னார்கள். பொதுவாகப் பார்க்கப்போனால் நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதற்காகவும், மக்களுக்கு அதிகாரங்களை பரவலாக்கவேண்டும் என்பதற்காகவும் அதோடு இப்பொழுது இருக்கின்ற சட்டம் காலாவதியாகும் நிலைமையில் இருப்பதனாலும் இந்த மசோதா கொண்டுவரப்பட்டதே தவிர வேறு அல்ல. சில ஜில்லா போர்டுகளில் மதுரை, வட ஆற்காடு போன்ற இடங்களில் காங்கிரஸுக்கு பலம் இல்லை; அதனால்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னார்கள். பொதுத் தேர்தலுக்கு பிறகு காங்கிரஸ் அங்கத்தினர்கள்தான் பெருவாரியாக வந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி இருக்கிறார்கள் என்பது திட்டவட்டமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேசியது எந்த வகையிலும் பொருத்தம் இல்லை. அடுத்தாற்போல் வெள்ளை காகிதம் வர இருப்பதால், பேசுவதற்கு சந்தர்ப்பம் இருப்பதாலும், இந்த மசோதாவை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

*Sri N. R. THIAGARAJAN: கனம் சபா நாயகர் அவர்களே, நானும் மாஜி ஜில்லா போர்டு தலைவர் என்ற முறையில் இந்த ஜில்லா போர்டுகளை ஒழிப்பதை மனப்பூர்வமாக மகிழ்ச்சியுடன் ஆதரிக்கிறேன். ஜில்லா போர்டுகளை எப்பொழுது ஒழிக்க முடியும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன். "தலைவர் பதவி போய்விட்டது, அதனால் தியாகராஜன் பேசுகிறார்" என்று யாரும் நினைக்க வேண்டியதில்லை. ஜில்லா போர்டு தலைவனாக இருந்த காலத்திலேயே, அப்பொழுது இருந்த ஸ்தல ஸ்தாபன மந்திரி கனம் சங்கர ரெட்டி அவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன், சீக்கிரமாக ஜில்லா போர்டை ஒழித்துக் கட்டுங்கள் என்று.

அது மாத்திரம் அல்ல. ஜில்லா போர்டுகளை ஒழித்துவிட்டு ஸ்பெஷல் ஆபீசர்களை போடவேண்டுமென்று 1953-ம் வருஷத்திலே சட்டசபையிலே ஒரு மசோதா வந்தது. "அப்பொழுது இருந்த தலைவர்கள் பதவி நீடிக்க வேண்டும் என்பதற்காக வேலை செய்யுங்கள்" என்று அப்பொழுது ஜில்லா போர்டுகள் சேம்பரின் காரியதரிசியாக இருந்து தற்போது எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்கும் ஸ்ரீ ராமசாமி முதலியார் அவர்கள் எங்களுக்கு கடிதம் எழுதி இருந்தார். நான் அதற்கு அறவே மறுத்துவிட்டேன்.

அது மாத்திரம் அல்ல. "ஜில்லா போர்டு பதவி முடிகிறது. 1-ம் தேதி அன்று சார்ஜ் எடுத்துக் கொள்ளப்போகிறேன்" என்று கலக்டர் ஸ்ரீ ராமகிருஷ்ணன் அவர்கள் எனக்குக் கடிதம் எழுதினார். அதற்கு நான் பதில் எழுதினேன், "15 தினங்கள் இன்னும் இருக்கிறதே! அதற்குள்ளாகவே வந்தால், இந்த நரக வேதனையில் இருந்து விடுதலை பெற தயாராக இருக்கிறேன்," என்றும் "1-ம் தேதி வரை நான் வழிமேல் விழிவைத்துக் காத்துக் கொண்டிருப்பேன்" என்றும் நான் எழுதியது ரிகார்டிலேயே இருக்கிறது. இந்த ஜில்லா போர்டு சாக்கடைக் குழியை ஒழிக்கவேண்டும் என்று மும்முரமாக நினைத்துக் கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன்.

எங்கள் மதுரை ஜில்லா போர்டு கட்டடத்தைப் பார்த்தால் பெரிய மாளிகை போல் இருக்கும். பல்வேறு ஜமீன்தார்கள், வெள்ளைக்காரர்கள், ஜில்லா போர்டு அங்கத்தினராவதற்கு எவ்வளவோ லட்சத்திற்குமேல் செலவழித்து அங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். அங்குள்ள ஒரு நாற்காலி மட்டும் 1,500 ரூபாய் பெறும். அங்கு தரையின்மேல் விரிக்கப்பட்டிருக்கும் கம்பளங்களும் மற்றும் உள்ள பொருள்களும் ஆடம்பரமாகக் காட்சி அளிக்கும். ஏதேனும் சேவை செய்யலாம் என்று நினைத்து அந்த ஸ்தாபனத்தில் போனபோது அங்கே ஆரம்ப ஆசிரியர்களை கால் பந்து ஆடுவதுபோல் ஓர் ஊரில் இருந்து மற்றொரு ஊருக்கு மாற்றுகின்ற காட்சியைத்தான் பார்த்தேன். நான் நான்கு ஆண்டுகளாக பார்த்த வேலை என்னவென்றால், 100 மணி நேரத்தில் 99 மணி நேரத்தை உபாத்தியாயர்களை மாற்றுவது, அவர்கள் பேரில் நடவடிக்கை எடுப்பது, அவர்கள் சம்பந்தமாக பேசுவது, அவர்களுக்காக சிபார்சு செய்யவரும் பிரமுகர்களுக்கு பேட்டி கொடுப்பது போன்ற காரியங்களைத் தவிர வேறு வேலைப் பார்த்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. ஒரு மணி நேரம் கூட நல்ல முறையில் செலவழித்திருந்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. பஞ்சாயத்து போர்டுகளுக்கு பரவலாக அதிகாரங்களைக் கொடுப்பதன் மூலம் அவைகள் நன்றாக வேலை செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை. ஜில்லா போர்டுகளை ஒழிப்பதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் ஜில்லா போர்டு ஒழிப்பு மசோதா பற்றி சென்ற சட்டசபையில் பேசியது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. "ஜில்லா போர்டுகளை ஒழித்தாகவேண்டும், ஸ்பெஷல் ஆபீசர் வசம் கொடுத்தாகவேண்டும்" என்று பேசி இருக்கிறார். அப்பொழுது பேசியதற்கு மாறாக இப்பொழுது பேசுவது இப்பொழுதுள்ள அரசாங்கத்தை எதிர்க்கவேண்டும் என்ற நோக்கத்துடன்தான். தற்போது கொண்டுவந்திருக்கும் மசோதாவை அவர் எதிர்ப்பதற்கு இதுதான் காரணமாக இருக்கவேண்டும் என்று சொல்வேன். ஜில்லா போர்டை ஒழிப்பதை நான் வரவேற்கிறேன். எதிர்க் கட்சியினரின் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன். ஜெய் ஹிந்த்.

12 noon. * SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே இப்பொழுது நம்முன் இருக்கும் இந்த ஜில்லா போர்ட் மசோதாவைப்பற்றி அநேக அங்கத்தினர்கள் பேசினார்கள். அநேகமாக ஜில்லா போர்டுகளை ஒழிக்க வேண்டுமென்று பேசினவர்கள்தான் அதிகம் என்று நினைக்கிறேன். ஆனால் நம்முடைய கம்யூனிஸ்ட்கட்சித் தலைவராயிருக்கும் உயர் திருவாளர் கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் ஜில்லா போர்டுகளை ஒழிப்பது பற்றி பரவாயில்லை, ஆனால் இன்னும் கொஞ்ச நாளைக்கு இதை நீடித்து வைத்திருக்க வேண்டுமென்று பேசினார்கள். முக்கியமாக இதை ஒழிப்பதா அல்லது இதை வைத்திருப்பதா என்பதைப் பற்றிய பிரச்னை சென்ற சட்ட சபையிலிருந்து அதிக நாட்களாக விவாதிக்கப்பட்டு இதற்கு ஒருவிதமான முடிவும் வராமல் அதிக நாட்கள்





தள்ளிக் கொண்டு வந்திருக்கிறது இந்தச் சட்டம். இதை எப்படிச் செய்வது என்பதின் காரணமாக சர்க்கார் கொஞ்ச நாட்களுக்கு முன்பு, சில வருஷங்களுக்கு முன்பு ரத்தினஸ்வாமி முதலியார் கமிட்டியைப் போட்டார்கள். அதற்குப் பிறகு குட்டிகிருஷ்ண மேனன் கமிட்டியைப் போட்டு அவர்களது ரிப்போர்ட்டுகளும் வந்து கொண்டு இருந்தது. அதைப் பற்றி ஒருவிதமான முடிவிற்கும் வரவில்லை. கடைசியாக இந்த வெள்ளை அறிக்கை ஒன்றை இப்போதுதான் விடுத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்னை ஒரு பெரிய தலைவலியைத்தான் உண்டாக்கும் என்பதைப் பற்றி ஆட்சேபணையேயில்லை. சர்க்காரின் நோக்கம் என்ன வென்றால், ஜில்லா போர்டுகளை ஒழித்து விட்டு ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும் சரி யூனியன் பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து போர்டு, ஸர்க்கிள் போர்டு இவைகளை எல்லாம் வைத்து ஒரு பஞ்சாயத்து ராஜ்யமாக அமையவேண்டும் என்பதுதான் நோக்கம். அதையும் நான் வரவேற்கிறேன். ஆனால் ஜில்லா போர்டுகளை ஒழிப்பதைப் பற்றி மட்டில் நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஜில்லா போர்டுகளில் அநேகம் நன்கு வேலை செய்யவில்லை. உபாத்தியாயர்களை அடிக்கடி மாற்றுவது இன்னும் மற்ற தகாத வேலைகளையும் செய்யும் அந்த போர்டுகள் கண்டிப்பாக ஒழிய வேண்டுமென்று சொன்னார்கள். அதைப் பற்றி அவர்களுக்கு சாதகமாக பேச நான் தயாராயில்லை. 1920-ம் ஆண்டு முதல் சுமார் 30 வருஷமாக இருந்து வருகிறது. நான் 1927-ல் ஜில்லா போர்ட் அங்கத்தினராய் இருந்திருக்கிறேன். தாலூகா போர்டிலும் அங்கத்தினராய் இருந்திருக்கிறேன், 13 வருஷ காலமாகத்தான் நான் இந்த ஸ்தல ஸ்தாபனத்தை விட்டு விலகி நிற்கிறேன். பொது மக்களுக்கு இந்த ஸ்தாபனம் மூலம் சேவை செய்ய வேண்டுமானால் எவ்வளவோ செய்யலாம். அநேக வித ஜில்லா போர்ட் தலைவர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். ஆந்திர மாகாணம் பிரிவதற்கு முன் நல்ல தலைவர்கள் எல்லாம் இருந்து இந்த ஸ்தாபனங்களின் மூலமாக நல்ல முறையில் பணியாற்றி வந்திருக்கிறார்கள். அது மக்களுக்கு ரொம்பவும் மகிழ்ச்சி கொடுத்திருக்கிறது. அதை ஒருவராலும் மறுக்க முடியாது. இல்லையென்று ஒருவராலும் சொல்ல முடியாது. ஸ்தல ஸ்தாபனங்களில் இருந்து எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமானாலும் செய்வதற்கு ஒரு நல்ல தருணம் இருந்தது. இப்பொழுதும் இருந்து வருகிறது. ஆனால் எங்கேயோ சில இடங்களில் கட்சிகளின் காரணமாக ஏதேதோ சிலதுகள் நடந்திருக்கிறது. அப்படியிருந்தும் சர்க்காரின் கட்டுத்திட்டங்கள் இருந்திருக்கிறது. உபாத்தியாயர்களை மாற்றுவதற்கு ஜில்லா போர்ட் அதிகாரியின் பெர்மிஷன் இல்லாமல் அவர்களை மாற்ற முடியாது. அப்படியிருந்தும் ஒரு ஜில்லா போர்ட் அதிகாரி உபாத்தியாயர்களை மாற்ற அடிக்கடி பெர்மிஷன் கொடுத்து வந்தார் என்பதைப் பற்றி சர்க்கார் கொஞ்சம் யோசிக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு பொருப்பு இருந்த போதிலும் ஜில்லா போர்ட் தலைவர்கள் எழுதி வந்ததற்கெல்லாம் அப்ரூவல் கொடுத்து மாற்றிக் கொண்டு வந்தார்கள். இது வருந்தத்தக்க விஷயம். அடுத்தபடி, அநேகவித ஜில்லா போர்டுகளுக்கு போதிய ஊதியம் கிடையாது. அப்படி கொடுப்பதாய் இருந்தாலும் அதற்கு பலவித முட்டுக்கட்டைகள் போட்டு, பல வழிகளாக, சிவப்பு நாடா என்று சொல்லும் "ரெட் டேப்பிஸம்," காரணமாக பெப்ரவரி கடைசியிலோ அல்லது மார்ச் மாத முதலிலோதான் ஜில்லா போர்டுகளுக்கு கிரண்ட் போய் சேரும். டி.டி.ஸி. கணக்கு கொடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படி கணக்கு கொடுப்பது கிடையாது. ரிக்கார்ட் மூலம் இருக்கிறது. அநேக ஜில்லா போர்ட் தலைவர்கள் செக்ரடேரியட், அக்கவுண்டெண்ட் ஆபீஸுக்குப் போய் இவ்வளவு சௌகரியத்தையும் வாங்கிக்கொடுப்பது முடியாத காரியம். இம்மாதிரியான காரணங்களினால் அநேக வித கிரண்ட்ஸ்கள் லாப்ஸ்ஸாகி விடுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலை காரணமாக அவர்களால் அந்த ஸ்தாபனத்தை நல்ல முறையில் நடத்த முடியவில்லை. அதேமாதிரி ஒன்றாகும் "பவர்". ஒரு பட்ஜெட் போட்டு, திட்டங்களை வகுத்து சில வேலைகளை செய்யவேண்டுமென்றால் அதைச் சேர்ந்த அதிகாரிகளுக்குப் போய் அவர்களிடமிருந்து பெர்மிஷன் வரவேண்டும். ஒரு பள்ளிக்கூடம் வைப்பது என்றால் அதற்கு கல்வி இலாகா அதிகாரியின் பெர்மிஷன் வேண்டும். ரோடுகளை புதிதாக போடவேண்டியிருந்தாலும், பழைய ரோடுகளை செப்பனிட வேண்டுமென்றிருந்தாலும் அல்லது அதற்கு சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று இருந்தாலும்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [26th October 1957

என்ஜினியரிங் டிபார்ட்மெண்டிலிருந்து டைமிற்கு எஸ்டிமேட்டுகள் எல்லாம் வருவதில்லை. இவைகளைப் பற்றியெல்லாம் மணிக்கணக்கில் பேசலாம். போதிய "பவர்", ஊதியம் இவைகள் இல்லாததால் அவைகள் சரியான முறையில் நடக்கவில்லை. ஜில்லா போர்ட் தலைவர்கள் சரிவர வேலை செய்து வரவில்லை என்று சொல்வது அவ்வளவு நல்லதாக எனக்குப் படவில்லை. இப்பொழுது பஞ்சாயத்து போர்டுகள் வைத்தாலும் எப்படி நடக்கும் என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். இப்பொழுது பஞ்சாயத்து போர்டுகள், பஞ்சாயத்து போர்டுகளாக நடக்கவில்லை. அங்குள்ள ஊழல்கள் அதிகம். அதைப் பற்றியும் பேசப்போனால் மணிக்கணக்கில் பேசலாம். எப்படி இருந்த போதிலும் பஞ்சாயத்து ராஜ்யம் வரவேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் பஞ்சாயத்து இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் நாம் அந்தத் திருத்தத்தைக் கொண்டுவரப்போகிறோம். அதைப் பற்றி ஒரு வெள்ளை அறிக்கையையும் சர்க்கார் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த ஜில்லா போர்டுகளை ஒழிப்பதின் காரணமாக, ஒழித்த பிறகு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி, இப்பொழுது தாற்காலிகமாக 1958 அக்டோபர் மாதம் 31-ம் தேதி வரையில் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி இந்த மசோதாவில் என்ன சொல்லியிருக்கிறது என்று பார்த்தால் கலெக்டரிடம் முதல் தேதி சார்ஜ் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. என்னைப் பொறுத்த மட்டில், தனிப்பட்ட முறையில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்த தேர்தல்களை உடனடியாக வைத்திருக்கவேண்டும். அல்லது, இப்பொழுதும் வைக்கலாம். ஒன்றல்லது இரண்டு மாத டைமிற்குள் டயத்துக்குள் வைக்கலாம். இப்பொழுதிருக்கும் ஜில்லா போர்ட்களின் ஆயுளை நீடிக்காது தேர்தல் வைக்கலாம். ப்ளாக் டெவலப்மெண்ட் ஏரியாவில் இருக்கும் பஞ்சாயத்துப் போர்டுகளையும், பஞ்சாயத்துப் போர்ட்கள் இல்லாத இடங்களில் அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்து, அது ஜில்லா போர்டாக அமையவேண்டும். இதற்குள், செலக்ட் கமிட்டி போட்டு எப்படி ஒரு மசோதாவை கொண்டு வருகிறோமோ அதன் பிரகாரம் ஒரு விசாரணை செய்யலாம். இது, தனிப்பட்ட முறையில் நான் சொல்லும் அபிப்பிராயமாகும். "யூனியன் ஆப் பஞ்சாயத்ஸ்" என்று இருக்கிறது. அப்படி ஒன்றை நாம் மதுரையில் ஏற்படுத்தியிருக்கிறோம். அது எப்படி நடக்கிறது என்று பார்ப்போம். அது நல்ல முறையில் நடக்கிறதா இல்லையா என்பதைப் பார்ப்பதோடு, யூனியன் ஆப் பஞ்சாயத்ஸ் இல்லாத இடங்களில் ஜில்லா போர்ட் நிர்வாகத்திற்கு எலெக்ஷன் வைத்து பழைய படி அவர்களையே நிர்வாகம் செய்யும்படி வைத்து ஒரு வருஷ காலத்திற்குள் இந்த யூனியன் ஆப் பஞ்சாயத்து நிர்வாகம் நன்கு நடக்கிறதா ? ஜில்லா போர்ட் நிர்வாகம் நன்கு நடக்கிறதா என்பதைப் பற்றி யோசித்துப் பார்போமேயானால் எது எப்படி இருக்கிறது என்பது பின்னால் தெரியவரும் என்ற யோசனையையும் உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன். இப்போது கலெக்டர்களிடம் இவற்றை ஒப்படைப்பதினால் பல கஷ்டங்கள் இருக்கிறது. அதாவது அவர்களுக்கு பலவிதமான வேலைகள் இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் ரெவின்யூ அட்மினிஸ்ட்ரேஷன் போர்டு மெம்பர்கள் எல்லாம் சமர்ப்பித்திருக்கிறபடி ஒவ்வொரு ஜில்லாவையும் தெரிந்து மாற்றி அமைக்கவேண்டுமென்றுள்ள ஒரு ஆலோசனை சர்க்காரிடம் இருந்துகொண்டுவருகிறது. இப்போது இருக்கும் கலெக்டர்களுக்கு அதிகமான வேலைகள் இருக்கிறது. இதற்கு கூடுதலாக இந்த ஜில்லா போர்டு நிர்வாகத்தையும் திறம்பட அவர்கள் பார்ப்பார்களா என்பதைப் பற்றியும் ஆலோசிக்கவேண்டியிருக்கிறது. இப்போது கூடுதலாக ஒரு ஸ்பெஷல் ஆபீஸரும், ஒரு பெர்ஸனல் அஸிஸ்டண்டும் போடப் போகிறார்கள். இவர்கள் எல்லா பிராந்தியங்களுக்கும் போய் சரியாக கவனிப்பார்கள் என்று சொல்ல முடியாது. இதற்கு நான் ஒரு யோசனையை தெரிவிக்கிறேன். அதாவது ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்தந்த எம்.எல்.ஏ.க்கள், எம்.எல்.ஸி.க்கள் பார்லிமெண்ட் மெம்பர்கள் இவர்கள் அடங்கிய ஒரு அட்வைஸரி போர்டை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை அரசாங்கமும் அங்கீகரிப்பார்கள் என்று நம்புகிறேன். கடைசியாக ஒரு விஷயத்தை கூற விரும்புகிறேன். அதாவது இந்த ஸ்பெஷல் ஆபீஸர், பெர்ஸனல் அஸிஸ்டெண்டு இவர்களை நியமிப்பதில் "நான்—அபிஷியலையும்" கூட போடலாம் என்று தோன்றுகிறது. இவ்விதம்



26th October 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

போடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். குறைந்தது டெப்புடி கலெக்டர் அந்தஸ்த்துக்குக் குறையாத உத்தியோகஸ்தர்களையாவது நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் இன்று இங்கு கொண்டுவந்திருக்கும் மசோதாவின் உட்கருத்து உடனடியாக எல்லா ஜில்லா போர்டுகளையும் நிறுத்தவேண்டும், அல்லது ஒழித்துவிடவேண்டும் என்பது அல்ல. இப்போது நடந்துகொண்டிருக்கும் முறையை மாற்றி திருத்தி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதால் அதை உத்தேசித்து ஒரு ஏற்பாடு செய்வதற்கு ஒரு காலாவதி வேண்டியிருக்கிறது. அந்தச் சமயத்தில் ஒரு ஸ்பெஷல் ஆபீஸரை நியமிக்கவேண்டும் என்றுதான் நான் இந்த மசோதாவை கொண்டு வந்திருக்கின்றேன். இதில் சிலர் கூறியது போன்று ஜில்லா போர்டுகளின்மேல் இருக்கின்ற பல குற்றங்களினால் இந்த ஏற்பாடு வரவில்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது இருக்கிற முறைப்படி ஸ்தல ஸ்தாபனங்களை நடத்துவது சிரமமாயிருப்பதால் அவற்றைத் திருத்தி அமைத்து சின்னஞ்சிறு ஸ்தாபனங்களாக ஏற்படுத்தவேண்டும் என்றும் அதற்குக் கொஞ்சம் காலம் ஆகும் என்றிருப்பதால்தான் இது இப்போது உடனடியாக கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் இது திடீர் மாற்றமில்லை. நான் இந்த ஜில்லா போர்டுகளை மாற்றியமைப்பது சம்பந்தமாக கழிந்த கூட்டத்தில், அதாவது 22—7—1957-ல் ஜில்லா போர்டைப் பற்றி ஒரு மசோதா கொண்டுவருவேன் என்று கூறினேன். இதைப் பற்றி பலர் இங்கு பேசினார்கள்.

(Mr. Speaker in the Chair)

இதைப் பற்றி ஒரு வருஷத்திற்குள் முடிவுக்கு வருவது சாத்தியமில்லை. இப்போது இருப்பதை மாற்றிவிட்டு திடீரென்று ஒரு முடிவைக் கொண்டு வருவது சரி என்று தோன்றவில்லை. அதுவுமின்றி கனம் அங்கத்தினர் ஆதிமூலம் அவர்கள் நிதி உதவி இல்லாமல்தான் இவ்விதம் ஜில்லா போர்டுகளை நிறுத்த போகிறார்கள் என்று சொன்னார்கள். நிதி இல்லாமல் எந்த ஸ்தாபனத்தையும் நடத்தமுடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்த காரியம்தான். ஜில்லா போர்டு அல்ல வேறு எந்த ஸ்தாபனமாக இருந்தாலும் அதற்கு நிதி அவசியம் தான். நிதி இல்லாமல் ஸ்தாபனத்தை நடத்த முடியாது. ஆதலால் நிதி உதவி செய்யாமல் இருப்பதற்காக இவற்றை ஒழித்துக் கட்டுவது என்பது சரியல்ல. சில வருஷங்களுக்குமுன் இந்த நாட்டிலிருந்ததைவிட பல முன்னேற்றகரமான வேலைகளையும் நல்ல அம்சங்களில் பல வேலைகளையும் ஜில்லா போர்டுகள் செய்து வந்திருக்கின்றன. ஆகவே இந்த நிலையில் இன்னும் கூடுதலாக நல்ல முறையில் நடப்பதற்கு இதைத் திருத்தி அமைப்பதற்காக வேண்டிய ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது. திரு. ராமசாமி நாயுடு அவர்கள் ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் செய்ததைப் பற்றியும் மேலும் செய்ய வேண்டியதைப்பற்றியும் யோசனை கூறினார்கள். அவையெல்லாம் நல்ல யோசனைகள் தாம். அவற்றைக்கொண்டு வருவதற்கெல்லாம் ஏற்பாடாகி இருக்கிறது. கனம் கோவிந்தசாமி அவர்கள் பேசும் பொழுது ஜில்லா போர்டுகளை, மக்களை கட்டாயப் படுத்திக் கலைக்க செய்வது சரியல்ல என்று சொன்னார்கள். இது ஒருவரையும் கட்டாயப்படுத்தவில்லை. கட்டாயப்படுத்தி செய்வதுமில்லை, திரும்பவும் ஒரு முறை கூறுகிறேன். இப்போது நம் எல்லோருக்கும் அவகாசம் இருக்கிறது; 4, 5, தேதிகளில் இதைப்பற்றி அதிகமாக சர்ச்சை நடத்துவதற்கு சௌகரியம் இருக்கிறது. எல்லோரும் சேர்ந்து இதைப்பற்றி சரியானபடி பரிசீலனை செய்து ஒரு நல்ல முடிவைக் கொண்டுவந்தால் அதை ஏற்கத் தயாராய் இருக்கின்றோம். எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் இன்று இருக்கிற ஸ்தல ஸ்தாபன முறையில் பல முறைகேடுகள் இருக்கிறதாகச் சொன்னார்கள். இவற்றையெல்லாம் மாற்றுவதற்காக ஒரு திருத்தம் கொண்டுவந்து மாற்றுவது அவசியம்தானே. இதைப்பற்றி அவர்கள் கூறின மாதிரி "அட்வைசரி போர்ட்" அமைக்க வேண்டும் என்கிற யோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்போது இயங்கிவரும் ஜில்லா போர்டுகள் பெரிய ஸ்தாபனமாக இருந்து வருகிறது. இதைப்பற்றி மதிப்பிற்குரிய பல அங்கத்தினர்களும் எடுத்துக் கூறினார்கள். ஆகவே இதைப்பற்றித் தீர நன்றாக

[Srimathi Lourdhammal Simon] [26th October 1957

ஆலோசித்து இப்போது பெரிய ஸ்தாபனமாக இருப்பதை சிறிய பகுதிகளாக ஆக்கி நல்ல முறையில் கவனம் செலுத்தும்படியான ஒரு முறையைக் கொண்டு வரவேண்டியது அவசியம் என்று முடிவு செய்து தான் இந்த யோசனை கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகையால் திடீரென்று எலெக்ஷன் வந்தால் அதனால் ஏற்படும் வீண் செலவும் வேண்டாம் என்று நினைத்து தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதன் மேல் முடிவு எடுப்பதற்கு விரிவான திட்டம் வரும்போது எல்லோரும் சேர்ந்து ஆலோசித்து ஒரு நல்ல முடிவு எடுக்கலாம் என்று கூறிக்கொண்டு இப்போது கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை எல்லோரும் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: கனம் சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவின் நோக்கத்திற்கும், நான் திருத்தம் கொடுத்திருப்பதின் நோக்கத்திற்கும் அப்பாற்பட்டு பல அங்கத்தினர்கள் பல விதமான முறையில் தாக்கிப் பேசினார்கள். அவற்றிற்கெல்லாம் நான் இப்போது பதில் சொல்லப் போவதில்லை. அவர்களுக்கு இதுவே சுபாவமாகிவிட்டது. இங்கு சபை முன் இருக்கிற விஷயம் வேறு. அதாவது இப்போது சர்க்காருக்குத் தேர்தலை ஒத்தி போட வேண்டியிருக்கிறது. தேர்தல் நடைபெறும் வரையில் என்ன செய்து பார்ப்பது என்பது தான். சர்க்காருடைய யோசனை அதுவரை ஸ்பெஷல் ஆபீஸரை நியமிக்க வேண்டும் என்பது. என்னுடைய பிரேரணையின் நோக்கம் என்னவென்றால் ஸ்பெஷல் ஆபீஸரை நியமிக்க வேண்டாம் என்பதுதான். இப்போது இருக்கிற போர்டே நீடிக்கட்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். கனம் மந்திரி அவர்கள் ஒரு "அட்வைஸரி போர்ட்" அமைப்பதை ஏற்றுக்கொள்ள முன் வந்ததை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அடுத்ததாக வெள்ளை அறிக்கை ஒன்றும் இது சம்பந்தமாக வரப்போகிறது. அது சபை முன் வரும்போது மற்ற விஷயங்கள் எல்லாம் பேசிக்கொள்ளலாம் என்று கருதி என்னுடைய திருத்தப் பிரேரணையை வற்புறுத்தாமல் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The hon. Member Sri Kalyanasundaram wants to withdraw his amendment. I suppose the House gives him leave to withdraw the amendment.

The amendment was, by leave, withdrawn.

MR. SPEAKER: The question is—

"That the Madras District Boards (Amendment) Bill, 1957, be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into consideration.

MR. SPEAKER: We shall now proceed with the clause by clause consideration of the Bill.

*Clause* 2.

MR. SPEAKER: There is a Government amendment to clause 2. The Hon. Minister will move the amendment.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Sir, I move—

Clause 2 shall be renumbered as sub-clause (1) of that clause and after sub-clause (1) as so renumbered, the following shall be added:—

"(2) (*a*) The State Government shall, for the purpose of advising the Special Officer appointed under sub-section (1) in the discharge of his duties and functions under sub-clause (*a*) of clause (ii) of that sub-section, appoint Advisory Committees.



26th October 1957] [Srimathi Lourdhammal Simon]

(*b*) Such Advisory Committees may consist of such member and function in respect of such areas as the State Government may direct."

THE HON. SRI C. SUBRAMANIAM: If you will permit me, I shall explain the object underlying the amendment. The composition of the committees will be in accordance with the recommendations which we have made for the formation of Development Councils in respect of districts, which the hon. Members will find on pages 6 and 7 of the White Paper on Local Administration. It is not the intention of the Government to have only one committee for each district. We may divide a district into two regions and have a separate committee for each region, so that the affairs of each region may be considered by a compact committee consisting of members belonging to that region. That is why we have proposed in the amendment that the Advisory Committee may function in respect of such areas as the State Government may direct. This also is in accordance with the proposals which we have put forward in the White Paper. It is not as if we want to have members without reference to their qualifications or to the positions they occupy. Therefore I may give this assurance that the composition and jurisdiction of the committee will be in accordance with what is indicated in the White Paper.

MR. SPEAKER: I shall ask the Members who have given notice of amendments to move their amendments. If any Member is not moving his amendment, let him intimate to the Speaker. After all the amendments are moved, the Members can speak.

SRI N. K. PALANISAMI: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கொடுத்த திருத்தம் வரவேற்கத்தக்கது தான். 12-20 p.m.
நான் சில திருத்தங்களை மட்டும் கொடுக்க விரும்புகிறேன். இல்லாவிட்டால் இந்தத் திருத்தங்களை நான் வாபஸ் பெற்றிருப்பேன். ஆகையால் இதை நான் பிரேரேபித்துவிட்டு பிறகு வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். நான் முதலில் திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன்.

MR. SPEAKER: : முதலில் திருத்தத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்களேன்.

SRI N. K. PALANISAMI: இந்த நாட்டில் ஜனநாயகம் வளர வேண்டும். மக்கள் ஜனநாயகத்தில் அதிகப் பங்கு கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் தான், ஸ்பெஷல் ஆபீசரை நியமிக்கக் கூடாது என்று நாங்கள் சொல்கிறோம். ஆனால், எதிர்க்கட்சியிலிருந்து பேசியவர்கள், ஜில்லா போர்டுகள் சாகவேண்டியது தான் என்ற பாணியில் பேசியிருக்கிறார்கள். அவ்வளவு அருவருப்புக்குக் காரணம் அவர்கள் தான். ஜில்லா போர்டுகளை ஜனநாயக பூர்வமானவையாக ஆக்க வேண்டும் என்பதும், அவைகளில் சாதாரண ஜனங்கள் பங்கு கொண்டு சுயாட்சியை நடத்துவதில் பொறுப்புள்ளவர்களாக ஆகட்டும் என்ற அடிப்படையில் தான் ஜில்லா போர்டுகள் ஏற்பட்டன. ஆனால், நடைமுறையில், எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது போல், வரவர ஜில்லா போர்டுகளுக்கு அதிகாரங்கள் குறைந்து கடைசியில் பள்ளிக்கூட உபாத்தியாயர்களை மாற்றும் அதிகாரம் தான் மிஞ்சியது. இம்மாதிரி ஜனநாயகம் என்பது கடைசியில் குழிதோண்டிப் புதைக்கப்படும் நிலைமை ஏற்பட்டது. மேலும், வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபன மெம்பரும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்படி ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் . . . . .

[26th October 1957

SRI M. KALYANASUNDARAM : On a point of Order, Sir, let all the amendments be moved, and then the members may speak on them.

MR. SPEAKER : Let the hon. Member Sri N. K. Palanisami finish his speech. Afterwards I will ask the other hon. Members to move their amendments.

SRI N. K. PALANISAMI : ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பஞ்சாயத்து போர்டு தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தவிரவும், பிர்க்கா இன்ஸ்பெக்டர்களுக்கும் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களுக்கும் மேலும் மேலும் அதிகாரம் கொடுக்கும் வகையில் மசோதா அமைந்திருக்கிறது. ஜில்லா போர்டுகளை ஜனநாயக முறையில் அமைத்துப் பிறகு அவைகளில் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்தது போல், டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்துக்களை அமைத்து அவைகளில் ஜனநாயகத்தை படிப்படியாகக் குழிதோண்டிப் புதைக்கக்கூடிய நிலைமை ஏற்படக்கூடாது.

THE HON. SRI C. SUBRAMANIAM : நீங்கள் வெள்ளை அறிக்கையைப் பற்றி பேசுகிறீர்களா?

SRI N. K. PALANISAMI : நான் ஸ்பெஷல் ஆபீசர்களைப் பற்றித் தான் குறிப்பிடுகிறேன். கனம் மந்திரி அவர்கள் கொடுத்துள்ள திருத்தம் வரவேற்கத் தக்கது தான். ஆனால், சர்க்கார் எந்த இடத்தில் இஷ்டப்பட்டார்களோ அந்த இடத்தில் இந்த முறையைக் கொண்டு வருவதாக இல்லாமல், பொதுவாக எல்லா ஜில்லாக்களிலும் ஜில்லா போர்டு மெம்பர்களைக் கொண்ட கமிட்டிகளை ஏற்படுத்தி, அந்தக் கமிட்டிகளில் கலெக்டர்களை எக்ஸ்-அபிஷியோ மெம்பர்களாக நியமித்து ஜில்லா போர்டு சொல்வதை அமலுக்குக் கொண்டுவரும் எக்சிக்யூடிவ் ஆபீசர்களாக அவர்களை ஆக்க வேண்டும்.

மேலும், செகண்டரி கல்வியைப் பொறுத்த வரையில், பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்டாலும் கூட அதன் நிர்வாகத்தில் அது இருக்கக்கூடாது. காரணம், இன்றைக்கு உள்ள ஜில்லா போர்டுகளால் செகண்டரி கல்வி சரியாக கவனிக்கப்பட்டுவருகிறது என்று சொல்லமுடியாது. ஆகவே, செகண்டரி கல்விக்கு ஒரு அட்வைசரி கமிட்டி வேண்டும். உபாத்தியாயர்களைக் கொண்ட ஒரு அட்வைசரி கமிட்டியை அமைத்து, அந்தக் கமிட்டியிடம் செகண்டரிக் கல்வியை ஒப்படைக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

MR. SPEAKER : இப்போது கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் தங்கள் திருத்தப் பிரேரணைகளைப் பிரேரேபித்தால் நன்றாக இருக்கும்.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

*Substitute* the following *for* clause 2 (1) :—

" to postpone the elections to every district board up to such date as the State Government may fix, not being later than 180 days from the date of expiry of the term "

and

*delete* sub-clause (ii) (*a*) and (*b*) and *substitute* the following *for* sub-clause (ii) :—

" To extend by notification the term of office of the members of any district board as a whole by such period not exceeding six months as may be notified for sufficient cause which shall be stated in the notification ".

SRI N. K. PALANISAMI : I second the amendment.



26th October 1957]

SRI V. K. KOTHANDARAMAN : I move—

In sub-clause (i), *for* the letters and words " 31st day of October 1958 ", *substitute* the following :

" 31st day of January 1958 "

and

*For* sub-clause (ii), *substitute* the following :

" to allow the existing district boards in such district or districts to continue to discharge duties and perform the functions as they were so doing, till such time the elections are conducted or otherwise ".

The amendment was duly seconded.

SRI N. MARUDACHALAM : I move—

In sub-clause (i), *for* the letters and words " 31st day of October 1958 " *substitute* the following :

" 30th day of April 1958 "

and

*For* sub-clause (ii) *substitute* the following :

" (ii) to allow the existing district boards to discharge duties and perform the functions as they were originally authorised to do till such time the elections are conducted or otherwise ".

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR : I move—

In the 15th line *for* the words " 31st day of October " *substitute* the words " 30th April ".

*Delete* sub-clause (ii), i.e., lines 17 to 24.

*Add* the following as sub-clause (iii) :

" to appoint a special advisory board consisting of twenty-five non-officials nominated from ex-district board members and sitting members of the Legislature."

The amendment was duly seconded.

SRI P. S. CHINNADURAI : கனம் சபா நாயகர் அவர்கள் ஆலோசனைக் குழுவை அமைப்பதற்குரிய யோசனையை ஏற்றுக்கொண்டதால் நான் என்னுடைய திருத்தத்தைப் பிரேரேபிக்க விரும்பவில்லை.

SRI K. RAMACHANDRAN : I move—

In sub-clause (ii) after the words " Special Officer " occurring in line 17, *add* the words " already in service or an officer of rank not less than that of a Revenue Divisional Officer ".

SRI K. SATTANATHA KARAYALAR : I second the amendment.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, தேர்தலை ஒரு வருஷத்திற்கு ஒத்திப்போடவேண்டுமென்பது இந்தப் பிரிவின் நோக்கம். நான் கொடுத்திருக்கும் திருத்தம் 180 நாட்களுக்குள், அதாவது ஆறு மாதத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டுமென்பது. ஒரு வருஷத்திற்கு இடைக்காலத்தை நீடித்தாலும் பரவா

யில்லை. ஆனால் அதன் மீது முடிவு எடுப்பதில் கால தாமதம் நீடிக்கக் கூடாது. சர்க்கார் இந்த ஜில்லா போர்டுகளை ஒழித்துக் கட்டுவதில் எவ்வளவு ஆர்வம் காட்டினார்களோ அவ்வளவு துரிதமாகக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லுகிறேன். துரிதமாகக் கொண்டுவர வேண்டுமென்ற நிலைமை ஏற்படவேண்டுமென்ற காரணத்திற்காக தேர்தல்கள் 180 நாட்களுக்குள்ளாக நடத்தப்பட வேண்டுமென்று இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டு, ஆறு மாதமாகக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri V. KOTHANDARAMAN** : இப்போது கனம் அங்கத்தினர் எம். கல்யாணசுந்திரம் அவர்கள் குறிப்பிட்டது போல, ஆறு மாத காலமாகக் குறைக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

**Mr. SPEAKER** : உங்கள் திருத்தம் 31–1–1958-க்கு மேல் நீடிக்கக் கூடாது என்பது தானே ?

**Sri V. KOTHANDARAMAN** : மூன்று மாத காலமாகக் குறைக்க வேண்டுமென்றுதான் நான் என் திருத்தத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இப்போது இந்தத் திருத்தத்தின் பேரில் பலவித அபிப்பிராய பேதங்கள் இருப்பதால், நான் மூன்று மாதங்கள் என்று கொடுத்திருந்தாலும், ஆறு மாதமாக நீடிக்கலாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER** : அப்படியானால் உங்கள் திருத்தத்தை வாபஸ் பெற வேண்டும்.

**Sri V. KOTHANDARAMAN** : நான் என் திருத்தத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு, ஆறு மாதத்திற்குள் தேர்தல் நடத்தவேண்டுமென்று பிரேரேபிக்கிறேன்.

**Sri N. MARUDACHALAM** : நண்பர் கல்யாணசுந்தரம் அவர்களின் திருத்தத்தில் சொல்லியபடி இந்தத் தேர்தலை ஆறு மாதத்திற்கு மேல் நீடிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri K. SATTANATHA KARAYALAR** : நான் அந்த ஒரு வருஷ கால வரம்பு கேட்டிருப்பதைக் குறைத்து ஏப்ரல் 31-ம் தேதிக்குள், அதாவது ஆறு மாத கால வரம்புக்குள்ளாகத் தேர்தலை நடத்தவேண்டுமென்று கொடுத்திருக்கிறேன். நான் அதை ஆதரிக்கிறேன். அந்த முறையிலே ஆறு மாதத்திற்குள்ளாக நடத்தினால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**Sri K. RAMACHANDRAN** : சபாநாயகர் அவர்களே, இந்த 2 (11) பிரிவில் "to appoint for any district board a Special Officer" என்றிருக்கிறது. அந்த ஸ்பெஷல் ஆபீஸர்கள் யாராக இருப்பார்கள் என்று நிர்ணயிக்க முடியாத நிலையில் இருக்கிறது. இடைக்கால ஏற்பாடாக, நிர்ணயமாக இருப்பதற்காக, ஸர்விஸில் இருக்கக்கூடிய ரெவினியூ டிவிஷனல் ஆபீஸருக்குக் குறையாத ஒரு ஆபீஸரைப் போடலாம் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இப்போது இடைக்காலத்திற்குக் கொண்டு வரக் கூடியதில் அனாவசியமான போட்டிகளையும் மனஸ்தாபங்களையும் தவிர்ப்பதற்காக, தனி அதிகாரிகள் அவசியமில்லை என்ற என் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **Sri K. VINAYAKAM** : Sir, I rise on a point of information. The Government have brought in an amendment regarding the appointment of advisory committees to advise the special officer. I would like to know what is the scope of the advisory committee.



Is it a statutory body? Are the recommendations of the advisory committee binding upon the special officer? This has to be made clear. Who will be the members of the advisory committee? Will the Assembly Members of the district be the members of the advisory committee or will the members of the district boards, which will become defunct, be the members of the advisory committee?

**Mr. SPEAKER** : The hon. Member will please read the amendment carefully. The proposed sub-clause (2) (b) says—

'Such Advisory Committees may consist of such members and function in respect of such areas as the State Government may direct '.

**Sri K. VINAYAKAM** : I want the Government to make the position clear.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : The composition of the committee is also indicated on page 6 of the White Paper.

**Sri K. VINAYAKAM** : The White Paper is not now before the House for discussion. Only the Bill is before the House. I cannot turn my attention to a paper that is not under discussion now.

**Mr. SPEAKER** : Is the hon. Member Sri M. Kalyanasundaram withdrawing his amendment?

**Sri M. KALYANASUNDARAM** : No, Sir. I am pressing my amendment.

**Mr. SPEAKER** : The question is—

*Substitute* the following *for* clause 2 (1) :—

" to postpone the elections to every district board up to such date as the State Government may fix, not being later than 180 days from the date of expiry of the term "

and

*Delete* sub-clause (ii) (a) and (b) and *substitute* the following *for* sub-clause (ii)—

" To extend by notification the term of office of the members of any district board as a whole by such period not exceeding six months as may be notified for sufficient cause which shall be stated in the notification ".

The amendment was put and lost.

**Sri V. K. KOTHANDARAMAN** : I withdraw my amendment, Sir.

The amendment was, by leave, withdrawn.

The amendment of Sri N. Marudachalam was disallowed as the House had given its verdict against a similar amendment moved by Sri M. Kalyanasundaram.

The amendment of Sri K. Sattanatha Karayalar was, by leave, withdrawn.

[26th October 1957

SRI K. RAMACHANDRAN: I press my amendment, Sir.

MR. SPEAKER: The question is—

In sub-clause (ii), *after* the words "Special Officer" occurring in line 17 *add* the words "already in service or an officer of rank not less than that of a Revenue Divisional Officer".

The amendment was put and lost.

12-30 p.m. MR. SPEAKER: I now put the Government amendment to vote. The question is—

Clause 2 shall be renumbered as sub-clause (1) of that clause and after sub-clause (1) as so renumbered, the following shall be added:—

"(2) (*a*) The State Government shall, for the purpose of advising the Special Officer, appointed under sub-section (1), in the discharge of his duties and functions under sub-clause (*a*) of clause (ii) of that sub-section, appoint Advisory Committees.

(*b*) Such Advisory Committees may consist of such Members and function in respect of such areas as the State Government may direct."

The amendment was put and carried.

Clause 2, as amended, was put and carried.

*Clause 3.*

MR. SPEAKER: The motion is—

That Clause 3 do stand part of the Bill.

SRI M. KALYANASUNDARAM: *இந்தக் கிளாஸைப் படிக்கிற போது, ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் அல்லது கலெக்டருக்குக் கிடைக்கக் கூடிய சம்பளம் இந்த ஸ்பெஷல் ஆபீஸர்களுக்குக் கிடைக்காதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. கலெக்டராக இருப்பவர், ஸ்பெஷல் ஆபீஸராக இருந்தால் அந்தச் சம்பளம் கிடைக்காதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அப்படி சம்பளம் இல்லாமல் அவர் இருப்பதாயிருந்தால் அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் அல்லது அவருக்குக் குறையாத அதிகாரிகளுக்குள்ளே ஒருவரை நியமிப்பார்களா அல்லது வெளியிலுள்ள யாரையாவது நியமிப்பார்களா என்று தெளிவுபட இல்லை என்று எதிர்க் கட்சி தலைவர் குறிப்பிட்டார். அதைப்பற்றித் தெளிவு படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.*

THE HON. SRI C. SUBRAMANIAM: At the time of the appointment of Special Officers, all the aspects referred to by the Leader of the Opposition also will be considered. At present it is the intention of the Government to appoint only officers.

Clause 3 was put carried.

*Clause 4.*

MR. SPEAKER: There are two amendments to this clause. One is from the hon. Member Sri M. Kalyanasundaram and the other is from the hon. Member Sri K. Sattanatha Karayalar. Sri M. Kalyanasundaram will now move his amendment.



26th October 1957]

SRI M. KALYANASUNDARAM: Sir, I move the amendment standing in my name, namely—

*Add* the following proviso to Clause 4—

"Provided that such orders are placed on the table of both the Houses of Legislature at the first sitting after the date of issuing such orders; and the Legislature shall amend, modify or rescind such orders within ten sitting days from the day on which the orders were placed on the table".

Sri N. K. Palanisami seconded the amendment.

SRI K. SATTANATHA KARAYALAR: Sir, I move the amendment standing in my name, namely—

In line 34, *after* the word 'difficulty', *add* the following:—

"and shall place such order before the Legislature at the next sitting".

Sri K. Ramachandran seconded the amendment.

MR. SPEAKER: Both the amendments are now before the House for discussion.

SRI M. KALYANASUNDARAM: Sir, it seems that the Hon. Minister is going to accept my amendment.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: The Government accept the amendment of Sri M. Kalyanasundaram.

SRI K. SATTANATHA KARAYALAR: Sir, I withdraw my amendment.

The amendment was, by leave, withdrawn.

MR. SPEAKER: The question is—

*Add* the following proviso to Clause 4:—

"Provided that such orders are placed on the table of both the Houses of Legislature at the first sitting after the date of issuing such orders, and the Legislature shall amend, modify or rescind such orders within ten sitting days from the day on which the orders were placed on the table."

The amendment was put and carried.

Clause 4, as amended, was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Sir, I move— 12-40 p.m.

"That the Madras District Boards (Amendment) Bill, 1957, as amended be passed."

MR. SPEAKER: Motion moved—

"That the Madras District Boards (Amendment) Bill, 1957, as amended be passed."

[26th October 1957

SRI M. KALYANASUNDARAM : சபாநாயகர் அவர்களே, ஆரம்பத்தில் விவாதம்கொஞ்சம் காரசாரமாக இருந்தபோதிலும், இந்த மசோதா எதிர்க் கட்சியினரால் சொல்லப்பட்ட அபிப்பிராயங்களும் திருத்தங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. நம்முடைய மந்திரி அவர்கள் முதன் முதலாக கொண்டு வந்த மசோதாவை வெற்றிகரமாக நிறைவேற்றியதற்குப் பாராட்டுகிறேன். இதேபோல சபையில் ஆரம்பத்தில் அபிப்பிராய பேதம் இருந்தாலும் கூட இனி கொண்டுவரப்படும் மசோதாக்களை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் முறையில் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் ஒரு வருஷ காலத்திற்கு ஜில்லா போர்டு தேர்தல்கள் ஒத்திப்போடப்பட்டு, அவைகள் இயங்காமல் இருக்கும். ஆலோசனைக் குழுவின் உதவிகொண்டு விசேஷ அதிகாரிகள் நிர்வாகத்தை திறமையாக நடத்தும் முறையில் சர்க்கார் உத்தரவுகள் பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டப்படி ஆலோசனைக் கமிட்டி வெறும் ஆலோசனை கூறக்கூடியதாக இருந்தாலும, நல்ல முறையிலே அந்த ஆலோசனைகளை விசேஷ அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற " கன்வென்ஷன்கள் " ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆலோசனைக் குழுவின் முடிவுகள் பெரும்பான்மையினருடைய முடிவாகவோ அல்லது ஏகோபித்த முடிவாகவோ இருக்கலாம். அவைகளை மரியாதைக்கு மாத்திரம் விசேஷ அதிகாரிகள் ஒத்துக்கொள்வது என்று இல்லாமல், நடைமுறையில் அமல் செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்கு சர்க்கார் தாக்கீது அனுப்ப வேண்டுமென்பது என் யோசனை. ஆலோசனைக் கமிட்டிக் கூட்டங்கள் நடத்துவதில் கஷ்டங்கள் ஏற்படலாம். இதை நாம் பிளானிங் கமிட்டி கூட்டங்களில் பார்த்திருக்கிறோம். அடிக்கடி இந்தக் கூட்டங்களை கூட்ட முடியாமல் போகலாம். கலெக்டர் இந்தக் கமிட்டிக்கு சேர்மென் ஆக இருக்கும் காரணத்தால், ஜில்லா பெரியதாக இருந்து அனேக காரியங்கள் இருப்பதால் இந்தக் கூட்டங்களை அடிக்கடி கூட்ட முடியாமல் போகலாம். இந்தக் கமிட்டி விஷயத்தில் அப்படி இருக்கக்கூடாது. ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது கமிட்டி கூட்டப்பட்டு விஷயங்கள் அதன் முன் வைக்க வேண்டுமென்ற முறையில் சர்க்கார் உத்தரவுகள் பிறப்பிக்கவேண்டும். தேர்தல் நடத்திவைப்பதைப்பற்றியும் அதற்கு முன் வைத்துப் பரிசீலனை செய்யலாம். ஆனால் அந்தப் பிரச்னை இப்போது எழவில்லை. அது ஜில்லா போர்டு இருக்குமா இல்லையா என்பதைப் பொருத்திருக்கிறது. ஜில்லா போர்டு நிர்வாகம் பற்றி பல கருத்துக்கள் கூறப்பட்டன. இவைகளிலிருந்து ஜில்லா போர்டுகளுக்கு எதிர்காலம் இல்லை என்றுதான் நினைக்கிறேன். சர்க்கார் கொடுத்திருக்கும் வெள்ளை அறிக்கையின் மீது விவாதத்தை சீக்கிரம் நடத்தி துரிதமாக முடிவுகளை எடுத்து அதற்கு வேண்டிய மசோதாவை அடுத்த பட்ஜெட் செஷனுக்கு முன் அல்லது மே மாதத்திற்குள்ளாவது ஒரு விசேஷ கூட்டத்தைக்கூட்டி மசோதாவை நிறைவேற்ற வேண்டும். பட்ஜெட் செஷனில் வேலை அதிகம் என்று சொல்லலாம். அக்டோபர் வரையில் அவகாசம் இருக்கிறது என்று சொல்லலாம். இருந்தாலும் கூட அதற்கு முன்பே இந்த மசோதாவை துரிதமாகக் கொண்டுவந்து நிறைவேற்றவேண்டுமென்ற யோசனையை கூறிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயர் அவர்களே, இன்றையதினம் எதிர்க் கட்சி கொடுத்திருக்கின்ற நல்ல ஆலோசனைகள் உரிய முறையில் ஏற்றுக்கொண்டு ஆளும் கட்சியினர் இந்த மசோதாவை நிறைவேற்றும்படி சட்ட சபையினரைக் கோருவதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். சில நாட்களுக்கு முன்னால் சர்க்கார் கட்சித் தலைவர் நம்முடைய ராஜ்யத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது எதிர் கட்சியினர் சரியாக இயங்குவதில்லை என்று குறைபட்டுக்கொண்டார்கள். ஆனால் இன்றையதினம் எதிர்க் கட்சியினர் கொடுத்திருக்கும் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டிருக்கும் விதத்திலிருந்து எதிர்க் கட்சியினர் சரியாக செயல்படுகின்றார்கள், ஆக்க பூர்வமாக, ஜனநாயக முறையில் சர்க்கார் இயங்கத் தகுந்த முறையிலே துணை புரிந்திருக்கிறார்கள் என்று இனி மேலாவது அவர்கள் சுற்றுப்பிரயாணத்தின்போது சொல்வார்கள் என்று



26th October 1957] [Sri P. S. Chinnadurai]

நம்புகிறேன் (குறுக்கீடு). (Sri M. Kalyanasundaram அவர்கள் அத்தாக்ஷிப் பத்திரம் தேவையில்லை.) அத்தாக்ஷி பத்திரம் அவர்களிடமிருந்து பெற சில மெம்பர்களுக்கு விருப்பம் இல்லாமல் இருந்தாலும் அரசியலிலே மூத்தவர் என்ற முறையிலே, சர்க்கார் கட்சித் தலைவர் என்ற முறையிலே, அவர்களை நான் மிகவும் மரியாதையுடன் நோக்குகிறவன். அந்த முறையில் வசிஷ்டர் வாயால் பிரும்ம ரிஷி என்பது போல் அவர் வாயால் எதிர்க் கட்சியினர் ஆக்க பூர்வமான ஆலோசனைகளைக் சொல்கிறார்கள் என்பதை பொது மக்கள் இடத்தில் வெளியிட வேண்டுமென்று நிச்சயமாக நான் எதிர்ப்பார்க்கிறேன். நம்புகிறேன். இந்த மசோதா இங்கே எவ்வாறு விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் தருவாயில் இருக்கிறதோ அதேபோல இதர மசோதாக்கள் சம்பந்தமாக நாம் நடந்துகொண்டால் நிச்சயமாக சபையில் நடவடிக்கைகள் நன்றாக செயல்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு; ஜனநாயக பூர்வமாக சர்க்கார் இயங்கும் என்பதிலும் பூர்ண நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, இதற்கு முன்பு பேசிய, இந்தப் பக்கத்தில் இருக்கும் நண்பர்கள் சொல்லியபடி சர்க்கார் கட்சியினர் அனேகமாக நாங்கள் கொண்டு வந்த திருத்தங்களை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக நான் கொண்டு வந்த திருத்தத்தை ஒப்புக்கொண்டார்கள். (சிரிப்பு.) அதைப் பற்றி எனக்கு மகிழ்ச்சி. (குறுக்கீடு.) எல்லோருக்கும் மகிழ்ச்சிதான்.

கனம் கல்யாணசுந்தரம் சொன்னபடி ஸ்பெஷல் ஆபீஸர் எல்லோருக்கும் மாதாமாதம் கூட்டம் போடவேண்டுமென்றும், அதில் எல்லா சப்ஜெக்ட்களும் ஆலோசனைக்கு வரவேண்டும் என்று சர்க்காரில் உடனடியாக ஒரு அறிக்கை விடுக்கவேண்டும் என்பதுதான் என் கருத்து. என்னைப் பொருத்த வரையில் சொல்கிறேன். ஜில்லா போர்டு போவது கஷ்டந்தான். நல்ல முறையிலே ஜில்லா போர்டுகள் பணியாற்றி வந்தன. ஒரேயடியாக ஜில்லா போர்டுகளை எடுத்துவிடுவதற்குப் பதிலாக, பிளாக் டெவலப்மெண்டு பிரதேசத்தில் ஏற்படுத்தப்படும் ஒரு யூனியனையும் ஜில்லா போர்டுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நன்றாக இருக்கும். அது எப்படி இருந்தாலும் நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம். இப்போது அதைப் பற்றிப் பேசுவது பிரயோஜனம் இல்லை. சர்க்காரால் இந்தப் பக்கத்திலிருந்து கொடுக்கப்பட்ட திருத்தங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டு சட்டம் நிறைவேற்றப்படுவதைப் பற்றி எனக்கு சந்தோஷம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, எதிர்க் கட்சியிலே இருக்கக்கூடிய நண்பர்கள் தாங்கள் கொடுத்த திருத்தங்கள் ஒப்புக்கொள்வதைப்பற்றி திருப்திபடுவதைப்பற்றி எனக்கு சந்தோஷம். இப்போது சர்க்கார் கட்சித் தலைவராக இருந்து ஐந்தாறு வருஷம் வேலை பார்த்ததிலே ஒரு விஷயம் புரிந்துகொண்டிருக்கிறேன். எல்லா விஷயங்களும் சர்க்கார் கட்சியிலிருந்தே நிறைவேற்றப்பட்டு விட்டால் எதிர்க் கட்சிக்கு திருப்தி ஏற்படுவதில்லை. ஆலோசனைக் கமிட்டி வேண்டுமென்று சர்க்காராலேயே முடிவு எடுக்கப்பட்டிருந்தாலும், எதிர்க்கட்சிக்கு திருப்தி ஏற்படும் என்ற முறையில் ஒத்தி வைத்து, அவர்கள் கொண்டு வந்த திருத்தத்தை ஒப்புக்கொண்டது, எவ்வளவோ சுமுகமாக, திருப்திகரமாக முடிந்தது, என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : சொல்லாமல் செய்திருந்தால் பரவாயில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தமாதிரி சில விஷயங்களை எதிர்க்கட்சிக்காரர்களுக்கு விட்டு வைப்பது அவசியம் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். அவர்கள் நல்ல முறையிலே இயங்க, இன்னும் நல்ல ஆலோசனைகள் அவர்களிடமிருந்து வருமானால் அவைகளை எப்போதும் நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். எங்கள் கட்சியில் மெஜாரிட்டி இருக்கிறது, எதையும் பாஸ் பண்ணிவிடலாம் என்ற எண்ணத்தில் இயங்கவில்லை நாங்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, சட்டசபையைப் பொருத்த

[Sri C. Subramaniam] [26th October 1957

வரையில் இந்தமாதிரி சட்டங்கள் இயற்றும்போது, சர்க்கார் கட்சி, எதிர்க் கட்சி என்று இல்லாமல் எது மக்களுக்கு, நாட்டுக்கு நல்லதோ, அந்த நல்ல கருத்துக்களை எந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும் ஒப்புக்கொண்டு சட்டத்தை திருத்தவேண்டியது அவசியம் என்பதையும் உணர்ந்திருக்கிறோம். கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னதுபோல ஸ்தல-ஸ்தாபன மந்திரி முதல் முதலாக பிரேரேபித்த இந்த மசோதாவை எல்லோரும் ஒத்துழைத்து, சுமுகமான முறையிலே நிறைவேற்றிக்கொடுத்ததற்காக அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras District Boards (Amendment) Bill, 1957, as amended be passed."

The motion was put and carried and the Bill as amended was passed.

12-50 p.m. MR. SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. on Monday, the 28th October 1957.

The House then adjourned.

## VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A

12-50 p.m. 54. *Notification issued with G.O. Ms. No. 3350, Revenue, dated 23rd August 1957, exempting the transactions of the Guild of Service Thrift Shop, Madras, from the tax payable under section 3 (1) of the Madras General Sales Tax Act, 1931 (Madras Act IX of 1939), for a further period of one year from the 1st April 1957. [Laid on the table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939].*

55. *Notification issued with G.O. Ms. No. 2394, Home, dated 11th September 1957, remitting the fee chargeable under Article 11 (o) of Schedule II to the Madras Court Fees and Suits Valuation Act, 1955 (Madras Act XIV of 1955) on application for enrolment as advocates of the High Court at Madras, presented by the Advocates of the former Travancore-Cochin High Court, practising in the courts in the territories transferred to Madras, from the former Travancore-Cochin State, who are entitled to practice in the High Court at Madras under sub-section (5) of section 66 of the State Reorganization Act, 1956. [Laid on the table of the House under section 82 (2) of the Madras Court Fees and Suits Valuation Act, 1955].*

56. *Report and Proceedings of the Select Committee on the Madras General Sales Tax (Amendment) Bill 1957 (L.A. Bill No. 10 of 1957).*

### B

11. *Statement XIII showing action taken by Government on assurances, promises and undertakings given during the Seventh, Eighth and Ninth Sessions, 1955-56 of the Madras Legislative Assembly.*



26th October 1957]

12. *Report of Sri S. Venkateswaran, I.C.S., on the inquiry conducted by him into the recent Police firing at Kilathooval in Ramanathapuram district.*

13. *Report of enquiry conducted by the Honourable Mr. Justice P. N. Ramaswami, I.C.S., on certain allegations made against the former Inspector-General of Police.*

14. *List of Government Bills passed by the Madras Legislature in July 1957 and assented to by the Governor/President.*

[26th October 1957

APPENDIX.

[Vide item VI (1) on page 39 supra.]

THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1957 (L.A. BILL No. 10 OF 1957).

**Composition of the Select Committee.**

CHAIRMAN :

1 The Hon. Sri C. SUBRAMANIAM.

MEMBERS :

2 Srimathi T. N. ANANDANAYAKI.
3 Sri G. ANNAMALAI MUTHURAJA.
4 Sri P. S. CHINNADURAI.
5 Sri K. S. G. HAJA SHERIFF.
6 Sri M. KALYANASUNDARAM.
7 Sri P. G. KARUTHIRUMAN.
8 Sri R. KRISHNASWAMI NAIDU.
9 Sri V. S. MANICKASUNDARAM.
10 Sri K. RAMACHANDRAN.
11 Sri M. P. SARATHY.
12 Sri K. SATTANATHA KARAYALAR.
13 Sri R. SRINIVASA IYER.
14 Sri R. SUBRAMANIAM.
15 The Hon. Sri R. VENKATARAMAN.

SECRETARIAT :

Sri T. HANUMANTHAPPA, B.A. (Hons.), B.L. (*Secretary*).
Sri G. M. ALAGARSWAMY, B.A., B.L. (*Assistant Secretary*).

REPORT OF THE SELECT COMMITTEE ON THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1957 (L.A. BILL No. 10 OF 1957).

To

THE HONOURABLE THE LEGISLATIVE ASSEMBLY,
MADRAS.

The Select Committee appointed to consider the Madras General Sales Tax (Amendment) Bill, 1957 (L.A. Bill No. 10 of 1957), has the honour to make the following report.

2. The Bill was published in English in an extraordinary issue of the *Fort St. George Gazette*, Part IV-A, dated the 23rd July 1957, and in Tamil on the 31st July 1957.

3. The Committee was appointed by a resolution of the Assembly, dated the 27th July 1957.

4. The Committee met in the Committee Room, Legislators' Hostel (Old), Government Estate, Mount Road, Madras-2, on the 31st July 1957 for the consideration of the Bill.



26th October 1957]

5. The Committee has subjected the provisions of the Bill to a detailed scrutiny and considers that no change in the Bill is called for.

6. The Committee decided that the Bill need not be republished.

7. A copy of the Bill as approved by the Committee is annexed.

8. The minutes of dissent given by a Member are appended.

GOVERNMENT ESTATE,
MOUNT ROAD, MADRAS-2,
*2nd August* 1957.

C. SUBRAMANIAM,
*Chairman.*

ANNEXURE.

[NOTE.—No changes were made by the Select Committee].

L.A. BILL No. 10 OF 1957.

*A Bill further to amend the Madras General Sales Tax Act*, 1939.

WHEREAS it is expedient further to amend the Madras General Sales Tax Act, 1939 (Madras Act IX of 1939), for the purposes hereinafter appearing;

BE it enacted in the Eighth year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras General Sales Tax (Amendment) Act, 1957.

(2) It shall come into force on such date as the State Government may, by notification appoint.

2. *Amendment of section 5, Madras Act IX of* 1939.—In clause (v) of sub-section (1) of section 5 of the Madras General Sales Tax Act, 1939 (Madras Act IX of 1939) (hereinafter referred to as the principal Act), item (1) and the entries relating thereto shall be omitted.

3. *Substitution of new section for section 5-A in Madras Act IX of* 1939.—For section 5-A of the principal Act, the following section shall be substituted, namely :—

" 5-A. *Tax on sales or purchases of certain goods.*—(1) The sale of the following goods shall be liable to tax under section 3, sub-section (1), only at the point of the last sale effected in the State of Madras by a dealer, but at the rate specified against them :—

| *Serial number.* | *Description of goods.* | *Rate of tax on the turn-over.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | PER CENT. |
| (1) | Coal, including coke in all its forms .. .. .. | 2 |
| (2) | Iron and steel, that is to say— | |
| | (a) pig iron and iron scrap .. .. .. .. | 2 |
| | (b) iron plates sold in the same form in which they are directly produced by the rolling mill .. | 2 |

| Serial number. (1) | Description of goods. (2) | Rate of tax on the turnover. (3) |
|---|---|---|
| | | PER CENT. |
| (2) | Iron and steel, that is to say—*cont.* | |
| | (c) steel scrap, steel ingots, steel billets, steel bars and rods .. .. .. .. .. .. | 2 |
| | (d) (i) steel plates .. .. (ii) steel sheets .. .. (iii) sheet bars and tin bars.. (iv) rolled steel sections .. (v) tool alloy steel .. .. } Sold in the same form in which they are directly produced by the rolling mill. | 2 |
| (3) | Jute, that is to say, the fibre extracted from plants belonging to the species *corchorus capsularis and corchorus olitorius* and the fibre known as *mesta* or *bimli* extracted from plants of the species *hibiscus cannapinus* and *hibiscus sabdariffavar altissima*, whether baled or otherwise .. .. .. .. | 3 |
| (4) | Oil seeds including groundnut, that is to say, seeds yielding non-volatile oils used for human consumption, or in industry, or in the manufacture of varnishes, soaps and the like, or in lubrication, and volatile oils used chiefly in medicines, perfumes, cosmetics and the like .. .. .. .. | 3 |
| (5) | Cotton yarn, except (a) handspun cotton yarn and (b) cotton yarn waste .. .. .. .. | 1 |

(2) Cotton, that is to say, all kinds of cotton (indigenous or imported) in its unmanufactured state whether ginned or unginned, baled, pressed or otherwise, but not including cotton waste, shall be liable to tax under section 3, sub-section (1), only at the point of the last purchase effected in the State of Madras by a dealer, but at the rate of one per cent on his turnover.

(3) Raw hides or skins shall be liable to tax under section 3, sub-section (1), only at the point of the last purchase effected in the State of Madras by a dealer, but at the rate of two per cent on his turnover.

(4) The sale of dressed hides or skins shall be liable to tax under section 3, sub-section (1), only at the point of the last sale effected in the State of Madras by a dealer, but at the rate of two per cent on his turnover:

Provided that no tax shall be payable under this sub-section if the dealer proves that the tax has already been levied on the raw hides or skins out of which the dressed hides or skins had been produced.

(5) Notwithstanding anything contained in sub-section (3) of section 3, the dealer shall be assessed to tax under sub-sections (1) to (4), irrespective of the amount of the turnover of such dealer being less than the minimum specified in sub-section (3) of section 3.

(6) Notwithstanding anything contained in sub-sections (1) to (4), no tax shall be levied in respect of the last sale or purchase inside the State of the goods specified in this section if the goods purchased are intended for sale in the course of inter-State trade or commerce.



*Explanation.*—The expression " last sale or purchase inside the State " means the transaction in which a dealer registered under this Act—

(i) sells to or purchases from another such dealer the goods specified in this section for use by the purchaser in the manufacture of goods for sale or for use by the purchaser in the execution of any contract; or

(ii) purchases the goods specified in this section from another such dealer for sale to a dealer not registered under this Act or to a consumer in the State of Madras.

GOVERNMENT ESTATE,
MOUNT ROAD, MADRAS-2,
*2nd August* 1957.

T. HANUMANTHAPPA,
*Secretary.*

## APPENDIX.

### DISSENTING MINUTES.

### I

The Bill seeks to tax the last sale which will be impossible to fix. Further this will lead to harassment of small dealers and as regards cotton yarn at least 20, 30 and 40 counts should be exempted from sales tax as otherwise it will affect the handloom weavers.

PARAMAKUDI,
*13th August* 1957.

K. RAMACHANDRAN.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Monday, 28th October 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Economy in Government expenditure*

*11 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to enforce economy with regard to salary, travelling allowance and house rent of the Ministers; and

(*b*) whether the officer appointed to suggest ways and means for reducing the expenditure in Government departments has submitted his report to the Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) The Special Officer appointed to examine the administrative set-up and staff position in the State assumed office only on 2nd September 1957. He will work under the direction of a Committee of the Cabinet which will pass orders on his recommendation relating to each department as and when he submits his report in regard to each department. There will not therefore be a final report of the Special Officer as such.

SRI N. K. PALANISAMI : மந்திரிகள் கொஞ்சம் சம்பளத்தைக் குறைத்துக்கொண்டால் அந்த மந்திரி சபை நடக்காமல் போய்விடுமா ? ஏன் குறைத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்லுகிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதை எங்களுக்கே விட்டுவிட வேண்டும். அல்லது அப்படி நாங்கள் அதிகமாக சம்பளம் வாங்குவதாக நினைத்தால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பேரில் விவாதம் நடக்கும் பொழுது அது பற்றி பேசலாம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Can the Hon. Minister tell us when the Special Officer will be able to complete his enquiry and submit his report to the Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have already stated in my reply that there is no question of the Special Officer submitting any report to the Government. In respect of each department, he will make recommendations and we propose to pass orders then and there on those recommendations. I may, however, inform hon. Members that he has already submitted a preliminary report with reference to all departments together and had a discussion

[28th October 1957

with the Cabinet Sub-Committee on it. We have now asked him to submit proposals in the light of the preliminary discussions we had in respect of each department.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware that a Press report recently appeared to the effect that there would be no retrenchment of any kind as per the preliminary report of the Special Officer?

THE HON. SRI C. SUBRAMANIAM : The point was whether we would be sending out any of the officers now in service. In that connexion perhaps it was stffiated that nobody would be sent out. In that sense there would be no retrenchment and any retrenchment would be effective only in respect of future recruitment.

SRI M. KALYANASUNDARAM : May I know whether there are any specific terms of reference to the Special Officer on the basis of which he should conduct the enquiry and submit his report?

THE HON. SRI C. SUBRAMANIAM : The general terms of reference are to explore all possible methods of effecting economy in administration. He is going into the set-up of each department and the work done there to find out whether it could be improved upon.

SRI A. A. RASHEED : Is there any proposal to increase the salaries and travelling allowance of the Ministers in view of the high cost of living?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am very thankful to the hon. Member for the suggestion. But the high cost of living is not with reference to Ministers alone; it affects others also.

SRI S. LAZAR : இந்தியாவிலுள்ள ராஜ்ய சர்க்கார்களுக்குள்ளே, சென்னை சர்க்காரில் மட்டும்தான் மந்திரிகளுக்கு கொடுக்கக்கூடிய சம்பளமோ, பிரயாணப்படியோ, மற்ற செலவுகளோ மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்லுவது உண்மைதானா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மற்ற மாகாணங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க நாங்கள் தயாராக இல்லை. எங்களுக்கு எது நியாயம் என்று தோன்றுகிறதோ அந்த சம்பளத்தைதான் இந்த சபையின் அனுமதியின் பேரில் நிர்ணயித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : சிக்கனத்திற்கான யோசனைகளைக் கூறுவதுதான் ஸ்பெஷல் ஆபீசர் விசாரணையின் நோக்கம் என்று மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். சிக்கனத்தின் பெயரால் திறமையைக் குறைக்காமல், திறமையாக நிர்வாகத்தை நடத்துவதற்கான யோசனைகளை அவர் கூறுவார்களா ? யாரையும் ஆள் குறைப்பு செய்யமாட்டார்கள் என்று உறுதி மொழியும் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆள் குறைப்பு ஏற்படுவதாக இருந்தால் இப்பொழுது இருக்கக்கூடியவர்களை வெளியே அனுப்புவதாக இல்லை. புதிதாக ஆபீஸர்களை அதிகமாகச் சேர்ப்பதில்



28th October 1957]

கொஞ்சம் குறைத்துக்கொண்டு அம்மாதிரி சிக்கனம் செய்வது என்று உத்தேசம். வெறும் ஆளைக் குறைப்பது மட்டும் இல்லாமல், இப்பொழுது செய்துகொண்டிருக்கக்கூடிய வேலையை இன்னும் அதிகமாக நீட்டிக் கொண்டு போய் அதிக உத்தியோகஸ்தர்கள் வேண்டுமென்று கேட்காமல் வேலையைத் திறமையாகவும் சிக்கனமாகவும் செய்வது எப்படி என்பது பற்றி ஆலோசனைகள் கூறவும் அவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

MR. SPEAKER : 12-வது கேள்வியோடுகூட 20-வது கேள்வியும் கேட்கப்படும்.

*Allegations against the Inspector-General of Police*

* 12 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received the report of the High Court Judge deputed to enquire into the allegations against the Inspector-General of Police, and if so, when;

(*b*) the findings of the Judge; and

(*c*) whether a copy of the report will be placed on the Table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. The report was received on 24th August 1957.

(*b*) & (*c*) The conclusions reached are, as will be seen from the copy of the report placed on the Table of the House on 26th October 1957 that the allegations are not substantiated.

* 20-A *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the procedure adopted by the High Court Judge deputed to enquire into the allegations made against the Inspector-General of Police; and

(*b*) the terms of reference?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The terms of reference in respect of the allegations are the speech of the hon. Member Sri K. Anbazhagan on the floor of the House on the 16th July 1957 impugning the conduct of certain unnamed high Police officials and the connected correspondence between the Government and the Inspector-General of Police as detailed in paragraph 1 of the printed report.

The procedure adopted by the High Court Judge was in the nature of a confidential and fact-finding enquiry. Attention of the hon. Member is, in this connection, invited to paragraph 2 on page 2 of the printed report already placed on the Table of the House.

SRI M. KALYANASUNDARAM : இந்த அறிக்கை இப்பொழுது நம் முன்னிலையில் இருக்கிறது. அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறபடி கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் நீதிபதியால் அழைக்கப்பட்டிருக்கிறார், அவருடன் பேசியிருக்கிறார். அதேசமயத்தில் ஸ்ரீ அன்பழகன்

அவர்கள் இது ஒரு நீதிமன்ற விசாரணையாக இருக்குமா? நீதிமன்ற விசாரணையாக இருந்தால் நான் எல்லா விபரங்களையும் கொடுக்க தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதன்படி ஏன் நீதிமன்ற விசாரணை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இம்மாதிரி அதிகாரிகள்மீது குற்றச்சாட்டுகளோ அல்லது சந்தேகமோ ஏற்பட்டால் அதை விசாரிப்பதற்கு சில விதிகளும் சட்டங்களும் இருக்கின்றன—

(1) All-India Services Conduct Rules.

(2) All-India Services Discipline Rules.

(3) Public Servants' Enquiries Act.

இந்த மூன்று விதிகளுக்கும் சட்டங்களுக்கும் உட்பட்டுதான் விசாரணை நடத்தவேண்டும்., **Public Servants' Enquiry Act** இரண்டாவது பிரிவின்படி ஒரு **formal public enquiry** அதாவது ஒரு அதிகாரியின் மீது சாட்டப்பட்ட புகார்களின் மீது விசாரணை நடத்தவேண்டுமென்றால், அரசாங்கத்திற்கு அதற்கு போதிய ஆதாரங்கள் இருக்கின்றன என்று தெரிய வேண்டும். அப்படி தெரிந்த பிறகு அரசாங்கம் **charges frame** செய்து அதற்கு மேலே தான் **formal public enquiry** நடக்க வேண்டும். இதை விசாரிக்க நியமிக்கப்பட்ட நீதிபதி அவர்கள் ' நான் **preliminary enquiry** தான் செய்கிறேன், **fact finding mission** தான் நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். நீங்கள் உங்களிடம் இருக்கிற ஆதாரத்தைக் கொடுங்கள் அல்லது யாரை விசாரித்தால் ருசு ஏற்படும் என்பதை எனக்குத் தெரிவியுங்கள். அதற்கு மேல் **preliminary enquiry** நடத்த பின்னால் அவசியம் இருந்தால் நானே **public enquiry** நடத்த சிபார்சு செய்கிறேன் ' என்று சொன்னார்கள். ஆனால் இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிற கனம் அங்கத்தினர் அவர்கள் முடிந்தோ, முடியாமலோ அல்லது வேறு காரணத்திற்காகவோ தன்னிடம் இருக்கக்கூடிய எந்தத் தகவல்களையும் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இந்த வகையிலே தான் இந்த விசாரணை நடந்திருக்கிறது.

9-10 a.m. SRI M. KALYANASUNDARAM: கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் எந்த விவரமும் கொடுக்கவில்லை என்று மந்திரி அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அறிக்கையிலும் சூசகமாகக் குறிப்பிட்டிருக்கிறது. அங்கத்தினர் சபையில் செய்த பிரசங்கத்திலே முன்னாள் ஐ. ஜி. ராஜரத்தினம் அவர்களைத்தான் குறிப்பிட்டு அவர்கள் சொன்னார்களா, சபையில் சாட்டிய குற்றச்சாட்டுகள் தான் அவர் குறிப்பிட்டுள்ளதா? இன்னும் சில குற்றச்சாட்டுகள் இருக்கலாமா என்பதைப்பற்றிய விவரம் எல்லாவற்றையும் சேர்த்து விசாரணை செய்யப்படாத வரையில் எப்படி பூர்ணமாக விசாரணை செய்யப்பட்டு விட்டதாகக் கொள்ள முடியும்? நீதிபதி அவர்கள் எந்த ஆதாரத்தின் மேல் விசாரணையை நடத்தினார்கள்? அந்த முடிவையும் சர்க்கார் எப்படி கனம் அன்பழகன் மேற்கொண்டு விவரம் ஒன்றும் கொடுக்காமல் இருக்கும்போது அதையும் சேகரித்துப் பார்க்க வேண்டும் என்கிற எண்ணம் இல்லாமல் ஒப்புக்கொள்ள முடியும்? இதை ஏன் கோர்ட்டின் விசாரணைக்கு அனுப்ப வேண்டாம் என்கிறீர்கள் என அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் பேசிய பிரசங்கத்தில் போலீஸ் இலாகாவைப் பற்றிய குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்டிருந்தபடியால், அதை நான் போலீஸ் இலாகா தலைமை அதிகாரிக்கு அனுப்பி இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டேன். "இந்தக் குற்றச் சாட்டுகள் என்னைதான் குறிப்பிடுகிறது. இதற்கு இன்ன இன்ன விவரம்" என்று குறிப்பிட்டார்கள். இதைப்பற்றி பூர்வாங்க விசாரணை செய்ய நீதிபதி அவர்களுக்கு கனம் அங்கத்தினர் உதவியைக் கொடுக்கவில்லை. அவர்கள் அதைக் கோரியிருந்தும் இவர் கொடுக்கவில்லை என்கிற விவரம் அறிக்கையில்



இருக்கிறது. இருந்தாலும் அந்த அறிக்கையிலேயே முதல் குற்றச்சாட்டு அவ்வளவு பிரமாதமாக எடுத்துக் கொள்வதற்கில்லை. அங்கத்தினர் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது மூன்றாவது குற்றச்சாட்டுகளைப்பற்றி ஏற்கனவே விசாரணை நடத்தப்பட்டு இருக்கிறது. அதை எல்லாம் அலசிப் பார்த்துவிட்டு அதற்கு மேலும் ஒன்றும் அதில் சொல்வதற்கில்லை. வீட்டு விஷயமாகச் சொல்லப்பட்ட நான்காவது குற்றச்சாட்டுதான் மிகவும் முக்கியமானது. அதைப்பற்றி எப்படி விசாரணை எல்லாம் நடத்த வேண்டுமோ அப்படி நடத்தி அதற்கும் ஆதாரமில்லை என்பதாக நீதிபதி அவர்கள் தங்கள் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார். அதை அங்கத்தினர் கவனித் திருப்பார்கள். அதனால் தான் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் தேவை இல்லை என்பதாக சர்க்கார் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

SRI K. VINAYAKAM: Whereas Mr. Anbazhagan has made some allegations on the floor of this House and whereas a Judge has been deputed to enquire into these allegations, are the Government satisfied that every reasonable opportunity has been afforded to the principal author of the allegations so that he could be examined by the Judge in charge of this enquiry, and if so, will the Government be pleased to place on the Table of this House information as to the ways in which reasonable oportunities have been afforded to the author of the allegations?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not think anything more has to be placed on the Table of the House except the report which gives the answer to the hon. Member's question.

SRI A. A. RASHEED: In view of the fact that the Inspector-General of Police has retired, what useful purpose is going to be served in pursuing the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not entirely agree with the hon. Member. Because the officer has retired, it should not necessarily mean that we should not pursue the matter if there is anything to be pursued.

SRI M. KALYANASUNDARAM: இப்போது அந்த அதிகாரி உத்தியோகத்தில் இருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருப்பது உண்மையாக இருக்கலாம். குற்றச்சாட்டைக் கொண்டு வந்த காலத்திலும், விசாரணை நடந்த காலத்திலும் அவர் பதவியில் இருந்திருக்கிறார். ஆகையால் அதைப் பற்றி விசாரணை செய்யப்படுவது அவசியம்தான். நீதிபதி அவர்களுக்கு திரு. அன்பழகன் போதுமான தகவல் கொடுக்கவில்லை என்பதனால் இப்போது நீதிமன்ற விசாரணைக்கு அவசியம் இல்லை என்று சர்க்கார் கருதுகிறதா? அல்லது நீதிபதி அவர்கள் அறிக்கையில் சர்க்காருக்குப் திருப்தி வந்துவிட்டதன் காரணமாக மேற்கொண்டு விசாரணை வேண்டாம் என்கிறார்களா? போதுமான விவரங்களைச் சேகரித்துக்கொண்டு நீதிபதி அவர்கள் விசாரணை செய்யவில்லை என்பது தெரிவதால் ஏன் இதை நீதிமன்ற விசாரணைக்கு திரும்பவும் அனுப்பக்கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் அவர்கள் தகவல்கள் கொடுக்க முடியாமை ஒருபுறம் இருக்க, இதுபற்றி நீதிபதி அவர்கள் நன்கு விசாரித்துக் கொடுத்திருக்கக் கூடிய அறிக்கையை சர்க்கார் பரிசீலித்தார்கள். அதை நன்கு பரிசீலனை செய்த பிறகுதான் அதற்குமேல் நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள் என்பதை இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் இருக்கிறது.

[28th October 1957

*North Rajan channel waters for irrigation*

* 13 Q.—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that the poor ryots of Kanjankollai village, Chidambaram taluk, are prevented from, and penalised for, their age-long custom of using North Rajan canal water for the lands on its left bank by lift irrigation; and

(b) if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) It has been reported that some dry lands owned by the ryots of Kanjankollai village were irrigated by baling by means of picottahs erected on the northern bund of the Coleroon North Rajan Channel. Such irrigation of dry lands was treated as irregular and penal water-cess was charged on the extents irrigated for faslis 1363 to 1366.

(b) The taking of water was treated as irregular, and penalty levied for the following reasons :—

(1) Kanjankollai is the first village on the northern bank of the Coleroon North Rajan Channel and there are 26 lower-down villages to be served by the channel in question. The lower-down ayacutdars object to the erection of picottahs and baling, as the course of the channel is affected.

(2) The erection of picottahs on the bank of the channel is objectionable as thereby the bank becomes weakened.

(3) The wet ayacut of the lower-down village, viz., Adanur, is on a higher level. The ryots of that village object to the baling of water from the channel higher up by erection of picottahs as by such diversion of water they are not getting sufficient supply to their wet lands.

SRI K. R. VISWANATHAN: இம்மாதிரி அவர்களை பயிரிடக் கூடாது என எத்தனை ஆண்டுகளாகத் தடுத்து அபராதம் விதிக்கப் படுகிறது? அநேகம் ஏழை விவசாயிகள் அம்மாதிரி வெகுகாலமாகப் பயிரிட்டு வருவதால் அந்த ஏழைகளுடைய உரிமை பாதிக்கப்படாமல், நிலம் இல்லாத ஏழைகள் மாத்திரமாவது பயிரிடுவதற்கு அனுமதிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: மூன்று வருஷமாகத் தான் இந்த பெனல்டி வரி விதிக்கப்படுகிறது. நிலமில்லாத ஏழை என்கிற பிரச்னையை இதில் எழுப்பினால் அவ்வளவு உசிதம் இல்லை. கீழே இருக்கிற ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு பாதகம் ஏற்படும் வரையில் மேலே இருப்பவர்கள் யாராய் இருந்தாலும் தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்க முடியாது.

SRI K. R. NALLASIVAM: கனம் சபாநாயகர் அவர்களே, மாகாணம் முழுவதும் இருக்கக்கூடிய வாய்க்கால்களில் இருக்கக்கூடிய வர்கள் நீண்ட காலமாக ஏற்றம் இறைத்து வருவதும், கீழே இருக்கிற வர்கள் தண்ணீர் தட்டு வருவதாகக் கூச்சல் போடுவதும், இதற்கிடையில் புதிதாக மோட்டார் பம்புகளை வைத்துக்கொள்ள ஒரு பக்கம் அனுமதிப்பது கூட ஏற்றம் இறைக்கிற ஏழை விவசாயிகளுக்குப் பெனல்டி போடுவது இப்படி பல காரியங்கள் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் நடந்து வருவதால் இதைப்பற்றி பூர்ணமாகவே ஒரு விசாரணை செய்து, மொத்தம்



28th October 1957]

எவ்வளவு தண்ணீர் கிடைக்கும், கீழ் பகுதி மேல் பகுதி. எவ்வளவு தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம் என்பதைப் பற்றி மறுபடியும் ஒரு விசாரணை செய்ய ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்தப் புகார் மற்ற இடங்களிலும் ஏற்பட்டிருக்கிறது. அதையும் பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு இருக்கிறது.

SRI K. R. VISWANATHAN: நீண்டகாலமாக அதில் அநேக ஏழை விவசாயிகள் பயிரிட்டு வந்திருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டு காலமாகத்தானே அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. இந்த மூன்று ஆண்டுகளாக மாத்திரம் அவர்களை ஏன் தடுத்து அபராதம் விதிக்க வேண்டும்? நீண்டகாலமாகப் பயிரிட்டு வருபவர்களை ஏன் அனுமதிக்கக்கூடாது?

THE HON. SRI M. A. MANICKAVELU: கீழே இருக்கிற ஆதனூர் கிராமத்தார்கள் முறையிட்டார்கள். அதனால் இந்த விஷயம் சர்க்காருக்குத் தெரியவந்தது.

*Industrial Development Committee*

* 14 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have constituted an Industrial Development Committee for this State during 1957; and

(b) if so, whether it has submitted any detailed schemes for the starting of industries under public and private sectors?

THE HON. SRI R. VENKATARAMAN: **(a) Yes, Sir.**

**(b) Sub-Committees have been constituted and the work is progressing.**

SRI N. K. PALANISAMI: என்ன என்ன திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: இன்னும் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. இப்போதுதான் உப கமிட்டிகள் நியமித்திருக்கிறோம். அந்த உப கமிட்டிகள் எந்த எந்தத் தொழில்கள் சென்னை ராஜ்யத்தில் நடத்த முடியும் என்பதைப் பரிசீலனை செய்து இருக்கிறார்கள். உப கமிட்டியின் ரிப்போர்ட் வந்தவுடன் பொதுக் கமிட்டியானது அதைப் பரிசீலனை செய்யும்.

*Palar waters.*

* 15 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answers given to questions Nos. 3342 and 3343 (starred) on 9th March 1956 and question No. 736 (unstarred) on 5th April 1956, the present stage of the dispute between the Madras and the Mysore Governments regarding impounding of Palar river waters?

THE HON. SRI P. KAKKAN: After two preliminary conferences a final conference of the Madras and Mysore Chief Engineers with the representatives of the Central Government was held at Bangalore from 28th June to 2nd July 1956 to discuss the dispute over the sharing of the Palar waters between Madras and

Mysore. The conference arrived at certain conclusions. No final decision has so far been taken in the matter by the Government. Before taking a final decision on the conclusions arived at the Bangalore meeting, it is proposed to have further discussions on the subject with the Union Minister for Irrigation and Power.

SRI N. K. PALANISAMI : 1956-ம் வருஷத்தில் இரண்டு சர்க்கார் என்ஜீனியர்களும் கூடி பரிசிலனை செய்த காலத்தில், மைசூர் அரசாங்கம் நமது அரசாங்கத்திற்கு தண்ணீர் கொடுக்க முடியாது என்று சொன்ன பிறகு இதை ஜோனல் கவுன்சிலில் வைத்து பாலாறு தண்ணீரை கொடுக்க வேண்டும் என்று கேட்டார்களா ?

THE HON. SRI P. KAKKAN : ஜோனல் கவுன்சிலில் என்ன நடந்ததென்று தெரிந்திருந்தாலும் முழு விவரம் கொடுக்க வேண்டும் என்று மைசூர் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம். முழு விவரம் கிடைத்த பிறகு மேலும் பரிசீலனை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

SRI M. KALYANASUNDARAM : பங்களூரில் நடந்த மாநாட்டில் நமது அரசாங்கம் கொடுத்திருந்த யோசனைகள் என்ன என்ன என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : பங்களூர் மாநாட்டில் யாருக்கும் பாதகம் இல்லாத முறையில் விவாதம் நடைபெற்றது. எந்த முடிவிற்கும் வரவில்லை. மீண்டும் பரிசீலனை செய்வதற்கு அடுத்த மாநாட்டில் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, when this question is discussed again before the Union Minister, will the Government consider the desirability of giving an opportunity to the ryots of those areas to represent their grievances once again inasmuch as there is feeling that their cases have not been enquired into properly by the engineers concerned?

THE HON. SRI P. KAKKAN : பிரதிநிதிகளை அனுப்புவதை காட்டிலும் அரசாங்கம் தண்ணீர் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI K. VINAYAKAM : Sir, is there any reasonable possibility of getting water at least in the distant future or is it only a pious hope—hoping against hope!

THE HON. SRI P. KAKKAN : இதுபரியந்தம் விசாரித்ததில் இம் மாநாட்டின் விளைவால் தீங்கு ஒன்றும் ஏற்படப்போவதில்லை. நமக்குக் கிடைக்கவேண்டிய தண்ணீரை மைசூர் அரசாங்கம் கொடுக்க இருக்கிறார்கள்.

SRI M. KALYANASUNDARAM : கனம் மந்திரி அவர்கள் தெளிவாக பதில் சொல்லாமல் தீங்கு ஏதும் இல்லை, தீங்கு ஏதும் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இந்த நாட்டில் பாலாறு என்பது பெயரளவில் இருந்தாலும்கூட தண்ணீர்கூட இல்லாமல் இருக்கிறது. நமது அரசாங்கம் மைசூர் அரசாங்கத்திற்கு திட்டவட்டமாக என்ன கோரிக்கைகள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவைகளை மைசூர் அரசாங்கம் ஒப்புக்கொண்டதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே மைசூர் அரசாங்கம் [illegible] அதிகப்படுத்தி தண்ணீர் எடுத்து வருகிறார்கள். அவைகளில் [illegible] உபயோகப்படுத்தி தண்ணீர் எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்று [illegible] முதல் விசாரித்ததில் சென்ட்ரல் வாட்டர் பவர் [illegible]

[28th October 1957

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the point for consideration is this. The expenditure in municipalities is increasing, and they have to provide certain amenities to the citizens of those municipalities. For this purpose they have to raise the necessary resources. Levy of property tax is one of the measures laid down under the District Municipalities Act. In the District Municipalities Act, there is provision for the revision of the tax based on the rental value and property value of the building concerned. Subject to the provisions of the Act, the Municipalities are entitled to revise the tax. These Government Orders have been issued for the purpose of fixing the fair rent with reference to the Rent Control Order. Certain conflicts have arisen between the working of the Rent Control Order and the fixing of the rental value and property value for fixing the tax. It is for the purpose of resolving these conflicts these Government Orders are issued. As far as municipalities are concerned, I do not think we can stand in the way of their revising the property tax under the existing District Municipalities Act. It is not possible to curtail their powers under the District Municipalities Act.

SRI K. VINAYAKAM : Sir, the Government Order makes it clear that for owner-occupied houses, the rent prevailing during 1939–40 plus 8-1/3rd per cent could be levied, in all places including the City of Madras. Are the Government aware of the fact that as far as the City of Madras is concerned, this rule is not strictly followed by the assessors? They ask questions like this, namely, 'What would be the rent that it would fetch if let out?' Not in consonance with the benefits that the municipalities provide to the citizens, but in consonance with the prevailing rents in the locality, the assessment is made. Is this not in contravention of the Government Order placed on the Table of the House?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is what I was trying to impress upon hon. Members. As far as the municipalities are concerned, the revision of the assessment is based upon the provisions of an Act of this legislature. Under this Act, they are entitled to revise the taxes. That is being done. Unless we revise the Act concerned, I do not think we can make the municipalities bound by whatever Government Order we may issue. We are trying to resolve the conflicts so that there may not be unnecessary increase in the level of taxes.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that the tax on owner-occupied houses is increased every quinquennium by the Corporation of Madras?

THE HON. SRI C. SUBRAMANIAM : This is being done under a statute. If we want that this should not be done, the legislature should revise that provision. I do not think we can curtail the rights of the Corporation by the issue of a Government Order. But we are trying our best to resolve the conflicts that arise.



28th October 1957]

SRI M. KALYANASUNDRAM : முனிசிபாலிடிகளிலும் பஞ்சாயத்து போர்டுகளிலும் கார்பரேஷனிலும் அதிகாரிகள் வரி விதிப்பதை ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை வீடுகளை பரிசீலனை செய்வதாக தெரிகிறது. சொந்தக்காரர்கள் இருக்கும் வீடுகளின் மதிப்பு உயர்ந்தாலும் குறைந்தாலும் ஒவ்வொரு ஐந்தாண்டிற்கும் பரிசீலனை செய்து உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் சர்க்கார் செய்துவருகிறார்கள். அதே கொள்கை சர்க்காருக்குச் சொந்தமான கட்டடத்திற்கும் அனுசரிக்கப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன். முனிசிபாலிடிகளின் வருமானத்தை உயர்த்தவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தினால் அவர்கள் தனிப்பட்டவர்கள் வீடுகளின் வரியை உயர்த்திக்கொண்டே போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : This is a hypothetical question. As far as Government property is concerned, we have laid down rules for the purpose of levying tax. So also with reference to private property, municipalities are entitled to fix the assessment under the provisions of the existing Act. That is why I have suggested that as long as the provisions of the Act remain as they are, I do not think we can object to the municipalities revising the tax, unless of course they transgress the limits laid down by the statute.

SRI S. NAGARAJA MONIGAR : சொந்தக்காரர்களின் கட்டிடங்கள் நன்றாக பாதுகாக்கப்பட்டும், முன்னேற்றங்கள் செய்யப்பட்டும் கட்டிடங்கள் நன்றாக இருந்து வருவதும் உண்மையல்லவா ? பொது கட்டிடங்கள் சரிவர பாதுகாக்கப் பட்டு வராமல் பொதுஜனங்களின் அக்கறைக் குறைவால் நஷ்டம் ஏற்பட்டு வருவதால் அதன் பேரில் வரியைக் குறைப்பது நியாயமாகாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் சொல்லக்கூடிய அடிப்படையில் இது நியாயமா அநியாயமா என்று தீர்க்கவேண்டிய அவசியமில்லை. சர்க்கார் கொடுக்கும்போது மக்களின் பணத்தைத்தான் வரியாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதைப் பற்றி ஒன்றுக்கொன்று அட்ஜெஸ்ட் பண்ணவேண்டும். தனிப்பட்டவர்களுக்கும் முனிசிப்பாலிட்டி சௌகரியம் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒன்று நன்றாக பாதுகாக்கப்பட்டு வருகிறது, வேறு ஒன்று நன்றாக பாதுகாக்கப்பட்டு வரவில்லை என்ற அடிப்படையில் தீர்மானம் செய்ய வேண்டியது அவசியம் இல்லை. பொதுக் கட்டிடங்கள் நன்றாக பாதுகாக்கப் பட்டுதான் வருகிறது.

*Integration of the services of the ex-Travancore-Cochin State personnel.*

*17 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Chief Minister be pleased to state the present stage of integration of the services of the former Travancore-Cochin State personnel who opted to the Madras State?

THE HON. SRI C. SUBRAMANIAM : Proposals for the integration of the services of the personnel allocated to this State from the former Travancore-Cochin State called for from the Departments of Secretariat and the Heads of Department concerned are being received. These proposals will be considered by the Partition Committee and the Government will pass final orders on the recommendations of the Partition Committee. It is expected that the entire work relating to the integration will be completed by the end of December 1957.

[28th October 1957

SRI K. SATTANATHA KARAYALAR: இங்கு மாற்றமாகி வந்திருக்கக் கூடிய உத்தியோகஸ்தர்களின் நேச்சர் ஆப் வொர்க் இங்குள்ளவர்களின் வொர்க் போல் இருந்தும், ஸ்கேல் ஆப் பேயில் டிஸ்பாரிட்டி, வித்தியாசம் இருப்பதுதான் இந்த சர்வீஸ் இணைப்பின் காலதாமதத்திற்கு ஒரு காரணமாகுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதுவும் இருக்கிறது. சில விஷயங்களில் அங்கிருந்து வந்தவர்களுக்கு அதிக வேலையிருந்து குறைந்த சம்பளம் உள்ளவர்களாய் இருக்கலாம். குறைந்த வேலையிலிருந்து அதிக சம்பளமும் இருக்கலாம். இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டிய அவசியமிருக்கிறது. சர்வீஸ் இணைப்பின் போது இங்குள்ள உத்தியோகஸ்தர்களுக்கும் ஸினியர், ஜூனியர் என்று எந்தவிதமான அநியாயமும் ஏற்பட்டுவிடக்கூடாது. அதேபோல் அவர்களுக்கும் நியாயம் வழங்கவேண்டும். ஆகவே நல்ல முறையில் இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து இருதரப்பினருக்கும் நியாயம் வழங்கும்படிச் செய்ய வேண்டும். அதற்கான முறையில் தீர்ப்புச் செய்யவேண்டும். ஆகவே தான் காலதாமதம்.

9-30 a.m. SRI T. T. DANIEL: May I know, Sir, the names of departments which have not yet filed the reports in pursuance of the integration rules and whether they have furnished any reasons for the delay in furnishing the reports?

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I think, we have received the recommendations of all the departments concerned. Now the Partition Committee will go into the matter and take decisions.

SRI M. WILLIAM: May I know whether the reply has been received from the High Court?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not have information with me with regard to particular departments. But my information is that recommendations have been received from almost all the departments.

SRI M. WILLIAM: Sir, several munsifs have been promoted as Sub-Judges ignoring the claims of the senior munsifs. Is that not a fact, Sir?

THE HON. SRI C. SUBRAMANIAM: I would request hon. Member to put a separate question.

SRI K. SATTANATHA KARAYALAR: இங்குள்ள சர்வீஸ் ரூல்சுக்கும், அங்குள்ள சர்வீஸ் ரூல்சுக்கும் உள்ள வித்தியாசம் காரணமாக சர்வீஸ் இணைப்பிற்கு காலதாமதமாவதாகத் தோன்றுகிறது. அப்படியானால் இங்குள்ள சர்வீஸ் ரூல்ஸை ரிலாக்ஸ் செய்து இந்த சர்வீஸ் இணைப்பைத் துரிதப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: எந்தெந்த இனங்களில் இந்த ரூல்ஸைத் தளர்த்த வேண்டுமோ அந்தந்த விதிகளைத் தளர்த்தித்தான் இதை சரி செய்ய வேண்டியதாயிருக்கும். ஆகவே எந்தெந்த இனங்களில் இதைத் தளர்த்த வேண்டுமென்பதைப் பற்றி ஆலோசித்து வேண்டிய முடிவு செய்யப்படும்.

SRI T. T. DANIEL: Sir, in view of the fact that these persons are undergoing loss on account of the delay in integration, will the Government be pleased to go into the question and give retrospective effect to the benefits of integration from 1st November 1956?



28th October 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, there is no question of loss because whatever emoluments they were receiving in the Travancore-Cochin State, they are getting the same emoluments here also. If it is considered as a question of loss and profit, if they get anything more that will be an additional profit to them. But I do not think it should be looked upon as a question of loss and profit. We should only consider what is the reasonable pay which these people are entitled to get in the existing set-up. I may inform the hon. Members, whenever we take a decision with regard to revision of salaries, no retrospective effect is generally given. But certainly we shall look into the cases and if in any particular case retrospective effect is necessary we shall consider.

SRI A. NESAMONY: Do the headmasters who have been appointed after 1st November in the various Government High Schools get the scale of salaries prescribed in the Travancore-Cochin State Rules?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir. Now we are following only the Tavancore-Cochin Rules. But appointments made subsequent to the integration, new appointments made to new posts, they are being done under the Madras Rules.

### *Fair price shops.*

* 18 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have received any communication from the Centre during September 1957 to close all fair price shops in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir.

SRI N. K. PALANISAMI: ஏற்கனவே குறுவை நெல் தஞ்சாவூரில் அதிகமாக விளைந்த போதிலும் மேலும் மேலும் விலை அதிகரித்துக் கொண்டே போகிறது. மாதமொன்றுக்கு 8,000 டன் கிடைத்து வந்தது. ஆனால் இப்பொழுது 4,000 டன்தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே ஜனங்கள் வாங்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது இம்மாதிரி மூடுவதற்கு, மத்திய சர்க்கார் மூடச் சொன்னதற்கு எந்தெந்த வழிகளில் அதை எதிர்த்தார்கள், எவ்வளவு அரிசி வேண்டுமென்று கேட்டார்கள் என்பதைப் பற்றியெல்லாம் விவரமாக அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: விலை அதிகமாக ஏறிக் கொண்டு போகிறது என்று சொல்வது சரியல்ல. சராசரி மூன்று மாதங்களுக்கு மேல் போனால், விலை ஏறினால் அதை நாம் ரிக்குவிஷன் செய்வது என்று முடிவு செய்திருக்கிறது. விலை அவ்வளவுதூரம் ஏறவில்லை. ஆனால் அதிகமாகத்தான் இருக்கிறது. ஆகவே இந்த சர்க்கார் மத்திய அரசாங்கத்தினிடம் நியாய விலைக் கடைகளை அடியோடு மூடுவதற்கில்லை என்று தெரிவித்தது. ஆனால் மத்திய "சர்க்கார் அந்திய நாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதை குறைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது; ஆகையினால் மூடுங்கள்" என்று சொன்னார்கள். அதற்கு மேல் இரண்டு அரசாங்கங்களும் பேசி, நியாயவிலைக் கடைகளை பாதிக்குக் குறைத்து விடலாம், வருகிற அறுவடை வரை இருக்க வேண்டும் என்று ஒரு முடிவிற்கு வரப்பட்டது. ஆகவே அக்டோபர் முதல் டிஸம்பர் வரையிலே பாதி நியாய விலைக் கடைகளுக்கு அரிசி வேண்டும். அதை கடனாகக் கொடுங்கள், அடுத்த அறுவடையில் அரிசியை வாங்கி அதைத்

[28th October 1957

திருப்பித் தந்து விடுகிறோம் என்று சொன்னோம். அதை ஏற்றுக் கொண்டார்கள். அந்த வகையில் இந்தப் பாதி நியாய விலைக் கடைகள் குறைக்கப் பட்டு அவர்களுக்கு அரிசி வழங்கப் பட்டு வருகிறது.

**SRI S. NAGARAJA MANIGAR** : சென்ற பல வருஷங்களாகவே எல்லா வஸ்துக்களுக்கும் விலை ஏறிக் கொண்டேதான் போகிறது. இதிலிருந்து விலை ஏறி வருகிறது என்று மாத்திரம் கொள்வதா அல்லது மக்களின் வாங்கும் சக்தியும் அதிகரித்திருக்கிறது என்று கொள்வதா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இரண்டு வகையிலும் கொள்ளலாம்.

**SRI M. KALYANASUNDARAM** : மத்திய சர்க்கார் நியாயவிலைக் கடைகளுக்காக ஒதுக்கப் பட்டிருந்த 8,000 டன் அரிசிக் கோட்டாவை நிறுத்திக் கொண்டார்கள். இப்போது பாதி கொடுப்பதும் கடனாகக் கொடுக்கிறார்கள். இந்த 4 மாதங்களில் கிட்டத்தட்ட 10,000 டன் திருப்பி கொடுக்க வேண்டும். உணவுப் பொருள் சம்பந்தப்பட்ட வரையில் நம் ராஜ்யம் ஒரு டெபிஸிட் ராஜ்யமாகும். இந்த வருஷம் பருவ மழை இல்லாது புஞ்சை வெள்ளாமை மேட்டுப் பிரதேசத்தில் காய்ந்துவிட்டது. ஆகவே நம் ராஜ்யத்திலிருந்து கொள்முதல் செய்தாலும் எப்படிக் கடனைக் கொடுத்து நியாவிலைக் கடைகளையும் நடத்த முடியும ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : மத்திய அரசாங்கம் சொல்லிக் கொண்டு வருகிறது. இந்த அரசாங்கம் அநேகமாக முடிவு செய்திருக்கிறது என்று சொல்லவில்லை. அடுத்த அறுவடையில் ஓரளவு இந்த அரசாங்கம் நெல்லை வாங்குவது என்று முடிவு ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி வாங்கி இப்போது நியாயவிலைக் கடைகளுக்கு கொடுக்கப் படுகிறதை திருப்பி கொடுத்து விடுவதால் பாதகம் ஒன்றும் ஏற்பட்டு விடாது. எப்பொழுது நமக்கு பற்றுக்குறை ஏற்படுகிறதோ அப்பொழுது மத்திய சர்க்காரிலிருந்து நமக்கு வேண்டிய அரிசியை வாங்கிக் கொள்ளலாம். சென்ற வருஷம் நம் ராஜ்யத்திலிருந்து இரண்டு லட்சம் டன்னிற்கு மேல் கேரளா ராஜ்யத்திற்கு போயிருக்கிறது. ஆகவே இப்போது பற்றுக்குறை இல்லை. ஆதலால் கவலை யில்லை. எப்போதுவேண்டுமானாலும் அரிசியை வாங்கிக் கொள்ளலாம்.

**SRI P. G. MANICKAM** : கனம் சபாநாயகர் அவர்களே, கோயம்புத்தூர் ஜில்லாவில் பருவ மழை சரியாகப் பெய்யாததினால் பயிர்கள் எல்லாம் வாடிவிட்டன. ஆகையினால் அங்குள்ள ஜனங்கள் எல்லாம் பஞ்சத்தில் அடிபடவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகையால் எந்தெந்த இடங்களில் எல்லாம் அவசரமாக நியாயவிலைக் கடைகள் திறக்க வேண்டுமோ அந்தந்த இடங்களில் எல்லாம் நியாயவிலைக் கடைகள் திறக்க அரசாங்கம் முன் வருமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** ; எங்கெங்கு அவசியமோ அந்தந்த இடங்களில் எல்லாம் நியாயவிலைக் கடைகள் திறப்பதற்குத்தான் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துவருகிறது.

**SRI S. B. ADITYAN** : Are the Government aware that the District Planning Board of Tirunelveli recommended that the fair price shops in the drought-affected areas should not be closed and will the Government give an assurance that the fair price shops in these areas will not be closed?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : I have not myself seen any recommendation of the Tirunelveli District Planning Board. But still I can assure the hon. Member that this aspect that the fair price shops should not be reduced in the drought-affected areas is taken into consideration when a readjustment of fair price shops is decided upon for each district by the Collector.



28th October 1957]

**SRIMATHI T. N. ANANDANAYAKI** : இந்த உத்தரவுக்கு பிறகு சென்னையில் மீண்டும் நியாயவிலைக் கடைகளை திறப்பதற்கு அரசாங்கம் உத்தரவு போட்டிருப்பதில் எத்தனை சதமானம் கடைகள் மீண்டும் திறப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ? எந்த அடிப்படையின் பேரில் திறப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : ஒவ்வோரு ஜில்லாவிலும் முன்பு இருந்ததில் 100-க்கு 50 வீதம் இப்போது திறக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்து வருகிறது. கூட்டுறவு ஸ்தாபனங்களின் கீழ் நடந்து வரும் நியாய விலைக்கடைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

**SRI K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, உணவு பற்றுக்குறை பகுதிகளுக்கு உதவும் படியான முறையை "ஸோனல் ஸிஸ்டம்" அதாவது வட்டார முறையாக என்ற ஏற்பாடு இருந்தும் இந்த வட்டார நாடுகளிலிருந்து அரிசி வெளியேறிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இந்த ஸோன் அமைக்கப்பட்ட பிறகு தென்னாடுகள், கேரள நாடு, ஆந்திரா நாடு, கர்நாடக நாடு இவைகளுக்கு வெளியில் அரிசி போவதில்லை. இந்த நாடுகளுக்குள் அரிசி போய்க் கொண்டிருப்பதைத் தடை செய்ய இயலாது.

**SRI K. B. S. MANI** : சபாநாயகர் அவர்களே, நான் கேட்க வேண்டுமென்றிருந்த கேள்வியை அன்பழகன் அவர்கள் கேட்டுவிட்டார்கள். இருந்தாலும் ஒரு சந்தேகம், அதாவது ஸோனல் நாடுகளுக்குள் தடை செய்ய முடியாது என்று சொல்லும்போது நாட்டிலும் இல்லாத பஞ்சம் தமிழ் நாட்டில் மாத்திரம் ஏற்படுவதற்கு காரணம் என்ன ? ஆகவே இந்த நாடுகளுக்குள் அரிசி போய்க் போண்டிருப்பதைத் தடை செய்ய மந்திரி சபை நடவடிக்கை எடுக்க முற்படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: இங்கு அரிசி பஞ்சம் ஏற்பட்டிருப்பதாக எனக்கு தோன்றவில்லை. அரிசியினுடைய விலைதான் ஏறி இருக்கிறதேதவிர வேறு ஒன்றுமில்லை. தமிழ் நாட்டிலிருந்து அரிசி வெளியே போய்க் கொண்டிருந்தால் ஆந்திர நாட்டிலிருந்து இங்கு அரிசி வரக்கூடும். ஆந்திர நாட்டிலிருந்து அனுமதியின்றி வங்காளத்திற்கோ பம்பாய்க்கோ போக முடியாது.

**SRI S. PAKKIRISAMI PILLAI** : நியாய விலைக் கடைகளை குறைத்த காரணத்தினால்தான் அரிசியின் விலை அதிகரித்திருக்கிறதா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : நியாய விலை கடைகள் குறைக்கப்பட்டதால் அரிசி விலை கூடினது என்று சொல்ல முடியாது. நியாய விலைக் கடைகள் அதிகமாக இருந்த சமயத்திலும் அரிசி வாங்குவதற்கு ஆள் இல்லாமல் இருந்ததும் உண்டு.

**SRI A. GOVINDASAMI** : நியாயவிலைக் கடைகள் பாதியாக குறைத்திருப்பதாக சொன்னார்கள். என்னுடய தொகுதியாகிய வளவனூரில் மூன்று கடைகள் முன்னால் இருந்து இப்போது ஒரு கடையாவது திறக்கப்படாமல் மூடிவிட்டார்கள். இதை மீண்டும் திறப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : ஒவ்வொரு ஜில்லாவிலும் முன்பு இருந்ததில் நூற்றுக்குப் பாதி கடைகளை திறக்கவேண்டும் என்றுதான் முடிவு செய்து இருக்கிறது. வளவனூரில் திறக்கப்படவில்லை என்றால் அங்கு நியாய விலைக் கடைகள் அவசியமில்லை யென்றுதான் அங்குள்ள கலெக்டர் முடிவு செய்து இருப்பதாக எடுத்துக் கொள்ளவேண்டும். அங்கு வியாபாரம் செய்வதற்கு அல்லாமல் அரிசி உண்மையாக வாங்கிக்கொண்டு இருக்கின்றவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள் என்றால், இதைப்பற்றி நான் கலெக்டர் அவர்களிடம் பரிசீலனை செய்யச் சொல்லுகிறேன்.

SRI K. VINAYAKAM : Sir, whereas the position of City of Madras is peculiar when compared to other districts in the sense that the City does not produce even one grain for consumption, will the Government review the entire issue and allot the entire number of fair price shops that have been now closed, as this thesis has been accepted in the Collectors' Conference when we made representations in this regard?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Because Madras City does not produce rice, a larger number of shops are located in the City. I may inform the hon. Member that although the City does not produce rice, even in the days of acute shortage, rice was being smuggled from Chingleput district into the City of Madras.

SRI S. M. ANNAMALAI : மாநில சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஆந்திர மாகாணத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு அரிசி வரும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் ஆந்திர மாநிலத்து வியாபாரிகள் தமிழ் நாட்டிலுள்ள கும்பகோணம் போன்ற இடங்களுக்கு வந்து அரிசி வாங்கி வெளியே அனுப்பிக்கொண்டிருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிந்தேன். இந்தச் செய்தி சென்னை மாநில அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நானும் பத்திரிகையில் பார்த்தேன், ஆந்திர வியாபாரிகள் தமிழ் நாட்டிற்கு வந்து வியாபாரம் செய்து வருதவாக, இவ்விதமாக சில வியாபாரிகள் நாட்டிலுள்ள உணவுப் பிரச்சினையை கருத்தில் கொள்ளாமல் "ஸ்பெகுலேட்" செய்து தொல்லைகளை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் அரிசியை வாங்கி இந்த ஸோனுக்கு வெளியே அனுப்ப முடியாது.

SRI M. R. KANDASAMY MUDALIAR : சேலம் ஜில்லாவை பொறுத்த வரையில் அந்த ஜில்லா மிகவும் பிற்பட்ட நிலையில் இருந்து வருகிறது. அங்குள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த ஜில்லாவில் உணவு விஷயத்தில் கூடுதல் நியாய விலைக்கடைகளை ஏற்படுத்துகிற அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முதலிலே ஒவ்வொரு ஜில்லாவுக்கும் கடைகளை கொடுக்கும் போது அங்குள்ள எல்லா அவசியங்களைப் பார்த்துக்தான் கொடுக்கப்பட்டது. அப்பொழுது சேலத்திற்கு அதிகமாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போதுதான் பாதியாக குறைக்கப்பட்டிருக்கிறது.

SRI T. P. ELUMALAI : சபாநாயகர் அவர்களே, கேரள சர்க்கார் ஆட்சியில் வந்திருப்பதாகவும் நல்ல சட்டங்களை எல்லாம் கொண்டு வந்திருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. ஆனால் அவர்கள் சாப்பாட்டுக்கு மாத்திரம் தமிழ் நாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது ஏன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கேரள சர்க்கார் நல்ல சட்டங்களை இயற்றுவதினால் அவர்கள் பட்டினியாக இருக்க வேண்டும் என்பது சரியல்ல. தமிழ் நாட்டு அரிசியை அவர்கள் சாப்பாட்டுக்காக எதிர்பார்க்கிறார்கள் என்பதைப் பார்த்து நாம் சந்தோஷப் படவேண்டும்.

### *Sathyagraha by beedi workers.*

* 19 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there was satyagraha by the beedi workers in the Salem district in August 1957 against the wage cut imposed by the beedi company owners;



(b) whether the Deputy Labour Commissioner had tried to effect a settlement on 20th and 21st August; and

(c) if so, with what result?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) & (c). Yes, Sir. The Personal Assistant to the Commissioner of Labour held conciliation. He reported to Government that his efforts to settle the dispute amicably were not successful. The Government thereupon referred the dispute to the Labour Court, Coimbatore, for adjudication.

SRI N. K. PALANISAMI : அது மட்டுமல்ல, இன்னும் பல இடங்களில் இம்மாதிரியான தகராறுகள் நீடித்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே இத்தகராறுகளை திருப்தியாக முடித்து வைப்பதற்காக அவசரமாக ஏன் ஒரு சட்டம் கொண்டு வரக்கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் நடந்த நமது சென்னை ராஜ்ய தொழிலாளர் ஆலோசனை போர்டின் முன்னால் சர்க்கார் கொண்டு வரப்போகின்ற ஒரு சட்டம் நகல் சமர்பிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களும் அதை பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இந்தக் கோர்ட் இதைப் பரிசீலித்து சீக்கிரமாகவே ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு முன்வரும் என்று சொல்ல விரும்புகிறேன்.

### *Representation from the Coimbatore District Cotton Mill Workers' Association.*

* 20* Q.—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have received any resolution passed recently by the Coimbatore District Cotton Mill Workers' Association, Singanallur, regarding the decrease in the work load to 7 hours a day; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) Under the Factories Act, the hours of work and overtime are prescribed. Reduction in the hours of work is a matter for negotiation between the parties concerned.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, உலகத்தின் முன்னேற்ற மடைந்த நாடுகளில் எல்லாம் 40 மணி நேரம் வேலை என்று இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அந்த நாடுகளோடு சென்னை நாட்டையும் சேர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : முன்னேற்றம் அடைந்த நாடுகளில் 40 மணி நேரம் வேலை இருப்பதும் 48 மணி நேரம் வேலை இருப்பதும் எனக்குத் தெரியும். இப்போது நாட்டின் உற்பத்திப் பெருக்கை உத்தேசித்து இப்போது வேலை நேரத்தைக் குறைப்பது நல்லது அல்ல என்று நினைக்கிறேன்.

SRI N. K. PALANISAMI : வேலை பளு சம்பந்தமாக, ஏற்கெனவே ஆர்பிட்ரேஷன் போர்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த போர்டு சரிவர வேலைசெய்வதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

* * Question 20-A taken along with * Question 12.

[28th October 1957

**The Hon. Sri R. VENKATARAMAN** : ஆங்காங்கு கூட்டுக் கமிட்டிகளை அமைத்திருக்கிறோம். இந்தக் கூட்டுக் கமிட்டிகளில் பிரச்னைகள் ஆராயப்பட்டு, அங்கு அவர்களுக்குள் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டால் அதை சர்க்கார் ஏற்றுக்கொள்கிறது. அவ்வாறு ஒப்பந்தம் ஏற்படாத இடங்களில்--மதுரை போன்ற இடங்களில்--தகராறுகள் ஏற்பட்டால், அவைகளை தீர்த்துவைக்கும் பொறுப்பை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது. மற்ற இடங்களிலும் அவ்வித ஏற்பாடு வேண்டும் என்று இரு தரப்பினரும் விரும்பினால் சர்க்கார் அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும்.

**Sri K. ANBAZHAGAN** : நம்முடைய நாட்டில் பொதுவாகவே உணவுப் பற்றுக்குறையும், வேலையில்லாத் திண்டாட்டமும் வேலை செய்பவர்களுக்குப் போதுமான ஊதியம் கிடைக்காத சூழ்நிலையும், அவர்களுடைய உடல் நலக் குறைவும் போதுமான அளவு வைத்தியப் பாதுகாப்பின்மையும், உழைக்கும் சக்தி குறைவும் ஆகிய காரணங்கள் நம் நாட்டுத் தொழிலாளர்கள் பிற நாட்டுத் தொழிலாளர்களுக்கு ஒப்ப உழைக்க முடியாத நிலையில் இருக்கின்றனர். இந்த நிலையில், பிற நாட்டு தொழிலாளர்களின் வேலை நேரத்தை விட இவர்களுடைய வேலை நேரம் குறைவாக இருக்கவேண்டியது நியாயமாக இருக்க அதற்கு பதிலாக அதிகமா இருக்கும் நிலையை சர்க்கார் மாற்றியமைக்குமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. பிற நாடுகளில் உள்ள வேலை நேரத்தைவிட இந்நாட்டில் அதிகவேலை நேரம் இல்லை. 48 மணி நேர வேலை என்பது ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் இருக்கிறது. ஆஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் 40 மணி நேர வேலை இருக்கிறது. ஆகவே கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN** : கோயம்புத்தூரில் உள்ள பல மில்களில் 7 மணி நேர வேலை இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படி என்றால், எல்லா மில்களிலும் இதே நேரத்தைக் கொண்டுவருதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : மூன்றாவது சுற்றில் தான் 7 மணி நேர வேலை. மற்ற நேரத்தில் 8 மணி நேர வேலை.

**Sri P. S. CHINNADURAI** : பஞ்சாலை முக்கூட்டு விசாரணைக் கமிட்டியினர் மூன்று சுற்று நடைபெறுகிற நேரங்களில் 7 மணி நேர வேலை வைக்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருப்பது இந்த அரசாங்கத்திற்கு நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த சிபாரிசுகளை அமுலுக்குக் கொண்டுவருவதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : நான் முதலில் சொன்னது போல் இந்த விஷயத்தில் முதலாளிகளும் தொழிலாளர்களும் சேர்ந்து ஒரு முடிவிற்கு வர வேண்டும். சர்க்கார் சட்டமியற்ற வேண்டுமென்றால், எல்லாத் தொழிற்சாலைகளிலும் நடைமுறையில் செய்யக்கூடிய காரியத்தைத் தான் சர்க்கார் செய்யமுடியும். எல்லாத் தொழிற்சாலைகளிலும் வேலை நேரத்தைக் குறைப்பது சரியல்ல என்று சர்க்கார் இப்போது நினைக்கிறது.

**Sri S. B. ADITYAN** : சர்க்காரில் வேலை செய்யும் தொழிலாளர்களிடம், முக்கியமாக சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களிடம், நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் வீதம் வாரத்திற்கு 84 மணி நேரம் வேலை வாங்கப்படுகிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இதை ஒரு தனிக் கேள்வியாக எனது நண்பர் கனம் ஸ்ரீ. மாணிக்கவேலுவிற்குப் போடும்படி கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன்.



28th October 1957]

**Sri S. B. ADITYAN** : **Arising out of the question relating to the enquiry into the affairs of the former Inspector-General of Police, I request that under Rule 39 of the Assembly Rules, half an hour debate may be allowed, as the report runs to 46 pages.**

Mr. SPEAKER : **In view of the No-Confidence motion that will be discussed for two days from today, the hon. Member who desires to refer to the enquiry as also others who disapprove of the Government's action in other matters are entitled to discuss those things under the No-Confidence motion.**

Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY.

Mr. SPEAKER : I have received notice of a No-confidence motion from the hon. Member, Sri K. R. Nallasivam, disapproving the action of the Government with regard to the Police firing in Ramanathapuram district. In view of the fact that the House is going to discuss Sri M. Kalyanasundaram's motion of No-confidence, I rule Sri Nallasivam's motion out of order. I do not give him permission to move it.

The hon. Member, Sri T. L. Sasivarna Thevar also has given notice of motions expressing want of confidence in the present Ministry and disapproving the policy of the present Ministry in connection with the Police action in Ramanathapuram district. The hon. Member is entitled to raise these issues during the discussion on Sri Kalyanasundaram's motion. Therefore, I rule his motions also out of order.

## III.—ADJOURNMENT MOTIONS

### (1) RAMANATHAPURAM INCIDENTS.

Mr. SPEAKER : The hon Member, Sri N. K. Palanisami has given notice of the following motions, dated 25th September 1957 to adjourn the House to discuss urgent matters of public importance, viz.—

"(1) that the House be adjourned to discuss an urgent matter of public importance, viz., the failure of the Government in not taking prompt steps to avert communas clashes in the Ramanathapuram district;

(2) that the House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the failure of the Government to order a judicial enquiry into the police firings in Ramanathapuram district in September 1957."

[Mr. Speaker] [28th October 1957

As the subject-matter of these motions can be discussed during the debate on Sri Kalyanasundaram's motion, I rule them out of order.

Then, Sri K. Sattanatha Karayalar has also given notice of an adjournment motion, viz.—

"that this House stands adjourned to discuss the serious situation that prevails after the police firings in Ramanathapuram district."

I disallow this for the same reasons for which I have disallowed the previous motions.

### (2) VIOLENT SPEECHES OF SRI E. V. RAMASWAMI NAICKER, LEADER OF THE DRAVIDA KAZHAGAM.

MR. SPEAKER: I have also received notice of an adjournment motion from Sri T. S. Ramaswami Pillai to discuss a definite matter of urgent public importance, viz.—

"the situation arising out of the violent speeches of Sri E. V. Ramasamy Naicker, the Leader of the Dravida Kazhagam, at Tiruchirappalli on 18th October 1957."

I do not see why this should not be discussed when we take up the No-confidence motion of Sri M. Kalyanasundaram. In view of the ample scope the No-confidence motion provides, I do not permit the moving of the adjournment motion. I rule it out of order.

## II.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY—*cont.*

MR. SPEAKER: Now, I would request Sri Kalyanasundaram to move his motion. I would like to make one or two observations before he does so. I have allotted two days for the discussion of his motion by the House. Well, if Members feel that two days will be enough, well and good. But if in the course of the discussion today and to-morrow, it is found two days will not do, I am prepared to allow some time more on the third day also. This being a very important subject, I do not propose to put any time-limit on the speeches. But I should request hon. Members to make them as short as possible and not to repeat the same arguments unnecessarily. My last appeal would be this. We are going to discuss a very, very important matter and in the course of the discussion, there is bound to be much heat and also difference of opinion. My only appeal is that we should discuss the subject dispassionately, keeping the level of debate very high.

SRI K. VINAYAKAM: On a point of information, Sir. Arising from what you have just now said, Sir, if hon. Members repeat the same points or if there are unnecessary, non-utilitarian and redundant arguments, will the Chair be pleased to pull up the Members and call them to order?



28th October 1957]

MR. SPEAKER: I am afraid, Sri Vinayakam has taken two things for granted which is very wrong. First of all, he thinks that hon. Members, in spite of my appeal, will repeat points unnecessarily. It is bad. His second suggestion is equally bad. He thinks that the Chair will not be able to pull up Members if they repeat arguments. (Laughter.)

Sri Kalyanasundaram will now move his motion.

SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

"This House expresses its want of confidence in the Ministry of which Sri K. Kamaraj Nadar is the Chief Minister."

SRI T. L. SASIVARNA THEVAR: I second it.

SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு முக்கியமான தீர்மானம். இது கட்சி விருப்பு வெறுப்புகளுக்கோ, அல்லது அரசியல் சுயநலத்துக்கோ இடம் கொடுக்காமல் விவாதிக்க வேண்டிய ஒரு தீர்மானம் என்பதை நான் உணர்த்துகிறேன். சற்று முன்பு சபாநாயகர் அவர்கள் சுட்டிக்காட்டியதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். என்னுடைய அபிப்பிராயமும், என்னுடைய வேண்டுகோளும் கூட இந்தப் பக்கத்திலுள்ள அங்கத்தினர்களும், அந்தப்பக்கத்திலுள்ள அங்கத்தினர்களும், கட்சி விருப்பு வெறுப்பு அற்ற முறையில் இந்தத் தீர்மானத்தின் மீது விவாதம் நடத்தி, நம் சபையின் கண்ணியத்தை உயர்த்தவேண்டும் என்பதுதான். நான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருப்பதன் நோக்கமெல்லாம், இந்த மந்திரி சபையினுடைய குறைபாடுகள், இந்த மந்திரி சபையினுடைய பலவீனங்கள், இந்த மந்திரி சபையினுடைய தவறுகள் பூராவிலும் விரிவான கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காக அல்ல. அதை விட இப்போது முக்கியமாக, நம் ராஜ்யத்திலும் சரி அல்லது நம் நாட்டிலும் சரி, சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு ஒரு சம்பவம், நம் தமிழ் நாட்டில், நம் தமிழ் நாட்டின் பேருக்கும், நம் தமிழ் நாட்டின் அந்தஸ்திற்கும், நம் தமிழ் நாட்டின் கண்ணியத்திற்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்திருக்கிறது. இந்த சர்க்கார் இதில் எப்படிப் பொருப்புள்ளவர்கள் என்பதையும் அவர்கள் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் விவாதிக்க வேண்டுமென்பது தான் என்னுடைய குறிக்கோள். இங்கு நடத்தப்படும் பிரசங்கங்கள், இங்கு கூறப்படும் குற்றச் சாட்டுகள் எல்லாம் இந்த அடிப்படையில்தான் இருக்கும் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இது சம்பந்தமாக என்ன நடந்திருக்கிறது என்ற விவரங்களை நேற்று அதாவது கடந்த கூட்டத்தில் நம்முடைய உள்நாட்டு விவகார அமைச்சர் அவர்கள் இந்தச் சபையின் முன்பு சமர்ப்பித்த அறிக்கை நம் சபையின் முன்னால் இருக்கிறது. அவர்கள் கூறியிருக்கிறபடி, ஐந்து இடங்களில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் மட்டும் 14 பேர்கள் இறந்திருப்பதாக எனக்கு விவரம் கிடைத்திருக்கிறது. அப்படி இறந்தவர்கள் எண்ணிக்கை 13 என்று கனம் மந்திரிகள் குறிப்பிட்டார்கள். எனக்குக் கிடைத்த விவரம் ஒரு எண்ணிக்கை அதிகம் என்பது. வித்தியாசம் அதிகமில்லை. ஆகையால் இதை ஒரு பிரச்னையாக்க விரும்பவில்லை. மொத்தம் இந்த சம்பவங்களினால் இறந்திருப்பவர்கள் 40 பேர்கள். ஒரு கலவரம் என்ற பெயரிலே இவ்வளவு பேர்கள் பலியிடப்பட்டிருக்கிறார்கள். இன்னும் ஆயிரக்கணக்கான வீடுகள் தீக்கிரையாகியிருக்கின்றன. இவ்வளவு பெரிய நிகழ்ச்சி தமிழ் நாட்டிலே எந்தக் காரணத்தைக் கொண்டும், மற்றப் பகுதிகளிலே வகுப்புக் கலவரங்கள் என்ற பெயரில்வெகுத் தீவிரமாக நடந்தபோதும் கூட, நடக்காமல் இங்குள்ள மக்கள் வெகு நிதானத்துடனும் வெகு விவேகத்துடனும் நடந்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இந்த மாதிரி ஜாதி

வித்தியாசங்கள் இருக்கின்றன. நான் இல்லை யென்று சொல்லவில்லை. ஏற்றத்தாழ்வுகளின் கொடுமைகள் இருக்கின்றன. இந்த ஏற்றத் தாழ்வுகளைப் போக்க வேண்டுமென்று அறிவாளிகள் மிகவும் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். அதற்கான வேலையைகளை செய்து வந்திருக் கிறார்கள். அதற்காகச் சட்டம் இயற்றி வந்தும் இருக்கிறோம் இருந்தாலும் இவ்வளவு பெரிய கலகம் நிகழ்ந்திருப்பதாகச் சமீப கால சரித்திரத்திலே எதுவுமில்லை. இந்த நிகழ்ச்சி மிகவும் முக்கியமானது. இந்த விஷயத்தில் மந்திரி சபைக்கு எந்த அளவிற்குப் பொறுப்பு இருக்கிறது என்பதில் மக்கள் மத்தியிலும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் அவர்களிடத் திலும் அபிப்பிராயத்தில் எந்த விதமான வித்தியாசமும் இல்லை. ஏன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே அபிப்ராயத்தில் வித்தியாசம் இல்லை என்பதை யாரும் மறுக்கவோ, அல்லது மறைக்கவோ முடியாது. இந்த விவாதத்தில் பேசுவதிலும் அல்லது அதன் மீது வோட்டு செய்வதிலும் வேண்டுமானால் அவர்கள் ஒரு மாதிரியாக நடந்துகொள்ளலாம். ஆனால் ஒவ்வொருவரும் தனி நபராக, அவர்களுடைய மனசாட்சிக்கொப்ப அவர் களுக்கு ஒரு அபிப்பிராயம் இருக்கிறதென்பதை இந்தச் சபையின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஸார், இந்த சம்பவங்கள் குறிப்பாக ஹரிஜனங்களுக்கும் தேவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட சச்சரவின் காரணமானது என்று சொல்லப்படுகிறது. தேவர்கள் என்பது ஒரு பட்டப் பெயர். முக்குலத்தோர் என்பது மாதிரி கள்ளர், மறவர், அம்பலகாரர் ஆகிய மூன்று பிரிவினரும் தேவர்களாவர். தஞ்சை, திருச்சியில் குறிப்பாக வாழுகின்றார்கள். இப்படி இந்த மூன்று பிரிவினர்களில், மறவர்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவு என்பது சர்க்காருடைய வாதம். சர்க்காருடைய அறிக்கை அதே அடிப்படையில், அதே தொனியில்தான் இருக்கிறது. இதில் நம்முடைய அமைச்சர் அவர்கள், நம்முடைய போலீஸ் அமைச்சர் அவர்கள், 1930, 1932-ம் வருஷத்திலிருந்த நிலைமையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். 1930, 1932-ம் வருஷத்திய நிலைமையைப் பற்றி மட்டுமல்ல ; அவர்கள் குறிப்பிட்டிருக்கிறபடி ராமநாதபுரம் ஜில்லாவில் முதுகுளத்தூர் தாலுகா மட்டுமல்லாமல் மற்ற ஜில்லாக்களிலும் கூட, 1957-ம் வருஷத்திலும் கூட, இந்தமாதிரியான நிலைமை இருக்கிறது என்பதை நான் வெட்கத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. எதிர் கட்சியில் இருக்கக்கூடிய ஜன நாயக காங்கிரஸாகட்டும், சுயேச்சைகளாகட்டும், திராவிட முன்னேற்றக் கழகத்தாராகட்டும், கம்யூனிஸ்ட் கட்சியாகட்டும், சோஷலிஸ்ட் கட்சியாகட்டும், பிரஜா சோஷலிஸ்ட்டு கட்சியாகட்டும், காங்கிரஸ்காரர்களோடு, இப்படி ஹரிஜனங்களுக்கு இழைக்கக்கூடிய தீங்குகளை, ஹரிஜனங்களுக்கு இந்த சமுதாயத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகளைப் போக்க தோளோடு தோள் நின்று, அமைதியான முறையில், மிகவும் சௌஜன்யமான முறையில் நீண்ட நாளாக ஒத்துழைத்து வந்திருக்கிறோம், இனியும் ஒத்துழைக்கத் தயார் என்று நான் முதலில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஹரிஜனங்கள் நம் தேசத்திலே சுமார் 6 கோடி பேர்கள் இருக்கிறார்கள். நம் ராஜ்யத்தில் ஒரு கோடிக்குக் கொஞ்சம் குறைவாக இருக்கிறார்கள். அவர்களிடத்திலே பல பிரிவுகள் இருக்கின்றன. அவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் நில புலன்களில் வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். மக்களுக்கு உணவுப்பொருள்களை உற்பத்தி செய்யும் உழவுத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்ற பாரதி அவர்களின் வாக்குப்படி மக்கள் வாழ்வதற்காக வேண்டிய ஒரு செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள். பாரத நாட்டிலே, யாராயிருந்தாலும் சரி, இவர்கள் ஈடுபட்டிருக்கின்ற இந்தத் தொழிலை வேறு யாரும் செய்ய முடியாது. அவர் களுக்கு முழு உரிமைகளையும் வழங்கியாகவேண்டுமென்பதில் அபிப்பிராய வித்தியாசம் இருக்காது. இந்தக் கட்சி அவர்களுடைய உரிமைகளைப் பாது காப்பதில் முன்னணியில் இருக்கிறது என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் இருப்போம். இதற்கு எங்கள் கட்சி





அங்கத்தினர்கள் உத்சாகம் காட்டி வருகிறார்கள். இன்னும் முன்னணியில் இருப்போம் என்று இங்குள்ள ஹரிஜன அங்கத்தினர்களுக்கு மட்டுமல்லா மல் ஹரிஜன சமூகத்திற்கே சொல்லிக்கொள்ளுகிறேன்.

இந்தப் பிரச்சனை மிகவும் சிக்கலான ஒரு பிரச்சனை. ஒரு குழந்தை இருக்கிறது. அதன்மேல் பாம்பு இருக்கிறது. பாம்பையும் கொல்ல வேண்டும், குழந்தைக்கு ஒன்றும் விபத்து ஏற்படக்கூடாது. இந்த அரசியல் சூதாட்டத்தின் காரணமாக இந்த ஹரிஜனங்களை சிக்கவிட்டிருக்கிறார்களே என்பதைப் பார்க்கும்போதுதான் மிகவும் வருத்தமாக இருக்கிறது. பாம்பையும் அடிக்கவேண்டும், குழந்தைக்கு ஒன்றும் ஆகக் கூடாது என்பது போல் இது மிகவும் சிக்கலான ஒரு பிரச்சனையாக இருக்கிறது. இங்குள்ள ஹரிஜன அங்கத்தினர்களை மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த சபையில் இந்தப்புரத்தில் அல்லது அந்தப்புரத்தில், எந்தப் புரத்தி லிருந்தாலும் சர்க்கார் சொல்லக்கூடிய இந்த வாதங்களினால் உணர்ச்சி வசப்படாமல் சிந்திக்கவேண்டும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: "குழந்தையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது" போலிருக்கிறது.

**Sri M. KALYANASUNDARAM**: இந்தப் பக்கத்தில் அந்த மாதிரி இல்லை. அந்தப்பக்கத்தில்தான் குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலை யும் ஆட்டுவது. அப்படி இல்லை என்றால் பதில் சொல்லுங்கள். நிதி அமைச்சர் அவர்களே பதில் சொன்னால் ரொம்ப சந்தோஷம். போலீஸ் அமைச்சர் அவர்களும் அறிவிலும் ஆற்றலிலும் நிதி அமைச்சருக்கு ஒன்றும் குறைந்தவரல்ல.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ**: கனம் சபாநாயகர் அவர் களே, ஒரு அங்கத்தினரர் பிற அங்கத்தினர்களுக்கு புத்தி கூறும் விதத்தில் இந்தச் சபையில் சொல்லலாமா?

**Mr. SPEAKER**: எல்லா அங்கத்தினர்களும் புத்தி கூறுவதில் தவறு ஒன்றுமில்லை. அந்த புத்திமதியைக் கேட்டாலும் கேட்கலாம். அல்லது கேட்காமலும் இருக்கலாம். அதில் தவறு இல்லை.

**Sri M. KALYANASUNDARAM**: சிலருக்கு புத்தி சொன்னால் பிரயோஜனம் இல்லை.

**Mr. SPEAKER**: அதைப் பற்றிப் பேச வேண்டாம்.

**Sri M. KALYANASUNDARAM**: ஸார், இப்போது இந்தத் தீர்மானத்தை நான் கொண்டுவருவதன் நோக்கம். . . . .

**Sri A. CHIDAMBARANATHA NADAR**: ஸார், கனம் கல்யாண சுந்தரம் அவர்கள் பேசுகையில் "அந்தப்புரம்" என்று பேசுகிறார். "அந்தப்புரம்" என்றால் பெண்கள் இருக்கும் இடம் என்று அர்த்தம்.

**Mr. SPEAKER**: "அந்தப்புரம்" என்றால் என்ன அர்த்தம் என்று தயவு செய்து அந்த அங்கத்தினருக்குச் சொல்லுங்கள்.

**Sri P. S. CHINNADURAI**: வல்லினத்திற்கும் இடையினத்திற் கும் அங்கத்தினருக்கு வித்தியாசம் தெரியவில்லை போலும்.

**Sri M. KALYANASUNDARAM**: இந்த சபையில் அந்தப்புரம் கிடையாது. அவர் மலையாளத்தில் அதிகப் பழக்கமுடையவராதலால், அப்படிச் சொல்லுகிறார். அவர் தமிழை நிதானத்தோடு கற்றுக்கொள்ள வேண்டும்.

**Mr. SPEAKER**: இருப்பது இரண்டு நாட்கள். அங்கத்தினர்கள் பேசும்போது குறுக்கே பேசினால் காலம் வீணாகிவிடும். அங்கத்தினர்கள் பேசும்போது முக்கியமான சமாச்சாரம் இருந்தால் மட்டும் பேசவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏற்பாடு செய்தார்கள். அவர்களாவது, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே. டி. கே. தங்கமணி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கே. முத்து, சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே. அப்பண்ணராஜ், பார்வேட் ப்ளாக்கைச் சேர்ந்தவரும் இந்த சட்டசபையின் அங்கத்தினருமான மூக்கையா தேவர் அவர்கள், ப்ரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வி. கே. தாஸ், இந்த ஐந்து பேர்களும் கடைசி வரையில் கனம் தத்தாருடன் சேர்ந்து சுற்றுப் பிரயாணம் செய்து ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று தங்களுடைய அறிக்கையையும் கடைசியில் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதை கனம் மந்திரிக்கும் அனுப்பி இருக்கிறார்கள். நிலைமை இப்படி இருக்கும்போது கனம் மந்திரி அவர்கள் தன்னுடைய அறிக்கையில் கனம தத்தார் சுற்றுப் பிரயாணத்தின்போது இரண்டு பேர்கள் போய்விட்டார்கள் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. யாராவது இரண்டு பேர் எந்தக் கட்சியிலிருந்தும் வந்திருக்கலாம் அவர்கள் பின்பு போயிருக்கலாம். இந்த அளவில் கனம் மந்திரி அவர்கள் உண்மையைச் சொல்ல வேண்டுமே தவிர அறைகுறையாக விஷயங்களைச் சொல்லக்கூடாது. எதிர் கட்சிக்காரர்களை குறைகூறும்பொருட்டு விஷயங்களை கூறக்கூடாது. கனம் தத்தாருடன் சுற்றுப் பிரயாணம் செய்த கனம் மூக்கையா தேவர்—நம்முடைய சபையின் அங்கத்தினர் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்—அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே இந்த அறிக்கையைப் பார்த்தால் எதிர்க்கட்சியை குறை கூற வேண்டும் என்று தயாரிக்கப்பட்ட அறிக்கை என்று கூற வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்தபடியாக இந்த அறிக்கையின் தரத்தைப்பற்றி எடுத்துக் காட்ட வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதன் பிறகு இதன் கருத்துக்களுக்குச் செல்லலாம். 1930–32-லிருந்தே இந்தப் பகுதியில் குறிப்பாக ஹரிஜனங்களுக்கும், மறவர்களுக்கும் இடையில் பிரத்யேக சூழ்நிலை இருந்ததாக கனம் மந்திரி அவர்கள் நம்மிடையே சொல்லுகிறார். அது எவ்வளவு தூரம் உண்மை என்பதைப் பார்க்கவேண்டும். 1930–32-ல் ஏதாவது நிகழ்ந்திருக்கலாம். அந்தக் காலத்தில் ஏதாவது ஏற்பட்டிருக்கலாம். அதன் உண்மை என்ன என்ற விவரங்களில் இப்பொழுது இறங்கவேண்டிய அவசியம் இல்லை. 17 வருஷம் கழிந்த பிறகு நடந்துள்ள சம்பவங்களைப்பற்றி குறிப்பிடுகிறார்கள். இந்த 17 வருஷ காலமாக நடந்த சம்பவங்களைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிடவில்லை. ஆனால் 1949-ல் நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடுகிறார். வீராம்பல், இளஞ்சாம்பூர் கிராமங்களில் நடந்த சம்பவங்களைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் குறிப்பிடுகிறார். அந்த கிராமங்களிலுள்ளவர்கள் பெரும்பாலும் ஹரிஜனங்கள்தான். அங்கு நடந்த சூழ்நிலை என்ன என்பதை கவனிக்க வேண்டும்.

**SRI S. NAGARAJA MONIGAR** : On a point of order, Sir. Is this a discussion on the no-confidence motion or a discussion on the Hon. Minister's report ?

**MR. SPEAKER** : In a no-confidence motion, anything can be discussed which is relevant to the subject of the confidence in the ministry. May I request hon. Members not to raise points of order unnecessarily ? It only means prolongation of the debate.

**SRI M. KALYANASUNDARAM** : வீராம்பல் கிராமத்தில் பெரும்பாலும் ஹரிஜனங்கள்தான். அங்கே அவர்களுக்கும் நிலம் உண்டு மறவர்களுக்கும் நிலம் உண்டு. அங்கே இரண்டு இனத்தவர்களும் நிலச் சுவாந்தார்களாக இருக்கிறார்கள். அங்கு நிலம் இல்லாத ஹரிஜனங்களும் தேவர்களும் இருக்கிறார்கள். 1949-ம் வருஷத்தில் இந்த இரண்டு கட்சிகளுக்கும் நிலத்தின் வரப்பு சம்பந்தமாக கலவரம் நடந்தது. நிலம் சம்பந்தமாக ஏற்பட்ட தகராறேயொழிய ஜாதி வித்யாசத்தால் ஏற்பட்ட கலவரம் அல்ல. அப்படிப்பட்ட கலவரம் மற்ற ஜில்லாக்களிலும் நடப்பது சகஜம் தான். இப்படிப்பட்ட தகராறுகள் மற்ற இடங்களில் நடப்பது

இல்லையா ? இங்கு மட்டும் அப்பொழுது நடந்ததை வகுப்புக் கலவரம் என்று சொல்ல வேண்டியதன் காரணம் என்ன ? 1949-க்கு பிறகு 1956-57 தேர்தலுக்குப் பிறகு தான் அங்கு டென்ஷன் ஜாஸ்தியாகி இருக்கிறது என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லுகிறார். அதன் காரணம் என்ன என்பது தெரியவில்லை. அது வரையிலும் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதற்கான விவரமே தெரிய வில்லை. ஹரிஜனங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று சொல்வதற்குக் காரணம் என்ன ? ஆகவே உண்மையை விளக்காமல் விஷயங்களை சொல்வதாக இருக்கிறது.

1930–32-க்குப் பிறகு 1936-ம் வருஷம் காங்கிரஸ் மகா சபை ஸ்தல ஸ்தாபன தேர்தலில் பங்கெடுத்துக்கொண்டது. அப்பொழுது ஸ்ரீமான் முத்துராமலிங்க தேவரை காங்கிரஸ் அபேட்சகராக அந்தத் தொகுதியில் நிறுத்திவைத்தார்கள். 1937-ம் வருஷத்தில் கூட கனம் முத்துராம லிங்க தேவரை காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தி வைத்து சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இப்பொழுது நடந்து வரும் ஜாதி துவேஷ கலவரத்துக்கு தலைவராக இருக்கிறார் என்று சொல்லக்கூடிய கனம் முத்துராமலிங்கத் தேவரை 1946-ம் வருஷம் காங்கிரஸ் அபேட்சக ராக நிறுத்தப்பட்டு அவரும் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார். ஆகவே 1946-ம் வருஷத்தில் நடைபெற்ற தேர்தலில் கூட அவர் காங்கிரஸ் அபேட்சகராக இருந்து தேர்தலில் வெற்றி பெற்று இந்த சட்ட சபைக்கு அங்கத்தினராக வந்திருக்கிறார். இதை ஒருவரும் மறுக்க முடியாது. 1955-ம் வருஷத்திற்குப் பிறகு கொடுத்திருக்கக் கூடிய விவரங்களைப் பார்த்தால் ஹரிஜனங்களுக்கும் மறவர்களுக்கும் ஏதோ அதிகப்படியாக தகராறுகள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அங்கு ஜாதி அடிப் படையில் கலவரங்கள் நடைபெற்றன என்றும் அதுவும் ரொம்பவும் தீவிரமாக நடைபெற்றது என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் அதைப் போலுள்ள ஜாதிச் சண்டைகள் மற்ற ஜில்லாக்களில் நடைபெறவில்லையா என்றும் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதை யும் அறிய விரும்புகிறேன். மற்ற இடங்களில் ஜாதிச் சண்டைகள் நடந்து எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் இருக்கும்போது இந்த இடத்தில் மட்டும் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவானேன். மற்ற ஜில்லாக்களில் எடுத்துக் கொள்ளாமல் இங்கே எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன ?

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களோ, காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களோ ஹரிஜனங்கள்பால் நின்று அவர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காக அங்குள்ள மற்ற மேல் ஜாதியார்களோடு ஏதாவது போராட்டம் நடத்தினார்களா ? இயக்கம் நடத்தினார்களா ? அந்த முறையி யில் ஹரிஜனங்களுக்கும் தேவர்களுக்கும் இடையே கலகங்கள் நடந்தன என்று சொல்ல முடியுமா என்று கேட்கிறேன். ஆகையால், [illegible] அங்கு ஜாதிக் கொடுமை இருந்து அந்த ஜாதிக் கொடுமையின் விளைவாக ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்கள் உரிமைக்காக போராடியதன் விளைவாக கலகம் ஏற்பட்டது என்பதற்கு சம்பவங்கள் கொடுக்க முடியவில்லை. அப்படி யிருக்க மந்திரி அவர்கள் சொல்லக்கூடிய வாசகத்திலிருந்து எப்படி எடுத்துக்கொள்வது என்று எனக்குப் புரியவில்லை.

ஜாதி ஏற்றத்தாழ்வு இல்லாமல் இல்லை. ஆனால், மற்ற ஜில்லாக் களில் இருப்பதைவிட அங்கு எப்படி விசேஷமாக இருக்கிறது ? " அங்கு இருக்கக்கூடிய தேவர்கள், மறவர்கள் மிகக் கடுமையாக இருக்கிறார்கள், அங்கு இருக்கக்கூடிய ஹரிஜனங்கள் மிக முரடர்களாக இருக்கிறார்கள் " என்று காரணம் காட்டினார்களா ? எல்லா கிராமங்களிலும் ' சிவில் டிஸபிலிடிஸ், சட்டம் அமுலில் இருக்கிறது. சேலம், திருச்சி, கோயமுத்தூர், வடாற்காடு, செங்கற்பட்டு போன்ற ஜில்லாக்களிலும் ஹரிஜனங்களுக்காக சட்டம் இருந்தாலும் கூட, சில ஊர்களில் ஹரிஜனங்கள் கோயிலில் போக முடியுமா ? சில தெருக்களில் ஹரிஜனங்கள் செருப்பு போட்டுக் கொண்டு போகமுடியுமா ? இம்மாதிரி சம்பவங்கள் நம்முடைய கவனத்திற்கு வரவில்லையா என்று நான் கேட்கிறேன்.



இன்னொரு சம்பவம், 1956-ம் வருஷத்தில் நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் திரு. காமராஜ் நாடார் முதலமைச்சராக இருக்கும் போதே வேறொரு கிராமத்தில் ஏற்பட்டது. அந்த கிராமத்தினுடைய பெயரைச் சொன்னால் புரிந்துகொள்வார் என்று நினைக்கிறேன். அதாவது, பட்டிவீரன்பட்டி கிராமத்திலே ஒரு ஹரிஜன வாலிபன், செகண்டரி கிரேடு பயிற்சிபெற்ற ஆசிரியன். மந்திரி திரு. கக்கன் அவர்களுக்கு விவரம் நன்றாகத் தெரிந்திருக்கும். ஹரிஜன் வகுப்பைச் சேர்ந்த அந்த வாலிபன் மேல் வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணை—எந்த மேல் ஜாதி என்று நான் குறிப்பிட விரும்பவில்லை—மறவர் அல்ல என்று மட்டும் சொல்ல முடியும். அந்தப் பெண்ணினுடைய இஷ்ட பூர்வமாக மணந்து கொள்ளுகிறான். படித்த வாலிபன், ஹரிஜனங்களை முன்னேற்றத்திற்குத் கொண்டுவர விரும்புகிறான். ஹரிஜனங்களை பொருளாதாரத் துறையிலும் கலாசாரத் துறையிலும் உயர்த்திவர முயற்சிக்கிறார்கள். அப்படி உயர வேண்டுமென்று வாலிபன் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்யக்கூடிய காலத்தில், அதற்கு அனுமதி கிடைக்கவில்லை. அந்தச் சமயத்தில் போலீ சுக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் சொல்லி முறையிட்டும் பாதுகாப்பு கிடைக்காததால், வேறு சில பேர்கள் பாதுகாப்பு கொடுத்ததன்பேரில் அந்தக் கல்யாணம் நிறைவேறியது. அதன் விளைவாக அந்தக் கிராமத் திலிருக்கும் பல நூற்றுக்கணக்கான ஹரிஜன வீடுகள் தூள் தூளாக்கப் பட்டன. அந்த விவரம் சர்க்காருக்குத் தெரியாதா ? அதிலே என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

அதேபோல் 1957-ம் வருஷத்திய தேர்தலுக்குப் பிறகும் பல எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களுடைய குறிப்பாக சட்டநாதக் கரையாளர் அவர்கள் ஜெயித்த தொகுதியிலும் ஹரிஜனங்கள் காங்கிரசுக்கு வோட்டு அளிக்க வில்லை என்ற காரணத்திற்காக ஹரிஜனங்களுக்கு இழைக்கக்கூடிய இம்சை கள் பற்றி புகார்கள் வந்திருக்கின்றனவே அவைகளின்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டன ? அம்மாதிரி விவரங்கள் இந்த அறிக்கையிலும் கொடுக்கப்படவில்லை. இந்த ஒரு ஜில்லாவில், குறிப்பாக முதுகுளத்தூர் தாலுகாவின் சம்பவங்களைப் பற்றித்தான் அதிகமாக நம்முடைய மந்திரி அவர்களுடைய அறிக்கையில் காண்கிறோம். அதிலிருந்து நாம் என்ன முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது ? 1952-ம் வருஷம் முதன் முதலாக காங்கிரசை ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் அவர்களும் அவரைச் சார்ந்த பார்வர்டு பிளாக்கைச் சேர்ந்தவர்களும் அந்தப் பகுதியில் எதிர்த்து நடவடிக்கையில் இறங்கிய வருஷம். அந்த வருஷத்திலிருந்து எதிர்க் கட்சியைச் சார்ந்த ஸ்ரீ முத்துராமலிங்க தேவருடைய பார்வர்டு பிளாக்கின் செல்வாக்கையும் அவருடைய தனிப்பட்ட செல்வாக்கையும் ஒடுக்க வேண்டு மென்பதை நோக்கமாகக் கொண்டு மந்திரிசபை இந்த நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது. அவர்களுக்கு அந்த நோக்கம் இருக்கிறது என்று நான் குற்றம் சாட்டினால் அதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்கிறேன்.

1952-ம் வருஷத்திய தேர்தலிலே ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் அவர்கள் சட்டசபை, பார்லிமெண்டு ஆகிய இரண்டுக்கும் போட்டியிட்டார். இரண்டிலும் வெற்றி பெற்றார். பார்லிமெண்ட் ஸ்தானத்தை ராஜினமா செய்து விட்டு சட்டசபை பதவியை வைத்துக்கொண்டார். உப தேர்தலிலும் ஸ்ரீ முத்துராமலிங்க தேவரின் ஆதரவு பெற்றவர் தான் ஜெயித்திருக்கிறார்.

1957-ம் வருஷத்திய பொதுத் தேர்தலிலும் ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் அவர்களும் அவர்களுடைய சகாக்களும்தான் அந்த இடத்தில் ஜெயித்திருக் கிருக்கிறார்கள். அந்த முறையும் இரண்டு ஸ்தானங்களிலும் அவர் வெற்றி பெற்றது நமக்குத் தெரியும். ஹரிஜனங்கள் சார்பாக அந்தப் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஸ்ரீ முத்துராமலிங்க தேவர், அவர்க ளுடைய ஆதரவு பெற்றவரே என்ற விவரமும் தெரியும். உப தேர்தலில் ஸ்ரீ சசிவர்ண தேவர், ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் அவர்களுடைய நண் பர்களிலே ஒருவர்—பார்வார்டு பிளாக்கைச் சேர்ந்தவர்—வெற்றியடைந்து இந்தச் சபையில் உட்கார்ந்திருப்பதும் சபையினர் அறிந்ததே. இம்மாதிரி

[Sri M. Kalyanasundaram] [28th October 1957

இரண்டு தேர்தல் காலத்திலும் நான்கு தேர்தல்களிலும் ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் அவர்கள் காங்கிரசை தைரியமாக, உறுதியாக எதிர்த்து வெற்றி பெற்று வருவதைக்கண்டு ஆத்திரமடைந்து இந்தக் காரியங்கள் தூண்டிவிடப்பட்டன என்ற சந்தேகம் நிச்சயமாகியிருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டை நான் கொண்டுவரவேண்டும் என்பதுதான் என்னுடைய தீர்மானத்தின் முக்கியமான நோக்கம். அங்கு நடந்தது வெறும் ஜாதிச் சண்டை அல்ல, அரசியல் நோக்கம் இருக்கிறது. அரசியல் நோக்கத்தைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு காரியம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

1957-க்குப் பிறகு ஏற்பட்ட நிலைமைகளைப்பற்றி குறிப்பிடக்கூடிய சமயத்தில் நம்முடைய போலீஸ் அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்? "இரண்டு வகுப்பார்களுக்கிடையே அங்கு மனோபாவம் சரியில்லை, நிலைமை நெருக்கடியாக இருந்து, ஜாதித் துவேஷப் பிரசாரம் தீவிரமாக இருந்து; காங்கிரசை ஆதரித்தவர்களின்மீது கடுமையாக மறவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள், அதிலும் முக்கியமாக ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தீவிரமாக பிரசாரத்தில் ஈடுபட்டார்" என்ற முறையில் சொன்னார்கள்.

SRI R. CHIDAMBARA BHARATHI: கனம் சபா நாயகர் அவர்களே, On a point of order, Sir, அரசியல் நோக்கம் இருக்கிறது என்பதாகச் சொன்னார்கள். எந்தக் கட்சியாருடைய அரசியல் நோக்கம் என்பதற்கு விளக்கம் கூறினால், மற்றவர்கள் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக இருக்கும். கனம் நண்பர் அவர்கள் விளக்கம் கூறுவார்களா?

MR. SPEAKER: That is not a point of order. The hon Member need not reply.

SRI M. KALYANASUNDARAM: "Hon. Members could appreciate from these incidents the explosive nature of the situation and the extent to which the Thevars of the area were conscious of their communal superiority. அப்படி அவர்களுடைய ஜாதி உயர்வைப்பற்றி தேவர்கள் உணர்வு பூர்வமாக விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று பிடிவாதமாக இருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. It was to these people that Sri Muthuramalinga Thevar had been making speeches designed to foment communal hatred and violence. I may refer to a few typical speeches of his" என்று மந்திரி அவர்களுடைய அறிக்கையில் சொல்லப்படுகிறது. இந்தச் சபையிலே பதில் சொல்வதற்கு சந்தர்ப்பம் இல்லாத ஒருவர் மீது, இம்மாதிரி ஒரு குற்றச்சாட்டை மந்திரி அவர்கள் கொண்டு வருவது சரியா என்று சிந்திக்கவேண்டும். அவரைச் சிறையில் தள்ளியிருப்பது ஒருபுறம் இருக்கட்டும். இந்தச் சபையில் அவர் பதில் சொல்ல சந்தர்ப்பம் இல்லை. அப்படியிருக்க குற்றச்சாட்டு கொண்டுவரலாமா? மந்திரிகள் செய்தால் எது செய்தாலும் சரியாக ஆகிவிடுமா? The king can do no wrong. என்பதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் எதிர்க் கட்சி அங்கத்தினருடைய யோசனையைக்கூட நான் கேட்கத் தயாராக இருக்கிறேன். இந்த சட்டசபையில் இருக்கும் அங்கத்தினர்களைத் தவிர இங்கே வேறு யாரைப்பற்றியும் யாரும் ஒன்றும் பேசக்கூடாது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கருதுகிறார்களா என்று சொல்லட்டும்.

SRI M. KALYANASUNDARAM: பேசக்கூடாது என்று சொல்லவில்லை. சில குற்றச்சாட்டுகள் கொண்டுவந்திருக்கிறார்கள். சிறையில் வைத்திருப்பதற்கு ஒரு சில காரணங்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இன்னும் சில சம்பவங்கள் கொடுக்கப்பட்டிருக்கலாம். அது "ஜுடிஷியல்" விசாரணையாக இல்லாதபடியால் அட்வைசரி போர்டு பரிசீலனை செய்யும் தருவாயிலிருக்கிறது. குற்றம் சாட்டியது தவறு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேனே தவிர, இந்தச் சபையில் இல்லாத யாரையும் பற்றிப் பேசக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஸ்தூலமான குற்றச்



28th October 1957] [Sri M. Kalyanasundaram]

சாட்டுக்கள் கொண்டுவந்திருப்பதைப்பற்றித்தான் நான் குறிப்பிடுகிறேன். அந்தக் குற்றச்சாட்டுகளை எனக்குத் தெரிந்தவரை நான் பரிசீலனை செய்ய விரும்புகிறேன்.

அவர் மேல் கொண்டுவந்திருக்கும் குற்றச்சாட்டு என்ன? பலாத்கார முறையிலே, ஜாதித் துவேஷத்தை (Communal hatred), ஜாதி வெறுப்பைப் பரப்புவதற்குள்ள முறையில் மக்களிடத்தில் பேசினார் என்பது குற்றச்சாட்டு. அந்தப் பிரசங்கங்களுக்கு உதாரணமாக, சாம்பிள் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"Speaking at Madurai on 12th May 1956, he declared that he would start a nation-wide violent struggle unless India quits the Commonwealth."

அவருடைய வகுப்புத் துவேஷத்துக்கும் பலாத்கார பிரசாரத்திற்கும் உதாரணம் காட்டப்படுகிறது என்னவென்றால், 1956-ம் வருஷம் மே மாதம் 12ந் தேதி மதுரையில்—முதுகுளத்தூரில் கூட இல்லை—ஒரு கூட்டத்தில் அவர் பிரசங்கம் பண்ணினாராம், "இந்தியாவானது காமன்வெல்த்தைவிட்டு வெளியேறாவிட்டால் இந்தியா பூராவும் பலாத்காரப் புரட்சி நடத்துவோம்" என்று. அப்படிப் பிரசங்கம் செய்தது உண்மையா பொய்யா என்பதைப்பற்றி நான் மறுக்கவில்லை. உண்மையாகப் பேசியிருக்கலாம், காமன்வெல்த்தைவிட்டு இந்தியா வெளியேறாவிட்டால் பலாத்காரப் புரட்சி நடத்துவோம் என்று. அது நம்முடைய தேசத்தில் எப்படி ஜாதி வெறியைப் புகுத்தியதாகும்? ஹரிஜனங்கள் பூராவும் காமன்வெல்த்தில் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்களா? அல்லது காமன்வெல்த்தில் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறவர்கள் எல்லாம் ஹரிஜனங்களா? காமன்வெல்த்தைவிட்டு வெளியேறாவிட்டால் பலாத்காரப் புரட்சி நடத்துவேன் என்று அவர் சொல்லியிருந்தால், அது எப்படி ஹரிஜனங்களை தேவர்களுக்கு எதிராகவோ, தேவர்களை ஹரிஜனங்களுக்கு எதிராகவோ தூண்டிவிட்டதாக ஆகும்? அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்பது என்னுடைய பகுத்தறிவுக்கு எட்டவில்லை. மந்திரிமார்கள் தான் சொல்லவேண்டும். நம்முடைய மந்திரிமார்கள் பலாத்காரத்தை நம்பாதவர்கள், அகிம்சையில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்கள், காந்திஜி சொன்ன அகிம்சையை கடைப்பிடிக்கக்கூடியவர்களாக இருக்கலாம். கள்ளர்? பலாத்காரப் பிரச்சாரம் செய்தார் என்று குற்றச்சாட்டு கொண்டுவந்து, அதற்காக அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்தால், அதை நான் ஆட்சேபிக்கமாட்டேன். ஆனால், காமன்வெல்த்திலிருந்து வெளியேறவேண்டுமென்பதற்காக பலாத்காரப் புரட்சி செய்வோம் என்று பிரசங்கம் செய்தார் என்றால் அது எப்படி "கம்யூனல் ஹேட்ரட்டை" உண்டு பண்ணியதாகும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இது ஹரிஜனங்களை அவமதிப்பதாகும். தேவர்களையும் அவமதிப்பதாகும்.

அடுத்த பிரசங்கத்தை எடுத்துக்கொள்ளலாம். "In June 1957, he made a speech at Abiramam in which he threatened the police officials that any mischief directed against him would result in serious consequences to the police. While addressing a public meeting at Tiruppuvanam Pudur on 10th July 1957, he said that Congressmen indulged in atrocities of all kinds, and that if they exceeded the limits, he would be prepared to commence a Third World War in Mudukulathur instead of in Kashmir.'

இதிலே இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று அவர் அபிராமத்தில் செய்த பிரசங்கம். அதில் போலீஸ் அதிகாரியைப்பற்றி சொல்லியிருக்கிறார். அதாவது "எனக்கு எதிராக—சட்டப்படி நடவடிக்கை அல்ல—ஏதாவது mischief விஷமம் செய்தால் அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும் ஜாக்கிரதை". இப்படிச் சொல்வதற்கு இந்த நாட்டிலே யாருக்கும் உரிமை இல்லையா? அது ஒரு குற்றமா? விளைவுகள் பிரமாதமாக இருக்கும் என்று தான் சொல்லியிருக்கிறார். தன் மீது எந்த போலீஸ் அதிகாரியும் சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் தனக்கு எதிராக "விஷமம்"

[Sri M. Kalyanasundaram] [28th October 1957

செய்தால் **dire and serious consequences** ஏற்படும் என்றுதான் சொல்லியிருக்கிறார். இவ்விதம் அவருக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் போலீஸ் அதிகாரிகள் விஷமம் செய்தால் அவர்களை கனம் முதலமைச்சர் "டிஸ்மிஸ்" செய்துவிடமாட்டாரா? இது தவறு என்றால் அப்படி விஷமம் செய்தவர்களுக்கு மந்திரி சபை பாதுகாப்பு அளிக்கும் என்று அர்த்தமா? அவருடைய இந்தப் பேச்சில் என்ன ஜாதி துவேஷம் இருக்கிறது என்பதை என்னால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை.

அடுத்தபடியாக **10–7–57**-ல் திருபுவனம் புதூரில் அவர் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் பிரசங்கத்தில், "காங்கிரஸ்காரர்கள் எல்லாம் அக்ரமங்கள் செய்து வருவதாக" சொல்லி இருக்கிறார். அவர் எல்லா காங்கிரஸ்காரர்களையும் ஒன்றாகச் சேர்த்து சொல்லியிருக்கிறார். அது தவறு. எல்லா மந்திரிகளும் அக்ரமம் செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருந்தால் நான் அதை ஆதரித்து இருப்பேன். "எல்லா காங்கிரஸ்காரர்களும்" என்று சொல்வது, அர்த்தமற்றது. அவர்களுடைய அக்ரமம் எல்லை மீறிப் போனால்—ஒரு எல்லையை நிர்ணயித்து இருக்கிறார். (காங்கிரஸ் கண்ணோட்டத்திலிருந்தும்கூட)—காஷ்மீருக்குப் பதிலாக முதுகுளத்தூரிலேயே மூன்றாவது உலக யுத்தத்தை ஆரம்பிக்க நேரிடும் என்று அவர் சொல்லியிருக்கிறார். அவர் அவ்விதம் பேசினாரா இல்லையா என்பது வேறு விஷயம். அப்படிப் பேசியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ”ஏனென்றால் அவர் இன்னமும் ஆசிய விடுதலை சேனையைப்பற்றியும் ஸுபாஷ் சந்திரபோஸ் இன்னும் உயிருடன் இருப்பதாகவும் பேசிவருகிறார். அவர் எவ்வளவு சேனை வைத்திருக்கிறார், எங்கு வைத்திருக்கிறார் என்பதும், அதெல்லாம் உண்மையா என்பதும் வேறு விஷயங்கள். (சிரிப்பு). வெற்றி அடைந்து விட்டதாக மந்திரிகள் சந்தோஷப்பட வேண்டாம். அவர் சொல்லியது என்ன? "மூன்றாவது உலக யுத்தம்" என்றால் யாருக்கு எதிராக? ஸ்ரீ காமராஜ நாடார் சர்க்காருக்கு எதிராகவா? இதற்கும் ஜாதித்துவேஷத்திற்கும் என்ன சம்மந்தம்? ஸ்ரீ தேவர் சொல்வதை எல்லாம் நான் ஆதரிப்பவனும் அல்ல. அவருக்கும் எங்களுக்கும் கருத்து வித்தியாசங்கள் உண்டு. (குறுக்கீடு) ஆனால் அவர் அக்ரமமாக தாக்கப்பட்டால் கண்டிப்பாக நாங்கள் அவரை காப்பாற்றுவோம். அரசாங்க அடக்கு முறையால் பாதிக்கப்படுகிறவர்கள் எல்லோருக்கும் நாங்கள் அனுதாபம் காட்டுவோம் என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உலக யுத்தம் என்றால் அதற்கு சேனைகள், படை வீரர்கள், துப்பாக்கிகள் முதலியவை தேவை. இவைகளை எல்லாம் ஸ்ரீ தேவர் தயார் செய்து விட்டாரா? உலக யுத்தம் என்று பிரசங்கத்தில் சொல்வதால் மட்டும் அதை நடத்திவிட முடியாது. அது ஒரு புறமிருக்க, அம்மாதிரி பிரசங்கங்களை தடை செய்வது அரசாங்கத்தின் நோக்கமா? அப்படி நோக்கமாயிருந்தால் அதைப்பற்றி ஆலோசனை செய்ய நான் தயார். ஒவ்வொரு கட்சியும் தன்னுடைய கட்சியின் நிலைமையை எடுத்துக் காட்டி ஜனங்களிடம் ஆதரவு பெற முயற்சிப்பார்கள். ஆனால் பல அரசியல் காரணத்திற்காக இப்படி ஆதரவு பெறச் செய்யும் பிரசங்கங்களை ஜாதி துவேஷம் என்று சொல்வது சரியா? என்பது என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

'On 16th September 1957 addressing a public meeting at Vadakkampatti, Sri Thevar referred to the communal strife raging in Mudukulathur and Paramakudi areas. Owviously the reference was to the incidents which had occurred at Arunkulam, Keelathooval, Veerambal, Ilanjambur, Irulandipatti and Sandakottai, between 10th September and 16th September 1957. He said that the Congress had chosen to fight a battle in the wrong place, that the residents of the locality are militant and have faced guns and bullets even as early as in the British regime. He added that his people in view of their experience gained in the past would not be afraid of the Police, the Special Police or the Army, and that if an attempt was made to control the situation by force, the



28th October 1957] [Sri M. Kalyanasundaram]

Government would be repaid in the same coin and force would be met by force. The people, he stated, would also freely use fire-arms and civil war would be fought to establish "Dharma" in the country '.

இந்த பிரசங்கத்தையும் எடுத்துக் கொள்வோம். இதிலே ஸிவில் வாரைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். எப்படி இதை நடத்தப் போகிறார் என்பது அவருக்குத் தான் தெரியும். அப்போரை நடத்த, படை, துப்பாக்கி முதலிய வசதிகள் இருக்கின்றனவா என்பது வேறு விஷயம். இந்தப் பிரசங்கத்தில் வகுப்பு கலவரத்தைப் பற்றி பேசியிருக்கலாம். இந்தப் பிரசங்கத்தின் முழு விவரமும் நம்மிடம் இல்லை. ஆனால் அரசாங்கத்திற்கு அவர் பேசிய முழு விவரமும் **Shorthand Sub-Inspector**-கள் சமர்பித்த ரிபோர்ட்டின் மூலம் கிடைத்திருக்கும். இந்த பிரசங்கத்தின் முழு விபரமும் நமக்கு தெரிந்து இருந்தால் தான், எந்த சந்தர்ப்பத்தில் அம்மாதிரி பேசினார் என்பதை புரிந்துகொள்ள முடியும். அவர் மேலும் சொல்லியதாவது. பிரிட்டிஷ் ஆட்சி நடத்தின காலத்திலே அங்குள்ள மக்கள் அவர்களை எதிர்த்து போராடி இருக்கிறார்கள். ஆகையால் இப்போதும் போலீஸ்காரர்கள் அக்கிரமம் செய்தால் அவர்களுடைய அடக்கு முறைக்கு எதிராக போராட தயாராக இருப்பதாக சொல்லியிருக்கலாம்.

ஸ்ரீ தேவர் ஹரிஜனங்களுக்கு எதிராக மறவர்களை தூண்டி விட்டதாக சொல்லப்படுகிறது. ஆனால் காங்கிரஸ்காரர்கள் ஹரிஜனங்களை மறவர்களுக்கு எதிராக மறைமுகமாக தூண்டி விட்டதாக மற்றொரு வாதம் இருக்கிறது. ஸ்ரீ தேவரிடம் தகாத முறையில் நடந்து கொள்ளும்படியும், மறவர்களை தாக்க வேண்டுமென்றும், ஹரிஜனங்களை தூண்டி விட்டு, ஆயுதங்களையும் காங்கிரஸ்காரர்கள் கொடுத்துதவியதாகச் சொல்லப்படுவதை மந்திரிசபை ஒப்புக்கொள்ளுமா? இது விஷயத்தில் சட்டப்படி ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டால் அதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் கனம் மந்திரி அவர்கள் கொடுத்த ஸ்ரீ தேவருடைய நான்கு உதாரண பிரசங்கங்களை பார்த்தால், வகுப்பு துவேஷத்தை தூண்டி விடும் முறையில் அவை அமைந்து இருப்பதாக தோன்றவில்லை. நான் கேள்விப்பட்ட விஷயங்களிலிருந்து, இதில் ஜாதி துவேஷம் சம்பந்தப்பட்டிருப்பதாக எனக்கு தெரியவில்லை. அந்த உதாரணங்கள் சரியான உதாரணங்கள் அல்ல என்று புலப்படுகிறது. அதிகாரிகள் சர்க்காருக்கு ரிப்போர்ட் அனுப்புகிறார்கள். சில அதிகாரிகளை மந்திரிகள் நம்ப வேண்டியிருக்கிறது. மந்திரிகள் சில அதிகாரிகளை நம்ப வேண்டும். செகரடரி ஏதோ எழுதிவைத்திருக்கிறார்கள். வகுப்பு துவேஷத்தை (**Communal hatred**) நிரூபிப்பதற்கு ஸ்டேட்மெண்டு தயாரிக்க வேண்டுமென்று மந்திரிகள் நினைக்கிறார்கள். செகரடரி அதை எப்படி புரிந்து கொள்ளமுடியும்? ஏதோ ஸி.ஐ.டி. ரிபோர்டுகளைக் கொண்டு செகரடரி எழுதிவைத்திருக்கிறார். ஆதலால் மந்திரிகளின் நோக்கம் நிறைவேறுமோ, அல்லது நிறைவேறாமல் போகுமோ என்று நான் நினைக்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த அறிக்கையை யார் தயாரித்தது என்று அவருக்கு தகவல் இருந்தால் அதைப்பற்றி கனம் அங்கத்தினர் பொறுப்போடு பேசலாம்.

SRI M. KALYANASUNDARAM: மந்திரி அவர்களின் வாசகமாக இருந்தால் இருக்கலாம். ஆனால் விவரங்கள் போலீஸ் அதிகாரிகளோ அல்லது செகரடரிகளோ தான் கொடுத்திருக்க வேண்டும். அல்லது அவர்கள் விவரங்கள் கொடுக்காமல் மந்திரி அவர்கள் நேரில் பார்த்தாரா அல்லது பிரசங்கங்களைக் கேட்டாரா? கொஞ்சம் இதை காங்கிரஸ் தலைவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரண காங்கிரஸ் ஊழியர்கள் ஆர்வம் மிகுதியால் ஏதாவது சொன்னால் அதைப்பற்றி நாம் குறைப்படுவதற்கு இல்லை. எந்தக் கட்சியிலும் ஆர்வம் மிகுந்தவர்கள் இருக்கலாம். அவர்கள் ஆர்வம் மிகுதியால் ஏதாவது சொல்லியிருந்தால் அவர்களை திருத்த வேண்டியதுதான். காங்கிரஸ் பக்கத்தில் ஆர்வம் மிகுதியால் யாராவது ஏதாவது சொல்லியிருந்தால் அது

[Sri M. Kalyanasundaram] [28th October 1957

போகட்டும். ஆனால் பொறுப்புள்ள மந்திரிகளும், மந்திரிகளாக வரக் கூடிய தகுதியுடைய தலைவர்களும் செய்திருக்கக்கூடிய பிரசங்கங்களைப்பற்றி நாம் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் இந்த காலகட்டத்தில் என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் கேள்விப்பட்டதை மந்திரி களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதே கால கட்டத்தில் 1952-வது, 1957-வது வருஷத்தில் பொது தேர்தலில் காங்கிரஸ் தோல்வி அடைந்ததின் காரணமாக, காங்கிரஸ் எப்படி மீண்டும் தங்களுடைய செல் வாக்கை அங்கு நிலைநாட்டுவது, எப்படி முத்துராமலிங்கத் தேவர் அவர் களின் செல்வாக்கை குறைப்பது என்ற நோக்கத்தோடு பல பிரசங்கங்கள் நடத்தியது வாஸ்தவமா இல்லையா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் அவர்களை தனிப்பட்ட முறையில் அவருடைய பிறப்பு, தாய் இவைகளைப் பற்றி தாக்கிப்பேசுவது, தேவர்களை காங்கிரஸ்பால் இழுப்பதற்கு உபயோகப்படுமா என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும். மைக், மெகபோனை வைத்துக்கொண்டு இம்மாதிரி தேவரைத் தாக்கிப் பேசுவது சரியா என்று யோசிக்க வேண்டும். நம்முடைய போலீஸ் அமைச்சர் அவர்கள் ஸ்ரீமான் பக்தவத்சலம் பக்தர்களுக்கெல்லாம் வாத் சல்யம் காட்டக் கூடியவர்கள். எதிரிகளாக இருக்கக் கூடியவர்களையும் அன்பினாலே வெல்லவேண்டும். கண்ணனுடைய அவதாரம். அவர் சிசு பால வதம் என்று பேசியதாகத் தெரிகிறது.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினருக்கு புராணக் கதைகள் கூட தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். சிசுபாலன் என்று குறிப்பிட்டது பொறுமையை வற்புறுத்துவதற்காக.

Sri M. KALYANASUNDARAM : இப்பொழுது என்ன வியாக்கி யானம் வேண்டுமானாலும் சொல்லலாம். சிசுபாலனை கம்ஸன் வதம் செய்தது போல் (சிரிப்பு) என்னுடைய "பாயிண்டு" என்னவென்றால், கம்ஸன் வதம் செய்யப்பட்டது போல் முத்துராமலிங்க தேவரை வதம் செய்வோம் என்று அர்த்தம் செய்யக்கூடிய வகையில், முத்துராமலிங்கத் தேவரை ஒரு அரக்கனாக்கி விட்டு, அந்த அரக்கனை வதம் செய்வதற்காக மந்திரி அவர்கள் அவதாரம் எடுத்துக் கொண்டிருப்பதாக சொன்னதாக நான் கேள்விப்படுகிறேன். அது தான் என்னுடைய குற்றச்சாட்டு. பலாத் காரத்தின் மூலம் முத்துராமலிங்கத் தேவரை ஒடுக்கப்போவதாக மந்திரி அவர்கள் பிரசாரம் செய்திருக்கிறார்.

மந்திரி ஸ்ரீ கக்கன் அவர்கள் செய்திருக்கக்கூடிய பிரசங்கங்களிலும் மிகவும் கவலை தரக்கூடிய விஷயங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு ஹரிஜன சமுதாயத்திற்கு சேவை செய்யவேண்டுமென்ற ஆர்வம் இருக்கும், அவர் அந்த இனத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக ஓரளவுக்கு "மார்ஜின்" கொடுக்க தயாராக இருக்கிறேன். உண்மையிலே அவர் ஹரிஜன வகுப் பைச் சேர்ந்தவர், ஒரு மந்திரியாக இருக்கிறார் என்பதை குறித்து எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பொருமப்பட வேண்டும். அவர் வெற்றிகரமாக அந்த வேலையைச் செய்ய வேண்டுமென்பதற்கு நான் கூடியவரை ஒத்துழைக்க வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு உண்டு. ஆனால் ஹரிஜனத் தலைவர்கள் பொறுப்புள்ள பதவியை நிர்வகிக்கக்கூடிய காலத்தில் ஹரிஜன மக்கள் மேல் ஜாதி மக்கள் எல்லோரையும் தன்னு டைய மக்களாகக் கருதி அவர்களை ஒற்றுமைப்படுத்த வேண்டும். ஹரி ஜனங்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பலாத்காரத்தை உபயோகப் படுத்தலாமா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்த்து பேச வேண்டும், காரியங்கள் செய்ய வேண்டும். ஹரிஜனங்களுடைய உரிமைகளை பாது காக்க எந்த விதத்திலும் போலீஸ் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக் கையை ஊட்டுவதன் மூலம், பலாத்காரப் பிரசாரம் செய்வதன் மூலம், ஹரிஜனங்களுக்கும் மேல் ஜாதிக்காரர்களுக்கும் ஒற்றுமை ஏற்படாது, ஹரிஜனங்களுடைய உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வம் மேல் ஜாதிக்காரர்களுக்கு ஏற்பட உதவாது என்பது என்னுடைய அபிப்பிராயம். பொதுக் குளங்களில் பிரவேசிக்கவும் கிணறுகளில் ஜலம் எடுக்கவும் ஏற் படக்கூடிய இடையூறுகளை நீக்க அமைதியான முறையில் இயக்கம் நடத்து



28th October 1957] [Sri M. Kalyanasundaram]

வது நியாயமானது, வரவேற்கக்கூடியது. பலாத்காரத்தின் மூலம் ஹரி ஜனங்களின் உரிமைகளை பாதுகாக்க முடியாது. மறவர், அகம்படியார், வன்னியர், முத்து ராஜாக்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் கேவல மான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய பொருளாதார அந்தஸ்து உயர்ந்தால் தான் ஜாதி வித்தியாசங்களை அறவே ஒழிக்க முடியும். ஏழை களாக இருக்கக்கூடிய வன்னியர், முத்து ராஜாக்கள், கவுண்டர்கள் கூட ஹரிஜனங்கள் என்று சொன்னால் ஜாதி வித்தியாசம் பாராட்டக்கூடிய மனோபாவம் இருக்கிறது. பொதுக் காரியங்களில் அவர்கள் ஒற்றுமையாகப் பேசுகிறார்கள். ஆனால் மற்ற விவகாரங்களில் ஜாதி உயர்வு தாழ்வு இருக்கத்தான் இருக்கிறது. மந்திரி கக்கன் அவர்களுக்கு ஹரிஜன முன் னேற்றத்தில் எவ்வளவு ஆர்வம் இருக்கிறதோ அவ்வளவு ஆர்வம் எதிர்க் கட்சியினருக்கும் உண்டு. அதே சமயத்தில் ஹரிஜனங்களிடையே பலாத் காரத்தை தூண்டிவிட்டு மேல் ஜாதிக்காரர்களை ஒடுக்குவதில் யாருக்காவது லாபம் உண்டா, ஹரிஜன முன்னேற்றத்திற்கு லாபம் உண்டா என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். "ஹரி ஜனங்கள் உறுதியுடன் இருக்க வேண்டும், தைரியமாக இருக்க வேண்டும், அதாவது எதிர்த்து தாக்குவதற்கு, போலீஸ் உங்களுக்கு உதவி அளிக்கும்" என்ற நம்பிக்கையை உண்டாக்கி அவர்கள் பிரசங்கம் செய்ததாகத் தெரி கிறது. எதிர்க் கட்சியினர் பேசுவதை போலீஸ் ரிப்போர்டர்களைக் கொண்டு குறிப்பெடுத்து இங்கே கொண்டு வந்து காட்டுவதற்கு சர்க்காருக்கு சாத்திய மாக இருக்கிறது.

The Hon. Sri C. SUBRAMANIAM : அதற்காக இல்லாததைச் சொல்ல வேண்டாம்.

Sri M. KALYANASUNDARAM : இல்லாததை நான் ஒன்றும் சொல்லவில்லை. பதில் சொல்லுவதற்கு உங்களுக்கு சந்தர்ப்பம் இருக் கிறது. எங்களுக்கு அம்மாதிரி ரிபோர்டுகள் வந்திருக்கின்றன. ஹரிஜனங் களிடையே பலாத்காரத்தை தூண்டி விடுவதாக எங்களுக்கு ரிபோர்டு வந்திருக்கிறது. எங்கள் கட்சி காரியாலயத்திற்கு பல ரிபோர்டுகள் வந்திருக்கின்றன.

(Sri T. P. Elumalai, Sri T. S. Ramaswamy Pillai, and some other hon. Members rose.)

Mr. SPEAKER : Hon. Members will raise their points of order one by one.

Sri T. S. RAMASWAMY PILLAI : Sir, I am the only Member raising a point of order.

Mr. SPEAKER : No; there are others also.

Sri T. S. RAMASWAMY PILLAI : No, Sir.

Mr. SPEAKER : You are not seeing, but I see.

Sri T. S. RAMASWAMY PILLAI : Sir, I want to know whether it is in order for the Leader of the House or any Minister to disturb the speaker without raising a point of order.

Mr. SPEAKER : I was about to interfere myself. I was watching whether the hon. Member Sri M. Kalyanasundaram was not transgressing his rights by alluding to some statements about which there is no data. The Hon. the Leader of the House objected to Sri Kalyanasundaram's making some statements against allegations made by some individual Minister. I was myself watching it very keenly and closely. As a general rule,

'no-confidence' motions can be tabled on motions or facts which everybody knows and not in hypothetical grounds. If the hon. Member is prepared to produce before this House evidence in favour of what he said, then he would be perfectly in order. Otherwise, no-confidence motions cannot be taken as a vehicle for making allegations or counter-allegations. I should, therefore, like all hon. Members to remember this when they make allegations.

SRI M. KALYANASUNDARAM: உங்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

SRI S. LAZAR: On a point of order, Sir. I find that, under rule 66 of the Madras Assembly Rules, a Member, while speaking, must not make a personal charge against a Member. Hon. Members of the Cabinet are Members of this House. I am, therefore, of opinion, and I raise this point of order, that the hon. Member Sri M. Kalyanasundaram, while speaking was making personal charges against some Members here. I, therefore, request the Speaker to give his ruling on this matter.

MR. SPEAKER: The hon. Member is repeating what I said. Unless there is evidence, it is not advisable to make allegations against any Member of the House. It is not fair to make charges, because it would be derogatory to the dignity of the House. This is what the hon. Member Mr. Lazar has raised and which I was telling Sri M. Kalyanasundaram.

SRI T. P. ELUMALAI: கனம் அங்கத்தினர் அவர்கள் மந்திரி அவர்கள் சில பிரசங்கங்கள் செய்ததாகச் சொன்னார்கள். குறிப்பாக எங்கு என்ன பிரசங்கம் செய்தார்கள் என்பதை அவர் அவசியம் சொல்லவேண்டும். அவர்களுடைய பேச்சு எந்தவிதமாக இருக்கிறது என்று நாங்கள் எல்லோரும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர் மழுப்பியே பேசிக்கொண்டிருக்கிறார். குறிப்பாக ஸ்ரீ கக்கன் அவர்கள் எங்கே என்ன சொன்னார், என்ன பேசினார் என்பதைச் சொல்லவேண்டும். பொதுப்படையாக ஏதோ குழப்பம் விளைவித்தார் என்று மட்டும் சொன்னால் போதாது. ஆகவே பொறுப்புள்ள அவர் உதாரணத்தோடு எங்கே என்ன பேசினார் என்பதைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: கனம் எழுமலை அவர்கள் நான் ஆங்கிலத்தில் சொன்னதைத் தான் திருப்பிச் சொல்லுகிறார். கனம் லாஸர் அவர்களும் விதியைச் சொன்னார். கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் மந்திரிகள் மீது மட்டுமல்ல மற்ற எந்த அங்கத்தினர் மீது குற்றம் சாட்டினாலும் அதற்கு சரியான ஆதாரம் இருந்தால்தான் அதைப்பற்றி சொல்லவேண்டுமென்று தான் நான் சொன்னேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கம் தேவை. பல விஷயங்கள் பற்றி மந்திரி அவர்கள் சொன்னதாக ஆதாரம் எதுவும் இல்லாமல் சொன்னார்கள். பிறப்பைப் பற்றி பேசினதாகச் சொன்னார்கள். யார் பேசினார்கள் ? மந்திரிகளில் யாராவது பேசினார்களா ? அல்லது வேறு யாராவது பேசினார்களா ? இன்னார் பேசினார் என்று சொல்லாமல் அவர் பொதுவாக இப்படி பேசினதைத்தான் ஒரு அங்கத்தினர் கூட மழுப்பிப் பேசினார் என்று குறிப்பிட்டார். அந்தப் பேச்சை இவர்கள், பேசினதாகவும் நாங்கள் எடுத்துக் கொள்ளக்கூடும். மந்திரிகள் சொன்னதாகவும் கொள்ளக்கூடும். யார் பேசினார்கள் என்பதற்கு விளக்கம் அவரிடமிருந்து தேவை.





SRI M. KALYANASUNDARAM: முத்துராமலிங்க தேவருடைய பிறப்பைப் பற்றி மந்திரிகளாகக் கூடியவர்கள்—அதற்குத் தகுதி உடையவர்கள் தான் சொன்னார்கள். (சிரிப்பு) (பல குரல்கள்: 'தகுதியாகக் கூடியவர்கள் யார்'?) இதிலே எதையும் மழுப்ப விரும்பவில்லை. நான் மழுப்பிப் பேசுவதாக யாராவது நினைத்தால் அது அவர்களுடைய அபிப்பிராயமாக இருக்கலாம். நான் பொதுவாகப் பேசுகிறேனே தவிர ஒவ்வொரு குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளைப் பற்றியும் தனித்தனியாக பலர் பின்னே பேசுவார்கள். நான் பேசுவது காங்கிரஸ் மந்திரிகள் உள்பட இவர்கள் அந்தப் பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில் வகுப்பு துவேஷத்தை வளர்க்கக்கூடிய பிரசங்கங்களை இவர்களே செய்திருக்கிறார்கள் என்கிற குற்றச் சாட்டு தான். இதுபற்றி விசாரணை ஏற்படுகிற காலத்தில் எல்லாவற்றிற்கும் நாங்கள் தக்க ஆதாரங்கள், சாட்சிகள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இப்பவே அதைக் கொடுங்கள் என்று சொல்வது முற்றும் சரியில்லை. அது சாத்தியமும் இல்லை. அதனால் இந்தக் கட்சியில் இருந்து பேசக்கூடியவர்கள் அத்தனை பேரும் பொய் சொல்லுகிறார்கள். காங்கிரஸ் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் பொய் சொன்னாலும் மெய் . . .

SRI A. A. RASHEED: On a point of order, Sir, can the hon. Member use the word 'பொய்', in his speech.

SRI M. KALYANASUNDARAM: கொஞ்சநேரத்திற்கு முன்பு ஸ்ரீ கக்கன் அவர்களே பொய் என்று சொல்லி அந்த வார்த்தையை அகராதியில் சேர்த்துவிட்டார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: That cannot make an unparliamentary word, parliamentary.

SRI M. KALYANASUNDA : ஸ்ரீ கக்கன் உட்கார்ந்திருந்தபடியே நான் பேசும்போது "பொய்" என்று சொன்னார்கள். அதை நீங்கள் கவனித்தீர்களோ இல்லையோ ?

MR. SPEAKER: அதை நான் கவனிக்கவில்லை, சபையில் "பொய்" என்ற வார்த்தையை உபயோகப்படுத்தப்படாது. "பொய்" என்ற வார்த்தை அவர் உள்ளே புகுந்து கொண்டிருப்பதினாலேயே அதைக் கட்டுப் படுத்த முடியவில்லை.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, நான் ஒரு விண்ணப்பம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சட்ட மன்றத்தில் பேசும்போது ஒருவரைப் பற்றியோ, பேச்சைப் பற்றியோ பொய் என்றுசொன்னால் அந்த வார்த்தையை அனுமதிக்காது இருக்கலாம்.

"பொய் போலும்மே பொய் போலும்மே" என்று வருகிறது. "பொய் எனப்படுவது யாதெனில்" என திருக்குறளில் வருகிறது. இது மாதிரி இலக்கியங்களைக் குறிப்பிடும்போது, இலக்கிய உபயோகத்தில் அது சரியில்லை என்பது கூடாது. நடைமுறையில் ஒருவர் மற்றொருவர் சொற்களைக் குறித்து அதைத் தவறு என்று குறிப்பிடுவது சரியாக இருக்கலாம் என்று விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: Thank you for the clarification.

SRI A. A. RASHEED: எதை அனுமதிக்கலாம், எதை அனுமதிக்கக் கூடாது என்பது உங்கள் அபிப்பிராயம் தானே ?

MR. SPEAKER: அந்த வார்த்தை வரும்போது நீங்கள் பிரச்னையை எழுப்புங்கள். அப்போது பதில் சொல்லுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM: இந்த பிரதேசத்தில் நடந்த கலவரங்களைக் குறிப்பிட்டு இந்த அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். இதில் 'It has been alleged that these clashes are not really communal in their origin but political. This controversy is as unnecessary

[Mr. Speaker] [28th October 1957

'no-confidence' motions can be tabled on motions or facts which everybody knows and not in hypothetical grounds. If the hon. Member is prepared to produce before this House evidence in favour of what he said, then he would be perfectly in order. Otherwise, no-confidence motions cannot be taken as a vehicle for making allegations or counter-allegations. I should, therefore, like all hon. Members to remember this when they make allegations.

SRI M. KALYANASUNDARAM: உங்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

SRI S. LAZAR: On a point of order, Sir. I find that, under rule 66 of the Madras Assembly Rules, a Member, while speaking, must not make a personal charge against a Member. Hon. Members of the Cabinet are Members of this House. I am, therefore, of opinion, and I raise this point of order, that the hon. Member Sri M. Kalyanasundaram, while speaking was making personal charges against some Members here. I, therefore, request the Speaker to give his ruling on this matter.

MR. SPEAKER: The hon. Member is repeating what I said. Unless there is evidence, it is not advisable to make allegations against any Member of the House. It is not fair to make charges, because it would be derogatory to the dignity of the House. This is what the hon. Member Mr. Lazar has raised and which I was telling Sri M. Kalyanasundaram.

SRI T. P. ELUMALAI: கனம் அங்கத்தினர் அவர்கள் மந்திரி அவர்கள் சில பிரசங்கங்கள் செய்ததாகச் சொன்னார்கள். குறிப்பாக எங்கு என்ன பிரசங்கம் செய்தார்கள் என்பதை அவர் அவசியம் சொல்லவேண்டும். அவர்களுடைய பேச்சு எந்தவிதமாக இருக்கிறது என்று நாங்கள் எல்லோரும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர் மழுப்பியே பேசிக்கொண்டிருக்கிறார். குறிப்பாக ஸ்ரீ கக்கன் அவர்கள் எங்கே என்ன சொன்னார், என்ன பேசினார் என்பதைச் சொல்லவேண்டும். பொதுப்படையாக ஏதோ குழப்பம் விளைவித்தார் என்று மட்டும் சொன்னால் போதாது. ஆகவே பொறுப்புள்ள அவர் உதாரணத்தோடு எங்கே என்ன பேசினார் என்பதைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: கனம் ஏழுமலை அவர்கள் நான் ஆங்கிலத்தில் சொன்னதைத் தான் திருப்பிச் சொல்லுகிறார். கனம் லாஸர் அவர்களும் விதியைச் சொன்னார். கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் மந்திரிகள் மீது மட்டுமல்ல மற்ற எந்த அங்கத்தினர் மீது குற்றம் சாட்டினாலும் அதற்கு சரியான ஆதாரம் இருந்தால்தான் அதைப்பற்றி சொல்லவேண்டுமென்று தான் நான் சொன்னேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கம் தேவை. பல விஷயங்கள் பற்றி மந்திரி அவர்கள் சொன்னதாக ஆதாரம் எதுவும் இல்லாமல் சொன்னார்கள். பிறப்பைப் பற்றி பேசினதாகச் சொன்னார்கள். யார் பேசினார்கள் ? மந்திரிகளில் யாராவது பேசினார்களா ? அல்லது வேறு யாராவது பேசினார்களா ? இன்னார் பேசினார் என்று சொல்லாமல் அவர் பொதுவாக இப்படி பேசினதைத்தான் ஒரு அங்கத்தினர் கூட மழுப்பிப் பேசினார் என்று குறிப்பிட்டார். அந்தப் பேச்சை இவர்கள், பேசினதாகவும் நாங்கள் எடுத்துக் கொள்ளக்கூடும். மந்திரிகள் சொன்னதாகவும் கொள்ளக்கூடும். யார் பேசினார்கள் என்பதற்கு விளக்கம் அவரிடமிருந்து தேவை.



28th October 1957]

SRI M. KALYANASUNDARAM: முத்துராமலிங்க தேவருடைய பிறப்பைப் பற்றி மந்திரிகளாகக் கூடியவர்கள்—அதற்குத் தகுதி உடையவர்கள் தான் சொன்னார்கள். (சிரிப்பு) (பல குரல்கள்: 'தகுதியாகக் கூடியவர்கள் யார்'?) இதிலே எதையும் மழுப்ப விரும்பவில்லை. நான் மழுப்பிப் பேசுவதாக யாராவது நினைத்தால் அது அவர்களுடைய அபிப்பிராயமாக இருக்கலாம். நான் பொதுவாகப் பேசுகிறேனே தவிர ஒவ்வொரு குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளைப் பற்றியும் தனித்தனியாக பலர் பின்னே பேசுவார்கள். நான் பேசுவது காங்கிரஸ் மந்திரிகள் உள்பட இவர்கள் அந்தப் பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில் வகுப்பு துவேஷத்தை வளர்க்கக்கூடிய பிரசங்கங்களை இவர்களே செய்திருக்கிறார்கள் என்கிற குற்றச் சாட்டு தான். இதுபற்றி விசாரணை ஏற்படுகிற காலத்தில் எல்லாவற்றிற்கும் நாங்கள் தக்க ஆதாரங்கள், சாட்சிகள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இப்பவே அதைக் கொடுங்கள் என்று சொல்வது முற்றும் சரியில்லை. அது சாத்தியமும் இல்லை. அதனால் இந்தக் கட்சியில் இருந்து பேசக்கூடியவர்கள் அத்தனை பேரும் பொய் சொல்லுகிறார்கள். காங்கிரஸ் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் பொய் சொன்னாலும் மெய் . . .

SRI A. A. RASHEED: On a point of order, Sir, can the hon. Member use the word 'பொய்', in his speech.

SRI M. KALYANASUNDARAM: கொஞ்சநேரத்திற்கு முன்பு ஸ்ரீ கக்கன் அவர்களே பொய் என்று சொல்லி அந்த வார்த்தையை அகராதியில் சேர்த்துவிட்டார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: That cannot make an unparliamentary word, parliamentary.

SRI M. KALYANASUNDA : ஸ்ரீ கக்கன் உட்கார்ந்திருந்தபடியே நான் பேசும்போது "பொய்" என்று சொன்னார்கள். அதை நீங்கள் கவனித்தீர்களோ இல்லையோ ?

MR. SPEAKER: அதை நான் கவனிக்கவில்லை, சபையில் "பொய்" என்ற வார்த்தையை உபயோகப்படுத்தப்படாது. "பொய்" என்ற வார்த்தை அவர் உள்ளே புகுந்து கொண்டிருப்பதினாலேயே அதைக் கட்டுப் படுத்த முடியவில்லை.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, நான் ஒரு விண்ணப்பம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சட்ட மன்றத்தில் பேசும்போது ஒருவரைப் பற்றியோ, பேச்சைப் பற்றியோ பொய் என்றுசொன்னால் அந்த வார்த்தையை அனுமதிக்காது இருக்கலாம்.

"பொய் போலும்மே பொய் போலும்மே" என்று வருகிறது. "பொய் எனப்படுவது யாதெனில்" என திருக்குறளில் வருகிறது. இது மாதிரி இலக்கியங்களைக் குறிப்பிடும்போது, இலக்கிய உபயோகத்தில் அது சரியில்லை என்பது கூடாது. நடைமுறையில் ஒருவர் மற்றொருவர் சொற்களைக் குறித்து அதைத் தவறு என்று குறிப்பிடுவது சரியாக இருக்கலாம் என்று விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: Thank you for the clarification.

SRI A. A. RASHEED: எதை அனுமதிக்கலாம், எதை அனுமதிக்கக் கூடாது என்பது உங்கள் அபிப்பிராயம் தானே ?

MR. SPEAKER: அந்த வார்த்தை வரும்போது நீங்கள் பிரச்னையை எழுப்புங்கள். அப்போது பதில் சொல்லுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM: இந்த பிரதேசத்தில் நடந்த கலவரங்களைக் குறிப்பிட்டு இந்த அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். இதில் 'It has been alleged that these clashes are not really communal in their origin but political. This controversy is as unnecessary

[Sri M. Kalyanasundaram] [28th October 1957

as it is unedifying. The only political element in these regrettable incidents is that the deep-rooted communal animosities in this area have been deliberately worked up by interested political groups. Unfortunate as these happenings are, it is even more tragic that these should have been exploited by interested parties for their own political propaganda.' இதனுடைய உண்மையை நாம் கவனிப்போம். இந்தச் சம்பவங்கள் எல்லாம் வகுப்புக் கலவரங்களாக இருந்தபோதிலும் கூட அவற்றுக்கு அரசியல் தன்மை கொடுத்து சில அரசியல் கட்சிகள் அந்தப் பிரதேசத்தில் குறுக்கிடுகிறது. 'The only political element in these regrettable incidents is that the deep-rooted communal animosities in this area have been deliberately worked up by interested political groups.' எனச் சொல்கிறார்கள். இந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய அரசியல்கட்சி இரண்டுதான். ஒன்று பார்வர்ட் ப்ளாக், மற்றொன்று காங்கிரஸ். திராவிடக் கட்சியோ, சோஷலிஸ்டுக் கட்சியோ, கம்யூனிஸ்டுக் கட்சியோ அங்கே வேலை செய்வதாகவோ, இருப்பதாகவோ எனக்குத் தெரிந்த மட்டும் தெரியவில்லை. ஓரொரு கிராமங்களில் சில இருக்கலாம். பெரும்பாலும் இந்தத் தகராறுக்குக் காரணம் இந்த இரண்டு கட்சிதான். ஆனால் இதுவரையிலும் இல்லாத மற்ற கட்சிகளை அங்கே கொண்டுபோய் அதற்காக நாங்கள் இந்தக் காரியத்தைச் செய்தோம் எனக் குறிப்பிட்டிருப்பது சரியில்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் குறிப்பிட்டிருப்பது—மற்ற கட்சிகள் அங்கே இல்லாமல் இருக்கலாம்—இந்த விஷயத்தை மற்ற எல்லாக் கட்சிகளும் முக்கியமாக எடுத்துக்கொண்டு அங்கே போய் வேலை செய்வதைத்தான் குறிப்பிட்டிருக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : வாஸ்தவம், மற்ற கட்சிகள் எதுவும் தலையிடாமல் இவர்கள் இஷ்டப்படி அங்கே தங்களுக்கு விரோதியாகவுள்ள பார்வர்ட் கட்சியை ஒடுக்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் இதனால் கிடைக்காமல் போய்விட்டதே என்பது வருத்தமாக இருக்கலாம். அந்தச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் சந்தோஷப்பட்டிருப்பார்.

THE HON. SRI C. SUBRAMANIAM : That is the technique of the Communist party : 'To divide and then annihilate'.

SRI M. KALYANASUNDARAM : இப்போது அந்தப் பக்கத்தில் நடந்த சம்பவங்களுக்கு இதர அரசியல் கட்சிகள் காரணம் இல்லை. காங்கிரஸ்காரர்களேதான் வகுப்புத் துவேஷத்தை வளர்த்துவிட்டு இதர கட்சியை ஒடுக்குவதற்கு இதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

இதை மறுத்து அவர்கள் எவ்வளவுதான் பேசினாலும் பயன் இல்லை. இது வெறும் சாதிச் சண்டை அல்ல. காங்கிரஸ் மந்திரி சபை தங்களது செல்வாக்கை அங்கே பெருக்கிக் கொள்வதற்கு, அங்கே இதுவரையிலும் செல்வாக்காக உள்ள ஒரு கட்சியை ஒடுக்குவதற்குத் தான் மறவர் ஹரிஜன் சாதிச் சண்டை என்கிற பேரில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி ஒரு பூர்ண விசாரணை நடத்துவதாக இருந்தால் எல்லாத் தகவல்களையும் கொடுக்கத் தயார். இதை விசாரிக்க வேண்டும். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது எனக்குத் தெரியும். விசாரணை எதுவும் செய்ய முன்வராது, இதை எவ்வளவு பலமாக எதிர்த்து மறுத்தாலும் சரி அதை ஜனங்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். மறவர்களும் ஹரிஜனங்களும் இந்த பகுதியிலே பல சம்பவங்களில் ஒன்றாகக் கூடி விழாக்களில் கலந்துக் கொண்டு பொதுவான காரியங்களில் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். நூற்றுக்கணக்கான கிராமங்களில் ஹரிஜனங்களும் மறவர்களும் ஒன்று சேர்ந்து வாழக்கூடிய ஒரு பகுதியிலே 16 கிராமங்களிலேதான் இந்த நிகழ்ச்சிகள் நேர்ந்திருக்கின்றன. விவரங்களுக்குள்ளே அதிகமாக போகவிரும்பவில்லை. குறிப்பிட்ட சில சம்பவங்கள்



28th October 1957] [Sri M. Kalyanasundaram]

கண்டிக்கக் கூடியவை என்பதிலே எனக்கு ஆட்சேபனையில்லை. யார் எதைச் செய்திருந்தாலும் சமாசம் ஏற்பட எல்லாப் பொறுப்புள்ள கட்சியினுடைய கடமை என்னவாக இருக்கவேண்டுமென்றால் அந்த இடத்திலே போய் அமைதியைக் காப்பாற்றுவதும், ஒற்றுமையை ஏற்படுத்துவதும் என்ற குறிக்கோளாக இருக்கவேண்டும். ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் இப்பொழுது சொல்லுகிறார்கள் மந்திரிகள் இரண்டு பேரும் ரொம்ப வலுவாகச் சொன்னார்கள். போலீஸ் அமைச்சர் அவர்கள் "மற்ற கட்சிகளிலிருந்து அந்த இடத்திற்குப் போனார்கள், அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்" என்று. நம்முடைய நிதி அமைச்சர் சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது கம்யூனிஸ்ட் கட்சிக்கு பிரதானமாக இருக்கக் கூடிய ஏதோ ஒரு வார்த்தை சொன்னார்கள்—எந்த அகராதியில் இருந்து எடுத்தார்களோ தெரியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி நடவடிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் மீது அவருக்கு இருக்கும் வெறுப்பின் காரணமாக அவர் அப்படிச் சொன்னார் என்று நான் முடிவு பண்ணலாம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கம்யூனிஸ்ட் கட்சியின் பேரில் வெறுப்பு அல்ல, கம்யூனிஸ்ட் கொள்கையின் பேரில்தான் வெறுப்பு அதைத்தான் குறிப்பிட்டேன். அந்தக் கட்சிகளைப் பிரித்து நசுக்குவது அவர்களுடைய அடிப்படையான கொள்கை என்பது உலக நிகழ்ச்சிகளிலிருந்து தெரிகிறது. அதை அவர்கள் மறுக்க முடியாது.

SRI M. KALYANASUNDARAM : அப்படி பிரித்து நசுக்கும் கொள்கையை மந்திரி அவர்கள் கையாண்டு வருகிறார்கள் என்பது முதுகளத்தூர் சம்பவங்களிலிருந்து தெரிகிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : We will never follow your policy.

SRI M. KALYANASUNDARAM : கம்யூனிஸ்ட் கட்சிக்கொள்கையை காங்கிரஸ்காரர்கள் ஏன் செய்யவேண்டும் என்று கேட்கிறேன். அவர்கள் நாணயமாக நடந்து கொள்ளலாம் அல்லவா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் தங்களைப்போல் தான் மற்றவர்களையும் நினைத்துக்கொண்டு பேசுகிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியினரைப் போல்தான் காங்கிரஸ்காரர்களும் நடப்பார்கள் என்று யூகித்துக்கொண்டு பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : நான் அப்படி ஒன்றும் யூகித்துப் பேசவில்லை. நடந்த சம்பவங்களைப் பற்றித்தான் குறிப்பிட்டு பேசுகிறேன். கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்ற கழகம், பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி, தமிழரசு கட்சி, எல்லா கட்சியினரும் அந்தப் பிரதேசத்திற்குப் போய் சுற்றுப் பிரயாணம் செய்தது வாஸ்தவம். அதற்கு இந்த நாட்டில் உரிமை உண்டா இல்லையா. சுற்றுப் பிரயாணம் செய்த விவரங்களைச் சேகரித்து வெளியிட்டிருக்க வேண்டும். உதாரணமாக கலவரம் ஆரம்பமான காலத்திலே, தேதி எனக்கு ஞாபகம் இல்லை, தமிழரசு கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ மா. பொ. சி., கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ பி. ராமமூர்த்தி. . . . .

SRI R. CHIDAMBARA BARATHI : ஒரு ஒழுங்கு பிரச்னை. கனம் மந்திரி அவர்களும் நண்பர் அவர்களும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்தால் டெம்பர் அதிகமாகிக் கொண்டே போகிறது. மேலும் மேலும் தவறை பேசிக்கொண்டு இருக்காமல் இருப்பது நல்லது. அம்மாதிரி சபையில் அனுமதிப்பது சட்டபடி நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இந்த விவாதத்தை ரொம்ப சாந்த ரீதியாக நடத்த வேண்டும் என்று நான் அப்போதே சொன்னேன். ஆனால் இம்மாதிரி முக்கியமான பிரச்னை வரும்பொழுது டெம்பரேசர் ஜாஸ்தியாகிக் கொண்டே போகிறது.

SRI M. KALYANASUNDARAM: அந்தப் பக்கத்தில் இருந்துதான் டெம்பரேசர் அதிகமாக இருக்கிறது.

MR. SPEAKER: எந்தப் பக்கத்தில் இருந்து வந்தாலும் நான் அதற்கு மருந்து கொடுக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: எந்த கட்சியும் இந்தக் கலவரங்களை கட்சி நலனுக்காக உபயோகப்படுத்தக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். மந்திரி அவர்களுக்கு இருப்பது போல் எனக்கும் இதில் ஆழ்ந்த அபிப்பிராயம் உண்டு. அந்த நோக்கத்துடன் தான் இந்த வகுப்புக் கலவரம் ஆரம்பமான நேரத்தில் நாங்கள் முயற்சி செய்தோம். ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதையும் அவர் எப்படி நடந்துக்கொண்டார் என்பதையும் ஒதுக்கி வைத்து விட்டு கட்சி விருப்பு வெறுப்புக்களை மறந்து அந்த இடத்திலே இருக்கக்கூடிய ஜனங்களுடைய வீடு, சொத்தைப் பற்றி மட்டும் கவலை கொண்டோம். போலீசார் மட்டும் அனுப்பப்பட்டு அவர்கள் சொல்லுவதன் பேரில் உடனே முடிவு எடுக்காமல் சமாதானத்திற்கு வரப்போவதற்கு பிரசாரம் செய்வதற்கு, எதிர்க்கட்சி, தமிழரசுக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, திரு. சா. கணேசன் அவர்கள் இன்னும் பலரும் கூடி ஆலோசித்தோம். அந்த ஜில்லாவில் அதிக செல்வாக்கு இருக்கக்கூடிய முன்னாள் அமைச்சராக இருந்த ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி அவர்களும் எல்லோருமாக சேர்ந்து யோசனை சொன்னார்கள். நாங்கள் ஒரு சமாதான மாநாட்டைக் கூட்டவேண்டும், எல்லா கட்சியும் சேர்ந்து யோசனை சொன்னார். ஸ்ரீ முத்துராமலிங்க தேவரையும் சேர்த்துக்கொண்டு அந்த பகுதியில் சென்று கூட்டம் போட்டு ஜனங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துக்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதை கம்யூனிஸ்ட் கட்சி தன் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக்கொண்டார்கள் என்று சொல்லுகிறார்கள். எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் போகிற போக்கில் ஏதோ சொல்ல வேண்டும் என்ற முறையில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு செல்வாக்கைத் தேடிக்கொள்ளுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் கனம் மந்திரி அவர்கள் சொல்லலாமே தவிர நிரூபிக்க முடியாது. போலீசாருடைய கூற்றை மட்டும் நம்பி இருக்க வேண்டாம் என்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் செல்வாக்கு இருக்கக்கூடிய பகுதியில் ஜனங்கள் அவருடைய வார்த்தையைக் கேட்பார்கள், அதற்காகத்தான் அவரையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னோம். சமாதானத்தை நிலை நாட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு கூட்டினோமே தவிர எங்கள் கட்சி நலனுக்காக என்று அறிக்கையில் சொல்லி இருக்கிறார். இங்கே அதை வலியுறுத்தி கூறுகிறார். அவர்களுடைய கருப்புக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு மற்ற எதிர்க்கட்சிகளை பார்க்கிறார்கள் என்ற முடிவிற்குத் தான் வர வேண்டிய நிலைமையில் இருக்கிறது. அடிலதுடிக கமவரடிா இந்த கலவரம் நடந்தது. தீவிரமாக இருந்தது. ஸ்ரீமான் சசிவர்ண தேவர் உப தேர்தல் அடுத்தபடியாக வேறு அபிப்பிராயம் இருந்தது என்று சொல்லுகிறார்கள். நிலைமை நெருக்கடியாக இருந்து இரண்டு ஜாதியைச் சேர்ந்தவர்களும் ஒத்துக்கொள்ளக்கூடிய நிலைமை எப்பொழுது வேண்டுமானாலும் ஏற்படலாம் என்று எழுதி இருந்தார்கள். சமாதானத்தை நிலைநாட்ட கலெக்டர் அவர்களையும் கேட்டுக்கொண்டோம். மகாநாடு நடந்தது செப்டம்பர் 10-ம் தேதி என்று நினைக்கிறேன். கலெக்டர் அவர்கள் மகாநாடு நடத்தினார்கள். அதில் எல்லாக் கட்சி தலைவர்களும் வந்திருந்தார்கள். ஹரிஜனங்களைச் சேர்ந்தவர்களும், மேல் ஜாதியைச் சேர்ந்தவர்களும் கூடி இருந்தார்கள். ஸ்ரீ தேவர் அவர்களும் அதில் கலந்து கொண்டிருக்கிறார். இதை கனம் மந்திரி அவர்கள் அவர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். அந்த மாநாட்டில் ஒப்புக்கொண்ட விஷயத்தில் இரு சாரரும் சேர்ந்து கையெழுத்துப் போட்டு ஒரு அறிக்கை வெளியிட வேண்டும் என்று முடிவு எடுத்துக் கொண்டோம். ஆனால் கலெக்டர் அதை வெளியிட மறுத்து விட்டார். அதற்குக் காரணம் அவரே அதைச் செய்தாரா அல்லது அரசாங்கத்திலிருந்து கலெக்டருக்கு உத்தரவு வந்ததின் பேரில் அப்படி செய்தாரா என்று தெரியவில்லை.



THE HON. SRI M. BHAKTAVATSALAM: கலெக்டர் அரசாங்கத்திடம் உத்தரவு வாங்க வில்லை. அரசாங்கமும் உத்திரவு கொடுக்க வில்லை. ஆனால் துரதிஷ்ட வசமாக இறந்த எமான்யுவலின் கையெழுத்து இருந்தது. அந்தக் கையெழுத்திட்ட அறிக்கையை மக்களுக்கு வழங்கினால் வெறுப்பு அதிகமாகும் என்ற எண்ணத்துடன் கலெக்டர் அதை வெளியிடாமல் தடுத்திருக்கலாம்.

SRI M. KALYANASUNDARAM: இது கலெக்டருடைய அபிப்பிராயமாக இருக்கலாம். ஆனால் மற்ற அபிப்பிராயங்களும் நான் சொல்ல முடியும். ஆனால் எமானுவில் கொலையைப் பற்றி இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இன்னும் விசாரணையில் இருக்கிறது. கனம் மந்திரி அவர்கள் அதிக விவரத்திற்கு போகக்கூடாதென்று சொன்னதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். எம்மானுவலை கொலை செய்தது அரசியல் காரணத்திற்காகவோ அல்லது வேறு எந்தக் காரணத்திற்காகவோ, யாரும் கொலை செய்வதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். அதற்கு ஆதரவு கொடுக்க மாட்டேன். அதற்காக சர்க்கார் எந்த நடவடிக்கை எடுத்தாலும் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. அதற்கு எதிர்ப்பும் இருக்காது.

இப்பொழுது நாம் பார்க்க வேண்டியது, எமானுவேலின் கொலைக்கு வேறு காரணமா? அல்லது மகாநாட்டில் தேவரோடு ஏதோ தகராறு செய்து கொண்டதாக ஒரு அபிப்பிராயம் இருக்கிறது; அது காரணமா? அல்லது மந்திரியவர்கள் சொல்வதுதான் அதற்குக் காரணமா? என்று தெரிய வேண்டும். மந்திரியவர்கள் ஒரு இடத்தில் சொல்கிறார்கள், "மகாநாட்டிலிருந்து வெளியே வரும்போது ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் எமானுவேல் போன்ற பள்ளன் கூட எதிர்த்துப் பேசும்படியாக விட்டு விட்டீர்களே என்று தம் ஆதரவாளர்களைக் கடிந்து கொண்டதாகவும் கூறப்படுகிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். அதை எப்போது, எந்த இடத்தில் யார் முன்னிலையில் சொன்னார் என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. பொறுப்போடு பேச வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். மந்திரியவர்கள் என்னை விட அதிகமான பொறுப்போடு பேச வேண்டும். பொது கூட்டத்தில் இப்படி ஏதாவது பேசினால் நான் அதைப் பற்றி ஆட்சேபித்திருக்க மாட்டேன். ஆனால் இந்த சட்டசபையில் வந்து, இந்த சட்டசபையில் கொடுக்கப்பட்ட அறிக்கையில், "it is understood" என்று கூறியிருக்கிறார்கள். இப்படி சொல்வதின் மூலம் எமானுவேலின் கொலைக்கும் தேவருக்கும் சம்பந்தம் உண்டு என்பது கலெக்டரின் நோக்கமாயிருக்கும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கலெக்டர் இங்கு இல்லை. ஆகவே அப்படி ஊகித்துப் பேசுவது தவறாகும் என்பது ஒருபுறமிருக்க, இமானுவேலின் கொலையைப் பற்றி பலவித வதந்திகள் உலாவி வருகின்றன. ஒரு சிலர் ஒரு விதம் சொல்கிறார்கள். வேறு சிலர் வேறு விதமாய் சொல்கிறார்கள். அப்படி வதந்திகள் உலாவிக் கொண்டு வரும்போது இமானுவேல் சமாதானம் ஏற்படவேண்டும் என்று கையெழுத்திட்ட பிற்பாடும், சமாதானம் வேண்டுமென்று சொன்னவரைக் கூட கொலை செய்து விட்டார்களே என்று ஆத்திரம் ஏற்பட்டு அதன் பயனாக கூடுதல் தொந்தரவு ஏற்பட்டு விடக்கூடாதே என்று பயந்து தான் கலெக்டர் அந்த துண்டு பிரசுரத்தை வெளியிடவில்லை என்று இருந்தால் அதை நாம் ஆட்சேபனை செய்ய முடியாது. ஆகவே அதை பிரசுரம் செய்யாதது பற்றி கலெக்டரையோ அல்லது சர்க்காரையோ குற்றம் சாட்டுவது சரியல்ல என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இமானுவேல் சமாதானம் ஏற்பட வேண்டுமென்று நினைத்து கையெழுத்து போட்ட பிற்பாடும் கூட அவர் கொலை செய்யப்பட்டு விட்டாரே என்ற ஆத்திரம் ஹரிஜனங்களுக்கு ஏற்பட்டு அவர்களுக்கும், தேவர்களுக்கும் இடையே கூடுதல் தகராறு ஏற்படும் என்று நினைத்து கலெக்டர் அந்த பிரசுரத்தை வெளியிடாதது அந்த கலெக்டரின் புத்திசாலித்தனந்தான் என்றுதான் நான் நினைக்கிறேன். ஆகவே, மேலும், இதைப் பற்றி வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[28th October 1957

SRI M. KALYANASUNDARAM : கலெக்டரின் நோக்கத்தை நான் சந்தேகிக்கவோ, ஆட்சேபிக்கவோ விரும்பவில்லை. நான் எனது அபிப்பிராயத்தைச் சொல்கிறேன். அந்தத் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டு அதற்குப் பக்க பலமாக இன்னும் சில ஹரிஜனத் தலைவர்களும் சேர்ந்து பிரசாரம் செய்திருந்தால் ஒரு உயிருடன் நின்றிருக்கும். அதற்குக் காரணம் யார் ? யாராயிருந்தாலும் ஒரு உயிருடன் நின்றுவிட்டிருக்கும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அது உங்கள் அபிப்பிராயம். அதைப் பற்றி யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் கலெக்டர் இதற்காகத்தான் ஒரு சமயம் கொடுக்காமல் இருந்தார்களோ என்று சொன்னீர்கள். அதைப் பற்றித்தான் சொன்னேன்.

SRI M. KALYANASUNDARAM : மந்திரியவர்கள் சொன்னதற்கு பதில் சொன்னேன். கலெக்டரின் ஜட்ஜ்மெண்ட் சரியா இல்லையா என்று நான் அபிப்பிராயம் சொல்லவில்லை. இமானுவேலின் கொலைக்கு இந்த மாதிரி வேறு ஒருவர் பேரில் குற்றம் சாட்டலாமா ?

SRI M. P. SUBRAMANIAM : ஸார், இப்படி கனம் உறுப்பினர் பேச ஆரம்பித்ததில் இருந்து 40, 50 தடவைகள் அமைச்சர்களும், வேறு அங்கத்தினர்களும் குறுக்கிட்டுப் பேசுவதினால் அவரது பேச்சின் தன்மை மாறுபட்டு விடாதா. அமைச்சர் பதில் சொல்வதற்குத்தான் வேறு வாய்ப்பு இருக்கிறதே. ஆகவே அப்படி இடையிடையே பேசுவது சரியல்ல.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, interruption is a recognised mode of debate in the Assembly. Therefore it cannot be said that there should be no interruption at all. If we had no interruptions at all then we won't have a debate at all.

SRI M. KALYANASUNDARAM : குறுக்கிடுவதைப்பற்றி நான் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. என் உடல் நிலை சரியாக இல்லாதிருந்த போதிலும், நியாயத்திற்காகப் போராடுகிறேன் என்ற மனச்சாட்சி எனக்கு இருக்கிறதால் யார் எவ்வளவு திறமையாகக் குறுக்கிட்டாலும், அல்லது பிடிவாதமாக குறுக்கிட்டாலும்சரி நான் அதைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை. அதை நான் ஆட்சேபிக்கவில்லை.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் அளிப்பது நீதியாய் இருக்கின்ற காரணத்தினால் அமைச்சர்கள் பேசும்போது எங்களைப் போன்ற உறுப்பினர்கள் குறுக்கிட தாங்கள் அனுமதிப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : I will reply to the point of order raised by the hon. Member Sri Anbazhagan. To interrupt is the right of any hon. Member. But it must be a relevant interruption. Whether the interruption is relevant or not can be decided only at the time the interruption is made. Hon. Members have a right to interrupt the Hon. Ministers but only by saying something that has relevaance to the subject. I shall decide that at the moment when the interruption is made.

SRI M. KALYANASUNDARAM : அது அவ்வளவு சுலபமல்ல. இண்டரப்ஷன் முடிந்த பிறகுதான் அது ரிலவன்ட்டா இல்லையா என்று சொல்ல முடியும். அடுத்தபடியாக, இமானுவேலின் கொலையைப் பொறுத்த மட்டில் இரண்டு வித அபிப்பிராயம் இருக்க முடியாது. ஆளும் கட்சியினரும் சரி அல்லது எதிர்க்கட்சியினரும் சரி அதைக் கண்டிக்கத் தான் வேண்டும், அது கண்டிக்கத்தக்க விஷயந்



28th October 1957] [Sri M. Kalyanasundaram]

தான். நான் சொல்வது என்னவென்றால், இமானுவேல் கைபெழுத்திட்ட, அவர் பேரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தை எடுத்து பிரசாரம் செய்திருந்தால் இவ்வளவுதூரம் வந்திருக்காது. ஹரிஜனங்களின் மத்தியில் தவறாகவோ அல்லது நியாயமாகவோ ஏற்படக் கூடிய ஆத்திரத்தை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கும் உண்டு, அரசியல் கட்சிகளுக்கும் உண்டு. தேவருடன் தகராறு செய்து கொண்ட காரணத்தினால் தான் இமானுவேல் கொலை செய்யப்பட்டார் என்று ஹரிஜனங்கள் நினைத்தால் அந்த நிமிஷத்தில் ஏற்படுகிற உணர்ச்சி வசத்தால் என்ன ஏற்படும் என்று உணர்ந்து, அந்தத் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருந்தால் அந்த உணர்ச்சியைத் தடுத்திருக்க முடியுமென்றுதான் நான் அபிப்பிராயப்படுகிறேன். அதை வெளியிடாதது பற்றி அமைச்சரவர்கள் சொல்லும் காரணத்தை நான் ஒத்துக்கொள்ளவில்லை. அடுத்தபடியாக, முக்கியமான நிகழ்ச்சி அருங்குளத்தில் நடந்திருப்பது. அருங்குளத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இரண்டு வித அபிப்பிராயம் இருக்கிறது. எல்லா நிகழ்ச்சிகளைப் பற்றியுமே இருக்கிறது. அருங்குளத்தில் நடந்த நிகழ்ச்சி தான் முதலாவதாக ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தக் கூடிய முறையில் நடந்த நிகழ்ச்சி. அங்கு இரண்டு தேவர் பெண்மணிகளை தீயில் போட்டு விட்டார்கள் ஹரிஜனங்கள் என்ற வதந்தி பரவிற்று. நான் கேள்விப் பட்ட முறையில், யாரோ விஷமத்திற்காக இமானுவேலின் கொலையைப் பற்றி எப்படி பேச்சுகள் நிலவி வந்ததோ அதே போல் ஹரிஜனங்களின் மேல் தேவர்களின் ஆத்திரத்தைத் தூண்டி விடவேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டவட்டமாக பிரசாரம் செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவேதான், ஒவ்வொரு சம்பவத்திற்கும் விசாரணை செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். இது, சாதாரண சம்பவம் இல்லை. ஒரு கிராமத்திலுள்ள மறவர்களும் ஹரிஜனங்களும் சண்டை போட்டுக் கொண்டார்களா என்றால் இல்லை. கோஷ்டிகள் அப்படியே சஞ்சரித்துக் கொண்டுதான் இருந்தது. சூரையாடுவதும், தீ வைப்பதும் நடந்து கொண்டிருந்தது. ஒரு விஷயம். எந்த இடத்திலாவது தீ வைப்பதற்கு முன்னால் போலீஸ் போய் தடுத்திருக்கிறதா என்றால் அப்படி தடுத்ததாய் ஒரு இடத்திலும் பார்க்க முடியாது.

THE HON. SRI C. SUBRAMANIAM : I may state that if the hon, Member wants an enquiry into the Arunkulam incidents, as a matter of fact that will be the subject-matter of trial in the criminal court. Therefore the hon. Member need not go under the impression that there will be no enquiry or trial at all with reference to that.

SRI M. KALYANASUNDARAM : நான் அதனுடைய விவரங்களுக்கெல்லாம் போக விரும்பவில்லை. இந்த நடவடிக்கையை எப்படி கெட்ட எண்ணத்தோடு பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டும். மறவர்கள் மத்தியிலும் ஹரிஜனங்கள் மத்தியிலும் போலீஸார் எந்த விதமாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் விருப்பு வெறுப்பில்லாமல் பார்க்கவேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி கிரிமினல் கேஸ் போட்டு அதில் விசாரணை வரும்போது தீயில் போட்டார்களா அல்லது போடவில்லையா என்பதுபற்றி விசாரித்து அதில் குற்றவாளிகளாக யாரை கோர்ட்டு கருதுகிறதோ அவர்களை தண்டிக்க வேண்டும். ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதிலிருந்து, இவையெல்லாம் பொய்யானது, இவைகளையெல்லாம் நீதி மன்றத்தில் விசாரணை செய்ய வேண்டும், அப்போது தான் இதன் உண்மை தெரியும், ஆகவே இவைகள் எல்லாம் பொய்யானது என்று சொல்லுவது பொருந்தாத விஷயம். இவைகளில் என்னவெல்லாம் நடந்திருக்கின்றதோ அவைகளையெல்லாம் விசாரிக்க ஒரு தனிப்பட்ட ஜட்ஜ் போட்டால் அவைகளை சட்டத்திற்குட்பட்டுத்தான் விசாரணை செய்யமுடியும். அதுவல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக எந்த காரியமும் செய்யமுடியாது. மேலும் சட்டத்திற்கு

[Sri C. Subramaniam] [28th October 1957

குந்தகம் விளைவிக்கும் முறையில் நாம் நடந்துகொள்ள முடியாது. ஆகவே சட்டத்திற்குட்பட்ட எந்த விசாரணை செய்வதற்கும் நாங்கள் தயாராய் இருக்கின்றோம். நாங்கள் ஏதோ விசாரணைக்கு பயப்படுகின்றோம் என்று சொல்லுவது தவறு என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM: நீதிமன்றத்திற்கு குந்தகம் ஏற்படுத்தவேண்டுமென்பதல்ல, என்னுடைய விருப்பமும். கலவரத்தை மேலும் வளரவிடக்கூடாது என்பதுதான் என்னிடத்தில் இருக்கக்கூடிய எண்ணம். ஏனென்றால் அங்கு போலீஸ் போய் கலவரத்தை அடக்கி அமைதியை நிலைநாட்டியதா அல்லது கலவரத்தை மேலும் வளர்த்துக் கொண்டிருந்ததா என்பதைத் தான் நாம் பார்க்கவேண்டும். முதலில் சில காங்கிரஸ் தலைவர்கள் செய்த பிரச்சாரங்கள் முதலியவற்றைப்பற்றி சொன்னேன். காங்கிரஸ்காரர்கள் குறிப்பாக காங்கிரஸ் தலைவர்கள் இந்த சம்பவங்களைப்பற்றி கவலைப் பட்டிருக்கவேண்டும். காங்கிரஸ் மந்திரிகள் எல்லாம் அங்கு போய் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கவேண்டும்.

(The Deputy Speaker in the Chair.)

அங்கு போய் அமைதியை நிலைநாட்டியிருக்க வேண்டும். என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால் அங்கு 14, 15, 16, இந்த தேதிகளில் அங்கு அதாவது மதுரை வரை நமது முதல் அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார்கள். மதுரை வரையிலும் முதல் அமைச்சர் அவர்களை கொண்டு சென்ற ரயில் இன்னும் கொஞ்ச தூரம் போகவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை. நமது முதல் அமைச்சர் அவர்கள் தேசீய விடுதலை இயக்கத்தில் திரு. முத்துராமலிங்கத் தேவர், மற்றும் ராமநாதபுரம் தலைவர்களோடு எல்லாம் தோளோடு தோள் நின்று போராடினார்கள். இவ்விதம் இருக்கும் இடத்திற்கு ஏன் போகாமல் இருந்தார் என்பது தான் கேள்வி. ஏன் போகாமல் இருந்தார் என்பதை அவர்கள் பொது மக்களுக்குச் சொல்லவேண்டும். அன்றைய தினத்தில் மதுரை வரையிலும் போனவர் அங்கு போகவில்லை. இதை நாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். கனம் மந்திரி கக்கன் அவர்கள் அங்கு சில நாட்கள் போனார்கள். ஹரிஜனங்களும் மேல்ஜாதி ஜனங்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள். மேலும் அங்கு ஒற்றுமையை நிலைநாட்டவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே நான் சொல்லுகிற குற்றச்சாட்டு காமராஜ் நாடார் அவர்களைப்பற்றித் தான். எப்போதும் அவர்கள் பொறுப்பை தட்டிக்கழித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். போலீஸை அதிகமாக உபயோகித்து வந்திருக்கிறார்கள். போலீஸை உபயோகிப்பதில் தான் அதிக ஆர்வம் காட்டி வந்திருக்கிறார்கள். இதற்கென்று ஏற்படுத்தப்பட்ட பொதுஜன பிரதிநிதிகளின் குழுவை பயன்படுத்த தவறிவிட்டார். இவைகளை தான் நான் அவர்கள் மீது குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். இவைகள் எல்லாம் விசாரணைக்கு வந்தால் விரிவாக சொல்லலாம். மேலும் கலவரத்தை போலீஸ் தூண்டிவிட்டதா இல்லையா என்பதை நாம் பார்க்கவேண்டும். உதாரணமாக 16-ம் தேதியன்று ஒரு சம்பவம் நடந்ததாக கனம் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களுடைய அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்:

"At about 6 a.m. on 16th September 1957, there was a clash between the Thevar's of Illanjanbur and Harijans of Veerambal in which four Thevars including a woman and two Harijans died and 17 Harijans and two Thevars were injured . . . ".

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் வீராம்பல் என்ற இடத்தில் ஹரிஜனங்கள் அதிகமாக இருப்பதாகவும் இலஞ்சம்பூர் என்ற இடத்தில் தேவர்கள் அதிகமாக இருப்பதாகவும் தெரிகிறது. இந்த வட்டாரம் எப்போதும் அபாயகரமான இடம். எந்த நிமிஷத்திலும் தகராறுகள் ஏற்படலாம் என்று கருதப்படக்கூடிய இடம். 1946, 1947 இந்த வருடங்களில் எல்லாம் [illegible] நடந்திருக்கின்றன. பொதுத்தேர்தல் காலத்திலும் அதற்கு [illegible] அதாவது ஜூலை 4-ம் தேதிக்குப் பின்னும் போலீஸ் படை



28th October 1957] [Sri M. Kalyanasundaram]

அந்த இடங்களில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த சம்பவத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்னால் அதாவது 14-ம் தேதியன்று போலீஸ் வாபஸ் பெறப்பட்டது. 16-ம் தேதி கலவரம் நடைபெற்றது. ஆகவே போலீஸ் இங்கிருக்காது, என்ன வேண்டுமானாலும் நடத்துங்கள், என்று இந்த கலவரத்துக்கே சர்க்கார் தான் காரணமாக இருந்திருக்கிறது என்றுள்ள முடிவுக்கு வந்தால் அதில் என்ன தவறு இருக்கிறது என்றுதான் நான் கேட்கிறேன். அந்த சமயத்தில் படித்த ஒரு அறிக்கை என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது 15-ம் தேதியன்று (என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால்) போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்கள் சென்னையிலிருந்து ஒரு அறிக்கை வெளியிட்டார். அதாவது எல்லா இடங்களுக்கும் வேண்டிய பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்று கலவர பிரதேசங்களுக்கு போய்விட்டு சென்னைக்கு வந்த பிறகு சென்னையில் பத்திரிகை நிருபர்களுக்கு திரு பி. ஆர். ராஜரத்தினம் அவர்கள் இவ்விதமாக அறிக்கை வெளியிட்டார். 16-ம் தேதி கலவரம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே 14-ம் தேதி போலீஸ் வாபஸ் பெறப்பட்டது, அஜாக்கிரதையினால் செய்தார்களா அல்லது வேண்டுமென்றே போலீஸை வாபஸ் பெற்றார்களா? ஆகவே இதில் ஏதோ நடந்திருக்கிறது என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது, என்று நினைக்கிறேன். இந்த ஒரு உதாரணத்திலிருந்து கீழத்தூவலில் நடந்த சம்பவத்தைப்பற்றி விரிவாக பரிசீலனை செய்யவேண்டும். போலீஸினுடைய நடத்தையைப்பற்றி, அவர்கள் கலவரத்தை மேலும் அதிகப்படுத்தி ஒரு ஜாதியை இன்னொரு ஜாதியின் மேல் ஏவிவிட்டு ஹரிஜனங்களுக்கும் மறவர்களுக்கும் இடையில் கலவரத்தை வளர்த்தார்களா என்பதைப் பற்றியும் நாம் விசாரணை செய்ய வேண்டும். அடுத்ததாக அங்கு நிறுவப்பட்டிருந்த போலீஸ் எந்த இடத்திலாவது முன்னேற்பாடாக போய் தீ வைப்பதை தடுக்கவோ அல்லது அமைதியை நிலைநாட்டுவதற்கான எந்த முயற்சிகளையாவது செய்திருக்கிறார்களா என்று பார்த்தால் அவ்விதம் செய்திருப்பதாக தெரியவில்லை. இவ்விதம் செய்யாதது இரண்டாவது குற்றச்சாட்டு. ஆகவே இந்த குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். ஆனால் இதில் கனம் மந்திரி அவர்கள் விசாரணையை துரிதமாக ஆரம்பித்து விட்டார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். இந்த செய்தி வந்த அன்றைய தினமே ஸ்ரீ வெங்கடேஸ்வரன் அவர்களை நியமித்து விசாரிக்கச் சொல்லி, அவர் அறிக்கை தயார் செய்து வெளியிட்டு அது இங்கு வைக்கப் பட்டிருக்கிறது. அவர் நடத்தியது நீதி மன்ற விசாரணை அல்ல (நான் குறிப்பிடுவது "ஜுடிஷியல் என்கொயரி"). ஆனால் சர்க்கார் சொல்லுவது என்னவென்றால் இந்த விசாரணையே நீதியாகத்தான் நடந்திருக்கிறது என்று. காரணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரன் அவர்களுக்கு சாட்சிகளை அழைத்து சாட்சியங்களை வாங்குவதற்கு அவருக்கு வேண்டிய அதிகாரம் கொடுக்கப் பட்டிருந்தது. இதுவே திருப்தியான விசாரணையாகும், உதாரணமாக டால்மியாபுரத்தில் துப்பாக்கி பிரயோகம் நடந்த பொழுதும், தூத்துக்குடியில் நடந்த பொழுதும் நடுவட்டத்தில் நடந்த பொழுதும் இம்மாதிரி அதிகாரிகளை நியமித்து விசாரணை நடத்தியிருக்கிறோம், அவைகள் எல்லாம் பொதுமக்களுக்கு திருப்தியை அளித்திருக்கிறது என்று சொல்லி சர்க்கார் தங்களுடைய பாராட்டுதலை தெரிவித்து தன்னைத்தானே பாராட்டிக் கொண்டு இந்த விசாரணை நீதிமன்ற விசாரணைக்கு ஒப்பானதாகும் என்று கூறுகிறார்கள். இதை ஒரு நீதிமன்ற விசாரணை தான் என்று சட்ட நிபுணத்துவம் தெரிந்தவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பது தான் என் அபிப்பிராயம். ஏனென்றால் துப்பாக்கி பிரயோகம் நடந்த இடங்களிலுள்ள அதாவது வால்பாறையானாலும் சரி, நடுவட்டத்தினாலும் சரி, டால்மியாபுரத்தினாலும் சரி, தூத்துக்குடியினாலும் சரி அந்த இடங்களில் எல்லாம் துப்பாக்கி பிரயோகம் நடந்த போது அங்கு ஜனங்கள் எதற்காக கூடினார்கள்? ஏதாவது அந்த ஜனங்கள் கலவரம் செய்தார்களா அல்லது அமைதியாக இருந்த ஜனங்கள் மீது தான் துப்பாக்கி பிரயோகம் செய்தார்களா, இவைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டதா என்று நான் கேட்க விரும்புகிறேன். இவைகள் எல்லாம் நியாயமா அல்லது அநியாயமா என்பதைபற்றி விசாரணையிலிருந்து தான் தெரியவேண்டும். நடுவட்டத்திலும், டால்மியாபுரத்திலும், தூத்துக்குடியிலும், வால்ப்பாறையிலும் நடந்த

[Sri M. Kalyanasundaram] [28th October 1957

துப்பாக்கிப்பிரயோகங்கள் எப்படிப்பட்டவை ? ஆனால் இங்கே கீழத்தூவலில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் எப்படிப்பட்டது ? கீழத்தூவல் நிகழ்ச்சிபற்றி இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. கீழத்தூவலில் ஆயிரம்பேர் கூடி எங்களுடன் (போலீசுடன்) கைகலக்க வந்தபோது தற்காப்பிற்காக துப்பாக்கிப்பிரயோகம் செய்தோம் என்பது போலீஸ்காரர்களின் வாதம். எதிர்தரப்பிலுள்ளவர்கள்—அங்கேயுள்ள கிராமத்தார்—என்ன சொல்கிறார்கள் ? இதற்கு ஸ்ரீ வெங்கடேஸ்வரனின் ரிப்போர்ட்டைப் பார்ப்போம். ஐந்து பேர்களை கைகளைக் கட்டி போலீசார் சுட்டார்கள் என்று கீழத்தூவல் கிராமத்திலுள்ளவர்கள் பூராவும் ஒரே மாதிரியாகச் சாட்சி சொல்கிறார்கள் என்று அவருடைய அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விஷயத்தில் தீவிரமான அபிப்பிராய வித்தியாசம் இருக்கிறது. அங்கே போலீஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது நியாயமா அநியாயமா என்பது இப்போது விவாதத்திற்குரிய விஷயம் அல்ல. போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திய முறையைப்பற்றித் தான் விசாரிக்கவேண்டும். மற்ற இடங்களில் விசாரணை செய்யவேண்டியது துப்பாக்கிப்பிரயோகம் செய்தது நியாயமா அநியாயமா என்பது ஆகும். அங்கே துப்பாக்கிப்பிரயோகத்தால் போலீசார் படுகொலை செய்துவிட்டார்கள் என்ற அபிப்பிராயம் இருக்கிறது. இந்தத் துப்பாக்கிப் பிரயோகம்பற்றிய அறிக்கையை சர்க்கார் சட்டசபை முன்பு கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால், நடுவட்டம், வால்பாறை முதலிய இடங்களில் நடந்த துப்பாக்கிப்பிரயோகம் பற்றிய விசாரணை அறிக்கை சட்டசபை முன் இன்று வரையில் வைக்கப்படவில்லை. (குறுக்கீடு) மலபார் அங்கத்தினர்களும் சரி, நாங்களும் சரி, அது பற்றிய அறிக்கையைக் கேட்டிருக்கிறோம். ஆனால் அது சபை முன்பு வைக்கப்படவில்லை. முதுகுளத்தூரில் நடந்த சம்பவத்தைப்பற்றி அறிக்கையை சபையில் சமர்ப்பித்த கனம் மந்திரி அவர்கள் திருப்திப்பட்டார்கள். அந்த விசாரணை அறிக்கைபற்றி ஜனங்களில் யார் திருப்தியடைந்தார்கள் ? யார் வந்து, "நாங்கள் திருப்தியடைந்துவிட்டோம்" என்று கனம் போலீஸ் மந்திரி அவர்களுக்கு "செர்டிபிகேட்" கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. திருப்தியடைந்து விட்டதாக கனம் மந்திரி அவர்கள், அவர்களாகவே மாலை போட்டுக் கொள்கிறார்கள். திருப்தியடைந்தவர்கள், சம்பந்தப்பட்ட ஜனங்களா, அல்லது பொதுமக்களா, அல்லது இந்நாட்டுப் பத்திரிகையாளர்களா ? 'போலீஸ் துப்பாக்கிப்பிரயோகம் பற்றிய விசாரணை விஷயத்தில் மற்ற இடங்களில் கையாண்ட முறையையே இங்கேயும் கையாண்டோம்' என்று கூறி தாங்களாகவே கனம் மந்திரி அவர்கள் புகழ்மாலை போட்டுக்கொள்கிறார்கள். 'மற்ற இடங்களில் கையாண்ட முறையையே கையாண்டு இங்கேயும் விசாரணை நடத்தினோம். ஐ.சி.எஸ். ஆபீசர் ஆகிய ஸ்ரீ எஸ். வெங்கடேஸ்வரன் போய் நடத்திய இந்த விசாரணையே நீதிமன்ற விசாரணைக்கு ஒப்பானது.' என்று சொல்லி கனம் மந்திரி அவர்கள் தங்களுக்கு பாராட்டுதலைத் தாங்களாகவே போட்டுக்கொண்டு விட்டார்கள் ; அந்த அறிக்கை பற்றிய விவாதம் சபையில் வரும் வரையில் பொறுத்திருப்பதற்குக்கூட அவர்களுக்கு அவகாசம் இல்லை.

கீழத்தூவல் துப்பாக்கிப்பிரயோகம் பற்றிய விசாரணையின் சில அம்சங்களை மட்டும் நான் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த விசாரணை பூராவையும் நடத்திய அதிகாரி ஒருதலைப் பட்சமாக விசாரணையை நடத்தியிருக்கிறார்கள் என்பதற்கும், அவர் முன்கூட்டியே சில கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு அந்தக் கருத்துக்களுக்குச் சாதகமாக அறிக்கையைத் தயாரித்திருக்கிறார் என்பதற்கும் இரண்டு-மூன்று உதாரணங்கள் கொடுக்கிறேன். அவைகளை கனம் மந்திரி அவர்கள் மனதில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலாவது, திரு. வெங்கடேஸ்வரன் அவர்கள் சென்னையிலிருந்து விசாரணைக்காக பரமக்குடிக்குப் புறப்பட்டுப்போனார். ரெவின்யூ இலாகா வேலைக்காகப் புறப்பட்டுப் போகவில்லை. விசாரணை எப்படி நடத்த வேண்டும் என்பது பற்றி முன்கூட்டியே உத்தரவு கொடுக்கப்பட்டுவிட்டது ; அது முன்பாகவே தெளிவாக்கப்பட்டுவிட்டது. அங்கே சென்ற பிறகு இந்த அதிகாரி டெலிபோனில் இங்கேயுள்ள பிரதம காரியதரிசியுடனோ முதல் மந்திரியுடனோ பேசியிருக்கிறார். அந்த அதிகாரி அப்படிப் பேசியபோது அவராகவே



28th October 1957] [Sri M. Kalyanasundaram]

இங்குள்ளவர்களைக் கூப்பிட்டுப் பேசவில்லை ; பிரதம காரியதரிசியோ முதல் மந்திரியோ அவரைக் கூப்பிட்டுப் பேசும்படி செய்திருக்கிறார்கள். அப்படி அவரைக் கூப்பிட்டுப் பேசவேண்டிய காரணம் என்ன ? அவர்கள் பேசியது உண்மையா, பொய்யா ? துரதிர்ஷ்டவசமாக பரமக்குடியில் தனிப்பட்ட டெலிபோன் இல்லை ; அந்த அதிகாரி தபால் ஆபீஸிற்கு வந்து தான் பேச வேண்டியிருக்கிறது. பிரதம காரியதரிசியோ முதல் மந்திரியோ அவரைக் கூப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள்.

THE HON. SRI K. KAMARAJ NADAR : என்னைப் பொறுத்தவரையில் நான் அவருடன் டெலிபோனில் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : இங்கிருந்து யாரோ அவரை டிரங்கு டெலிபோனில் கூப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அப்படி அவருடன் பேச வேண்டிய காரணம் என்ன?

அடுத்தபடியாக விசாரணை நடத்திய போது சாட்சிகளை ஸ்ரீ வெங்கடேஸ்வரனே தன் இஷ்டம் போல் பொறுக்கிக் கொண்டார், சாட்சிகளை யாரும் கொண்டு வந்து சேர்க்கவில்லை. கிராம மக்களுள் சாட்சிகளை தாமே பொறுக்கியெடுத்துக் கொண்டார். அவர்கள் கொடுத்த சாட்சிகளைத் ரெக்கார்ட் பண்ணியிருக்கிறார்; போலீஸ் சாட்சியங்களையும் ரெக்கார்ட் பண்ணியிருக்கிறார்; அந்த சம்பவங்களைப் பற்றி வைத்திய நிபுணர்கள் கொடுத்த சாட்சியங்களையும் ரெக்கார்ட் பண்ணியிருக்கிறார். இந்த சாட்சியங்களிலிருந்து இவர் ஒரு முடிவிற்கு வருகிறார். என்ன முடிவிற்கு வருகிறார்? "கீழ்த்தூவலில் போலீஸ்காரர்கள் வேண்டுமென்று துப்பாக்கிப்பிரயோகம் செய்ய வில்லை. ஐந்து பேர்களை போலீஸார் கட்டிவைத்துச் சுட்டனர் என்பது, கீழ்த்தூவல் மக்கள் கற்பனை செய்து சொல்லும் சரித்திரம்; ஆகையால் இதற்கு ஆதாரம் இல்லை" என்ற முடிவிற்கு வருகிறார். அப்படி முடிவிற்கு வருபவர் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம். கீழ்த்தூவல் மக்களின் சாட்சியங்களைப்பற்றிக் குறிப்பிடுகிற போது அவர் கூறுவதாவது :—

(Mr. Speaker in the Chair.)

"It is also significant that though the Estate Manager, W.8, who conducted the inquest was in Kilathooval village from about 4 p.m., no one told him about the villagers' version of the occurrence, and the only version which was given to him was the Police version and it was unanimously accepted by the panchayatdars. Evidently, the villagers' version was not ready till later that evening."

"போலீஸ்காரர்கள் தனியாக ஐந்து பேர்களைக் கொண்டுபோய் குளத்திற்குள் வைத்து சுட்டுக் கொன்றார்கள் என்ற கிராமத்தாரின் குற்றச்சாட்டை நான் நம்பவில்லை" என்று விசாரணை அதிகாரி கூறுகிறார். அதற்கு அவர் கூறும் காரணத்தைப் பார்ப்போம். அன்று ஆர்.டி.ஓ. டியூடியில் இல்லாததால், ராமநாதபுரம் எஸ்டேட் மானேஜர் அவருடைய டியூடியை அடிஷனல் சார்ஜாக எடுத்துக் கொண்டிருந்தார். அவரும் ஆர். டி.ஓ. அதிகாரம் பெற்றவர். துப்பாக்கிப்பிரயோகம் அன்று காலை 11 மணிக்கு நடந்தது. அன்று மாலை நான்கு மணிக்கு பிரேத விசாரணை நடத்தப்பட்டது என்று சொல்கிறார். பிரேத விசாரணை நடத்திய சமயத்தில் எஸ்டேட் மானேஜரிடம், இறந்தவர்களைப் போலீஸார் கட்டி வைத்துச் சுட்டதாக யாருமே சொல்ல வில்லை என்று கூறிவிட்டு, அதற்கான காரணத்தை விசாரணை அதிகாரி யூகிக்கிறார். "ஒரு வேளை சாயந்திரம் வரையில் இந்தக் கற்பனை தயாராகவில்லை போல் இருக்கிறது. ஆகையால் அவர்கள் இதைச் சொல்லவில்லை" என்று யூகிக்கிறார். அது உண்மையாக இருக்குமானால், இன்னொரு இடத்தில் அவர் சொல்லும் விவரத்தையே பார்ப்போம். பஞ்சாயத்தார் ஏன் வெளியிலிருந்து வந்தார் என்பதற்கு அவர் சொல்லும் காரணங்களைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. அவர் சொல்லும் காரணங்களைப் பார்ப்போம்.

[Sri M. Kalyanasundaram] [28th October 1957

" At the inquest, he recorded the evidence of Chella Thevan already referred to . . . Attempt had been made to secure the headman who is residing in Melathooval village, but he was not to be found. As Kilathooval was deserved, W.8, i.e. Estate Manager, could secure only one villager of Kilathooval, viz., Servakara Thevan to serve as a Panchayatdar. The remaining four panchayatdars were men belonging to an adjoining village, namely, Vilankalathur."

எஸ்டேட் மானேஜர் சென்ற சமயத்தில் கீழ்த்தூவல் கிராமத்தில் யாரும் இல்லை என்று காரணம் சொல்லுகிறார். பஞ்சாயத்திற்குக் கூட ஸ்ரீ சேர்வைக்காரத் தேவர் என்ற ஒருவர் தான் பஞ்சாயத்தாராக இருப்பதற்கு அந்த கிராமத்திலிருந்து கிடைத்தார் என்றும், மற்ற நான்கு பஞ்சாயத்தார்களை வெளியூரிலிருந்து கொண்டுவர நேர்ந்தது என்றும் எஸ்டேட் மானேஜர் சொன்னார் என்று தெரிகிறது.

எஸ்டேட் மானேஜர் போனபோது இருந்த நிலைமையைபற்றி இன்னொரு இடத்தில் ஸ்ரீ எஸ். வெங்கடேஸ்வரன் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம்.

" As regards the inquest officer, M.8, only one version was available to him and no one came forward to give any other version of the occurrence. He had found the village practically deserted and had no reason even to suspect that a large number of Thevars had been wrongfully confined."

ஆகவே எஸ்டேட் மானேஜர் போன சமயத்தில் அந்த கிராமம் பூராவும் காலியாக இருந்தது என்றும், கிராம மக்கள் பூராவும் அதைவிட்டு வெளியேறி விட்டனர் என்றும், இரண்டு இடங்களில் ஸ்ரீ எஸ். வெங்கடேஸ்வரன் குறிப்பிடுகிறார். அதில் அவருக்கு எது சாதகமாயிருக்கிறதோ அதை எடுத்துக்கொள்கிறார். அந்த கிராமத்தில் பஞ்சாயத்துக்குக் கூட ஆள் கிடைக்கவில்லை. அவ்வளவு பெரிய கிராமத்தில் ஒருவர் தான் கிடைத்தார் என்று சொல்லும்போது, அந்த சமயத்தில் கிராமமே காலியாக இருந்தது என்று சொல்கிறார். அதே சமயத்தில், கிராமமே காலியாக இருக்கும் சமயத்தில், யார் இன்க்வெஸ்ட் அதிகாரியிடம் போய் முறையிட்டிருக்க முடியும் என்று இந்த அதிகாரி எதிர் பார்க்கிறாரோ தெரியவில்லை. அந்த கிராமத்தை காலி செய்ய அவசியம் என்ன ஏற்பட்டது? அவர்கள் ஏன் சொல்லவில்லை என்பதற்குக் காரணம், அந்த கிராமத்தில் யாரும் இல்லை. அவருக்கு சாதகமான இடத்தில் கிராமம் காலியாக இருந்தது என்கிறார். அதுவே அவருக்கு பாதகமாயிருக்கும்போது, கிராமத்திலே ஒருவரும் எஸ்டேட் மானேஜர் முன்பு சொல்லவில்லை. பிறகு கற்பனை செய்திருக்கிறார்கள் என்று விருப்பு வெறுப்புக்கு இடம் கொடுத்து அறிக்கை தயார் செய்திருக்கிறார் என்று எண்ண வேண்டியிருக்கிறது. கிராமத்தார் சாட்சியங்களை ஒப்புக்கொள்ளவேண்டும். வேண்டாம். போலீஸார் சொன்ன சாட்சியங்களையாவது இந்த நீதிபதி, விசாரணைக்குச் சென்ற நீதிபதி, ஒப்புக்கொள்கிறாரா, அல்லது என்ன கருதுகிறார் என்பதைப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். போலீஸார் சாட்சியத்தைப் பார்ப்போம். அவர்கள் சாட்சியம் என்னவென்றால் அந்த கிராமத்தில் 1,000 பேர் இருந்தார்கள் என்பது. ஆயிரம் பேர் கூட்டமாக இருந்தார்கள் என்று சொல்லுகிறார்கள். கூட்டமாக இருந்தவர்களை 303 துப்பாக்கி சுடும் சமயத்தில் ஒவ்வொருவராய்த் துளைத்துக் கொண்டு ஐந்தாறு பேர்கள் மீது பாய முடியும் என்று நிபுணர்கள் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது பல பேர்களைக் காயப்படுத்தாமல் எப்படிச் செல்லும். இப்படி ஐந்து பேர்கள் மேல் மட்டும் பட்டு மற்றவர்கள் மேல் ஏன் படவில்லை? ஆயிரம் பேர்கள், ஒருவர்பின் ஒருவராய் கூட்டமாக இருந்தார்கள். ஆனால் பொறுக்கியெடுத்தாற் போல் ஐந்து பேர்களை மட்டும் [illegible] துளைத்துக்கொண்டு செல்கிறது. அதற்கு அவர் கூறும்



28th October 1957] [Sri M. Kalyanasundaram]

காரணம் : அவர்கள் விலகியிருக்கலாம், அல்லது அவர்கள் பின்னால் இருந்திருக்கலாம். போலீஸ்காரர்கள் சொல்லுகிறார்கள், அவர்கள் கூட்டமாக இருந்தார்கள் என்று. ஆயிரம் பேர்கள் இருந்தார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு அவர் " போலீஸார் எக்ஸாஜெரேட் செய்து சொல்லியிருக்கிறார்கள், ஆனால் 300 பேர்கள் இருந்திருக்கலாம், அதுவும் ஒன்றாக இல்லாமல் பரவலாக இருந்திருக்கலாம், அதனால் ஐந்து பேர்கள் மேல் மட்டும் பட்டிருக்கலாம்" என்று கூறுகிறார். போலீஸாருடைய சாட்சியத்தை திருப்பி அதை அவருக்கு சாதகமாக அனுமானிக்கிறார். 300 பேர்கள் என்று இப்படி அனுமானிக்கிறார். போலீஸார் சொல்வது போல் ஆயிரம் பேர்கள் இல்லை. கூட்டமாகவும் ஒன்றாகவும் இல்லை. "நான் அனுமானிக்கிறேன். 300 பேர் என்று சொல்கிறார்கள். ஐந்துபேர்கள் மட்டும் தனியாக நின்றிருக்கவேண்டும், அந்த ஐந்து பேர்கள் மேல் குண்டுபட்டிருக்கிறது, மற்றவருக்குக் காயம் இல்லை" என்கிறார். நீதிபதி சொல்வதை சபை பார்த்து முடிவு செய்ய வேண்டும். போலீஸார், கிராமத்தார் சாட்சியத்தை இப்படி எடுத்துக் கொள்கிறார். மெடிகல் ஆபீஸர்கள் சாட்சியத்தை என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம். நமக்கெல்லாம் வைத்தியத்தில் தேர்ச்சி அதிகம் இல்லாவிட்டாலும், நமது பகுத்தறிவை உபயோகித்து யோசனைபண்ண வேண்டும்.

" They were moving and even some portions of their thighs under their shorts might have been exposed . . . The evidence of W.19 who gave these wound certificates was hardly cogent or consistent."

அவர் கொடுத்த சாட்சியங்கள் பொருத்தமாகவும் அல்லது தொடர்ச்சியாகவும் இருக்கவில்லை. குழப்பத்தில் இருந்தது. எஸ். வெங்கடேஸ்வரன் அவர்கள் வைத்தியர் அல்ல. அவர் ஒரு ஐ.ஸி.எஸ். அதிகாரி. வைத்தியர்கள் அபிப்பிராயத்தை ஏற்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு விஷயத்தில் இவர் என்ன செய்கிறார். இவர் எழுத வேண்டிய முடிவு இருக்கிறதே, அதற்கு இது விரோதமாக இருக்கிறது. வைத்திய நிபுணர்களின் சாட்சியங்களையும் அப்படியே ஏற்காது, கீழத்தூவல் கொலையானது போலீஸார் வேண்டுமென்று சுட்டுக் கொல்லவில்லை, ஆனால் தற்காப்புக்காகச் சுட்டனர் என்று சொல்கிறார். அதற்கு அனுகூலமாக தரலாம் என்று சொல்லி போலீஸார் சாட்சியங்களையும் வைத்தியர்கள் சாட்சியங்களையும் திரித்துக் கூறியிருக்கிறார்.. இதற்கு அதிகாரியைத்தான் சொல்லவேண்டும்.

" Jamadar Sundaram's wounds.—1. Two linear abrasions about 4 inches long over the lower third of the left thigh front and

2. one linear abrasion 1 inch long over the lower third of the right thigh outer aspect W.12 had a linear abrasion 4 inches long over the middle of the left forearm back and a linear abrasion 8 inches long over the lower third of the right thigh inner aspect."

ஜமேதார் சுந்தரம் என்பவருக்கு நல்லவேளையாக சபாநாயகர்—சபாநாயகரை இங்கே இழுக்கக் கூடாது—ஒரு டாக்டர். " அப்ரேஷன் " என்றால் கீரல் காயம் என்று அர்த்தம் என்று நினைக்கிறேன். சாதாரண காயத்திற்கு "அப்ரேஷன்" என்று சொல்லுவார்கள். இந்த மாதிரி போலீஸ்காரர்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு, போலீஸ் வைத்திய நிபுணர்களிடம் காட்டி மெடிகல் ஸர்டிபிகேட் பெறக்கூடிய சமயத்தில், மூன்று காயங்கள், இரண்டு நான்கு அங்குல நீளம் "லோயர் தேர்ட் ஆப் தி லெப்ட் தை பிரண்ட்" இடது தொடையின் முன் பக்கத்தில் இருக்கின்றன, இன்னொன்று, ஒரு அங்குலம் நீளமுள்ள ஒரு கீரல் காயம் வலது தொடையில் ஏற்பட்டிருக்கிறது. நம் போலீஸ்காரர்கள் துப்பாக்கி சண்டை போடும் போது கால் சராயைப் போட்டுக்கொண்டுதான் போடுவார்கள் என்று நினைக்கிறேன். கால் சராயைக் கழட்டிவிட்டுச் சென்றிருக்கமாட்டார்கள். இவருக்கு கீரல் காயம் ஏற்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் அந்த கிராமத்தார்கள் எதைக் கொண்டு தாக்கியதாகச் சொல்லப்படுகிறது. வேல் கம்பு, தொரட்டுக் கொம்பு, அறிவாள் இவைகளைக் கொண்டு தாக்கியதாகச்

[Sri M. Kalyanasundaram] [28th October 1957

சொல்லப்படுகிறது. கல்லோ, அல்லது மண்ணோ அல்லது வேறு எதையோ கொண்டு தாக்கியதாகச் சாட்சிகள் கூறவில்லை. இவைகளை வீசி எறிந்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். வேல் கம்பு, தொரட்டுக் கம்பு, அறிவாள் இவைகளை எறிந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. தமிழ் நாட்டில் இருக்கிறவர்களுக்கு வேல் கம்பு, தொரட்டுக்கம்பு, அறிவாள் இவைகளை வீசி எறிந்தால் என்ன ஆகும் என்று நிபுணர்கள் சொல்லித்தெரிய வேண்டியதில்லை. வேல் கம்பை வீசினால் கீரல் காயம் உண்டாகாது. தொரட்டுக் கம்பை வீசினால் கால் சராய்க்குள் சென்று கீரல் காயத்தை உண்டாக்காது. அவர்களிடம் அப்போது வேல் கம்பு தொரட்டுக் கம்பு, அறிவாள் முதலியவை இல்லை என்று நமக்கு இருக்கும் பகுத்தறிவை கொண்டு ஊகிக்கலாம். இந்த கீரல் காயம் அவர்கள் சொல்லக்கூடிய ஆயுதங்களைக்கொண்டு ஏற்படாது. நாம் கொஞ்சம் சிந்தனை செய்து பார்க்கவேண்டும். நம்முடைய ஐ.ஸி.எஸ். அதிகாரி மிகவும் நம்பிக்கையுள்ள அதிகாரி, பொது மக்களுடைய பாராட்டுதல் பெற்ற அதிகாரி என்றெல்லாம் நமது போலிஸ் அமைச்சர் சொன்ன அதிகாரி— என்ன சொல்லுகிறார்? இதை சபையின் கவனத்திற்குக் கொண்டுவர சிறிது நேரம் ஆனாலும் பரவாயில்லை, அதைப் படிக்க விரும்புகிறேன். இன்னும் 10, 15 நிமிஷங்களில் முடித்துவிடுகிறேன். கொஞ்சம் நேரமானாலும் மன்னிக்கவேண்டும். இதைச் சீக்கிரம் முடித்து விட்டு மற்ற விஷயங்களைப் பற்றிப் பேச விரும்புகிறேன். இது மிகவும் முக்கியமான விஷயம்.

The hon. Member Sri Kalyanasundaram began to turn over a newspaper cuttings.

THE HON. SRI C. SUBRAMANIAM : May I know from what source the hon. Member is going to read.

SRI M. KALYANASUNDARAM : Newspaper cuttings.

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not know, Sir, whether paper report is correct, particularly in this matter, to rely upon. When citing any evidence given by any witness, certified copy should be made available. I do not think we will be justified in relying on what has appeared in any newspaper.

SRI M. KALYANASUNDARAM : நண்பர் ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்கள் அந்த விசாரணையில் ஆஜராயிருந்தார் என்பதை விசாரணை அதிகாரியே ஒப்புக்கொண்டிருக்கிறார். ராமச்சந்திரன் அவர்கள் கொடுத்த விவரங்கள் அடிப்படையில், செக்ரட்டரி அவர்கள் உங்களிடம் காட்டும் நல்லதையும் எதிர் பார்க்கிறேன், நான் சொல்லுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆனால் ஒரு சாட்சியம் சொல்லியிருப்பதாக சாட்சியத்தைப் படிப்பதாயிருந்தால் ஒரு ஸெர்டிபைட் காப்பி வாங்கி அதையாவது படிக்கவேண்டும் அல்லது ஒரிஜனலிலிருந்து படிக்கவேண்டும். சாட்சி சொன்னதைப் பற்றி சொல்லி நம்பக்கூடியதாக இருக்கவேண்டுமானால் ஒரு ஸெர்டிபைட் காப்பி வாங்கி அதிலிருந்து படிக்க வேண்டும். அதை விட்டு விட்டு நான் நோட்ஸ் எடுத்துப் படிக்கிறேன் என்றால் அது அவ்வளவு சரியாகாது.

MR. SPEAKER : நீங்கள் பேபரைப் படிக்க வேண்டாம். பேபரில் வந்ததை நீங்கள் சொன்னதுபோல் சொல்லலாம்.

SRI M. KALYANASUNDARAM : பத்திரிகைகளில் என்ன வந்தது என்பதற்கும் என்ன நடந்தது என்பதற்கும் நான் குறிப்பு எழுதி வைத்துக் கொண்டிருக்கிறேன்.



28th October 1957]

MR. SPEAKER : ஆட்சேபணை செய்த பிறகு அதை படிக்க வேண்டாம்.

(கனம் ஸ்ரீ சி. சுப்ரமணியம் குறுக்கிட்டார்.)

SRI M. KALYANASUNDARAM : நீங்களாகவே காப்பியை வாங்கிக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அப்படி காப்பி வாங்கிக் கொடுக்க வேண்டிய ரிக்கார்டு இருக்குமோ இருக்காதோ; அதுவே எனக்கு சந்தேகமாக இருக்கிறது. அவர்களாகவே எனக்குக் கொடுத்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல் நான் வாசிப்பதை ஆட்சேபிக்காமல் இருக்க வேண்டியது அவர்களுடைய பொறுப்பு.

THE HON. SRI C. SUBRAMANIAM : காப்பிகளை அவருக்கு நாங்கள் கொடுத்திருக்க வேண்டும் என்று சொன்னார். அதைப்பற்றி பேச்சு வந்தபோது அதாவது இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் பற்றி பேச்சு வந்தபோது லேபர் பாலிசியைப் பற்றி கூட பேசுவோம் என்று கூட சொல்லப்பட்டது. இப்படிச் சொன்னது அவருக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசலாம் என்று சொன்னது அவருக்கு ஞாபகம் இருக்கும். எதைப்பற்றி பேசப்போகிறார் என்று தெரியாமல் இருந்தும் மூட்டை கட்டி வைத்திருக்கவேண்டும் என்று சொன்னால் அதை இந்த சர்க்காரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. அது செய்ய முடியாத காரியமும் ஆகும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : நான் மூட்டை கட்டி வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. ஏதாவது ஒரு என்குயரி நடந்திருந்தால் அதைப்பற்றி தகவல்கள் கொடுக்கவேண்டும் என்று தான் சொல்லுகிறேன். சாதாரணமாக சம்பள கமிஷன் விசாரணை செய்து மெமோராண்டம் கூட அச்சடித்துக் கொடுத்தார்கள். அதைப்போலவே இதற்கும் கொடுத்திருக்க வேண்டும். அதைப்பற்றி இப்பொழுது விவரமாக பேசவேண்டிய அவசியம் இல்லை. அதைப்பற்றி பேசுவதற்கு சந்தர்ப்பம் வரும்போது பேசிக்கொள்ளுகிறேன். இந்தப் பக்கத்திலுள்ளவர்கள் அதைப் பற்றி பேசுவார்கள். நான் படிக்கக் கூடாது என்று ஆட்சேபனை செய்ததைப்பற்றி ரிகார்டில் இருந்தால் போதுமானது.

அடுத்தபடியாக நீளமான காயங்களைப்பற்றி சொல்லவேண்டியதாக இருக்கிறது. அந்தக் காயங்கள் எப்படி ஏற்பட்டிருக்க முடியும்? நீளமான காயங்கள் கூர்மையான கருவியால் ஏற்பட்டிருக்கும். கூர்மையான கருவி ஒன்று உடலில் பட்டு காயம் செய்துகொண்டு உடலில் பிரயாணம் செய்திருக்க வேண்டும். இப்படி ஒரு டாக்டர் வியாக்யானம் இருக்கிறது. வேல் கம்பை தூக்கி எறிந்தால் அது உடலில் பட்டு பெரிய காயம் உண்டாக்கும். அப்படி அதை எறிந்திருந்தால் அது உடலில் பட்டிருந்தால் அது என்னவாகும் என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். வேல் கம்பின் கனம் எவ்வளவு இருக்கிறது, அது உடலில் பாய்ந்து பிரயாணம் செய்திருந்தால் எவ்வளவு காயம் ஏற்பட்டிருக்கும் என்பதை உணர வேண்டும். அது எந்த அளவிற்கு காயம் ஏற்படுத்தும் என்பதையும் யோசிக்க வேண்டும். ஆனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் காயம் என்ன விதத்தில் ஏற்பட்டிருக்கிறது? உள்ளே சதையைக் கிளராமல் மேலேயே இருந்தபடி உராய்ந்து சென்றிருக்கிறது என்று மெடிகல் ஆபீசர் சாட்சியம் கூறியிருக்கிறார், என்பதை திரு. எஸ். வெங்கடேஸ்வரன் அவர்கள் தன்னுடைய ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் காயங்கள் எப்படி ஏற்பட்டிருக்கலாம் என்பதையும் யோசிக்க வேண்டும். போலீஸ்காரர்கள் சொன்னதை எடுத்துக்கொள்ள முடியாது, டாக்டர் சொன்னது ஒரு அளவு பொருத்தமற்ற அளவில் இருக்கிறது என்று நினைக்கிறார். போலீஸ்காரர்கள் நிதானம் இழந்திருக்கிறார்கள், குழப்பமடைந்திருக்கிறார்கள் என்று அவர் அனுதாபப்பட்டு ரிப்போர்ட் எழுதியிருக்கிறார். இவர் மட்டும் நிதானம் இழக்காமல் எல்லாவற்றையும் பரிசீலனை செய்து, கல்லையோ மண்ணையோ எறிந்திருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார், அப்படி கல்லையோ மண்ணையோ எறிந்திருந்தால் இப்படிப்பட்ட காயம்

ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்லுகிறார். இதை ஒப்புக்கொள்வது சாத்தியமா? இது சாத்தியமே இல்லை. முன் கூட்டியே தன் இஷ்டப்படி சில முடிவுக்கு அவர் வந்துவிட்டார். கீழத்தூவல் சம்பவத்தில் நாம் போலீஸைக் கைவிடக்கூடாது என்ற முடிவிற்கு அவர் ஏற்கெனவே வந்திருக்க வேண்டும். போலீஸார் செய்திருப்பது தவறாக இருந்தாலும் கூட நிர்வாகத்தை உத்தேசித்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் இருந்திருக்கலாம். அதைப்பற்றி பரிசீலனை செய்ய விரும்பவில்லை. இது கீழத்தூவல் சம்பந்தப்பட்ட மட்டில் அல்ல. இந்த விசாரணை மேல் நாட்டில் பாதிக்கக்கூடிய அளவில் இருக்கிறது. இது எந்த அளவிற்கு இருக்கிறது என்றால், இந்த தீர்ப்பு யாருக்கும் திருப்தி அளிக்கக் கூடியதாகவே இல்லை. தமிழ் நாட்டிலுள்ள எந்த பத்திரிகையும் இந்த ரிப்போர்ட்டைப்பற்றி திருப்தியாக சொல்லவில்லை. காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த பத்திரிகைகள் கூட இந்த ரிப்போர்ட்டைப்பற்றி திருப்தியாகச் சொல்லவில்லை. ஆகவேதான் ஜுடிஷியல் விசாரணை செய்யவேண்டும் என்று சொல்லுகிறோம். அப்படிச் செய்தால்தான் இதன் உண்மை வெளிவரும் என்று எதிர்பார்க்கிறோம். அப்பொழுது தான் விசாரணை சரியான முறையில் நடைபெறும் என்று நாங்கள் சொல்லுகிறோம். அப்போழுதுதான் விசாரணை திருப்தி அளிக்கக் கூடியதாக இருக்கும். அதற்கு தயாராக இல்லை என்று கூட சொல்லிவிடலாம். அதுவே எங்களுக்குப் போதும். அப்படிச் சொல்லிவிட்டாலும் அதைப்பற்றி எங்களுக்கு கவலை இல்லை. இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் முடிவு திருப்தி அளிக்கக்கூடிய முடிவு என்று சொல்லிவிட வேண்டாம். ஜுடிஷியல் என்குயரி செய்திருந்தால் இந்த முடிவுக்கு வந்திருக்க முடியாது. அப்படி வந்துவிட்டோம் என்று புகழ் மாலை வேண்டுமானால் சூட்டிக்கொள்ளவேண்டாம். அப்படி சூட்டிக்கொள்வதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது என்பதை மட்டும் இந்த சபை முன்பு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய பேச்சில் முக்கியமான குற்றச்சாட்டு என்னவென்றால் மற்ற விஷயங்களைப்பற்றி எடுத்துக்கொள்ளாவிட்டாலும் நிர்வாகத்தில் கூட உத்யோக பதவி விஷயத்தில் ஜாதி வித்யாசத்தைக் காட்டிவருகிறார்கள். அதற்கு எவ்வளவோ உதாரணங்களைக் கொடுக்கலாம். எங்கு பார்த்தாலும் உத்யோகங்கள் கொடுக்கும் விஷயத்தில் கூட ஜாதி வித்யாசம் காட்டப்படுகிறது. அந்த முறையைக் கையாளுவது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பதைமட்டும் எடுத்துக் காட்டுகிறேன். நாம் நடத்துவது ஒரு செகூலர் ஸ்டேட் என்று சொல்லிக்கொண்டு—அதாவது மதசார்பற்ற ஜனநாயக ராஜ்யம் என்று சொல்லிக்கொண்டு—உத்யோகப் பதவி உயர்வில்கூட ஜாதி வேற்றுமை பாராட்டுவது என்பது சரியல்ல. மத சார்பற்ற ஒரு ராஜ்யத்தை நடத்துகிறோம் என்ற ஒரு ஆஸ்தி நம்முடைய அரசியல் சட்டத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆஸ்தியையும் இழந்துவிடவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை நான் மக்களின் சார்பாக கேட்டுக்கொள்ளுகிறேன். உத்யோக முறையில் உயர்ந்த பதவிகள் கொடுப்பதில் எவ்வளவு தூரம் ஜாதி வேற்றுமை காட்டப்பட்டிருக்கிறது என்பதை உதாரணங்களுடன் என்னால் எடுத்துக்காட்ட முடியும். அதை சந்தர்ப்பம் வரும்போது எடுத்துக்காட்டுகிறேன். இந்த விதத்தில் அரசாங்கத்தை நடத்தி வந்தால் பாட்டாளி-படிப்பாளி மக்களிடையே ஒற்றுமை குலைந்துவிடும். அதனால் தேசத்தின் முன்னேற்றம் பாதிக்கப்படும். ஐந்து வருஷ திட்டம் சுபிட்சமாக நடைபெறாது. தேசத்தின் ஒற்றுமையைக் குலைக்கக் கூடாது. இவைகளை கனம் மந்திரி அவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நாடு அழிந்து போய்விடும். உத்யோகங்கள் கொடுப்பதில் கம்யூனல் ஜி. ஓ. ஏற்படுத்தியதை நான் வரவேற்கிறேன். அப்படிப்பட்ட ஒரு ஜி. ஓ. இருந்ததால்தான் நாட்டிலுள்ள வேலையில்லா திண்டாட்டம் ஓரளவு குறைந்துவந்தது. ஆனால் உத்யோகங்கள் கொடுத்த பிறகு அவர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பதில் இந்த முறையைக் கையாளுவது சரியல்ல. அது நம்முடைய ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல. மத சார்பற்ற நாடு என்று சொல்வது அர்த்தமற்றதாகி



விடும். முதுகுளத்தூர் சம்பவத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு அதில் ஜாதி மனப்பான்மையை புகுத்துவது என்பது சரியல்ல. அங்குள்ள நிலைமையை பயன்படுத்திக்கொண்டு அங்குள்ள ஹரிஜனங்களுடைய கீழ் நிலையை பயன் படுத்திக்கொண்டு அவர்களை உயர்த்தவேண்டும் என்ற இந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக்கொண்டு இப்படிப்பட்ட ஜாதி வித்யாசத்தை புகுத்துவது என்பது சரியல்ல. இதை ஒரு அரசியல் சூதாட்டமாக நடத்தக்கூடாது. இன்னும் அதற்கு வேண்டிய போலீஸ் உதவியையும் வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் இறங்குவது என்பது கூடாது. ஜாதி துவேஷத்தை பயன்படுத்திக்கொண்டு அரசியல் சூதாட்டம் நடத்தக்கூடாது. இதை பயன்படுத்திக்கொண்டு எதிர்க்கட்சியை ஒடுக்குவதற்கும் இந்த மந்திரி சபை நடவடிக்கை எடுத்துவருகிறது. அதில் நம்முடைய முதல் மந்திரி ஸ்ரீ கா ராஜ் அவர்களுக்கும் போலீஸ் மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் அவர்களுக்கும் வேண்டிய பொறுப்பு இருக்கிறது. ஆனால் நான் காங்கிரஸைப்பற்றி குறைகூறவில்லை. காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பற்றிகுறைகூறவில்லை. என்னுடைய குற்றச்சாட்டு பூராவும் முதன் மந்திரி காமராஜ் மீதும் போலீஸ் மந்திரி பக்தவத்சலத்தின் மீதும்தான். வகுப்புக் கலவரத்தைப் பயன்படுத்திக்கொண்டும் போலீஸ் அதிகாரத்தை பயன்படுத்திக்கொண்டும் தங்களுடைய கட்சியை பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று முயற்சி எடுப்பது சரியல்ல. இப்படிப்பட்ட சம்பவங்கள் மற்ற ஜில்லாக்களிலும் பரவாமல் இருக்கவேண்டும், அப்படி பரவாமல் நிறுத்தவேண்டும், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். கனம் மந்திரி அவர்கள் தன்னுடைய அறிக்கையில் நடந்த சம்பவம் பூராவையும் எடுத்துக்கூறவில்லை. ஐந்து இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருப்பதாகச் சொல்லுகிறார். அந்த விவரங்களும் சரியல்ல. இன்னும் அநேகம் இடங்களில் நடந்திருக்கின்றன. பகிரங்கமான விசாரணை நடைபெற்றால் அந்த விவரங்கள் பூராவும் வெளிவரும். அப்படிப்பட்ட விசாரணை நடத்தினால்தான் சர்க்காரின் போக்கு என்ன என்பதை திட்டவட்டமாக தெரிந்துகொள்ள முடியும். அதற்கு வேண்டிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் இப்படிப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதே சமயத்தில் இன்னும் சில விஷயங்களைப் பற்றி குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது. அங்குள்ள மக்களிடத்தில் நம்பிக்கையை உண்டாக்க வேண்டியது நம்முடைய கடமையாக இருக்கிறது. அங்குள்ள ஹரிஜனங்களும் மறவர்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கு தீவிரமான நடவடிக்கையை நாம் எடுத்துக்கொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்காக நாம் என்ன செய்யவேண்டுமென்றால் இங்குள்ள கட்சிகள் அவ்வளவும் சேர்ந்து, காங்கிரஸ்காரர்களும் அவர்களும் சேர்ந்து ஒரு கட்சியை அமைத்து அங்கு சென்று ஆலோசனைசெய்து அங்குள்ள மறவர்களும் ஹரிஜனங்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கு வழிவகை செய்யவேண்டும். வெறும் போலீஸை மட்டும் நம்பி இருப்பதில் பிரயோசனம் இல்லை. நிர்வாகத்தையும் நம்பி இருக்கக்கூடாது என்பதை திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ளுகிறேன். ஆகவேதான் இந்தத் தீர்மானத்தை நான் கொண்டுவந்திருக்கிறேன். இந்த தீர்மானத்தை எல்லா அங்கத்தினர்களும் காங்கிரஸ் கட்சியிலுள்ள அங்கத்தினர்களும், அவர்கள் தங்களுடைய மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல், இந்தத் தீர்மானத்திற்கு சாதமாக வோட்டு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

* **SRI T. L. SASIVARNA THEVAR:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்தச் சபைக்கு வந்ததற்குப் பிறகு முதலாவதாகப் பேசக்கூடிய பேச்சு இன்றுதான். ஒரு அங்கத்தினர் முதன் முதலாகப் பேசக்கூடிய பேச்சை சட்டசபை முறைப்படி "மெய்டன் ஸ்பீச்" அதாவது கன்னிப் பேச்சு என்று சொல்வார்கள். நான் டெல்லிக் கூட்டத்தில் பல சந்தர்ப்பங்களில் ஏதோ எனக்குத் தெரிந்த அளவு பேசியிருந்தபோதிலுங் கூட, சட்டசபையில் பேசக்கூடிய பேச்சு இதுதான் முதலாவதாக இருப்பதால், தீர்மானத்தைப் பிரேரேபித்த நண்பர் கனம் கல்யாணசுந்தரம்

அவர்களை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு இடைமறித்தார்களோ அந்த அளவுக்கு என்னுடைய பேச்சின் நடுவே இடை மறிக்காமல் இருப்பார்களானால் நலமாக இருக்கும் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். நான் சொல்லக்கூடிய விஷயம் பூராவையும் சவிஸ்தாரமாக முன்னால் சொல்லிவிடுகிறேன். இடையில் கனம் மந்திரி அவர்களுக்கோ அல்லது அங்கத்தினர்களுக்கோ சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் கடைசியில் கேட்டால் அதற்கு நான் பதில் சொல்கின்றேன். அதற்கிடையிலே அனுவசியமாக தொந்தரவுகள் கொடுத்து என்னுடைய பேச்சின் முறையைப் பாதிக்க வேண்டாம் என்று உங்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். அதற்குரிய அனுகூலமான தன்மையை நமது சபாநாயகர் அவர்கள் எனக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று நான் வணக்கமாகக் கேட்டுக்கொண்டு என்னுடைய பிரசங்கத்தை ஆரம்பிக்கின்றேன்.

கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் ஆமோதிக்கிறேன். முதுகுளத்தூர் பிராந்தியத்தில் நடந்த இந்தக் கலவரத்துக்கு ஆரம்பமுதலே நாங்கள் சொல்லக்கூடிய, அதாவது பார்வர்ட் பிளாக் கட்சியினர் சொல்லக்கூடிய, குற்றச்சாட்டு என்னவென்றால், அரசியல் காரணத்திற்காக ஆளும் கட்சியினர் செய்த சதி என்பதுதான். ஆனால், இது வகுப்புவாதக் கலவரம், அரசியல் சம்பந்தம் இல்லை என்பது அவர்களுடைய குற்றச்சாட்டு. நாங்கள் சொல்லுகிற குற்றச்சாட்டுக்கு உள்ள ஆதாரங்களை உங்களுக்கு முன்னால் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கலவரம் ஆரம்பித்த உடனேயே நமது கனம் முதல் அமைச்சர் அவர்கள் மதுரைமாநகரில் இருந்தார். 14, 15, 16 தேதிகளில் முதலமைச்சர் மதுரையில் இருந்தார் என்று நினைக்கிறேன்.

* THE HON. SRI KAMARAJ NADAR : 14-ந் தேதி இரவு அங்கு வந்தேன். 15, 16-ந் தேதிகளில் அங்கு இருந்தேன். 16-ந் தேதி சாயந்திரம் ஐந்து மணி வரையில் நான் அங்கு இருந்தேன்.

* SRI T. L. SASIVARNA THEVAR : கனம் முதல் அமைச்சர் அவர்கள் மதுரையில் 15, 16 தேதிகளில் இருந்ததாக அவரே ஒப்புக்கொண்டார். ஐந்து மணிக்குப் புறப்பட்டுப் போனபோதிலும் அதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. முதலமைச்சர் சென்னைக்குத் திரும்பி வந்தவுடனே பத்திரிகையொன்றில் ஒரு அறிக்கை விட்டார். அந்த அறிக்கையில் “இம்மாதிரி வகுப்புக் கலவரம் அந்தப் பிராந்தியத்தில் இன்று மட்டும் புதிது அல்ல; 20 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இருக்கிறது” என்று அவர் குற்றம் சாட்டிச் சொன்னார். ஆனால், அதே குற்றச்சாட்டை கனம் முதல் அமைச்சர் அவர்கள் மதுரையில் இருந்த இரண்டு நாட்களிலோ, அல்லது அதற்கு முன்னதாக அந்தப் பிராந்தியத்தில் இருந்தபோதோ அவர் சொல்லவில்லை என்பதை நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். அதிலிருந்து என்ன தெரிகிறது? அவர் சென்னைக்கு வந்த பிற்பாடு, அதற்கு வேறு ‘கலர்’ கொடுக்கவேண்டுமென்பதாக இங்கேயுள்ள சக ஊழியர்களோடு கலந்து பேசியபடி அந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். அப்படி நினைப்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. நான் சொல்வதை நல்ல முறையிலே யோசித்துப் பார்த்தால் நீங்கள் ஒப்புக்கொள்ளலாம்.

அதற்குப் பிற்பாடு நேற்றைய தினம் நமது கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் உங்கள் முன்னால் சமர்ப்பித்த அவரது அறிக்கையிலே அதை அனுசரித்து சில குற்றச்சாட்டுகள் குறிப்பிட்டிருந்தார். 1930, 1932-ம் வருஷங்களிலிருந்து அந்தப் பிராந்தியத்தில் இம்மாதிரி வகுப்புக் கலவரங்கள் இருந்தன என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதன் உண்மையான தன்மை அடியேனுக்குத் தெரியும். திருவாடானை பகுதியிலும் காரைக்குடி பகுதியிலும் ஹரிஜனங்கள்-நாடார் கலகம் என்று அன்றைய தினம் கூறப்பட்டது. நாடார் என்றால் கள்ளர்கள். ஹரிஜனங்கள் அங்கே பள்ளர்கள். தங்களுக்கு ஏற்பட்ட சில குறைகள் நிவர்த்திக்கப்



படாவிடில் கிளர்ச்சிகள் செய்வோம் என்று சொல்லி அதைப்பற்றி தகராறு ஏற்பட்டதாக அன்றைய தினம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். மகாத்மா காந்தியடிகள்கூட அது சம்பந்தப்பட்டமட்டில் முயற்சி செய்தார் என்றும் தெரியும். தமிழ் நாட்டின் ஹரிஜன சேவா சங்கத் தலைவர், காலம் சென்ற டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், மதுரை நகரைச் சார்ந்த ஹரிஜனத்தந்தை நமது மதிப்பிற்குரிய எ. வைத்தியநாத அய்யர் அவர்களும் மற்றவர்களும் கூடி அதில் பெரும்பாலும் முயற்சி செய்து நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்தார்கள் என்பதும் அடியேனுக்குத் தெரியும். அந்தக் காலத்தில்கூட, உலகத்திலேயுள்ள மக்களிடையே செல்வாக்கு பெற்ற தலைவர் மகாத்மா காந்தியடிகளால் நல்ல முறையிலே இரு சாராரும் ஒத்துப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டது என்பதை அன்றுள்ள மக்கள் அறிவார்கள். அந்தச் சம்பவங்களைத்தான் நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் தம்முடைய அறிக்கையில் குறிப்பிட்டிருப்பார் என்று நினைக்கிறேன். அன்றைக்கு ஏற்பட்ட கலவரத்தில், இப்பொழுது சமீபத்தில் ஏற்பட்ட மாதிரி பரவலாக எங்கும் ஏற்பட்டுவிடவில்லை. ஒரே ஒரு கிராமத்தில்தான் தகராறு ஏற்பட்டது. சில பேர்மீது ஜாமீன் கேஸ் போட்டார்கள். இன்னொரு கிராமத்தில் சிலருக்கு சில காயங்கள் ஏற்பட்டன. அந்த இரண்டு ஊர்களில் கலவரம் ஏற்பட்டதே தவிர, மற்ற இடங்களுக்குப் பரவவில்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். 1930, 1932-ம் வருஷங்களிலே இந்த அளவுக்கு 100 கிராமங்களில் கலகமோ, அல்லது இத்தகைய காயங்களோ அங்கு ஏற்படவில்லை.

1932-க்குப் பிறகு இப்பொழுது 25 ஆண்டுகள் பிந்தி இருக்கிறோம். இதுவரை இந்தியா பூராவும் ஹரிஜன முன்னேற்ற சங்கம் நன்றாக வேலை செய்து நல்ல முறையிலே பாதுகாக்கப்பட்டு வளர்ச்சி அடைந்துவந்திருக்கிறது என்பதையாரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அது உண்மையில்லையென்றால் ஆட்சி பீடத்தில் இருக்கும் காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஹரிஜனங்களுக்கு நிறையச் செய்திருப்பதாகச் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் வெட்கப்பட வேண்டுமேதவிர வேறு இல்லை. 1932-ம் வருஷத்தில் கலவரங்கள் இரண்டு கிராமத்தில்தான் இருந்தன. ஆனால், 1957-ல் மட்டும் 100 கிராமங்களுக்குப் போவானேன் என்று நான் கேட்கிறேன். ஆகவே, என்ன தெரிகிறது? இது உண்மையிலேயே ஜாதியின் பேரால் ஏற்பட்ட கலவரம் அல்ல என்று நான் நிச்சயமாக விளக்க முடியும்.

இந்தக் கலவரங்களுக்கு அடிப்படையாக இருப்பதாக ஒரு காரணத்தைக் குறிப்பிடுகின்றார் போலீஸ் அமைச்சர் அவர்கள். வீரம்பலிலுள்ள ஹரிஜனங்களுக்கும் இளஞ்சாம்பூரிலுள்ள மறவர்களுக்கும் ஏற்பட்ட சண்டையைப் பற்றி அவர் குறிப்பிட்டார். நான் அந்த தொகுதியைச் சேர்ந்தவன். அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்தவன். வழக்கு நடந்தது எனக்கு நன்றாகத் தெரியும். அந்த வழக்கு ஹரிஜனங்களுக்கும் தேவர்களுக்கும் ஏற்பட்ட சண்டையினால் அல்ல. ஞானமுத்து என்னும் ஹரிஜன கிறிஸ்தவருக்கும் அங்கேயுள்ள தேவருக்கும் நிலத் தகராறு சம்பந்தமாக ஏற்பட்ட கலகமே தவிர, ஜாதிக் கலகம் அல்ல. இதை ரிகார்டு மூலமாக “ப்ரூவ்” செய்ய முடியும். ஜட்ஜ்மெண்ட் ஆர்டர் கொண்டுவர முடியும். அந்தச் சண்டையிலே நான்கு ஹரிஜனங்கள் இரண்டு மறவர்கள் இறந்து போனார்கள். அதற்குப் பிற்பாடு வழக்கு நடந்தது. சற்றேறக்குறைய ஐந்தாறுபேர்கள் தண்டனை பெற்றார்கள். இன்னும் சிலர் ஜெயிலில் இருக்கிறார்கள். அந்தக் கலகத்துக்கும் ஜாதி உணர்ச்சிக்கும் சம்பந்தமே இல்லை.

அமைச்சர் அவர்கள் மூன்று அடிப்படைக் காரணங்களைக் குறிப்பிட்டு, அவை காரணமாகத்தான் இந்தக் கலவரங்கள் நடந்தன என்று சொன்னார். அவை ஜாதிக் கலகங்கள் அல்ல என்று நான் சொல்லும் வாதத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம். முதுகுளத்தூரில் நடந்த சம்பவங்களுக்கு போலீஸ் மந்திரி அவர்கள் கூறும் மூன்று காரணங்களும் நியாயமானவை அல்ல என்று நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

எங்கள் பிராந்தியத்தைப் பற்றி சில விஷயங்கள் சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன். எங்கள் பிராந்தியத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து, அங்குள்ள நிலைமையை நேரிடையாகப் பார்த்த அங்கத்தினர்கள் இங்கு

[Sri T. L. Sasivarna Thevar] [28th October 1957

இருக்கமாட்டார்கள். உங்கள் பிராந்தியங்களிலும், இன்னும் மதுரை போன்ற மற்ற ஜில்லாக்களிலும் ஹரிஜனங்கள் வசிப்பதற்குத் தனி இடங்கள் இருக்கின்றன. ஜாதி இந்துக்கள் வசிப்பதற்கு வேறு இடம் இருக்கும். ஹரிஜனங்கள் "பறச்சேரி" என்ற முறையிலே பிரித்து வைக்கப்பட்டிருப்பார்கள். ஆனால், எங்கள் தாலூகாவில் அப்படி இல்லவே இல்லை என்று நான் சொல்லும்போது அது உங்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கும். ஒரு மறவர் இருக்கும் இடம் ஹரிஜன் வீடாக இருக்கும். ஒரு முக்குலத்தோர் இருக்கும் இடம் மறவர் வீடாக இருக்கும். இன்னொருவர் வசிக்கும் வீடு வண்ணருடைய வீடாக இருக்கும். இம்மாதிரி ஒன்றுக்கொன்று ஐக்கியமாக வைத்துக்கொண்டு வீடு இருக்குமே தவிர, பிரிந்த முறையில், தனித்த வீடுகள் கிடையாது. இதை ஹரிஜன அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் வந்தபோது பார்த்திருக்கலாம். மறவர் வீடும் ஹரிஜன வீடும் ஒரே தெருவில் கலந்திருக்கிறது. இதை நேரில் பார்த்திருக்கலாம். திரு. தத்தார் அவர்களுக்கும் காண்பித்தோம். ஆக, அங்கு இப்படி ஹரிஜனங்களுக்கும் மறவர்களுக்கும் சண்டையோ தகராறோ இல்லை. அமைதியாகவே வாழ்கிறார்கள். இந்த மாதிரியாக எங்கள் பிராந்தியத்தில் பெரும் பகுதி கிராமங்களில் ஹரிஜனங்களின் நிலைமை இருக்கிறது.

இரண்டாவதாக, சென்ற கால சரித்திரத்தை சற்று பார்த்தால், மறவர்களும், பள்ளர்களும் அதாவது ஹரிஜனங்களும், தகப்பன்-பிள்ளை பந்துத்வ முறையிலேயே வாழ்ந்துவந்திருக்கிறார்களே ஒழிய, வேறு முறையில் அல்ல. கட்டபொம்மன் இந்நாட்டில் பிரிட்டிஷாருக்கு எதிராக நடத்திய புரட்சியின்போது பகதூர் வெள்ளைத் தேவர் என்று சொல்லக்கூடிய மறவர்தான் அவருக்கு **Commander-in-chief** ஆக இருந்தார். இவருக்கு பாதுகாப்பாளராக இருந்த சுந்தரலிங்கம் என்பவர் ஒரு ஹரிஜன் என்பதை இந்த சமயத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சிவாஜி கணேசன் நடத்தும் கட்டபொம்மன் நாடகத்தை நமது நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்ரமணியமும் சென்று பார்த்திருக்கிறார். அதில் வரும் சுந்தரலிங்கம் என்பவர் யார் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளும்படி அவரைக் கேட்டுக்கொள்கிறேன். சுந்தரலிங்கம் ஒரு பள்ளர், குடும்பன் அதாவது ஹரிஜன், என்று சரித்திர ஏடுகளில் காணப்படும். இதே மாதிரிதான் எங்கள் பிராந்தியத்திலும், திருநெல்வேலியிலும் மறவர்கள் ஹரிஜனங்களையே **Body guards**-ஆக வைத்திருக்கிறார்கள். ஹரிஜனங்களும் மறவர்களும் நல்ல முறையிலே ஒன்றாக வாழ்ந்துவந்திருக்கிறார்கள். இன்றைய தினம் ஸ்ரீ தேவருடைய ஒரு எஸ்டேட்டில் 400 பேர் வேலை செய்கிறவர்களில் 300 பேர் ஹரிஜனங்கள். அவருடைய பசும் பொன் எஸ்டேட்டில் வேலை செய்யும் 200 பேரில் 180 பேர் ஹரிஜனங்கள். மறவர்கள் அதிகமாக உள்ள இடங்களில்கூட ஹரிஜனங்கள் ஒற்றுமையாக வேலைசெய்கிறார்கள்.

அடுத்தபடியாக ஹரிஜனங்கள் காலில் செருப்பு அணியக்கூடாது, குடை பிடிக்கக் கூடாது, பெண்கள் மேல் வஸ்திரம் அணியக் கூடாது என்று அங்குள்ள ஜாதி இந்துக்கள் கட்டுப்படுத்துவதாக குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டன. அது முற்றிலும் பொய். இதை நான் ஆதார பூர்வமாக நிரூபிக்க முடியும். இங்குள்ள ஆட்சியாளர்கள்........

**The Hon. Sri P. KAKKAN:** போன வருடம் பரமக்குடி தாலூகாவில் ஹரிஜனங்கள் சட்டை போடக்கூடாது, காலில் செருப்பு அணியக் கூடாது என்று கட்டுப்பாடு செயயப்பட்டதை எதிர்த்து அங்கு ஹரிஜனங்கள் "அறப்போர்" கிளர்ச்சி செய்ததன் காரணமாக செக்ஷன் 107-படி ஒரு வழக்கு தாக்கல் ஆகி அது பின்னர் வாபஸ் பெறப்பட்டது. இதனால் ஹரிஜனங்கள் அப்பகுதியில் தாராளமாக செருப்புப் போட்டுக்கொள்ளவோ, குடை பிடித்துக்கொள்ளவோ முடியாமல் இருந்தனர் என்பது தெளிவாகிறது.

**Sri T. L. SASIVARNA THEVAR:** அந்தப் பிராந்தியம் அடியேனுடைய தொகுதி அல்ல என்பதை கனம் அமைச்சரவர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதி முதுகளத்தூர் தொகுதி. முதுகளத்தூர் பயங்கரம் என்று ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் எழுதியிருப்பது அடியேனுடைய தொகுதியைப் பற்றித்தான். வேறு ஒரு



28th October 1957] [Sri T. L. Sasivarna Thevar]

தொகுதியில் நடந்ததாக சொல்லப்படும் ஒரு நிகழ்சிக்கு எங்கள் தொகுதி எப்படி பொறுப்பாகமுடியும் என்று எனக்கு புரியவில்லை. இம்மாதிரி பாகுபாடுகள் எங்கள் தொகுதியில் ஜாஸ்தியாக இல்லை. எங்கள் தொகுதியில் உள்ள ஹரிஜனங்கள் காலில் செருப்பு அணியக்கூடாது, சட்டை போடக் கூடாது, பெண்கள் மேல் வஸ்திரம் அணியக்கூடாது என்று சொல்லி அவர்களை அடித்ததாகவும், துன்புறுத்தியதாகவும் சர்க்காருக்கு இதுவரை ஏதாவது புகார்கள் வந்திருக்கின்றனவா? அப்படி வந்திருந்தால் அவைகளை இச் சபை முன்பு வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அவ்விதம் சர்க்காருக்கு புகார்கள் வந்திருக்காது என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் எங்கள் தொகுதியில் வகுப்பு ரீதியான பூசல்கள் இருந்ததே கிடையாது.

* **Sri K. B. S. MANI**; On a point of order Sir. ஹரிஜனங்கள் அவ்விதம் சர்க்காருக்கு புகார் செய்திருந்தால், அங்கு வாழ முடியாது என்பது கனம் அங்கத்தினருடைய மனச்சாட்சிக்கே தெரியும்.

* **Mr. SPEAKER**: அது எப்படி point of order ஆகமுடியும்? கனம் அங்கத்தினருக்கு பேச வாய்ப்பு ஏற்படும்போது அவர் பேச வேண்டியதைப் பேசலாம்.

**Sri T. L. SASIVARNA THEVAR:** கனம் அங்கத்தினர் ஒரு காரணம் சொல்கிறார். யார் **complaint** கொடுத்தாலும் அவர்களை வைத்து வைக்க மாட்டார்கள் என்று சொல்வது வழக்கமாக சொல்லப்படும் புகார்தான். இதில் உண்மை இல்லை. இந்தக் கலவரங்களுக்கு ஜாதி துவேஷம் காரணமே இல்லை. அரசியல் வேறுபாடுகளே காரணம். அப்பகுதியில் ஸ்ரீ முத்துராமலிங்க தேவருடைய செல்வாக்கை எப்படியாவது அழித்துவிடவேண்டும் என்பதே முக்கிய அரசியல் காரணம். இதைச் செய்வதுதான் காங்கிரஸ்காரர்களின் வேலை. என் தொகுதி சம்பந்தப்பட்ட மட்டில் 1937-ல் நடந்த தேர்தலில் ஸ்ரீ தேவர் அவர்கள் காங்கிரஸ் சார்பில் நிறுத்தி வைக்கப்பட்டார். ராமநாதபுரம் சேதுபதி அவர்களை எதிர்த்து நிற்க ஸ்ரீ தேவர் ஒருவரால்தான் முடியுமென்று கருதி அவரை நிறுத்திவைத்தார்கள். அவரும் ஜெயித்தார் என்கிற விஷயம் அப்போது முதல் அமைச்சராக இருந்தவருக்கு நன்றாய் தெரியும். பிறகு 1946-ம் வருஷம் நடந்த தேர்தலில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பிறகு 1949-ம் வருஷத்தில் காங்கிரஸை விட்டு பிரிந்து **Forward Block** கட்சியில் சேர்ந்தார். அதனால் ஸ்ரீ தேவருக்கு காங்கிரஸை எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மறுபடியும் 1952-ம் வருஷத்தில் நடந்த பொது தேர்தலில் பாராளுமன்றத்திற்கும், சென்னை சட்டசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாராளுமன்றத்தின் அங்கத்தினர் பதவியை ராஜிநாமா செய்து விட்டு சட்டசபையில் அங்கத்தினராக இருந்து வந்தார். அந்த தேர்தலில் காங்கிரஸ்காரர்கள்தான் ஜாதி அடிப்படையில் தேர்தல் நடத்த முன் வந்தார்கள். நாங்கள் "முக்குலத்து மக்கள்" என்று சொல்லப்படுபவர்கள், அதாவது மறவர்கள், அகமுடியார்கள், கள்ளர்கள். அகமுடியார்கள் ஜாஸ்தியாக உள்ள ஒரு தொகுதியை சென்ற தேர்தலில் இன்னொரு தொகுதியுடன் சேர்த்து, அதற்கு தேர்தல் நடந்தது. இதற்கு காரணம் காங்கிரஸ் சார்பில் நின்றவருக்கு அகமுடியர்களுடைய வோட் பூராவும் கிடைக்கும் என்ற நம்பிக்கைத்தான். அப்படி நிறுத்தப்பட்டவர் ஒரு காங்கிரஸ்காரர் அல்ல, ஒரு சாதாரண வக்கீல்தான். அவரை நிறுத்தி வைத்து நல்ல முறையிலே வோட்டு பெறலாம் என்று நம்பினார்கள். அந்த சமயத்தில் "வன்னியர் வோட்டு வன்னியருக்கே" என்ற அடிப்படையில் தேர்தல் பிரசாரம் செய்யப்பட்டது போல் எங்கள் பிராந்தியத்திலும் அகமுடியர் வோட்டு அகமுடியருக்கே என்று காங்கிரஸ்காரர்கள் பிரசாரம் செய்தார்கள். இப்படி செய்தால், அங்குள்ள மக்களை பிரித்து ஸ்ரீ தேவரை சுலபமாக தோற்கடிக்க முடியும் என்று எண்ணினார்கள். ஆனால் ஸ்ரீ தேவரை எதிர்த்து நின்று ஸ்ரீ ஷண்முக சுந்தர சேர்வை என்பவரை ஸ்ரீ தேவர் சுமார் 17,000 வோட்டு வித்தியாசத்தில் தோற்கடித்தார். அந்த தொகுதி இரட்டை அங்கத்தினர் தொகுதி. அதில் ஸ்ரீ தேவருக்கு சுமார் 33,000 வோட்டுக்கு மேல் கிடைத்தது. அவரை எதிர்த்த காங்கிரஸ்காரருக்கு

14,000 வோட்டு கிடைத்தது. காங்கிரஸில் நிறுத்தப்பட்ட ஹரிஜன அபேட்சகருக்கு 12,000 வோட்டும், ஸ்ரீ தேவரால் நிறுத்தப்பட்ட ஹரிஜன அபேட்சகருக்கு ஸ்ரீ தேவரைக்காட்டிலும் 2,000 வோட்டு அதிகம் கிடைத்தது. இதிலிருந்து எங்கள் பகுதியில் ஜாதி வித்தியாசங்கள் இல்லை என்பது நன்றாகத் தெரியும்.

1952-வது வருடத் தேர்தலின் முடிவு உங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்பொழுது நமது மாகாணத்திலே காங்கிரஸ் சர்க்கார் அமைக்க முடியாமல் படு தோல்வி ஏற்பட்டதும், மந்திரிமார்கள் ஒரேயடியாக தோற்றுப்போனதும் சரித்திரம் கண்ட உண்மை. அன்றையதினம் சர்க்காரை எதிர்க்கட்சியினர் கைப்பற்றும் நிலைமையை தவிர்ப்பதற்காக காலம் சென்ற நமது கனம் ராஜாஜி அவர்கள் (சிரிப்பு) U.D.F. என்ற ஸ்தாபனத்தை அமைத்து. . . வார்த்தை தவறி வந்துவிட்டது. " காலம் சென்ற " என்ற வார்த்தைகளை நான் வாபஸ் பெற்றுக்கொள்ளுகிறேன். நான் புதிதாகப் பேசுவதால் தவறுதல்கள் ஏற்பட்டால் " மார்ஜின் " கொடுக்க வேண்டுமென்று முன்னமேயே சொன்னேன். ராஜாஜி அவர்கள் தலைமையிலே அரசாங்கத்தை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அந்த வகையிலே அன்றையதினம் ஆளும் கட்சியினருக்கு தேவர் மேல் பொறாமை ஏற்பட்டது. தேவர் பாராளுமன்றத்தின் அங்கத்தினர் பதவியை ராஜிநாமா செய்தார்கள். உபதேர்தல் வந்தது. இப்பொழுது இங்கு அங்கம் வகிக்கும் ஸ்ரீ எம். டி. ராமசுவாமி அவர்களை நாங்கள் நிறுத்திவைத்தோம். அம்மையார் ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் காங்கிரஸ் சார்பில் நின்றார்கள். போட்டி நடந்தது. நாங்கள்தான் ஜெயித்தோம். காங்கிரஸ் தோற்றுப்போய்விட்டது. அதோடு முடிந்தது.

1957-வது வருடத் தேர்தலிலே தேவர் மீது ஏற்பட்ட கோபம் ஜாஸ்தியாவதற்கு பல காரணங்கள் இருந்தன. தமிழகம் பூராவும் காங்கிரஸ் ஸ்தாபனத்தை எதிர்த்து நல்ல முறையிலே போட்டி கட்சி ஏற்படுத்தி பலமான முறையிலே வேலை செய்யவேண்டுமென்று தேவர்கள் முனைந்தார்கள். இங்குள்ள எதிர்க்கட்சியினரை ஒன்று சேர்ப்பதற்கு வேண்டிய வேலை செய்தார்கள். அந்த சூழ்நிலையிலே காங்கிரஸிலிருந்து ஒரு சில அங்கத்தினர்கள் வெளியேறி ஒன்று சேர்ந்து காங்கிரஸ் சீர்திருத்த கட்சியை ஸ்தாபித்தார்கள். இந்த ஸ்தாபனமும் " பார்வ டு ப்ளாக்கும் " ஒன்றாக இணைந்து தேர்தல் நடந்தது. இந்தப் போட்டியிலும் தேவர் வென்றார். கனம் முதலமைச்சருக்கு தேவர் மீது கோபம் ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

அடுத்தப்படியாக, சென்னையில் நடந்த மகத்தான பிரம்மாண்டமான ஒரு பொதுக்கூட்டத்தில் தேவர் அவர்கள் நமது முதல் அமைச்சர் அவர்கள் மீது ஒரு பெரிய குற்றச்சாட்டை கூறினார்கள். இது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். தமிழகத்திலே 100 ரூபாய் கரென்ஸி நோட்டுகள் கள்ளத்தனமாக அச்சடிக்கப்படுகின்றன, அந்தப் பெரிய தொழிலிலே முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்களுக்கும் பங்குண்டு என்பதாக அவர் கூறினார். அப்படிப் பேசியவர் ஒரு சாதாரண மனிதர் அல்ல. பொறுப்பு வாய்ந்த மனிதர். அந்த சமயத்தில் இதே சட்டசபையில் அங்கம் வகித்த அங்கத்தினர். அப்படிப்பட்ட ஒரு மனிதர் முதல் அமைச்சர் மீது குற்றம் சாட்டியிருக்கிறார். அவர் அப்படிச் சொல்லி ஏறக்குறைய 8 மாதங்கள் ஆகின்றன. அவர் சொன்னது பொய்யா அல்லது முதல் அமைச்சர் கள்ள நோட்டு அடிப்பது பொய்யா என்பது இன்னும் யாருக்கும் தெரியாது. இதனால் தேவர் மீது முதல் அமைச்சருக்கு கோபம் அதிகமாயிற்று. ஆகையால் எந்த வகையில் தேவர் அவர்களின் செல்வாக்கை குறைக்க வேண்டுமென்ற ஆத்திரமும் உணர்ச்சியும் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது அடியேனுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

தேர்தல் வந்தது. மீண்டும் தேவர் தேர்தலில் போட்டியிடுகிறார். இந்த முறை தேவர் ஜெயிக்கக்கூடாது என்பதற்காக அவர் தொகுதியை பலமாக இணைத்தனர். முதல் அமைச்சர் காமராஜ் தன் தொகுதியை வென்று செல்வதற்கு லாயக்கான முறையிலே " காம்பாக்டாக " அமைத்துக் கொண்டார்.

[Sri T. L. Sasivarna Thevar] [28th October 1957

ஜெயிப்பதற்கு காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு மோசமான முறைகளைக் கையாண்டார்கள் என்பது சிறிது அனுபவம் உடையவர்களுக்குத்தான் தெரியும். கனம் போலீஸ் மந்திரி அவர்கள், கனம் ஹரிஜன மந்திரி கக்கன் அவர்கள், கனம் மந்திரி ஸ்ரீ ராமையா அவர்கள் என்னுடைய தொகுதி பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். சென்னை நகரிலிருந்து கன்யாகுமரிவரையிலுள்ள எல்லா காங்கிரஸ் ஊழியர்களும் அங்கு வந்து பிரசாரம் செய்தார்கள். அவர்கள் என்ன பிரசாரம் செய்தார்கள் என்பதைச் சொல்லுகிறேன். கீழ்த்தரமான, மட்ட ரகமான பிரசங்கங்கள் செய்தார்கள் என்பதைக் கேட்க உங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும். புலிக்குறிச்சி என்ற ஊரில் காங்கிரஸ்கார நண்பர் ஒருவர் ஒரு "வானில்" உட்கார்ந்துகொண்டு பிரசாரம் செய்கிறார். முன்னாலே போலீஸ் "வான்" பாதுகாப்பு. பின்னால் ஒரு ஜீப் பாதுகாப்புக்கு இருக்கிறது. "தேவருக்கு 49 வயது ஆகிறது. அவர் ஒரு பேடி. அதனால்தான் அவர் கலியாணம் செய்யவில்லை. அவர் வீரன் மாதிரி பேசுகிறார். அவருக்கு ஆண்மைத் தனம் கிடையாது." காங்கிரஸ் ஊழியர்கள் செய்யக்கூடிய உயர்தரமான பிரசங்கத்தில் இது ஒரு ரகம். (சிரிப்பு.) ஆண்கள் எல்லாம் வேலைக்கு போய்விட்டார்கள். இரண்டு பெண்மணிகள்தான் இதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விளக்குமாத்துக்கட்டையை எடுத்துக் கொண்டு வந்தார்கள். இதை நான் மனப்பூர்வமாக அறிவேன். பிறகு போலீஸ்காரர்கள் நடுவிலே புகுந்து விலக்கிவிட்டார்கள். போலீஸ்காரர்கள் "முட்டாள்தனமாக இந்த மாதிரி பிரசங்கம் செய்தால் விளக்குமாத்துக் கட்டைதான் கிடைக்கும்" என்று இப்படியே சொன்னார்கள். அந்தப் பெண்மணிகள் "நாங்கள் எந்தக் கோர்ட்டுக்கு வேண்டுமானாலும் வருகிறோம். நாங்கள் செய்தது குற்றமாக இருந்தால் 10 ரூபாய் அபராதம் கட்டுவதற்கு தயாராக இருக்கிறோம்." என்று சொன்னார்கள். இதை இல்லை என்று சொல்லமுடியுமா.? திருச்சியிலிருந்து மூன்றாவது மைலில் இந்த மாதிரி நடந்தது. இன்னொரு பிரசங்கத்தைப் பற்றி சொல்லுகிறேன் : "தேவர் தன் மகன் என்று ஒத்துக்கொள்ளவில்லை. சிவில் சூட் நடந்தது. இரண்டு வைப்பாட்டியை தேவர் வைத்திருந்தார். நான்கு குழந்தைகள் பங்கு கேட்டார்கள். சிவில் சூட்டில் இதை தேவர் ஆட்சேபித்தார் தர முடியாது என்று. இந்தத் தகராறில் குழந்தை தன்னுடையதல்ல என்று சொன்னார்". என் இம்மாதிரி தகராறில் குழந்தை தன்னுடையதல்ல என்று சொல்லக்கூடாதா ? சொல்லுவது வழக்கமில்லையா ? "அப்பனுக்கே பிறக்கவில்லை" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். எங்கள் தொகுதி மக்கள் இதையெல்லாம் பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பிரசங்கம் ஸ்ரீ கே. டி. கோசல்ராமும், விருதுநகரைச் சேர்ந்த இன்னொருவரும் கையில் ரிவால்வரை வைத்துக்கொண்டு மக்களை பயமுறுத்தியிருக்கிறார்கள். ஜனங்கள் அந்த ரிவால்வரைப் பிடுங்கி போலீஸ்காரர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். மறுநாள் காலையில் அரஸ்டு பண்ணினவரை விட்டுவிட்டார்கள். இது அபிராமம் என்ற ஊரில் நடந்தது.

இன்னும் போலீஸ் மந்திரி களவாடி, முதுகுளத்தூர், மண்டிவிளங்கும் இதுபோன்ற ஐந்தாறு இடங்களில் பேசியிருக்கிறார்கள். அங்கே ஒரு இடத்தில் "ரொம்ப பொறுத்துப் பொறுத்துப் பார்த்தோம். சிசுபாலன் செய்கிற அக்கிரமங்களை எல்லாம் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு கடைசியில் கிருஷ்ணன் அவனை வதை செய்தான். அப்படி இனி முத்துராமலிங்க தேவரை சர்க்கார் வதைக்கப்போகிறது. அந்தமாதிரி நாங்கள் வதைப்போம்" என்று பேசியிருக்கிறார். அந்தக் கூட்டத்திற்கு நான் போகவில்லை. இப்படியே இந்து பத்திரிகையில், எங்கள் பிராந்திய தினமணிப் பத்திரிகையில் ரிப்போர்ட் வந்திருக்கிறது. அதைப் பார்த்துவிட்டுத்தான் தேவர் அந்த இந்து பத்திரிகை கரஸ்பாண்டு செய்த ரிப்போர்ட்டை வாங்கி வா, பார்ப்போம் என்று சொன்னார். நான் மதுரைக்குச் சென்று அதை அப்படியே வாங்கிக்கொண்டு வந்தேன். சர்க்காருக்கு அளிக்கப்பட்டிருக்கிற யாதாஸ்தோடு அந்த ரிப்போர்ட்டும் இருக்கிறது. இதைப் பார்த்தால் தெரியும். "இனி தேவர் அவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுக்கமாட்டோம். அவரை வதைப்போம்" என்று பேசியிருக்கிறவர் போலீஸ் மந்திரி அவர்கள் தாம். இது பலாத்காரம் இல்லையா என்று கேட்கிறேன்.



28th October 1957] [Sri T. L. Sasivarna Thevar]

ஹரிஜன இலாகா அமைச்சர் அவர்கள் ஸ்ரீ கக்கன் அவர்களும் அநேகம் பிரசாரம் செய்தார்கள். அவர் ஹரிஜனங்களுடைய ஊருக்கு எல்லாம் சென்று சொன்னார். ஹரிஜன மக்களைப் பார்த்துப் பேசினார். அவர்கள் செய்த பிரசங்கம் முழுவதையும் பார்த்தால் பலாத்காரம் துவேஷம் இவற்றைத்தவிர ஒன்றும் கிடையாது. "தேவர் வோட்டுக் கேட்க வந்தால் அடியுங்கள். உங்களை சர்க்கார் ஒன்றும் செய்யாது. சர்க்கார் உங்களுக்கு ஆதரவாக இருக்கும்." இது மாதிரியான பிரசங்கம் ஒரு ரகம்.

இன்னும் சில இடங்களுக்கு அவர் செல்வார். எக்ஸிக்யூடிவ் இன்ஜினியர், அசிஸ்டெண்டு என்ஜினியர் இவர்கள் எல்லோரும் பின்னே போவார்கள். "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று அங்கேயுள்ள ஜனங்களைக் கேட்பார். கிணறு வேண்டும் என்றால் உடனே "சரி இங்கே கிணறு வெட்டுங்கள்" என்று அதிகாரிக்கு எழுதி உத்தரவு கொடுத்துவிடுவார்.

THE HON. SRI P. KAKKAN: எக்ஸிக்கியூடிவ் அதிகாரிக்கும் கிணறு வெட்டுவதற்கும் சம்பந்தம் கிடையாது. இவர்கள் ரோடு போடுவார்கள். அவ்வளவு தான்.

SRI T. L. SASIVARNA THEVAR : அவர்கள் ரோடு போடுகிற அதிகாரி. அவர் பக்கத்தில் வருகிற இன்னொரு அதிகாரி கிணறு வெட்டிக் கொடுக்கிறார். பொதுவாக இந்த ரீதியில் அவர்கள் ஒவ்வொரு ஊருக்கும் சென்று பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

அப்புறம் ஸ்ரீ ராமைய்யா வந்தார்கள். வீரசோழன் என்கிற ஊரில் அவர் ஒரு இடத்தில் பேசினார். "எங்கள் பக்கத்தில் இந்தமாதிரி தான் வல்லத்தரசு என்று ஒருவர் ரொம்ப அட்டகாசம் செய்தார். கடைசியில் அவர் அங்கிருந்து ஒழிந்தார். அப்படித் தேவர் ரொம்ப அக்கிரமம் பண்ணிக் கொண்டிருக்கிறார். இவரும் ஒழிந்து போவார். நீங்கள் எல்லாம் காங்கிரசுக்கு வோட்டுப் போடுங்கள்" என்று பிரசங்கம் செய்திருக்கிறார். அவர் பேச்சை நேரில் கேட்கக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. கரியாம்பட்டி கிராம மக்களுக்கு "காங்கிரசுக்கு வோட்டுப் போடுங்கள். உங்களுக்கு மின்சார சப்ளை செய்து தருகிறோம்" என்று உறுதிகொடுத்துப் பேசியிருக்கிறார்.

இந்த மாதிரியான தவறான பிரசங்கங்களை, துவேஷத்தையும், பலாத்காரத்தையும் உண்டுபண்ணும்படியான பிரசங்கங்களை இந்த மூன்று மந்திரிகளும் என்னுடைய தொகுதியில் அநேக இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து பண்ணியிருக்கிறார்கள்.

ஆனால் இப்படிப்பட்ட பிரசங்கம் ஏதாவது தேவர் செய்தாரா? திருச்சுழியூர் பொதுக்கூட்டத்தில் அவர் பேசும்போது செய்த பிரசங்கம் என்ன? அந்த ரிபோர்ட் இது தான்.

"ஐம்பது கிராமங்கள் வரையில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு முத்துராமலிங்கத் தேவர் இன்று இங்கு பேசும்போது முந்திய தேர்தலில் தொகுதிக்கே வராமல் இருந்தும் தன்னை ஆதரித்து வெற்றி அளித்த வாக்காளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். உயர்ந்த குணம் படைத்த நீங்கள் பொறுமை குணம் படைத்த காங்கிரஸ்காரர்கள் கண்டபடி பேசிவருவதைக் கேட்டு அமைதியை இழக்கக்கூடாது. போலீஸ் மந்திரி என்ற காரணத்தினால் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைக்கவேண்டாம். துப்பாக்கியைக் கொண்டு எதையும் சாதித்துவிட முடியாது. யாரோடு மோதுகின்றோம் என்பதை நினைத்து அவர் பேச வேண்டும். எப்படிப்பட்ட துவேஷமான முறையில் அவர் பேசினாலும் நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்று எனக்கு தெரியும். நியாயமான முறையில் தேர்தலை நடத்துவதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

"மந்திரிகள் பிரசங்கம் செய்யப் போகும்போதுதான் முன்னே ஒரு போலீஸ் வான். பின்னே ஒரு ஜீப். அநேக இடங்களில் மின்சாரத்தை விஸ்தரித்துக் கொடுப்போம். கிணறுகளை வெட்டிக் கொடுப்போம் என்பது போன்ற தவறான உறுதிமொழிகள். அவர்கள் இப்படிப் பேசுவதும், பலாத்காரத்தில் இறங்கத் தூண்டுவதும் ரொம்பவும் தப்பானது. இதன் நேரடி விளைவு ரொம்பவும் ஆபத்தானது என்று எச்சரிக்கிறேன். நான் எதற்கும் அஞ்சுபவன் இல்லை. ஆனால் பொறுமை, நியாயம் இவைகளைத் தழுவிப் போகிறவன். மக்கள் ஆத்திரம் கொள்ளாமல், நல்ல முறையில் தேர்தலை நடத்திக்கொடுக்க வேண்டும். அதற்காக இன்றுருக்கு . . . யானைப் பெட்டியில் வோட்டுப் போடுங்கள்" எனப் பேசினார்.

இப்படி அந்தப் பிராந்தியத்தில் அமைதியையும், நியாயத்தையும் நிலைநாட்டு வதற்காகத்தான் அவர் அநேக பிரசங்கங்கள் செய்தார்.

பொதுத் தேர்தலுக்கு அந்தத் தொகுதிப் பக்கமே ஒரு முறை கூட வராத அவர் இந்த உபதேர்தலில் கிராமம் கிராமமாகச் சென்றார். எதற்காக ? அவர் அங்கே செய்த பிரசங்கம் எதற்காக ? அந்தப் பிராந்தியத்தில் காங்கிரஸ்காரர்கள், அமைதியையும், குழப்பத்தையும், பலாத்காரத்தையும் உண்டாக்கப் பல வழிகளைக் கையாண்டார்கள். "நீங்கள் பொறுமையை இழந்து விடாதீர்கள். இழந்து விட்டீர்கள் என்றால் உங்கள் பேரில் பலாத்காரக் குற்றத்தை சாட்டி தேர்தலையே ரத்து செய்து விடப் பார்க்கிறார்கள். முதல் தேதி, தேர்தல் முடிவு அடைகிற வரையிலும் எந்தப் பக்கத்திலும் எந்த விதமான அசம்பாவிதமான சம்பவமும் ஏற்படக்கூடாது" என அமைதியை நிலைநாட்ட அவர்கள் பேசினார்கள். அதனால் தான் தேர்தல் அமைதியாக முடிந்தது.

மேலும் ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மக்கள் வோட்டுச் சாவடிக்குப் போகப் பயப்படுகிறார்கள் என்கிற ஒரு குற்றச்சாட்டு காங்கிரஸ் தரப்பிலிருந்து சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட பொய்யான ஒரு காரணத்தைச் சொல்லித் தேர்தல் காலத்தில் எங்கள் பிராந்தியம் முழுக்க போலீஸ் பட்டாளத்தைக் கொண்டு வந்து வைத்திருந்தார்கள். எங்கள் பிராந்தியத்தில் 248 போலிங் பூத். இருநூற்று நாற்பத்து எட்டு போலீஸ் ஸ்டேஷன்களை வைத்தார்கள். ஒவ்வொரு போலிங் பூத்திலும் ஒரு சப்-இன்ஸ்பெக்டர், இரண்டு கான்ஸ்டபிள், பிராந்தியம் பூராவும் ஒரே போலீசாகவே காணப்பட்டது.

அதுமட்டுமல்ல. தேர்தலுக்கு முதல் நாள் வார்டு வார்டாகப் போலீஸ் காரர்களைக் கொண்டு பயமுறுத்தப்பட்டது. முப்பதாம் தேதி இரவு ஒரு பிரசாரம். "நாளைய தினம் கலகம் வரும். போலீஸ்காரர்கள் சுடப் போகிறார்கள்," இப்படி ஒரே மாதிரியாக காங்கிரஸ்காரர்கள் பிரசுரம் செய்திருந்தார்கள். இவ்வளவு பயங்கரமான சூழ்நிலையிலும்கூட வாக்கா ளர்கள் ரொம்ப அமைதியாக நடந்தார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு அனுகூலமாக வோட்டுப்போடவில்லை. பார்வேட் ப்ளாக்கைச் சேர்ந்தவரை தான் ஆதரித்து வோட்டுப் போட்டார்கள். பார்வேட் ப்ளாக் ஜெயித்தது. காங்கிரஸ் தோற்றது.

இவ்வளவு பயங்கரமான முறையில் பிரச்சாரம் செய்து, பலபல வாக்குறுதிகளைக் கொடுத்து காங்கிரஸ்காரர்கள் எத்தனையோ பிரயத்தனம் பண்ணி இருந்தும், தோற்றுப் போய் விட்டார்கள் என்றால் அந்தத் தோல்வியை மனப்பூர்வமான ஒப்புக்கொண்டு பின்பாவது நடந்திருக்க வேண்டும். ஆனால் பழிக்குப்பழி வாங்குவது என்கிற முறையில்தான் பல காரியங்களைச் செய்தார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

முதல் தேர்தலில் ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் தொகுதிக்குப் போகவே இல்லை என்று சொன்னேன். அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது எனக்கும் தெரியாது: அவருக்கும் தெரியாது. ஆனால் தேர்தலில் அவர் ஜெயித்தார். மனப்பூர்வமான ஆதரவு அவருக்கு இருக்கிறது என்பதை உணர்ந்துதான் சர்க்கார் இத்தகைய பலாத்காரச் செயலில் இறங்கியிருக்கிறார்கள் என்பது என் குற்றச்சாட்டு. அதற்குக் காரணம் என்ன? சர்க்காருக்குத் தெரியும். தேர்தலுக்குப் பின்பு ஏன் அங்கே வைக்கப்பட்டிருந்த போலீஸ் பட்டாளங்கள் வாபஸ் வாங்கப்படவில்லை ? கலவரம் இல்லாத காலத்திலேயே அதிகமான போலீஸ்காரர்களைக் கொண்டு போய் வைத்து, வேண்டுமென்றே கலவரத்தை உண்டாக்கினார்கள். அங்கே என்ன நடந்தது என்பதைப் பற்றி ஆதாரபூர்வமாக நான் சொல்லவேண்டும்.



மூன்று ஊர்களில் மூன்று சம்பவங்கள் நடந்தன. ஒரு ஊரில் ஒரு நாடாருக்குச் சொந்தமான மிளகாய்த் தோட்டத்தை மறவர்கள் அழித்ததாக வும், அதனால் 30 ஆயிரம் ரூபாய் வரையில் சேதமாகிவிட்டதாகவும் வழக்குப் போட்டார்கள். தேவகோட்டை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு குற்றம் செய்யவில்லை என்று அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இன்னொரு கேஸ் நாங்கள் போட்டது. ஒரு கிராமத்திற்குள் போலீஸ் காரர்கள் சென்று அங்குள்ள ஆண்களையும் பெண்களையும் மிருகத்தன மாகத் தாக்கினார்கள். ஒரு பெண்ணிற்கு நெற்றியில் அடி. இதை போலீஸ் Complaint ஆக எடுத்துக்கொள்ளவும் மறுத்துவிட்டார்கள். ராமநாதபுரம் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இதை நாங்கள் தாக்கல் செய்தபோது சர்க்கார் உத்தியோகஸ்தருடைய அனுமதி தேவை. இல்லாததால் தள்ளுபடி செய்வதாகத் தீர்ப்பு அளித்துவிட்டார்கள். அதை எதிர்த்து இப்போது ஹைக்கோர்ட்டில் கேஸ் இருக்கிறது. இன்னும் முடிவாகவில்லை.

மூன்றாவது கேஸ் குண்டலவாதி கேஸ். ஹரிஜனங்களுடைய கிணற்றில் மண் எண்ணெயை ஊற்றிவிட்டார்கள் மறவர்கள் என்பது. இந்த கேசும் நடந்து கொண்டிருக்கிறது. முடிவாகவில்லை. இந்தப் பிராந்தியத்தில் பொதுத் தேர்தலின் போதும், இடைத் தேர்தலின் போதும் இந்தக் காலத் தில் இந்த மூன்று சம்பவங்களைத் தவிர வேறு ஏதாவது உண்டா என்று கேட்கிறேன். அங்கே ஒன்றும் நடக்கவில்லை. எதற்காக போலீஸ் பட்டா ளத்தை வைத்திருக்கவேண்டும் ? முன்கூட்டியே அங்கே கலவரத்தை உண்டாக்கவேண்டும், பழி வாங்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு செய்யப் பட்ட ஏற்பாடுகள் இவை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. ஹரிஜன மக்க ளுக்கும் தேவர்களுக்கும் சாதிச் சண்டைபோல ஏற்படுத்தப்பட்ட சூழ்ச்சி இது. தேவர்களை விட்டு ஹரிஜனங்கள் பிரிந்துவிட்டால் காங்கிரசுக்கு வோட்டுப் போடுவார்கள் என்பது அவர்கள் நினைப்பு.

உண்மையிலேயே ஹரிஜனங்களுக்கும், மறவர்களுக்கும் சமாதானத்தை உண்டாக்கிவைக்க இப்போது காலஞ்சென்ற இமானுவேல் பாடுபட்டார்கள். அவர் கிருஸ்துவர். அவரும் பேருரைச் சேர்ந்த கிருஸ்டு இடபாடு பாத் போம் கம்பர் என்ற ஹரிஜனர் இவர்கள் தீவிர பிரசாரம் செய்தார்கள். இதை காங்கிரஸ் ஏற்பாடு செய்தார்கள். நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இவர்கள் செய்தது என்ன ?

இரண்டாவது தேர்தல் காலத்திலேயே தேர்தல் முடிந்தவுடன் அமைதியை உண்டாக்க போலீஸை வாபஸ் பெற்றிருக்கலாம். பெறவில்லை. நாங்கள் பேசுவதை எல்லாம் ஸி.ஐ.டி.க்காரர்கள் எடுத்தார்கள். ஆனால் காங்கிரஸ் மந்திரிகள் பேசிய பேச்சுகளை எல்லாம் எடுப்பதற்கு எங்களுக்கு வசதி இல்லை.

உண்மையிலேயே துவேஷத்தையும், கலகத்தையும் உண்டாக்கும் வகை யில் காங்கிரஸ்காரர்கள் தான் பேசினார்களே தவிர, போலீஸ் மந்திரி, ஸ்ரீ கக்கன், ஸ்ரீ ராமையா போன்றவர்கள் பேசினார்களே தவிர எங்கள் முத்து ராமலிங்க தேவர் பேசவில்லை. அவர் நூறு பிரசங்களுக்கு மேல் செய்திருக் கிறார். அவை எல்லாவற்றையும் வரவழைத்து இங்கே வைக்கட்டும். அப்போது அமைதியை நிலைநாட்ட அவர் எவ்வளவு பாடுபட்டிருக்கிறார் என்பது சபைக்குத் தெரியும். அவை எல்லாவற்றையும் இங்கே வைத்தால் எங்களுக்குச் சாதகமாக இருக்கும். காங்கிரஸ்காரர்களுக்கு விரோதமாகப் போய்விடும் என்று தான் வைக்கவில்லை. அவர் வகுப்பு துவேஷத்தை உண்டு பண்ணிவிட்டதுபோன்று பேசி அதை மறைக்கப் பார்க்கிறார் என்பது தான் என் குற்றச்சாட்டு. அவர்கள் அநேக இடங்களில் பேசிய பேச்சுக்கள் ஒன்றிலாவது பலாத்காரத்தை உண்டாக்க இடம் இல்லை. அமைதியை நிலைநாட்டத்தான் ஜனங்களுக்கு 'நியாயமாக நடவுங்கள், பொறுமையாக நடவுங்கள்' என்று பேசியிருக்கிறார் என்பது நிச்சயமாகத் தெரியும்.

காங்கிரஸ் பகிரங்கமாக அந்தப் பிராந்தியத்தில் அநேக தவறுகளைச் செய்திருந்தபோதிலும் அவர்களுக்கு சென்ற தேர்தலைவிட இந்த உப தேர்தலில் வோட்டுகள் ஒன்றும் அதிகமாக வந்துவிடவில்லை. நூற்று எட்டு வோட்டுகள்தான் அதிகம் கிடைத்தது. ஆனால் பார்வட் பிளாக்கிற்கு 1,216 வோட்டுகள் அதிகம் கிடைத்தது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். முன்பு வாங்கியத்தைக் காட்டிலும் 1,216 வோட்டுகள் மகத்தான இந்தத் தேர்தலில் எங்களுக்குக் கிடைத்தது. முக்கியமாக போலீஸ் பூராவும் ஹரிஜனங்களுக்காகவும், வசதியுள்ள நாடார் பெருமக்களுக்காகவும் உதவி செய்தது. 1-ம் தேதி தேர்தலின் முடிவு சொல்வதாக இருந்தார்கள். ஆனால் 4-ம் தேதிக்குத்தான் முடிவு சொல்லப்பட்டது. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரையும் அனுமதிக்கவில்லை. ஜயித்தவர்கள்கூட கொண்டாடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. போலீசார் 144 செக்ஷன் போட்டு விட்டார்கள். அவர்களுக்கு அந்த உரிமைகூட அளிக்கப்படவில்லை. 4-ம் தேதிதான் தேர்தலின் முடிவு அறிவிக்கப்பட்டது. 12-ம் தேதி ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் பேசும்போது "நான் பாராளும் மன்றத்திற்குப் போகிறேன். இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். விவரம் தெரியாமல் மக்கள் கலகம் நடத்தும்படி விடக்கூடாது. இதில் யாருமே தனியாக இருக்கக்கூடாது. ஒழுங்காக நடந்துக்கொள்ளவேண்டும். இதற்கு மாறாக எவர்களாயினும் நடப்பார்களேயானால் அவர்கள் என் இரத்தத்தைக் குடித்ததற்குச் சமானமானவர்கள். என்று கூறினார். 21-ம் தேதி ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் டில்லியில் இருக்கிறார். நான் சட்டசபையில் இருக்கிறேன். அதற்குப் பிறகு வகுப்புவாதம் செய்வதற்காக சதி செய்யப்பட்டது. சப்-இன்ஸ்பெக்டர்களும் ஒரு சர்க்கில் இன்ஸ்பெக்டரும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் என்று தெரியவருகிறது. சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் விருதுநகரில் ஒரு டிராவலர்ஸ் பங்களாவில் கூடி கலந்து பேசியிருக்கிறார்கள். பேசிய பிறகு இந்த உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்ட பிராந்திய மக்களுடன் கலந்து பேசி அங்கிருக்கும் ஹரிஜனங்களைத் தூண்டியிருக்கிறார்கள். நேரடியாக கிராமங்களில் கூடி இருக்கிறார்கள். அங்கிருந்த ஊழியர்களை தடிகொண்டு தாக்கியிருக்கிறார்கள். இந்தப் பிரதேசத்தில் ஹரிஜனங்கள் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். 16 கிராமங்களில் சதி நடந்திருக்கிறது. உத்தியோகஸ்தர்கள் பூராவும் சாட்சி சொல்லுவார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சாமான்கள் பூராவும் சர்க்காரால் கொடுக்கப்பட்டது. இந்தச் சம்பவங்கள் பூராவும் பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது. இவைகளை தக்க ஆதாரத்துடன் சொல்லமுடியும். அங்குள்ளவர்களுக்கு போலீசாரால் தடிகளும், ஆயுதங்களும், பழைய துப்பாக்கிகளும் கொடுக்கப்பட்டன. இதில் கலந்துகொண்டவர்கள் குறிப்பிட்ட ஒரு சில மக்கள்தான் ஹரிஜனங்கள், பூராவாக இல்லை. அங்குள்ள நாடார் வீட்டில் கையால் செய்யப்பட்ட பாம்களை செய்திருக்கிறார்கள். அங்கேயே பழக்கப்பட்டிருக்கிறார்கள். கலகம் நடந்த இடத்தில் இந்த பாம்களை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். இதில் 7 பேர் இறந்துபோய் இருக்கிறார்கள். அந்தப் பிரதேசத்தை பின்னர் கொளுத்திவிட்டார்கள். அவைகளை கொளுத்தும் வரை போலீசார் வரவில்லை.

அந்தத் தகவல் பூராவும் தந்தி மூலமாகவும், மனுக்கள் மூலமாகவும் கலெக்டருக்கும், டீ. எஸ். பி.க்கும் கொடுக்கப்பட்டது. 'சாமி கும்பிட்டோம், திருவிழா நடத்தினோம், வாண வேடிக்கையில் ஒருவர் இறந்துவிட்டார்' என்று பத்திரிகையில் வந்தது. போஸ்மார்ட்டம் ஏதாவது நடந்ததா? அவரை தீக் கொளுத்தி விட்டார்கள். அவர் யார் என்று கேட்டால், அவர், அறுப்புக்கோட்டையைச் சேர்ந்த மூக்க நாடார் என்பவர் ஆவார். அவர் பாம் செய்வதில் பெயர்பெற்ற நிபுணராவார். அவரையும் சேர்த்துப் பொசுக்கி விட்டார்கள். அங்குள்ள காங்கிரஸ்காரர்கள். கேஸ் ஏதாவது நடந்ததா அல்லது வேறு என்ன நடந்தது என்பதுபற்றி ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். சென்னையிலிருந்து. 29-ம் தேதி காலை மதுரை சென்றேன். அங்கு போய்விட்டு நேரே அறுப்புக்கோட்டை சென்று 3-ம் தேதி ஆகஸ்டுமீ 1957-ல் ஆர்.டி.ஓ. கோதண்டராமனிடம் விஷயத்தைச் சொன்னேன். ஒரு சில உத்தியோகஸ்தர்களை கையில் வைத்துக்கொண்டு எங்கள் பிராந்தியத்தில் உள்ள மக்களுக்குத் தொந்





ரவு கொடுக்கிறார்கள். சச்சரவு ஜாஸ்தி ஏற்படும் போல் இருக்கிறது. ஆகவே அதைப்பற்றி விசாரிக்கவேண்டுமென்று அவரை நான் நேரில் கேட்டேன். அவர் சொன்னார். கலெக்டரிடம் சொல்லி ஒரு சமாதான மகாநாடு ஏற்படுத்தி ஒரு நல்ல முடிவிற்கு வரலாமென்று சொன்னார். அப்படி வாக்குறுதி கொடுத்தும் 1957-ம் ஆகஸ்டுமீ 3-ம்தேதிமுதல் ஒரு மாதம் வரையிலும் ஒன்றுமே நடக்கவில்லை. கலவரங்கள் ஜாஸ்தியாகிக் கொண்டே வந்தன. ஆனால் இந்த இரண்டு மாத கலவரத்தில் எந்தயிடத்திலும் ஹரிஜனங்களுக்கும், தூண்டிவிடப்பட்ட காங்கிரஸ் ஹரிஜனங்களுக்கும் எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் கைகலந்து சண்டை போட்டுக்கொள்ளவில்லை. ஹரிஜனத் தோழர்களுக்கு நல்ல பயிற்சி கிடைத்தது. இரண்டு வாணங்கள் சுட்டவுடன், அந்த வானத்திற்கு முங்கூர் வாணம் என்று சொல்வார்கள், அது "சர்" என்று போகும். அந்த வாணத்தைச் சுட்டவுடன் எல்லா ஹரிஜனங்களும் ஒன்று சேர்ந்து ஒரு இடத்தில் கூடி விடுவார்கள். அவர்களை போலீஸ் ஒன்றும் செய்யமாட்டார்கள். தாங்கள் பலஹீனம் என்று தெரிந்தால் உடனே நான்கு வாணம் சுடுவார்கள். உடனே போலீஸ் "ரஷ்" பண்ணி வந்துவிடும். இது, அரேபியன் நயிட்ஸ் மாதிரி உங்களுக்குத் தெரிகிறது அல்லவா? (சிரிப்பு). தத்தார் அவர்கள் வீரும்பலிற்குச் சென்றிருந்தபோது, அங்கு ஞானமுத்து என்பவர் அவரிடம் சொன்னார்; அதிகாலையில் மறவர்கள் எங்களைத் தாக்க வந்தார்கள். உடனே ஆலயத்தில் மணி அடித்தது. உடனே நாங்கள் அங்கு சென்று, ஆலயத்திற்குள் சென்று கதவுகளை மூடிக்கொண்டோம் என்றார். உடனே நீங்கள் என்ன செய்தீர்கள் என்று தத்தார் கேட்டார். அதற்கு அவர், உடனே "நான் போலீஸ் வருகிறது" என்று சொன்னேன் என்றார். உடனே தத்தார் கேட்டார், நீங்கள் உள்ளே இருக்கையில் துப்பாக்கி சப்தம் கேட்டது என்று சொன்னீர்கள். பெண்கள் சப்தம் போட்டு அலறிக் கொண்டிருந்தார்கள் என்றீர்கள் பின் எப்படி அந்த சப்தத்திற்கிடையில் போலீஸ் வருவது எப்படி காது கேட்டது என்றார். உடனே, பக்கத்திலுள்ள பையன், நாங்கள் வாணம் விட்டோம் என்று சொன்னான். உடனே டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி சென்னார். வாணம் விட்டோம் என்று சொன்னதைக் கவனித்துக்கொள்ளுங்கள் என்று. அப்பொழுது தத்தார் இருந்தார், கக்கன் அவர்களும் இருந்தார்கள். அவர்கள் இல்லையென்று சொல்வார்கள் (சிரிப்பு).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நானும், நிதியமைச்சர் அவர்களும் கேள்விப்பட்டோம், அக்கதையை; யுத்த சின்னங்கள் எல்லாம் அந்தப் பிராந்தியத்தில் இருந்தது என்று.

SRI T. L. SASIVARNA THEVAR : யுத்த சின்னங்கள் என்று சொல்கிறார்கள். கட்ட பொம்மன் காலத்தில் மறவர்களும் ஹரிஜனங்களும் சேர்ந்து வெள்ளைக்காரர்களைக் கொன்று குவித்த இடமாகும் அது. ஆர்.டி.ஓ.விடம் சொன்னேன். பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. நிலவரம் மோசமாகிக் கொண்டிருந்தது. இந்த நிலைமையிலே, மேற்குப் பிராந்தியம் எங்கள் பகுதி. கிழக்குப் பிராந்தியம் ஹரிஜனப் பகுதி. அங்கு எங்களவர்களும் உண்டு. ஆனால் அங்குள்ளவர்களில் மெஜாரிட்டி அவர்கள். எலஞ்சாம்பூர், கீரந்தை போன்ற கிராமங்கள் பார்டர் வில்லேஜ்களாகும். எலஞ்சாம்பூரில் சுமார் 80 வீடுகள் மறவர்களின் வீடுகள். கீரந்தையில் சுமார் 40 வீடுகள் இருக்கும். அங்கு இரண்டு முறை ஹரிஜனங்கள்,—காங்கிரஸைச் சேர்ந்தவர்கள்—மறவர்களைத் தாக்கவந்தார்கள். அப்படித் தாக்க வரும்போது, அதைக் கேள்விப்பட்டு, மறவர்கள் கூட்டமாகச் சென்று அவர்களின் உதவிக்குப் போனார்கள். உதவிக்காகப் போய் கீரந்தையில் சந்தித்தார்கள். அங்கு டி.எஸ்.பி.யிடமும், ஸர்கில் இன்ஸ்பெக்டரிடமும், சப்-இன்ஸ்பெக்டரிடமும் சொன்னோம். நாங்கள் யாரையும் தாக்க வரவில்லை. யாரையும் தாக்கவேண்டும் என்ற உத்தேசம் எங்களுக்குக் கிடையாது. எங்கள் சொந்தக்காரர்களை, இந்த இடத்தில் வாழ்கிற எங்கள் சொந்தக்காரர்களை ஹரிஜன மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த ஒரு சில நாடார்கள் தூண்டிவிட்டு அவர்கள் தாக்க வருகிறார்கள். நாங்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வந்திருக்கிறோமே தவிர வேறு ஒன்றும் இல்லை,

நீங்கள், அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தால் நாங்கள் போய்விடுகிறோம். இல்லாவிட்டால் நாங்கள் இங்கிருந்து போக மாட்டோம்' என்று சொன்னார்கள். அதற்குச் சாட்சி டி.எஸ்.பி. இருக்கிறார். இந்த ஊரைச் சம்பந்தப்பட்ட மட்டில் பார்ப்போமானால் பாதுகாப்புத் தருகிறோம் என்று சொல்லி 16 எஸ்.ஏ. பி. போலீஸ் போடப்பட்டது. அதேமாதிரி எலஞ்சாம்பூரிலும் 10 போலீஸ் போடப்பட்டது. இந்த இரண்டு மாத சந்தர்ப்பத்தில் அங்கு ஹரிஜன மக்கள் கலகம் ஒன்றும் விளைவிக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன ? நேரடியாகப் போர் துவக்க அவர்களுக்கு மனம் வரவில்லை. யார் அரிசி, மாம்பழம் அவர்களுக்கு அனுப்பினாலும் சாக வேண்டியவர்கள் அவர்கள் அல்லவா ? இவைகளெல்லாம் அனுப்பியவர்கள், உங்களுக்கு எவ்வளவு அழுது தொலைத்தாலும் நீங்கள் ஒரு மறவரைக் கூட வெட்டவில்லையே என்று கேட்டதற்கு அவர்கள் " நாங்கள் வெட்டினால் அவர்களும் வெட்டுவார்களே, இந்த மட்டிலும் போதும் " என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்குச் சாட்சி இருக்கிறது. காங்கிரஸ் ஹரிஜன மக்கள் இந்த கலவரத்தை நடத்துவதாயிருந்தபோதிலும்கூட நேரடியாக அவர்கள் சண்டை செய்யாததால் வெளியூர்களிலிருந்து வந்து கலகம் செய்தார்கள். ஆர்.டி.ஓ. விடம் சொல்லியும் பலனில்லை. செப்டம்பர் 2-ம் தேதி நான் மட்டுமல்ல, மூக்கையா தேவர் அவர்கள், இளைய ராஜா அவர்கள், ஹரிஜன மெம்பர் பெருமாள் அவர்கள், எம். டி. இராமஸ்வாமி அவர்கள், எங்கள் தொகுதி ஜில்லா போர்ட் மெம்பர் அவர்கள் அத்தனை பேரும் கலெக்டரிடம் போனோம். " நாங்கள் சொன்னோம். இப்படி தூண்டி விட்டுக் கொண்டேயிருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். இங்கு நடக்கிற கலவரங்களை எங்களால் தடுக்கமுடியவில்லை. இதை உடனடியாகத் தடுத்தாகவேண்டும் " என்று சொன்னோம். நாங்கள் சொன்னோம் இந்த ஐந்து போலீஸ் அதிகாரிகளையும் அங்கிருந்து மாற்றினால் ஒன்றுமே வராது என்று. எங்கள் தொகுதியில் உள்ள இரண்டு டி.எஸ்.பி.க்கள் பேரில் எங்களுக்கு ஒரு குறைவும் இடையாது. ஆனால் வேறு அந்த ஐந்து போலீஸ் அதிகாரிகளையும் அங்கிருந்து மாற்றினால் ஒரு தொந்தரவும் ஏற்படாது என்று சொன்னோம். அவர்கள் மட்டும் அப்படிச் செய்ய காரணம் என்ன என்று கேட்டார். அந்த சம்பந்தப்பட்ட உத்யோகஸ்தர்களுக்கு காங்கிரஸிடமிருந்து மாதந்தோறும் பணம் கொடுக்கப்படுகிறது, அவர்கள்தான் இப்படி எல்லாம் தூண்டிவிடுகிறார்கள். சுப்பிரமணிய ராஜா அவர்களும் டி.எஸ்.பி. கனகராஜ் அவர்களிடம் சொன்னார்கள். செப்டம்பர் 3-ம் தேதி காலையில் டி.ஐ.ஜி., டி. எஸ்.பி. யைக் கூப்பிட்டு ஒரு மகாநாடு வைக்கிறேன் என்று சொன்னார்கள். 3-ம் தேதியன்று கலெக்டரின் தலைமையில் ஒரு மகாநாடும் நடந்தது. மேற்கொண்டு ஒன்றையும் காணோம். இரண்டாம் தேதி சொன்னார்கள், ஒரு வார காலத்திற்குள் ஒரு பீஸ் கான்பரன்ஸ் ஏற்படுத்துகிறேன், என்று. நீங்களும் வாருங்கள் அதற்கு மேல் செய்ய வேண்டியதைச் செய்யலாம் என்றும் சொன்னார்கள். 10-ம் தேதி பீஸ் கான்பரன்ஸ்-ம் நடந்தது. 9-ம் தேதி 9½ மணிக்கு தேவர் டெல்லியிலிருந்து மதுரைக்கு வருகிறார். அதுவரை நடந்த சம்பவம் அவருக்குத் தெரியாது. நான் அருப்புக்கோட்டையிலிருந்து 9½ மணிக்கு மதுரைக்கு வந்து சேர்ந்தேன். அங்கு வந்து சேர்ந்த முத்துராமலிங்க தேவர் அவர்களிடம் இந்த விபரங்களை எல்லாம் சொன்னேன். தேவர் அவர்களிடம் நாம் கலெக்டர் அவர்களால் கூட்டப்போகும் Peace conference க்குபோக வேண்டுமென்று சொன்னேன். தேவர் அவர்களும் என்னோடு வந்தார்கள். நாங்கள் அன்று அங்கு போவதற்கு ஒரு மணி நேரம் தாமதம் ஆனது. இதற்காக கலெக்டர் அவர்களுக்கு ஒரு தந்தியும் கொடுத்தோம். conferenceக்கு கலெக்டர், டி. ஐ.ஜி., டி.எஸ்.பி., ஆர்.டி.ஓ. இவர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். நாங்களும் போய்ச் சேர்ந்தோம்: முதலாவதாக பார்வார்ட் பிளாக் கட்சியிலுள்ளவர்களைக் கேட்கலாம் என்ற முறையில் எங்களிடம் தனியாக கேட்டார்கள். தேவர் அவர்களும் நாங்களும் நடந்த விபரங்களை, அங்கு இருக்கக்கூடிய நிலைமைகளை எல்லாம் எடுத்துச்சொன்னோம். அங்குள்ள சில ஹரிஜனங்கள் அதிகமாகத் தொந்தரவு கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு உதவியாக ஆயுதங்கள் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் [illegible] எல்லாம் தூண்டி விடுகிறார்கள். இதனால் எங்களுக்குப் பாதுகாப்புத் தேவை என்று எடுத்துச்சொன்னோம். பின்னால் கலக்டர் என்ன



செய்தார்கள் என்றால் இரண்டாவது முறையாக எங்களை இருத்திவிட்டு ஹரிஜனங்களின் குறைகள் என்ன என்பதைப் பற்றி விசாரித்தார்கள். அங்கு காலஞ்சென்ற இமானுவேல் அவர்கள், கம்பர், சாத்தையா, இன்னும் ஐந்தாறு பேர்கள் வந்திருந்தார்கள். நாடார்கள் சார்பில் சவுந்திர நாடார் அவர்களை விசாரித்தார்கள். இவ்விதமாக தனித்தனியாக விசாரித்துவிட்டு கூட்டு மகாநாடாக எல்லோரும் சேர்ந்திருந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தோம். அப்போது தேவர் அவர்கள் கேட்டார்கள். அதாவது " நாங்கள் இல்லாதபொழுது எங்கள் பேரில் ஹரிஜனங்கள் சார்பாக என்னென்ன குறைகள் சொல்லப்பட்டது " என்பதாக. அதற்கு கலெக்டர் அவர்கள் சொன்னார்கள், அவர்கள் அதாவது ஹரிஜனங்கள் நல்ல ஆடை அணிந்து அந்த இடங்களில் இருந்து வருவது தேவர்களுடைய சமூக அந்தஸ்துக்குக் குந்தகமாக இருப்பதாக, இருக்கிறதாகக் கருதி அவர்களைத் துன்பப்படுத்தி வருவதாக சொல்லப்பட்டது என்று சொன்னார்கள். அப்போது தேவர் அவர்கள் சொன்னார்கள், 1931-ம் ஆண்டிலேயே நான் ஹரிஜன தோழரின் வீட்டில் சாப்பிட்டிருக்கிறேன். அது மாத்திரமல்ல அந்த காலத்திலே நான் தீண்டாமை ஒழிப்பிற்காக வேலை செய்திருக்கிறேன். 1934-ல் இதே போன்று நாடார் வீட்டில் சாப்பிட்டிருக்கிறேன். இப்பொழுதும் எங்கள் சமூகத்தில் இருக்கிற வழக்கம் என்ன வென்றால் வேறொரு ஜாதியினரின் வீட்டில் சாப்பிட்டால் ஜாதியிலிருந்து தள்ளிவைப்பது இது அங்குள்ள சூழ்நிலை. நாடார் நண்பரை எங்கள் வீட்டில் சாப்பிடவைத்திருக்கிறேன் என்றும் சொன்னார். ஆகவேதான், இவ்விதமாக இருந்தாலும் கூட சமூக அந்தஸ்துக்காக அந்தப் பிரதேசத்தில் யாரையாவது பலாத்காரமாக தாக்கவோ அல்லது இவ்விதமான ஏதாவது சம்பவங்கள் நடந்ததுண்டா, அவ்விதம் ஏதாவது குற்றம் சொல்ல முடியுமா " என்று கேட்டார் தேவர் அவர்கள். அப்போது இமானுவேல் அவ்விதமாகச் சொல்லி கொண்டார்கள் என்று சொன்னார்கள். இதையெல்லாம் நோட் செய்துவைத்திருக்கிறது. எல்லோருக்கும் இதைப் பார்க்கலாம். அடுத்தாக நாடார் சார்பில் ஏதாவது குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டதா என்று கேட்டபோது மறவர்கள் பண சேகரம் செய்து வருகிறார்கள், இதனால் நாங்கள் கஷ்டப்படுகிறோம் என்று சொன்னார்கள். பணசேகரம் என்ன அவசியத்திற்கு என்று கேட்டால் அங்கு ஆயிரக்கணக்கான பொய்க் கேஸ்கள் இருக்கிறது. அவற்றையெல்லாம் நடத்துவதற்கு பணம் வசூல் செய்து வருகிறோம். ஆனால் இது யாரையும் வற்புறுத்தி வாங்கி வருவதில்லை. இவ்விதமாக ஏதாவது புகார் உண்டா என்று கேட்டார்கள். அப்போது அங்கிருந்த கலெக்டர் டி.எஸ்.பி.-யை பார்த்தார். அவரும் அவ்விதமாகப் புதுபுகார் ஒன்றும் இல்லை என்று அவரே சொன்னார். இன்னொரு விஷயம் என்னவென்றால், அங்கு மறவர்கள் அதிகமாகக் கடை வைத்திருக்கிறார்கள் என்பது. முன்னாலேயே மறவர்கள் ஜாஸ்தியாக கடை வைத்திருக்கிறார்கள். இது தவிர கோனார், பிள்ளைமார்கள், இவர்களும் கடை வைத்திருக்கிறார்கள். நாடார்கள் மாத்திரம் தான் கடை வைத்துக்கொள்ளலாம் என்று எந்த சட்டமும் அங்கு இல்லை. ஆகவே இவர்களால் எங்கள் வியாபாரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது என்ற வேலுசாமி நாடாருடைய புகாரையும் கலெக்டர் அவர்கள் தள்ளிவிட்டார்கள். இவ்வளவு தான் அங்கு நடந்தது. பின்னால் கலெக்டர் சொன்னார்கள், எல்லோரும் சேர்ந்து ஒரு அறிக்கை வெளியிடவேண்டும் என்று. அதற்குத் தேவர் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். அந்த அறிக்கையில் யாரெல்லாம் கையெழுத்திடுவது என்ற பிரச்னை வந்தது. அப்போது தேவர் அவர்கள் சொன்னார்கள், எம்.பி. என்ற முறையில் நான் கையெழுத்துப் போடுகிறேன். அதேமாதிரி ஹரிஜன எம்.பி. என்று முறையில் ஆர். எஸ். ஆறுமுகம் அவர்கள் ஹரிஜனங்கள் சார்பாக கையெழுத்து போடட்டும், அசெம்பிளி மெம்பர் என்ற முறையில் நானும் அசெம்பிளி ஹரிஜன மெம்பர் என்ற முறையில் பெருமாள் அவர்களும் கையெழுத்துப் போடலாம் என்றும் சொன்னார்கள். கலெக்டர் அவர்களும் அதை ஒத்துக்கொண்டார்கள். அப்பொழுது வேலுசாமி நாடார் சொன்னார், இப்பொழுது இங்கு எம்.எல்.ஏ. இல்லையே என்று. அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று தேவர் அவர்கள் கேட்டார்கள். வேலுசாமி நாடார் சொன்னார் நாடார்கள் சார்பாக சாத்தூர் எஸ். ராமசாமி நாயுடு அவர்கள்

[Sri T. L. Sasivarna Thevar] [28th October 1957

கையெழுத்துப் போட்டால் போதும் என்று சொன்னார்கள். சாத்தூருக்கும் முதுகுளத்தூருக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று தேவர் அவர்கள் கேட்டார்கள். அப்படியென்றால் கையெழுத்துபோட மாட்டோம் என்று சொன்னார்கள். அதோடு தேவர் அவர்கள் ஒரு காரியத்தைச் சொன்னார்கள். நாங்கள் ஒரே ஒரு கண்டிஷனையும் சொல்லுகிறோம், அதாவது இமானுவேலேயோ அல்லது கம்பரையோ அல்லது பீட்டரையோ நாங்கள் ஹரிஜனங்களின் பிரதிநிதிகள் என்று ஒத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் அந்தப் பக்கத்திலுள்ள 100-க்கு 80 ஹரிஜனங்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள். ஆகையினால் இவர்களை நாங்கள் ஹரிஜனங்களின் பிரதிநிதிகள் என்று ஒப்புக்கொண்டால் எங்கள் பக்கம் இருக்கிற ஹரிஜனங்கள் வருத்தப்படுவார்கள். ஆகையினால் இதில் நாங்கள் சேர்ந்து கையெழுத்துப் போட மாட்டோம். இமானுவேல் வேண்டுமென்றால் தனியாக கையெழுத்து போட்டுக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. இவற்றையெல்லாம் கலெக்டர் அவர்கள் நோட் எடுத்துக்கொண்டார்கள். அங்கு இருந்த தேவர் அவர்களே இமானுவேலிடம் கேட்டார், " உன்னை எப்படி நாங்கள் ஹரிஜனங்களின் பிரதிநிதி என்று ஒப்புக்கொள்ள முடியும்" என்று அப்போது இமானுவேல் சொன்னார், உங்களுக்கு உங்கள் ஜனங்கள் மத்தியில் இருக்கிற செல்வாக்கு அளவுக்கு எனக்குச் செல்வாக்கு இல்லையென்றாலும் என் பேச்சை கேட்கக் கூடியவர்களும் இருக்கிறார்கள் என்று சொன்னார். அப்போது தேவர் அவர்கள் சொன்னார்கள், தம்பி, அப்படியென்றால் நீ தனியாக கையெழுத்துபோட்டுக்கொள் என்று சொன்னார். இவ்விதமாக யார் கையெழுத்து போடுவது என்பதில் தான் தகராறு ஏற்பட்டது. அதாவது ஆகஸ்ட்டு புரட்சிக்கு பின்னால் சிம்லா கான்பிரன்ஸ் நடந்தபோது முஸ்லீம் பிரதிநிதியாக ஜின்னா அவர்கள் நான் தான் போடுவேன் என்றார்கள், காந்திஜி அவர்கள் நான் தான் கையெழுத்து போடுவேன் என்று வழக்கு வந்தது. அது மாதிரி தான் இங்கேயும் நடந்தது. ஆகவே இதை நாம் நியாயமாக யோசனை செய்து பார்க்க வேண்டும். பின்னால் அவர்கள் சேர்ந்து கையெழுத்துப் போட்டார்கள். இப்போது வகுப்புச் சண்டை என்று சொல்லுகிறார்களே, அவ்விதம் ஏதாவது உண்டா என்பதை நாம் பார்க்க வேண்டும். தீர்மானத்தின் வாசகம் இதுதான். அதாவது 1957-ல் நடந்த முதல் தேர்தலிலும் அதைத் தொடர்ந்து நடந்த இரண்டாவது தேர்தலிலும் பார்வார்ட் பிளாக் கட்சியினருக்கும் காங்கிரஸ் கட்சியினருக்கும் ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாக இரண்டு மாத காலமாக பல சச்சரவுகள் நடந்து வருகிறது. அதற்காக இந்தக் கூட்டம் வந்திருக்கிறது. இனிமேல் எந்த விதமான அசம்பாவிதமான காரியங்களும் நடைபெறாத வண்ணம் சட்டப்படி எல்லா மக்களும் நடந்து கொள்ள வேண்டும், அதோடு கூட்டம் கூடவேண்டுமானால் சட்டபூர்வமாக கூட்டம் கூட்டிக் கொள்ள வேண்டுமே தவிர ஒருவரை ஒருவர் தாக்கி கொள்வதிலோ அதற்காக முயற்சிப்பதோ கூடாது என்றும் இக்கூட்டம் இந்த தாலுகாவிலுள்ள எல்லா மக்களையும் வேண்டிக் கொள்கிறது. இதுதான் தீர்மானத்தின் வாசகம். அடுத்த நாள் இந்தத் தீர்மானத்தை கலெக்டர் அவர்கள் அருப்புக்கோட்டை அச்சாபீஸில் அச்சடித்து கொண்டு வந்திருக்கிறார். இந்த நோட்டீஸின் பிரதி கனம் அங்கத்தினர் ராமச்சந்திரன் அவர்களிடம் இருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே அங்கு எவ்விதமான வகுப்புவாதமும் நடைமுறையில் இல்லை என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன். கான்பிரன்ஸ் இரண்டு மணிக்கு முடிந்தது. முடிந்து சாப்பாட்டுக்கு வெளியே இறங்கினோம். அப்போது எங்கள் கூடவே ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரும் வந்தார். எனக்கு அவருடைய பெயர் தெரியவில்லை. அவரை எனக்குப் பார்த்தால் தெரியும். ஏதோ இமானுவேலிடம் தேவர் அவர்கள் சொன்னதாக சொல்லப்படுகிறது. இம்மாதிரி சொல்லுவது கடவுளுக்குக் கூட பொறுக்காது. ஆண்டவன் கண்டிப்பாக இதற்கு கூலி கொடுப்பான். நாங்கள் வெளியே வந்து கொண்டிருக்கும்போது வேலுசாமி நாடார் அவர்கள் சொன்னார்கள், என்ன சசி ரெம்ப சந்தோஷத்துடன் போகிறாயே, பத்து நாட்கள் பொறுத்து என்ன நடக்கிறது என்று பாருங்கள் என்று என்னிடம் கேட்டார். அந்த ஆள் சாக வில்லை. இன்றும் உயிரோடு இருக்கிறார். அவரிடம் வேண்டுமானால் கேட்கலாம். "பத்து நாட்களில் என்ன நடந்துவிடும்?" என்று நான் கூட ஸ்ரீ வேலுச்சாமி நாடாரைக்



28th October 1957] [Sri T. L. Sasivarna Thevar]

கேட்டேன். பிறகு நாங்கள் நண்பரின் வீட்டில் சாப்பிட்டு விட்டு, கையைக் கூடத் துடைத்துக் கொள்ள அவகாசமில்லாமல், அவ்வளவு சீக்கிரமாகப் புறப்பட்டு விட்டோம். அன்றையதினம் கலெக்டர் அவர்கள் ஸ்ரீ தேவருடன் இருந்து வந்தார். அவர் கான்பரன்ஸ் முடிந்து போகும்போது, தேவரிடம் " போய்வருகிறேன், தேவர் " என்று சொல்லிவிட்டுச் சென்றார். பிறகு அவருடைய காரின் பின்னால் நாங்கள் ஸ்ரீ தேவருடைய காரில் போய்க்கொண்டிருந்தோம். எங்களுக்குப் பின்னால் டி.ஐ.ஜி. அவர்களுடைய கார் வந்து கொண்டிருந்தது. அப்போது எங்களுக்கு முன்பு சென்று கொண்டிருந்த கலெக்டரின் கார் பழுதடைந்து விட்டது. கலெக்டர் காருக்கு ஜாக்கி இல்லை. டி.ஐ.ஜி.-யின் காருக்கு ஜாக்கி இருந்தது. டி.ஐ.ஜி-யின் கார் அங்கே வந்து சேர்ந்ததும், அந்தக் காரின் ஜாக்கியை எடுத்து கலெக்டரின் காருக்குப் பழுதுப்பார்த்தோம். பிறகு கலெக்டரை அனுப்பி விட்டு மாலை 4 மணிக்கு ஸ்ரீ தேவரைப் பசும்பொன்னிற்குச் கொண்டுபோய் விட்டோம். 10-ம் தேதி ஸ்ரீ தேவர் பசும்பொன்னில் இருந்தார். முதுகளத்தூரில் அன்று சுமார் 10,000 பேர் கூடியிருந்தார்கள். ஹரிஜன மக்கள், மறவர்கள் எல்லோரும் கூடியிருந்தார்கள். மகாநாடு நன்றாக முடிந்ததைப் பற்றி அவர்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள், ஆனந்தப்பட்டார்கள். இது பற்றி கலெக்டரை வேண்டுமானாலும் கேட்டுப் பார்க்கலாம். . அவர்கள் எல்லோரும் அமைதியாக சந்தோஷத்துடன் திரும்பிப் போனார்கள்.

10-ம் தேதி இரவு ஸ்ரீ இம்மானுவேல் பேறையூரில் இருந்தார். 11-ந் தேதி காலை, 8-மணிக்கு பஸ்ஸில் பரமக்குடிக்கு வந்தார். அங்கே பாரதி திருவிழாவிற்காக வந்தார். அங்கே அவர் 8¾ மணிக்குக் கொலை செய்யப்பட்டார். அவர் எந்தக் காரணத்திற்காகக் கொலை செய்யப்பட்டிருந்தாலும், யாரால் கொலை செய்யப்பட்டிருந்தாலும், அவர்பால் என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் மனப்பூர்வமான வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். 11-ம் தேதி இரவு அவர் கொலை செய்யப்பட்டார். அப்போதெல்லாம் தொகுதி பூராவும் அமைதி இருந்தது. 12-ம் தேதி அமைதி இருந்தது. 13-ம் தேதி அருங்குளத்தில் கலவரம் ஆரம்பமாகியது. அருங்குளம் பரமக்குடி தொகுதியில் இருக்கிறது. எங்கள் தொகுதிக்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாது. அங்கே தகராறுகள் சம்பந்தமாக, அந்தத் தொகுதி அங்கத்தினரான ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்கள் கூடக் கூப்பிடப்படவில்லை. கலெக்டர் அவரைக் கூப்பிடவில்லை. எங்களிடம் தான் தகராறுகள் இருந்தன. அருங்குளத்தில் என்ன தகராறு? அந்தப் பிராந்தியத்தில் டிராமாக்கள் நடந்தால் அந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ தேவரைப்பற்றிப் புகழ்ந்து பாடுவது உண்டு. அருங்குளத்தில் நடந்த நாடகத்தை ஹரிஜனங்களும் மறவர்களும் சேர்ந்தே நடத்தினார்கள். அங்கே வந்து திரு தத்தார் விசாரித்தபோது கூட "ரூபாய் 400 வசூலித்து மறவர்களிடம் கொடுத்தோம். திருவிழாக் கொண்டாடினோம் " என்று அங்குள்ள மக்கள் கூறினார்கள். அந்தத் திருவிழா ஒரு வேடிக்கைத் திருவிழா. அது ஒரு குதிரை எடுப்புத் திருவிழா. மொத்தம் 6—7 குதிரைகளில் ஒரு மறவர், ஒரு பள்ளர், ஒரு சக்கிலியர் வீதம் பல வகுப்பினரும் சில குதிரைகளைத் தூக்கிக் கொண்டு வருவது உண்டு. அப்படி பல வகுப்பினரும் குதிரைகளை எடுத்துக் கொண்டு வரும்போது, மறவப் பெண்களும் ஹரிஜன பெண்களும் சேர்ந்து பாடுவார்கள். அங்கே வகுப்புக் கலவரம் நடந்தது என்று சொல்பவர்கள், இப்படிப்பட்ட இடத்திலா வகுப்புக் கலவரம் நடக்கும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அருங்குளத்தில் கலகம் செய்தது அருங்குளத்து ஹரிஜனங்கள் அல்ல. அதற்குப் பக்கத்தில் பெருமாள் கோயில் என்று ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரில் 35 நாடார் வீடுகள் இருக்கின்றன. அருங்குளத்திற்குப் பக்கத்தில் பெருந்துறை என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரில் தேர்தலுக்கு காங்கிரஸ் அபேட்சகராக நின்று தோற்றுப் போன கிருஷ்ணக் குடும்பன் என்பவர் இருக்கிறார். அவர் பரமக்குடி தொகுதியில் கலகம் ஏற்படுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். அருங்குள நாடகத்தில் தேவரைப்பற்றிப் பாட்டுப் பாடாதே என்று சொன்னவர்கள் வெளியூரைச் சேர்ந்த தோழர்களும் காங்கிரஸைச் சார்ந்த தோழர்களும்

[28th October 1957

* THE HON. SRI C. SUBRAMANIAM : அது துப்பாக்கியா அல்லது ரிவால்வரா?

SRI T. L. SASIVARNA THEVAR : அது இரண்டும் அல்ல. அவைகள் ரொம்பவும் பயங்கரமான ஆயுதங்கள். அது ஒரு கம்புமாதிரி இருக்கிறது. அதில் ஒரு ஸ்பிரிங் இருக்கிறது. பின்னால் சுவிட்சு மாதிரி இருக்கிறது. அந்த சுவிட்சை அமுக்கினால் ஏழு அடி நீளமுள்ள ஒரு பயங்கரமான ஈட்டி வெளியே வருகிறது. அப்படிப்பட்ட பயங்கரமான ஆயுதங்களைப் பார்க்க வேண்டுமானால் அவைகள் அங்குள்ள தாலுகாவில் இருக்கின்றன. இதைப் பற்றி தினமணி பேப்பரில் கூட போட்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் பிறரால் கொடுக்கப்பட்டது. அங்கு தயார் செய்யப்பட்டது அல்ல. 17-ம் தேதி காலை கீரந்தைக்கு 100 மறவர்கள் போகிறார்கள். போலீஸ் தகவல் கிடைத்த வுடன் போகிறார்கள். அங்கு சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள் என்று போகிறார்கள். அங்கு கீழவக்குடும்பன் என்ற ஹரிஜனக் குடும்பமும் போகி றது. அங்கு இரவில் தங்குகிறார்கள். சாப்பிடுகிறார்கள். பழையபடி காலை அதாவது 17-ம் தேதி காலை 10 மணிக்கு சிக்கல் சப்-இன்ஸ்பெக்டர் வருகிறார். விசாரணை செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார். என்ன 100 பேர்கள் வந்திருக்கிறார்களே என்று கேட்கிறார். அவர்களைத் திருப்பி அனுப்பி விடுங்கள் என்று கூறிச் சென்றுவிட்டார். பிறகு 4 மணிக்கு கடலாடி சப்-இன்ஸ்பெக்டர் ஸ்பெஷல் போலிஸ் படையுடன் வருகிறார். அப்பொழுது ஹரிஜனங்களும் தாழ்த்தப்பட்டவர்களும் வந்தார்கள். அப் பொழுது மறவர்கள் பக்கத்திலுள்ள வைக்கோல் ஷெட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது கடலாடி சப்-இன்பெக்டர் அங்கே உள்ளவர்களைச் சுடுகிறார். அப்படி சுடும் போது ஏழுபேர்களை சுட்டுக் கொல்லுகிறார். கீழ்த்தூவாலில் சுட்டது முதல் தடவை. இங்கு போலிஸ்காரர்கள் சுட்டது இரண்டாம் தடவை. இதில் நால்வர் இறந்தனர் என்று போலீஸ் சொல்லுகிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த ஊரில் தானே மஞ்சள் வேஷ்டி கட்டியதாகச் சொன்னார்கள். அங்கே போனபோது மறவர்கள் மஞ்சள் வேஷ்டியை கட்டிக்கொண்டு ஏன் வந்தார்கள் என பதைச் சொன்னால் என்ன?

SRI T. L. SASIVARNA THEVAR : அவர்கள் மஞ்சள் வேஷ்டி கட்டிக்கொண்டு வரவில்லை. முதல் நாள் ஒரு கலியாணம் நடந்தது. அது சம்பந்தமாக மஞ்சள் வேஷ்டிக் கட்டிக்கொள்வது வழக்கம். அந்தப் பக்கத்திற்கு வந்தால் அதைப்பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள லாம். இந்த முறைப்படி அவர்கள் அன்று மஞ்சள் வேஷ்டிக் கட்டிக் கொண்டு வந்தார்கள். வேறு காரணத்தால் அப்படி கட்டிக் கொண்டு வந்திருக்க மாட்டார்கள். அந்த ஊரில் கலகம் செய்ய வில்லை. யாரை யும் வெட்ட வில்லை. வீடுகளுக்கும் தீ வைக்க வில்லை. சும்மா இருந்த வர்களைத்தான் போலீஸ்காரர்கள் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். (ஸ்ரீ என். ஆர். தியாகராஜன் அவர்களின் குறுக்கீடல்) மஞ்சள் வேஷ்டி கட்டுவதைப் பற்றி அவர் நேற்றுகூட மைலாப்பூரில் சொல்லி இருக்கிறார். அதைப் பற்றி இப்பொழுதும் சொல்லுவார். அதைப்பற்றி நான் சொல்ல வேண்டி யதில்லை. கீரந்தையில் நடந்த சம்பவத்திற்கு முதல் நாள் விசாரணை நடந்தது. அங்கு நான் போயிருந்தேன். இரண்டு மூன்று மணி சுமா ருக்கு கடலாடி சப்-இன்ஸ்பெக்டர் அங்கு ஆகாயத்தைப் பார்த்துச் சுட்டார். அதைக் கண்டு அந்த ஊர் ஜனங்கள் பயந்து கொண்டு ஓடிப்போய்விட்டார் கள். ராமனாதபுரம் ஆஸ்பத்திரியில் இருந்தவர்களில் ஒருவர்தான் பிழை த்தார். அவர் இறந்துபோய் விடுவார் என்று மரண வாக்குமூலம் வாங் கப்பட்டது.

வைக்கோல் பட்டரையிலிருந்து எடுத்த மூன்று பிரேதத்தை இரசின் [illegible]யில் விட்டு இரவோடு இரவாக எரித்து விட்டார்கள். இறந்தது ஏழுபேர். [illegible] சொன்ன கணக்கு நான்கு. தீயை வைத்துக் கொன்றது மூன்று [illegible]. ஸ்ரீ தத்தாரோடு நாங்கள் போயிருந்தோம். திரு கக்கன் அவர்

தான். அவர்கள் அப்படிச் சொன்னவுடன் உள்ளூர்க்காரர்களான அருங்குளத்து மக்கள் டிராமாவை நிறுத்தி விட்டனர். டிராமா நின்றதற்குப் பிறகு, 13-ம்தேதி காலை சாமி கும்பிடுவது மட்டும் அருங்குளத்தில் நடந்தது. அதற்கு அருங்குள ஹரிஜனங்களும் மறவர்களும் சேர்ந்து ஏற்பாடு செய்தார்கள். அப்போது வெளியூரிலிருந்து அங்கே வந்தவர்கள் அங்குள்ள ஹரிஜனங்களிடம் " மறவர்களுடன் சேர்ந்து ஏன் சாகிறீர்கள் ?" என்று கேட்டனர். இந்த விஷயத்தை திரு. நத்தாரிடம் அந்த ஊர் மக்கள் சொல்லவில்லையா என்று கனம் மந்திரி ஸ்ரீ கக்கன் அவர்களை நான் கேட்கிறேன்.

* **THE HON. SRI P. KAKKAN** : கனம் அங்கத்தினர் இடையில் என்னை எதுவும் கேட்க வேண்டாம். அவர் தொடர்ந்து ஸ்தல மக்கள் சொன்ன விஷயங்களைச் சொல்லிக் கொண்டு போகலாம்.

* **SRI T. L. SASIVARNA THEVAR** : கனம் மந்திரி அவர்களே அந்த விஷயங்களைக் கேட்டிருக்கிறார்கள் என்பதற்காகச் சொன்னேன், அருங்குளத்திலும் வகுப்புவாதத்திற்குக் காரணம் இல்லை. வெளியூரார் அங்கே வந்து கலகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அருங்குளத்தில் 12-ம் தேதி கலகம் ஏற்பட்டவுடன் அது பார்த்திபனூருக்கு வந்தது.

* **THE HON. SRI C. SUBRAMANIAM** : வெளியூரிலிருந்து ஹரிஜன சகோதரர்கள் வந்து அங்கே கலகத்தை ஏற்படுத்தினார்கள் என்றால், அங்கே உள்ள ஹரிஜனங்கள் சாவானேன், மறவர்கள் சாவானேன் ?.

**SRI T. L. SASIVARNA THEVAR** : அங்கே இறந்துபோன ஹரிஜனங்கள் உள்ளூர்க்காரர்கள் அல்ல, அவர்கள் வெளியூர் ஹரிஜனத் தோழர்கள். இது ரெக்கார்டில் இருக்கிறது. நான் சொல்லுவது தவறு இல்லை. இது ரெக்கார்டில் இருக்கிறது. பிறகு, 13-ம் தேதி காலை பார்த்திபனூருக்கு மூன்று மைல் தூரத்தில் மூன்று போலீஸ்காரர்களும் ஒரு ஹெட் கான்ஸ்டபிளும் வந்து சமாதானம் செய்து விட்டுப் போனார்கள். அன்று 10 மணிக்கு அங்கே மறுபடியும் கலகம் ஏற்பட்டது. அங்கே அந்த கலகம் முடிந்தவுடன் போலீஸ்காரர்கள் மறுபடியும் வந்தனர். அங்கே வந்தவுடன் அங்குள்ள எல்லோருடைய வீடுகளுக்கும் போலீஸ்காரர்களும் சேர்ந்து தீ வைத்தனர். ஹரிஜனத் தோழர்கள் தீ வைத்ததை நான் குறிப்பிட வில்லை. போலீஸ்காரர்களே வீடுகளுக்குத் தீ வைத்துக் கொளுத்தினார்கள். அங்குள்ள மறவப் பெண்களை சில ஹரிஜனங்கள் குத்த முயன்றார்கள். அந்த ஹரிஜனங்கள் தவறான முறையில் வெறியூட்டப்பட்டவர்கள். ஒரு டி.எஸ்.பி., ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு சர்க்கில் இன்ஸ்பெக்டர் இத்தனை பேரும் இருக்கும் போது அவர்கள் முன்னிலையிலேயே ஒரு மறவப் பெண்ணை அந்த ஹரிஜனங்கள் குத்திவிட்டார்கள். போலீஸ்காரர்கள் அவர்களை ஒன்றும் செய்ய வில்லை, அவர்களைத் தடுத்து நிறுத்தவும் இல்லை. குத்தப்பட்ட அங்கம்மாள் என்ற பெண் ராமனாதபுரம் ஆஸ்பத்திரியில் தன் வாக்குமூலத்தில் " போலீஸ் அதிகாரிகள் முன்பு அவர்கள் என்னைக் கொலை செய்தார்கள் " என்று சொல்லியிருக்கிறாள். அவள் அந்த 4 ஹரிஜனங்களின் பெயர்களைச் சொல்லியிருக்கிறாள். அவர்கள் யாரையும் போலீஸார் கைது செய்ய வில்லை. இதன் காரணம் ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

அருங்குளம் தொகுதிக்கும் எங்கள் தொகுதிக்கும் சம்பந்தமில்லை என்று சொல்ல விரும்புகிறேன். 11, 12, 13 தேதிகளில் முதுகுளத்தூர் தொகுதியில் கலகம் இல்லை. 14-ம் தேதி காலையில் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ரேயுடன் கீழ்த்தூவலுக்கு போலீஸ்காரர்கள் வந்தனர். இமானுவேல் கொலை சம்பந்தமாக இரண்டு பேர்களைப் பிடிக்க அங்கே தாங்கள் வந்ததாகப் போலீசார் சொல்கின்றனர். அங்கே வந்த கிராம மக்களில் 5 பேர்களைக் கண்ணைக் கட்டிக் கொண்டுபோய் போலீசார் சுட்டனர். முதன் முதலாக எங்கள் பிராந்தியத்தில் போலீஸ்காரர்கள் தான் 5 பேர்களைச் சுட்டனர், 14-ம் தேதி காலையில் 11-ம் தேதி 3 மணிக்கு ஒரு தந்தியும் 7 மணிக்கு ஒரு தந்தியும் வந்தன. 15-ம் தேதி கூட எங்கள் தாலுகாவில் கலவரம் இல்லை. 16-ம் தேதி அங்கே தகராறு வந்தது. இளஞ்



சம்பூரிலும், கீரந்தையிலும் வைக்கப்பட்டிருந்த போலீஸ் பந்தோபஸ்து 15-ம் தேதி காலையில் வாபஸ் பெறப்பட்டது என்று நான் ஏற்கனவே சொன்னேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : 14-ம் தேதி 3 மணிக்கு தனக்குத் தந்தி வந்ததாக கனம் அங்கத்தினர் சொல்கிறார். அந்தத் தந்தியை அவர் சபை முன்பு வைக்க முடியுமா என்று கேட்கிறேன்.

* **SRI T. L. SASIVARNA THEVAR** : அதை ஸ்ரீ வெங்கடேஸ்வரரிடம் காண்பித்திருக்கிறேன். இரண்டாவது தந்திக்கு ஆள் இருக்கிறார். முதல் தந்திக்கு ஆள் இல்லை. இரண்டாவது தந்தி மேலத் தூவலிலிருந்து வந்த தந்தி.

15-ம் தேதி தாலுகா பூராவும் அமைதியாக இருந்தது. எங்கள் பிராந்தியத்தில் கலகம் இல்லை. 14-ம் தேதி காலை கீரந்தையில் போலீஸ் பந்தோபஸ்து வாபஸ் வாங்கப்பட்டது. இப்படி வாபஸ் வாங்கியதற்காக அங்குள்ளவர்கள் மதுரை வந்து வக்கீல் மூலமாக வாபஸ் வாங்கியது தவறு ; பந்தோபஸ்து வேண்டும் என்று மனுக் கொடுத்தார்கள். எந்தக் காரணத்திற்காக போலீஸ் பந்தோபஸ்து வாபஸ் வாங்கப்பட்டது என்பது தெரியவில்லை. 16-ம் தேதி வக்கீல் மூலமாக கலெக்டரிடம் மனுக் கொடுத்தார்கள். அதன் பிறகு திட்டமிட்டபடி காங்கிரஸைச் சேர்ந்த ஹரிஜனங்கள் இலஞ்சாம்பூருக்குப் போகிறார்கள். ஒரு கூட்டம் திட்டமிட்டபடி இலஞ்சாம்பூருக்குப் போகிறது. ஒரு வீட்டில் ஐந்து பேர்கள் இருந்தார்கள். காலை $5\frac{1}{2}$ மணிக்கு ஒரு வீட்டில் வாசலில் ஒரு பெண் சாணம் தெளித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது அங்குள்ள ஐந்து பேர்களையும் வெட்டி துண்டமாகப் போட்டு விட்டார்கள். இந்த ஐந்து பேரில் நான்கு பேர்கள் இறந்து போய் விட்டார்கள். ஆனால் ஒருவர் மட்டும் இறக்க வில்லை. அவரும் இறந்து விட்டதாக நினைத்துக்கொண்டு தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். பிறகு வீரம்பலுக்கு 6 மைலுக்கு அப்பாலுள்ள கீழ்ப்பனையூரைச் சேர்ந்தவர்கள் வருகிறார்கள். இரண்டு பேர்களைச் சோத்து வீழ்த்தி விடுகிறார்கள். பிறகு கூட்டம் பூராவும் ஓடி விடுகிறது. $10\frac{1}{2}$ மணிக்கு அப்பால் போலீஸ் வருகிறது. கலகம் நடந்த பிறகு மீண்டும் போலீஸ் பந்தோபஸ்து கொடுத்தார்களா என்றால் அதுவும் கிடையாது. வீரம்பல் ஊரில் கலகம் மீண்டும் வரும்போல் இருக்கிறது, ஏற்கனவே நாலைந்து பேர்கள் இறந்து விட்டார்கள், திரும்பவும் கலகம் நடக்கும்போல் இருக்கிறது, போலீஸ் பந்தோபஸ்து கொடுக்க வேண்டும் என்று கேட்டும் போலீஸ் பந்தோபஸ்து கிடைக்க வில்லை. இதைப் பார்த்தால் எல்லாம் யோசனை செய்து நடக்கக்கூடிய வேலைகளாகத் தெரிகிறது. திட்டமிட்டபடி வேலை செய்கிறார்கள் என்பது தெரியவரும்.

அடுத்தபடியாக கீரந்தை கிராமம். அதற்குப் பக்கத்தில் சிக்கல் என்ற ஊரில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அங்கு சிவதாணு என்ற ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவர்கள் கலகக் கூட்டத்தைப் பார்க்கிறார். போலீஸ்காரர்களிடம் ஆயுதம் கிடையாது. அவர்களுக்கு ஜாஸ்தி பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. அப்போது தூண்டப்பட்ட ஹரிஜனங்கள் வந்தார்கள். அவர்களிடம் " உங்களுக்கு சர்க்காருடைய உதவி இருப்பது என்பது வாஸ்தவம்தான், நீங்கள் பகலில் ஏன் வருகிறீர்கள் இரவில் வாருங்கள் " என்று சொல்லித் தந்திரமாக சிக்கலுக்கு அழைத்துப்போகச் சொன்னார்கள். பிறகு இரவில் கலகக்காரர்களை கைது செய்கிறார்கள். அவர்களை சிக்கலுக்குக் கூட்டிக் கொண்டு போய் கைது செய்கிறார்கள். ஏதோ இது வேடிக்கைப்போல் இருக்கும், ஆனால் வேடிக்கை இல்லை. இவ்விதம் 120 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள். வந்த கலகத்தினரிடையே எப்படிப்பட்ட ஆயுதங்கள் இருந்தன வென்றால் பயங்கரமான ஆயுதங்கள், ஆச்சரியப்படக்கூடிய பயங்கரமான ஆயுதங்களை அவர்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஆயுதங்கள் ஸ்பென்சர் கம்பெனியில் செய்யப்பட்டது என்று கூட சொல்லிக் கொண்டார்கள்.

[28th October 1957

APPENDIX I.

[Vide answer to starred question No. 16 asked by Sri M. Kalyanasundaram at the meeting of the Legislative Assembly held on 28th October 1957, page 91 supra.]

**G.O. Ms. No. 3878, Development, dated 5th October 1945.**

[Rent—Madras House Rent Control Order, 1941—Assessment of houses occupied by owners—Annual rental value—Fixation —Instructions to local bodies—Issued.]

READ—the following paper :—

From the Commissioner, Corporation of Madras, dated 1st August 1945, R.D.C. No. 17769 of 1945.

*Order—No.* 3878, *Development, dated* 5*th October* 1945.

Under clause 5 of the Madras House Rent Control Order, 1941, the Controller should, in fixing the fair rent for a house have due regard, among other things, to the rental value of the building as entered in the property tax assessment book of the local board or the municipality as the case may be, during the twelve months prior to the 1st April 1940. It has been brought to the notice of the Government that the taxation policy of the Corporation of Madras is not in conformity with the above provisions of the Madras House Rent Control Order as the Corporation has increased the annual rental values of certain houses over and above the levels which existed prior to 1st April 1940, while the owners of these houses are prohibited from raising the rent for them. The Government have examined the question in consultation with the Commissioner, Corporation of Madras.

2. The Commissioner, Corporation of Madras, has stated that the assessments of houses occupied by the owners are revised in conformity with the principles laid down in section 100 (2) of the Madras City Municipal Act according to which the annual value of lands and buildings shall be deemed to be the gross annual rent at which they may reasonably be expected to be let from month to month and from year to year subject to certain deductions and that the gross annual rent is arrived at by taking into consideration the rent which similar buildings are actually fetching. The Commissioner has also observed that there is no question of fair rent being fixed in these cases on the basis of the rent which prevailed in 1939–40. The Government consider that the procedure followed by the Corporation in arriving at the gross annual rent in respect of the owner occupied houses is not justifiable so long as the Madras House Rent Control Order, 1941, is in force in view of the following facts. The Rent Control Order does not prohibit a landlord from increasing the rent of a house over the pre-war levels provided the tenant agrees to pay the increased amount. Only if the tenant considers that the rent is excessive, it is open to him to apply to the Rent Controller and



28th October 1957]

get the fair rent fixed for the house. But such cases are not likely to be many. Consequently only the high rent now paid by the tenants in the locality due to scarcity of accommodation is taken into consideration in fixing the gross annual rent for the owner occupied houses. A landlord occupying his own house is thus forced to pay, for no fault of his own, more assessment on the ground that similar houses occupied by tenants in the locality are fetching higher rents at present. The Government consider, that, so long as the Madras House Rent Control Order, 1941, is in force, the annual rental value in respect of a house occupied by the owner should not be raised by any municipality or local board, as the case may be, to an amount more than that which prevailed during the twelve months prior to 1st April 1940, unless its rental value has been increased by improvement or additions to the building.

(By order of His Excellency the Governor)

C. V. NARASIMHAN,
*Deputy Secretary to Government.*

## APPENDIX II.

(Vide answer to question No. 16, page 91 supra.)

### Memorandum No. 78085-N/45-4, Development, dated 22nd April 1946.

[Rent—Madras House Rent Control Order—Increase in the assessment of owner-occupied houses by the local bodies—Prohibition—Further instructions—Issued.]

READ—the following papers :—

From the Inspector of Municipal Councils and Local Boards, dated 30th November 1945, No. 31852/45-A.

From the Commissioner, Corporation of Madras, dated 13th December 1945, R.D.C. No. 17769/45.

From the Inspector of Municipal Councils and Local Boards, dated 13th December 1945, Endorsement No. 36286/45.

From the Chairman, Municipal Council, Proddattur, dated 7th January 1946, No. 110/46.

From the Inspector of Municipal Councils and Local Boards, dated 7th February 1946, Endorsement No. 3272/46.

*Memorandum*—No. 78085-N/45-4, *Development, dated* **22nd** *April* 1946.

In G.O. Ms. No. 3878, Development, dated the 5th October 1945, instructions were issued to all local bodies that so long as the Madras House Rent Control Order is in force, the annual rental value of a house occupied by the owner should not be raised by any municipality or local board as the case may be, to an amount exceeding that which prevailed during the twelve months prior to the 1st April 1940, unless its rental value has been increased by improvements or additions to the building. In carrying out the above instructions, the Commissioner, Corporation of Madras, the Commissioners of Kurnool, Vellore, Nellore, Madurai, Bimilipatam and Tiruppattur municipalities, the Chairman, Municipal Council, Proddatur, and the Executive Officer, Panchayat Board, Kallakurichi, have raised the following points :—

(i) Rule 8 (1) of Schedule IV of the District Municipalities Act, 1920, lays down that the assessment books shall be completely revised by the Executive Authority once in every five years and allows discretion to revise the taxes on buildings whether let out for rent or occupied by the owners, if there are reasonable grounds for revision. The point whether the assessments on houses occupied by owners should or should not be revised in the quinquennial revision though their value has been considerably increased after 1940–41 may be clarified.

(ii) There are cases of under and inadequate assessments of owner-occupied houses and G.O. Ms. No. 3878, Development, dated 5th October 1945, should not operate as a bar against the raising of the annual rental value in these cases.



(iii) Instructions should be issued as to whether houses occupied by the owners but portions of which are let out and houses which are re-occupied by owners after they had been let out temporarily on higher rent should be treated in the same manner as owner occupied houses for purposes of assessment to tax.

(iv) A landlord who owns several houses and has rented out all the houses on high rents except the house in which he resides should be asked to pay a high rate of assessment for the house in his occupation and similarly persons who are responsible for rise in rents on account of inflation should be charged a high rate of assessment.

(v) In G.O. Ms. No. 3878, Development, dated 5th October 1945, a reference has been made to the Rent Control Order, 1941. As a new Madras House Rent Control Order, 1945, has been issued in supersession of the Orders issued in 1941, it is not clear whether the instructions in G.O. Ms. No. 3878, Development, dated 5th October 1945, should be given effect to.

(vi) Under the Madras House Rent Control Order, in fixing the fair rent for houses, the Rent Controller has been permitted to allow an increase not exceeding 8-1/3rd per cent of the rental levels that prevailed during 1939–40. The Corporation and the local bodies also should be permitted to enhance the assessment in respect of owner-occupied houses by at least 8-1/3rd per cent over the rental value that prevailed during 1939–40 as the rise in value is general and not confined to rented houses alone.

(vii) The Rent Control Order applies only to a house which is let or is to be let for residential purposes and not to owner-occupied houses and consequently there is no need to secure a conformity between tax assessments and the spirit of the regulations in the Rent Control Order.

(viii) G.O. Ms. No. 3878, Development, dated 5th October 1945, restricts the exercise of the discretion vested by law in the assessing authorities.

(ix) As a result of the Government Order, the houses let out for rent can be assessed on the basis of the actual rentals while houses occupied by owners should not be raised over the figures of 1939–40 and this will bring about a great disparity in the assessment of houses of the same kind when occupied by owners and when let out for rent.

(x) The points whether, in view of the Government Order, the assessments made in 1940 in respect of owner-occupied houses should be revised or whether those made in 1945 only need revision and whether the owners of such houses should apply for a revision of the assessment or whether the municipality should do it and whether the owners are entitled to refunds in respect of tax already collected.

[28th October 1957

2. The Government have examined the points raised by the Executive Authorities of local bodies and issue the following further instructions for their guidance :—

*Point* (i).—The assessment of houses occupied by owners are revised in conformity with the principles laid down in section 100 (2) of the City Municipal Act, 1919, and section 82 (2) of the District Municipalities Act, 1920, according to which the annual value of lands and buildings shall be deemed to be the gross annual rent at which they may reasonably be expected to be let from month to month and from year to year subject to certain reductions. The procedure followed by the Corporation of Madras and other local bodies in arriving at the gross annual rental value in respect of owner-occupied houses is by taking into consideration the rent fetched by similar buildings in the neighbourhood occupied by tenants. It was considered that the procedure adopted by the local bodies, in fixing the gross annual rental value for these owner occupied houses taking into consideration only the high rent now paid by the tenants in the locality due to scarcity of accommodation was not reasonable and that a landlord occupying his own house should not thus be forced to pay, for no fault of his own, a higher assessment. As the Madras House Rent Control Order restricts the enhancement of rents by the landlords, it was also considered justifiable that the assessment on the houses occupied by the owners also should not be increased over that level and instructions were issued accordingly in G.O. Ms. No. 3878, Development, dated 5th October 1945. These instructions do not prohibit any statutory revision of assessments but only draw attention to the correct procedure to be followed in fixing the gross annual rental value in respect of the houses occupied by the owners.

*Point* (ii).—Attention is invited to Government Memorandum No. 67986—N/45-2, Development, dated 19th November 1945, in which it has already been explained that G.O. Ms. No. 3878, Development, dated the 5th October 1945, will not operate as a bar against raising the annual rental value of houses which are found to have been inadequately assessed even on the basis of the rentals which prevailed during 1939–40.

*Point* (*iii*).—The instructions in G.O. Ms. 3878, Development, dated 5th October 1945, will apply to a house temporarily let out and then re-occupied by the owner from the date of such re-occupation but not a house a portion of which only is occupied by the owner.

*Point* (iv).—In fixing the rental value of a property, it is the property and not the ability of the owner to pay the assessment that should be taken into consideration. Further, if the owner raises the rents of the houses let out by him the local bodies will automatically enhance the assessment in respect of these houses. The rental value of the houses in each of the cases referred to should be assessed independently.



28th October 1957]

*Point* (v).—The instructions in G.O. Ms. No. 3878, Development, dated 5th October 1945, were not issued under any of the provisions of the Madras House Rent Control Order. The fact that the Madras House Rent Control Order, 1941, has been repealed and replaced by the House Rent Control Order, 1945, cannot affect the validity of the instructions in the Government Order.

*Point* (vi).—The Government have no objection to the enhancement of the assessment in respect of owner occupied houses by 8-1/3rd per cent over the rental value that prevailed during 1939–40.

*Point* (vii).—The Government consider that although the House Rent Control Order does not apply to houses which are occupied by the owners, the provisions of the Order should be taken into account in the determination of the annual rental value of such houses with reference to section 100 (2) of the City Municipal Act and section 82 (2) of the District Municipalities Act as they have a very important bearing upon the letting value of the house.

*Point* (viii).—G.O. Ms. No. 3878, Development, dated 5th October 1945, does not in any way restrict the exercise of the discretion vested by law in the assessing authorities. The Government Order only points out the bearing of the House Rent Control Order on the subject of the determination of the "annual value" of premises under the City Municipal and District Municipalities Acts. Generally, the annual value of a house occupied by its owner has to be determined with reference to the rents prevailing in the neighbourhood. But if those rents are exorbitant and cannot be justified with reference to the provisions of the House Rent Control Order, it will not be right to take them into account as the provisions of the House Rent Control Order, which is a statutory order, cannot be ignored. Section 100 (2) of the City Municipality Act and section 82 (2) of the District Municipalities Act refer to the annual rent at which the premises may reasonably be expected to be let from month to month or from year to year. An exorbitant rent not justified by the House Rent Control Order and which, on the application of a tenant, is bound to be reduced to the level of "fair rent" as prescribed by that order, cannot be regarded as a rent at which the owner occupied house can reasonably be expected to be let within the meaning of section 100 (2) of the City Municipality Act and section 82 (2) of the District Municipalities Act. An assessing authority who fixes the annual value of an owner-occupied house with reference to exorbitant rents prevailing in the neighbourhood, without bearing in mind the provisions of the House Rent Control Order, cannot be regarded as having exercised his discretion properly.

*Point* (ix).—The disparity in the assessment of houses of the same kind when occupied by owners and when let out for rent is bound to exist even as it now exists in the case of a house for

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 29th October 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Tamil as official language*

* 21 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to introduce Tamil as the medium for the transaction of official business and correspondence in Government departments?

THE HON. SRI C. SUBRAMANIAM : As the hon. Members may be aware, the Madras Official Language Act, 1956, has been enacted declaring Tamil as the Official language of the State. Based on the recommendations of the Official Language Act Implementation Committee, instructions have been issued to all Heads of Departments in the matter.

SRI N. K. PALANISAMI : இது விஷயமாக ஏதாவது காலவரை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ? எதற்குள் எல்லா டிபார்ட்மெண்டுகளிலும் தமிழைக் கொண்டு வர உத்தேசம் இருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கீழ்க் கண்ட அட்டவணை வகுக்கப்பட்டிருக்கிறது. 1957–58-க்குள்ளாக கீழ்க் கண்ட விஷயங்கள் கவனிக்கப்படும் :—

(1) Printing and distribution of standard glossary to all offices; (2) introduction of Tamil as official language in all offices for which English typewriters have not been sanctioned; (3) standardization of the Tamil typewriter keyboard and supply of Tamil typewriters to all offices; (4) making good progress in the preparation of supplementary glossaries; (5) making good progress in the preparation of departmental codes, manuals and forms; (6) starting Government typewriting institutes for training Tamil typists. Tamil will be introduced as the official language in 1958–59 for correspondence and in this regard hon. Members, I am sure, would have seen the list of eight departments in which it will be so introduced.

SRI S. LAZAR : தமிழிலே நிர்வாகத்தை ஒரு சில ஜில்லாக்களிலே நடத்துவது சம்பந்தமாக சர்க்கார் திருப்தி அடைந்திருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த மாறுதலை ஒரு சிறு பகுதியிலே [illegible] நடத்தி அது திருப்திகரமாக நடைபெறுகிறதா என்பதைப் பார்[illegible]அதை வைத்துக்கொண்டு தமிழிலேயே காரியங்களைச் செய்ய முடியுமா, [illegible]டியாதா என்பதை நாம் முடிவு செய்ய முடியாது.

SRI [illegible]. PAKKIRISWAMI PILLAI : இந்த மாதிரி உத்தரவு கார்ப்பொரேஷன் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறதா ?

[29th October 1957

THE HON. SRI C. SUBRAMANIAM : கார்ப்பொரேஷனில் கனம் அங்கத்தினர் போன்றவர்கள் இருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் இதில் அக்கரைக்கொண்டு அங்கும் வேண்டியதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன். அது தனிப்பட்டு இருக்கக்கூடிய ஒரு கார்ப்பொரேஷன்.

SRI A. A. RASHEED: Have the Government received any communication from the High Court opposing or objecting to the introduction of Tamil as court language?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not see why any institution should oppose this and I have not also heard of any opposition from any quarters.

SRI S. B. ADITYAN : தமிழிலே அகராதி தயார் செய்து அச்சிட்டு விநியோகிப்பதாக மந்திரி அவர்கள் சொன்னார். அந்த அகராதியை தயார் செய்வது யார் அல்லது செய்திருக்கிறது யார் ? பேச்சு வழக்கத்தில் இருக்கும் தமிழ் பதங்களை உபயோகிக்கவேண்டுமென்பது கவனத்தில் இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : திருநெல்வேலி தமிழ் சங்கம் ஒரு தனி குழுவை அமைத்து அதிலே எல்லா பிரதிநிதிகளையும் எடுத்துக் கொண்டு முதலிலே இந்தப் பதங்களை தயார் செய்தார்கள். அதற்கு பிற்பாடு சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இன்னும் நிபுணர்கள் அடங்கிய ஒரு கமிட்டி போட்டு அதைப் பரிசீலனை செய்து, அதை தற்காலிகமாக ஒப்புக் கொண்டு இப்பொழுது அச்சிடப்படுகிறது. வழக்கத்தில்வரும்போது சில மாறுதல்கள் ஏற்படும் என்பதில் சந்தேகமே கிடையாது. ஆகவே சில மாறுதல்கள் செய்து அவ்வப்போது புது அட்டவணை தயார் செய்து வெளியிடப்படும்.

SRI K. VINAYAKAM : Are the Government convinced that proper vocabulary has not been formulated yet and that proper connotations for words have not been possible of being framed so as to get the exact equivalents for technical words in Tamil ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்குக் காரணமே நாம் தமிழிலே உபயோகப்படுத்தாமல் இருப்பதுதான். நீந்தத் தெரிந்த பிறகு தண்ணீரில் இறங்கலாமா, அல்லது தண்ணீரிலே இறங்கிய பிற்பாடு நீந்தக் கற்றுக்கொள்ளலாமா என்ற விவாதத்தைப் போன்றது இது. தமிழ் உபயோகத்திற்கு வரும்போது என்னென்ன பதங்கள் அவசியமோ அவைகள் கட்டாயமாக வந்து சேரும் என்பதில் சந்தேகமே கிடையாது.

SRI M. KALYANASUNDARAM : மந்திரி அவர்கள் சொன்னதை நான் பூராவும் ஆமோதிக்கிறேன். அதே போல் கோர்டுகளிலும் எப்பொழுது தமிழ் அமுலுக்கு வரும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறதா என்பதை அறிவிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த மாறுதல்கள் ஏற்படும்பொழுது இந்த மாறுதல்களின் காரணமாக பெருத்த சிக்கல்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது மிகவும் முக்கியம். அதனால் படிப்படியாக இதைச் செய்யவேண்டுமென்று ஒரு அட்டவணையை போட்டுக்கொண்டு அதற்குத் தகுந்த பிரகாரம் மாறுதல்கள் செய்யப்பட்டு வருகின்றன. கோர்டுகள் உள்பட எல்லாப் பகுதிகளிலும் தமிழிலே நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அவ்வப்பொழுது செய்யப்படும் என்று உறுதியாகச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

SRI P. G. MANICKAM : தற்பொழுது தாலுக்காக்களிலும், ஜில்லாக்களிலும் கையெழுத்துப் பிரதிகள் மூலமாக அங்குள்ள ஆபீஸர்கள் கிராமங்களுக்கு எழுதி அனுப்புகிறார்கள். அந்தக் கையெழுத்துப் பிரதிகளை ஆங்கிலத்தில் எழுதுவதற்குப் பதிலாக தமிழிலேயே எழுதி அனுப்ப வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு பிறப்பிப்பார்களா ?



29th October 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லாமே தமிழில் வரும்பொழுது கிராமத்திற்குப் போகும் கையெழுத்துப் பிரதிகள் மட்டும் ஆங்கிலத்தில் போகும் என்று கனம் அங்கத்தினர் எதிர் பார்க்கவேண்டியதில்லை. எல்லாமே தமிழிலே இருப்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது. சில விஷயங்கள் தமிழிலே எழுத முடியாத காரணத்தினாலே ஆங்கிலத்திலே எழுதி அனுப்புவார்கள். தமிழில் எழுதக்கூடாது என்பது இல்லை. சில விஷயங்களை மொழி பெயர்க்க முடியாத காரணத்தினாலும், அதில் இருக்கக் கூடிய கஷ்டத்திற்காக அப்படியே ஆங்கிலத்தில் எழுதி அனுப்பிவிடுகிறார்கள். தமிழிலே எழுதக்கூடாது என்ற காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI N. K PALANISAMI : சர்க்கார் ஆட்சி மொழி கமிட்டிக்கு கிளாஸரி சம்பந்தமாக கெமிஸ்டிரியைப் பொறுத்தமட்டில் Nitric acid, Oxygen இம்மாதிரியான பதங்கள் உலகத்தில் எந்த மொழியிலும் கிடையாது, ஆதலால் ஆங்கிலத்தில் இருப்பதையே தமிழில் வைத்துக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்களா ? சைகிள். . . . .

MR. SPEAKER : The hon. Member is offering suggestions. He must put straight questions and not offer suggestions.

SRI N. K. PALANISAMI : ஆட்சி மொழி கமிட்டிக்கு ஏதாவது இம்மாதிரியான விதிகள் போடப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆட்சி மொழிப் பதங்கள் மட்டும் தான் இப்போது கவனிக்கப்பட்டுவருகின்றன. ("அட்மினிஸ்டிரேடிவ்" டேர்ம்ஸ்) பாக்கியிருக்கக் கூடிய விஞ்ஞானப்பதங்கள் (ஸைன்டிபிக் டேர்ம்ஸ்) போன்ற பதங்களெல்லாம் பின்னாலே கவனித்து செய்ய வேண்டியவை. இந்த கிளாஸரியைப் பொறுத்தவரையில் நிர்வாக சம்பந்தமாக என்னென்ன பதங்கள் உபயோகப்படுத்தப்படுகிறதோ அது பற்றி கவனிக்கப் படுகிறது. ஆங்கில பதங்கள் தமிழ் பதங்களாகவே அமுலில் இருந்து வந்தால், மக்கள் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தால் அந்த ஆங்கில பதங்களே உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : மாகாண அரசாங்கம் நமது தமிழை ஆட்சி மொழியாக்குவதில் எல்லோருக்கும் சந்தோஷம் தான். ஆனால் இந்தத் தமிழ் எந்த ரூபத்தில் இருக்கும் என்பது எங்களுக்கு சற்று பயமாக இருக்கிறது. அது தமிழ் பண்டிதர்கள் பேசும் பாஷையாக இருக்குமா அல்லது பாமரர்கள் பேசும் பாஷையாக இருககுமா என்பதை கனம் மந்திரி அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நல்ல தமிழாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI A. VEDARATHNAM PILLAI : அரசாங்கத்தினுடைய எல்லா நடவடிக்கைகளையும் தமிழ் மயமாக்குவதற்கு எத்தனை காலம் பிடிக்கும் என்பதை கனம் மந்திரி அவர்கள் அறிவிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முன்பே 1957-58-ல் என்ன செய்யப்போகிறோம் 1958–59-ல் என்ன செய்யப் போகிறோம் என்று கால அட்டவணையைப்படித்தேன். இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் முடிவதற்குள்ளாக எல்லா விஷயங்களையும் தமிழிலேயே செய்ய முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

SRI A. GOVINDASAMY : தமிழ் நாட்டில் அஞ்சல் நிலையங்களில் அஞ்சல் அட்டைகளும் மணியார்டர் பாரங்களும் ஹிந்தியிலே இருப்பதால் பொது ஜனங்களுக்கு இடையூறு ஏற்பட்டிருக்கிறது என்ற விஷயத்தை மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி பொது ஜன சௌகரியத்தை உத்தேசித்து தமிழ் நாட்டில் வழங்கப்படும் கார்டு, மணியார்டர் பாரங்களையாவது தமிழிலே வழங்கும்படி ஆலோசனை கூறுவார்களா ?

[29th October 1957

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் கேட்கக்கூடிய விஷயம் இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**Sri N. S. RAMALINGAM** : தமிழ் டைப்ரைடர்கள் அதிகமாக கிடைக்காததால், அவை கிடைப்பதற்கு அரசாங்கம் வசதி செய்துகொடுக்குமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : தமிழ் டைப்ரைட்டர் கீபோர்டு எந்த விதத்தில் அமைக்கப்படவேண்டுமென்பதிலே சில அபிப்பராயபேதங்கள் இருக்கின்றன. ஆதலால் இரண்டு கீபோர்டுகளை எடுத்துக்கொண்டு அவைகளில் சிறந்தது எது என்பதைப் பற்றி பரீக்ஷைகள் நடந்துவருகின்றன. பரீக்ஷை முடிந்தவுடன் அவைகளில் எது சௌகரியமாக இருக்கிறதோ அந்த கீ போர்ட்டை எடுத்துக்கொண்டு அந்த அடிப்படையிலே புதிய டைப்ரைடர்கள் சப்ளை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

**Sri K. ANBAZHAGAN** : ஆட்சி மொழியை தமிழாக அமைக்கின்ற முயற்சியில் பல சொற்களை புதிதாக அமைக்க நேரும்பொழுது பல வட மொழிச் சொற்கள் தமிழ்ச் சொற்களாக கருதப்பட்டு தமிழிலே இடம் பெறும் நிலைமை ஏற்படும்போது பழையத்தமிழ் சொற்கள், நல்ல எளியத்தமிழ்ச் சொற்கள் மக்களிடையே வழக்கிழந்து விட நேருகின்றன. அதுபற்றி அரசாங்கம் கவனிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் சொல்லுவதை நான் புரிந்துக்கொள்ள முடியவில்லை. வழக்கத்தில் இல்லையென்றால் அந்த சொற்களை மக்கள் எப்படி புரிந்துக்கொள்ள முடியும் ? வழக்கத்தில் இருக்ககூடிய சொற்கள் எது தமிழ் ரூபமாக இருக்ககூடியதோ, தமிழ் மக்கள் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறதோ அவைகளையெல்லாம் தமிழ் சொற்களாக எடுத்துக்கொள்ளுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இதேமாதிரி ஆங்கிலத்தில் இருக்ககூடிய சொற்களை எடுத்துக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கும்பொழுது வெகு காலமாக பல நூற்றாண்டுகளாக வட மொழிச்சொற்கள் தமிழில் கலந்து தமிழ் மயமான பிற்பாடு அதை எடுத்துக்கொள்ளுவதில் ஒன்றும் ஆட்சேபணை இருக்க முடியாது. இந்தப் பிரிவினை மனப்பான்மையை மொழி விஷயத்திலும் காட்டவேண்டாம் என்று கனம் அங்கத்தினர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறென்.

9-10 a.m. **Sri V. K. KOTHANDARAMAN** : இங்கே கேட்கக்கூடிய கேள்விகளுக்குப்பதில் ஆங்கிலத்தில் கொடுக்கப்படுகிறது. இப்போதுதான் கேள்விகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் கொடுக்கிறார்கள். அதுபோல இனி கேள்விகளுக்குத் தமிழிலேயே பதில் கொடுப்பார்களா என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கொஞ்சம் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லாவற்றையும் தமிழிலேயே கொடுப்பதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. திடீரென்று செய்து " இது என்ன தமிழா " என மற்றவர்கள் ஆச்சரியப்படக்கூடாது என்பதற்காகத்தான் கொஞ்சம் கொஞ்சமாக நல்ல முறையில் தமிழிலேயே நிர்வாகத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறோம். இதனால் தான் தாமதம் ஏற்படுகிறது. தமிழ் தமிழாகவே வரவேண்டும் என்பதற்காக கொஞ்சம் அங்கத்தினர்கள் காலதாமதத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

**Sri K. R. VISWANATHAN** : தலைவர் அவர்களே, அரசாங்க அலுவல்கள் விரைவில் தமிழிலேயே கொண்டுவருவதற்கு உபயோகமாக மாவட்ட அதிகாரிகளுக்கு உதவியாகக் குறைந்த பட்சக் கல்வியும், வித்துவான்வரை படித்த தமிழ் புலமை யுடைய நல்ல தமிழ் அறிஞர்களையும் நியமிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : தமிழிற்கு மாற்றம் செய்வதிலே என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதைப் பற்றி ஆராய்ந்து நமக்கு சிபார்சு செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு என்ன என்ன யோசனைகளைத் தெரிவிக்கிறதோ அவைகளை எல்லாம் ஆராய்ந்து அவசியமான நடவடிக்கைளையும் சர்க்கார் எடுத்து வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனையை அவர்கள் கவனித்துப் பார்ப்பார்கள் என்று நம்புகிறேன்.



29th October 1957]

**Sri K. SATTANATHA KARAYALAR** : கன்னியாகுமாரி, செங்கோட்டை தாலூக்காகளில் முன்பு தமிழிலிருந்தவை, இப்போது ஆங்கிலத்தில் நடத்தப்படவேண்டுமென்று செய்திருக்கிறார்கள். இதர இடங்களில் தமிழில் ஆட்சியைக் கொண்டுவர சர்க்கார் முயற்சி செய்யும் நேரத்தில் அங்கும் தமிழிலேயே நிர்வாகம் நடக்கும்படி உத்திரவிடுவார்களா ?

**The Hon Sri C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் சொன்ன விஷயத்தைக் கவனிக்கிறேன். ஒரு பக்கத்தில் ஒரு காரியம் செய்து கொண்டிருக்கும்போது அதுவே பழைய விதிகளின்படி அமுலில் இருந்தால் அதை நீடிக்கச்செய்யவேண்டியதுதான் சரி. எல்லாப் பகுதிகளிலும் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கு ஏற்பாடு செய்யும்போது அந்தப் பகுதியில் ஆங்கிலத்தைப் புகுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

**Sri N. R. THIYAGARAJAN** : ஐயா, மாமதுரை மாவட்ட மாத் தமிழர் மாநாடு திருவள்ளுவர் காவணத்தில் நடைபெறும் என எங்கள் ஜில்லாவில் ஒரு போஸ்டர் ஒட்டப்பட்டது. சிறுவர்கள் காவணத்திற்கு முன்பு ஒரு கொம்பு போட்டு கோவணம் ஆக்கிவிட்டார்கள், காபியை கொட்டை நீர் என்று தமிழாக்க முடியாது. ஆதலின் இத்தகைய கடுமையான தமிழ் பதங்களின்றி எளிமையான முறையில் நிர்வாகத்திற்கு தமிழ்ச் சொற்கள் உபயோகப்படுத்துவார்களா !

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் சொன்னது என்ன எனத் தொழில் இலாகா மந்திரி அவர்கள் இப்போதுதான் கேட்டார்கள். ஸ்ரீ தியாகராஜன் பேசினது தமிழா அல்லது வேறு ஏதாவதா ? இவ்வாறு அர்த்தம் புரியாத தமிழாக இல்லாமல் எல்லாருக்கும் புரிகின்ற முறையில் தமிழில் நிர்வாகத் தமிழ் சொற்கள் இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR** : தமிழ் பக்தி நமது அரசாங்கத்திற்கு அதிகமாக இருக்க, மற்ற கட்சிகள் எதிர்பார்ப்பதைவிட தீவிரமாக அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வரும் நேரத்தில் இந்தக் கேள்விக்கு இவ்வளவு நேரமா செலவிட வேண்டும்.

**Mr. SPEAKER** : இந்தக் கேள்விக்கு மந்திரி அவர்கள் பதில் சொல்ல வேண்டியது இல்லை. அடுத்த கேள்வி 22-க்கும், 30-Aக்கும் சேர்ந்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

*Arrest of Socialist Party members*

* 22 *Q.*—**Sri S. PAKKIRISWAMI PILLAI** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of members of the Socialist Party arrested in the month of August 1957 in the whole State for offering satyagraha before Government offices and for defying section 41 of the Madras City Police Act;

(*b*) whether it is a fact that certain members of the Socialist Party were arrested under section 151 of the Criminal Procedure Code in certain districts of the State;

(*c*) if so, the number of such persons;

[29th October 1957

(*d*) whether it is a fact that the Police authorities were asked to collect the fine levied from such of the Socialist Party members also who preferred imprisonment to payment of fine; and

(*e*) if so, the number of such cases and the amount so collected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 917.

(*b*) Yes.

(*c*) 35.

(*d*) Yes.

(*e*) 129 cases, but the collection of fine has been made only in three cases, the amount collected being Rs. 60. One hundred and twenty-six cases are pending realization of fines.

* 30-A. *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Socialist satyagrahis arrested so far in the State; and

(*b*) the number convicted and the number let off?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The following is the number of volunteers arrested in connexion with the agitation launched by the Socialist Party in this State :—

| | |
|---|---|
| August 1957 ... ... ... ... ... ... | 917 |
| September 1957 ... ... ... ... ... ... | 362 |
| October 1957 (up to 11th October 1957) ... ... | 14 |
| Total ... | 1,293 |

(*b*) All the 1,293 volunteers who were arrested were convicted.

SRI S. PAKKIRISWAMI PILLAI : சாத்வீக தோரணையில் சத்தியாக்கிரஹம் செய்யும் சோஷலிஸ்டுத் தொண்டர்களை செக்ஷன் 151-ஆவதின் கீழ் அரஸ்டு பண்ணுவதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாத்வீக முறையில் இயக்கத்தை நடத்துவது என்றாலும் எந்த எந்த சட்டத்திற்கு விரோதமாக நடந்து கொள்கிறார்களோ அந்த அந்த சட்டத்தை மீறிய குற்றத்திற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளத்தான்படும். இவ்வாறு சத்தியாக்கிரகம் செய்ய முன் வரும் கட்சித் தொண்டர்கள் சிறைக்குச் செல்ல வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே அதில் வந்து கலந்து கொள்ளுகிறார்கள். அதில் சிறைக்குச் செல்ல முடியாதவர்கள் கட்சித் தலைமையைக் கூட இழக்க நேர்ந்திருக்கிறது என்பது அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும்.

SRI M. KALYANASUNDARAM : அவர்கள் கட்சி எதை எதிர்க்கிறது ? இவர்கள் என்ன சட்டத்தை மீறினார்கள் ? எதற்காக இப்படி ஆயிரக்கணக்கானவர்களை கைது செய்யப்பட நேர்ந்திருக்கிறது ?



29th October 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நூற்றுக்கணக்காக இருந்தாலும், ஆயிரக்கணக்காக இருந்தாலும் எத்தனை பேர் சட்டத்தை மீறுகிறார்களோ அவர்கள் பேரிலெல்லாம் நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டி இருக்கிறது. எந்த எந்த குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்கிற விவரம் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

SRI K. R. NALLASIVAM : சோஷலிஸ்டுக் கட்சி நடத்துகின்ற இந்த இயக்கத்தின் கீழ் சென்னைச் சிறையிலிருந்து 14-ந் தேதி விடுதலை செய்யப்பட்ட தொண்டர்கள் பலருக்கு வாரண்டு கொடுக்கப்படவில்லை என்று சர்க்காருக்கு ரிப்போர்ட் வந்ததா ? அதன்மேல் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தகவல் ஒன்றும் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் நான் பதில் அளிக்கிறேன்.

SRI S. LAZAR : சோஷலிஸ்டுக் கட்சி நடத்தும் இந்தப் போராட்டத்தை மக்களுக்குப் பயன் தரக்கூடிய ஒரு ஆக்க வேலையாக அரசாங்கம் கருதுகிறதா ? அல்லது ஒரு அழிப்பு வேலையாகக் கருதுகிறதா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த எந்தக் கட்சிகள் எந்த எந்த நோக்கத்திற்காக, லட்சியத்திற்காக சில முறைகளைக் கையாளுகின்றார்களோ அந்த அந்த முறைகளைப் பற்றி சர்க்கார் எந்த விதமான அபிப்பிராயமும் தெரிவிக்கத் தயாராய் இல்லை.

SRI K. ANBAZHAGAN : தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க ஆர்வம் கொண்டுள்ள இந்த சர்க்கார் இந்த மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க மறுப்பதால் தான் இம்மாதிரி போராட்டங்கள் ஏற்படுகின்றன என்று அரசாங்கம் உணருமா ?

MR. SPEAKER : சபை முன்னிருக்கும் கேள்விக்கும் அங்கத்தினர் கேட்பதற்கும் சம்பந்தம் இல்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போராட்டம் நடத்துகின்ற மற்ற அரசியல் கட்சிக்காரர்களுக்கு இருக்கும் தமிழ் ஆர்வத்தைவிட காங்கிரஸ் கட்சிக்கு அதிக ஆர்வம் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : அஹிம்சாவாதியாக இருந்தாலும் இம்சாவாதியாக இருந்தாலும் கோர்ட்டில் மாஜிஸ்ட்ரேட் தீர்ப்பு அளிக்கும்போது, குற்றவாளிகளுக்கு சிறை தண்டனை அளிக்கும்போது சிலருக்கு முதல் வகுப்பும், சிலருக்கு இரண்டாம் வகுப்பும் கொடுக்கிறார்கள். இம்மாதிரி உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இருப்பதை அகற்றுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வெகுகாலமாக சிற்சில பாகுபாடுகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன.

MR. SPEAKER : அடுத்த கேள்வி.

SRI K. R. NALLASIVAM : பாயிண்ட் ஆப் ஆர்டர். தமிழ் நாடு என்று சென்னை மாநிலத்திற்கு பெயர் வைக்கவேண்டும் என்று சோஷலிஸ்ட் கட்சி தான் அதிக சிரத்தை உள்ளதாக இருக்கிறது. என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

MR. SPEAKER : அந்தக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. உப கேள்வியைக் கேட்க சந்தர்ப்பம் ஏற்படுத்துவதற்கு பாய்ண்ட் ஆப் ஆர்டர் கேட்பது அவ்வளவு நியாயமாக இல்லை.

[29th October 1957

*Engineering College for Salem*

* 23 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to start an Engineering College at Salem; and

(*b*) if so, the cost thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

*Wages of hospital workers*

* 24 *Q.*—SRI N. K. PALANISAMI AND * 229 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Dean of the Government General Hospital, Madras, has recommended to the Government during 1956 to increase the wages of hospital workers; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) The Government decided that the question of revision of scales of pay of hospital workers might be considered on merits.

SRI N. K. PALANISAMI: 1956-ம் வருஷத்திலிருந்து இம் மாதிரி தொழிலாளர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அது விஷயமாக சர்க்காரும் சிபார்சு செய்திருக்கிறார்கள். ஒரு வருஷம் ஆகியும் ஏன் இன்னும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை?

THE HON. SRI M. A. MANICKAVELU: இது விஷயமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு நான்கு விஷயங்கள் பரிசீலனை செய்யப்பட்டது:

**(1) Payment of washing allowance.**

**(2) Disparity in the rates of monthly rents collected.**

**(3) Payment of risk allowance to workers.**

**(4) Revision of scales of pay.**

முதலாவது விஷயத்திற்கு பரிகாரம் அளிக்கப்பட்டது. இரண்டாவது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மூன்றாவது ஒத்தி வைக்கப்பட்டது. நான்காவது நர்சிங்க ஆர்டர்லிகளுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டது.

SRI S. B. ADITYAN: வைத்திய இலாகாவில் வேலை செய்யும் கடை நிலை ஊழியர்களுக்கு வாரத்திற்கு ஒரு நாள் விடு முறை கொடுக்க வேண்டுமென்று 1950-ம் வருஷத்திலேயே அரசாங்கம் உத்தரவு போட்டது. அப்படி இருந்தும்கூட ஜெனரல் ஆஸ்பத்திரியிலே வார விடுமுறை கொடுக்காமல் வேலை வாங்கப்பட்டு வருகிறது. அந்த வேலைக்கு ஒரு நயா பைசா கூட அதிகமாக சம்பளம் கொடுப்பது கிடையாது. இது மந்திரி அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த மந்திரியின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.



29th October 1957]

SRI M. KALYANASUNDARAM: இந்த விஷயம் அப்பொழுது இருந்த சுகாதார மந்திரியின் கவனத்திற்கு வந்திருந்தும், இதை சர்க்கார் அவருக்குப்பின் வந்திருந்த மந்திரியின் கவனத்திற்கு கொண்டு வரவில்லையா? அதோடு நர்சிங் ஆர்டர்லி சம்பள விகிதத்தை உயர்த்தப்பட்டது என்று சொன்னார்கள். எவ்வளவு அதிகமாக உயர்த்தி இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: முதலில் அங்கத்தினர் கேள்வி கேட்டபோது "மந்திரி அவர்களுக்குத் தெரியுமா" என்று தான் கேட்டார்கள். அப்போது நான் இல்லை. எனக்குத் தெரியாது என்று சொன்னேன். அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா என்று கேட்கவில்லை. நர்சிங் ஆர்டர்லிகளின் சம்பளம் 24—½—30 லிருந்தது 24—1—30 ஆக மாற்றம் செய்யப்பட்டது. 19—½—25 ஆக இருந்தது இப்பொழுது 19—1—25 ஆக மாற்றப்பட்டது.

SRI P. G. MANICKAM: கடை நிலை ஊழியர்கள் மிக மிக பிற்போக்கான நிலைமையில் இருப்பதால் அவர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

SRI K. ANBAZHAGAN: கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து கடைநிலை ஊழியர்கள் எந்த அளவுக்கு பண்பிலும் தொழிலிலும் தாழ்ந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பது விளங்குகிறது. அவர்கள் நல்ல முறையில் கடமையைச் செய்து வாழ்வதற்கு அவர்களின் நிலைமை உயர வேண்டுமாதலின் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் ஏதாவது திட்டம் தயாரித்திருக்கிறார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: புதிதாக அவர்கள் கோரிக்கை வந்ததாகத் தெரியவில்லை. கோரிக்கைகள் வந்தால் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

SRI S. PAKKIRISWAMI PILLAI: ஜெனரல் ஆஸ்பத்திரியில் லாண்டிரி செக்ஷனில் வேலை செய்யும் தொழிலாளர்களை பாக்டரி ஆக்டின் கீழ் கொண்டு வந்து அவர்களுக்கு வேண்டிய சில சலுகைகள் கொடுக்கப்பட்டன. அவர்கள் ஒரு வாரத்தில் 48 மணி நேரம் தான் வேலை செய்ய வேண்டும் என்று இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்தக் கேள்விக்கு பதில் கொடுக்க முன் எச்சரிக்கை வேண்டுகிறேன்.

SRI A. GOVINDASAMY: ஆஸ்பத்திரிகளில் நர்சிங் ஆர்டர்லிகளாக வேலை செய்பவர்களுக்கு சிகப்புத் தொப்பி கொடுத்திருக்கிறார்களா?

MR. SPEAKER: இந்த கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

SRI N. K. PALANISAMI: கடைநிலை ஊழியர்கள் வீட்டு வாடகை சம்பளம் முதலியவை ரூபாய் 24 ஆக இருப்பதால் அவர்கள் பேஷண்டுகளிடம் இருந்து பணம் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இது எல்லா ஆஸ்பத்திரிகளிலும் நடக்கக்கூடிய விஷயம். ஆகவே அவர்களின் சம்பளத்தை உயர்த்தினால் அவர்கள் இம்மாதிரி பேஷண்டுகளிடமிருந்து பணம் வாங்க மாட்டார்கள். ஆதலால் அரசாங்கம் அவர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கு முயற்சி எடுப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அப்படி ஒன்றும் சொல்லிவிட முடியாது. அதிகமாக சம்பளம் வாங்குகிறவர்கள் கூட இது மாதிரியாக வாங்குகிறார்கள்.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : ஆஸ்பத்திரிகளில் உள்ள தொழிலாளர்களின் சம்பளம் உயர்ந்த இந்த நேரத்திலே ஏழை நோயாளிகளிடம் இருந்து லஞ்சம் வாங்குவது நியாயமா ? அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் லஞ்ச ஊழல்களைப்பற்றி தகவல் கொடுத்தால் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

SRI A. V. P. ASAITHAMBI : ஜெனரல் ஆஸ்பத்திரியில் கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன், கவர்னர் பெருமான் திரு. ஏ. ஜெ. ஜான் அவர்களின் மறைவுக்குப் பிறகு ஆஸ்பத்திரியின் மதிப்பு குறைந்து விட்டதாக திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் பேசியிருக்கிறார் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவாரா ?

MR. SPEAKER : அதற்கும் சபை முன்னிருக்கும் கேள்விக்கும் என்ன சம்பந்தம் ? **I rule the question out of order.**

SRI A. A. RASHEED : Is there any proposal to increase the salaries of the nurses?

MR. SPEAKER : How does this question arise out of the main question?

*Minimum wages for handloom weavers*

* 25 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute a committee to fix minimum wages for handloom weavers?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir. But there are other schemes to improve the lot of handloom weavers.

SRI N. K. PALANISAMI : இப்பொழுது இரண்டு கோடி ரூபாய் கிட்டத்தட்ட நமக்கு ரிபேட்டாக கிடைக்கிறது. இந்த ரிபேட் சொஸைட்டிகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது அதை அப்படிச் செலவு செய்யக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நமக்குக் கிடைக்கும் அந்த இரண்டு லட்சம் ரூபாயை குறைந்த பட்ச ஊதியமாக ஏன் நெசவாளர்களுக்குக் கொடுக்கக் கூடாது ? அதற்கு ஒரு திட்டம் சர்க்கார் வகுக்கக் கூடாதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்காருக்குக் கிடைக்கிற ரிபேட் தொகையை வைத்து பல்வேறு திட்டங்கள் கைத்தறி நெசவாளர்களுக்காக செய்யப்பட்டிருக்கிறது. அதை ஊதியமாக கொடுத்துவிட்டால் இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற முடியாது. முக்கியமாக, கூட்டுறவு சங்கங்கள் அமைப்பது, அவர்களுக்காக தனி மில் வைத்து நூலை தயாரித்து குறைந்த விலைக்குக் கொடுப்பதற்கான திட்டங்கள், கைத்தறியை உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் நல்ல முறையில் விற்க வேண்டும் என்றெல்லாம் இருக்கும்போது செஸ் தொகையை அப்படிச் செலவழிப்பது சரியே தவிர ஊதியம் கூடுதலாய் கொடுப்பது அவ்வளவு சரியல்ல.

SRI M. KALYANASUNDARAM : மந்திரியவர்கள் சொல்லும்போது கைத்தறிக்காக மலிவான விலைக்கு நூல் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஏற்பாடும் செய்யப்பட்டு விட்டது. அப்படி என்னென்ன திட்டங்களின் அடிப்படையில் அது நடைபெற்று வருகிறது. அப்படி நூல் கொடுப்பது கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு மட்டுமா ? அல்லது அதில் வராத மற்ற தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படுமா ?





THE HON. SRI R. VENKATARAMAN : நீண்ட காலம் மத்திய அரசாங்கத்தினிடம் பேச்சு வார்த்தை நடத்தி இரண்டு கோவாப்பரேட்டிவ் மில்கள் சென்னை ராஜ்யத்தில் அமைக்க ஏற்பாடுகளாகி விட்டன. ஒன்றை, திருநெல்வேலியில் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாவதை ஸ்ரீவில்லிப்புத்தூரில் அமைக்க ஏற்பாடாகி இருக்கிறது. இந்த நூல் மலிவாகக் கிடைப்பதற்கு கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் மூலம் கொடுக்க ஏற்பாடு நடந்து வருகிறது. பாக்கியுள்ளவர்களுக்கு இல்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIAR : இந்த ரிபேட் தொகையிலிருந்து தனிப்பட்ட நெசவாளர்களுக்கு இது வரையிலும் எந்த விதமான உதவியும் கிடைக்காததால் இந்த தொகையிலிருந்து, ஹரிஜனங்களுக்குக் காலனிகள் அமைத்துக் கொடுப்பது போல், அவர்களுக்கு காலனிகள் அமைத்துக் கொடுக்க, வீட்டு வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது கைத்தறி நெசவாளர்களுக்காக, கோவாப்பரேட்டிவ் முறையில் வருபவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. கூட்டுறவு முறையில் வராத கைத்தறி நெசவாளர்களுக்கு சலுகை கொடுப்பதில்லை என்று அகில இந்திய போர்ட் தீர்மானித்து விட்டது. சென்னை ராஜ்யம் இதைப் பற்றி வற்புறுத்தியிருந்தும் அகில இந்திய போர்ட் இதற்கு மாறான அபிப்பிராயத்திற்கு வந்து விட்டது.

**SRI T. T. DANIEL : May I know from the Hon. Mininter the average wage which a handloom weaver will be getting if he works for 8 hours a day and if he is a member of the Co-operative Society ?**

**THE HON. SRI R. VENKATARAMAN : Sir, that would be difficult to say. It will depend on the quality of the cloth that he produces.**

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, கைத்தறிக்காகச் செய்யப்படுகிற உதவிகள் பலவும் இறுதியாக அதிலே மிகுதியாக பாடுபடுகிற கைத்தறி நெசவாளர்கள் நேரிடையாக அடைவதற்கு மாறாக இடையிலுள்ள பலருக்கே அது பயன்படுகிறது என்ற காரணத்தினால் கைத்தறி நெசவாளர்களுக்கே நன்மை விளைவிக்கக்கூடிய விதத்தில் இந்த குறைந்த பட்ச கூலித்திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த செஸ் நிதியிலிருந்து வழங்கப்படுகிற திட்டங்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவியாய் இல்லாமல் நடுவில் இருக்கிறவர்களுக்கு உதவியாயிருக்கிறது என்பதை சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, அடுத்த கேள்வி எழவில்லை.

SRI N. K. PALANISAMI : ஏற்கனவே கோவாப்பரேட்டிவ் டிப்பார்ட்மெண்ட் எங்கே நூல் வாங்கச் சொல்கிறார்களோ அங்கேதான் இந்த **weavers** கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மார்க்கெட்டில் விலை குறைந்திருந்த போதிலும் அவர்கள் சொல்லுகிற இடத்தில்தான் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே முக்கியமாக சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்து **weavers** கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் எங்கே வேண்டுமானாலும் நூல் வாங்கி விநியோகிக்கலாம் என்று உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குறைந்த விலைக்கு நூல் கிடைக்கும்போது அதிக விலை கொடுத்து வாங்கச் சொல்லுகிற சொஸைட்டிகள் இருந்தால் அதைப்பற்றி புகார் எழுதும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

[29th October 1957

SRI M. KALYANASUNDARAM : செஸ் நிதியிலிருந்து நம் ராஜ்யத்திற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டு வருகிறது ? ஒவ்வொரு வருஷமும் அந்தத் தொகை பூராவும் செலவழிக்கப்பட்டதா ? இப்பொழுது எவ்வளவு பாக்கியிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : தனி கேள்வி வேண்டும்.

*Repair of the anicut across the Kakanathi river*

* 26 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to repair the tanks, supply channel and the anicut across the Kakanathi river in Vayalimalayadipatty village in Sankarankoil taluk; and

(*b*) if so, when the work will be taken up?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No.

(*b*) Does not arise.

SRI A. R. SUBBIAH MUDALIAR : சென்னை அரசாங்க செய்தி விளம்பரத்துறை வெளியீட்டில் முதல் ஐந்தாண்டு சாதனைகளில் ஆறு லட்சம் ரூபாய் செலவில் மேற்படி திட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் காண்கிறோம். அதை வாசிக்கிறேன்.

MR. SPEAKER : வாசிக்க முடியாது. கேள்வித்தான் கேட்கலாம்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : சர்க்காரின் செய்தி இலாகா வெளியீட்டில் நெல்லை மாவட்டம் என்ற புஸ்தகத்தில் 25-வது பக்கத்தில் ஆறு லட்சம் ரூபாயும் செலவு செய்யப்பட்டு இருப்பதாகக் கண்டிருக்கிறது. அதன் உண்மை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர் அவர்கள் சரியாக ஒரு கேள்வி போட்டால் இதைப்பற்றிச் சொல்கிறேன்.

SRI D. S. AUTHIMOOLAM : நெல்லை ஜில்லாவில் முதல் ஐந்தாண்டு சாதனை என்ற புத்தகத்தில் எனக்கு முன் சொன்ன கனம் சுப்பையா முதலியார் அவர்கள் சொன்னபடி, 6 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருப்பதாக காணப்படுகிறது. 600 ஏக்கர் புஞ்சை நஞ்சையாக மாறி இருக்கிறது என்று ஒரு வாசகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மந்திரியவர்களின் பதிலில் அப்படி ஒன்றும் இல்லை என்றிருக்கிறது. அவர்கள், மராமத்து செய்யப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் அந்தப் பணம் எந்த விதமாகவாவது மோசடி செய்யப்பட்டிருக்கிறதா அல்லது ஏதாவது தவறுதலாக அது வெளியிடப்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றி விளக்கமாக ஒரு ஸ்டேட்மெண்ட் அஸெம்பிளியில் மந்திரியவர்கள் விடுவார்களா ?

MR. SPEAKER : தனி கேள்வி போடவேண்டுமென்று மந்திரியவர்கள் சொன்னார்கள். அவர் நோட்டீஸ் வேண்டுமென்று சொல்லுகிறார்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : மந்திரி பக்தவத்ஸலம் அவர்கள் மேற்படி இடத்தைச் சுற்றிப் பார்த்து மராமத்து வேண்டுமென்று அங்கீகாரம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. சர்க்காரினால் அங்கீகாரம் செய்யப்பட்டு 6 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டதாகக் கண்டிருக்கிறது. ஆனால் அப்படி நிறைவேற்றப்படவில்லை. நிறைவேற்றுவதற்காகவாவது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா ?



29th October 1957]

THE HON. SRI P. KAKKAN : சென்னை சர்க்கார், 6 லட்சம் ரூபாய் இத்திட்டத்திற்கு செலவு செய்தால் அது பயன்படுமா என்று பரிசீலனை செய்திருக்கிறது. பரிசீலனை செய்த பிற்பாடு ஜில்லா கலெக்டருடையவும், எக்ஸிக்யூடிவ் என்ஜினீயரின் அபிப்பிராயத்தையும் அனுசரித்து அதற்காக ஒரு ஸ்பெஷல் என்ஜினியரையும் போட்டிருக்கிறார்கள். இதில் ஏக்கருக்கு 300 ரூபாய் செலவு செய்தால் 0·07 தான் நமக்கு அதில் வருமானம் வரக் கூடியதாய் இருப்பதால் இது பயன் படாது என்று அது கைவிடப் பட்டிருக்கிறது.

SRI V. K. RAMASWAMI MUDALIAR : இதே கேள்வியை முன் ஒரு தடவை கேட்டபோது மந்திரியவர்கள் சொன்னார்கள், அது அச்சுப் பிழையாய் போய்விட்டது என்று. அதைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்றும் பதில் சொன்னார்கள். மறுபடியும் அதையும் மாற்றி இவ்விதம் சொல்கிறார்கள். இந்த ஆறு லட்சம் ரூபாயும் செலவிடாதிருக்கும்போது அதைச் செலவிட்டதாக எழுதியிருப்பதற்கு, எந்தக் காரணத்தினால் அப்படி எழுதினார்கள், அது யாருடைய பொறுப்பு ? அப்பணம் உண்மையில் செலவு செய்யப் பட்டதா ? அல்லது அது கையாடல்செய்யப் பட்டதா என்பதைப் பற்றி சொல்லவேண்டும்.

THE HON. SRI P. KAKKAN : சுப்பையா முதலியார் அவர்கள் கேட்டதற்குப் பதில் சொன்னேன். முதல் ஐந்தாண்டு சாதனையில் 6 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருப்பதாகக் காண்பது உண்மையா என்று கேட்டதற்கு, முழு விவரம் தெரிந்து கொள்ள சரியாக ஒரு கேள்வி போட வேண்டுமென்று சொன்னேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : I think that question should be put to me because "publication" comes under the Information and Publicity Department. I take the entire responsibility for the mistake. If the hon. Member wants to put a separate question with regard to that, he may kindly put it to me and it will be answered at the appropriate time.

*Foot-bridge across Vadavar*

* 27 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any mahazar, dated 27th February 1957, from the public of Kanjankollai village, Chidambaram taluk, for the construction of a foot-bridge across the Vadavar river near their village; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir.

(*b*) The matter is engaging the attention of the Government.

*Madras-Andhra Border Dispute*

* 28 *Q.*—SRI N. K. PALANISAMI AND SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the contents of the Report submitted recently by Sri H. V. Pataskar regarding Madras-Andhra border dispute; and

(*b*) the stand taken by the Government in regard to the recommendations made therein?

[29th October 1957

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Copies of the reports of Sri H. V. Pataskar on the Andhra-Madras border dispute are placed on the table of the House.

(b) No answer.

SRI A. GOVINDASAMY : The reports have not been placed on the table of the House.

MR. SPEAKER : We shall take up the question tomorrow.

THE HON. SRI C. SUBRAMANIAM : The reports have been published in the newspapers.

MR. SPEAKER : But they have not been placed on the table of the House. So we shall take up the entire question tomorrow if the Hon. the Leader of the House has no objection to it. Meanwhile the reports will be placed on the table of the House.

9-40 a.m. THE HON. SRI C. SUBRAMANIAM : I think all hon. Members would have read the report which has been published in the papers. But I have no objection to the question being postponed.

MR. SPEAKER : In view of the hon. Members' desire that it should be thoroughly discussed, the question may be taken up tomorrow.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware that the report of Sri Pataskar is not in consonance with what has been published in papers?

MR. SPEAKER : We have not seen the report; it is not before the House. How can we say it is not in consonance with published reports?

*Sri Ranganathaswamy Temple at Kanjankollai*

* 29 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the extent of inam lands standing in the name of Sri Ranganathaswamy temple at Kanjankollai, Chidambaram taluk;

(b) whether the Hindu Religious and Charitable Endowments Department has got jurisdiction over this temple; and

(c) if not, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A report has been called for from the Commissioner, Hindu Religious and Charitable Endowments and it is awaited.

*Remission of land revenue in Merkanam village*

** 30 Q.—SRI V. K. RAMASWAMI MUDALIYAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any land revenue remission was given to the ryots of Merkanam village, Tindivanam taluk, in faslis 1361 and 1362?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes. The remission granted for adverse seasonal conditions was as follows :—

Fasli 1361—Rs. 3,178-7-0.
Fasli 1362—Rs. 2,232-1-0

* Starred Question 30-A taken with Starred Question 22.



29th October 1957]

SRI N. K. PALANISAMI : அந்த பகுதியில் இப்பொழுதும் சரியான படி மழையில்லாத காரணத்திஞல் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படு கிருர்கள். அவர்களுக்கு இப்பொழுது இதற்காக ரெமிஷன் கொடுப்பது மட்டுமல்ல, குடிதண்ணீர் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது 1361-ம் பசலி விஷயம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Are the Government aware that the entire money that was collected has been misappropriated by the village officers concerned and not remitted into the Treasury? If so, have they received any petition and if they have, what is the action taken on it?

THE HON. SRI M. A. MANICKAVELU : I cannot answer the question straightway. I shall enquire into the matter, if a separate question is put.

MR. SPEAKER : About question No. 28, which has been postponed to tomorrow, the Legislature Department received the answer only this morning. We did not know until then what answer would be given.

THE HON. SRI C. SUBRAMANIAM : Have copies of the report been received?

MR. SPEAKER : I think they have been received. But we did not know the exact answer to be given to the question. I put the question down for answer today because I have already given an assurance to the House that all questions of which notice has been pending for one month and more will be included in the list of questions. We will take up this question tomorrow and meanwhile the report will be placed on the table of the House.

Questions are over.

## II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* MESSAGES FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House the following messages, dated 18th and 25th October 1957 received from the Governor of Madras :—

(i) " In pursuance of Article 207, clause (3) of the Constitution of India, I, P. V. Rajamannar, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Assembly, the consideration of the Madras Catering Establishments Bill, 1957."

(ii) " In pursuance of Article 207, clause (1) read with Article 199, clause (1) of the Constitution of India, I, P. V. Rajamannar, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly the Madras Bhoodan Yagna Bill, 1957."

III.—CALLING ATTENTION TO MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 *RE* DELAY IN SANCTIONING A SPECIAL SCHEME OF PROTECTED WATER-SUPPLY TO KODUKKUR AND OTHER VILLAGES IN TIRUCHIRAPPALLI DISTRICT.

MR. SPEAKER : The hon. Member, Sri K. R. Viswanathan will now call attention of the Hon. the Minister for Revenue to a matter of urgent public importance, viz., the delay in sanctioning a special scheme of protected water-supply to Kodukkur and other villages in Tiruchirappalli district and consequent loss due to the silting of the bore wells.

9-44 a.m. SRI K. R. VISWANATHAN : கனம் தலைவர் அவர்களே, சட்டசபை விதிகளில் 40-வது விதியின் படி இந்த சட்டசபைக்கு முன் ஒரு முக்கியமான அவசர சமாசாரத்தை கொண்டுவர விரும்புகிறேன். அதாவது உடையார்பாளையம் தாலூகா ஆண்டிமடம் பிர்க்கா மிகவும் வரண்ட பிரதேசமாக இருக்கிறது. அங்கு குடி தண்ணீருக்கு மிகவும் கஷ்டம். பூமியிலே எவ்வளவு தூரம் தோண்டிப்பார்த்தாலும் தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அங்குள்ள குளத்திலுள்ள தண்ணீரை பார்த்தால் அதுவும் மிக மோசமாக இருக்கிறது. நிலத்தின் தன்மை எதோ அதுபோல்தான் நீரின் தன்மையும் இருக்கும். நீரின் கனம் (டென்ஸிட்டி) 1·5 அல்லது 2·0 இருக்கும். ஒரே செம்மண் நிறத்தில் அங்குள்ள தண்ணீர் இருக்கும். இதனால் அங்குள்ள மக்கள் நரம்புச் சிலந்தி நோயினால் பீடிக்கப்பட்டு அவதியுறுகிறார்கள். இதைப் பற்றி ஜில்லா கலெக்டர் அவர்களிடமும் திட்டகுழுவினிடமும் எடுத்துச் சொல்லப்பட்டது. அதன்பின் எவ்வளவு ஆழமானாலும் குழாய் கிணறுவது வைக்கவேண்டுமென்று தீர்மானித்து இரண்டு மூன்று இடங்களில், கொடுக்கூர், குடிக்காடு, இடையக்குறிச்சி என்ற இடங்களில் "பவர் ட்ரில்" வைத்து 700 அடி, 750 அடி ஆழத்திற்கு கீழ் தோண்டி குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டது. 1955-ம் வருடம் செப்டம்பர் 20உ ஆரம்பிக்கப்பட்ட கிணறுகள் வெட்டும் வேலை 1956-ம் வருடம் ஜனவரி மாதத்தில் முடிக்கப்பட்டது. இந்த மூன்று கிராமங்களிலுள்ள கிணறுகளில் நீர் இறைக்க பம்புகள், ஆயில் என்ஜின்கள் ஓட்டுவதற்கு மெக்கானிக்குகள் நியமித்தல், தண்ணீர் டாங்கிகள் கட்டுதல் இவைகள் ஏற்பாடு செய்ய தீர்மானிக்கப்பட்டது. அதன்படி தண்ணீர் இறைக்க ஏற்படுகிற செலவை ஆங்காங்கு இருக்கின்ற பஞ்சாயத் போர்டுகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டது. ஆனால் அங்கு இருக்கின்ற பஞ்சாயத்துகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 500 ரூபாய் தான் வருமானம் வருகிறது. இதனால் இந்த செலவை ஏற்றுக் கொள்ள இயலாது என்று அவர்களிடமிருந்து விடை கிடைத்தது. அதற்கு பிறகு அங்குள்ள மாவட்ட கலெக்டர் அவர்கள் ஒரு தனிப்பட்ட குடி தண்ணீர் திட்டத்தை சர்க்காருக்கு அனுப்பினார்கள். அதில் சர்க்காரின் உதவியும் அங்கீகாரமும் கேட்டிருந்தார்கள். அதாவது இந்தப் பகுதியில் 11 ஊர்களில் குழாய் கிணறுகள் போட்டு அவைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு பராமரிப்பு செலவுக்காக 30 ஆயிரம் ரூபாய் ஆகும் என்றும் அதை அங்குள்ள பஞ்சாயத்து போர்டுகள் தாமாக ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் அரசாங்கத்தாரே இதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டு சிபாரிசு செய்து அனுப்பினார்கள். இதை அனுப்பி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகின்றபடியினால் தோண்டிய கிணறுகளில் மணல் தூர்ந்து இதுவரை சர்க்காரினால் செலவு செய்த பணம் எல்லாம் வீணாக போய்கொண்டிருக்கிறது என்பதை தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இவ்விதமாக கலெக்டர் அவர்கள் சிபார்சுசெய்து ஒரு ஆண்டுக்கு மேலாகியும் இந்த திட்டத்தின் மேல் ஒருவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. திட்டக்குழுவினிடம் கேட்டால் சர்க்காரிடமிருந்து பதில் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். சர்க்கார் அலுவலகங்களில் வந்து கேட்டால் பஞ்சாயத்து போர்டுகளுக்கு எழுதியிருக்கிறோம், பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.



MR. SPEAKER : ரூல் 40-ன் கீழ் தீர்மானம் கொண்டு வந்து பேசும் பொழுது மிகவும் சுருக்கமாக விஷயத்தைச் சொல்லவேண்டுமே தவிர பெரிய பிரசங்கம் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. R. VISWANATHAN : இவ்விதமாக இரண்டு ஆண்டுகளாக இந்த குழாய் கிணறுகள் போட்டுக்கொண்டு இருந்தால் அதில் மண் ஏறி அவை உபயோகத்திற்கில்லாமல் தூர்ந்து போய்விடும். ஆகவே இதில் உடனடியாக வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். இல்லையானால் இதுவரை செலவழித்த சர்க்கார் பணம் எல்லாம் வீணாகப்போய்விடும் என்று அஞ்சுகிறேன். அடுத்தபடியாக இந்த பகுதியில் உணவுக்கு அடுத்தபடியாக அவசியமாக உள்ள குடி தண்ணீருக்கு மிகவும் கஷ்டம் இருந்து கொண்டிருக்கிறது. வேறு எந்த முன்னேற்ற திட்டங்களுக்கும் அரசாங்கத்தார் கவனம் செலுத்தாவிட்டாலும் இக்குடி நீர்வசதிக்கு வேண்டிய ஏற்பாட்டை உடனடியாக செய்யவேண்டும், என்பதையும் வற்புறுத்திக்கூற ஆசைப்படுகிறேன். ஆகவே சர்க்கார் இந்த விஷயத்திலும் உடனடியாக வேண்டிய கவனம் செலுத்தவேண்டிய நடவடிக்கை எடுத்து இந்த திட்டங்களுக்கு வேண்டிய "ஸாங்ஷன்" கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு அமருகின்றேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, the three bore wells referred to in the notice are those specified below :—

(i) Deep bore well at Therkukudikadu, hamlet of Kodukkur;
(ii) Deep bore well at Kodukkur; and
(iii) Bore well at Edayakurichi.

*Deep bore wells at Therkukudikadu and Kodukkur.*—The original intention was to provide draw wells at these two places for which estimates amounting to Rs. 2,510 each were sanctioned by the Collector of Tiruchirappalli in March 1955. As water was not tapped in both cases, revised estimates amounting to Rs. 6,605 in each case were sanctioned in September 1955, for putting bore wells, to a depth of 400 feet. As even at this depth, sufficient water was not tapped, borings were taken down to a depth of 520 and 684 feet respectively. The depth of standing water was 90 feet below ground level, with a yield of 25 gallons per minute. Deepening was stopped at this stage. The estimates had to be revised and sent to the Executive Engineer (Public Health), Rural Water-Supply, Madras. After his technical scrutiny, the estimates were sanctioned in June 1957.

In both the cases, water had to be drained properly before sending samples to the King Institute, Guindy, for test. For effective draining, a compressor was necessary. As the compressor with the Industries Department was not readily available, arrangements were made with the Explorator Tube Wells Organization working in the Jayankondan area. For this, the Chief Engineer, Explorator Tube Wells Organization, New Delhi, had to be consulted. The works yet to be completed are construction of overhead tanks, fixing up to turbine pump and construction of platforms, taps, etc. The Collector has promised to push through these works after settling the agency for execution.

[Sri M. A. Manickavelu] [29th October 1957

*Borewell at Idayakurichi.*—An estimate for Rs. 2,500 was sanctioned by the Collector of Tiruchirappalli in October 1955. The Harijans for whose benefit the bore well was sanctioned made representations for changing the site of the bore well. A revised site was approved by the Collector in August 1956. The bore-hole was taken to a depth of 320 feet. The water in the bore-hole head to be cleaned by a compressor. The Explorator Tube Wells Organization reported that there was not sufficient water in the bore-hole to bale out by means of air compressor. The sample of water sent without cleaning the bore well has not been approved by the King Institute. After cleaning the well with the compressor available with the Industries Department, further action will be taken in the matter by the Collector.

The delay in the execution of the schemes has been due to one or other of the following reasons :—

(i) Delay in securing the required compressors.

(ii) Delay in settlement of agency for maintenance.

(iii) The great depth to which bores had to be deepened.

Every effort will be made by the Collector to complete the works as quickly as possible.

## IV.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY—*cont.*

MR. SPEAKER: Yesterday there was discussion on the no-confidence motion for three hours. The hon. Member Mr. Kalyanasundaram in moving the motion took two hours. Mr. Sasivarna Thevar, in seconding the motion, took an hour and a half and he has not yet finished his speech. I do not want to put any restriction on the time that each Member should take. If the present trend were to continue, the whole of this day will be taken up. I am calling for a meeting of the Business Advisory Committee at 10-30 a.m. to-day to decide how many days should be allotted, how much time should be allowed to each speaker and how many speakers should be allowed from each side. Till the decision of the Business Advisory Committee is known, I request the seconder of the motion not to exceed the time taken by the mover of the motion. It will land us in a delicate situation if the seconder takes a longer time than the mover; it will be embarrassing to the mover himself. I would like Mr. Sasivarna Thevar to finish his speech by 10·25.

SRI T. L. SASIVARNA THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே ? அடியேனுக்கு தாங்கள் கொடுத்திருக்கும் இந்தக் கால வரம்பு போதுமானதாக இருக்கமுடியாது என்பதைக் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனக்கு இன்றைய தினம் குறைந்த பட்சம் ஒரு மணி நேர சாவகாசம் கொடுத்தீர்களானல் . . . . . .

*MR. SPEAKER : ஸ்ரீ சசிவர்னத் தேவர் அவர்களுக்கும் தெரியும். ஒரு அங்கத்தினர் எல்லா சமாசாரத்தையும் அரை மணி நேரத்திற்குள் பேசமுடியாவிட்டால், அது அழகாக இருக்காது என்பதுதான் என்னுடைய



29th October 1957] [Mr. Speaker]

அபிப்பிராயம். ஆகையால், கனம் அங்கத்தினர் அரை மணி நேரத்திற்குள் தாம் சொல்ல வேண்டியதை யெல்லாம் சுருக்கமாகச் சொல்லிவிட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

SRI T. L. SASIVARNA THEVAR : சொல்லுகின்ற சமாசாரத்தைப் பற்றி அழகாகப் பேசுவதற்கு எனக்குத் தெரியாவிட்டாலும், சொல்ல வேண்டிய விஷயத்தைப் பூராவும் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாக இருப்பதால் கொஞ்சம் அதிக அவகாசம் தர வேண்டும் என்றுதான் நான் கேட்டேன். நான் நேற்றைய தினம் பேசியபோது இரண்டு படு கொலைகளைப் பற்றி சவிஸ்தாரமாகச் சொல்லவில்லை. அவைகளைப் பற்றி சவிஸ்தாரமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. மேலும், முதுகுளத்தூரில் நடந்த விஷயங்களைப் பற்றி விளக்கமாகக் கூறி இந்த மந்திரிசபை மீது நாங்கள் என் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தோம் என்பதற்கான காரணங்களைக் கூறவேண்டியிருப்பதால் எனக்கு இன்று ஒரு மணி நேர அவகாசம் கொடுக்கவேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். பேசும்போது எவ்வளவு சுருக்கமாக என்னால் பேச முடியுமோ அவ்வளவு சுருக்கமாகப் பேசி சபைக்கு உதவத் தயாராயிருக்கிறேன். நான் எல்லா விஷயங்களையும் பற்றிப் பேசுவதற்குப் போதிய அவகாசம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டால், என் தொகுதி மக்கள் அது பற்றி மிகவும் வருத்தப்படுவார்கள். முடிந்த அளவு நான் சுருக்கமாகப் பேசுகிறேன். கடைசியாக, எனக்கு ஒரு மணி நேர அவகாசம் இருந்தால் சொல்லவேண்டிய விஷயங்களை நான் பூரணமாகச் சொல்லமுடியும் என்று சொல்லிக் கொள்கிறேன். 9-55 a.m.

MR. SPEAKER : ஸ்ரீ சசிவர்னத் தேவர் அவர்கள் சொல்லுவதற்கு எவ்வளவோ சமாசாரங்கள் இருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் நான் பேரம் பண்ணுவதாக நினைக்கவேண்டாம். 10–25 வரை அவர் பேசலாம் என்று முன்பு அனுமதித்ததை மாற்றி 10–40 வரை பேசலாம் என்று அனுமதிக்கிறேன்.

SRI T. L. SASIVARNA THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, கீரந்தையில் நடந்த படுகொலையைப்பற்றிச் சொன்னேன். போலீஸ்காரர்கள் அந்த ஊருக்கு 17-ம் தேதி மாலை சென்றனர். அப்போது அங்கே எந்த விதமான கலவரமும் இல்லை. அந்த ஊரில் ஹரிஜனங்களே கிடையாது. அங்கேயுள்ள மறவர்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் சண்டை ஏற்படவில்லை. முதல் நாள் அங்கே வந்த காங்கிரஸ் ஹரிஜன கோஷ்டியார் தங்கள் சொந்தக்காரர்களுக்கு என்ன ஏற்பட்டிருக்கிறதோ என்று பார்க்க வந்திருந்தனர். அங்குள்ள மக்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். அப்போது அங்கே வந்த கடலாடி சப்-இன்ஸ்பெக்டர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டார். அப்படி அவர் சுட்டவுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்த மக்கள் தலைவிரிகோலமாக ஓடினார்கள். அப்படி மக்கள் ஓடியபோது அவர்களுள் 7 பேர்களை போலீஸார் சுட்டுக்கொன்று விட்டார்கள். இது சம்பந்தமாக, "அவர்கள் எங்களை நோக்கி அடிக்க வந்ததால் நாங்கள் சுட்டோம்" என்று போலீசார் சொல்லுகிறார்கள். போலீஸார் சொல்லுவது நிச்சயமாகத் தவறு—பொய்—என்பதற்கு ஒரு உதாரணம் கொடுக்கிறேன். ஒருவரை ஒரு சிறிய குடிசைக்குள் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள். குடிசையின் சுவறில் ரத்தம் இருந்தது ; குடிசையில் கீழே இரத்தம் படிந்திருந்தது. கனம் மந்திரிகள் திரு. கக்கனிடமும், திரு. தத்தாரிடமும் இதைக் காட்டியிருக்கிறோம் என்பதை சபைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே அங்கே கலகம் ஏற்பட்டதால் போலீசார் சுடவில்லை என்பதை நிச்சயமாகத் தெரிந்துகொள்ளலாம். அங்கே மூன்று பிரேதங்களை போலீஸார் வைக்கோற் போரில் வைத்து, மண்ணெண்ணெயை ஊற்றி, தீ வைத்திருக்கிறார்கள் என்று அந்த மக்கள் சொன்னார்கள். அங்கே இருந்த எலும்புகளை கனம் திரு. கக்கனுக்கும், திரு. தத்தாருக்கும் காண்பித்ததைத் தெரிவிக்கிறேன். அந்தப் பிராந்தியத்தில் 18, 19-ம் தேதி எந்த சம்பவமும் நடக்கவில்லை. 20-ம் தேதி அங்கே மீண்டும் ஒரு படுகொலை நடந்தது. அந்தப் படுகொலை உளுத்தமடை என்ற கிராமத்தில் நடந்தது. அது என் தொகுதியைச் சேர்ந்த அருப்புக்கோட்டை தாலுகாவிலுள்ள ஒரு கிராமம். அதற்குப் பக்கத்திலுள்ள கிராமத்தில் நடந்த

சம்பவத்தில் 4 பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அந்த சம்பவத்தைச் சுருக்கமாக சொல்லுகிறேன். 19-ம் தேதி 9 மணிக்கு சப்-இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஜான்சன், பனக்குடி என்ற ஊருக்கு போனார். அப்போது இரவு 8 மணி இருக்கும். அங்கே போலீஸ்காரர்களின் நின்றுவிட்ட காரைத் தள்ளுவதற்கு தூங்கிக்கொண்டிருந்த கிராமத்தாரைப் போலீஸார் கூப்பிட்டார்கள். உடனே, கிராம ஜனங்கள் பாட்டரி லைட்டையும் மண்ணெண்ணையையும் எடுத்துக்கொண்டு போலீஸ் லாரியைத் தள்ளுவதற்குச் சென்றார்கள். ஆனால் ஜனங்கள் அவ்வாறு உதவிக்கு வந்தவுடன் போலீஸ்காரர்கள் 'லத்தி'யினால் மிருகத்தனமாக அவர்களைத் தாக்கினார்கள். இவ்வாறு அவர்களைத் தாக்கிய பிறகு, அவர்களை நாடார்கள், நாவிதர்கள், சலவைத் தொழிலாளர்கள், அகம்படியர்கள், என்று தனித் தனியாக பிரித்தார்கள். அப்படி பிரித்தவுடன் 14 அகம்படியர்களைக் கைதுசெய்து போலீஸ் வானில் அடைத்துக் கொண்டு சென்றனர். அவர்களை வானில் அடைத்துச் சென்ற போலீஸார் திருப்புவனம், நரிக்குடி போகும் சாலையில் வந்து அவர்களை வண்டிக்குள்ளேயே இரவு பூராவும் வைத்திருந்தனர். இரவை அங்கே கழித்துவிட்டு அழகாபுரிக்கு 1½ மைல் தூரம் போலீசார் சென்றனர். அப்போது அதிகாலையாக இருந்தது; ஊரைச் சேர்ந்த சில பேர் அங்கே வெளிக்கு போவதற்கு வந்தனர். அப்படி அங்கே வந்தவர்களைப் போலீசார் தாக்கினர். அவ்வாறு தாக்கப்பட்டவர்களில் இருவர் கிராம உத்தியோகஸ்தர்கள். ஒரு கர்ணம் கூட தாக்கப்பட்டார். அப்போது தாக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் போலீசாரிடம் " நீங்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், நாங்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள். நீங்கள் போலீஸ் உத்தியோகஸ்தர்கள். நாங்கள் கிராம உத்தியோகஸ்தர்கள். எங்களை ஏன் நீங்கள் அடிக்கிறீர்கள் என்று கேட்டனர். அதற்கு போலீஸ்காரர்கள் " அப்படியா? தெரியாமல் உங்களை அடித்து விட்டோம். இந்தப் பிராந்தியத்திற்கு தீ வைக்கும் கோஷ்டியார் ஆயிரம் பேர் வந்தார்களா?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த கிராமத்தார் " அப்படி யாரும் வரவில்லை " என்று பதில் சொன்னார்கள். அதற்குப் பிறகு சிறுவனூர் கிராமத்திற்கு போலீசார் சென்றனர். அங்கே அவர்கள் கள்ளர் வகுப்புத் தேவர்களைக் கைது செய்தனர். அதற்குப் பிறகு சீனிமடைக்கு சென்று இருவரைக் கைது செய்தனர். இவர்களையெல்லாம் கைது செய்துகொண்டு இருமடைவாய்க்காலுக்குப் போனார்கள்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இந்த சமாச்சாரங்களெல்லாம் நீங்கள் மற்றவர்களை விசாரித்துச் சொல்வதுதான், நேரில் தெரிந்து கொண்ட விஷயங்கள் இல்லை என்று நினைக்கிறேன்.

**Sri T. L. SASIVARNA THEVAR** : இது யாவும் மற்றவர்கள் சொல்லிய விஷயங்கள்தான்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இப்பொழுது சொன்னதையெல்லாம் பார்த்தால் நேரிலேயே பார்த்துவிட்டுச் சொல்வது போல் இருந்தது, அப்படி இல்லையென்று நினைக்கிறேன்.

**Sri T. L. SASIVARNA THEVAR** : இது மாதிரிச் சுடப்போவதாகச் சொல்லியிருந்தால் அப்போது அங்கு நேரிலேயே பார்த்திருப்போம். அப்படி இல்லை.

**Sri M. KALYANASUNDARAM** : மீண்டும் நிதி அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுவதை நான் வரவேற்கிறேன். பேசுவதை தெளிவுபடுத்த உதவியாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த சபையில் அங்கத்தினர்கள் கொண்டு வரக்கூடிய புகார்களும், சொல்லக்கூடிய விவரங்களும் நேரில் பார்த்துத் தெரிந்த விவரங்களாயிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அந்தத் தொகுதி மக்கள் சொல்லக்கூடிய விஷயங்களை, அவர்களிடத்தில் சொல்லிய விஷயங்களை, கனம் அங்கத்தினர்கள் இந்தச் சபையில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள். கனம் சசிவர்ண தேவர் அவர்கள் சொல்லியது. . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இவைகளைச் சொல்லுவதற்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லை. ஆனால் அவர் சொல்லுகின்ற விதம், அவரே நேரில் பார்த்து விட்டுச் சொல்லுகின்ற மாதிரி எனக்குத் தோன்றி



யது. அந்த மாதிரி மற்றவர்களுக்கும் தோன்றக் கூடாதே என்ற காரணத்திற்காகத்தான், தப்பர்த்தம் ஏற்பட்டுவிடக்கூடாதே என்பதற்காகத் தான் சொன்னேன்.

**Sri D. S. AUTHIMOOLAM** : ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர், கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்தப் பேச்சின் போக்கைத் திருப்பி விடுவதற்காக இப்படிப்பட்ட குறுக்கீட்டைச் செய்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறேன்.

**Mr. SPEAKER** : இது எப்படி point of order ஆகும். கனம் சசிவர்ணத் தேவர் மேலே பேசலாம்.

**Sri T. L. SASIVARNA THEVAR** : நான் நேரில் சென்று மக்களை விசாரித்து அவர்களிடமிருந்து அறிந்த அளவில்தான் சொல்லுகிறேன். ஒவ்வொரு சம்பவத்தையும் யாரும் நேரில் பார்த்திருக்க முடியாது. சிறுவாணி சம்பவத்தில் 14 பேர்களைக் கொன்றிருக்கிறார்கள். உளுத்தமடை சம்பவத்தில் ஐந்து பேர்களை மட்டும் பிரிக்கிறார்கள். அவர்களில் ஒருவர் சிறுவானூரைச் சேர்ந்தவர், மூன்று பேர் பனைக்குடியைச் சேர்ந்த தேவர்கள். ஒருவர் சீனிமடையைச் சேர்ந்தவர். இந்த ஐந்து பேர்களில் ஒருவர் மீது ஆண்டவன் நல்ல கருணையை வைத்தார். அவர் ஒரு எஸ்.ஏ.பி. அன்பரால் காப்பாற்றப்பட்டிருக்கிறார். பனைக்குடி மறவர் குலத்தைச் சேர்ந்தவர்கள் ஐந்து பேர்களை அங்கு கொண்டு போகிறார்கள். எதற்குக் கொண்டு போகிறார்கள் என்பது அவருக்குத் தெரிந்ததுதான். அவர் நல்லவர், அவர் பேரில் தவறு ஒன்றுமில்லை. அவரை எனக்குத் தெரியும் என்று கூறுகிறார். அவர் ஜான்ஸன் இன்ஸ்பெக்டரிடம் சொல்லி அவர் எனக்கு வேண்டியவர் விட்டு விடுங்கள் என்று சொல்லி விடுவிக்கிறார். பாக்கி அந்த நான்கு பேர்களை கணவாய்க்கு அழைத்துச் சென்று " உங்களை விடுதலை செய்துவிட்டோம், நீங்கள் போகலாம் " என்று சொல்லுகிறார். அவர்கள் தவறாக நினைத்து அந்த இடத்தை விட்டு ஓடுகிறார்கள். அவர்களைப் பின்னாலிருந்து சுட்டுக் கொன்று விட்டார்கள். அதில் ஒருவரைச் சுட்டதானது இரண்டு கால்களுக்கிடையில் குண்டு படாமல் போகிறது. அவர் உடனே காலில் விழுந்து நமஸ்காரம் செய்து கேட்டுக்கொள்கிறார் " நான் பெரிய வீட்டுக்காரன், என்னைக் கொலை செய்யவேண்டாம் " என்று. அப்படி வேண்டிக்கொண்ட பிறகும் அவர் சுட்டுக் கொல்லப்படுகிறார். கனம் அமைச்சர் ராமையா அவர்கள் திடீரென்று மாறுவேடம் போட்டுக்கொண்டு போய்ப் பார்ப்பது போல் நமது போலீஸ் அமைச்சர் அவர்களும் மாறுவேடம் போட்டுக்கொண்டு இரவிலே மக்களிடத்திலேபோய் விசாரித்தால் எல்லா மக்களும் இந்த சம்பவத்தை நிச்சயம் சொல்லுவார்கள். இதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. அப்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆகவே இது 20-ம் தேதி சமாச்சாரம். இதைப் பற்றி 20-ம் தேதி இரவே கலெக்டர் அவர்களுக்குத் தந்தி கொடுத்திருக்கிறோம். பிறகு புள்ளி விவரத்தோடு கூட 22-ம் தேதி ஒரு தந்தி கொடுத்திருக்கிறோம். விவரங்களையெல்லாம் நன்றாக விசாரித்தறிந்த பிறகு உள்நாட்டு அமைச்சர் அவர்களுக்கு போலீஸாரைக் குற்றம் சாட்டி குற்றச் சாட்டாக அனுப்பப்பட்டிருக்கிறது.

**Sri M. C. MUTHUKUMARASWAMY** : ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் ஸார்.

**Mr. SPEAKER** : கனம் அங்கத்தினர் point of information கேட்கமுடியாது. Point of order யிருந்தால் மட்டும்தான் கேட்கலாம்.

**Sri M. C. MUTHUKUMARASWAMY** : ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர் கனம் அங்கத்தினர் இரண்டு நாட்களாகச் சொல்லி வரும் குற்றச் சாட்டானது அங்குள்ள தேவர் மக்களிடை சென்று கேட்டறிந்து சொல்லுகிறேன் என்று சொன்னார். அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அங்கத்தினர் அதே சமயத்தில் அங்குள்ள ஹரிஜன மக்களைச் சந்தித்து அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று அறிந்தார்களா? அப்படி அறிந்திருந்தால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதையும் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[29th October 1957

*MR. SPEAKER : இது point of order இல்லையே. கனம் அங்கத்தினர் சசிவர்ண தேவர் அவர்களுக்கு தெரிந்ததை சொன்னார். கனம் முத்துகுமாரசுவாமி அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்த பிறகு அவர்கள் சொல்வது தவறு என்று சொல்லலாமே தவிர, point of order கேட்பது சரியல்ல என்று சொல்லுகிறேன்.

SRI T. L. SASIVARNA THEVAR : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது போல் ஹரிஜனங்களையும் கேட்டிருக்கிறேன். பனக்குடியிலும் உளுத்தமடையிலும் ஹரிஜனங்களிடம் கேட்டிருக்கிறேன். ஹரிஜனங்கள். .

MR. SPEAKER : அதற்கு நீங்கள் பதில் சொல்லவேண்டாம். நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லலாம்.

SRI T. L. SASIVARNA THEVAR : கீழத்தூவல் விசாரணையிலும் ஹரிஜனங்கள் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். 20-ம் தேதி இந்தச் சம்பவம் நடந்தது. 21-ம் தேதி சில சிறிய சம்பவங்கள் நடந்தன. பிறகு இந்தப் பிராந்தியம் பூராவிலும் பூரண அமைதி நிலவியிருந்தது. அதை சர்க்காரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மூன்று பெரிய குற்றச்சாட்டுக்களை போலீஸ்காரர்கள் செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன். கீழ்த்தூவலில் எந்தவிதமான கலவரமும் இல்லாத போதே, அங்கு 5 பேர்களைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். மறுபடியும் அனாவசியமாகக் குறுக்கிட்டு 7 பேர்களைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். உளுத்தமடையில் 4 பேர்களைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். இந்த மூன்று இடங்களிலும் ஹரிஜனங்களுக்கும் தேவர்களுக்கும் இடையில் கலவரம் நிகழ்ந்து: அதனால் சென்றதாகச் சொல்லுவது நியாயமில்லை. இந்த மூன்று இடங்களிலும் எந்த விதமான கைகலப்பும் கிடையாது. மூன்று இடங்களிலும் நேரில் போலீஸார் சென்று வேண்டுமென்றே 16 பேர்களைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். கீழ்த்தூவல் சென்று பார்த்த பிறகு கிராமத்தாரிடமிருந்து தெரிந்த அளவிற்கு எம்.பியும் நானும் சேர்ந்து கையெழுத்திட்டு 19-ம் தேதி, 20-ம் தேதி விவரம் கொடுத்திருக்கிறோம். முதலில் 20-ம் தேதி தந்தி கொடுக்கப்பட்டது. பின்னால் விவரங்கள் பூராவும் சவிஸ்தாரமாக அனுப்பப்பட்டு இருக்கிறது. மூன்று சம்பவங்களைப் பற்றியும் முடிந்த அளவிற்கு, அன்றைய தினம், 6, 8, 10 மணி நேரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று சம்பவங்களைப் பற்றியும் நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீதி விசாரணை இல்லாவிட்டாலும், கீழ்த்தூவல் சம்பவத்தின் மீது விசாரணை நடத்தியது போல் இந்தச் சம்பவங்களைப் பற்றியும் ஏன் விசாரணை நடத்தப்படவில்லை. அவைகள் மீது விசாரணை நடத்துவதற்கு மறுக்கக் காரணம் என்ன? இன்னும் இதேமாதிரி உலகம் பூராவும் தெரிந்துவிடுமே என்ற பயமா ? கனம் நிதி அமைச்சர் அவர்கள் கீழ்த்தூவலுக்குப் போய் வந்து மதுரையில் பேசுகிறார், " விசாரணை இப்படிப் போகுமென்று தெரிந்திருந்தால் இந்த விசாரணை செய்வதற்கு உத்திரவிட்டிருக்கமாட்டோம் " என்று.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் அதைச் சரியாகப் படிக்க வில்லை அல்லது அதைப் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இந்தமாதிரி தொடர்ந்து கலவரம் நடைபெறும் என்பது முன்னமேயே தெரிந்திருந்தால், நல்ல சூழ்நிலையை உண்டாக்குவதற்குப் பதிலாக இந்தமாதிரி விசாரணை வைத்து நிலைமையை மோசமாக்காமல் விசாரணை வேண்டாமென்று முடிவு செய்திருப்போம். தொடர்ந்து நடைபெறும் என்று எதிர்பார்த்திருந்தால் இந்த விசாரணை வைத்திருக்கமாட்டோம் என்று சொன்னேன். இதை அவர்கள் சரியாகப் படிக்கவில்லை.

SRI T. L. SASIVARNA THEVAR : நான் பத்திரிகையைத் சரியாகத் தான் படித்தேன். தவறாகப் படிக்கவில்லை. ஆனால் அது இந்த அர்த்தம் விளங்குபடியாக இல்லை. அது என் குற்றமில்லை. இப்போது விளக்கம் தருவதால் ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆக, இந்த மூன்று துப்பாக்கி பிரயோகங்களைப் பற்றியும் நீதி விசாரணை நடத்தவேண்டியது அவசியமில்லையா என்று கேட்க விரும்பு



29th October 1957] [Sri T. L. Sasivarna Thevar]

கிறேன். இப்படி 16 படுகொலைகள் மந்திரி சபை உதவி கொண்டு கீழ்த்தர சிப்பந்திகள் செய்திருக்கிறார்கள். அதற்கு அவர்கள் குற்றவாளிகள் இல்லையா? இந்த மூன்று படுகொலைகளைப் பற்றியும் நீதிபதிகள் நியாய விசாரணை செய்யவேண்டும். எவ்வித கலவரமும் ஏற்படாத போது, எவ்வித கைகலப்பும் ஏற்படாத போது போலீஸார் சுட்டிருக்கிறார்கள். வகுப்புக் கலவரம் என்ற பெயரால் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள்.

அங்குள்ள 75 வீடுகளுக்குத் தீ வைக்கப்படவில்லை. அதைச் சுற்றியுள்ள பிராந்தியங்களில் தகராறே கிடையாது. எந்த இடத்திலும் தீ வைக்கப்படவில்லை. விராம்பால், எலஞ்சாக்பூர், இருளான்டிப்பட்டி, கந்தக் கோட்டை முதலிய நான்கு ஊர்களில் தகராறு இல்லை. அந்த நான்கு ஊர்களில் மூன்று ஊர்களில் ஹரிஜனங்கள் வசிக்கிறார்கள். ஒரு ஊரில் சாதி இந்துக்கள் வசிக்கிறார்கள். இந்த ஊரில் சுட வேண்டிய அவசியம் என்ன? என்பதை விசாரிக்க வேண்டும். அங்கு நடந்தவைகளை யெல்லாம் கவனித்தால் ஏதோ திட்டமிட்டு சதி செய்ததாகத்தான் தோன்றும். இந்த ஊர்களில் நடை பெற்றதை நிச்சயமாக விசாரணை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

அடுத்தப்படியாக கலவரம் 13 அல்லது 14–ம் தேதி ஆரம்பித்து 21–ம் தேதி முடிகிறது. அந்த இடங்களில் வகுப்புக் கலவரம் திருப்பவும் 18 அல்லது 19–ம் தேதிதான் ஆரம்பமாகிறது. திரு எ. வெங்டேஸ்வரன் விசாரணை செய்த நாட்கள் பூராவும் நான் அங்கேதான் இருந்தேன். அதன் பிறகு நான் மானாமதுரைக்கு மதுரையிலிருந்து வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது பல கிராமங்கள் தீ பிடித்து எரிந்துக் கொண்டிருந்தன. அந்த கிராமங்கள் எல்லாம் கலவரத்தில் சம்பந்தப்படாத கிராமங்கள். அங்கு தீ வைக்கப்படவேண்டிய காரணம் என்ன என்பது தெரியவில்லை. அந்தப் பிராந்தியம் என்னுடைய தொகுதி கூட இல்லை. காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் திரு. சிதம்பர பாரதி அவர்களுடைய தொகுதி. அந்தப் பிரதேசத்தில் தீ வைக்கப்பட வேண்டிய அவசியம் என்ன? நான் வரும்பொழுது தீப்பற்றிக் கொண்டு கிராமங்கள் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டு மனம் வருந்தினேன். அங்கு தீ வைக்கப்பட வேண்டிய காரணம் என்ன?.

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கெல்லாம் அவர் தீ வைத்தார் என்று சொல்லுகிறாரா ?

SRI T. L. SASIVARNA THEVAR : அங்கெல்லாம் அவர் தீ வைத்தார் என்று நான் சொல்லவில்லை. அங்கே தீ வைத்ததெல்லாம் யாரோ சிலர் வந்து அதாவது "காங்கு" வந்து தீ வைத்தார்கள். அதன் பிறகு திருப்பாச்சேத்திற்குத் தீ வைக்கப்படுகிறது. அங்கே 10 அல்லது 14 ஹரிஜன வீடுகள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் தீ வைக்க வேண்டிய அவசியம் என்ன? பக்கத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அதுவும் சுமார் பதினைந்து அடி தூரத்தில் இருக்கிறது. ஆனால் அங்குள்ள போலீஸ்காரர் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே அங்கு நெருப்பு வைக்கப்போவதாகத் தெரியவந்திருக்கிறது. அப்படி இருந்தும் போலீஸ்காரர்கள் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவே இல்லை. யாரோ வந்து தீ வைக்கிறார்கள். போலீஸ்காரர்கள் வந்து அதைத் தடுக்கவில்லை. அங்குள்ள ஹரிஜனங்களுக்கும் போலீஸ்காரர்கள் வந்து உதவி செய்யவில்லை. இதற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள் என்று கேட்கிறேன். இதைப் பற்றிய விஷயம் கனம் தத்தாருக்கும் தெரியும். கனம் பி. கக்கன் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள்? அங்குள்ள போலீஸ் ஸ்டேஷன் அவுட் போஸ்ட் ஸ்டேஷன் கூட இல்லை, பக்கா போலீஸ் ஸ்டேஷன். அப்படி இருந்தும் ஏன் ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. தீ வைக்கும் போது போலீஸ்காரர்கள் ஏன் சுடவில்லை என்று கேட்கிறேன்.

அடுத்தபடியாக பெரம்பாச்சேரி கிராமத்தில் தீ வைக்கப்படுகிறது. அங்கும் திரு. தத்தார் வந்து விசாரிக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே தீ வைக்கப்போவதாகத் தகவல் வருகிறது. அப்படி இருந்தும்

முன்னெச்சரிக்கையாக போலீஸ் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. பந்தோபஸ்து வேண்டும் என்று கேட்டுக் கொண்டும் போலீஸ் பந்தோபஸ்து வரவில்லை. எந்த உதவியும் அனுப்பவில்லை என்று அங்குள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இதுவும் கனம் கக்கன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த கிராமங்கள் ரொம்பவும் 'இன்டீரியரில்' இல்லை. பக்கத்தில்தான் இருக்கிறது. அது என்னுடைய பிராந்தியம். ஆகவே இவைகளை யெல்லாம் கவனித்தால் திட்டமிட்டுக் கொண்டு வேலைகளைச் செய்து வருவதாகத்தான் தோன்றிற்று. ஆலோசனை செய்து வேலைகளை நடத்துவதாகத்தான் தோன்றிற்று. பட்டப்பகலில் தீ வைப்பதை ஏன் அவர்கள் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அதைத் தடுப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாதா? அங்கு வெகு சுலபமாகப் போகலாம். மதுரையிலிருந்து ராமனாதபுரத்திற்குப் போகக்கூடிய தார் ரோடு அது. அங்கு போலீஸ்காரர்கள் வெகு சுலபமாகப் போகலாம். போலீஸ் ஸ்டேஷன் 15 அடி தூரத்தில் தான் இருக்கிறது. அப்படி இருந்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. அப்படி எடுத்துக்கொள்ளாமல் இருப்பதன் காரணம் என்ன?

வீராம்பல், இலஞ்சாம்பூர், இருளாம்பட்டி, அருங்குளம் முதலிய கிராமங்களுக்குத் தீ வைக்கப்படுகிறது. இவைகளில் மூன்று கிராமங்களில் ஹரிஜனங்கள் வசிக்கிறார்கள். ஒரு ஊரில் மட்டும் சாதி இந்துக்கள் வசிக்கிறார்கள். தினசரி வீடுகளுக்கு தீ வைக்கப்படுகிறது 19-ம் தேதி வரையில். அதை போலீஸ்காரர்கள் தடுக்கவில்லை. இதை இங்குள்ள ஹரிஜன மெம்பர்கள் நன்றாகத் தெரிந்துக்கொள்ளவேண்டும். இவர்கள் ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று கேட்கிறேன். இவர்கள் பக்கத்தில் 15 அடி தூரத்தில் போலீஸ் ஸ்டேஷனில் இருந்துக்கொண்டு என்ன செய்தார்கள் என்று கேட்கிறேன். எங்கு பார்த்தாலும் தீ பிடித்துக்கொண்டு எரிகிறது. ஆனால் அங்குள்ள போலீஸ்காரர்கள் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. அதைத் தடுக்கவும் இல்லை. யார் வைத்தார்கள் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. யாரோ சிலர் வந்து வைத்துவிட்டுப் போகிறார்கள். இரண்டு நாட்களாகச் சம்பவம் நடந்து கொண்டிருக்கிறது. அப்பொழுதெல்லாம் போலீஸ்காரர்கள் எங்கே போயிருந்தார்கள். ஓர் இடத்தில்கூட நெருப்பு வைக்கும்போது இவர்கள் வந்து தடுக்கவில்லை.

*Sri K. B. S. MANI: On a point of order மதிப்பிற்குரிய சசிவர்ண தேவர் அவர்கள் பேசும்போது நேற்றும் சரி இன்றும் சரி பேசும்போதெல்லாம் போலீஸ் அதிகாரிகளை அவர், இவர் என்றும், அவன் இவன் என்றும், கனம் மந்திரி அவர்களை "நீ" என்றும் சொல்லிக்கொண்டு பேசுகிறாரே அது இந்தச் சபையின் ஒழுங்கு முறைக்கு சரியா அப்படிப் பேசுவதும் சரியா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

Sri T. L. SASIVARNA THEVAR: அம்மாதிரி நான் பேசியிருந்தால் தவறுதான் அதற்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏதோ ஆத்திரமாகப் பேசும்போது அப்படி பேசியிருக்கலாம். அதற்கு என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட வார்த்தைகளை நான் உபயோகப்படுத்தி இருந்தால் மனப்பூர்வமான மன்னிப்பை நான் கோருகிறேன். இனிமேல் அப்படி பேசாமல் இருக்கிறேன்.

ஆகவே ஹரிஜனங்களுக்கு போலீஸ்காரர்கள் ஏன் காலாகாலத்தில் வந்து பாதுகாப்புக் கொடுக்கவில்லை? அங்கு நடந்த சம்பவங்களைப்பற்றி குறிப்பிடும்போது ஜாலியன்வாலாபாக், ப்ளாக் ஹோல் அப் கல்கத்தா போன்ற சம்பவங்களைப் போல் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அப்படி இருக்கும்போது 16-ம் தேதி கொலை நடந்ததும் ஏன் பாதுகாப்பு "அளிக்கவில்லை" என்றுதான் கேட்கிறேன். பெரிய மோதல் நடந்திருக்கிறது, ஆறு கொலை விழுந்து இருக்கிறது. அதை ஏன் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. இது முக்கால் மைல் தூரத்தில்தான் நடந்திருக்கிறது. 16-ம் தேதி கொலை நடந்திருந்தும் 17, 18, 19-ம் தேதி



வரையில் சும்மா இருந்து விட்டு அதன் பிறகு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவானேன். அது வரையிலும் ஏன் போலீஸ் தாக்கவில்லை. அங்கு ஹரிஜனங்கள்தானே இருக்கிறார்கள். மறவர்களைதானே கொலை செய்யவேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும் போது அங்குள்ள ஹரிஜனங்களை ஏன் பாதுகாக்கப் போகவில்லை? வீரம்பல் பூராவும் ஹரிஜனங்கள்தானே, ஏன் அவர்களைக் காப்பாற்றப் போகவில்லை?

*Sri K. B. S. MANI: On a point of order. மறுபடியும் அவர் ஏதோ சொல்லுகிறார். நேற்று கனம் கல்யாணசுந்தரம் பேசும்போது டென்ஷன் ஏற்படும்படி பேசக்கூடாது என்று சொன்னார். இப்பொழுது அவர் பேசுவதைப் பார்த்தால் டென்ஷன் ஏற்படுவதாக இருக்கிறது. அப்படி அவர் பேசினால் சபைக்கு அவ்வளவு நல்லதாக இருக்க முடியுமா? அதன் பிறகு ஒவ்வொரு அங்கத்தினரும் டென்ஷன் உண்டாகும்படி பேசும் நிலைமை ஏற்படலாம். அது நல்ல முறையாக இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER: நானும் அப்படித்தான் சொன்னேன்.

Sri T. L. SASIVARNA THEVAR: தயவு செய்து நான் பேசும்போது தொந்தரவு பண்ணவேண்டாம். கலவரம் நடந்து மோதல் ஏற்பட்டிருக்கும்போது அவர்களுக்கு பந்தோபஸ்து கொடுக்கவேண்டாமா? அப்படிக் கொடுக்காமல் இருந்தது யார் குற்றம் என்று கேட்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: பாதுகாப்பு இருந்தால்தான் ஹரிஜனங்கள் வாழமுடியும், பாதுகாப்பு இல்லாவிட்டால் அவர்களை தாக்க மறவர்களுக்கு உரிமை இருக்கிறது என்ற தோரணையில் அவர் பேசுகிறாரா? அப்படிப்பட்ட உரிமையை கனம் அங்கத்தினர் கொண்டாடுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

Sri T. L. SASIVARNA THEVAR: அம்மாதிரியான உரிமையை நான் கொண்டாடவில்லை. இவ்விதம் பலாத்காரம் நடந்து கொண்டிருக்கிறது. 6 பேர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள், சாதாரணமாக பாதுகாப்பு வீராம்பலுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் இந்த மோதலை தடுத்திருக்கலாம். ஏன் அப்படிப் பாதுகாப்பு கொடுக்கவில்லை என்று கேட்கிறேன். போலீஸ் பாதுகாப்பு கொடுத்திருந்தால் பெரிய மோதலை தடுத்திருக்கலாம். நிச்சயமாக அங்கு கலவரம் நடந்திருக்காது. பாதுகாப்பு கொடுத்திருந்ததை ஏன் வாபஸ் வாங்கவேண்டும்? அந்த ஊர் தாக்கப்பட வேண்டும் என்று வாபஸ் வாங்கினீர்களா? ஜனங்கள் தாக்கப்படவேண்டும் என்பதற்காக போலீஸ் அங்கிருந்து வாபஸ் வாங்கப்பட்டது. கீழ்த்தூவலில் 10, 15 போலீசார்களை நிறுத்தி வைத்திருந்தால் சர்க்காருக்கு ஏதாவது குடி முழுகிப் போய்விடுமா? பக்கத்திலுள்ள ஊர் பூராவும் 25 பேர் நாடார் இருந்தாலும் அங்கே 75 எ.எஸ்.பி. இரண்டு மாத காலம் நிறுத்தி வைக்கப்படுகிறது. பேரையூர் என்னும் ஊரிலே 70 ரிசர்வ் போலீசார் மூன்றேகால் மாதம் தங்கி உறங்கியிருக்கிறார்கள்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: பேரையூரில் வேறு வகுப்பு மக்கள் இல்லையா என்று நான் கேட்கிறேன்.

Sri T. L. SASIVARNA THEVAR: கமுதையில் ஜாஸ்தி பந்தோபஸ்து கிடைக்கிறது. கலொடியில், சிவகாசியில், விருதுநகரில் பந்தோபஸ்து கொடுப்பதன் நோக்கம் அங்குள்ள தனி வகுப்பு மக்களுக்கு ஜாஸ்தி பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதுதான். 60 ஹரிஜனங்கள் உள்ள வீராம்பல் கிராமத்தில் பத்து பேர் போட்டால் என்ன? இதற்குப் பதில் சொல்ல முடியாது, சர்க்காரால். பாதுகாப்பு குறைந்தது. அந்த ஊரில் கலகம் ஏற்பட்டது. மக்கள் செத்தார்கள். காரணம் வீராம்பலில் போலீசார் பாதுகாப்பு இல்லை.

ஹரிஜனங்களுக்குப் போதுமான பாதுகாப்பு கொடுத்திருந்தால் இவ்வளவு கஷ்டம் ஏற்பட்டிருக்காது. 100, 150 கிராமங்களிலும் தகுந்த போலீஸ் பாதுகாப்பு கொடுப்பதற்கு முயற்சி பண்ணவில்லை என்று நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். இதை நீதிபதி வைத்து விசாரணை

செய்தால் சவிஸ்தாரமாக எல்லாக் குட்டும் வெளியாகிவிடும், யார் மீது தவறு இருக்கிறது என்று நிச்சயமாகப் புரிந்து கொள்ள முடியும். இதை ஏன் மறைக்கிறார்கள் என்று கேட்கிறேன்.

திரு எஸ். வெங்டேஸ்வரன் ரிப்போர்ட் பேரில் சில வார்த்தைகள் சொல்ல இஷ்டப்படுகிறேன். 18-ந் தேதி காலை 8 மணி முதல் 25-ந் தேதி அவருடைய பைலைக் கட்டி பரமக்குடியிலிருந்து புறப்படும் வரை அங்கே இருந்தேன். எனக்குக் கொஞ்சம் ஆங்கிலம் தெரியும். நான் "அண்டர்ஸ்டாண்டு" பண்ணிக்கொள்வேன். எஸ். வெங்கடேஸ்வரன் அவர்கள் அங்கு நடந்துகொண்ட அந்த நாலு நாள் நடவடிக்கையில் கேவலம் ஒரு "தேர்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட்" டைப்போல நடந்துகொண்டாரே தவிர, ஒரு ஐ. ஸி. எஸ். போல் நடக்கவில்லை என்று நான் மட்டுமல்ல, அந்த "என்க்வைரி"யைப் பார்த்துக் கொண்டிருந்த எல்லா மக்களும் உணர்ந்தார்கள். விசாரணை செய்தவர், சர்க்காருக்கு விரோதமாக யாராவது சாட்சியம் சொல்பவராக இருந்தால் அவரை "க்ராஸ்" பண்ணுவார். க்ராஸ் செய்தால் சொல்பவருக்குச் சங்கடமாக இருக்கும். பத்து நிமிஷத்தில் குறுக்குக் கேள்வி போட்டு, குழப்பி விடுகிறார். சாட்சியம் சாதகமாக வரவில்லை யென்றால் அதை எழுதிக் கொள்ளாமல் இருந்ததையும் நான் பார்த்திருக்கிறேன். கே. ராமச்சந்திரன், எம். எல். ஏ., அவர்கள் இருந்திருக்கிறார். தொகுதி எம். எல். ஏ. கூட இருந்தார். அம்மாதிரி அவர் எடுத்த முடிவு என்ன ஆகும் என்று நன்றாகத் தெரிந்தது.

ஒன்று மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். 4 போலீஸ்காரர்கள் காயப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். தங்களைக் காயப்படுத்திய அறுவாள் பூராவையும் கேட்கவில்லை என்று சொல்கிறார். இது ஒன்று போதும் அவர் சொல்வது பொய் என்பதற்கு ஆகவே, "எவிடென்ஸை"ப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக ஆர்க்குமென்டைக் கேட்போம் என்று சொன்னார்கள். 24-ந் தேதி இரவு மதுரையில் இருந்து மிகச் சிரமப்பட்டு நான்கு மணி நேரம் ஆர்க்குமென்டை டைப் செய்துகொண்டு போய்க் கொடுக்கும்போது "ஆர்க்குமென்ட் வேண்டாம்" என்று சொல்லிவிட்டார். ஆர்க்குமென்டை அவர் கையில் கொடுக்கும் பட்சத்தில் நல்ல முறையில் விவரம் தெரியும், சுட்டது நியாயமா தவறா என்று விளக்கமாகத் தெரிந்துவிடும். அதை மறுத்துவிட்டார்கள் என்பது என்னுடைய அபிப்பிர ..ய்ம்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** எழுத்து மூலமாக ஆர்க்குமென்ட் எஸ். வெங்கடேஸ்வரன் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லையா என்று நான் கேட்கிறேன்.

**Sri T. L. SASIVARNA THEVAR :** மதுரையில் "ஆர்க்குமென்டைக் கேட்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டார். அறைகுறையாகக் கொடுத்தோம். கையிலே வ ங்கிக்கொள்ள மறுத்தார். மிகக் கஷ்டப்பட்டுக் கேட்டோம். ரிகார்டிலே இருந்தால் நல்லது என்று கொடுத்தோம், ஒப்புக்கொள்கிறேன்.

பரமக்குடியை விட்டுப் போவதற்கு முன்பு ரிப்போர்ட்டை முடிப்பதாகச் சொன்னவர், சென்னை நகருக்கு வந்தபிறகுதான் அதை முடித்திருக்கிறார், மேலும் அங்கு விசாரணை செய்யும்போது, காலை 9 இலிருந்து 12 வரை விசாரிப்பார், மாலை 4 இலிருந்து 7 வரை விசாரணை நடந்து முடிந்தவுடன் அங்குள்ள உத்தியோகஸ்தர்கள் பூராவும் அவருடைய அறைக்கு வந்து விடுவார்கள். இந்த வாசல் வழியாக எங்களைப் போன்றவர்கள் வெளியே போனால், அந்த வாசல் வழியாக டி.எஸ்.பி,. டி.ஐ.ஜி., கலெக்டர் போன்றவர்கள் வந்துவிடுவார்கள். இரண்டு மணி நேரம் பேசுவார்கள். இது எதற்காக என்று விளங்கவில்லை. ஜனங்கள் என்ன பேசிக்கொண்டார்கள் ? இந்த விசாரணையினால் நன்மை கிடைக்காது என்று அன்றைக்கே முடிவு செய்தோம். அதைத்தான் ஸ்தாபித்து இருக்கிறார்கள். உண்மையில் எஸ். வெங்கடேஸ்வரன் தீர்ப்பு நியாயமான ரிப்போர்ட்டா என்று உண்மையைத் தெரிந்துகொள்ள 4, 5 உயர்தரமான வக்கீல்கள் அல்லது நீதிபதி [illegible] ரிகார்டு பூராவையும் கொடுத்து அபிப்பிராயம் கேட்டால், அவர்கள்





சொல்லும் அபிப்பிராயம் எப்படியிருக்கும் என்று எங்களைப் போன்றவர்கள் தெரிந்துகொள்ள நல்ல வாய்ப்பு ஏற்படும். அது மாதிரி செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் முதலிலே சொன்ன மாதிரி, அங்கு நடந்தது ஜாதிச் சண்டை அல்ல. அரசியல் காரணத்திற்காகத் தூண்டி விடப்பட்ட சண்டை. கனம் போலீஸ் அமைச்சரவர்களுடைய அறிக்கையிலே எத்தனையோ தவறுகள் இருக்கின்றன என்பதை படிக்கும்போது தெரிந்துகொண்டேன். ஒரே ஒரு தவறை மட்டும் குறிப்பிடுகிறேன். அறிக்கை அவசரமாகத் தயாரிக்கப்பட்டதாலோ வேறு யாரோ ஒருவரால் தயாரிக்கப்பட்டு கனம் மந்திரி அவர்களால் படிக்கப்பட்டதாலோ, தவறுகள் இருக்கின்றன என்பதை சபை நன்றாகத் தெரிந்துகொள்ளலாம். அதிலே அவர் சொல்கிறார்.

**On 16th September 1957 addressing a public meeting at Vadakkampatti, Sri Thevar referred to the communal strife raging in Mudukalathur and Paramakkudi areas. Obviously the reference was to the incidents which had occurred at Arunkulam, Keelathooval, Veerambal, Ilamjambur, Irulandipatti and Sandakkottai between 10th September 1957 and 16th September 1957.**

16உ செப்டம்பர் 1957 அன்று வடக்கம்பட்டியில் தேவர் அவர்கள் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் ஏதோ குறிப்பிட்டதாகச் சொல்லப்படுகிறது, அறிக்கையில். வீராம்பல், எலஞ்சாம்பூர் சம்பவங்கள் பூராவும் 16-ந் தேதி தான் நடந்தது. 17-ந் தேதி தான் மக்களுக்கே தெரியும், பத்திரிகையிலே ஒழுங்காக ரிப்போர்ட் வந்ததிலிருந்து. மந்திரிகளுக்கு "ஒயர்லெஸ்", மூலமாக தெரியலாம். அப்படியிருக்கும்போது தேவர் எப்படி பேசியிருக்க முடியும் ? 16-ந் தேதியில் வடக்கம்பட்டியில் தேவர் அவர்கள் வீராம்பல், எலஞ்சாம்பூர் கலகத்தைப்பற்றி எப்படி குறிப்பிட்டிருக்க முடியும் ? அவருக்கு ஞான திருஷ்டி இல்லை, அவர் பேசியிருக்க முடியாது என்று சபையிலே உள்ளவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இதுமாதிரி பல இடங்களில் உண்மைக்கு மாறான விஷயங்கள் காணப்படுகின்றன.

**The Hon. Sri K. KAMARAJ NADAR :** கனம் அங்கத்தினரிடமிருந்து ஒரு விஷயம் தெரியவேண்டும். வடக்கம்பட்டியில் நடந்த கூட்டம் 16-ந் தேதியிலா ? அல்லது வேறு தேதியிலா ?

**Sri T. L. SASIVARNA THEVAR :** 16-ந் தேதிதான் நடந்தது. அன்று சாயந்திரம் நீங்கள் புறப்பட்டிருக்கிறீர்கள் என்று ஞாபகம் இருக்கிறது.

நான் முன்னாலே சொன்ன மாதிரி, இது ஒரு ஜாதிச் சண்டை அல்ல அரசியல் சண்டை என்பதற்கு இன்னொரு உதாரணம் சொல்கிறேன். எங்கள் தரப்பிலே, பார்வார்டு பிளாக் தரப்பிலே சேதப்பட்டவர்கள் ஜாப்தா சொல்கிறேன். போலீசார், சர்க்கார் கொடுக்கும் கணக்குப்படியும் எங்கள் கணக்கையும் பார்க்கலாம். 17 பேரில் 12 பேர் மறவர்கள். 4 பேர் அகமுடையர்கள். ஒருவர் கள்ளர். ஒருவர் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர் என்பதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜாதிச் சண்டை என்றால் கிழவக்குடும்பன் என்ற ஹரிஜனத் தோழர் ஒருவர் எங்களுக்காகச் செத்திருக்க வேண்டியதில்லை, கீரந்தையிலே இராமனாதபுரத்தில் பத்தாயிரம் மக்கள் ஊர்வலமாகச் சென்று கிழவர் குடும்பனைப் பார்த்து அவருக்கு இரண்டாயிரம் பூமாலைகள் போட்டிருக்க முடியாது. கிழவக்குடும்பன் ஆஸ்பத்திரியில் "டையிங் டிக்ளரேஷன்" கொடுத்திருப்பதை "டேபிள்" மேல் வைத்தால் நன்றாக இருக்கும். அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பது சந்தேகமாக இருக்கிறது. அதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மக்களுக்குத் தெரிந்தால் கீராந்தையிலே நடந்தது வகுப்புக் கலவரமா, போலீசார் சும்மா இருந்தவர்களைச் சுட்டார்களா என்பது தெரிந்துபோகும்.

(The Deputy Speaker in the Chair.)

அடுத்தபாடியாக கலகம் ஏற்பட்டிருக்கிறது. "க்ளாஷ்" ஏற்பட்டதன் விளைவாக எங்கள் சார்பாக இறந்தவர்கள் 4 மறவர்கள், 2 ஹரிஜனங்கள். 24-ந் தேதி அன்று கடலாடி பக்கத்தில் கரிசல்குளத்தில் பார்வார்டு ப்ளாக் கட்சியைச் சேர்ந்த ஹரிஜனங்கள் 40 வீட்டுக்காரர்கள் இருக்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவார்கள் மூன்று வீட்டுக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்த ஹரிஜனங்களைக் கொலை செய்துவிட்டார்கள். 43 வீடுகளுக்குத் தீ வைத்துக் கொளுத்திவிட்டார்கள். வகுப்பு கலவரத்தில் இம்மாதிரி நடக்குமா என்று நான் கேட்கிறேன். எங்கள் சம்பந்தப்பட்ட ஹரிஜனங்களும், காங்கிரஸ் சம்பந்தப்பட்ட ஹரிஜனங்களும் செத்திருக்கிறார்கள் என்றால், இது வகுப்புக் கலவரமா? இது ரிக்கார்டிலே இருக்கிறது. கற்பனையாகச் சொல்லவில்லை. சர்க்காருக்கு நேரடியாகத் தெரியும்.

வகுப்புக் கலவரம் இல்லை என்பதற்கு இன்னொரு உதாரணம் சொல்கிறேன். மாரண்டையில் சொரிமுத்து கைது செய்யப்பட்டு ஜெயிலில் வைக்கப்பட்ட சமயத்தில் 4 ஹரிஜனப் பிரமுகர்கள் ஜாமீன் கொடுக்க முன்வந்தார்கள் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். "எங்கள் கிராமம் சம்பந்தப்பட்டமட்டில் எங்களுக்குப் பெரிய உதவி செய்தவர். அவருக்கும் எங்களுக்கும் தகராறு கிடையாது. அவரைக் கைது செய்தது தவறு. நாங்கள் ஜாமீன் தருகிறோம்" என்று சொல்லி நான்கு ஹரிஜனப் பிரமுகர்கள் கேட்டிருக்கிறார்கள் கோர்ட்டிலே. ஆனால், கோர்ட்டார் மறுத்துவிட்டார்கள்.

அது மட்டுமல்ல. நண்பர் சிதம்பர பாரதியார் தொகுதியிலே தீ வைப்பு நடந்தது. அங்குள்ள மறவ குடி மக்கள், ஜாதி ஹிந்துக்கள் பூராவும் ஹரிஜனங்களுக்கு நல்ல பாதுகாப்புக் கொடுத்தார்கள். சம்பந்தப்பட்ட சொத்துக்குப் பாதுகாப்பு கொடுத்தார்கள். கிராமத்திலுள்ள ஜாதி ஹிந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் தகராறு இல்லை.

இங்கே இவ்வளவு பெரிய மகத்தான சேதம் ஏற்பட்டிருக்கிறது. நானும், கனம் தத்தாரும், கனம் கக்கனும் சுற்றுப் பிரயாணம் செய்த போது, அவர் நேரில் வரவில்லை. அதற்கு வருந்துகிறேன். காரணம் அவர் சொல்லவேண்டும். இந்த மகத்தான சம்பவங்கள் நடந்த இடங்களுக்குச் சென்று பார்க்க அவருக்கு இஷ்டம் இல்லையா அவருக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும்போது; இதற்குக் காரணம் சொல்லவேண்டும். நான் அவர் மேல் குற்றம் சாட்டுகிறேன் என்று நினைக்கக் கூடாது. நடந்த சம்பவங்கள் ஒரு திட்டத்தின்கீழ் சதியாக ஏற்பட்டது என்பது இவைகளிலிருந்து தெரியும்.

இப்படி திட்டமிட்டு செய்யப்பட்ட சதியின் காரணமாக 16 பேர்களை போலீசார் படுகொலை செய்திருக்கிறார்கள். போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தால் வீராம்பல் கொலைகள் தவிர்க்கப்பட்டிருக்கும். ஆகவே இதிலிருந்து என்ன தெரிகிறது? சர்க்கார் சம்பந்தப்பட்ட கீழ்தர உத்தியோகஸ்தர்கள், காங்கிரஸோடு சேர்ந்து சதி செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பது. இதற்குத் தகுந்த சாட்சியங்கள், ரிகார்டுகள் இருக்கின்றன. ஜுடிஷியல் என்குயரி வைத்தால் நிச்சயமாக இவைகளை நிரூபிக்கமுடியும் என்று இச்சபையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

21-ந் தேதி கலவரம் முடிந்துவிட்டது என்று சொல்கிறார்கள். நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அதற்குப் பிறகு பார்வார்டு கட்சி மீது போலீஸ் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. துரைராஜ் தேவர் என்ற ஜில்லா போர்டு அங்கத்தினரை 12-ந் தேதி கைது செய்து கமுதிக்கு அழைத்துச் சென்று ஒரு சிறிய கௌபீனத்தை கட்டச் சொல்லி போலீஸ்காரர்கள் அங்குள்ள நாடார் வசிக்கும் தெருவிலும் மற்ற தெருக்களிலும், காலிலும் கையிலும் விலங்கைப் பூட்டி இரண்டு மணி நேரம் ஊர்வலம் நடத்தி, பிறகு ஐந்து ஆறு போலீஸ்காரர்கள் தடியடிப்பிரயோகம் செய்தார்கள். அஹிம்சா ராஜ்யத்திலே, காங்கிரஸ் ராஜ்யத்திலே, பொருப்பு வாய்ந்த ஜில்லா போர்டு அங்கத்தினர் பட்டப்பகலிலே அவருக்கு வேண்டாதவர்கள் வசிக்கும் தெருக்களிலே இந்த முறையிலே அவமானப் படுத்தப்பட்டிருக்கிறார். இதுதவிர எங்கள் ஊழியர்கள் பூராவும் அங்கங்கே அவமானப்படுத்தப் பட்டு இருக்கிறார்கள், அநீதி செய்யப்பட்டிருக்கிறார்கள்



அடக்குமுறைக்கு ஆளாகி இருக்கிறார்கள். கலவரத்தில் சம்பந்தப்படாத ஆறு கிராமங்களில் பார்வார்டு பிளாக்கைச் சேர்ந்த கிராமங்களில் போலீசார் சென்று செய்யாத அடக்குமுறை செய்திருக்கிறார்கள். ஒரு கிராமத்தில் மட்டிலும் 75 வீடுகளில் 60 வீடுகளின் ஓடுகள் நொருக்கப்பட்டிருக்கின்றன. வீடுகளுக்குள் நுழைந்து பண்டம் பாத்திரங்கள் முதலியவற்றை கடப்பாரையால் நொருக்கி இருக்கிறார்கள். நவதான்யங்கள், அரிசி, நெல் இவற்றை ஒன்றாகச் சேர்த்து வைத்து கிரசினையில் ஊற்றிகிர்கள், அவைகளைச் சாப்பிடமுடியாமல் செய்வதற்காக சேலைகள், வேஷ்டிகள் பூராவும் கொண்டுவரப்பட்டு அருவாமணையில் வைத்து இரண்டு இரண்டு அடியாக அறுத்து இருக்கிறார்கள். இவைகளை கனம் தத்தாரும் கனம் கக்கனும் கண்கூடாக பார்த்தார்கள். எங்கள் தலைவர் தேவர் படத்தை ஒரு வீட்டிலிருந்து எடுத்து இன்ஸ்பெக்டர் ஜான்சன் என்பவர் காலில் போட்டு மிதித்து ஒடித்து, நெருப்பில்போட்டு கொளுத்தி இருக்கிறார் என்று அந்த ஊர் மக்கள் சொல்கிறார்கள். இந்தமாதிரியான அடக்குமுறை மகத்தான அலங்கோலம் அந்தப் பகுதி பூராவும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த மாதிரியான படுகொலை செய்த, அடக்குமுறை செய்த மந்திரி சபை நிர்வாகத்தில் இருப்பதற்கு கொஞ்சம் கூடத் தகுதி இல்லை என்று சொல்ல எங்களுக்கு உரிமை இல்லையா? ஆளும் கட்சியினர் மெஜாரிட்டியாக இருக்கலாம். ஆனால் நேற்றும் இன்றும் சொல்லப்பட்ட விஷயங்களை ஆர அமர யோசனை செய்து பார்க்கவேண்டும். காங்கிரஸ் கட்சி அங்கத்தினருக்கு உரிமை அளித்தால் எங்கள் தீர்மானம் நிறைவேறும் என்பது நிச்சயம். ஆனால் அந்த உரிமை கொடுக்கமாட்டார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் ஒன்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் நீதி மன்ற விசாரணையை மறுத்தால் மக்கள் சக்தி உங்களை இலேசில் விடாது. மக்கள் சக்தியை உங்களால் எதிர்க்க முடியாது. அந்தச் சக்தியை அறிய மந்திரி சபை ராஜீநாமா செய்யட்டும். இல்லாவிட்டால் நாம் எல்லோரும் ராஜீனமா செய்வோம். மீண்டும் மக்கள் முன் செல்வோம். மீண்டும் உங்களுக்கு அதிகாரம் கொடுத்தால் நீங்கள் ஆளுங்கள். இல்லையானால் அதிகாரம் கொடுக்கப்பட்ட மக்கள் ஆளட்டும். ஆகவே, 16 பேர்களை, ஒருவர் அல்ல, இருவர் அல்ல, 16 பேர்களை படுகொலை செய்த மந்திரி சபை மீதும், முக்கியமாக முதல் அமைச்சர் மீதும், தூண்டிவிட்ட போலீஸ் அமைச்சர் மீதும் குற்றம் சாட்டுகிறோம். 16 கொலைக்கும் பொறுப்பாளிகள் போலீஸ்காரர்களே தவிர ஹரிஜனமக்களோ தேவர் மக்களோ யாருமே பொறுப்பாளி அல்ல என்று பகிரங்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

அந்த வகையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

SRI K. R. NALLASIVAM: உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் ராமநாதபுரம் ஜில்லாவில் இந்தமாதிரி அரசியல் கொலை நடந்து இருக்கிறது என்பதைப் பற்றி கனம் சசிவர்ண தேவர் விஸ்தாரமாகச் சொல்லிவிட்டார்கள். மேற்கொண்டு அதைப்பற்றி நான் நேரடியாக சம்பந்தப்படாவிட்டாலும், சுமார் நான்கு நாட்கள் மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களிலே நேரடியாக நான் சுற்றிப் பார்த்தேன், என்ற காரணத்தால் பேசுகிறேன். அங்கு இருக்கக்கூடிய மக்களிடையே உள்ள உணர்ச்சி, அரசியல் வாதிகளிடையே ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பு இவைகளைச் சர்க்கார் மட்டும் அல்ல நாட்டின் மீது பக்தி கொண்ட எல்லோருமே கருத்தில் கொண்டு ஆலோசனை செய்து இதற்கு நல்ல வழி காணவேண்டும். நான் விசாரித்த இடத்தில் எல்லாம் ஒரு முக்கிய விஷயம் தெரியவந்தது. இது தேவர் ஹரிஜனங்கள் சண்டைமட்டும் அல்ல. தேவர், நாடார், ஹரிஜனங்கள், ஆகிய மூன்று ஜாதிப் பேர்களும் இந்த அரசியல் விளையாட்டிலே அங்கம் பெற்றிருக்கிறார்கள் என்று என்னிடத்திலே பொருப்பானவர்கள் சொன்னார்கள். இந்தச் சம்பவங்களை கோர்த்துப் பார்த்தால் கூட அப்படித்தான் தெரிகிறது. ராமநாதபுரம், மதுரை பொறுத்தவரையிலும், தேச பக்தர்கள் நீண்ட காலமாகவே நிறைந்த ஜில்லாக்கள். 1942 இயக்கத்தில் இந்த ஜில்லாவிலிருந்து பங்கெடுத்துக்கொள்வார்கள்,

[Sri K. R. Nallasivam] [29th October 1957

தமிழ் நாட்டிலேயே முதன்மையாக விளங்கியவர்கள் என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால் அந்த ஜில்லாக்களில் இன்றைக்கு எந்தக் கட்சியினராக இருந்தாலும் சரி, காங்கிரஸோ, ஸோசலிஸ்டோ, கம்யூனிஸ்டோ, திராவிட முன்னேற்றக்கழகமோ, அரசியல் பேசுவது என்பது முடியாத காரியம். அரசியல் வாதிகள் தங்கள் கருத்துக்களைச் சொல்லக் கூட அஞ்சவேண்டிய நிலைமை இருக்கிறது. பாராளுமன்ற அங்கத்தினர் ஸ்ரீ கே. டி. கே. தங்கமணி அவர்கள் தத்தார் அவர்களுடன் சென்று திரும்பிவரும்பொழுது அவர் ஜாதிக்காரர்களே அவரைக் குறுக்கிட்டு அவமானப்படுத்தியதாகத் தெரிந்தது. இன்றைக்கு பூதாகாரமான ஒரு மோசமான நிலைமை உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. தமிழ் நாடு பூராவும் தங்களை அறியாமலேயே மக்கள் தூண்டிவிடப்பட்டு இந்த நிலைமை பரவாமல் இருக்கவேண்டும். காந்திஜி, விநோபா பாவே முதல் சாதாரண ஊழியர்கள் வரையில் ஜாதி வெறியை நொறுக்குவதற்கு தங்களால் ஆனவரை ஓரளவுக்கு அவரவர் சக்திக்குத் தகுந்தவாறு காரியங்கள் செய்திருக்கிறோம். அதைச் சிந்தித்துப் பார்க்காமல் செய்த ஒரு தவறின் காரணமாக இன்றைக்கு மீண்டும் அரசாங்கம் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குச் சட்டபூர்வமாகக் கூட ஒடுக்கமுடியாத அளவுக்கு ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக இந்த உணர்ச்சியை யாரும் தவிர்க்கமுடியாது. இங்கு உட்கார்ந்துகொண்டிருக்கும் அங்கத்தினர்களுக்கெல்லாம் கூட உள்ளூர இது புகைந்துகொண்டுதான் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

ஒருவிஷயத்தை அங்கே பார்த்தேன். கோவை, சேலம், திருச்சி ஆகிய ஜில்லாக்களில் ஹரிஜனங்கள் எந்த அளவுக்குத் தொந்தரவுக்கு உள்ளாகின்றார்களோ, ஜாதி வெறி எந்த அளவிற்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு ராமநாதபுரம் ஜில்லாவில் இல்லை என்பதை பல இடங்களில் நான் நேரில் பார்த்தேன். இங்கே ஹரிஜனங்கள் மூன்று வகை உண்டு. பச்சையாக அவர்கள் பெயர்களைச் சொல்லுகிறேன். அவர்கள் பள்ளர், பறையர், செக்கிலியர் என்பவர்கள். கோவை, சேலம் பிராந்தியங்களில் ஆறு பர்லாங், ஒரு மைல் தூரத்தில் அவர்களுக்கு ஒரு ஊர் இருக்கும். ஊர்களுக்குப் பெயரே இருக்காது. வேஷ்டி கட்டக்கூடாது, செருப்பு போட்டுக்கொள்ளக்கூடாது என்ற நிர்ப்பந்தங்களும் இருக்கும். ஆனால் ராமநாதபுரத்தில் இம்மாதிரி பரவலாக இல்லை. குறிப்பாக சில இடங்களில் இன்னும் இருக்கின்றன.

* **SRI M. R. KANDASWAMI MUDALIAR :** On a point of order. நமது நண்பர் கூறுகிறபடி இப்பொழுது ராமநாதபுரம் ஜில்லாவில் நடந்த ஜாதி வெறி அளவுக்கு ஹரிஜனங்கள் தாழ்த்தப்பட்டோ, ஒடுக்கப்பட்டோ, நடத்தக்கூடிய நிலைமையில் சேலம் ஜில்லாவில் எந் இடமும் இல்லை. அப்படியிருந்தால் அதைக் குறிப்பிட்டு கனம் அங்கத்தினர் சொல்ல வேண்டும்.

**DEPUTY SPEAKER :** It is not a point of order.

**SRI K. R. NALLASIVAM :** சொல்லமுடியும். பார்க்கப்போனால் எங்கள் ஜில்லாவிலும் சரி, உங்கள் ஜில்லாவிலும் சரி ஒரே ஜாதியினருக்குள்ளேயே சில இடங்களில் வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் சட்டை போட்டுக்கொண்டு அந்த ஆட்களுக்கு முன் போகமுடியாது. அது மாத்திரமல்ல. இடுப்பு எவ்வளவு வளையுமோ அவ்வளவு வளைத்துக்கொண்டு கும்பிடு போட்டாகவேண்டும். ஆடு மேய்க்கும் பையன் வரையில் கும்பிடு போட்டாகவேண்டும்.

***SRI K. S. SUBRAMANIAM GOUNDER:** சில இடங்களில் இம்மாதிரி கஷ்டங்கள் இருப்பதாக கனம் அங்கத்தினர் சொல்லுகிறார். அப்படியானால் சில கிராமங்களைக் குறிப்பிட்டுச் சொன்னால் நாங்கள் தெரிந்து கொள்ளலாம்.

**SRI N. K. PALANISAMI :** இம்மாதிரி ஒரு அங்கத்தினர் உண்மையைச் சொல்லும்பொழுது, வேண்டுமென்றே அவரைத் தடுப்பதற்காக இம்மாதிரி குறுக்கிடுகிறார்கள். நானும் இரண்டு நாட்களாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

**DEPUTY SPEAKER :** It is not a point of order.



29th October 1957]

**SRI K. R. NALLASIVAM :** எந்த அங்கத்தினர்களுக்குச சந்தேகம் இருக்கிறதோ அவர்கள் என்னோடு ஐந்து அல்லது பத்து நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்தால் அவர்களை அழைத்துக்கொண்டு போய் நேரில் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இம்மாதிரி நிலை இருப்பதாக அரசியலுக்காக சொல்லவில்லை. நேரில் கண்ட உண்மையை அப்படியே சொல்லுகிறேன். ராமநாதபுரம் ஜில்லாவிலேயும் மற்ற ஜில்லாவிலும் ஹரிஜன வீடுகள் ஜாதி ஹிந்துக்கள் வீடுகளோடு ஒட்டிக்கொண்டிருந்தால் நான் அல்ல, கந்த சுவாமி அல்ல மற்ற யாராலும் உண்மையிலேயே தாக்குப் பிடிக்க முடியாது. அரசாங்கமே தாக்கு பிடிக்க முடியாது. அந்த அளவுக்கு பல சங்கடங்கள் இருக்கின்றன. அதை ஒடுக்குவதற்காக எங்களைப்போன்றவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறவேண்டியிருக்கிறது. சர்க்கார் சட்டங்கள் ஓரளவுக்குத்தான் அங்கே செல்லுபடியாகின்றன. நான் என்ன சொல்லுகிறேன் என்றால் ராமநாதபுரத்தில் அந்த அளவுக்கு கிடையாது. அதிகமாக அங்கே ஜாதி வித்தியாசமில்லாமல் இருக்கிறது. வேறு பிராந்தியங்களில். . . .

***SRI S. NAGARAJA MONIGAR :** அங்கத்தினர் தான் பார்த்ததை வைத்துக்கொண்டு மற்ற ஜில்லாக்களில் எப்படி இருக்கவேண்டுமென்பதை ஊகித்துப் பேசுகிறார். கிருஷ்ணகிரி டவுனில் ஹரிஜனங்களும் மற்றவர்களும் சேர்ந்துதான் வாசம் செய்கிறார்கள்.

**DEPUTY SPEAKER:** It is not a point of order and let the hon. Member Sri Nallasivam resume his speech. I do not want hon. Members to interrupt him.

**SRI K. R. NALLASIVAM :** இது போல வேறு ஜில்லாக்களிலே கிடையாது. குறிப்பிட்ட கட்சிக்காக நான் இதைச் சொல்லவில்லை. அங்கு பார்த்ததை நான் சொல்லுகிறேன். அங்கு இருக்கக்கூடிய ஹரிஜனங்களைப் பற்றி சர்க்கார் உண்மையிலேயே என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதை எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டதில் சந்தேகம் இருக்கிறது என்று நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். எங்கள் பிராந்தியத்தில் 1,000 ஹரிஜனங்கள் வீடுகள் இல்லாமல் இருக்கிறார்கள் என்று ஐந்து ஆண்டுகளாகக் கூப்பாடு போட்டுக் கொண்டே இருக்கிறேன். பல அங்கத்தினர்களும் இதைப்பற்றி சொல்லி இருக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அரசாங்கம் தங்கள் கடமையைச் செய்யத் தவறிவிட்டது. அந்தக் காரணத்தினால்தான் அரசியல் கோஷம் எழுப்பப்படுகிறது என்று அரசாங்கம் காரணம் காட்டுகிறது என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன்.

அடுத்தபடியாக விநோபாஜி அவர்கள் இன்றைக்கு காந்திய அளவிலே நாடு பூராவிலும் மதிப்பிற்குரிய ஒரு மாபெரும் தலைவராக இருக்கிறார். அவர் ஜாதிக் கலவரம் என்பதைவிட, இதற்கு அரசியல்தான் காரணம் என்று சொல்லுகிறார்கள். இதற்கு நீங்கள் என்ன பதில் சொல்லுகிறீர்கள்? நாடு பூராவிலும் மதிப்பிற்குரிய ஸ்ரீ விநோபாஜி அவர்கள் இம்மாதிரி சொல்லுகிறார். இதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். இதற்கு பதில் சொல்லுவது சிரமம்தான்.

கீழ்த்தூவல் கிராமத்திலே ஒரு வேடிக்கை பார்த்தேன். இந்த விசாரணையிலே கல்லைத்தான் ஆயுதமாக உபயோகப்படுத்தினார்கள் என்று சொல்லப்படுகிறது. அது சம்பந்தமான போட்டோ படங்கள் என்னிடம் இருக்கின்றன. அந்தப் பிராந்தியத்தில் ஒரு செங்கல் சூளை இருக்கிறது. வேறு ஜில்லாக்களிலே கல் சுலபமாகக் கிடைக்கும். ஆனால் அங்கு கல் வேண்டுமென்றால் பரமக்குடி-முதுகளத்தூர் ரோடுக்கு வந்துதான் பொறுக்கிக்கொண்டு வரவேண்டும். கல் தான் சுலபமான ஆயுதம் சாதாரண சண்டைகளிலே. அங்கு கல் கிடைக்காது. அந்த செங்கல் சூளையைப் பார்த்தேன். போலீஸ் அங்கே தப்பான முறையிலே ஐந்து பேர்களைச் சுட்டுக் கொன்றார்கள் என்று ஒரு பெரிய குற்றச்சாட்டு மாகாணம் பூராவும் எழுப்பப்பட்டிருக்கிறது. உயர்தர உத்தியோகஸ்தர் அங்கு ஒரு

விசாரணை நடத்தினார். அந்தச் செங்கல் சூளை கலைக்கப்படவே இல்லை. சிவப்பு அப்படியே இருந்தது. ஒரு பகுதியிலே ஒரு சிறிய ஓட்டைதான் இருந்தது. கிட்டத்தட்ட 1,000 பேர்கள் இருந்தபொழுது 50 கல்கூட எடுக்க படவேண்டாமா? அதுகூட இல்லை. 10, 15 இடங்களிலாவது செங்கல் சூளை பிரிக்கப்பட்டிருக்கவேண்டாமா? அதுமாத்திரமல்ல. அந்த ஊரிலே இருப்பவர்கள் நகரப்புரத்திலே இருப்பவர்கள் போல் படித்தவர்கள் அல்ல. நாகரீகம் தெரிந்தவர்கள் அல்ல. உண்மையை மறைத்து அழகாகக் கோர்வையாக ஜோடித்து அவர்களால் சொல்ல முடியாது. அவர்கள் கிராம மக்கள். ஒன்றும் தெரியாத அப்பாவிகள். தாங்கள் அனுபவிக்கும் அசௌகரியங்களைக் கூட எடுத்துச் சொல்லத் தெரியாத ஜனங்கள். ஏழு வயதுச் சிறுவனும், 80 வயதுக் கிழவியும், ஆடு மேய்க்கும் பையனும் உண்மை இல்லாமலிருந்தால் எப்படி ஒரே மாதிரியாகச் சொல்ல முடியும்? நிச்சயமாக உண்மை இல்லாமல் இருக்கவே முடியாது. வக்கீல்கள் சொல்லிக்கொடுத்திருந்தால் கூட அவர்களால் சரியாக அதைத் திருப்பிச் சொல்ல முடியாது. ஆகையால் எந்த அடிப்படையிலே கீழத்தூவல் துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானது என்று சொல்ல முடியும்? ராமநாதபுரத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நீதி விசாரணை நடத்தவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் நான் சர்க்காரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்தபொழுது அதைக் குறிப்பிட்டிருந்தேன். இந்தக் குற்றச்சாட்டு தமிழ் நாடு பூராவும் எழுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, சர்க்கார் தங்களுக்கு அதிகப்படியான அங்கத்தினர்கள் இருக்கிறார்கள், ஐந்து ஆண்டுகளுக்கு அதிகாரம் இருக்கிறது என்று அலட்சியமாக இராமல், உங்கள் கை ரத்தக் கறை படிந்தது அல்ல, நியாயத்துக்கு விரோதமல்ல என்ற துணிவு இருக்குமானால், நிச்சயமாக மந்திரி சபை ராஜிநாமாச் செய்து விட்டு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் நிச்சயமாக "உண்மையில் தவறு கிடையாது. தவறான முறையில் ஆதிக்கிய நோக்கத்துடன் யாரும் சுட்டுக் கொல்லப்படவில்லை" என்பதை மாகாண மக்கள் நம்புவார்கள். அதைச் செய்யாமல் எத்தனைவாதங்கள்தான் சிறப்பாகச் செய்தாலும் நாட்டு மக்கள் அதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

அது ஒருபுறம் இருக்க ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில் திரு. காமராஜ நாடார் அவர்கள் கள்ளநோட்டுக்களை அச்சிட்டு விநியோகிப்பதற்கு உடந்தையாக உள்ளார்கள் எனக் குறிப்பிட்டதாக எனக்குச் செய்தி வந்தது. அன்றைக்கு நான் ஊரில் தான் இருந்தேன். திட்டவட்டமாக அவர் ஒரு குற்றச்சாட்டை இப்படிச் சுமத்தினார்கள் என்பதை நான் அறிந்தேன். நாட்டிலும் இதைப்பற்றி அநேகம் பேச்சுகள். குறிப்பாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வந்திருக்கிறது. விலைவாசிகளும் உயர்ந்துகொண்டே போகிறது. சர்க்கார் ஒரு பங்கு அதாவது 500 கோடி ரூபாய்க்கு நோட்டுகளை வெளியிட்டார்கள் என்றால் அதைப்போலவே வெளியில் இருப்பவர்கள் இன்னொரு மடங்கு 500 கோடி ரூபாய் கள்ள நோட்டுக்களை அச்சிட்டார்கள் என்று நான் சந்தேகப்படுகிறேன். அதனால்தான் இத்தனை நெருக்கடி" என நாட்டில் பரபரப்பான சந்தேகம் எழும்பியிருக்கிறது.

**THE HON. SRI K. KAMARAJ NADAR**: நான் கள்ள நோட்டுக்களை அச்சிட்டு விநியோகிக்கிறேன் என்பதை நீங்கள் நம்புகிறீர்களா? நான் அச்சிட்டு விநியோகிக்க உடந்தையாக இருக்கிறேன் என்பது போல பேச்சு இருக்கிறதே, அதை நீங்கள் நம்புகிறீர்களா?

**SRI K. R. NALLASIVAM**: உண்மையிலேயே அவர் அப்படிப்பட்ட குற்றச் சாட்டைச் சுமத்தினார் என்றுதான் கேள்விப்பட்டேன். நான் அப்போதும் நம்பவில்லை. செல்வாக்குள்ள பத்திரிகைகளில் பத்தாயிரம் இருபதாயிரம் பிரசுரமாகிற பத்திரிகைகளில் இதைப்பற்றி எழுதியிருந்தார்கள். ஆகவே அது பொய் என்பதை நிரூபிப்பதற்காகவாவது என் அப்போதே முதல் மந்திரி அவர்கள் முத்துராமலிங்கத் தேவர் பேரில் வழக்குத் தொடரவில்லை என்றுதான் கேட்டேன்.

**SRI A. A. RASHED**: Sir, according to Parliamentary Procedure . . . .





**DEPUTY SPEAKER**. Unless the Chair allows, the hon. Member cannot speak. That is the parliamentary procedure. I do not want him to speak without being called.

**SRI K. R. NALLASIVAM**: உண்மையில் அந்தக் குற்றச்சாட்டுக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்றால் நாட்டு மக்கள் உண்மையை அறிந்துகொள்ள அந்தக் குற்றச்சாட்டை சுமத்திய ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் பேரில் வழக்கு நடத்தியிருக்கவேண்டும். அவர் என்ன சாதாரணமானவரா? ஒரு பொறுப்புள்ள அங்கத்தினர்—பாராளும் மன்ற உறுப்பினர்.

இதற்குப் பின்னால் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. நான் அந்தப் பிரதேசத்திற்கே நேரில் சென்று விசாரித்தேன். அதற்கு முன்பே ஜூலை மாதம் 11-ந் தேதி என்று நினைக்கிறேன். இங்கு இருக்கக்கூடிய காங்கிரஸ் அங்கத்தினரே ராமநாதபுரம் ஜில்லாவில் கவலைக்கிடமான சூழ்நிலை உருவாகி வருவதாகக் குறிப்பிட்டார். அதன்பேரில் சர்க்கார் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகஸ்டு மாதம் 2-ந் தேதி என்று நினைக்கிறேன். ஐந்தாறு அங்கத்தினர்கள் அங்குள்ள நிலைமையை விளக்கி கையெழுத்திட்டு சர்க்காருக்குக் கொடுத்தார்கள். அதன் பேரிலும் தக்க பாதுகாப்பு எடுத்துக் கொள்ளவில்லை. நாடார்களை எல்லாம் ஹரிஜனங்கள் மேல் துவேஷத்தைக் காட்ட இவர்களே ஏற்பாடு செய்தார்கள் என்றும், அதனால்தான் இவர்கள் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறார்கள் என்கிற பேச்சு அடிபட்டது. "மிக அபாயமான நிலைமை இருக்கிறது. அவசரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்" என இந்த ஐந்தாறு எம்.எல்.ஏ.-க்கள் சர்க்காரிடம் விண்ணப்பத்திக் கொண்டும் இவர்கள் சும்மா இருந்துவிட்டார்கள். அப்புறம் 11, 12-ந் தேதிகளில் படிப்படியாக நடந்த சம்பவங்கள் எல்லாம் நமக்குத் தெரியும். இதைப் பற்றி நானே அங்கு சென்று விசாரித்தேன். இறந்துபோன இமானுவேல் என்பவர் ஹரிஜன ஊழியரா? அல்லது தலைவரா, அவரிடம் அங்குள்ள ஹரிஜனங்கள் எல்லோருக்கும் பூர்ண விசுவாசம் உண்டா என்பதை எல்லாம் அறிந்தேன். நான் தெரிந்து கொண்டமட்டும் அப்படி அவர் ஹரிஜனங்களின் விசுவாசத்திற்கு எல்லாம் பாத்திரமானவர் என்று சொல்ல முடியாது. ஏதோ இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்புதான் அந்தப் பிரதேசத்திற்கே வந்தவராம். சில சில காரியங்கள் செய்து வந்திருக்கிறவர் என்று சொன்னார்கள்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: கனம் அங்கத்தினர் விசாரித்ததில் இமானுவேல் என்பவர் கொலை செய்யப்படவேண்டியவர் தான் என யாராவது சொன்னார்களா? கொலை செய்யப்படவேண்டியவர் என இவர் அறிந்தாரா என்று கேட்கிறேன்.

**SRI K. R. NALLASIVAM**: கொலை செய்யப்பட்டதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக நான்கைந்து காரணங்கள் அவர்கள் சொன்னார்கள். இப்போது அந்த கேஸ் கோர்ட்டில் இருப்பதால் அதைப் பற்றி நான் ஒன்றும் நிச்சயமாக இங்கே சொல்லப்போவதில்லை. ("அநேகம் குரல்கள்—சொல்லலாம், சொல்லலாம், சொல்லுங்கள்.")

Reference was made to the reports in the Press. I am constrained to say that in a matter like this, the Press should not hurry up with their reports one way or the other. I want to point out that the earliest report was the report in the 'Mail' of the 15th September. That report simply says that Police opened fire in Kilathooval and that five persons were shot. Then there were subsequent developments, inquiry report and comments on the report. Of course, the Press is entitled to comment, but it must be fair comment. That is what is required in a matter like this. I do not charge the Press with anything wrong. But it would have been better not to give a handle to one party or the other. I do not say that the Press has been always against the Government. But there is one view that the Press has generally

[Sri R. Srinivasa Iyer] [29th October 1957]

been against the Government. Unfortunately, here we do not have a Government Press as we have in some other countries. In these disturbances in Ramanathapuram district, who is the aggressor and what is the offence? From what can you find out the aggressor? If 2,735 Harijan houses have been burnt and 107 Maravar houses have been burnt, 17 Harijans have been killed and eight Thevars have been killed, who is the aggressor? Maravars who are styled "Friends of Harijans" gathered together in a fury and went about setting fire to Harijan houses in village after village. One cannot escape this position by saying that this or that village is outside his constituency. Are the poor, harmless and illiterate Harijans, who are unable to earn their livelihood and are half-starved the aggressors with 2,735 of their houses being burnt? How many have been brutally cut and their dead bodies thrown into burning straw heaps? Is it to screen the offence? Is it to screen the person who committed the murder? Prayers were made to God here. I equally pray to God that those responsible for ill-treating the Harijans for decades will certainly be dealt with properly by God. I am constrained to state that this charge against the Government is baseless. The removal of the Police from two places where occurrences took place, is said to be with a motive. When is this suggested? Sri Rajaratnam goes on the 15th and he finds that there is a lull. He finds that there is peace. He comes to Madras and says that there is peace. He transfers one set of Police officers to some other place. The truth is the other way about. The Maravars chose a place where there was no Police force and where they would not be attacked, so that they might easily attack and annihilate the Harijans, even if they were within the four walls of a church.

SRI T. L. SASIVARNA THEVAR : On a point of order, Sir. அந்த இரண்டு கிராமத்திலும், மறவர்கள் தாக்கவில்லை. போலீசாரை வாபஸ் வாங்கிய கிராமங்களில் மறவர்கள் தாக்கவில்லை யென்று கூறிக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The hon. Member is only giving information and not raising any point or order.

* SRI R. SRINIVASA IYER : The seconder of the motion referred to several other places and said that very little offences took place in those places and nobody could be responsible for them. I am not here to answer all these. People who know the locality will answer them in their turn. One important point had not been referred to, and I believe it has been given up. Members who moved the motion of no-confidence said that the report on the Inspector-General of Police should also be discussed. The Hon. Speaker said that this also could be discussed. The report, Sir, was not under the provisions of Act XXXVII of 1850. It was a fact-finding report. It is the Inspector-General of Police that wanted it. There is no written verified and signed complaint as required under the Act 37 of 1850. If there is a written complaint verified with documents and evidence, it should have been presented by the sponsor of the charge against the Inspector-General of Police.



29th October 1957] [Sri R. Srinivasa Iyer]

He did not do so. He did not take part in the enquiry for obvious reasons. If only he had chalked out his evidence and given it as provided under Act 37 of 1850, a different enquiry would have been made and a different report would have been submitted. Therefore, there cannot be any charge against either the Government or the officer who made the report or the Inspector-General of Police. I am referring to this in passing, because no reference has already been made to it, and I do not want any reference to be made to it by anyone else afterwards.

Sir, I oppose this resolution of no-confidence in the ministry and particularly against the Chief Minister or the Home Minister.

MR. SPEAKER : Before I call upon the next hon. Member, I want to make two observations. I find when one hon. Member is speaking, other hon. Members are moving between the Speaker and the Chair, which is against the common practice. It distracts the attention of the Speaker from what the hon. Member is saying. This is not supposed to be done. I am sure hon. Members know this. Therefore, neither a peon nor an officer nor any hon. Member should cross between the Member speaking and the Chair.

The second point is this. I heard the word 'shame' being used in the course of the discussion. In the British Parliament, which is supposed to be the Mother of all Parliaments, the word 'shame' is not supposed to be uttered in discussions. Sri P. S. Chinnadurai will now speak.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே 12-10 p.m.
இந்த சபை முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லா தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். அந்த தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்ற காரணத்தினாலே, இதற்கு முன்னால் இந்த மந்திரி சபை மீது நம்பிக்கை வைத்திருந்தேன் என்றோ, இந்த பிரேரணை ஒருகால் தோற்றால் அதன் பின்னர் நம்பிக்கை வைப்பேன் என்றோ அர்த்தம் இல்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : உங்கள் நம்பிக்கையை வைத்து நாங்கள் இங்கே உட்கார்ந்து கொண்டு இருக்கவில்லை. நாங்கள் மக்கள் நம்பிக்கையைப் பெற்று இங்கே உட்கார்ந்திருக்கிறோம். (குறுக்கீடு) உங்கள் பேரில் மக்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது உங்கள் எண்ணிக்கையிலிருந்து தெரியும்.

SRI P. S. CHINNADURAI : கனம் மந்திரி இங்கே இருக்கும் எண்ணிக்கையை எடுத்துக் கூறுகிறார்கள். பணிவோடு, ஆனால் உரிய பொறுப்போடு நான் கனம் சர்க்கார் கட்சி தலைவருக்கு ஒன்று கூறுவேன். என்னுடைய தொகுதியை பொருத்தவரையிலே, என்னுடைய சகா, கனம் மாரிமுத்து அவர்கள் தொகுதி பொருத்த வரையிலே இங்கே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் கட்சியினர் பேரில் மக்கள் நம்பிக்கை வைக்கவில்லை. ஆட்சியாளர்களுடைய கட்சியை சேர்ந்த அபேக்ஷகர்கள் இரண்டு பேரும் பத்தாயிரம் வோட்டு வித்யாசத்தில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள், என்பதை நினைவில் வைத்துக்கொண்டு அமைச்சர் பேசினால் நல்லது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இரண்டல்ல, 50 ஸ்தானங்களில் தோற்று இருக்கிறோம். ஆனால் 50 பெரிதா அல்லது 150 பெரிதா என்பதை அங்கத்தினர் கணக்குப் போட்டுப் பார்க்கவேண்டும். (சிரிப்பு)

**SRI P. S. CHINNADURAI** : துரியோதனர்கள் நூற்றவர்கள் ஆக இருந்தனர். அதற்காக அவர்கள் ரொம்பவும் பெரியவர்கள் என்று பாரதம் கூறவில்லை.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : பஞ்சபாண்டவர்கள் போல் ஐந்து பேர்கள் கூட நீங்கள் வரவில்லை என்பதுதான் என்வருத்தம்.

**SRI P. S. CHINNADURAI** : கனம் சபாநாயகர் அவர்களே, எனது பேச்சை நடை செய்வதற்காகவே இம்மாதிரி சூழ்ச்சி செய்கிறார்களோ என்று நினைக்கிறேன். (சிரிப்பு)

ஏற்கனவே எங்கள் கட்சியின் அவநம்பிக்கைக்கு ஆளும் கட்சி ஆளாகி யுள்ளது. இப்போது மேலும் அதிக அவநம்பிக்கைக்கு ஆளாகியுள்ளதால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

கனம் அமைச்சருடைய அறிக்கைப்படி 2,735 ஹரிஜன வீடுகளும் 107 தேவர் வீடுகளும், தீ வைத்து எரிக்கப்பட்டன. 17 ஹரிஜனங்களும், 7 தேவர்களும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். "இந்த ராஜ்யம் காங்கிரஸ் ஆட்சியிலே இருக்கிறது. பத்திரமாக இருக்கிறது. இங்கே வாழும் மக்களுக்கு ஆபத்தும், அபாயமும் இல்லை. அமைதியான வாழ்வும் உத்தரவாதம் செய்து இருக்கிறது" என்று அமைச்சர் அவர்கள் தம்பட்டம் அடித்தார்கள்.

**SRI S. NAGARAJA MANIGAR** : கனம் மெம்பர் "தம்பட்டம் அடித்தார் என்று சொல்வது சரியா ?

**MR. SPEAKER** : Is the hon. Member Sri Nagaraja Monigar raising a point of order? Why did the hon. Member interrupt the speech of Sri P. S. Chinnadurai? It is not correct. Either he must raise a point of order definitely or must not rise it.

பாயின்ட் ஆப் ஆடர் எழுப்பினால், உட்கார்ந்து கொண்டே சொல்லுவது சரியில்லை.

**SRI S. NAGARAJA MANIGAR** : கனம் அங்கத்தினர் "தம்பட்டம் அடிக்கிறார்கள்" என்று சொன்னார்களே, அது சரியா என்று கேட்கிறேன்.

**MR. SPEAKER** : All right. The hon. Member Sri Chinnadurai will continue.

12-15 p.m. **SRI P. S. CHINNADURAI** : சபையின் முன்னுள்ள இந்த அறிக்கையினால் இந்த ராஜ்யத்திலுள்ள மக்கள் எவ்வளவு பத்திரமில்லாத நிலைமையில் இருக்கிறார்கள் என்பது புலனாகிறது. 2,735 ஹரிஜன வீடுகளும், 107 தேவர் வீடுகளும் நாசமடைந்ததாக அரசாங்கக் கணக்கு கூறுகிறது. இந்த கணக்கிற்கு அதிகப்படியாக இருக்கக்கூடுமோ என்ற சந்தேகம் எனக்கு உண்டு. இருந்தாலும் கனம் மந்திரி அவர்களின் கணக்கையே சரி என்று வைத்துக்கொண்டாலும், எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சபை கவனிக்க வேண்டும். ஏதோ இது இரண்டு கட்சிப் பிரச்னை அல்ல. இரண்டு தனி நபர் பிரச்னை அல்ல. இரண்டு ஜாதிப் பிரச்னை அல்ல. இந்தச் சபையின் பிரச்னை. இந்தச் சபை இந்த ராஜ்யத்தை ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகையால், இது இந்தச் சபையின் பிரச்னை. இந்த நஷ்டத்திற்கு யார் பொறுப்பாளி ? ஜாதி பொறுப்பு, நபர் பொறுப்பு அல்லது கட்சிப் பொறுப்பு என்று சொல்லிக்கொண்டிருப்பதைக் காட்டிலும், அதை தூர ஒதுக்கிவைத்துவிட்டு, ராஜ்யத்தில் மக்களுடைய உயிர் உடைமைகளுக்கு பாதுகாப்பு இருக்கிறதா என்ற விஷயத்தை கவனிக்கவேண்டும் என்று இந்தச் சபையை கேட்டுக்கொள்கிறேன். நம்பிக்கையில்லா தீர்மானத்தில் நான் பேசுவதால் என் கட்சிக்கு இதைவிட அதிகமாக பலம் கிடைத்துவிடும் என்று நான் நம்பவில்லை. என் இதில் சபை கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கோருகிறேன் என்றால் இது ஒரு நீதி சம்பந்தப்பட்ட



பிரச்னை. இந்த மாகாணத்தின் ஒழுங்கு சம்பந்தப்பட்ட பிரச்னை. மக்கள் பத்திரமாக வாழ்வதற்கு வசதி இருக்கிறதா, உரிமை இருக்கிறதா, சூழ்நிலை இருக்கிறதா என்பதுதான் இப்பொழுது இருக்கிற பிரச்னை. இதற்கு ஆட்சி பொறுப்பு வகிக்கும் அமைச்சர்கள் என்ன சொல்லுகிறார்கள் ? ஏதோ யாரோ செய்துவிட்டார்கள் என்று சொல்லி தப்பித்துக்கொள்ள முடியாது. ஒரு ஊர் பூராவும் பத்து பேர்கள் தீ வைத்து கொளுத்திவிட்டால், அதற்கு அரசாங்கம் பொறுப்பு கிடையாதா ? அதனைத்தான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். யாருடைய வீடுகள் எறிந்தன என்பது முக்கியம் அல்ல. எத்தனை வீடுகள் எறிந்தன என்பதுதான் முக்கியம். எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பது முக்கியமல்ல. எத்தனை பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதுதான் முக்கியம். இந்த அடிப்படையான பிரச்னையின் பேரில் இந்த விவாதம் நடைபெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். பத்திரம் பாதுகாப்பு இல்லாததால் எவ்வளவு குழந்தைகள் கொல்லப்பட்டு தீயில் எறியப்பட்டார்கள் ? அந்தக் குழந்தைகள் மந்திரி கக்கன் அவர்களாகவோ அல்லது முத்துராமலிங்கத் தேவர் அவர்களாகவோ வரலாம்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : என் சின்னதுரை யாகக்கூட வரக்கூடும்.

**SRI P. S. CHINNADURAI** : மதிப்பிற்குரிய ஜவஹர்லால் நேருவாகக்கூட வரக்கூடும். அந்தக் குழந்தைகளுக்கு அந்த சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. அப்படி குழந்தைகள் கயவர்களால் கொல்லப்பட்டு தீயில் எறியப்பட்டதால், அதற்கு அரசாங்கம் பொறுப்பு இல்லையா என்று கேட்கிறேன். வீடுகள் கட்டிக்கொள்ளுவதற்கு வேண்டுமானால் நஷ்ட ஈடு கொடுத்துவிடலாம். மனித உயிரை எங்கிருந்து கொண்டுவரப் போகிறார்கள் ? இத்தகைய ஒரு சம்பவம் நேர்ந்தது குறித்து மக்களிடத்தில் மன்னிப்பு கோரும் அவசியத்தை மந்திரிகள் உணரவில்லை என்றால், அது பரிதாபிக்க வேண்டிய விஷயம் தான். இந்தக் கட்சி அந்தக் கட்சி என்பதற்காக இல்லை. ஒரு பகுதியிலே மக்கள் இம்மாதிரி கொலை செய்யப்படுகிறார்கள். உடமைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை சர்க்கார் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. பிறர் உதவியைக் கோருவோம் என்ற எண்ணம் அவர்களுக்கு தோன்றவில்லை. பிற கட்சியினர் உதவி செய்ய முன்வந்தால், சமாதானத்தை நிலைநிறுத்த முன்வந்தால், அவர்கள் சந்தர்ப்பவாதிகள், அக்கரைகொண்டவர்கள், சந்தர்ப்பத்தை பயன் படுத்திக்கொள்கிறவர்கள் என்று அலட்சியப்படுத்துகிறார்கள். உண்மையிலேயே இத்தகைய சம்பவம் கிழக்கு ராமனாதபுரத்தில் ஏற்பட்டவுடன் கனம் அமைச்சர்கள் என்ன செய்திருக்க வேண்டும் ? அரசாங்கத்தினுடைய நிலைமையை மீறி, கட்டுக்கு மீறி ஒரு நிலைமை ஏற்பட்டு இந்த ராஜ்ய போலீஸ் போதாமல் அன்னிய ராஜ்யத்திலிருந்துகூட போலீஸ் வரவழைக்கக்கூடிய ஒரு பயங்கரமான சூழ்நிலையிலே, ஒரு நெருக்கடியான நிலைமையிலே ராஜ்ய சர்க்கார் செய்யவேண்டிய ஒரு நியாயமான கடமை என்ன என்று நான் கேட்கிறேன் ? அன்னிய ராஜ்யத்திலிருந்து போலீஸ் வரவழைக்கிறார்கள். இந்த ராஜ்யத்தில் இருக்கக் கூடிய எதிர்க் கட்சியினரிடம் நம்பிக்கை இல்லை.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : எங்கள் பேரில்தான் உங்களுக்கு எப்பொழுதுமே நம்பிக்கையில்லையே ? எப்படி உங்களைக் கூப்பிடமுடியும் ?

**SRI P. S. CHINNADURAI** : மந்திரி சபையின் கொள்கையின் பேரில் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். அதே நேரத்தில் அமைதியை நிலை நாட்டுவதற்கு எப்பொழுதும் நாங்கள் உதவி செய்வதற்கு தயாராக இருக்கிறோம். எங்கள் உதவியை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. மறந்துவிட்டார்கள் தங்கள் பழைய காந்தீயக் கொள்கையையும் தேசீய பண்பாட்டையும். அதிகாரிகளின் கைப்பாவைகளாக ஆனபிறகு அவர்கள் என்ன செய்திருக்க முடியும் ? அன்னிய ராஜ்ஜியத்து போலீஸைத்தான் வரவழைத்திருக்க முடியும், வேறு ஒன்றும் செய்திருக்க முடியாது என்ற ஒரு முடிவுக்குத்தான் நான் வர விரும்புகிறேன்.

[Sri P. S. Chinnadurai] [29th October 1957

கீழத்தூவல் கிராமத்திலே போலீஸார் அக்கிரமமாக அங்குள்ள மக்களை சுட்டுக் கொன்றார்கள் என்ற குற்றச்சாட்டு இந்தச் சபை முன்னால் இருக்கிறது. ஸ்ரீ வெங்கடேசுவரன் அறிக்கையை ஆதாரமாகக் காட்டி போலீஸார் நியாயமாகத்தான் சுட்டார்கள் என்று இங்கே சொல்லப்படுகிறது. ஐ.ஸி.எஸ். அதிகாரிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் பேரில் அதிக நம்பிக்கை வைத்து அரசாங்கம் செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. "இதற்கு முன்னாலே நடந்த துப்பாக்கிப் பிரயோகங்கள் எல்லாம் இதே போல் ஐ.ஸி.எஸ். அதிகாரிகளைக் கொண்டுதான் விசாரணை நடத்தியிருக்கிறோம். ஆகையினாலே துப்பாக்கிப் பிரயோகம் பற்றி ஸ்ரீ வெங்கடேசுவரன் அறிக்கையே நீதி விசாரணைக்கு ஒப்பானது" என்று சொல்லுகிறார்கள். எப்படி அது நீதி விசாரணைக்கு ஒப்பானது என்று புரியவில்லை. நீதிபதியையும், நிர்வாக அதிகாரியாகிய ஐ.ஸி.எஸ். வெங்கடேசுவரனையும் ஒன்றாக இணைத்து கூறுகிறார்களோ? இவர்கள் சம அந்தஸ்து உடையவர்களாகக் கருதுகிறார்களா என்று புரியவில்லை. ஐ.ஸி.எஸ். அதிகாரிகளைப் பற்றி மக்கள் எவ்வாறு நினைக்கிறார்கள் என்பது பற்றி மதிப்பிற்குரிய ஜவஹர்லால் நேரு அவர்கள் "கிளிம்ப்ஸ் ஆப் வரல்டு ஹிஸ்டரி" என்ற புத்தகத்தில் மிக தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்களுக்கு படித்துக்காட்டுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அதே சமயத்தில் கனம் அங்கத்தினர் ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளை இது பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பது பற்றி சொன்னால் கொஞ்சம் நன்றாக இருக்கும்.

SRI P. S. CHINNADURAI: "We hear a great deal about this I.C.S. They have been a curious set of persons. They were efficient in some ways. They organized the Government, strengthened the British rule and incidentally profited greatly by it themselves. All the departments of Government which helped in consolidating British rule in collecting taxes were efficiently organized. Other departments were neglected. Not being appointed by, or responsible to, the people, the I.C.S. paid little attention to those other departments which concerned the people most. As was natural under the circumstances, they became arrogant and overbearing and contemtuous of public opinion . . ." அதிலே இன்னொரு இடத்திலே ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே சொல்லுகிறதை மேற்கோள் காட்டி சொல்லுகிறார். 'Its utter contempt of public opinion, its arrogance, pretensions to superior wisdom, its reckless disregard of the most cherished feelings of the people, mocking appeal to its sense of justice, its cool preference of service interests to those of the Government.'

இதைவிட அதிகமாக ஐ.ஸி.எஸ். அதிகாரிகளைப் பற்றிச் சொல்ல முடியாது என்று நான் நினைக்கிறேன். இத்தகைய ஐ.ஸி.எஸ். அதிகாரிகளை நம்பி, காந்தீயத்தைப் பின் பற்றுகிறோம் எனச் சொல்லிக் கொள்கிற நமது அமைச்சர்கள் நிற்கிறார்கள். இத்தகைய விசாரணை சரியானதா? நீதி மன்ற, விசாரணை அவசியமா என்பதைக் கவனிக்க வேண்டும். ஐ.ஸி.எஸ். அதிகாரிகளைப் பற்றி எங்கள் கட்சித் தலைவர் என்ன சொன்னார்கள் என்று சொல்கிறேன்,

இதே போலத்தான் அமைச்சர் என்ற ஸ்தானத்தில் ஏறிவிட்டால் அவர்களுக்கு எல்லாம் பழைய பிரிட்டிஷ் ஏகாதிபத்ய வாசனை புகுந்துவிடும் போலத் தோன்றுகிறது. பட்டம் தாணுப் பிள்ளை இத்தகைய நிர்வாக அதிகாரியைக் கொண்டு செய்யும் விசாரணை போதும் எனக் குறிப்பிட்டவுடனேயே தேசீய நிர்வாகக் கமிட்டி குறுக்கிட்டு அப்படிப்பட்ட நிர்வாக அதிகாரியைக் கொண்ட விசாரணை போதாது, நீதிபதியைக் கொண்டே விசாரணை நடத்தப்படவேண்டும் என உத்திரவிட்டது.



29th October 1957]

SRI K. VINAYAKAM: A very honest politician.

SRI P. S. CHINNADURAI: நீதிபதியை கொண்டே விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். இன்றைய தினம் சோஷலிஸ்டுக் கட்சி தேசீய நிர்வாகக் கமிட்டி செய்தது போல, காங்கிரஸ் தேசீய நிர்வாகக் கமிட்டி செய்திருக்குமேயானால் இங்கு இருக்கக்கூடிய அமைச்சர்கள் தலை குனிந்து இருப்பார்கள். அதைச் செய்ய அது தவறிவிட்டதன் காரணமாக தலை நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ராமநாதபுரம் ஜில்லாவில் இந்தக் கலவரம் நடந்து கொண்டிருந்த காலத்தில் அமைச்சர் அவர்கள் எங்கே போய் இருந்தார்கள்? போலீஸ் சுட்டுக் கொண்டிருக்கிறது. வீடுகள் எரிந்து கொண்டிருக்கின்றன. இங்கே கார்ப்பரேஷனில் அஹிம்சையைப் பற்றி ஒரு அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார். இன்னொரு பக்கத்தில் சர்வ கட்சியைக் கூட்டுவதற்காகப் போய்க் கொண்டிருக்கிறார். பரம குளம் திட்டத்தைப் பார்வையிடப் போகிறார்கள். கனம் ராமையா, கக்கன் அவர்களுக்கு அப்போது அங்கே என்ன வேலை? பத்து நாள் கழித்துப் போனால் என்ன? அவர்கள் அந்தச் சமயத்தில் கலவரப் பகுதிக்குச் சென்று துன்பப்படுகிற மக்களுக்குத் தலை கொடுக்கக் கடமைப் பட்டிருக்கவில்லையா? குந்தா திட்டத்தைப் பார்வையிட அப்போது தானா போகவேண்டும் என்று கேட்கிறேன்.

கலவரம் எல்லாம் முடிந்து வீடுகள் எல்லாம் சாம்பலாகிப் போனவுடன் உள்நாட்டு மந்திரி - எதிர்க் கட்சித் தலைவர் யாரையும் கூப்பிடவில்லை. அந்த இடத்தைப் பார்வையிடப் போனார்கள். மயானமாகக் காட்சி அளித்த பிரதேசத்தை எதற்காகப் பார்வையிடப் போனார்கள்? அதைப் பார்த்து திருப்தி அடையலாம் என்பதற்குப் போனார்களா? "முன்னாலே போவதற்கு என்ன? இதற்கெல்லாம் அவர்கள் பதில் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்." 150 பேர்கள் இருக்கிறோம் என்கிற நினைப்பிலே இந்த ஐந்தாண்டுகளில் தாங்கள் எதைச் செய்தாலும் அது சரியாகப் போய்விடும் என்று நினைத்தார்கள். ஆனால் அது ஒருபொழுதும் சரியாகப் போகாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அந்த இடத்தில் நடந்த கலவரம் சாதிச் சண்டையின் விளைவா? அரசியல் ஆதிக்கப் போட்டியின் விளைவா என்று கேட்டால், அரசியல் ஆதிக்கப் போட்டிக்கு சாதிச் சண்டையைக் காரணமாக உண்டாக்கிக் கொண்டார்கள் என்று சொல்வேன். அதை உண்டு பண்ணிவிட்டு தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொண்டார்கள். அப்படி யார் உபயோகப் படுத்திக் கொண்டார்கள் என்பதில் அபிப்பிராயபேதம் இருக்கலாம். என்னைப் பொறுத்த வரையில் ஒன்று சொல்வேன். அரசியல் ஆதிக்கப் போட்டிக்கு இதை உபயோகப் படுத்திக் கொண்ட பொறுப்பை ஆட்சியாளர் தட்டிக் கழிக்க முடியாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அங்கே செல்வாக்குள்ள கட்சியாக பார்வட் ப்ளாக் இருக்கிறது. தன் செல்வாக்கை அது நிலைநாட்டிக் கொள்ள பார்க்கிறது. காங்கிரஸ் அங்கே தனது செல்வாக்கை நிலைநாட்டப் பார்க்கிறது. இதனாலே தான் போராட்டம் மூண்டது என்கிற உண்மையை மறைப்பதற்கு இயலாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவர்களது அரசியல் ஆதிக்கப்போட்டியில் பாவம், சாதாரண ஜனங்கள் அநியாயமாகத் துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இம்மாதிரியான துன்ப நிலை அவர்களுக்கு உண்டானது மிகவும் பரிதாபத்திற்குரியது.

இந்தக் கட்சிக்கும், அந்தக் கட்சிக்கும் கத்திச் சண்டை என்றால் கத்திச் சண்டையோடு இருந்திருந்தால் சாதாரண மக்களுக்கு துன்பம் வந்திருக்காது. இவர்களுக்கு இடையில் சர்க்கார் அமைதியை உண்டாக்கி, பொது ஜனங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது இருக்க இவர்கள் அமைதியை அங்கே உண்டாக்கவில்லை. பொது மக்களுடைய உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு அளிக்கவில்லை. பெருத்த துன்பத்திற்கு அவர்கள் உள்ளாகும்படியாக நடந்துகொண்டார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சுமார் நான்கு இடங்களில் போலீசார் சுட்டிருக்கிறார்கள். அநேக உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படிச் சுட்டதற்குக் காரணம் அமைதியையும், பாதுகாப்பையும் உண்டாக்க என இவர்கள் சொல்கிறார்கள். அது உண்மையா என்று பார்க்க வேண்டும்? சாதிச் சண்டை நடந்தது, அதைத் தடுத்து அமைதியை நிலைநாட்டச் சுட்டோம் என்று இவர்கள் சொன்னால் இரண்டு சாதியார்கள் அடித்துக் கொள்கிற இடத்தில் இவர்கள் சுடவில்லை. அரசாங்க ரிப்போர்ட்டிலும் அப்படிச் சொல்லவில்லை. இந்த நான்கு இடங்களிலும் போலீசார்களை எதிர்த்துத் தாக்க வந்தார்கள். அதற்காகச் சுடப்பட்டது என்று சொல்லப்படுகிறது. இதில் நிறைய கருத்து வேற்றுமை இருக்க இடம் இருக்கிறது. போலீசார் சுட்டது நியாயமா இல்லையா என்பதை பூரா விவரங்களையும் பார்த்து பூர்ணமான உண்மையை அறிந்து கொள்ள இந்தச் சபைக்கும், ராஜ்யத்திலுள்ள மக்கள் அனைவருக்கும் உரிமை இருக்கிறது. அவர்கள் சுட்டது சரியா இல்லையா என்பதை நீதி மன்ற விசாரணையின் மூலமாகத்தான் அறிந்து கொள்ள முடியும். சர்க்கார் மக்களுக்குத் துன்பம் இழைக்கவில்லை. அவர்களுக்கும் உடமைகளுக்கும், உயிருக்கும் என்றைக்கும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்கிற நம்பிக்கையை உண்டாக்க இது நீதி மன்றத்தினால் விசாரிக்கப்பட வேண்டிய பெரிய விஷயம். நீதி மன்ற விசாரணைக்கு இதைவிட வேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள். இதை இந்தச் சர்க்கார் ஒத்துக் கொள்ளவில்லை என்றால் அது அவர்களுடைய ஆணவப் போக்கைத்தான் தெளிவாக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக இத்தகைய துப்பாக்கிப் பிரயோகங்களைப் பற்றிப் பேசும்போது போலீஸ்காரர்களுடைய அக்கிரமங்களை எல்லாம் மறைத்து அவர்களைத் தாங்கிப் பேசுகின்ற முறையில் தான் அரசாங்கத்தரப்பில் இருந்து பேச்சுகள் வருகின்றன. அதிகாரிகள் என்ன செய்தாலும் சரி அவர்கள் செய்ததை அப்படியே ஆதரிக்க வேண்டும் என்கிற மனோபாவம் தான் அவர்களிடத்தில் வெளிப்படுகிறது. இது சரியான மனோபாவம் இல்லை. ஜனநாயக யுகத்தில் இப்படிப்பட்ட மனோபாவம் வளர்வது மிகவும் தீங்கானது. 1942-ம் ஆண்டு ஆகஸ்டு போராட்ட காலத்தில் அதிகார வெறியர்களால் தூண்டப்பட்ட போலீஸ்காரர்கள் எவ்வளவு மிருகத் தனமாக நடந்து கொண்டார்கள், சமயம் ஏற்பட்டால் அவர்கள் எத்தனை அக்கிரமங்களைச் செய்கிறார்கள் என்பதை நன்றாக அநுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டிருப்பவர்களே இன்றைக்கு அவர்கள் செய்வது எல்லாம் நியாயம் என்பது போலப் பேசினால், அவர்களுக்கு ஒரு லைசென்சு கொடுத்து விட்டால் என்ன ஆகும், அதன் விளைவு எப்படிப் போகும் எனச் சொல்ல முடியாது. இன்றைய தினம் ராமநாதபுரப் பகுதியில் அவர்கள் செய்திருக்கும்படியான அக்கிரமங்கள் என்ன என்ன என்பதைப்பற்றிச் சொல்ல நேரம் இடையாது. ஆகவே போலீஸ்காரர்கள் தங்கள் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தார்களா? சர்க்கார் அந்தப் பிராந்திய மக்களுக்கு பாதுகாப்பு அளித்தார்களா? அளிக்கத் தவறினார்களா? என்பதைப்பற்றி எல்லாம் ஒரு பகிரங்க விசாரணை நிச்சயமாக நடத்தப்படவேண்டும். காந்திய வழியில் நிற்பவர்கள் எனச் சொல்கிற அமைச்சர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளத் தயங்குவானேன் என்று கேட்கிறேன். இதற்கு விளக்கம் தேவை.

அடுத்தபடியாக கனம் தேவர் அவர்களை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழே சிறையில் வைத்திருப்பதாகும். கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில், காங்கிரஸ் அங்கத்தினர் பேசிய பேச்சிலும் கனம் தேவர் பெரிய குற்றத்தைச் செய்து விட்டவர் போலச் சொன்னால் அவர் செய்த குற்றங்கள் என்ன என்னவோ அவற்றுக்கு எல்லாம் அந்த அந்த செக்ஷன்படி வழக்குத் தொடர்வதைப் பற்றி யாரும் எதுவும் சொல்ல மாட்டார்கள். ஆனால் எந்த விதமான குற்றச்சாட்டுகளையும் அவர் பேரில் சுமத்தாது அதற்குரிய முறைகளை எடுத்துக் கொள்வதை விட்டு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் அவரைச் சிறையில் வைத்திருப்பதானது அரசியல் ரீதியாக மன்னிக்க முடியாத தவறு என்று தான் சொல்லவேண்டும். எதிரியை செல்வாக்கு இழக்க செய்வதற்கும் எதிரியின் செல்வாக்கை அவர்கள் பெருவதற்கும் இது உகந்த முறையும் அல்ல என்று இந்த



அமைச்சர் அவைக்கு நான் சொல்ல விரும்புகிறேன், தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் அவர்களை கைதி செய்வதற்கு நியாயமே கிடையாது அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த சபையிலே பேசும்போது அமைச்சர் அவர்கள் நாங்கள் ஒரு சிறிய கட்சிக்காரர்கள் என்று சொன்னார்கள். அப்படி கனம் அமைச்சர் அவர்களே சந்தேகிப்பார்களேயானால் உண்மையைக் காண்பது கொஞ்சம் கடினமாகத் தான் இருக்கும். ஆனால் அதற்குப் பதிலாக கொஞ்சம் அமைதியாகவும், கொஞ்சம் மனசாட்சிக்கு முதலிடம் கொடுத்து சந்தேகிக்க வேண்டும் என்பது தான் எனது பணிவான வேண்டுகோள். அவர்களுக்கு சந்தேகம் வந்து விட்டது. வந்த பின்னரும் பகிரங்கமாக நீதி விசாரணை செய்வதற்கு ஒப்ப மறுப்பது இன்னும் அந்த சந்தேகத்தை அதிகரிக்கும் முறையிலே நடந்துக்கொள்வது ஏன்? சீசர் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள். ஆனால் ராமர் பிறந்த நாட்டிலே ராமரே சீதையை சந்தேகித்தார் என்ற பண்பாட்டிலே வளர்ந்துள்ள நாம் இதை பகிரங்கமாக நீதி விசாரணைக்கு விடுவதை எதிர்ப்பதில் நியாயம் இல்லை. பகிரங்க நீதி விசாரணைக்கு விடவேண்டும், உடனடியாக திரு. தேவரை விடுதலை செய்ய வேண்டும். அவ்வாறு மறுப்பார்களேயானால் எல்லோருடைய அவநம்பிக்கைக்கு ஆளாவார்கள் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

DR. SRIMATHI SATHIAVANIMUTHU : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, முதுகளத்தூர் கலவரத்தைப் பற்றி நாம் விவாதிப்பதற்கு முன்னால் சாதி சண்டையோ அல்லது அரசியல் பூசலோ எதுவாக இருந்தாலும் இந்த நாகரீக காலத்திலே மனித உயிர்கள் வெறிச்செயல்களால் பாதிக்கப்பட்டது குறித்து எனது கண்ணீரை அம்மறைந்தவர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் காணிக்கையாக்குகிறேன். இந்த கலகத்தில் பாதிக்கப்பட்ட ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவள் என்பதால் மட்டும் அல்ல, அடிமைப் படுத்த மக்கள் தங்கள் உரிமைக்காக என்றைக்காவது வீறிட்டு எழவேண்டும். அப்படி எழுவதின் மூலமாகத்தான் அவர்கள் உரிமை பெற முடியும் என்ற ஒரே முடிவில் நம்பிக்கையோடு பணிபுரிந்து வருகின்ற திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவள் என்ற காரணத்திற்காகவும் நான் என்னுடைய கட்சியின் சார்பாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதுகளத்தூரில் நடந்த அக்ரமச் செயல்களைப் பற்றி எதிர்க்கட்சிக்காரர்கள் என்ற முறையிலே சர்க்கார்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசிய கருத்துக்கு நான் வேறுபட்டவள். இதனால், சில உறுப்பினர்களோ மற்றவர்களோ வேறு விதமாக நினைக்கலாம். நான் சர்க்கார்மீது முற்றிலும் மாறான கோணத்திலிருந்து குற்றம் சாட்டுகிறேன். நடந்தவற்றை அவ்வளவையும் நேராக பார்த்து அதன்மீது எனது கண்டனத்தை தெரிவிப்பதுபோல் அல்ல, நான் சொல்லியிருப்பது. சர்க்கார் இம்மாதிரி இன்னும் அநியாய நிகழ்ச்சிகளில் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு பாதுகாப்பு அளித்தார்களா அல்லது இல்லையா என்பது தெளிவாக்கப்பட்டிருக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற இந்த இழிச்செயல்கள் சமுதாயத்தில் எல்லோருக்கும் இருக்கக்கூடிய இந்த உயர்வு தாழ்வு சாதி பூசல் காரணமாகத்தான் என்பதை பலரும் அறிவார்கள். இந்த பூசலும் இதற்காகத்தான் ஏற்பட்டது என்று போலீஸ் அமைச்சர் அவர்கள் தமது அறிக்கையில் விளக்கம் தந்து இருக்கிறார்கள். 1930-ம் ஆண்டிலேயிருந்து தொடர்ச்சியாக நிகழ்ச்சியைப் பற்றி சொல்லிக் கொண்டு வந்த போலீஸ் அமைச்சர் அவர்கள் 1932-வது ஆண்டை குறிப்பிட்டு இருக்கிறார்கள். 32-வது ஆண்டு வரையிலும் குறிப்பிட்டிருக்கிற கனம் அமைச்சர் அவர்கள் ஒரே அடியாக 1949-ம் ஆண்டிற்கு தாவுகிறார்கள். இடையிலே இருக்கின்ற 17 ஆண்டுகள் என்னவாயிற்று. சர்க்கார் அறிக்கைப்படி மறவர்களும், ஆதிதிராவிட மக்களும் ஒருவர் வீட்டிலே ஒருவர் பெண் கொடுக்கிற அளவிற்கு வாழ்ந்து வந்திருக்கிறார்களா என்பதை அவர்கள் தெரிவிக்கவேண்டும். அல்லது 17 ஆண்டுகளிலே அந்த பகுதியிலே இருந்த நிலைமைதான் என்ன என்பதை சர்க்கார் 12-43 p.m.

தெரிந்துக்கொண்டார்களா ? இல்லையா ? அதற்கும் விளக்கம் தெரிவித்தால் மிக்க நலமாக இருக்கும். ஆனால் அதைக் குறித்து நான் பலரிடமிருந்து விசாரித்து தெரிந்துக்கொண்ட முறையில் 1933-ல் இருந்து பல முறை அப்படிப்பட்ட கலகங்களும் சாதி பூசல்களும் ஏற்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகும். வகுப்பு வாதத்தின்மீது ஏற்படும் கலவரம் என்று சொல்லுபவர்கள் தப்பித்துக் கொள்ள முடியும். நான் இதற்கு அவர்கள் மீது குற்றம் காட்ட விரும்பவில்லை. 1937-ம் வருஷத்தில் நடைபெற்றிருக்கின்ற அந்த தேர்தலிலே ராமநாதபுரம் ராஜா அவர்கள் காங்கிரசுக்கு எதிராக தேர்தலில் நின்றிருக்கிறார்கள். அப்பொழுது காங்கிரசுக்கு அபேட்சகராக இருந்தவர் திரு. முத்துராமலிங்க தேவர் ஆவர். அதை சர்க்கார் தரப்பிலே உள்ளவர்கள் மனதில் கொள்ளவேண்டும். அப்பொழுது திரு. முத்துராமலிங்க தேவர் காங்கிரஸ் சார்பிலே பொது மக்களை " உங்கள் வாக்குகளை மங்களகரமான மஞ்சள் பெட்டிக்கே போடுங்கள்" என்று ஓட்டுகளை கேட்டிருக்கிறார். அப்போது வாக்குகளைக் கேட்கின்ற முறையிலே ஏற்பட்ட பூசல்களும், அப்பொழுது அவர்களுக்கு அடிமைகளாக இருக்கின்ற ஆதிதிராவிட மக்கள் திரு. தேவருக்கு ஓட்டு போடாத காரணமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர் செய்த பயங்கரக் கொடுமைப் பற்றியும் அதற்காக மதுரை அடிஷனல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்திருக்கிறது என்பது மாற்றுக் கட்சிக்காரர்களுக்கும் தெரிந்திருக்கின்ற விஷயம் அப்பொழுது காங்கிரசில் இருந்த திரு. தேவர் அவர்கள் ஆதிதிராவிட மக்கள் தங்கள் வாக்குகளைத் தரவில்லையென்று அந்த மக்களை இம்சித்திருக்கிறார்கள். இது மாத்திரம் அல்ல அன்றைய தினம் இருந்த காங்கிரஸ்காரர்கள் இன்னும் நல்ல முறையிலே செல்வாக்கு பெற்று இருந்ததினால் இந்த தாழ்த்தப்பட்ட இனத்தவர்களை தனது கட்சிக்கே வாக்குகளைப் போடவேண்டும் என்று இம்சித்திருக்கிறார்கள், என்பதை காங்கிரஸ்காரர்களும் அறிந்திருக்கிறார்கள் என்பது இப்பொழுது விளக்கமாகத் தெரிகிறது. ஆனால் இப்பொழுது மாற்றுக் கட்சித் தோழராக இருக்கும் அதே முத்துராமலிங்கத் தேவர் இப்பொழுது காங்கிரஸுக்கு எதிராக". . .

**THE HON. SRI C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் ஒரு தகவலை வைத்துக் கொண்டு பேசவேண்டும். அவர் அப்போது காங்கிரஸ் அபேட்சகராகவே நின்றிருந்தாலும் கூட அதே காங்கிரஸ் சர்க்காரே நடவடிக்கை எடுத்து மேஜிஸ்ட்ரேட் முன்னே நிறுத்தி வைத்து ஜாமின் கேட்டிருக்கிறார்கள் என்ற தகவலை தெரிந்துக் கொள்ளவேண்டும்.

**DR. SRIMATHI SATHIAVANIMUTHU** : நன்றி. இதை நான் சொல்வது அரசாங்கத்திற்கு இது தெரியாது என்பதற்காக அல்ல. திரு. தேவர் அவர்கள் அப்பொழுது எந்தக் கட்சியிலே இருந்தார், அவர் மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் இருந்தன, அவரிடமிருந்து ஜாமின் தொகை வாங்கப்பட்டதுப்பற்றி சர்க்காருக்கு ஞாபகமூட்டுவதற்காகவே சொன்னேன் என்பதை மிகப்பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனக்கு முன்னர் பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் திரு. தேவரின் தூண்டுதலின்பேரில் யாரோ டெபுடி தாசில்தார் சிதம்பரம் முதலியாரின் காலை வெட்டியதாகவும், சப்-மேஜிஸ்ட்ரேட் கொலை சம்பந்தமான இன்னும் பல குற்றங்களும் அவர்மீது சாட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட திரு. தேவர் அவர்கள் செய்திருக்கின்ற பல பயங்கரமான பிரச்சாரத்தைப்பற்றியும் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

நான் வேறு ஒன்று அவர்களைக் கேட்கிறேன். இமானுவேல் என்பவர் கொலை செய்யப்பட்டார். அப்படிச் செய்ததற்கு தேவர்தான் ஆதாரமாக இருக்கக்கூடும் என்று சொல்வதற்கு அறிகுறியாக, சமாதான மகாநாட்டில் தேவர் அவர்கள் ஏதோ வார்த்தையைச் சொன்னார்கள் என்றும், பிறகு தன் தோழர்களைப் பார்த்து " ஒரு பள்ளன் இப்படி பேசுகிறானே ; நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே " என்று அவர்கள் சொன்னதாகவும் தோழர் ஸ்ரீனிவாஸன் அவர்கள் மனதில் வைத்துப் பேசிய கருத்து மூலமாக நான் சொல்ல விரும்புகிறேன். அவர் அப்படி பேசியபோது



திரு. சசிவர்ண தேவர் அவர்கள் அது எப்பொழுது எங்கே நடைபெற்ற செய்தி என்று சொன்னால் நலமாயிருக்கும் என்று சொன்னார்கள். அவர் சார்பாக சொல்கிறேன், இந்த ஜாமீன் தொகை கட்டவேண்டுமென்ற கோர்ட் நடவடிக்கைகளின் தீர்ப்பைக் காட்டுவதால் அந்த வாசகத்தைப் படித்துக் காட்டுகிறேன். இப்படி சொல்வதில் இருந்து தோழர் சசிவர்ண தேவர் அவர்களின்மீது தவறாகப் பாய்கிறேன் என்று அவர் நினைக்கக் கூடாது. இது சர்க்காருக்கு பல வருஷங்களுக்கு முன்னால் தெரியும். அப்படி தெரிந்திருந்த போதிலும் கூட அவர் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நான் சொல்கிற வார்த்தை இம்மன்றத்திற்கு தகாத வார்த்தையாயிருக்கலாம். உள்ளத்திலுள்ள வேதனையால் சொல்கிறேன். இன்று ஆளும் கட்சியினர் ஓலம் இடுகின்றனர். நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர். நான் கேட்கிறேன். இந்த நீலிக் கண்ணீர் இத்தனை காலமாக எங்கே சென்றிருந்தது ? ஹரிஜனங்களுக்காகத்தான் நாங்கள் என்று சொல்வது, ஹரிஜனங்களுக்காக நாங்கள்தான் எல்லாம் செய்கிறோம் என்று சொல்வதில் இந்த உபதேர்தலுக்கு அப்புறமா உங்களுக்கு அக்கறை தோன்றிற்று ? நான் கேட்கிறேன். ஏன் இதற்கு முன்னமேயே நிலைமையை ஒழுங்காக்கி இருக்கக் கூடாது ? ஆளும் கட்சியினராகிய உங்களுக்கு எத்தனையோ மகஜர்கள் வந்திருக்கும், அங்கு நடக்கும் கொடுமைகள் பற்றி. நாங்கள் ஹரிஜனங்களுக்காகத் தான் என்று சொல்கிற ஆளும் கட்சியினர் இதற்குமுன் ஆயிரக்கணக்கான மகஜர்கள் அங்கு கொடுமைகள் நடக்கின்றன என்று சொல்லி வந்தபோது என்ன செய்தார்கள் ? அதை ஆதாரமாக வைத்துச் சொல்லுகிறேன். ஹரிஜனங்களின் வாக்குகளைப் பெறவே ஆளும் கட்சியினரின் முயற்சியே தவிர வேறு ஒன்றும் அவர்களுக்காக பாடு படவில்லை. அப்பொழுது இருந்த வாக்குகள் காங்கிரசிற்கு எதிராக இருந்தன. இப்பொழுதுள்ள வாக்குகள் இவர்களுக்கு வரலாம் என்பதற்காக இதை ஒரு மையமாக வைத்துக்கொண்டு நாடகம் நடத்துகிறார்கள் ஆளும கட்சியினர். போலீஸ் அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலின் மீது அவர்கள் கூறுகிறார்கள், டென்ஷன் இருந்து கொண்டேயிருந்தது என்று கடந்த சட்டமன்ற நிகழ்ச்சிகளின்போது ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு தோழர் அந்தப் பகுதியில் ஹரிஜன மக்கள் குடிப்பதற்கு தண்ணீர் எடுக்கும் கிணறுகளில் யாரோ மண்ணெண்ணெயை விட்டார்கள் என்றும், எருக்கஞ்செடிகளைப் போட்டார்கள் என்றும் கூறியபோது அப்பொழுது போலீஸ் அமைச்சரவர்கள் சொன்னார்கள், " அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இப்பொழுது கிடையாது " என்று. திறமையாக பதில் சொல்கிறோம் என்று பதில் சொன்னாரே தவிர அதற்குப் பின்னால் உள்ள நிலைமையை புரிந்து கொண்டார்களா ? அப்படிப் புரிந்து கொண்டால் ஏன் இன்று இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படவேண்டும். அப்படிப்பட்ட நிலை வராமலிருப்பதற்கு ஏன் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை ? அப்படி தக்க சமயத்தில் நடவடிக்கைகள் எடுத்திருந்தால் ஏன் இன்று இந்நாட்டில் மக்கள் கண்ணீர் விடக்கூடிய அளவு இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும் ? ஆகவே பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவில்லை என்பதற்கு இது ஆதாரமாகும். தேவர் அவர்கள் பேசிய பேச்சுக்களைப் பற்றி அமைச்சரவர்களும் சொல்லிவிட்டார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் அதைப் பற்றிச் சொன்னார்கள், போலீஸ் துப்பாக்கிகள் சோளத்தட்டை மாதிரி என்றும், நம் முதல் அமைச்சரவர்கள் கள்ள நோட்டுகள் அடிக்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்கள் ; காமன்வெல்திலிருந்து இந்தியா பிரிந்து விடவில்லை என்றால் மூன்றாவது யுத்தம் முதுகளத்தூரில் நடத்துவேன் என்றும் அவர் கூறியிருப்பதாக இருக்கிறது. அவர் அப்படிச் சொன்னாரோ இல்லையோ, அவருக்காக நான் வக்காலத்து வாங்கிக் கொண்டுவரவில்லை. இவ்வளவையும் நீங்கள் கேட்டுக்கொண்டுதானே இருந்தீர்கள். முதலமைச்சர் கனம் காமராஜ் அவர்கள் கள்ள நோட்டு அடித்தாரோ இல்லையோ, ஏன் நடவடிக்கைகள் எடுக்க இவ்வளவு தாமதம் ? இவ்வளவு நாட்கள் கழிந்த பின் தானா நடவடிக்கைகள் எடுப்பது ? அதை முளையிலேயே கிள்ளி எறிந்திருந்தால் இவ்வளவு தூரம் வந்திருக்குமா ? நிலைமை இவ்வளவு மோசமாக போயிருக்குமா ? அவர் மீது இன்றும் கூட சட்ட ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தகுந்த செக்ஷன் மூலம் அவரைக் கைது

செய்யவில்லை. தடுப்புக் காவல் சட்டப்படிதான் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். நீங்கள் அஞ்சுகிறீர்களா ? அல்லது பயந்து கொண்டிருக்கிறீர்களா ? ஆனால் எதிர்க் கட்சிக் காரர்களாகிய நாங்கள் ஜனநாயக முறையில் உண்மையை எடுத்துச் சொன்னால் எங்களைப் பார்த்து முதலமைச்சர் உட்பட உங்களை முளையிலே கிள்ளி எறிந்து விடுவோம், கட்டைவிரலை எடுத்து விடுவோம் என்று பொது மேடையில் பேசுகிறவர்கள் ஏன் இப்படிப் பட்ட பயங்கரமான சொற்களைக் கேட்டுக் கொண்டு சும்மா இருக்கவேண்டும் ? எந்தப் பக்கம் செல்வாக்கு ஓங்குகிறது என்று பார்த்துக் கொண்டு 151-யோடு கூட இரண்டு மூன்று கூட எப்படிசேர்த்துக் கொள்ள முடியும் என்று பார்க்கிறீர்களா. அங்கு டென்ஷன் இல்லாமலிருந்தால் இந்தக் கேள்வியே எழாது. சர்க்கார் அதைப் புரிந்து கொள்ளாவிட்டால் இதைக் கேட்கப் போவதில்லை. நான் கேட்கிறேன், அப்படி அங்கு டென்ஷன் இருந்தும் ஏன் அங்குள்ளவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவில்லை ? சமாதான மகாநாட்டிற்குப் பிறகு டென்ஷன் மேலும் கூடிவிட்டது என்கிறார்கள். அப்படியிருக்கும்போது அவர்களுக்கு கொடுத்த பாதுகாப்பு என்ன? இமானுவேல் கொலை செய்யப் பட்டார். அதற்கு நான்கு நாட்களுக்குப் பிறகுதான் கீழத்தூவலில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. அக்கொலை செய்யப்பட்டவுடன் யார் யாரை போலீஸ் சென்று கைதாக்கியிருக்கிறது ? யாரையெல்லாம் கூண்டில் அடைத்திருக்கிறது ? ஒரு வகுப்பாருக்கும் இன்னொரு வகுப்பாருக்கும் பூசல் நடந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக ஒரு சமாதான மகாநாடு கூட்டப்பெற்றது. அதன் பின் கொலை நடந்திருக்கிறது. ஏன் கொலை நடந்த அடுத்த நாள் சந்தேகத்தின் பேரில் போலீஸ் ஒருவரையும் கைது செய்யவில்லை ? கீழத்தூவலில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இதற்குக் காரணம் என்ன ? இவ்வளவு பயங்கரமான ஆயுதங்களை, வேல் கம்பு, அறிவாள் இவைகளைத் தாங்கி வந்தார்கள் என்றும், மஞ்சள் உடை உடுத்திக் கொண்டு யுத்தத்திற்குச் செல்வது போல் சென்றார்கள் என்றும் சர்க்கார் இப்பொழுது சொல்கிறார்கள். அங்கு ஏன் கூடுதல் போலீஸ் படைப் போடவில்லை. துப்பாக்கிப் பிரயோகித்திற்கு முன் ஏன் அங்கு ரிசர்வ் போலீஸ் படையை போடக்கூடாது. ஏன் அங்கு ராணுவத்தைப் போட்டிருக்கக் கூடாது. வடநாட்டுத் தலைவர்கள் வருகிறார்கள் என்றால் அவர்களுக்காக ராணுவ அணிவகுப்பு நடத்துவதற்காக ராணுவம் வைக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது மக்களிற்கு பாதுகாப்பு அளிப்பதற்காக ராணுவம் வைக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். போலீஸ் சுட்டதைப்பற்றி அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், போலீஸ் தற்காப்பிற்காக சுட்டார்கள் என்கிறார்கள். யாருக்கு யார் பாதுகாப்பு கொடுப்பது ? ஏழை எளியவர்களையும், பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாக்க போலீஸா ? அல்லது போலீஸ்க்காக பாதுகாப்பா ? மற்றவர்களை பாதுகாக்க என்று போலீஸ் இல்லாமல் போலீஸ்க்காக பாதுகாப்பு என்றால் அதற்கு ஏன் இந்த அரசு இருக்கவேண்டும்? போலீஸ்க்கு வேறு பாது காப்பு. போலீஸை யார் பாதுகாக்கவேண்டும். ராணுவமும், ரிசர்வும் என்ன வேலை செய்து கொண்டிருக்கின்றன ? கீழத்தூவல் துப்பாக்கிப் பிரயோகத்தில், எப்படி சுட்டார்கள், குண்டு எங்கே விழுந்தது, கீரல் விழுந்ததா என்பதைப்பற்றியெல்லாம் விசாரணை செய்வது ஒருபுறமிருக்க, பயங்கரமான நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன, கொலை கொள்ளைகள் நடந்திருக்கின்றன, நிலைமை சுமுகமாக வேண்டுமானால் ஐ.சி.எஸ். அதிகாரி வெங்கடேஸ்வரனை எப்பொழுது அனுப்பியிருக்கவேண்டும். யார் யார் என்னென்ன குற்றங்கள் செய்தார்கள் என்று ஓரளவு சந்தேகத்தின் பேரில் ஒரு சிலரை கைது செய்து அதிகப்படியான போலீஸ் படையை அங்குள்ளவர்களின் பாதுகாப்பிற்காக அனுப்பி நிலையை அடங்கிய பிறகு விசாரணைக் குழுவை அனுப்பியிருந்தால் ஒரு சில நன்மைகள் அந்தப் பகுதியில் ஏற்பட்டிருக்கக்கூடும். அப்படிச் செய்யாமல் விசாரணை நடத்தி விசாரணை சமயத்தில் ஒருவர் இந்த பக்கத்தில் குற்றம் என்று சொல்ல வேறு ஒருவர் அந்தப் பக்கத்தில் குற்றம் என்று சொல்ல, ஒருவர் இங்குதான் கொலை நடந்தது என்று சொல்ல, நான் அடிக்கவில்லை நீ அடிக்கவில்லை என்று சொல்ல, இப்படி ஒருவருக்கொருவர் சொல்லி இரு தரப்பார்க்கிடையிலும், இரு வகுப்பார் இடைக்கும் மனக்கசப்பு வளர்ந்தது, விரோதமும் கூடுகிறது. இவன் அப்படிச் சொன்னான், சரி அவனை





நாளை பார்த்துக்கொள்வோம், அவன் அப்படிச் சொன்னான், சரி அவனை இன்றே பார்த்து விடலாம் என்று நிலைமை மோசமாகிவிட்டிருக்கிறது. முதுகுளத்தூரிலும், பரமக்குடியிலும் கலவரம் ஏற்பட்டிருக்கும்போது, சிவகங்கையிலும் அருப்புக்கோட்டையிலும் லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள உடமைகள் பாழாக்கப்பட்டிருக்கின்றன. பல கிராமங்கள் தீயிடப்பட்டிருக்கின்றன. இருந்தும் ஒரு உயிர்கூடபோகவில்லை என்று கூறப்படுகிறது. காரணம் என்ன ? அங்கு ஏற்கனவே வகுப்பு துவேஷமும் ஆத்திரமும் வளர்ந்துகொண்டு வந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இவ்வளவும் இருந்தும்கூட ஏன் முன்னால் அங்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இறுதியாக திரு. முத்துராமலிங்க தேவர் அவர்களை 29-ம் தேதியன்று கைது செய்திருக்கிறார்கள். முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் மக்களை தூண்டி விடக்கூடிய பிரசங்கங்களை செய்தார் என்று சொல்லுவதானால் ஏன் முன்னாலேயே அவர்களை கைது செய்திருக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இப்போது கைது செய்தவர்கள் ஏன் அப்பொழுதே கைது செய்திருக்கக்கூடாது. உண்மையிலேயே உடனுக்குடன் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அவ்விதம் செய்தால்தான் குற்றவாளிகளின்பேரில் உண்மையான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூற முடியும். தேவர் அவர்கள் பேசிய பேச்சுகளின் தியதிகள் என்ன ? அந்த தியதிகளின் பேசிய பேச்சுக்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றால் இதன் அர்த்தம் என்ன ? இந்த சர்க்கார் உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டியவேலைசெய்து வருகிறது என்று சொன்னால் அவர்களுடைய கஷ்டங்களை ஏன் முன்னாலேயே நிவர்த்தி செய்து கொடுத்திருக்கக்கூடாது ? இந்த நிலைமையில் இப்போது போய் நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களை காப்பாற்ற போகிறோம் என்று சொன்னால், அது உண்மையிலே காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கு தேட வேண்டுமென்று தான் இவ்விதம் போயிருக்கிறதே தவிர தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக அல்ல என்பதை தெளிவாக சொல்ல விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து பல மாதங்களுக்கு முன்னாலேயே பல மகஜர்கள் இந்த சர்க்காருக்கு வந்திருக்கின்றன. 1957ஆம் மேமீ 3-ந்தேதியில் அதாவது உபதேர்தலுக்கு முன்னால் சென்னை சர்க்காருக்கு அங்கிருக்கின்ற, முதுகுளத்தூர் க்ஷேம நல சங்கத்திலிருந்து ஒரு நீண்ட மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். அங்கு சுமார் ஐம்பது கிராமங்களில் நடந்து கொண்டிருக்கின்ற தொந்தரவுகளை எல்லாம், திரு தேவர் அவர்களின் பேச்சுக்களையும் வெளியிட்டு விநியோகம் செய்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் இந்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? மேலும் மேலும் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும் என்று தானே நீங்கள் சும்மா பார்த்துக்கொண்டு இருந்தீர்கள். இத்தனை உயிர்களும் பலியான பிறகு தான் இந்த சர்க்கார் அங்கே போய் இருக்கிறது. முதுகுளத்தூர் இங்கு இல்லை. 500 மைலுக்கு அப்பால் இருக்கிறது. இம்மன்றத்தில் இருந்துக்கொண்டு அழகாகப் பேசலாம்—இதைவிட்டு, இன்னும் அங்குள்ள நிலைமை சமாளிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்கவேண்டும். எவ்விதமிருந்தாலும் இனிமேலாவது அங்கு சுமுகமான நிலைமை ஏற்படுவதற்கு வழிவகைகள் செய்தாக வேண்டும். அங்கு யார் வெட்டினார்கள். யார் யாரையெல்லாம் குத்தினார்கள் என்கிற வாதத்திற்கு நான் வரவில்லை. இனிமேல் அங்கு ஒரு சுமுகமான நிலை வரவேண்டியது மிக அவசியம். ஒரு சமுதாய மக்கள் அதிகமாக எந்த கிராமத்தில் இருந்தாலும் குறைவாகவுள்ள மற்ற சமுதாயத்திலுள்ள மக்களுக்கும் சமஉரிமை வழங்கவேண்டும். ஒரு சமுதாயத்தினரின் ஆதிக்கம் மாத்திரம் இருக்கக்கூடாது. இதற்கு சர்க்கார் ஒழுங்கான நிர்வாகத்தை நடத்தவேண்டும். ஒரு தனி சமுதாயத்தினரின், எந்த சமுதாயத்தினராய் இருந்தாலும் சரி, அவர்களின் ஆதிக்கம் வளரவிடக்கூடாது. எல்லா மக்களும் சம நிலையுடன் வாழ்வதற்கான ஒரு சுமுகமான நிலையை உண்டுபண்ண வேண்டும். ஆகவே இப்போது அங்கே இருக்கக்கூடிய போலீஸ் படை இருக்கத்தான் வேண்டும். கலவரம் நடந்தபோது அங்கு என்னவெல்லாம் நடந்தது என்பதை நினைத்துப்பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கின்றது. இனிமேலாவது அப்பேர்ப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காக, தடுப்பதற்காக இன்னும் அதிகமாக போலீஸை பாதுகாப்புக்காக வைத்திருக்கவேண்டும். சர்க்காருக்கு அங்கு நடந்தவை

[Dr. Srimathi Sathiavanimuthu] [29th October 1957

களைப்பற்றியெல்லாம் விசாரணை செய்யவேண்டுமென்ற நம்பிக்கை இருக்குமானால் நல்ல நீதி விசாரணையை ஏற்படுத்தவேண்டும். ஆனால் இந்த விசாரணையினால் ஏதாவது அமைதி நிலவுமானால்தான் இந்த விசாரணையை வரவேற்க முடியும். அதெல்லாமல், இந்த விசாரணையினால் கலவரங்கள் மேலும் வளரும், அல்லது நீடிக்கும் என்றிருக்குமானால் தனிப்பட்ட முறையில் என்னை பொறுத்தவரையில் இந்த விசாரணையை ஏற்றுக் கொள்ள முடியாது, இது அவசியமும் இல்லை என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே சர்க்கார் இந்தமாதிரியான ஒரு சமூகமான நிலைமையை கொண்டு வருவதற்கு வேண்டிய நல்ல காரியங்களை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த கருத்தை இந்த மன்றத்தின் முன் சமர்ப்பிக்கின்றேன்.

(Mr. Deputy Speaker in the Chair.)

**Sri T. P. ELUMALAI :** ஸர், பாயின்ட் ஆப் ஆர்டர், இந்த முதுகுளத்தூர் விஷயத்தில் எதிர்கட்சியில் இருக்கின்ற திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் பேசின கனம் அங்கத்தினர் அம்மையார் அவர்கள் திரு. முத்துராமலிங்க தேவர் அவர்களை ஏன் முன்னாலேயே கைது செய்யப்படவில்லை என்று கேட்கிறார்கள். இத்தனை காரியங்கள் நடந்த பிறகும் அவரை கைது செய்ததற்கே மிகவும் தவறு, அவரை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்கப்படுகிறதே, இவைகளையெல்லாம் கனம் அங்கத்தினர் அம்மையார் அவர்கள் தெரியாமல் பேசுகின்றார்களா என்பதை கேட்க விரும்புகிறேன்.

**Dr. Srimathi SATHIAVANIMUTHU :** நான் இதைப்பற்றி குறிப்பிட்டதின் நோக்கம் முத்துராமலிங்க தேவர் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது, அவர்கள் பேசிய பேச்சுகளின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரியவில்லை, அவர் பேரில் தடுப்புகாவல் சட்டத்தின் கீழ்தான் நடவடிக்கை எடுத்து கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே சர்க்கார் தரப்பில் கூறப்படும் காரணங்களின் மேல் ஏதாவது செக்ஷன் பிரகாரம் ஏன் முன்னதாகவே கைது செய்யப்பட்டிருக்கக்கூடாது என்றுதான் கேட்டேன். அவ்விதம் கைது செய்யப்பட்டிருந்தால் அதை நான் ஏன் என்று கேட்டிருக்கமாட்டேன். மறைமுகமாக என் கணையை தொடுக்கவேண்டும் என்றுதான் இப்போதும் நான் கேட்கின்றேன்.

1-5 p.m. * **Sri M. JAGANNATHAM :** மதிப்பிற்குரிய உதவி சட்டமன்றத் தலைவர் அவர்களே, மந்திரி சபையின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மந்திரி சபையின் மீது நம்பிக்கை இல்லை என்று கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த தீர்மானத்தை நான் ஆதரிக்கும்போது பலருக்கு வியப்பாகவும் வேதனையாகவும் இருக்கலாம். ஆனால் உண்மையை உணர்ந்தவர்கள் அப்படி எண்ணமாட்டார்கள் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். சமீபத்திலே கிழக்கு ராமனாதபுரம் ஜில்லாவில் நடந்த கலவரங்களின் காரணமாக ஏற்பட்ட உயிர்சேதங்களையும் பொருள் சேதங்களையும் பற்றி நினைக்கும்போது நமக்கு உண்மையிலேயே துக்கமும் துயரமும் வருகிறது. இந்த உயிர்சேதங்களிலும் பொருள் சேதங்களிலும் எந்த வகுப்பாருக்கு இந்த சேதங்கள் ஏராளமாக ஏற்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போது அங்குள்ள ஹரிஜன மக்களுக்குதான் ஏற்பட்டிருக்கிறது என்று கனம் போலீஸ் இலாகா மந்திரி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்களிலிருந்து ஹரிஜனங்களுக்கு ஏன் இவ்வளவு அதிகமான உயிர்சேதங்கள், பொருள் சேதங்கள் ஏற்படுவதற்கு சர்க்கார் அனுமதித்தார்கள் என்பதை நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். முதுகுளத்தூர் தொகுதியில் இருக்கின்ற ஹரிஜனங்களுடைய நிலைமை மோசமாக இருக்கின்ற காரணத்தினாலா அல்லது ஜாதி துவேஷம் அதிகமாக அங்கு இருந்த காரணத்தினாலா என்று பார்த்தால் இவைகளினால்தான் கலவரங்கள் ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதே சந்தர்ப்பத்தில் நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். முதுகுளத்தூர் தொகுதியில் மாத்திரம்தானா இம்மாதிரியான சமூக கொடுமைகள்



29th October 1957] [Sri M. Jagannatham]

சமூக தடைகள் இருக்கின்றன. மற்ற இடங்களில் இல்லையா என்பதை பார்க்கவேண்டும். எல்லா இடங்களிலும் இக்கொடுமைகள் இருக்கின்றன என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ளவேண்டும். இன்றைக்கு தமிழ் நாட்டில் இருக்கின்ற நிலைமையை பார்த்தால் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு முதுகுளத்தூராகத்தான் இருந்து வருகிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். அங்குள்ள ஹரிஜனங்கள் இன்றைக்கும் ஜீவாதார உரிமைகள் இல்லாமல், மனித உரிமைகள் இல்லாமல் சமூகத்தில் கேவலமாக நடத்தப்பட்டு வருகிறார்கள் என்பது உலகம் அறிந்த உண்மை. அப்படியிருக்கும்போது முதுகுளத்தூர் தொகுதியில் இருக்கின்ற ஹரிஜனங்களுக்கு மட்டும் சமூக கொடுமைகள், சமூக தடைகள் ஏற்பட்டு விட்டன என்றும் அதை பாதுகாப்பதற்குத்தான் அரசாங்கம்அங்குவிரைந்து சென்றது என்றும் கூறிக்கொள்வது உண்மையில் அது அவ்வளவு சரியானது அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். உதாரணமாக இரண்டொரு சம்பவங்கள் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். சென்னையில் இருக்கின்ற " க்யிவின் மேரீஸ் " கல்லூரியில் என்னுடைய ஜில்லாவை சேர்ந்த ஒரு ஹரிஜன மாணவி படித்துக்கொண்டிருந்தாள். அந்த மாணவி திடீரென்று ஒரு நாள் இரவு தன்னுடைய அறைக்குள் இறந்து கிடந்தாள். அதைப்பற்றி போலீஸார் விசாரணை நடத்தினார்கள். ஏதோ தற்கொலை என்று முடிவு செய்து அறிக்கை வெளியிட்டார்கள். ஆனால் பொதுஜன அபிப்பிராயம் அவ்விதமல்ல. பத்திரிகைகளும் அந்த அபிப்பிராயத்தை ஆதரிக்கவில்லை. குறிப்பாக " நவசக்தி " என்ற பத்திரிகையில் இதைப்பற்றி புள்ளி விவரங்கள் வந்திருந்தன. அந்த கல்லூரி தலைவிக்கும் சரோஜா என்ற அந்த ஹரிஜன மாணவிக்கும் ஏதோ மனஸ்தாபங்கள் இருந்து வந்தது என்றும் அதன் காரணமாகத்தான் இது நடந்தது என்றும் இது தற்கொலை அல்ல, கொலை தான் நடந்தது என்றும் புள்ளி விவரங்கள் இருந்தது. இது உண்மையா இல்லையா என்பதை சர்க்கார் மூலமாகத் தெரிந்து கொள்வதற்காக நான் கனம் சபாநயகர் அவர்களுக்கு ஒரு கேள்வி எழுதியனுப்பினேன். அந்தக் கேள்வி ரியான கேள்வி என்று சபாநாயகர் ஒத்துக்கொண்டபோதிலும், ஆறு மாதங்களுக்கு மேல் ஆகியும் இன்னும் அதற்கு பதில் கொடுக்கப்படவில்லை. அது மாத்திரம் அல்ல, எங்கள் ஜில்லாவில் மாத்தூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னால் அந்த கிராமத்தில் ஒரு ஹரிஜனப் பெண்ணை ஒரு ஜாதி ஹிந்து பலாத்கார முறையில் கற்பழித்து விட்டார்—தவறாக நடந்து கொண்டார். அது சம்பந்தமாக, அந்த ஊர் ஜாதி ஹிந்துக்கள் எல்லோரும் சேர்ந்து பயங்கர ஆயுதங்களுடன் அங்கே வந்து அந்த ஹரிஜனங்கள் எல்லோரையும் துன்புறுத்தி, அவர்களுடைய கை கால்களை வெட்டி, அந்த ஊரை விட்டே துரத்தி, அவர்களின் வீடுகளுக்கும் நெருப்பு வைத்தார்கள். அந்த ஹரிஜனங்களுக்கு போலீசார் எந்த விதமான பாதுகாப்பும் கொடுக்கவில்லை.

ஆனால் இன்று நாம் பார்ப்பது என்ன? "திடீரென்று இந்த முதுகுளத்தூர் பகுதியில் ஜாதி ஹிந்துக்கள் ஹரிஜனங்களுக்கு அநீதிகளும் கொடுமைகளும் இழைத்து துயரமும் துக்கமும் ஏற்படும்படிச் செய்து விட்டார்கள். ஆகவே ஹரிஜனங்களைக் காப்பாற்ற நாங்கள் அங்கே சென்றோம்" என்று சர்க்கார் சொல்லுகிறார்கள். இது அவ்வளவு ஒத்துக்கொள்ளக்கூடிய நியாயமான காரணம் இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், உண்மையான காரணம் என்ன என்று பரிசீலனை செய்யும்போது, அந்தக் காரணம் இந்த சபையினருக்கு மாத்திரமின்றி இந்நாட்டிலுள்ள பொது மக்களுக்கே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. அந்தக் காரணம் எதுவாக இருக்கலாம் என்றால், அது ஜாதிக் காரணம் அல்ல, அது அரசியல் காரணம் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். நான் இப்படிக் கூறும்போது நம் நாட்டில் இருக்கின்ற பொதுஜன அபிப்பிராயத்தைத்தான் பிரதிபலிக்கின்றேனே தவிர என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கூறவில்லை, காரணம், நான் கலவரப் பகுதிகளுக்கு சென்று அங்கு சுற்றி நிலைமைகளை நேரடியாக அறியவில்லை. இந்த சபையின் விவாதத்தை வைத்துக் கொண்டும் வெளியிலுள்ள பொதுஜன அபிப்பிராயத்தை வைத்துக்

[Sri M. Jagannatham] [29th October 1957

கொண்டும்தான் நான் பேசுகிறேன் என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே சமுதாயத்தில் படுபாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கும் ஹரிஜனங்களை இந்த காங்கிரஸ் சர்க்கார் அரசியல் காரணத்திற்காக, அரசியல் சூதாட்டத்தில் பணயம் வைத்து விளையாடி விட்டார்கள் என்பதை நினைக்கும்போது உண்மையிலேயே நாம் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். மகாத்மா காந்தி அடிகள் ஹரிஜன சேவைதான் தம் வாழ் நாளிலேயே அதிகமாகச் செய்திருக்கிறார்கள். அவரைப்போல் ஹரிஜன சேவை செய்த உத்தமர் இந்த நாட்டில் வேறு எந்தக்காலத்திலும் இல்லை. அவர் ஒரு நாள் "நான் மீண்டும் ஒரு பிறவி எடுக்க நேர்ந்தால் அந்தப் பிறவியில் ஒரு ஹரிஜனக் குடும்பத்தில் பிறந்து ஹரிஜனங்களுக்குச் சேவை செய்ய ஆண்டவன் எனக்கு அருள்புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்திருக்கிறார். காந்தி மகான் காட்டிய அந்த உத்தமமான, புனிதமான, வழியில் வந்த காங்கிரஸ்காரர்களால் நடத்தப்படும் இந்த சர்க்கார் காந்தி மகானின் அறிவுரைக்குச் செவி சாய்த்து ஹரிஜன மக்களுக்கு சமுதாயத்தில் இழைக்கப்படும் அநீதிகளையும் கொடுமைகளையும் தீங்குகளையும் நீக்குவதற்கு முன் வந்திருப்பார்களானால் உண்மையிலேயே இந்த சர்க்காரை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் இவர்கள் இதுவரையில் ஏனோ தானோ என்று இருந்து விட்டு பின்னர் "ஹரிஜனங்களுக்கு நாங்கள் பாதுகாப்புக் கொடுக்க முன் வந்திருக்கிறோம். முதுகளத்தூரில் நடந்தது எல்லாம் ஜாதிச் சண்டையே தவிர அரசியல் பூசல் அல்ல" என்று சொல்ல முன்வருவது ஒத்துக்கொள்ள முடியாத வாதமே தவிர வேறெதுவும் அல்ல. ஹரிஜனங்களை உண்மையிலேயே இந்த நாட்டில் மற்ற சமூகங்களைப்போல் முன்னுக்கும் கொண்டுவர வேண்டுமானால், சர்க்காரால் இயற்றப்பட்டிருக்கும் பலவிதமான சட்டங்களை உடனடியாக அமலுக்குக் கொண்டுவருவதற்கு சர்க்கார் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உதாரணமாக, ஆலயப் பிரவேச மசோதா வந்த பிறகு ஹரிஜனங்களுக்கு ஆலயங்கள் திறந்துவிடப்பட்டன. இதன் பிறகு தீண்டாமை ஒழிப்புச் சட்டங்கள் (அன்டசபிலிடீஸ் அபன்ஸஸ் ஆக்ட்) போடப்பட்டன. அதன் பிறகு சமுதாயத் தடைகள் நீக்கச் சட்டம் (ரெமுவல் ஆப் சிவில் டிஸபிலிடீஸ் ஆக்ட்) வந்தது. எத்தனையோ சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இந்தச் சட்டங்கள் எல்லாம் நாட்டில் இதுவரையில் ஏட்டில்தான் இருந்தன ; அவை "ஆர்னமெண்ட்ஸ் இன் தி ஸ்டாசூட் புக்" என்று ஆங்கிலத்தில் சொல்வது போல சட்டப்புத்தகங்களுக்கு அழகுபடுத்தும் முறையில்தான் இருந்தன ; காந்தி வழியில் நடக்கின்ற இந்த சர்க்கார், தாழ்ந்த ஹரிஜனங்களை கைதூக்கி முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற கடமையுணர்ச்சியுடன் அந்தச் சட்டங்களை அமலுக்குக் கொண்டுவர எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஹரிஜனங்கள் இன்றையதினம் எத்தனையோ கோயில்களுக்கு தாராளமாகப் போக முடியாது. இன்னும் எத்தனையோ கிராமங்களில் ஜாதி ஹிந்துக்கள் வசிக்கும் தெருக்களில் ஹரிஜனங்கள் தாராளமாகப் போகமுடியாது. அவர்கள் அங்கே காலில் செருப்பு அணிந்துகொண்டு போகமுடியாது. அவர்கள் வெள்ளையான, தூய்மையான ஆடைகளை கால் வரை தொங்கவிட்டுக்கொண்டு போனால் அவர்களுக்கு செருப்படி கிடைக்கும். அது மாத்திரமல்ல. பல இடங்களில் அவர்களைக் கொலையும் செய்துவிடுவார்கள். சாதாரணமாக, இது முதுகுளத்தூரில் மட்டும் உள்ள நிலைமை இல்லை. இது தமிழ்நாடெங்கும் உள்ள நிலைமை. இது பொதுவாக இந்தியாவில் எங்குமே உள்ள நிலைமை. அரசாங்கத்தார் முன்வந்து, ஹரிஜனங்களின் ஜீவாதாரமான உரிமைகளை—மனித உரிமைகளை—பாதுகாக்கும் முறையில் அவர்களுக்கு ஆக்கமளிப்பதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுத்திருந்தால் அதை நாங்கள் மனமாற வாழ்த்துவோம், வரவேற்போம். ஆனால், இப்போது, "முதுகுளத்தூர் பகுதியில் தேர்தலின் போது ஒரு பகுதியார்—ஹரிஜனங்கள்—காங்கிரஸுக்கு ஓட்டுப்போட வந்தார்கள். அவர்களைத் தேவர்கள் துன்புறுத்தினார்கள். ஆகவே ஹரிஜனங்களின் பாதுகாப்பிற்காக போலீஸ் நடவடிக்கை எடுத்துக்கொண்டோம்" என்று அரசாங்கத்தார் சொல்லி, கலவரத்திற்கான அரசியல் காரணத்தை மறைத்துவிட்டு ஜாதிக் காரணத்தை மட்டும் காட்டுவது சரியானது அல்ல. ஆகவேதான் நான் இந்த



29th October 1957] [Sri M. Jagannatham]

சந்தர்ப்பத்தில் இந்த சர்க்காரை வன்மையாகக் கண்டிக்க முன்வந்திருக்கிறேன் ; இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து இத்துடன் என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

SRI S. RAMASAMI NAIDU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1-
இந்த சந்தர்ப்பத்தில் நாம் வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்க்கவேண்டும். p
நம் நாட்டில் சமுதாயம் அமைந்த முறை சமூகங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. உயர்ந்த சமூகம் என்று வைத்த சமூகங்களிலிருந்து ஏவல் செய்ய வேண்டுமென்று வைத்த சமூகம் வரையில் சமூக அடிப்படையிலே நம் நாடு அமைந்திருந்தால், சமூகங்கள் தங்கள் தொழில்களை இழிவு உயர்வு என்று கருதாமல் செய்துவந்த காலங்களில் அது சரியாக இருந்ததாகத் தெரிகிறது. பின்னர், சில சமூகங்கள் தாங்கள் செய்யும் தொழில் இழிவானது என்று கருத ஆரம்பித்து அதைக் கைவிட்டுவிட்டு தாங்களும் உயர்ந்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களைப்போல் வாழ வேண்டுமென்று நினைத்தபோது இந்த ஜாதிப் பூசல்கள் எப்போதும் நிகழ்ந்து வந்திருக்கின்றன என்பதை மறந்துவிட முடியாது. 1899-ல் நாடார்கள் என்ற ஒரு வகுப்பினர் பூராவும் நல்ல முறையில் வியாபாரம் செய்து மற்ற சமூகங்களை விட அதிகமான செல்வாக்கையும் வாழ்க்கைத் தரத்தையும் பெற்ற காலத்தில், அவர்களை அடக்க வேண்டுமென்று அப்போது திருநெல்வேலி ஜில்லாவாக இருந்த இதே இராமநாதபுரம் ஜில்லாவில் பல சமூகத்தினர் கலகம் செய்தனர் ; நாயக்கர் சமூகத்தினரும், மறவர் சமூகத்தினரும், மற்றெல்லா சமூகத்தினரும் சேர்ந்து நாடார்களுக்கு எதிராக ஒரு கலகத்தை அப்போது நடத்தியதை நாம் மறந்துவிடக் கூடாது. அதே போல, இந்த நாட்டில் ஹரிஜனங்கள் தாங்கள் செய்யும் இழி தொழில்களை விட்டுவிட்டு நல்ல முறையில் விவசாயம் செய்து அந்தஸ்தாக வாழ வேண்டுமென்று எண்ணும் இந்தக் காலத்தில், அவர்களிடம் துவேஷம் கொள்ளும் தன்மை உயர்ந்த ஜாதியார் என்று சொல்லப்படும் மற்றவர்களுக்கு இருப்பது சகஜம் என்பதை மறந்துவிட முடியாது. இந்தச் சூழ்நிலையை மனதில் வைத்துக்கொண்டு, முதுகுளத்தூர் பகுதியில் நடந்த விஷயங்களை நாம் ஆராய வேண்டும். இந்த நாட்டிலுள்ள ஹரிஜன சமூகத்தினரை முன்னேற்றமடையச் செய்ய வெண்டும் என்று சர்க்கார் கங்கனம் கட்டிக்கொண்டிருப்பதை நாம் மறந்துவிட முடியாது. சந்தர்ப்பவசத்தால் அது காங்கிரஸ் சர்க்காராக இருக்கிறது. பல தரப்பட்ட மக்களும் உயர வேண்டும் என்று எண்ண வேண்டியது எந்த சர்க்காரின் கடமையும் ஆகும். இங்கே இந்த நேரத்தில் காங்கிரஸ் சர்க்கார் இருக்கிறது. காந்தியடிகள் காங்கிரசின் சார்பில் இருந்தார்கள். காந்திய வழியில் செல்லும் இந்த சர்க்கார் தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்த வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. வேறு எந்த சர்க்காராக இருந்தாலும் அதுவும் பிறரால் தாழ்த்தப்பட்டுள்ள, குறைந்த வாழ்க்கைத் தரமுள்ள ம்க்களை உயர்த்துவதற்கு முயற்சிக்கும் என்பதையும் மறந்து விடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு நாம் பார்க்க வேண்டும்.

முதுகுளத்தூர் பிராந்தியத்தில் நடந்த பூசல்கள் என்ன ? அங்கு கலவரங்கள் நடந்திருக்கின்றன என்று சொல்லப்படுகிறது, அவை என்ன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அங்கு ஹரிஜனங்களுக்கும் மற்ற வகுப்பினருக்கும் மன வேற்றுமை தோன்றக் காரணம் என்ன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஹரிஜனங்களுக்கு பல உரிமைகளை சட்ட மன்றங்கள் எல்லாம் சந்தோஷமாகக் கொடுத்திருக்கிறார்கள். பல சட்டசபைகள் பல அனுகூலமான தீர்மானங்களை அவர்களுக்குச் செய்து கொடுத்திருக்கிறார்கள். பல சர்க்கார்கள் பல உதவிகளை அவர்களுக்குச் செய்ய முன் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கீழ்த்தரமான வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு ஆசைப்பட்டு பல இடங்களில் சட்டத்தின் மூலமாக பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட உரிமைகளை அவர்களுக்குப் பிரயோகிக்க பிரயத்தனப்படுகிறார்கள். அந்தக் காலங்களில் ஹரிஜனங்கள் அந்த உரிமைகளை அனுபவிப்பதைத் தடுக்க எத்தனையோ காரியங்களைச் செய்கிறார்கள் பலர்.

[Sri S. Ramasami Naidu] [29th October 1957

இராமநாதபுரம் ஜில்லாவில் இராமநாதபுரம் தாலூகாவில் ஹரிஜன மக்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கும் சில உரிமைகளை பிரயோகப்படுத்தக் கூடிய காலத்தில் கலகங்கள் ஏற்பட்டதை நாம் மறக்க முடியாது. நாம் ஹரிஜனங்களுக்குக் கொடுத்திருக்கும் உரிமைகளை அவர்கள் முடிந்த மட்டும் அனுபவிக்க முனைந்த காலத்தில் அவர்களை பிற மக்கள் சந்தேகப் பார்வையுடன் பார்க்கிறார்கள். எவ்வளவோ இடங்களில் ஹரிஜனங்கள் ஒதுக்கப்பட்டு அவர்கள் கீழ்த்தரமான வாழ்க்கையை நடத்திக் கொண்டு வந்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகளை அவர்கள் சாவதானமாக அனுபவிக்க முடியாமல் இருந்திருக்கிறது. சாதாரணமாக நாம் பார்த்திருக்கிறோம், கலியாண காலங்களில் நாம் விருந்து சாப்பிட்டு விட்டு இலைகளை வெளியே எரிந்தால் அந்த இலைகளை ஹரிஜனங்கள்தான் எடுத்து குப்பைத் தொட்டியில் போட வேண்டும் என்ற ஒரு நியதியை நாம் வைத்திருந்தோம். உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்ற நியதியால் அப்படி வைத்திருந்தோம். மற்றும் உயர்ந்த ஜாதியில் ஒருவர் இறந்தால் அவரை ஹரிஜனன்தான் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்று வைத்திருந்தோம். அவரைக் கொளுத்துவதற்கு ஹரிஜனன்தான் காட்டை வெட்டி கட்டைகளைக் கொண்டு வரவேண்டும். விறகு வாங்கிக் கொண்டு வந்து மயானத்தில் அவரை எரிக்க வேண்டும். இன்னும் சில இழிவான தொழில்கள் அவர்கள் வழக்கமாகச் செய்து வரவேண்டும் என்ற நியதியை நாம் வைத்திருந்தோம். இதனால் பல பூசல்கள் ஏற்பட்டு வந்ததை நாம் அறிந்திருக்கிறோம். இந்த நிலைமையில் முதுகளத்தூரில் திடீரென்று கலவரங்கள் தோன்றின. அந்தக் கலவரங்களில் சில கலவரங்கள் கோர்ட்டுக்குப் போகக் கூடியதாக இருப்பதால் அவைகளைப்பற்றி நாம் இப்பொழுது பேச வேண்டிய அவசியம் இல்லை. அதனால் அது சம்பந்தமாக என்ன நடந்தது என்பவைகள் எல்லாம் நாம் பேசுவதற்கு தகுதியல்ல. அவ்விஷயங்கள் எல்லாம் கோர்ட்டில் சர்ச்சைக்கு உட்பட்டவையானபடியால் அவைகளைப் பற்றி நாம் பேச வேண்டியதில்லை. நான் ராமநாதபுரம் வாசியாகையால் நான் சில விஷயங்களைப்பற்றி நேரில் தெரிந்து கொண்டிருக்கிறேன். அவைகளை எனக்குத் தெரிந்த வரைக்கும் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் நான் அந்தப் பிரதேசங்களில் சென்று நேரடியாகப் பார்த்தேன். எனக்குத் தெரிந்த சில விஷயங்களைப்பற்றி மட்டும் பேச விரும்புகிறேன். தோழர் சசிவர்ன தேவர் அவர்கள் அறியாமலேயே உண்மைக்கு விரோதமான சில விஷயங்களைத் தன்னுடைய பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார். சில உண்மைகளை அவர் உதிர்த்து விட்டு பேசியிருக்கிறார். எனக்குத் கிடைத்த சில உண்மைகளை நான் சொல்லிக் கோள்ள விரும்புகிறேன்.

முதுகளத்தூர் தாலூகாவில் யார் எப்பொழுது வேண்டுமானாலும் ஸ்ரீமான் தேவர் நின்றால் எந்த வித்தியாசமும் இல்லாமல் முக்குலத்தவர்களும் சரி ஹரிஜனங்களும் சரி அவருக்கே வாக்களித்து வந்திருக்கிறார்கள் என்பதையும் நேற்று வரையில் அவருக்கே வாக்களித்து வந்திருக்கிறார்கள் என்பதையும் அவரே சொன்னார். அப்படி இருக்கும்போது முதுகுளத்தூரில் காங்கிரசுக்கு விரோதமாக வாக்களித்தவர்களையும் ஹரிஜனங்களையும் தூண்டிவிடுவது என்பதும் சரியல்ல. மற்றும் மறவருக்கு 55 ஆயிரம் வோட்டுகள் அதிகமாக கிடைத்திருக்கும்போது தேவர் சமுகத்துக்கு விரோதமாக எதாவது செய்ய முடியுமா என்பதை ஆலோசனை செய்து பார்க்க வேண்டும். ஹரிஜனங்கள் காங்கிரஸ்காரர்களுக்கு எதிராக வாக்களித்தாலும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு காங்கிரஸ்காரர்கள் இன்றைக்கு வாதாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மறுக்க முடியாது. சாதாரணமாக எந்த ஹரிஜனமாக இருந்தாலும் அவனுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகத்தான் காங்கிரஸ்காரர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையில் அவர்களை அங்கு தூண்டி விட முடியுமா என்பதையும் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். அப்படி காங்கிரஸ்காரர்களுக்கு எதிராக வாக்களித்தவர்களை எந்த இடத்திலாவது ஹிம்சை செய்திருக்கிறார்களா என்பதையும் ஆலோசனை செய்து பார்க்க வேண்டும். சமீபத்தில் பரமக்குடியில் தேர்தல் நடந்த



29th October 1957] [Sri S. Ramasami Naidu]

போது அங்குள்ள முக்குலத்தவர் ஜெயித்திருக்கிறார். அங்கே ஹரிஜனங்களைத் தூண்டியிருக்கிறார்களா ? பக்கத்தில் அருப்புக்கோட்டை தொகுதியில் காங்கிரஸ் அல்லாதார் ஒருவர் ஜெயித்து வந்திருக்கிறார். அங்கு ஹரிஜனங்களை தூண்டிவிட்டுருக்கிறார்களா ? ஆனால் முதுகுளத்தூரில் என்ன நடந்தது என்பதைப் பார்க்க வேண்டும். கலவரத்திற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

முதுகுளத்தூர் தாலூகாவில் இளஞ்சாம்பூர், வீராம்பல் என்ற இடங்களைத் தவிர மற்ற இடங்களில் கலவரம் நடந்ததாகத் தெரியவில்லை. வேறு எந்த இடங்களில் கலவரம் நடந்திருக்கிறது என்பது தெரியவில்லை. கலவரம் என்று சொல்லும்போது ஆரம்பத்தில் என்ன நடந்தது என்று நாம் பார்த்து கொள்ள வேண்டும். 10-ம் தேதி ஒரு சமாதான மகாநாடு நடந்தது. அங்கு என்ன நடந்தது என்பது அங்கு பிரசன்னமாயிருந்த ஸ்ரீமான்கள் தேவருக்கும் சசிவர்ண தேவருக்கும்தான் தெரிந்து இருக்கும். அங்கு காங்கிரசின் சார்பாக பிரசன்னமாயிருந்து நடவடிக்கைகளைத் தெரிந்து கொண்டவர்கள் இங்கு அங்கத்தினர்களாக இல்லை. அதனால் அங்கு என்ன நடந்தது என்பது அங்குள்ளவர்களைக் கேட்டுத்தான் தெரிந்துக் கொள்ள வேண்டும். அங்கு என்ன நடந்திருந்தாலும் எமானியூவல் கொலை செய்யப்பட்டிருகிறார். தேவர் அவர்களுடைய பேச்சின் காரணமாக அங்குள்ளவர்கள் ஆக்ரோஷம் அடைந்து அதன் விளைவாக எமானியூவல் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரிய வருகிறது. இது சம்பந்தமாக சர்க்கார் பரிசீலனை செய்ததிலிருந்து தெரிய வருகிறதேயொழிய வேறு ஒன்றும் சொல்லவில்லை. இது சம்பந்தமாக சரித்திரத்தைப் படித்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். வுல்சி என்ற மந்திரி ஒருவர் கெட்டிக்காரராக இருந்தார். அப்படி இருந்த காலத்தில் நல்ல ராஜாக்கள் இருந்தார்கள். அரசருக்குப் பக்கத்தில் இரண்டொருவர் இருக்க வேண்டும். அவர்கள் இந்த வுல்சியை விட்டு எங்களை விடுவிப்பார்கள் இல்லையா என்று கேட்டார். உடனே அவரை கொலை செய்து விடுவது வழக்கம் இருந்தது என்பது நமக்கு ஞாபகம் இருக்கிறது. எமானிவேல் கொலை கேஸ் கோர்ட்டுக்குப் போகப்போகிறது. அதைப் பற்றி நாம் அதிகமாக சர்ச்சை செய்ய வேண்டியதில்லை. அதனால் எமானியூவேல் கொலை சம்பந்தமாக பரிசீலனை எழவில்லை. அதன் பிறகு அருங்குளத்தில் பூசல் கிளம்புகிறது. 11-ம் தேதி எமானுவேல் கொலை செய்யப்படுகிறார். அதன் பிறகு 12-ம் தேதியும் 13-ம் தேதியும் அங்கே நாடகம் நடைபெறுகிறது. தோழர் சசிவர்ண தேவர் குதிரை எடுப்பு நடந்தது என்று சொன்னார். அந்தக் குதிரை எடுப்பையும் நான் பார்த்தேன். அதைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அந்தக் குதிரை எடுப்பு நடந்த கிராமத்திற்கும் நான் சென்றிருந்தேன். அந்தக் குதிரை எடுப்பிற்குப் பிறகு நாடகம் நடந்தது. 12-ம்தேதி நாடகத்தின்போது ஆரம்பத்தில் வெளியூரிலிருந்து வந்த ஹரிஜனங்கள் அல்லாதார் மற்றவர்கள் கம்பும் கையுமாக வந்திருந்தார்கள். இதைப்பற்றி உள்ளூர் மறவர்களிடம் ஹரிஜனங்கள் தெரிவித்திருக்கிறார்கள். உள்ளூர் மறவர்கள் வெளியூரிலிருந்து வந்தவர்களிடமிருந்து கம்புகளை வாங்கி வைத்துக் கொண்டு விட்டார்கள். அப்பால் நாடகத்தை நடத்தி இருக்கிறார்கள். மறுநாள் அதைப்போலவே நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. 12-ம் தேதி ஒருவர் சொன்னாராம் சாமியைப்பற்றி நாடகம் நடக்கும்போது தனிப்பட்டவர்களைப்பற்றி பாடக்கூடாது என்று சொன்னாராம். மறுநாள் 13-ம் தேதி நாடகம் நடக்கும்போது முந்திய நாள் போலவே ஹரிஜன அல்லாதவர்கள் கம்பும் கையுமாக நாடகம் பார்க்க வந்திருக்கிறார்கள். மறுபடியும் அவர்களை கம்பைக் கொடுக்கும்படி கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கொடுக்க மறுத்திருக்கிறார்கள். இன்றையும் தனிப்பட்டவர்களைப் பற்றி பாடக்கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். அதைக் கேட்கவில்லை. இன்றைக்கு பாட வைப்பதற்குத்தான் வந்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு ஒன்றும் இல்லை. கம்புகளைக் கொடுக்காததால் உள்ளூர் ஹரிஜனங்கள் பயந்துபோய் விட்டார்கள். அதனால் அந்த ஊர் ஹரிஜனங்கள் எல்லோரும் அன்று நாடகம் பார்க்காமல் போய் விட்டார்கள். விஷயத்தைப்பற்றி அந்த ஊரிலுள்ள எல்லோரும் சொல்லுகிறார்கள்.

[Sri S. Ramasami Naidu] [29th October 1957

பிறகு 14-ம் தேதி வருகிறது. அன்று இரு தரப்பாரும் சண்டைக்கு தயாராக இருக்கிறார்கள் என்ற தகவல் நமக்குக் கிடைத்திருக்கிறது. இரவு பந்தோபஸ்துக்கு வந்த போலீசார், கூட்டம் அதிகமாக இருப்பதைப் பார்த்தோ, போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்றோ போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருக்கிறார்கள். அப்படி போயிருக்கிற காலத்தில் வெளியூரிலிருந்து வந்த ஹரிஜன அல்லாதாரும் சரி உள்ளூரிலிருந்த மற்ற வகுப்பினரும் சரி ஊரில் காலை 7 மணியிலிருந்து 10½ மணி வரையில் பக்கத்தில் நின்று கொண்டே இருந்திருக்கிறார்கள். இது மறுக்க முடியாத உண்மை என்று தெரிய வருகிறது. ஒருவரும் மோதிக் கொள்ளாமலும் சண்டை நடக்காமலும் இரு பக்கமும் மூன்று மணி நேரம் நின்று கொண்டிருக்கிறார்கள். பக்கத்து கிராமத்திலிருந்து வந்தவர்கள் சமாதானம் செய்ய முயற்சித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். காலை 10½ மணிக்குப் பிறகு பக்கத்து ஊரிலிருந்து இன்னும் பலர் வந்திருக்கிறார்கள். என்ன நடந்தது என்பது தெரிய வில்லை. மோதல் கலகம் நடந்திருக்கிறது. முதலில் ஹரிஜனங்களுக்குத்தான் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இந்த இடத்தில் முதலிலே நான்கு ஹரிஜனங்கள் கொலை செய்யப்பட்டார்கள். கொலை செய்யப்பட்டது மட்டுமல்லாமல், அங்கு பக்கத்திலிருந்த ஜில்லா போர்டு பள்ளிக்கூடத்திற்குத் தீ வைத்து, பிரேதங்களைத் தூக்கிக்கொண்டுபோய் பள்ளிக்கூடத்தில் உள்ளே போட்டிருக்கிறார்கள்.

**DEPUTY SPEAKER :** I think the House has no objection to sit for five minutes more. I hope the hon. Member will finish his speech in five minutes.

**SRI S. RAMASAMI NAIDU :** அங்கு இருக்கும் கூறைக் கட்டிடங்கள், பனைக் கட்டிடங்கள் தீயினால் கருகிப்போய்விட்டன. வேறு ஒன்றும் காணமுடியவில்லை. நடந்துகொண்டிருக்கும்போதே போலீஸ் லாரி வருவதைப் பார்த்து, ஹரிஜனங்களை அங்கே தாக்கிய மற்ற வகுப்பார் ஓட, ஹரிஜனங்கள் வேகமாக அங்கு பக்கத்திலிருந்த மற்ற வகுப்பாருடைய வீடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். கலகம் நடந்துகொண்டிருக்கும் போதே அந்த இடத்திலிருந்து மற்ற வகுப்பார் ஊரை விட்டுக் காலி செய்து போக, நாலு பேர்கள் நடக்க மாட்டாதவர்கள்—நம்மை என்ன செய்யப்போகிறார்கள் என்ற நிலைமையில் இருந்த அந்த நாலு பேர்கள் அந்த வேகத்திலே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதுதான் அங்கு நடந்த சம்பவம்.

வீராம்பலிலே ஒரு கலகம் நடந்தது. அங்கு உள்ள ஹரிஜனங்கள் 16-ந் தேதி காலையிலே எந்தவிதமான தகவலும் இல்லாமல் புறப்பட்டு வந்து, ஒரு மறவர் குடும்பத்திலே நாலு பேரைக் கொன்றுவிட்டு ஒருவரைக் குத்திப் போட்டு விட்டார்கள். இது ஒரு துரதிருஷ்டவசமான சம்பவம், மிகக் கோரமான சம்பவம்.

அதைவிட்டு எலஞ்சாம்பூர் வந்த காலத்தில் துப்பாக்கி வைத்திருந்தவர்கள் விரட்டப்பட்டார்கள். பிறகு, போலீஸ் பந்தோபஸ்து இருந்தது. நான்கு நாள் ஆகிவிட்டது என்ற காரணத்தால், அடுத்த இடத்திற்குப் போக நேரிட்டபோது, மறுபடியும், எலஞ்சாம்பூரிலுள்ள தேவர் ஜாதிக்காரர்கள் சேர்ந்து வீராம்பலுக்குச் சென்று வீடுகளுக்கு தீ வைத்தார்கள். அடைப்பட்டிருந்த கோயிலுக்குத் தீ வைத்து உள்ளே இருந்தவர்களைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார்கள். கடவுள் செயலால் அதிகம் பேர் சேதப்படவில்லை. சுட்டவர்கள் பதட்டமோ என்னவோ துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட ரவை பாய்ந்து இரண்டு பேர் இறந்தார்கள், 30 பேருக்குக் காயம் ஏற்பட்டது. இந்த இரண்டு இடத்திலே இரு வகுப்பார் மோதிக் கொண்டதைத் தவிர, முதுகுளத்தூர் தாலூகாவிலோ வேறு இடத்திலோ யாருமே மோதிக்கொள்ளவில்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். செந்தக்கோட்டை, எருளாண்டிப்பட்டியில் மோதல் இல்லை என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.



29th October 1957] [Sri S. Ramasami Naidu]

போலீசார் அக்கிரமமாகச் சுட்டார்கள் என்று பலபடியாகப் பேசப்பட்டது. இந்தச் சம்பவங்களில் ஆச்சரியப்படத்தக்கது என்னவென்றால், போலீசார் மிக நிதானமாக, நல்ல வழியாக நடந்துகொண்டிருக்கிறார்களே என்பதுதான். தூவலிலே சுட்டார்கள் நாலு பேர் செத்தார்கள். உலுத்துமடையில் 3 பேர் செத்தார்கள். மற்ற இடங்களிலெல்லாம் குறைச்சலாகத்தானே செத்திருக்கிறார்கள். கூட்டமாக இருந்திருந்தால் எத்தனை பேர் செத்திருப்பார்கள் என்று கேட்கப்பட்டது. அது நியாயமான கேள்விதான். ஆனால், போலீஸ்காரர்களும் மனிதர்கள்தான். கூட்டத்தைக் கலைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் சுடுகிறார்களேயல்லாது யாரையும் கொல்லவேண்டுமென்ற எண்ணத்தில் அவர்கள் சுடவில்லை. ஆதலால், ஒரு கூட்டத்தைச் சுட்டதில் 7 ரௌண்டில் 5 பேரைச் சுட்டார்கள் என்றால் பார்த்துக்கொள்ளலாம். 35 தோட்டாவை வைத்துக்கொண்டு 50 பேரைக்கூட கொல்ல முடியும். ஆனால், அவர்கள் நிலைமையைக் கட்டுப்படுத்த, அந்தக் கூட்டத்தைக் கலைக்கும் இடத்திலும் மக்களைக் கொல்லவில்லை என்பதை மனதிலே வைத்துக்கொள்ளவேண்டும். போலீசார் வேண்டுமென்றே யாரையும் சுடவில்லை. கூட்டத்தைக் கலைக்க, நிம்மதியை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தால் சுட்டார்கள் என்று சபை ஒப்புக்கொள்ளவேண்டுமே தவிர வேறுவிதமான முடிவுக்கு வர என்ன காரணம் இருக்கிறது என்று கேட்கிறேன்.

தோட்டா 3·03 தோட்டாவாக இருந்தால் 4 பேரை துளைக்கலாம், எல்லோரையும் சுடவேண்டும் என்று எண்ணியிருந்தால் வேறுவிதமாக இருந்திருக்கும். சுட்டுத்தான் தள்ளிவிடவேண்டும் என்று நினைப்பது இல்லை. பந்தோபஸ்துக்காக சுடவேண்டும், கூட்டம் கலைவதற்காக சுடவேண்டும் என்ற வகையில் சுட்டதே தவிர யாரையும் கொல்லவேண்டும் என்று சுடுவது இல்லை என்பதை நாம் எல்லோரும் மனதில் கொள்ளவேண்டும்.

கீரந்தையில் முதல் நாள் சம்பவம்பற்றி பேசப்பட்டது. ஹரிஜனங்கள் ஆயிரம் பேர் வந்தார்கள். கெட்டிக்காரத்தனமாக ராமனாதபுரம் இன்ஸ்பெக்டர் முத்துகிருஷ்ண நாயுடு அவர்கள் நடந்துகொண்டு ஜாதித் துவேஷத்தை அன்றைக்கு கட்டுப்படுத்தாமல் இருந்திருந்தால் ஆபத்து விளைந்திருக்கும். கீரந்தையில் படை எடுத்துவிட்டார்கள் மற்ற ஜனங்கள். ஹரிஜனங்கள் அல்லாத மற்றவர்கள் 200, 300 பேர் கீரந்தையில் கூடியிருந்து இம்சை செய்துவந்தார்கள். அவர்களைக் கலைக்கவேண்டுமென்று போலீசார் வந்து, அவர்களைக் கலைப்பதற்காக வந்து, தங்களையே பாது காத்துக்கொள்வதற்காக சுட்டது என்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

திருப்பாச்சேத்தியிலும், மற்ற இடங்களிலும், இந்த காலத்தில் என்ன நடந்தது ? 400, 500 பேர் தீ வைக்கிறார்கள், பள்ளர்கள் தீ வைக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். பள்ளர்கள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் தீ வைக்கிறார்கள். போலீசார் போனால் சுடவேண்டியிருக்கும்.

திருப்பாச்சேத்தியில் தீ வைக்கும்போது அந்த ஊர் கிராம முன்சீபும், பஞ்சாயத்துபோர்டு தலைவரும் தடுத்துப் பார்த்தும் முடியவில்லை என்று சொன்னார்கள். போலீசார் சுட்டதில் 2 பேரைத்தான் கொன்றார்கள் என்றால் அவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாகச் செயலாற்றினார்கள் என்று பார்க்கவேண்டும்.

மழவராயநேந்தலில் கூட்டத்தைக் கலைப்பதற்கு எத்தனித்து அவர்களைக் கலைத்துவிட்டார்கள். இம்மாதிரியாக நடந்துகொண்டிருக்கும் போது, 'போலீசார் ஏன் முன்னாலேயே தடுக்கவில்லை ? ஏன் சுட்டார்கள் ?' என்ற முறையில் பேசுவது பொருத்தமாக இல்லை. மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று, மதுரை, சிவகெங்கை, திருப்புவனத்திலிருந்து மானாமதுரை வரைக்கும், காரியாம்பட்டியிலிருந்து நரிக்குடி வரைக்கும் கூட்டமாகச் சென்று, தீ வைக்கலாம் என்ற எண்ணம் மக்களுக்கு வந்து, சர்க்கார் ஒன்று இருக்கிறது என்று எண்ணாமல், இக்காரியத்தைச் செய்யக்கூடிய மனப்பான்மையைக் கண்டிப்பார் யாருமே இல்லையே என்று வருத்தப்படுகிறேன். ஒருவர் மற்றவரை அடித்துவிட்டால், மற்றவர் கோர்ட்டுக்குப் போகவேண்டுமென்ற நிலைமை

[Sri S. Ramasami Naidu] [29th October 1957

மாறி, மற்றவர் தானே திருப்பி அடித்துவிடுவது என்ற மனப்பான்மை இருக்கும்வரை நாட்டிலே ஒழுங்கான அரசாங்கம் எப்படி இருக்குமென்று கேட்கிறேன்.

"முன்னாலேயே சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று நண்பர்கள் கேட்கிறார்கள்." 1957-ம் வருஷத்திலே, நாகரீகம் முதிர்ந்த இந்த நாட்டு மக்கள் சிறிது தவறு செய்தாலுங்கூட, பின்னால் தாங்களே தெரிந்துகொள்வார்கள், அவர்களிடம் நாம் போய் ஏதாவது செய்தாலும் அவர்கள் மனது சங்கடப்படும், தாமாகவே திருந்திக்கொள்ள சந்தர்ப்பம் கொடுத்த கனம் முதல் அமைச்சர் அவர்களை நாம் பாராட்டவேண்டுமே யொழிய, அவர்களை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்பது பைத்தியக்காரத்தனமாகத் தோன்றுகிறது. அவர்கள் வந்திருந்த காலத்தில் இதையே நான் சொன்னேன். இப்பொழுது அவர், "மக்கள் திருந்திவிடுவார்கள், மக்களிடையே பிரவேசித்து அனாவசியமாக கசப்பு உண்டாக்கவேண்டாம். இந்தக் காலத்திலும் மக்கள் மூர்க்கத்தனமாக நடந்துகொள்வார்கள் என்றால் நம் நாட்டுக்கு என்றைக்குத்தான் விமோசனம் கிடைக்கப்போகிறதோ" என்று மிக நல்ல முறையிலே முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர்களும் அங்கே சுற்றுப் பிரயாணம் செய்து நடவடிக்கை எடுத்தது மிகப் பொருத்தம். ஆனால், சர்க்கார் நடவடிக்கை எடுத்து ஒன்றுக்கொன்று செய்தார் என்று சொல்வதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை.

நாடார்கள் இருந்த முதுகுளத்தூரில் ஏதாவது நடந்தது என்று சொல்வதற்கு ஒன்றும் இல்லை. முதுகுளத்தூரில் தாக்கவில்லை. தனிப் பட்ட சக்தியற்ற நாடார் எத்தனையோபேர் இருந்தும்கூட அங்கே ஒன்றும் நடக்கவில்லை. ஆனால், இங்கே ஏன் நடக்கவேண்டுமென்பது நாம் ஆராய்வதற்குரிய விஷயம்.

எமானுவேல் கொலையானபிறகு, இரண்டொரு கொலை நடந்ததைக் காரணமாக வைத்துக்கொண்டு, ஹரிஜன மக்கள் எங்கிருந்தாலுங்கூட. அவர்களிடையே பயத்தை உண்டாக்கி, கோஷ்டி கோஷ்டியாகச் சேர்ந்து கொண்டு, கண்ட இடத்தில் எல்லாம் தீ வைத்தார்கள். அதிலே ஒன்றைப் போற்றவேண்டும். என்னவென்றால், மறவர்களானாலும், யாரையும் கொல்லவில்லை. ஹரிஜனங்கள் நிலைமையை எதிர்த்து நிற்கவில்லை. எங்காவது ஒரு ஹரிஜனன் எதிர்த்து நின்றிருந்தால், தீ போல் எல்லா ஊர்களிலும் எதிர்ப்பு ஏற்பட்டு இன்றைக்கு நாம் நம்பமுடியாத பயங்கரமான காரியம் நடந்திருக்கும். ஆகவே, சர்க்கார் நிதானமாக எடுத்துக் கொண்ட நடவடிக்கை மிகவும் நியாயமானது. அதற்காக சர்க்காரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு நாம் நன்றி செலுத்தி, அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளையெல்லாம் இந்தச் சபை ஆதரிக்கிறது என்று நாம் தீர்மானிக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர்கள் அத்தனை பேரையும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**DEPUTY SPEAKER :** சபை 1957-ம் வருஷம் அக்டோபர் 30உ காலை 9 வரையில் ஒத்திவைக்கப்பட்டது.

The House then adjourned.

### IV.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

16. *Report of the Legislative Committee on White Paper on Education, Madras State*, 1956.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 30th October 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

**MR. SPEAKER :** நேற்று விடப்பட்ட கேள்வி 28, இன்றைய கேள்விகள் 30-B, 30-C, 30-D, எல்லாவற்றுக்கும் சேர்த்து இப்போது பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்டவர்கள் ஸ்ரீ என் கே. பழனிசாமி, ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம், ஸ்ரீ கே. சட்டநாத கரையாளர், ஸ்ரீ கே. விநாயகம்.

*Andhra-Madras border dispute*

[a] *28 *Q*.—SRI N. K. PALANISAMI AND SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the contents of the report submitted recently by Sri H. V. Pataskar regarding Madras Andhra border dispute; and

(*b*) the stand taken by the Government in regard to the recommendations made therein?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Copies of the reports of Sri H. V. Pataskar on the Andhra-Madras border dispute are placed on the Table of the House.

(*b*) An agreement has been reached between Madras and Andhra Pradesh States to accept the recommendations made by Sri Pataskar in his reports on the demarcation of the Madras-Andhra border.

*30-B *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to lay on the Table of the House a copy of the report of Sri H. V. Pataskar regarding Andhra-Madras border dispute?

and

*30-C *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to place on the Table of the House the supplementary report on the Andhra-Madras border dispute made by Sri H. V. Pataskar?

THE HON. SRI C. SUBRAMANIAM : Copies of the reports[b] of Sri H. V. Pataskar on the Madras-Andhra border dispute are placed on the Table of the House.

[a] Postponed from the list of questions for 29th October 1957.
[b] Copies separately printed and distributed to the Members.

[30th October 1957

* 30-D. *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) when the border dispute between the Madras and the Andhra States will be solved permanently;

(*b*) the recommendations of the award of Sri H. V. Pataskar in this dispute; and

(*c*) whether this Government have accepted the award of Sri H. V. Pataskar?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The border dispute between Madras and Andhra States has been settled.

(*b*) The recommendations made by Sri Pataskar on the Andhra-Madras border dispute are as follows :—

I. *Area to be transferred to Madras State from Andhra Pradesh*—

(i) *Palmaner taluk of Chittoor district.*—Two tanks irrigating lands in the villages of Javadiramasamudram and Golapalle in Tirupattur taluk, the areas covered by these tanks and the small area of forest between these tanks and the border of Andhra.

(ii) *Chittoor taluk.*—29 villages.

(iii) *Tiruttani taluk.*—291 villages.

(iv) *Puthur taluk.*—One village.

II. *Area to be transferred to Andhra Pradesh State from Madras State*—

(i) *Ponneri taluk.*—72 villages.

(ii) *Tiruvallur taluk.*—76 villages.

(iii) *Krishnagiri taluk.*—3 villages.

(*c*) An agreement has been reached between Madras and Andhra Pradesh Governments to accept the recommendations of Sri Pataskar *in toto.*

SRI N. K. PALANISAMI : படாஸ்கருடைய சிபார்சை சர்க்காரும் எற்றுக்கொண்டு அதனால் இரண்டு சர்க்காருக்கும் இடையே இருந்த தகரா று தீர்ந்துவிட்டதை எல்லாரும் வரவேற்கிறார்கள். அந்த சிபார்சின்படி ஆந்திரப் பிரதேசத்திலிருந்து நம் பிரதேசத்திற்கு வரும் இடங்கள், தனிப் பிரதேசமாக இருக்குமா ? அல்லது எந்த ஜில்லாவுடன் சேரும் ? அதுமட்டுமல்ல இப்போதுள்ள சட்டசபை நிலைமை எப்படி ஆகும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த சிபார்சை ஒட்டி பார்லிமெண்டில் ஒரு சட்டம் வரும். மற்ற எல்லா விவரங்களும் அந்தச் சட்டத்தில் நிர்ணயிக்கப்படும். எப்படியும் அவை தனிப்பிரதேசமாக இருக்கப்போவதில்லை. தனித்தாலூகாவாக வைப்பதா, எந்த ஜில்லாவில் சேர்ப்பது என்பது சட்டத்தில் தெரியும்.

SRI K. SATTANATHA KARAYALAR : திட்டுப்பிரதேசம் ‘என்கிளேவ்’ தமிழ்நாட்டோடு சேரக்கூடிய பகுதியில் எவ்வளவு இருக்கும் ? அங்கங்கே தமிழ் பேசும் மக்கள் எவ்வளவு ? தெலுங்கு பேசும் மக்கள் எவ்வளவு ? நம் பிரதேசத்தில் இருந்து போகும்படியான பிரதேசத்தில் திட்டுப் பிரதேசம் எவ்வளவு ?



30th October 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது ஆந்திரப் பிரதேசத்திற்குப் போகின்ற தமிழ்நாட்டில் முப்பதாயிரம் தமிழர்கள் அங்கே செல்வார்கள். ஆந்திர பிரதேசத்திலிருந்து வருகின்ற பிரதேசத்தில் 90 ஆயிரம் தெலுங்கர்கள் இங்கே வருவார்கள்.

SRI M. KALYANASUNDARAM : தெலுங்கர்கள் ஆனாலும், தமிழர்கள் ஆனாலும் நம் ஜனங்கள்தான். எப்படியோ வந்தாலும் சரி, போனாலும் சரி, அது எப்படியோ மாறட்டும் நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தத் தகராறு திட்டவட்டமாகத் தீர்க்கப்பட்டுவிட்டதாகச் சொன்னதை நான் பாராட்டுகிறேன். ஆனால் ஆந்திர முதல் அமைச்சர் சில தினங்களுக்கு முன்பு படாஸ்கர் சிபார்சை ஆந்திர சர்க்கார் திட்டவட்டமாக ஒப்புக்கொண்டதாகச் சொல்லவில்லை. இரண்டு பேரும் ஒப்புக்கொண்டதனால்தான் மந்திரி அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள் என்று நினைக்கலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இரண்டு சர்க்காரும் ஒப்புக்கொண்டு ஸோனல் கவுன்சிலிலும் இந்தத் தகராறு தீர்ந்துவிட்டதாக ரெக்கார்டு செய்யப்பட்டு இந்த அடிப்படையில் பார்லிமெண்டில் சட்டம் வரப்போகிறது. ஆந்திர முதல் அமைச்சர் ஏதாவது சிக்கல்களின் காரணமாக அப்படிப் பிடி கொடுக்காமல் பதில் சொல்லி இருக்கலாம்.

SRI K. VINAYAKAM : எல்லைச் சிக்கல்களை தீர்த்து விட்டது பற்றி சென்னை அரசாங்கமும், ஆந்திர அரசாங்கமும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டிருக்கும்படியான இதே நேரத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒரு சிலர் திருப்பி இந்த முடிவை மாற்றுவதற்கு கிளர்ச்சி செய்வோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் அதற்கு இரு சர்க்காரும் இடம் கொடுக்குமா ? அந்தக் கிளர்ச்சியின் காரணமாக இந்தத் தீர்ப்பு மறுபடியும் மாற்றப்படுமா ? அல்லது இந்தச் சிபார்சுப்படி எடுக்கிற முடிவுதான் கடைசியானது என கிளர்ச்சிக்கே இடம் கொடுக்காமல், ஊக்கம் கொடுக்காமல் செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : துரதிருஷ்டவசமாக இப்படிக் கிளர்ச்சி செய்யக்கூடிய வழியைச் சிலர் காட்டியிருக்கிறார்கள். இதை மற்றவர்கள் பின்பற்றினால் தகராறாகத் தோன்றுகிறது. எங்களைப் பொறுத்த வரையில் இந்தத் தகராறை நீடிக்காது, இனி எந்தவிதமான மாறுதலும் எல்லைப் பிரதேசங்களில் ஏற்படுத்தக்கூடாது என்கிற ரீதியில் தான் இந்தச் சிபார்சு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல ஸோனல் கவுன்ஸிலிலும் சொன்னோம். ஆகவே இனி எல்லையை மாற்ற வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இன்று எல்லைப் பிரச்னை தீர்க்கப்படுகிற முறையில் ஏற்கெனவே விவாதத்திற்கு உரியதாக ஆக்கப்பட்ட திருத்தணியும்அதைச்சார்ந்த பகுதிகள் இப்போது தமிழ்நாட்டில் சேருவது வரவேற்கத்தக்கது, மகிழ்ச்சி அளிப்பது என்றாலும் இதுவரையில் விவாதத்திற்கு உரியதாக இல்லாமல் இருந்த செங்கல்பட்டு ஜில்லாவின் பகுதிகள் இப்போது ஆந்திர ராஜ்யத்துடன் இணைக்கப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டது ஏன் ? எப்படிப்பட்ட நிலைமையிலும் அந்தப் பகுதிகளை இழக்கவிடமாட்டோம் என உள்நாட்டு மந்திரி அங்கே பேசியும்கூட, அதை இழந்து, ஆரணியாறு திட்டப் பகுதியையும் இழக்க நேர்ந்தது எதனால் என்பதை விளக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் பேசியதாகக் குறிப்பிட்ட வரையில் நான் அவ்வாறு உறுதி சொல்லவில்லை, சவால் செய்யவில்லை என்று சொல்லுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சமரசம் என்றால் லாப நஷ்டம் இருக்கும். இந்த விஷயத்தில் எந்தப் பகுதியும் நம்மைவிட்டுப் போகவில்லை. எந்தப் பகுதியும் போகக்கூடாது, வருவது வரவேண்டும், நம்மிடம் இருப்பது போகக்கூடாது என்கிற அடிப்படையில் சமரசத்திற்குப்

போகமுடியாது. சமரசத்திற்கு என்று போனால், வந்தாலும் கொஞ்சம் போனாலும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன்தான் பேச்சு வார்த்தை நடத்தமுடியும். ஏதோ கொஞ்சம் போகிறது என்பதற்காக அதை மறுபடியும் விவாதத்திற்குரிய விஷயமாக் வைத்துக்கொண்டு—சொந்த நலனுக்காக கிளர்ச்சியை நடத்துவது என்றால் அது சரியில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI A. A. RASHEED : Has any agreement been reached regarding the uninterrupted supply of water in Araniar Canal?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு ஒரு திட்டம் வகுப்பதற்கு ஆபீசர் அடங்கிய தனிப்பட்ட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிபார்சு செய்த பிற்பாடு அந்தச் சிபார்சின் அடிப்படையில் ஒரு முடிவு எடுக்கவேண்டும்.

SRI A. GOVINDASAMI : சமரசத்திற்குப் போகும்போது லாப நஷ்டம் இருக்கும், அதைப் பார்க்கப்படாது என்று நிதி மந்திரி அவர்கள் கூறினார்கள். எப்போது நாம் சமரசத்திற்கு போனாலும் இழந்துவிட்டு வருவதாகவே இருக்கிறது. இது நம் சர்க்காரின் திறமையற்ற தன்மையைக் காட்டுகிறதா அல்லது நியாயமான முறையில் விட்டுக் கொடுக்கும் மனோபாவத்திற்கு அடையாளமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் விட்டுக் கொடுக்கக் கூடியது ஒன்றும் இல்லை. நாங்கள் உங்களுடைய பிரதிநிதிகள், உங்களுடைய திறமை பலம்தான் எங்களுக்குப் பலம், திறமை. அந்தத் திறமைக் குறைவினால் இப்போது நம்மைவிட்டு அதிகமாகப் போய்விட்டது என்று சொல்வதற்கு இல்லை. ஜனத்தொகையில் பார்க்கும்போது 30 ஆயிரம் தமிழர்கள் போகிறார்கள், 90 ஆயிரம் பேர் வருகிறார்கள். இவ்வளவு பேர் வருவது பாரம் என்று நினைத்தால் நாம் அதிக பாரத்தைத்தான் ஏற்றுக்கொள்கிறோம். அப்படியே 402 சதுர மைல் வருகிறது, 210 சதுர மைல் போகிறது. ஆகவே நாம் இழக்கிறோம் என்ற குற்றச் சாட்டைச் சுமத்துவதற்குக் காரணமே இல்லை. இந்தத் தகராறு இன்றைக்குச் சுமுகமாகத் தீர்க்கப்படுவதைக் கண்டு நாம் எல்லோரும் மகிழ்ச்சி அடையவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI : இந்த ஆரணியாறு விஷயமாகப் பெரிய தகராறு இருப்பதற்குக் காரணம் என்ன ? முன்பு சில பகுதிகள் நம் பிரதேசத்திலிருந்து ஆந்திரப் பிரதேசத்திற்குச் சேர்க்கப்பட்டபோதும், ஆந்திரப் பிரதேசத்திலிருந்து தமிழ் பிரதேசத்திற்குச் சேர்க்கப்பட்ட போதும் இந்த மாதிரி ஒன்றும் செய்யப்படவில்லை. இதற்கு மட்டும் சர்க்கார் தனிப்பட்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்துவது போலீஸ் மந்திரி இருக்கிறாரே, அவர்கள் இருக்கக்கூடிய இடத்திற்குத் தண்ணீர் கிடைக்காது போய்விடுமே என்பதற்காகவா ?

MR. SPEAKER : I disallow that question.

THE HON. SRI C. SUBRAMANIAM : I very much regret that the hon. Member should have descended to such a level. I strongly resent it.

MR. SPEAKER : I have also disallowed that question.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்த ஆரணியாறு திட்டத்திற்கு நம்முடைய ராஜ்யம் செலவழித்த தொகை என்ன ? இதற்கு ஏதாவது ஈடாகக் கொடுக்க ஆந்திர சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த விவரங்களின்படி, ஆரணியாறினால் தண்ணீர் பாயக்கூடிய பகுதிகளில் பெரும்பாகம் நம் பகுதியில்தான், அதாவது எஞ்சியுள்ள பகுதியில் இருக்கிறது. ஆரணியாறு திட்டப்பகுதி மட்டும்தான் மற்ற பகுதியில் இருக்கிறது. பெரும்பாலும் நம் பகுதியில் உள்ள பிரதேசத்திற்கு தண்ணீர் வசதிக்கு ஒரு ஒப்பந்தம் இருக்கிறதா ?





THE HON. SRI C. SUBRAMANIAM : திட்டத்திற்கு ஏற்பட்ட செலவைப்பொருத்தமட்டிலும், ஆந்திரப் பகுதிகளில் உள்ள நிலங்களில் எத்தனை ஏகராவுக்குத் தண்ணீர் போகிறது, அதே போல் நம் பகுதிகளில் உள்ள நிலங்களில் எத்தனை ஏகராவுக்குத் தண்ணீர் போகிறது என்கிற விகிதாசாரப்படி செலவைப் பகிர்ந்துகொள்வதாக ஒத்துக்கொண்டிருக்கிறோம். பெரும்பாலான தண்ணீர் பாயக்கூடிய பகுதிகள் நம் தமிழ் நாட்டுப் பிரதேசத்தில்தான் இருக்கிறது. பிறகு எந்தவிதமான தகராறுகளும் ஏற்படாதபடி, அதாவது குடியானவர்களுக்குள் எந்தவிதமான தகராறும் ஏற்படாதபடி இருப்பதற்கு என்னென்ன முறையில் என்னென்ன திட்டங்களை வகுக்கவேண்டும் என்று, இவைகளையெல்லாம் ஆராய்ந்து சொல்ல இந்த ஆபீஸர்கள் குழு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவைகளை ஆராய்ந்து, பரிசீலனை செய்து, திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, அந்த அடிப்படையில் முடிவு செய்யப்படும்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த முடிவு எடுத்தது ஒரு பாஷை பேசும் மக்கள் அதே பாஷை பேசும் பகுதியோடு இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலா ? அல்லது இந்த இரண்டு மாகாணத்திலும் உள்ள முதலீடுகள் இருக்கிறதே அந்த அடிப்படையிலா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முதலீட்டுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பெரும்பாலான தமிழ் மக்கள் இருக்கக்கூடிய பிரதேசம் இந்தப் பக்கம் சேரவேண்டும் என்றும், இந்தப் பக்கத்தில் பெரும்பாலான தெலுங்கு மக்கள் இருக்கக்கூடிய பிரதேசம் ஆந்திராவுக்குச் சேரவேண்டுமென்ற அடிப்படையில்தான் இது தீர்க்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படை முன்பு இந்த சட்டசபை முன் சமர்ப்பிக்கப்பட்டும் இருக்கிறது.

SRI K. VINAYAKAM : இந்த எல்லை சிக்கல் இப்போது தீர்ந்ததிலே வரப்போகிற பகுதிகளிலே பாடல் பெற்ற ஸ்தலங்களான ; திருத்தணி, திருவாலங்காடு, வெள்ளிமலை போன்ற சில ஸ்தலங்கள் நமக்கு வருவது உண்மையா ? அவைகளை வரவேற்கும் நேரத்தில், இந்தச் சிக்கலை தீர்த்த பிறகு முடிவுகளை அமுலுக்குக் கொண்டுவராமல் விட்டு வைப்பதால் பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டு திரும்பக் கிளர்ச்சி செய்வதற்கு இடமிருக்கிறது. உடனடியாக நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி, இதற்கு ஒரு மசோதா கொண்டுவந்து அந்த முடிவுகளை அமுல் நடத்தும்படியாகக் கேட்டுக்கொள்ளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன சில சிவஸ்தலங்கள் வருவதெல்லாம் நான் சொல்லி அங்கத்தினர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரியவேண்டியதில்லை. இதற்கு ஒரு கேள்வியும் அவசியமில்லை. நான் முன்பே சொன்னப் பிரகாரம் யோசித்து, சமாதானமாக முடிவை ஒப்புக்கொண்டிருக்கிறோம். இதற்கு மறுபடியும் கிளர்ச்சி செய்வது வீண் கிளர்ச்சியாக முடியுமே தவிர, எந்த விதமான மாறுதலும் ஏற்படாது என்பதை இந்தச் சபையிலே உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கிளர்ச்சி மனப்பான்மை உள்ளவர்களுக்கு இதில் கிளர்ச்சி செய்ய அவசியமில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

SRI S. B. ADITYAN : கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்த பதிலிலே, அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ள தீர்ப்புப்படி, 30,000 தமிழர்கள் ஆந்திர ராஜ்யத்திற்குப் போகவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி அங்கு போக விரும்பாமல் தமிழ் நாட்டிலேயே வாழ விரும்பும் மக்களுக்கு வசதியும் உதவியும் செய்து தரப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கு அவர்கள் செல்வதை, ஏதோ ஒரு அயல் நாட்டுக்கு அனுப்பப்படுவதுபோல் பேசுகிறார் கனம் அங்கத்தினர். என்னைப் பொருத்தவரையில் நல்ல முறையிலே நிர்வாகம் நடத்த சுமுகமான ஏற்பாடுகள் செய்யவேண்டும். தமிழ் நாட்டில் ஆந்திரர்கள் இருந்தாலும் அந்த மக்களெல்லாம் நல்ல முறையில் வாழ்வதற்கு வழி செய்வது மிகவும் முக்கியமானது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். அந்த அடிப்படையில், இன்றைக்கு

[30th October 1957

ஒவ்வொரு பகுதியிலும் இருக்கக்கூடிய வேறு மொழி பேசும் மைனாரிடிகளுக்குப் போதிய பாதுகாப்புக் கொடுக்க, அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட, மந்திரிகள் கமிட்டி அமைக்கப்பட்டு ஸோனல் கவுன்ஸிலில் முடிவு ஏற்படப்போகிறது. ஆகவே, தமிழர்கள் ஆந்திராவில் இருந்தாலும், அல்லது தெலுங்கர்கள் சென்னையிலிருந்தாலும், மலையாளிகள் சென்னையிலிருந்தாலும், அல்லது தமிழ் மக்கள் கேரளத்திலிருந்தாலும், அதே மாதிரி தமிழ் மக்கள் கன்னடப் பிரதேசத்திலிருந்தாலும், அவர்கள் எங்கிருந்தாலும், அவரவர்களுடைய தாய்மொழிக்கு உரிமையும் பாதுகாப்பும் கொடுக்க ஒரு திட்டம் வகுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆகையால் மொழியைப் பொருத்தவரையில் யார் எங்கு வசித்தாலும் அதனால் கஷ்டப்படவேண்டுமென்ற நிலைமை ஏற்படவேண்டாமென்பதற்காக முயற்சித்து வருகிறோம்.

**Sri K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, இந்த எல்லைப் பிரச்னையை தீர்த்தது குறித்து சட்டசபையிலே அதை விவாதிக்க ஒரு ஏற்பாடு செய்யப்படுமா ? இந்த எல்லையிலே ஒரு பழைய விநாயகர் கோவில் இருந்ததாமே, அது எந்த வட்டாரத்தில் சேர்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : விநாயகர் நம் சபையிலேயே இருக்கிறார் என்று நினைக்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த அரசியல் சட்டத்தைப் பார்ப்பார்களேயானால், இந்த மாறுதல் செய்வதற்கு முன்பாக அந்தந்த சட்டசபைகளுக்கு. இதைப்பற்றி விவாதிக்க சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டுமென்ற விதி இருப்பதைப் பார்ப்பார்கள். ஆகவே, இது சட்டசபையில் விவாதிப்பதற்குக் கொண்டுவரப்படும்.

**Sri A. GOVINDASAMI** : இந்தப் பிரிவினை நேர்வதால் 400 சதுர மைல் நமக்கு வரக்கூடியதும், 200 சதுர மைலை நாம் இழக்கவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த எண்ணிக்கையைப் பார்க்கும்போது மகிழ்ச்சி அளிக்கிறது. நமக்கு கிடைக்கும் பகுதி வளமற்ற பகுதி. நாம் இழக்கும் பகுதி வளம் மிகுந்த பகுதி. இரண்டையும் ஒத்திட்டுப் பார்க்கும்போது நாம் இழக்கும் பகுதி வளமுள்ள பகுதி என்பதை கனம் மந்திரி அவர்கள் ஒத்துக்கொள்வார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : என்னைப் பொறுத்த வரையில் மக்கள்தான் ஒரு நாட்டின் சொத்து. இதன் அடிப்படையில் நமக்கு அதிக சொத்து வருகிறது.

**Sri K. VINAYAKAM** : ஸார், அந்த எல்லைப் பகுதியிலுள்ள விநாயகர் கோவிலுக்குச் சென்று அன்பழகன் அவர்கள் தரிசித்தபோது, அந்த விநாயகர் அன்பழகனை சபித்து " நீ ஆசிரியராக இருக்கக்கூடாது, அரசியலில் சேர்ந்து கெட்டுப்போ " என்று சொன்னது வாஸ்தவந்தானா ? (சிரிப்பு.)

*Statues of foreigners*

* 31 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state with reference to the answer given to clause (*c*) of question No. 98 on 13th July 1957 whether any decision has been reached in regard to the removal of the statues of foreigners from their places in the City of Madras?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir. The matter is still under consideration. However, the statue of Lord Willingdon on the Mount Road (near Gymkhana Club) has been removed and lodged in the Fort Museum for the present. As regards disposal of this statue and the removal of other statues of foreigners in the City, a decision will be taken in due course.



30th October 1957]

**Sri N. K. PALANISAMI** : ஸார், இந்தச் சிலைகளை எடுப்பதற்கு மத்திய சர்க்கார் தடையாக இல்லை. ஆகவே, இது சர்க்கார் முன்னிலையிலே 5 வருஷ காலமாகப் பரிசீலனையில் இருக்கிறது. இவ்வளவு தாமதத்திற்குக் காரணம் என்ன ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இதனாலே சர்க்காருக்கும் யாருக்கும் பாதகமில்லாத காரணத்தால் இதை தாமதம் செய்யலாம். இதனால் யாருக்கும் கஷ்டம் நேரிடாது என்பதால், இதற்கு முதலிடம் கொடுத்து யோசிக்கவேண்டியதில்லை என்றும், சாவகாசமாக யோசித்துக் கொள்ளலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

**Sri S. PAKKIRISAMI PILLAI** : மவுண்டு ரோடிலிருக்கும் ஸர் தாமஸ் மன்ரோவின் சிலையைப்பற்றி பரிசீலனை செய்யும்போது அந்த சிலையை மாத்திரம் அகற்றிவிட்டு, அந்த குதிரையை மாத்திரம் வைத்திருப்பதா அல்லது வேறு சிலையை அதற்குமேல் வைப்பதா என்பதைப்பற்றி யோசிப்பார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அங்கத்தினர் அவர்களின் யோசனைக்கு நான் மிகவும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

**Sri A. A. RASHEED : Sir, is there any proposal to raise statues for Katta Bomman and Tippu Sultan, who were the arch enemies of the foreigners ?**

**The Hon. Sri C. SUBRAMANYAM : Sir, this question relates the statues of foreigners. This is not the time for considering the raising of statues for our own people.**

**Sri K. R. NALLASIVAM** : அந்த அன்னியர்கள் சிலைகளை அந்தந்த இடங்களிலிருந்து விலக்குவதற்கு விசேஷ சங்கடங்கள் ஏதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருக்கும்போது ஏன் அவைகளை துரிதமாக, ஜனங்களைத் திருப்திபடுத்தும் முறையில், அவைகளை நீக்கிவிட்டு நம் தேச பக்தர்களின் சிலைகளை ஏன் அவ்விடங்களில் வைக்கக்கூடாது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இதிலே சாதக பாதகம் ஒன்றுமில்லை என்று சொன்னேன். ஆதலால் இதிலே அவசரப்பட்டு ஒன்றும் செய்யவேண்டியதில்லை.

**Sri K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, அந்நியர் சிலைகளை எடுக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்கிற அரசாங்கம், அதை சில எதிர்க்கட்சிக்காரர்கள் உடனே செய்யவேண்டுமென்று வலியுறுத்தி, வந்தும்கூட இதற்காகச்சில போராட்டங்களும், சிக்கல்களும் ஏற்பட்ட பிற்பாடுதான் அதைச் செய்யவேண்டும் என்றுதான் இந்தத் தாமதக் கொள்கையை கையாளுகிறார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : யாராவது போராட்டம் செய்துதான் நல்ல காரியங்கள் ஏற்படவேண்டுமென்று அவர்கள் நினைப்பார்களேயானால் அது தவறாகும். நல்ல காரியங்களை செய்ய நாங்கள் எப்போதும் தயாராயிருக்கிறோம். அவசியம் இல்லாத காரியங்களுக்காக போராட்டம் செய்தால் அதை அந்தந்த கட்சிகள் செய்துகொள்ளலாம். இது அவசரமில்லாத காரியம் என்பதுதான் எனது தாழ்மையான அபிப்பிராயம். இதிலே நாம் நினைப்பது, முக்கியமாக இங்கிலாந்தில் அரசர்களுடைய, இங்கிலாந்தில் அரசர்களாய் இருந்தவர்களுடைய சிலைகளை நீக்குவதில் மற்றவர்களுக்கு எந்தவிதமான மனக் கசப்பும் ஏற்படாத முறையில் அவைகளை எடுக்கவேண்டுமென்றுதான் நாங்கள் விரும்புகிறோம். அக்காரணத்தால்தான் கொஞ்சம் தாமதம் செய்து அவைகளை எடுப்பதில் எந்த விதமான சங்கடமும் இருக்காது என்று நினைக்கிறேன்.

[30th October 1957

SRI V. K. KOTHANDARAMAN : சென்ற சட்டசபை கூட்டம் நடந்தபோது 10வது விழா சுதந்திரத்தையொட்டி நம் சட்டசபைக்கு முன்னுல் இருக்கக்கூடிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியினுடைய சிலையை அகற்றி கட்டபொம்மன் சிலையை வைக்கவேண்டுமென்று கேட்டபோது அதற்கு சபாநாயகர் ஒப்புக்கொண்டால் அப்படி வைக்கலாம் என்று பதில் சொல்லப் பட்டது. ஆனுல் அப்படி அகற்றிவிட்டு வைக்கப்படவில்லை. அதற்கு சபாநாயகர் ஒப்புக்கொள்ளவில்லையா ? அல்லது கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையா ? ஏன் அதை அகற்றிவிட்டு கட்டபொம்மன் சிலையை வைக்கவில்லை.?

THE HON. SRI C. SUBRAMANIAM : சபாநாயகரைப் பற்றிய கேள்வியை இங்கு போடமுடியாது. வேண்டுமானுல் சபாநாயகரின் அறைக்குச் சென்று தகவலைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI D. S. ADIMOOLAM : வில்லிங்டன் சிலையை அகற்றிய இடத்தில் நமது முதல் கவர்னர்-ஜெனரலாக இருந்த ராஜாஜி அவர்களின் சிலையை வைப்பதற்கு பொதுஜனங்களின் ஒரு கமிட்டியை நியமிப்பது என்று இருக்கிறது. அதற்கு அங்கீகாரம் கேட்டால் அப்படி ஒரு சிலையை வைப்பதற்குள்ள அங்கீகாரத்தை சர்க்காரும், கார்ப்பரேஷனும் அந்த இடத்தில் அன்னுரின் சிலையை வைப்பதற்கு போதிய உதவி செய்து, உத்தரவும் சாதகமாய் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : **Sir, this a hypothetical question. If such a move is made, it will certainly be considered by the Government.**

SRI K. VINAYAKAM : முன்பு இம்மாதிரி போட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் இந்த அன்னியர்களின் சிலைகள் ஆங்காங்கு இருப்பதினுல் நாம் ஒரு காலத்தில் அடிமைப்பட்டவர்களாக இருந்தோம் என்கிற எண்ணத்தை அப்போதைக்கப்போது ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும் என்று இந்த சட்டசபையில் அல்ல, போன சட்டசபையில் சொன்னதாக ஞாபகம் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட கருத்தை நமது அமைச்சர் அவர்கள் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிருரா அல்லது அந்தக் கருத்தை மாற்றிக்கொண்டுவிட்டாரா ? அப்படி அந்தக் கருத்தை மாற்றிக்கொண்டிருக்காவிட்டால் நம்மிடையே யிருந்து விடுதலைக்காக பாடுபட்ட சிற்றரசர்கள், கட்டபொம்மன், திப்பு சுல்தான் போன்றவர்களின் சிலைகளை வைப்பதால், நாம் வீரத்துடன் இந்த நாட்டைப்பாதுகாக்க வேண்டும் என்பதை அச் சிலைகள் அப்போதைக்கப்போது நமக்கு ஞாபக மூட்டிக்கொண்டிருக்கும். எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்பதற்காக இதைச் செய்ய மறுக்கிருர்களா ? ஏன் அவர்களுக்காக கொஞ்சம் விட்டுக்கொடுக்கக் கூடாதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : விஞயகம் அவர்கள் காங்கிரஸ் கட்சிக்கு வந்துவிட்டார்கள் என்ற உணர்ச்சியை தற்போதைக்கு மறந்துவிட்டார் என்று நினைக்கிறேன். (சிரிப்பு.) ஆகையால் இதிலே எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்பது அல்லது சர்க்கார் கொடுப்பது என்ற பிரச்னேயே கிடையாது. இதை எந்த முறையில் எப்படி செய்து முடிப்பது என்பது தான் பிரச்னே. இதை ஒரு பெரிய பிரச்னேயாக கிளப்பவேண்டியதில்லை.

SRI P. K. MOOKIAH THEVAR : வெள்ளைக்காரர்களுடைய சிலைகளை எடுப்பது என்பது சர்க்காரின் பொது கொள்கையாக இருப்பதால் சமீபத்தில் அப்படிப்பட்ட சிலை ஒன்றை எடுப்பதற்காக முயற்சி செய்த கண்ணன் அவர்களை அரசாங்கம் தண்டித்து இருப்பது சபைக்கு ஞாபகம் இருக்கும். இப்படிப்பட்ட ஒரு கொள்கை சர்க்காருக்கு இருக்கும்போது அவர்களை விடுதலை செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுதான் அங்கத்தினர் அவர்களுக்கும் சர்க்காருக்கும் இருக்கும்படியான அடிப்படை வித்தியாசம். அவர்கள் நினைப்பது யார் வேண்டுமானுலும் அவர்கள் நியாயம் என்று



30th October 1957]

நினைக்கிறதை, அது சட்டத்திற்கு புறம்பாயிருந்தாலும் அதைச் செய்யலாம் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். இந்த நோக்கத்தில்தான் அவர் பிரச்னையைப் பார்க்கிருர்கள். சட்டப்படி சில கஷ்டங்கள் இருந்தாலும் சட்டத்தை அனுசரித்துத்தான் நடக்கவேண்டுமென்பது எங்களது கொள்கை. சட்டத்தை மீறினுல் அதற்குள்ள தண்டனையை அனுபவித்துத் தான் தீரவேண்டும். கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது ; அது பின்னுல் வரப்போகிறது ; ஆகவே இப்பொழுது யார் வேண்டுமானுலும் பிறர் கட்டிடத்தை பாம்ப் வைத்துத் தகர்க்கலாம் என்ற மட்டில் இருந்தால் அது இந்தச் சிலையோடு நிற்காது வேறு விதங்களில் கொண்டுபோய்விடும்.

SRI K. VINAYAKAM : நான் எதிர்க்கட்சிக்காரனுய் இருந்தது கடந்த சரித்திரம். அதைப் பூராவும் நான் மறந்துவிட்டேன். இப்பொழுது நான் காங்கிரஸ் கட்சிக்காரன்தான். நூற்றுக்கு நூறும் காங்கிரஸ் கட்சிக்காரன்தான், என்பதில் சந்தேகமில்லை. ஆனுல் கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் என்றே அல்லது காங்கிரஸ்காரர்கள் என்ற பாகுபாடு செய்து கொண்டு கேள்வி கேட்பதாக நமது சட்டம் சொல்லவில்லை. எது நல்லதோ அதைக் கேட்கலாம். கட்டபொம்மனை தமிழ்நாடு மக்கள் விரும்புவதால், திப்பு சுல்தானைப்பற்றி ஓய்வு பெற்ற ஒரு அரசியல் வாதி எடுத்துச் சொல்வதால் மக்கள் விரும்புவதை ஏன் மறுக்கவேண்டும் என்று சொன்னேனே ஒழிய அரசியல் சிக்கலை உண்டாக்குவதற்காக சொல்லவில்லை.

SRI M. KALYANASUNDARAM : அந்நியர்களின் சிலைகள் அகற்றப் படுவது சென்னை நகரம் சம்பந்தப்பட்ட மட்டிலுந்தானு ? இல்லை வேறு இடங்களில் உள்ள சிலைகளையும் அகற்ற நடவடிக்கைகள் எடுப்பார்களா ? உதாரணமாக, திருச்சி ரயில்வே ஜங்ஷனுக்கு முன்பு இருக்கும் ஸர் பார்லி ரோத்ராவின் சிலை 1928-ல் பல ரெயில்வே தொழிலாளர்களையும் கொலை செய்து பழி வாங்கிய ஒரு அதிகாரியின் சிலையாகும். ரெயில்வே தொழிலாளர்களுக்கு அதைக் கண்டாலே ஆத்திரம் வருகிறது. மற்ற சிலைகளோடு இச்சிலையும் அகற்றப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது சென்னை நகரத்திற்கு மட்டுமல்ல. இது ராஜ்யம் பூராவிற்கும் உள்ள கொள்கையாகும். அப்படி ஒரு சிலை இருப்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு அங்கத்தினருக்கு எனது நன்றி.

MR. SPEAKER : அடுத்தபடியாக கேள்வி 32. 33-வது கேள்வியையும் எடுத்துக் கொள்ளலாம்.

*Bird sanctuaries*

* 32 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of bird sanctuaries in the State; and

(*b*) the amount spent on them in 1956?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer [a] is placed on the table.

* 33 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of bird sanctuaries in the State; and

(*b*) the types of birds that are in those sanctuaries?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Please see answer to Question No. 32.

[a] Printed as Appendix on page 339 infra.

[30th October 1957

SRI N. K. PALANISAMI: இம்மாதிரியான "பேர்ட்ஸ் ஸாங்க்ச்சுவரீஸ்" யை அதிகப்படுத்த சர்க்காருக்குத் திட்டமிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதலிலே, சென்னைக்கு அருகில் இருக்கிற "போட்ஸ் ஸாங்க்ச்சுவரி"-யை விஸ்தரிப்பதில் இப்பொழுது அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. இம் மாதிரியான பேர்ட்ஸ் ஸாங்க்ச்சுவரீஸ்-யை நமக்கு வேண்டியபோது உண்டாக்கிக்கொள்ள முடியாது.

SRI K. SATTANATHA KARAYALAR : இதிலே சில அபூர்வமான இனங்கள் மாண்டுகொண்டிருக்கின்றன. இவைகள் சரியாக வளரவில்லை என்று சொல்லப்படுகிறது. விசேஷ பாதுகாப்பு அவைகளுக்கு அளிக்க சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. முதலிலே அங்கு தண்ணீர் வசதி போதாது. ஆனால் அதை விஸ்தரிப்பதினால் நீர்ப்பாசன வசதிக்குறைவால் மக்கள் பாதிக்கப்படக்கூடாது. அதையெல்லாம் பரிசீலனை செய்து வருகிறது. அதோடு அங்கிருந்து 30 மைல் தூரத்திற்கு யாரும் சுடக்கூடாது என்று உத்தரவு அனுசரிக்கப்பட்டு வருகிறது. மேலும் அதுபற்றி அரசாங்கம் பல வகைகளிலும் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

SRI N. K. PALANISAMI : இதற்காக இந்த சர்க்கார் எவ்வளவு செலவு செய்திருக்கிறது ? மத்திய சர்க்காரிலிருந்து ஏதாவது மானியம் கிடைத்திருக்கிறதா ?

9-30 a.m. THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுவரை அரசாங்கம் செலவு செய்யவில்லை. இதற்கென்று விஸ்தரிக்கப்பட்ட ஒரு திட்டத்தை மத்திய சர்க்காரின் உதவியோடு செலவு செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : இதிலே சில குறிப்பிட்ட பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதால் அங்குள்ள தண்ணீரில் இவைகளெல்லாம் விழுந்து அசுத்தமாகி வியாதி பரவி வருகிறது. இதனால் அனேக் பறவைகள் மாண்டு வருகிறது, என்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவ்விதம் எனக்கு தகவல் இல்லை. இந்த விதமாக இருக்கிற தண்ணீரிலிருந்து கிடைக்கும் வண்டல்கள் விவசாயத்திற்கு நல்ல உரமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

*Post-graduate basic training college*

* 34 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to open a post-graduate basic training college; and

(b) if so, the subjects to be taught therein?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) A Government post-basic training college was opened at Orathanad, Tanjore district, in July 1957.

(b) The subjects taught in the college are according to the syllabus of the University.



30th October 1957]

*Betterment levy*

* 35 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have issued orders postponing the collection of betterment levy?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI N. K. PALANISAMI : ஏற்கெனவே தண்ணீர் தீர்வை என்று ஏக்கர் ஒன்றுக்கு 40 ரூபாய் என்று சட்டம் செய்திருந்தும் இப்போது இவைகளை வசூல் செய்யாமல் இருக்கிறது. ஆகவே சர்க்கார் வேண்டாம் என்று விட்டார்களா ? அல்லது இந்த அபிவிருத்தி வரியை வாங்குவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சர்க்கார் இந்த அபிவிருத்தி வரி வாங்கத்தான் போகிறார்கள். வரியை வசூல் செய்வதற்கு முன்னால் சில சடங்குகள் செய்தாகவேண்டும். எந்தெந்த இடங்களில் எல்லாம் 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்ற கணக்கு வேண்டும், இதைப்பற்றி கூடுதலாக ஆலோசிப்பதற்கு ஒரு ஆலோசனை குழு நியமிக்கவேண்டும். தற்காலமாக எவ்வளவு ரேட் இருக்கவேண்டும் என்று பரிசீலனை செய்தாகவேண்டும். அதன் பிறகு இந்த வரி வசூல் செய்யப்படும்.

SRI K. R. NALLASIVAM : சமீபத்தில் நடந்த பொது தேர்தல் காலத்தில் இந்த அபிவிருத்தி வரி விதிப்பை ஒத்திவைத்திருப்பதாக சில மந்திரிகள் சில இடங்களில் பேசினார்கள். ஒருக்கால் இப்போது இரண்டாவது ஐந்து வருட திட்டத்திற்கு பணம் போதாது என்று நினைத்து இப்பொழுது இந்த வரியை விதிக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரின் உத்தரவு காரணமாக சர்க்கார் இப்போது துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படியொன்றும் துரிதமாக வசூல்செய்துவிட முடியாது. நான் முன்னால் சொன்னபடி சில சடங்குகள் நடந்தாகவேண்டும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : (Taken over) எஸ்டேட்டுகளில் இந்த வரிவிதிப்பு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதா ? அங்கு இருந்த குளங்களை முன்னால் இருந்த ஜமீன்தார்கள் மராமத்து செய்யாததினால், அதன் பின்னால் சர்க்காருடைய மேற்பார்வையின் பேரில் மராமத்து செய்து அபிவிருத்தி செய்யப்பட்டது. ஆதலால் இந்த அபிவிருத்தி வரியை (பெட்டர்மெண்ட் லெவி) ஜமீன்தார்களிடமே வசூல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது ஒரு அலாதியான விஷயம். இதற்கு தனி கேள்வி வேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், மந்திரி அவர்கள் ஒரு ஆலோசனை குழு நியமிக்கப்போவதாக தெரிவித்தார்கள். இந்த குழு இந்த திட்டத்திற்கு என்று மாத்திரமா, அல்லது ஜில்லாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஆலோசனை குழு ஏற்படுத்தப்போகிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதுவும் எப்படி என்று முடிவு செய்யப்படவில்லை.

SRI N. K. PALANISAMI : பெட்டர்மெண்ட் லெவி ஆக்ட் பிரகாரம் அந்த சட்டம் நிறைவேறி இரண்டு வருட காலத்திற்குள் வரியை வாங்கவேண்டுமென்றிருக்கிறது. அதற்கிடையில் சர்க்கார் சில சடங்குகள் செய்தாகவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இவைகள் எல்லாம் இந்த காலத்திற்குள் முடிந்துவிடுமோ ? அப்படியென்றால் இதை எப்போது வாங்குவதாக உத்தேசம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இன்னும் இதில் எந்தெந்த திட்டம் என்று நிச்சயிக்கவில்லை. இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து முடிவு செய்யப்படும்.

Sri N. K. Palaniswami rose.

MR. SPEAKER: The hon. Member may give notice of a separate question. We will now take up the next question, Question No. 36.

### *Strikes in textile mills*

* 36 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of strikes that took place in textile mills during 1957;

(*b*) the number of conciliation conducted by Labour Officers; and

(*c*) the number of mill owners punished under section 29 of the Industrial Disputes Act during 1957?

THE HON. SRI R. VENKATARAMAN.—(*a*) 83.

(*b*) 58.

(*c*) Nil.

SRI N. K. PALANISAMI: ஏற்கெனவே போன வருஷம் புதுக்கோட்டை கணபதி மில் தகராறில் "அவார்ட்" வெளிவந்து ஒரு வருட காலமாகியும் அதை அங்குள்ள முதலாளிகள் அமுல் செய்யாமல் இருக்கிறார்கள். சமீபத்தில் குன்னூர் பனகல் டீ எஸ்டேட்டிலும் "அவார்ட்" வந்தும் இதுவரை முதலாளிகள் அமல் செய்யவில்லை. அது மாத்திரமல்ல, அங்கிருந்து நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியும் வருகிறார்கள். ஆகவே இந்த நிலைமைகளை சீர்திருத்த என் அந்த முதலாளிகளின்மீது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: கணபதி மில் சம்பந்தமாக தனி கேள்வி போடவேண்டும். இன்னும் அந்த இடத்தில் வேலைநிறுத்தம், கதவடைப்பு முதலியவை நடந்துகொண்டிருப்பதாக தெரிகிறது. இந்த கேள்வி பஞ்சாலை தொழிற்சாலைகளைப்பற்றித்தான் கேட்கப்பட்டிருக்கின்றது. ஆகவே எஸ்டேட்டுகள் பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI S. PAKKIRISWAMI PILLAI: இந்த மாதிரியாக அடிக்கடி வேலை நிறுத்தங்கள் தமிழ் நாட்டில் அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்கு அடிப்படையான காரணம் என்ன? இதற்கான அடிப்படையான காரணங்களை வைத்துக்கொண்டு இவைகளை தடுப்பதற்கு, அதாவது வேலை நிறுத்தங்களை இல்லாமல் ஆக்குவதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சிகள் எடுத்திருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: அடிக்கடி பஞ்சாலை தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தங்கள் நடைபெறுகிறது என்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல. பிற மாகாணங்களிலுள்ள பஞ்சாலை தொழிற்சாலைகளையும் நமது ராஜ்யத்திலுள்ள தொழிற்சாலைகளையும் ஒப்பிட்டு பார்க்கும்போது நமது ராஜ்யத்தில் அதிகமாக தொழில் அமைதி நிலவி வருகிறது என்பதை தெரிவிக்க ஆசைப்படுகிறேன். முக்கியமாக இந்த பிரச்னையில்





தகராறு என்னவென்றால் வேலைப்பளு, கூலி நிர்ணயம் இவ்வித இரண்டு விஷயங்களில் தகராறு ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் முடிவு செய்வதற்கு பல கமிட்டிகள் போடப்பட்டிருக்கிறது. அதில் பல முடிவுகளும் செய்யப்பட்டு வருகிறது. இதற்கும் மேலாக பிரத்தியேகமாக வேறு எந்த நடவடிக்கையும் வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

SRI N. K. PALANISAMI: ஸார், லேபர் ஆபீஸர்களால் எத்தனை தகராறுகள் கன்ஸிலியேஷனுக்கு விடப்பட்டன? எத்தனை கேஸ்கள் அட்ஜுடிகேஷனுக்கு விடப்பட்டன?

THE HON. SRI R. VENKATARAMAN: அவைகளை இப்போது சொல்ல முடியாது. ஆனால் இதில் என்ன கொள்கை கையாளப்படுகிறது என்றால் லேபர் ஆபீஸர்கள் செய்யக்கூடிய நியாயமான முடிவுகளை, முதலாளிகள் ஒத்துக்கொள்ளாவிட்டால் அட்ஜுடிகேஷனுக்கு விடப்படுகிறது. தொழிலாளர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டால் அட்ஜுடிகேஷனுக்கு விடுவதில்லை.

SRI N. K. PALANISAMI: இப்போது சமீபத்தில் தொழிலாளர்கள் தலைவர்கள் எல்லாம் கூடி, கட்டாய ஒப்பந்தங்களை அமுல் நடத்த அதாவது சர்க்கார் நேரடியாக நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லப்பட்டது. அவ்விதம் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: இண்டஸ்டிரி முழுவதையும் சார்ந்த தொழில் தகராறுகள் ஏற்பட்டால் சர்க்காரோ அல்லது லேபர் கமிஷனரோ அதை தீர்த்து வைக்க முயற்சிக்கின்றார்கள். இது தவிர அந்தந்த யூனிட்டுகளில் ஏற்படுவதை அங்கிருக்கக்கூடிய லேபர் ஆபீஸர்கள் மூலம்தான் தீர்த்துவைக்கப்படுகின்றது.

### *Concessions to Harijan Christian converts*

* 37 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether all concessions other than educational concessions which are applicable to Harijans, are extended to Harijans converted to Christianity?

THE HON. SRI P. KAKKAN: Of the concessions applicable to Harijans other than educational concessions, only the following are extended to Harijans converted to Christianity:—

(1) Provision of house sites;

(2) provision of wells, tanks, etc., for the supply of drinking water;

(3) provision of sanitary amenities, pathways, street-lighting, burning or burial grounds;

(4) grants to private bodies engaged in social and economic uplift of the eligible communities; and

(5) assignment or lease of land for cultivation.

SRI N. K. PALANISAMI: ஸார், உத்தியோக விஷயங்களில் கிருஸ்துவ ஹரிஜனங்களுக்கும், ஹிந்து ஹரிஜனங்களுக்கும் வித்தியாசம் காட்டப்படுவது ஏன்? இவ்வித வித்தியாசங்களை நீக்கி யாராய் இருந்தாலும்சரி, ஒரே மாதிரியாக உத்தியோகங்களை கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்கு தனி கேள்வி போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

9-40 a.m. **Sri M. C. MUTHUKUMARASWAMY :** ஹரிஜன ஹிந்துக்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் எல்லாம் தங்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று ஹரிஜன கிருஸ்தவர்கள் மனக்கசப்பு அடைந்திருக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா ? அடுத்தபடியாக, ஹரிஜன ஹாஸ்டல்களில் மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில், முற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 10 விகிதமும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 15 விகிதமும் அனுமதிக்கவேண்டுமென்ற விதி இருக்கிறது. முற்பட்டவர்களுக்கு ஏன் இந்தச் சலுகை கொடுக்கப்படவேண்டும் ? பிற்பட்டவர்களாக இருக்கும் கிருஸ்தவர்களுக்கு அந்தச் சலுகை ஏன் கொடுக்கப்படவில்லை ?

**The Hon. Sri P. KAKKAN :** ஹரிஜன ஹிந்துக்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் எல்லாம் தங்களுக்கும் கொடுக்கப்படாததால் ஹரிஜனக் கிருஸ்துவ சகோதரர்கள் சிறிது மனக்கசப்பு அடைந்திருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் முதலில் சொன்னார்கள். அது உண்மை. ஆகையால்தான், சென்னை அரசாங்கம் இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்து நான் முன்பு குறிப்பிட்ட அத்தனை சலுகைகளையும் அளித்திருக்கிறது. இப்போது ஹரிஜன ஹாஸ்டல்களில் சேர்க்கப்படும் மாணவர்களில் முற்பட்ட சமூகத்தினரும் பிற்பட்ட சமூகத்தினரும் சேர்க்கப்படவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை. காரணம், எல்லா வகுப்பு மாணவர்களும் சேர்ந்து படித்தால் தீண்டாமைப் பிசாசிற்கு இடம் இருக்காது. கிருஸ்தவ ஹரிஜன சகோதரர்களுக்கும் இடம் கொடுக்கப்படுமா என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள். அதைப்பற்றித் தனியாகக் கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

**Sri M. K. SOMASUNDARAM :** ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டங்களின்கீழ் கிருஸ்துவ ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஏதாவது திட்டம் உண்டா ? அப்படியானால் முனிசிபாலிடிகளில் இருக்கும் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்கு திட்டம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN :** மத்தியசர்க்காரால் ஹிந்து ஹரிஜனங்களுக்கு மட்டும் சில சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தச் சலுகைகள் மதம் மாறிய கிருஸ்தவர்களுக்குக் கிடையாது. கனம் அங்கத்தினர் முனிசிபாலிடிகளில் வீடு கட்டும் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். இது பரியந்தம் முதல் கிரேடு பஞ்சாயத்து போர்டுகளில்தான் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றனவேயொழிய முனிசிபாலிடிகளில் கொண்டுவரப்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். ஆனால் அதையும் இப்போது அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. செலவில் 10 சதவிகிதத்தை முனிசிபாலிடி ஏற்றுக்கொண்டால் அதையும் கொண்டுவரலாம் என்று அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது.

**Sri K. ANBAZHAGAN :** ஹரிஜன மாணவர்களுக்கு பல சலுகைகள் அளிப்பதற்காக அவர்களை ஹரிஜன விடுதிகளில் அரசாங்கத்தார் தங்க வைத்திருக்கிறார்கள். சென்னை புரசையிலுள்ள அப்படிப்பட்ட ஒரு விடுதியில், 200-க்கு மேற்பட்ட மாணவர்கள் இருப்பதால் படிப்பதற்கும் தங்குவதற்கும் போதிய வசதியின்றி அவர்கள் துன்பப்படுகிறார்கள். இதற்காக அவர்கள் ஒரு நாள் முழுவதும் பட்டினி இருந்து ஹரிஜன இலாகா அமைச்சர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். அந்த விண்ணப்பம் அரசாங்கத்தால் கவனிக்கப்பட்டதா ?

**The Hon. Sri P. KAKKAN :** மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் என்று அந்த ஹாஸ்டலைப் பார்த்தார்களோ அன்றே எனக்கும் தகவல் கிடைத்தது. குழந்தை ஹரிஜன மாணவர்கள் பலர் அந்த விடுதியில் சேர்க்கப்பட்டிருந்தனர். காரணம், அவர்களுக்கு தங்குவதற்கு போதிய வசதி இல்லாவிட்டாலும் அவர்கள் முக்கியமாக தொழில் கல்வி பயில விரும்பியதால் அப்போது சேர்க்கப்பட்டார்கள். பின்பு இட



வசதிக்கு ஏற்பாடு செய்யலாம் என்ற எண்ணத்தில் அவர்கள் அப்போது சேர்க்கப்பட்டார்கள். பிறகு ஓடியாடி இடம் பார்த்து அவர்களுக்கு இட வசதி செய்துகொடுக்கப்பட்ட பிறகு அவர்கள் இப்போது சௌகரியமாக இருக்கிறார்கள்.

**Sri T. T. DANIEL : Sir, in view of the provisions in the Constitution that there shall not be any discrimination on the ground of religion, is it not proper to extend these concessions to born-Harijans also and will Government consider that aspect of the question ?**

**The Hon. Sri P. KAKKAN :** அரசியல் சட்டப்படி, மத்திய சர்க்கார் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் சலுகையைப் பொறுத்தவரையிலும், 'க்ராண்ட்-இன்-எய்ட் கோட்'-இன்படி மத்திய சர்க்கார் சலுகை கொடுக்காததால் அவர்களையும் வற்புறுத்துவதில் பிரயோஜனமில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**Sri K. B. S. MANI :** கனம் சபாநாயகர் அவர்களே, தீண்டாமையை ஒழிப்பதற்காகத்தான் ஹாஸ்டல்களில் பிற்பட்ட சமூகத்தினர் முற்பட்ட சமூகத்தினர் இருவரும் அனுமதிக்கப்படுகின்றனர் என்று கனம் மந்திரி அவர்கள் கூறினார்கள். ஆனால், அப்படி நடத்தப்படும் ஹாஸ்டல்களில் மானேஜர்களும் வார்டன்களும் தீண்டாமையை பிரதிபலிக்கும்படி செய்துவருகிறார்கள் என்பதை சர்க்கார் அறியுமா ? இதை அறிந்திருந்தால் இது விஷயமாக சர்க்கார் கடுமையாக நடவடிக்கை எடுப்பார்களா ? கிருஸ்தவ மதத்திற்கு மாறிய ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் விஷயத்தில், முனிசிபாலிடிகள் சகாயம் செய்தால், அங்கே அவர்களுக்கு வீடுகள் அரசாங்கத்தால் கட்டிக் கொடுக்கப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு முனிசிபாலிடியில் கூட அதற்கான செலவுத் தொகையில் 10 சதவிகிதம் கொடுக்க முன்வருவது சாத்தியமற்றது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அது தெரிந்தால் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

**The Hon. Sri P. KAKKAN :** கனம் அங்கத்தினரின் கேள்வியின் இறுதிப் பகுதி சம்பந்தமாக, வீடுகள் கட்டுவதற்கு ஏற்படும் செலவில் பங்கை முனிசிபாலிடிகள் ஏற்றுக்கொள்வார்களா என்பதற்கு அவர்களைக் கேட்டுக்கொண்டு வருகிறோம் என்றும், அவர்களிடமிருந்து இதுவரையில் முடியாது என்று பதில் வரவில்லை என்றும், இதற்குள் கனம் அங்கத்தினர் அவசரப்படவேண்டாம் என்றும் சொல்லிக்கொள்கிறேன். இப்போது, குழந்தைகளின் நன்மைக்காகத்தான் ஹாஸ்டல்களில் நிர்வாகிகள் எல்லோரையும் நியமித்திருக்கிறோம். ஹாஸ்டல் நிர்வாகிகள் இந்தக் கொள்கைக்கு—லட்சியத்திற்கு—விரோதமாகப் போயிருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**Srimathi T. N. ANANDANAYAKI :** கிருஸ்துவ ஹரிஜனங்களுக்கும் ஹிந்து ஹரிஜனங்களுக்கும் இடையே வேறுபாடு காட்டப்படுவதை நான் விரும்பவில்லை ; இருந்தாலும், கிருஸ்தவ மத சபைகள் கிருஸ்தவ ஹரிஜனங்களுக்கு பல சலுகைகள் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள் ; அந்தச் சலுகைகள் ஹிந்து ஹரிஜனங்களுக்குக் கிடைப்பதில்லை ; ஆகவே, அந்தச் சலுகைகளைக் கொடுப்பதில் குறிப்பிட்ட சதவிகிதத்தை அவர்களுக்கு ஒதுக்கிவிட்டால் ஹிந்து ஹரிஜனங்களும் கிருஸ்தவ ஹரிஜனங்களும் மோதிக்கொள்வதற்கு இடமில்லாமல் இருக்கும். இந்த யோசனையை சர்க்கார் கவனிக்குமா ?

**The Hon. Sri P. KAKKAN :** ஹிந்து ஹரிஜனங்களும் கிருஸ்தவ ஹரிஜனங்களும் எப்போதுமே மோதிக்கொள்ளமாட்டார்கள். காரணம், இருவரும் ஒரே இனத்திலிருந்து வந்தவர்கள்தானே ? அவர்கள் மோதிக்கொள்ளக் கூடுமானால் அவர்களை நானே ஒற்றுமைப்படுத்துவேன். கொடுக்கவேண்டிய சலுகைகளை எல்லாவற்றையும் அனுசரித்துத்தான் கொடுக்கின்றோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[30th October 1957

SRI N. K. PALANISAMI : இப்போது, ஹரிஜனங்கள் (தீண்டாமை சம்பந்த) கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்பட்டுவிட்டால், அவர்களுக்கு 'சிவில் டிஸபிலிடீஸ் ஆக்ட்' பிரகாரம் சர்க்கார் உதவி செய்யலாம். அப்படிப்பட்ட உதவி சாதாரண ஹரிஜனங்களுக்காவது கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால், ஹரிஜன கிருஸ்தவர்களுக்கும் அந்த உதவி கொடுக்கப்படுமோ ?

THE HON. SRI P. KAKKAN : சிவில் டிஸபிலிடீஸ் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளுக்கு எல்லாம், ஹரிஜனங்களுக்காக வக்கீல்கள் சர்க்காரிலிருந்து ஆஜராவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஹரிஜனக் கிருஸ்தவர்கள் சம்பந்தமாக இத்தகைய வழக்குகள் விஷயமாக, கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன்.

*Electricity Operation Subordinate Service Staff Association, Coimbatore*

* 38 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that the Labour Officer concerned met the members of the Central Committee of the Government Electricity Department of Operation Subordinate Service Staff Association at Coimbatore during May 1957 and promised to consider their grievances if they called off their strike which was due to take place on 27th June 1957;

(b) how far the Government have met their demands with regard to wage, leave and other facilities; and

(c) whether the Chairman, Electricity Board received any communication from the Central Committee about the victimisation of the members of the staff for joining the agitation during August 1957?

THE HON. SRI V. RAMAIAH : (a) The Labour Officer met the Vice-President of the Association in May 1957, but he made no promise.

(b) The Madras State Electricity Board has sanctioned the concession of rent-free quarters and free lighting to the Operation Subordinate Service Staff on a phased programme spread over a period of four years and has also increased their minimum daily allowance from 75 N.P. to Re. 1.

(c) Yes, Sir.

SRI N. K. PALANISAMI : ஏற்கெனவே 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ந் தேதியில் இந்த மாதிரியான சலுகைகள் கொடுப்பதற்கு சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மேட்டூர் மின்சாரத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். இந்தச் சலுகைகளை உடனடியாக மற்ற இடங்களிலும் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI V. RAMIAH : இங்கு குறிப்பிட்ட பகுதிகள் 1956-ல் ஒப்புக் கொள்ளப்பட்ட பகுதிகள். மற்றப்படி அதே முறையில் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது.



30th October 1957]

*Suspension of students of the Raja's College, Thiruvaiar*

* 39 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Tanjore District Board had suspended 58 students of the Raja's College, Thiruvaiar; and

(b) if so, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) The Government have no information and they have called for a report.

*Old Assembly Buildings, Mount Road*

* 40 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to dispose of the old Assembly Building in Government Estate, Mount Road?

THE HON. SRI P. KAKKAN : There is no proposal to dispose of the Assembly Buildings. The question of utilizing the office rooms, etc., for Government purposes is under consideration.

SRI N. K. PALANISAMI : கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிலுள்ள லைப்ரரியை இந்தக் கட்டிடத்திற்கு மாற்றி அங்கே வரக்கூடியவர்களை அனுமதிப்பதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்கு தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : சில தினங்களுக்கு முன்பு, "அந்தக் கட்டிடத்தை மத்திய சர்க்காருக்கு குடக்கூலிக்குக் கொடுப்பதற்கு உத்தேசம் இருக்கிறது" என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், அதை மத்திய சர்க்கார் ஆபீசுகளுக்கு நமது அரசாங்கத்தார் குடக்கூலிக்கு விடுவார்களா, அல்லது நமது அரசாங்க ஆபீஸ்களையே அங்கே வைப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : மத்திய சர்க்கார் ஒலிபரப்பு இலாகா மந்திரி ஸ்ரீ கேஸ்கர் அவர்கள் நமது பழைய அஸெம்பிளிக் கட்டிடத்தைக் கேட்டார்கள். அந்த கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களுக்கு கொடுக்கவேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, is it a fact that the 9.50
Madras Local Library Authority has requested the Government to a.m.
place the old Assembly Buildings at its disposal and may I know whether the Hon. Minister for Public Works can give us any information about it?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இன்று சட்ட மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை அடுத்த தேர்தலில், மக்கள் தொகை அடிப்படையில் இதைவிட ஒன்றரை மடங்கு மிகுதியாகும் என்ற காரணத்தால், சென்னை மவுண்ட் ரோடில் உள்ள புதிய சட்ட மன்றக் கட்டிடத்தை யாரிடத்திலும் தத்தம் செய்துவிடாத முறையில் இன்னும் நான்கு ஆண்டுகள் வரை அதைப் பாதுகாப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நிச்சயம் பாதுகாப்பார்கள் என்று சொல்லுகிறேன்.

[30th October 1957

**SRI A. A. RASHEED: Sir, is there any proposal to utilize the old Assembly Hall as a National Theatre ?**

THE HON. SRI P. KAKKAN : கடைசியாக அக்டோபர் மாதம் 4-ம் தேதி கூடிய மந்திரி சபை இந்த மாதிரி கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், சினிமாப் படங்கள் நடத்துவதற்கும் இதை உபயோகிப்பது நல்லது என்று பரிசீலனை செய்திருக்கிறது. வெளியே இருக்கும் சில ஆபீஸ்களை இங்கு கொண்டு வந்தால் வாடகை மீதமாகும். அதையும் வைக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER.

### MESSAGE FROM THE COUNCIL.

MR. SPEAKER : I have to announce to the House the following message, dated 29th October 1957, from the Hon. Chairman, Madras Legislative Council.

"In accordance with Rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras District Boards (Amendment) Bill, 1957 (L.A. Bill No. 13 of 1957), as passed and agreed to by the Council on the 29th October 1957, without any amendment and signed by me."

## III.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY—*cont.*

MR. SPEAKER : Let us now continue the discussion on the No-Confidence Motion. Hon. Member Sri K. Ramachandran will begin the discussion today. I would like to remaind the hon. Member that the time allotted to him is only 15 minutes.

SRI K. RAMACHANDRAN : Sir, I have arranged with my Friend to my right to have a few more minutes from his time.

MR. SPEAKER : I would like to make it clear to all Members that if any Member belonging to any party takes more than 15 minutes allotted to him, the corresponding extra time taken by him will be deducted from the time allotted to that party. With this specific understanding, I have no objection to the Members taking more time.

SRI K. RAMACHANDRAN : கனம் சபாநாயகர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட இந்தப் பூசல்களைப்பற்றியெல்லாம், யார் எதைச் செய்தார்கள் என்பவைகளைபற்றி யெல்லாம் நான் இப்போது பேசவரவில்லை. ஆனால் சர்க்காரைப் பொருத்தவரையில், இந்த சம்பவங்களுக்கு அவர்கள் எவ்வளவு தூரம் காரணம் என்ற முறையிலே இதைப் பேசி கனம் அங்கத்தினர் கல்யணாசுந்தரம் அவர்கள் கொண்டு வந்த சர்க்காரின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

முதலிலே, பரமக்குடியில் நடந்த தோழர் இம்மானுவேல் கொலைச் சம்பவம் இதற்கு ஆரம்பமாக இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த இம்மானுவேலைப் பொருத்தவரையிலும், அவர் எனக்கு நெருங்கிய நண்பர். நான் வக்கீல் தொழில் ஆரம்பித்த காலத்திலிருந்தே, அவர்



30th October 1957] [Sri K. Ramachandran]

லா ஏஜெண்ட் என்ற முறையிலே எனக்கு மிகவும் பரிச்சயமானவர். அதுவுமின்றி, தேர்தல் காலத்திலே, காங்கிரசின் கோட்டை என்று பல வாறுகச் சொல்லப்பட்ட பரமக்குடித் தொகுதியிலே நான் சுயேட்சை அபேட்சகராக நின்று, அவர்களின் மறைமுக உதவியினால் ஜயிக்க முடிந்தது என்பதைச் சபைக்கு அறிவித்துக்கொள்கிறேன். அந்த முறையிலே நண்பர் இம்மானுவேல் கொலை செய்யப்பட்ட காரணத்தை சர்க்கார் சரியான முறையில் விசாரணை செய்து அதற்குக் காரணமாயிருந்தவருக்கு நல்ல முறையிலே தண்டனை அளிக்கவேண்டும் என்று நான் மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்திலே இதை வியாஜமாக வைத்துக் கொண்டு அடுத்தாற்போல் கீழ்த்தூவல் கிராமத்தில் ஐந்து பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற கதையை நாம் மிகவும் வருத்தத்துடன் பார்க்கவேண்டியிருக்கிறது. நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் இம்மானுவேல் கொலை செய்யப்படவேண்டியவர் அல்ல என்று சொன்னதை நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். அதே மாதிரி இந்த ஐந்து பேர்களும் சுட்டுக் கொல்லப்படவேண்டியவர்கள் அல்ல என்பதைச் சர்க்கார் அறிந்துகொள்ளவேண்டுமென்பதை அறிவுறுத்துகிறேன்.

துப்பாக்கிப் பிரயோகத்தைப் பொருத்தவரையிலும் உடனடியாக வெங்கடேஸ்வரன் அவர்களை நியமித்து அவர்கள் விசாரித்தார்கள். அதை ஒரு ஜுடிஷியல் என்கொயரியைப் போலக் கருதவேண்டும். அந்த விசாரணையை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று இன்றைக்கு அரசாங்கம் சொல்லுகிறது. ஆனால் நாம் அதை ஒப்புக்கொள்ள முடியுமா என்ற ஒரு விவரத்தைப்பற்றி அதிக கவனமாகப் பார்க்க வேண்டியிருக்கிறது.

முதலில் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைப் பொருத்தவரையில் மந்திரி அவர்கள் பல துப்பாக்கிப் பிரயோகங்களைக் காண்பித்து இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தின்மீது விசாரணை நடத்தியது சரியாகப்போய் விட்டது. அடிப்படையில் வித்தியாசம் இல்லை என்று சொன்னார்கள், தோழர் கல்யாணசுந்தரம் சொன்னார்கள், மற்ற துப்பாக்கிப் பிரயோகங்களில் கூட்டம் அதிகமாக இருந்ததாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் இதில் அப்படி அல்ல. இதற்கு மேலே இன்னொன்றும் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் குற்றம் சாட்டப்பட்டிறது சர்க்கார். அதிலே......

SRI R. CHIDAMBARA BHARATHI : On a point of order, Sir.

SRI K. RAMACHANDRAN : I do not know whether it is a **point of order or not.**

MR. SPEAKER : Let me hear the hon. Member. I shall decide after that.

SRI R. CHIDAMBARA BHARATHI : கனம் அங்கத்தினர் பேசும்போது இம்மானுவேல் அவர்களை நன்றாகத் தெரியும் என்றும், இம்மானுவேல் கொலை செய்யப்படவேண்டியவர் அல்ல, அவர் என்னுடன் நெருங்கிய பழக்கம் உடையவர் என்றும், அதே போல் அந்த ஐந்து பேர்களும் சுடப்படவேண்டியவர்கள் அல்ல என்றும் சொன்னார்கள். அந்த ஐந்து பேர்களுடன் அவருக்கு நெருங்கிய பழக்கம் உண்டா, அவர்களைப்பற்றி ஏதாவது தெரியுமா என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : இது பாய்ண்ட் ஆப் ஆர்டரில் வரவில்லை. அந்தக் கேள்வியை கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது கேட்கலாம், அல்லது தலைவர் அவர்கள் பதிலில் அளிக்கலாம். இந்த விஷயத்திற்கு பதில் அளிக்கவேண்டிய அவசியமில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் வேண்டுமானால் பதில் அளிக்கலாம்.

MR. SPEAKER : வேண்டுமானால் சொல்லட்டும்.

[30th October 1957

SRI S. LAZAR : Sir, I think under Rule 64 of the Assembly Rules, any Member is entitled to put a question to elicit information on a point put forward by the Speaker. But, it is often said that Members cannot put such questions.

MR. SPEAKER : Let me hear the point of the hon. Member.

SRI S. LAZAR : My hon. Friend Sri Chidambara Bharathi wanted to elicit certain information on a point raised by hon. Member Sri Ramachandran. I think it is relevant under Rule 64 of the Assembly Rules. But, when such questions are put, it is often said that the speakers should not be interrupted unless it was for the purpose of raising a point of order.

MR. SPEAKER : Any point of information can be raised after the speech is over and not in the middle of a speech. Point of order alone is allowed to be raised in the middle of a speech. To convert ordinary questions into points of order is also undesirable.

SRI K. RAMACHANDRAN : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய நேரம் போகக்கூடியதாக இருக்கிறது.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் கவலைப்படவேண்டாம். இந்த நேரத்தை அவர்கள் நேரத்திலிருந்து எடுத்துவிடுகிறேன்.

* SRI K. RAMACHANDRAN : சபாநாயகர் அவர்களே, கனம் சிதம்பர பாரதி அவர்கள் கேட்டதற்கும் என்னால் பதில் சொல்ல முடியும், முடியாமல் இல்லை. அவர்களை நேரடியாகத் தெரிந்து சொல்லாவிட்டாலும் அவர்களைப்பற்றி விசாரித்ததில், அவர்களுடைய ஆண்டிவிடெண்ட்ஸை பற்றி விசாரித்துப் பார்த்ததில் அவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல என்ற உறுதியை சொல்லுகிறேன். இது சர்க்காருக்கும் தெரிந்தே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்பற்றி வெங்கடேஸ்வரன் அவர்களின் ரிப்போர்ட்டில் விரிவாக இருக்கிறது என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

இதில் நான் சொல்ல வந்தது சர்க்கார் எப்படிப் பொருப்பாளி என்பதைப்பற்றித்தான். துப்பாக்கிப் பிரயோகத்தைப் பொருத்தவரையில் உள்ள குற்றச்சாட்டு, சர்க்கார் போலீஸை அங்கு உபயோகப்படுத்தி, மறவர்களையும், மற்றவர்களையும் சிக்க வைத்து அதில் நேரடியாகத் தலையிட்டிருக்கிறது என்ற முறையிலேதான் அந்தக் குற்றச்சாட்டு இருக்கிறது.

இப்படிப் பார்க்கும்பொழுது இன்றைக்கு சர்க்கார் ஒரு பார்ட்டியாக கருதப்பட வேண்டியதாக இருக்கிறது. குற்றம் சரியாக இருக்கலாம் அல்லது சரி இல்லாமல் இருக்கலாம். அது விசாரித்துப் பார்க்கவேண்டிய விஷயம். இந்தக் கேஸில் சர்க்கார் ஒரு பார்ட்டியாக இருப்பதால் அதை நன்றாக விசாரணை செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர்களே ஒரு பார்ட்டியாக இருக்கும்போது அவர்களே விசாரணை நடத்துகிறோம் அப்படி நடத்திய விசாரணையை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று சொல்வது அவ்வளவு நியாயமாகத் தோன்றவில்லை. அவர்களே ஒரு பார்ட்டியாக இருந்து அவர்களே விசாரணைக்கு ஏற்பாடு செய்து அதன் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விசாரணையின் முடிவை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று சொன்னால் அது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்பதை இந்த சபையிலுள்ளவர்களே தெரிந்துகொள்ளவேண்டும். அது சட்டத்திற்கும் நீதிக்கும் பொருத்தம் அல்ல. இதில் ஒரு அடிப்படையான வித்யாசம் இருக்கிறது. அதற்கு திரு. வெங்கடேஸ்வரனுடைய விசாரணை மட்டும் போதாது என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இன்னொன்று இருக்கிறது. வெங்கடேஸ்வரன் விசாரணை நடத்தும் காலத்தில் நான் அங்கேயே இருந்தேன். அந்த சமயத்தில் அவருக்கு சென்னையில் இருக்கக்கூடிய யாரிடமிருந்தோ தகவலும்



30th October 1957] [Sri K. Ramachandran]

அவருடன் காண்டாக்டும் இருந்திருப்பதாகத் தெரியவந்தது. அதற்கு வேண்டிய ஆதாரங்களும் இருக்கின்றன. அந்த விசாரணையின் போது . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM : யாரிடம் எப்படி காண்டாக்ட் இருந்தது என்பதைப்பற்றி தயவு செய்து சொல்லவேண்டும்.

SRI K. RAMACHANDRAN : அங்கே விசாரணை நடந்துகொண்டிருந்த காலத்தில் கனம் நிதி மந்திரி அவர்களும, கனம் போலீஸ் மந்திரி அவர்களும் அந்தப் பக்கங்களில் சுற்றிப்பார்த்துக்கொண்டிருந்து சில இடங்களில் சில தகவல்களை தெரிவித்திருக்கிறார்கள். அதை வேண்டுமானால்..........

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினருக்கு நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால் விசாரணை நடந்து கொண்டிருந்த காலத்தில் நானாவது போலீஸ் மந்திரியாவது எந்த விதமான அபிப்பிராயத்தையும் தெரிவிக்கவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். நான் ஒரு வக்கீல் என்ற முறையில் சட்டம் என்ன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். வரம்புக்கு மீறி நான் ஒன்றும் தகவல் கொடுக்கவில்லை. எந்த விதமான அபிப்பிராயமும் நான் தெரிவித்துக்கொள்ளவில்லை என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI K. RAMACHANDRAN : அம்மாதிரி இதில் அநேகம் விஷயங்கள் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகம் கீழத்தூவலில் நடந்திருக்கிறது, இன்னும் சில இடங்களில் நடந்திருக்கிறது. இது எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். இரண்டு பார்ட்டிகளுக்கும் க்ளாஷ் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் போலீசார் ஒரு சாரார் மீது மட்டும் துப்பாக்கி பிரயோகம் நடத்தி இருக்கிறார்கள். அங்கு இருந்தது சந்தர்ப்பத்தைப் பார்த்தால் இரண்டு ஜாதிகளுக்கும் மோதல் ஏற்பட்டிருக்கிறது. அப்படி மோதல் ஏற்படுவதை வைத்துக்கொண்டு ஒரு பார்ட்டி செய்வதையே மனதில் வைத்துக்கொண்டு வெங்கடேஸ்வரன் அவர்கள் தன்னுடைய ரிப்போர்ட்டை எழுத ஆரம்பித்திருக்கிறார். அந்த நிலைமையில் வெங்கடேஸ்வரன் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய ரிப்போர்ட்டைப் பார்க்கவேண்டும். வெங்கடேஸ்வரன் எந்த அடிப்படையில் இந்தப் பிரச்னையை அணுக ஆரம்பித்திருக்கிறார் என்பதைப் பார்க்கவேண்டும். அவருடைய ரிப்போர்ட்டில் 24-ஆவது பக்கத்தில் என்ன எழுதியிருக்கிறார் என்பதைப் பார்க்கவேண்டும்.—

**" . . If there was no opposition to what the Police Party was doing or wanted to do in the village; there could have been no clash between the party and the villagers, and there would have been no need for the Police to resort to firing."**

என்று சொல்லுகிறார். அவருடைய அபிப்பிராயத்தில் போலீசார் ஜனங்கள் மீது துப்பாக்கி பிரயோகம் அவசியமாக செய்திருக்கவேண்டும் என்ற அடிப்படையில் தன்னுடைய விசாரணையை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அவர் தன்னுடைய விசாரணையை ஆரம்பித்திருக்கிறார். ஆகையினால் அதிலிருந்து முக்கியமாக தெரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால் போலீசாருக்கும் ஜனங்களுக்கும் மோதல் இருந்தது என்ற அடிப்படையில் இந்த விசாரணையை ஆரம்பித்திருக்கிறார். அதற்கு சாதகமாக வரக்கூடிய சாட்சியங்களை மட்டும் அவர் எடுத்துக்கொண்டிருக்கிறார். அதற்கு விரோதமாக ஏதாவது சாட்சியம் வந்தால் அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருக்கிறார். போலீசாருக்கு விரோதமாக எந்த சாட்சியம் வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளாமல் ஜனங்களுக்கு விரோதமாக வரக்கூடிய எந்த சாட்சியத்தையும் அவர் எடுத்துக்கொண்டிருக்கின்றார் என்பது இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

அடுத்தபடியாக அவர் சொல்லுகிறார். சாட்சிகள் எல்லாம் கிராமங்களிலிருந்து வந்தன என்று சொல்லுகிறார். கிராமத்திலிருந்து வந்த சாட்சிகளில் ஒன்பதில் மூன்று முதல் ஐந்து சாட்சிகள் வரையில் சம்பவத்தை

நேரடியாக பார்த்தவர்கள் என்று சொல்லுகிறார். மற்ற சாட்சிகள் எல்லோரும் அந்த கிராமத்தின் ஒரு ஹரிஜன் உள்பட விசாரித்திருப்பதாகச் சொல்லுகிறார். அவர்கள் எல்லோரும் என்ன சொல்லுகிறார்கள் என்றால் அவர்கள் எல்லோரும் கிளிப்பிள்ளையைப்போல் சொல்லுகிறார்கள் என்று வெங்கடேஸ்வரன் சொல்லுகிறார். இப்படிப்பட்ட முடிவுக்கு அவர் எப்படி வந்தார் என்பதுதான் தெரியவில்லை. விசாரணை நடந்துகொண்டிருந்தபோது சர்க்கார் தரப்பில், அதாவது போலீஸ் தரப்பில் சர்க்கார் வக்கீல் ஒருவர் உட்கார்ந்துகொண்டு விசாரணையை கவனித்துக்கொண்டு தான் வந்தார். அவர் அங்கு ஒரு வார்த்தைகூட (ஸஜ்ஜஷன்) சொல்லவில்லை. விசாரணையை நடத்திய அதிகாரி சாட்சிகளை எப்படி கிளிப்பிள்ளை மாதிரி சொல்ல படிப்புச் சொல்லிக்கொடுத்ததைக் கண்டுகொண்டார் என்பதுதான் தெரியவில்லை. அதுதான் நமக்கு தெரியவில்லை.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** The hon. Member being a lawyer, I suppose he knows what is known as 'demeanour of the witnesses'.

**SRI K. RAMACHANDARAN :** நாங்கள் எல்லோரும் அங்கேயே நின்றுக்கொண்டிருந்தோம். சாட்சிகளுடைய டெமினர் அவைகளைக் காட்டக்கூடியதாக இருந்தது என்று சொல்லுகிறார். அங்கு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய முடியாமல் இருந்தது. அவ்வளவு கடுமையாக இருந்தது அங்கு நடந்த விசாரணை. அதிகாரி எடுத்துக்கொண்ட அடிப்படையில் எந்த விதத்தில் சாட்சிகளுக்கு எப்படி டெமீனர் கற்பிக்க முடியும் என்பதை ஆலோசிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சாட்சிகளை எந்த விதத்திலும் கற்பிக்க முடியாத நிலையில் இருந்தது அவருடைய விசாரணை. மூன்று நான்கு பேர்கள் விசாரித்ததில் எல்லோரும் ஒரே மாதிரியாகச் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு சாட்சியும் சொன்னதைப்பற்றி விவரிக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த மூன்று நான்கு சாட்சிகளும் ஒரே மாதிரி சொல்லுவதால் மற்ற சாட்சிகளை விசாரிக்கவேண்டிய தேவை இல்லை என்று வெங்கடேஸ்வரன் சொல்லுகிறார். மற்றவர்களுடைய சாட்சியங்களைப்பற்றி அவர் எப்படி தெரிந்துகொண்டார் என்பது தெரியவில்லை. அப்படி விசாரிக்க தேவை இல்லை என்று சொல்வது சட்டத்திற்கு உகந்ததாக இருக்குமா என்பதை சபை கவனிக்கவேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த சாட்சிகள் படிக்க வைக்கப்பட்டு கொண்டு வந்தார்கள் என்று சொல்லுகிறார். அந்த முடிவுக்கு அவர் எந்த ஆதாரத்தின் மூலம் வந்தார் என்பது தான் தெரியவில்லை. துப்பாக்கி சூடு நடந்த காலத்தில் இரவில் போலீஸ் அங்கேயே தான் இருந்தார்கள். மறுநாள் பூராவும் அங்கேயே தொடர்ந்துதான் போலீஸ் இருந்தார்கள். துப்பாக்கிப் பிரயோகம் நடந்த அன்றைக்கு கிராமத்திலிருந்து வெளியே ஒருவரும் போகவில்லை. அந்த கிராமத்திற்குள் வேறு யாரும் வரவில்லை, வரவும் முடியவில்லை. அந்த மாதிரியான நிலைமை இருக்கும்போது சாட்சிகள் அதுவும் சாதாரணமாக ஆடு மாடு மேய்க்கும், களைபிடுங்கி ஜீவனம் செய்யும் சாட்சிகள் எப்படி பாடம் படிக்க முடியும், அவர்களுக்கு எப்படி ட்யூடர் செய்யப்பட்டிருக்க முடியும் ? இதை நம்பினால் வெங்கடேஸ்வரன் அவர்களுடைய அறிக்கையையும் நம்பலாம். அதன்மீது நம்பிக்கையும் வைக்கலாம்.

அடுத்தபடியாக எஸ்டேட் மானேஜர் அங்கே வந்திருந்தார்கள், அவரிடம் இந்த சாட்சிகள் ஒரு விஷயத்தையும் சொல்லவே இல்லை என்று சொல்லுகிறார். இது சம்பந்தமாகவும் நான் ஒன்று சொல்லுகிறேன். நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி அங்கேயே போலீஸ் பார்ட்டி இருந்தது. போலீஸ் ஜனங்களை சுட்டிருக்கிறார்கள். அங்கேயே இரவு 9 மணி வரைக்கும் அவர் அங்கே இருந்திருக்கிறார். அவர் பின்னால் போலீஸ் பார்ட்டி இருக்கிறது. அந்த ஊரில் அவர் இறங்கி நடந்து செல்லவில்லை. ஜீப் காரில்தான் சென்றார். அப்படி இருக்கும்போது அவரை ஜனங்கள் எப்படி அணுக முடியும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். முன்னால்





சுட்டிருக்கிறார்கள், ஐந்து பேர்கள் இறந்திருக்கிறார்கள். அந்த நிலைமையில் அவரை ஜனங்கள் எப்படி அணுக முடியும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அதன் பிறகு பிரேத விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. அந்தச் சமயத்தில் அவரிடம் போய் கட்டி வைத்து சுட்டார்கள் என்று சொல்ல முடியுமா ?

அடுத்தபடியாக 3½ மணிக்கு....

**THE HON. SRI C. SUBRAMANIAM :** கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டு விஷயங்களைப்பற்றி தெளிவாகச் சொல்லவேண்டும். முதலில் ஒன்றைப்பற்றி கேட்கிறேன். அவைகளைப்பற்றி என்ன சொல்லுகிறார் என்பதைத் தெரிந்துகொண்டு அதற்குப் பதில் சொல்லவேண்டும். துப்பாக்கி பிரயோகம் நடந்தது என்ற தகவல் பரமக்குடியில் இருக்கும் அவருக்கு எப்பொழுது எப்படிக் கிடைத்தது என்பதை முதலில் சொல்லவேண்டும். அதை முதலில் சொன்னால் பின்னால் மற்றொன்றைப்பற்றி கேட்கிறேன்.

**SRI K. RAMACHANDRAN :** துப்பாக்கிப் பிரயோகம் நடந்த சம்பவம் எனக்கு மறுநாள் கிடைத்தது. எப்படிக் கிடைத்தது என்று சொல்லத் தயாராக இல்லை.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** மறுநாள் கிடைத்தது என்றால் 15-ந் தேதி கிடைத்ததா ? ஐந்து பேரை கட்டி வைத்து சுட்ட சம்பவம் என்று எழுதினீர்களே அதைத் தெரிந்து எழுதினீர்களா அல்லது தெரியாமல் எழுதுனீர்களா ?

**SRI K. RAMACHANDRAN :** நான் எழுதியிருப்பது எல்லாம் 14-ம் தேதி எழுதியது தான். நான் எழுதிய லெட்டரில் போலீசார் தேவையில்லாமல் சுட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். வேறு ஒன்றும் இல்லை, இரண்டு விஷயங்களை நான் குறிப்பிட்டிருக்கிறேன். வேறு விஷயத்தைப்பற்றி நான் சொல்லவேண்டியதில்லை. ஆனால் போலீஸார் வேண்டுமென்றே தேவை இல்லாத சமயத்தில் ஒரு க்ளாஷும் இல்லாத சமயத்தில் அங்கே சுட்டிருக்கிறார்கள் என்றுதான் எழுதியிருக்கிறேன். நான் எழுதிய லெட்டருக்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை.

அடுத்தபடியாக 3-30 மணித் தந்தி, 7-30 மணித் தந்தி விவகாரத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். 3-30 மணித் தந்தி எப்படி வந்திருக்கிறது என்று விசாரித்தும் ஆள் தெரியவில்லை என்று சொல்கிறார்கள். விசாரித்த சமயத்திலே போலீஸ் பார்ட்டிக்காக நாலு போலீஸ்காரர்கள் முதுகுளத்தூரில் சாப்பாடு எடுக்கப்போனபோது பேசிக்கொண்டிருந்தார்கள், அந்த இடத்தில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டதாகத் தெரிந்து யாரோ தந்தி அனுப்பியதாகச் சொல்கிறார்கள். அதன் விவரம் தெரியவில்லை. மேலத்தூவலிலிருந்து 7 மைல் தூரம் நடந்து சென்று அகரமம் தந்தி ஆபீசிலே 7-30 மணித் தந்தியைக் கொடுத்திருக்கிறார்கள். இதில் எந்தவிதமான வித்தியாசமும் இருப்பதாகத் தெரியவில்லை. இருக்கக்கூடிய சங்கதிகளைக் கோர்ட்டின் முன்னால் சமர்ப்பிப்பார்கள். யார் கொடுத்தார்கள், எந்தச் சந்தர்ப்பத்தில் கொடுத்தார்கள் என்பதையெல்லாம் கவனிக்கவேண்டியது 'பாக்ட் பைன்டிங் கமிஷனு'டைய வேலை. யார் கொடுத்தது என்பதையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டிய வேலை எங்களுடையதல்ல என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

Mr. Servaikara Thevar is a material witness for the prosecution.

அவர்தான் "இன் வெஸ்ட்"டிலே கையெழுத்து போட்டிருக்கிறார் என்று சொல்கிறார். அவர் பயப்படுகிறதாக போலீஸ்காரர்கள் மெமோ கொடுத்தார்களா ? விசாரித்தார்களா ? ஏன் சேர்வைக்காரருக்குப் பாதுகாப்பு

கொடுத்து, கொண்டுவரவில்லை ? ஒரு மனிதருக்குப் போலீசார் பாதுகாப்பு கொடுக்க முடியாதா ? அவர் வந்திருந்தால் நமக்கு விரோதமாக சாட்சி சொல்வார் என்பதை வைத்துக்கொண்டு அவரை சாட்சியாக விசாரிக்கவில்லை.

**MR. SPEAKER : The time allotted to the hon. Member, viz., 15 minutes is over. I will give him four more minutes, so that he may finish at 10–15.**

**SRI K. RAMACHANDRAN** : அந்த சாட்சியை விசாரிக்காதது கண்டிப்பாக அவர்களுக்கு விரோதமாக இருக்கும் என்ற காரணத்திற்காகத்தான் என்று நான் சொல்கிறேன். இந்த சட்டசபையே கோர்ட்டாக மாறுவதற்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி மாறி, அவரை இங்கே வரவழைத்து உண்மையை அறிந்துகொள்வதிலே யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது.

" மோடிவ் " என்று சொல்கிறார்கள். இம்மாதிரி போலீசார் சுட்டதற்கு " மோடிவ் " இருந்ததாக யாரும் சொல்லவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆடு மேய்க்கிறவனும், களை பிடுங்குபவனும் போலீஸ் சுட்டதற்கு மோடிவ் இருந்ததாகச் சொல்லவில்லை என்று சொல்வது பொருத்தமாக இல்லை. 12-ந் தேதி ஆட்களைத் தேடிப் போயிருக்கிறார்கள். கொலைக் கேசுக்குச் சம்பந்தப்பட்ட இரண்டு பேர்களைத் தேடிப் போயிருக்கிறார்கள், போலீஸ்காரர்கள், ஆனால், அவர்கள் அங்கே இல்லை. 14-ந் தேதி " இருப்பார்கள் என்று எண்ணி பெரிய போலீஸ் கோஷ்டியுடன் போனோம் " என்று சொல்கிறார்கள். அதுவும் பகலில். அங்கே ஒரு போலீஸ் அவுட் போஸ்ட் இருக்கிறது. இருந்தும், இவர்கள் எல்லாம் தேடிப் போயிருக்கிறார்கள் என்று சொன்னால், வேறு நோக்கம் இருக்குமா என்று நாம் உணர்ந்துகொள்ள முடியாதா ? கிராமத்தார்கள் சாட்சி சொல்லவில்லை என்று சொல்வதைக்கொண்டு நிராகரித்துவிடவேண்டுமென்று சொல்வது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. அதிலேகூட, ஒரு சாட்சியை விசாரணை செய்யும்போது, உங்கள் முத்துராமலிங்க தேவர் என்ன செய்யமுடியும் என்று இன்ஸ்பெக்டர் சொன்னார் என்று சொல்கிறார். அதிலிருந்தே மோடிவ் இருக்கிறது, சர்க்கார் தலையீடு இருக்கிறது என்று அதை ஒரு காரணமாகக் கொள்ளலாம். இதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்றால், ஜுடிஷியல் என்க்வைரி வைக்கவேண்டும். அப்பொழுது மோடிவ் இருக்கிறதா என்றெல்லாம் விசாரிக்கலாம். இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையிலே ஆர்குமெண்ட் கேட்காத நிலைமையிலே இதற்கு ஒரு மோடிவ் நாம் காட்டவில்லை, மற்ற சாட்சிகள் கொடுக்கவில்லை என்று சொல்வது பொருத்தமாக இல்லை.

கூட்டத்திற்கு என்ன திட்டம் இருந்தது ? அவர் ஏதாவது சொல்லியிருக்கிறாரா ? அதைப்பற்றி ஏதாவது விசாரித்திருக்கிறாரா ? 300 பேர்கள் கூடுவதற்கு என்ன மோடிவ் வந்தது ? தாக்கவேண்டுமென்று திட்டமா ? ஹரிஜன தேவர் " க்ளாஷ் " இல்லை. பத்து மைல் தூரத்திற்கு அமைதியாக இருக்கிறது. என்ன மோடிவ் என்பதை விசாரித்திருக்கவேண்டும். ஆதாரம் இல்லை என்று மோடிவ் பிரச்னையைக் கிளப்புவதும் சரியாக இல்லை.

" மெடிகல் எவிடென்ஸ் "-ஐ **Critical** -ஆகப் பார்த்தோமானால், மெடிகல் எவிடென்ஸைப் பொறுத்தவரையிலும் எக்ஸ்பெர்ட் சொன்னதற்குள்ளே வித்தியாசம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், இதை நாம் ஒரு ஜுடிஷியல் என்க்வைரியிலே பரிசீலனை செய்தோமானால் மெடிகல் எவிடென்சிலே உள்ள குறைபாடுகள் தெரியும். கண்டிப்பாக கூட்டிவைத்து சுட்டிருக்க முடியும் என்பது கூடிய அளவுக்குத் தெரியவரும் என்று மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





மெடிகல் எவிடென்ஸைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் கொடுத்திருக்கும் சில சான்றுகளைப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். அவருடைய அறிக்கையின் 11-வது பக்கத்தில் " ஹை வெலாசிடி புல்லெட் " டைப்பற்றி அபிப்பிராயம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, **" The Senior Advocate for the Thevars urged that a high velocity bullet would not be deflected from its path by struking a bone. "** என்று சொல்லியிருக்கிறார். " இது மோடியினுடைய அபிப்பிராயம். இது நம்பத் தகாததாக இருக்கிறது " என்று சொல்கிறார். இந்தக் கேசிலே நாம் கவனிக்கவேண்டும் : தூரத்தைப் பொறுத்தவரையிலும் வித்தியாசம் இருக்கலாம். ·303 புல்லெட்டு உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு மாறாக அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய " ரூலிங் " என்ன என்று பாருங்கள். 12-வது பக்கத்தில் **" If, however, bone is encountered by the missile in its passage through the body, there may be considerable deflection or splintering of bone or both " (John Glaistor)** என்று அவர் சொல்கிறார். **" There may be** அல்லது **" There may not be "** என்ற அர்த்தத்திலே வரக்கூடிய ஒரு ஆதாரத்தை எடுத்துக்கொள்கிறார்கள். ஹை வெலாசிடி புல்லெட்டைப்பற்றி ஒன்றும் இல்லை. சாதாரணமாக புல்லெட் என்று சொல்கிறார். ஆகவே, இதைப்பற்றியெல்லாம் மோடி அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கொடுத்து இருப்பதுதான் பொருத்தமாக இருக்கும் ; மற்றது இருக்க முடியாது என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுவும் போக, பைர் ஆர்ம்ஸ் எக்ஸ்பெர்ட்டை விசாரிக்கும்போது அவர் கூட சில சமயம் 'ஒப்புக்கொண்டுவிட்டார். ஆனால், **" W. 19 erred in agreeing with this theory"** என்று வெங்கடேஸ்வரன் அவர்கள் சொல்கிறார். அவர் ஒப்புக்கொண்டால், " அது தவறு, சரியல்ல " என்று சொல்லிவிட முடியாது.

பைர் ஆர்ம்ஸ் எக்ஸ்பெர்ட் இன்னொரு இடத்தில் சொன்னபோது, அதைப்பற்றி இவர் சொல்கிறார். . . . **" W.21 hastily agreed but immediately added "** . . என்று. " ஒப்புக்கொண்டார், சரியாக ஒப்புக்கொள்ளவில்லை " என்று சொல்கிறார் அறிக்கையிலே. விசாரணையின் போது நான் இருந்தேன் என்ற முறையில் நான் ஒன்று சொல்கிறேன் : போலீஸ்காரர்களுக்குச் சாதகமாக பதில் வரவழைக்க என்னவெல்லாம் செய்யமுடியுமோ அவ்வளவும் விசாரணை அதிகாரி செய்தார் என்று நான் சொல்லிக்கொள்வதிலே பயப்படப்போவது இல்லை. உதாரணமாகச் சொல்கிறேன் : ஆயிரம் பேர் என்பது போலீசாருடைய கதை. இவர்களைக் கொண்டுவரவேண்டுமென்று விசாரணை அதிகாரிகள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்று நேரில் இருந்த எனக்குத் தெரியும்.

" கீழத்தூவலில் எத்தனை மறவர் வீடுகள் இருக்கும் ? " என்று கேட்டார்.

" 160, 170 இருக்கும் " என்று பதில் சொன்னார்கள்.

" பக்கத்திலே எந்த ஊர் இருக்கிறது ? "

"மேலத்தூவல் இருக்கிறது."

" அங்கே எத்தனை மறவர் வீடுகள் இருக்கின்றன ? "

" அங்கே 10, 12 வீடுகள் இருக்கின்றன "

இதை நாம் கூட்டிக்கொண்டே வந்து 172 அல்லது 182 என்று வைத்துக்கொள்வோம்.

" பக்கத்தில் என்ன ஊர் இருக்கிறது ? "

" உடைகுளம் இரண்டு மைலில் இருக்கிறது."

அப்பொழுது அதிகாரி, " அங்கே ஒன்றும் இல்லையா, வேறு வழியில்லை " என்ற முறையில் இருந்துவிடுவார்.

"அடுத்தாற்போல் மகிஷையில் உடையார்கள் இருக்கிறார்கள் " என்று சொல்ல, வேறு வழியில்லை என்று வேறு கேள்வி கேட்பார்.

“சாமிகுளத்தில் கோனார்கள் இருக்கிறார்கள்” என்று சொல்ல, “தேவர்கள் இல்லை” என்று மிகவும் கஷ்டப்பட்டு ஆயிரம் பேருக்கு இழுத்து ருவதற்குக் கஷ்டப்பட்டுப் பார்த்து முடியாமல் போய்த்தான், அந்தப் போலீசாருடைய “வெர்ஷன்” ஐ “உண்மைக்குப் புறம்பு” என்று சொல்லி 300 என்று கொண்டுவந்திருக்கிறார் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இம்மாதிரியான முறையில் “என்க்வைரி” இருந்தது என்பதை நான் சொல்லிக்கொள்வேன்.

ஆகையால், மெடிகல் எவிடென்ஸைப் பொறுத்தவரையில் அதிலே இருக்கக்கூடிய குறைபாடுகளை வைத்துக்கொண்டு இன்றைக்கு “போலீசார் சுட்டது சரி” என்ற முடிவுக்கு வருவது சரியல்ல. ஜுடிஷியல் என்க்வைரி வைத்தால், உண்மையிலே போலீசார் சுட்டிருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகளை காட்ட முடியும் என்று நான் இந்த இடத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

19-ம் பக்கத்தில், போலீஸ் ரெயிடுகளுக்குப் போவது எல்லாம் இன்பர்மேஷன் லீக் அவுட் ஆகவில்லை என்று சொல்கிறார்கள். “அவுட்போஸ்டு ஒன்று அங்கே இருக்கிறது, வாட்ச் போட்டிருக்கிறார்கள். போலீசார் வாட்ச் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்” என்று சொல்கிறார்கள் அப்படியானால், 300 பேர் திடீரென்று ஆயுதபாணியாக வர முடியுமா என்று பார்க்கவேண்டும். 300 அல்லது 1,000 பேர் கூடுவதற்கான இடமா என்று அங்கே பார்த்து வந்தவர்கள் தெரிந்துகொள்ள முடியும். இன்றைக்கும் கல் சூளை (ப்ரிக் கில்ன்) யிலிருந்து ஒரு கல்கூட குறையவில்லை. ஒரு செடி, செத்தைகூட அசைக்கப்படவில்லை. இதையெல்லாம் பார்க்கும்போது, இந்த விசாரணை சரியான முறையில் நடத்தப்படவில்லை என்று தான் சொல்லவேண்டும். இந்த விசாரணை சர்க்காருடைய ஆதரவுக்காக செய்யப்பட்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்காக ஜுடிஷியல் என்க்வைரி வருமானால் நிச்சயமாக இதனுடைய உண்மைகளைத் தெரிந்துகொள்ளமுடியும். அதற்காக ஜுடிஷியல் என்க்வைரி வேண்டுமென்பது அந்தப் பிராந்திய மக்களுடைய அபிப்பிராயம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உருத்திமடையிலும் இதுமாதிரி சுட்டதாகச் சொல்கிறார்கள். போலீஸ் துப்பாக்கிப் பிரயோகங்களுக்காவது ஜுடிஷியல் என்க்வைரி கண்டிப்பாக கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சமாதானத்தைப் பொறுத்தவரையில், சில வார்த்தைகள், தேவர் அவர்களைப்பற்றி எனக்கு முன்னால் தெரியாது. ஸ்ரீ வெங்கடேசுவரன் அவர்களுடைய விசாரணை நடந்தபொழுது அவர்களை நான் நேரடியாக சந்திக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. 4, 5 நாட்கள் பரமக்குடியில் இருந்தார்கள். அமைதியை ஏற்படுத்துவதற்கு என்ன வழி செய்வது என்பதுபற்றி தேவர் அவர்களை கலந்து ஆலோசித்ததுபற்றி எனக்குத் தெரியும். கம்யூனிஸ்டு தலைவர் ஸ்ரீ பி.ராமமூர்த்தி, சா. கணேசன் அவர்கள், சிவஞான கிராமணி அவர்கள் ஆகியோர்கள் சென்னையிலிருந்து அவர்களைத் தேடிக்கொண்டு அங்கே வந்தார்கள். கிராமம் கிராமமாகப் போய் அமைதியாக இருக்கவேண்டுமென்று பிரசாரம் செய்வதுபற்றி ஆட்சேபணை உண்டா என்று தேவர் அவர்களை கேட்டார். தேவர் அவர்களும், ஆட்சேபணை இல்லை, வருகிறேன் என்று சொன்னார்கள். பிறகு அந்த முயற்சி தோல்வி அடைந்தது. எதனால் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். விசாரணை நடந்துகொண்டிருக்கும்பொழுது கலெக்டர் அவர்கள் தேவர் அவர்கள் மக்களுக்கு ஒரு ஸ்டேட்மெண்டு விடுத்தால் அமைதியான நிலைமை ஏற்படும் என்று ஆர்.டி.ஒ. அவர்களை அனுப்பிவைத்தார். ஆர்.டி.ஒ. அவர்களும் தேவர் அவர்களிடம் வந்து ஒரு ‘லீப்லெட்’ கொடுக்கவேண்டுமென்று கேட்டார். “அரசியல் காரணத்தினால் இரண்டு ஜாதிகளின் வேற்றுமையினால் உடமையும் உயிரையும் இழந்து நாம் கஷ்டப்படுகிறோம். நாம் இதையெல்லாம் மறந்து ஒற்றுமையாக வாழ்வோம். நமக்கு முருகன் அருள் புரிவாராக”. இம்மாதிரி நான் எழுதுகிறேன், அவர் சொல்லுகிறார். சர்க்கார் ஒத்துழைப்புடன் நான் கிராமம் கிராமமாகச் சென்று அமைதியை நிலைநாட்டுவதற்கு பாடுபடுவதற்கு தயாராக இருக்கிறேன் என்று எழுதிக்கொடுத்து அனுப்பினார். கலெக்டர் அவர்கள் “சர்க்கார்



ஒத்துழைப்புடன்,” என்ற வார்த்தையை எடுக்கவேண்டுமென்று திருப்பி அனுப்பினார். “144 தடை உத்தரவு போட்டிருக்கிறார்கள். நான் ஒரு பார்லிமெண்டு அங்கத்தினர். நான் பேசினால் அந்த இடத்தில் கூட்டம் சேரும். கூட்டம் கூடினால் 144 தடை உத்தரவு இருக்கும் நிலைமையிலே என்ன ஆகும் என்று உங்களுக்குத் தெரியும். சர்க்காருக்கு அமைதி இருக்கவேண்டுமென்று அக்கறை இல்லையா ? சர்க்கார் ஒத்துழைப்புடன் என்று ஏன் சொல்லக்கூடாது ? அதற்கு ஒத்துக்கொண்டால்தான் நான் கையெழுத்து போடுகிறேன்” என்று தேவர் அவர்கள் சொல்லி அனுப்பினார்.

“பீஸ் கான்பரன்ஸ்” நடந்த இடத்திலே விசாரித்து அறிந்துகொண்ட விஷயம் இன்னொன்று. “பீஸ் கான்பரன்ஸில்” காலம் சென்ற தோழர் இமானுவல் அவர்களும் தேவர் அவர்களும் கிராமம் கிராமமாகப் போய்-மீடிங் போடுவதற்கு ஒத்துக்கொண்டார்கள். ஆனால் அங்கு வந்தவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இந்தக் காரணத்தினாலே கலெக்டர் அவர்கள் இந்த முயற்சியை கைவிட்டார்கள். இம்மாதிரி முயற்சிகள் வெற்றி அடைந்திருந்தால் அந்தப் பகுதியிலே இம்மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்குமா என்று இந்தச் சபை சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த சமாதான முயற்சிகள் வெற்றி பெற்றிருந்தால் அங்கே எந்தவிதமான போலீஸ் துப்பாக்கி பிரயோகத்திற்கு அவசியம் ஏற்பட்டிருக்காது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் ஏதோ எதிர்க்கட்சி மெம்பர்கள் சொன்னார்கள் என்று நினைத்துக்கொள்ளவேண்டாம். அங்கு இருக்கும் 4 சப்-இன்ஸ்பெக்டர்களும் ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் தான் இந்தக் கலவரங்களுக்கு ஆதிகர்த்தாக்கள். அவர்களை மாற்றிவிடவேண்டும். அவர்களை , மாற்றிவிட்டால் கலகம் ஏதும் நடக்காது என்று சொன்னோம். அவர்களை அந்த இடத்தைவிட்டு மாற்றிவிட்டால் என்ன குடியா முழுகிப்போய்விடும் ? அதைச் செய்வதில் என்ன தவறு என்று எனக்குப் புரியவில்லை. சர்க்கார் அமைதியை பாதுகாக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் அங்கே கைநழுவ விட்டுவிட்டார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைதியைக் கொண்டுவந்தார்கள் என்று ஒப்புக்கொள்ளவேண்டாம் என்று நினைத்தார்களோ ? அல்லது அரசியல் காரணத்திற்காக சண்டைகள் நீடிக்கவேண்டுமென்று நினைத்தார்களோ ? அல்லது போலீஸ் பலத்தைக்கொண்டு அடக்கிவிடலாம் என்று நினைத்தார்களோ ? எனக்குத் தெரியாது. சர்க்கார் கடமையில் தவறிவிட்டதன் காரணத்தினால் தான் அங்கே கலவரங்கள் பலப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

“பிரஸ் ரிபோர்டர்களைப்பற்றி” நான் கண்டிப்பாக ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அங்கே அவர்கள் யாரும் சொல்லுவதைக் கேட்டு எதுவும் எழுதவில்லை. எல்லா இடங்களுக்கும் நேரிலே சென்று, அங்கே போய் விசாரித்து நடந்ததைத் தெரிந்துகொண்டு போலீஸ்காரர்களையும் மற்றவர்களையும் “கான்டாக்ட்” செய்து பிறகு தான் ரிபோர்ட் கொடுத்தார்கள். அந்த அளவுக்கு அவர்கள் செய்யவில்லை என்றால் சர்க்கார் இந்த விசாரணை நடத்தவேண்டிய அவசியம் வந்திருக்காது. துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றி விசாரிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. உண்மையிலேயே மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பிரஸ்காரர்கள் தங்களுடைய சுதந்திரத்தைக் கொண்டு அந்தச் சமயத்தில் மிகவும் பாடுபட்டார்கள். அவர்களைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன் என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, நான் சொல்லிக்கொள்ளுவது என்னவென்றால் சர்க்கார் சரியாக நடந்துகொண்டிருந்தால் இங்கு கொண்டுவந்திருக்கிற குற்றச்சாட்டு ஏற்பட்டிருக்காது என்பதுதான். அந்தப் பகுதியிலே அபிவிருத்தி திட்டம் வேண்டுமென்று பலகாலமாக நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். கீழ் ராமநாதபுரம் பகுதி மிகவும் பின்தங்கிய பிரதேசம். பல வருஷங்களாக ‘டெஸர்ட்’ செய்யப்பட்ட பிரதேசம். பல வருஷங்களாக நாங்கள் கேட்ட தண்ணீர்த் திட்டங்களும் பிளாக் ‘டெவலப்மெண்டு’ திட்டங்களும்

அங்கு வரமுடியாத நிலைமையிலே, சர்க்கார் எங்கள் பிரதேசத்திற்கு மனம் உவந்து அளித்தது துப்பாக்கி சூடுகளும் ரத்த வெள்ளங்களும் தான் என்பதை இந்தச் சபையின் முன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அங்கே சர்க்கார் போலீஸ் ஆட்சி நடத்தினார்கள், நடத்திக்கொண்டிருக்கிறார்கள். போலீஸ் ஆட்சியின் விளைவாக அங்கு வாழும் மக்களுக்கு சர்க்காரின் பேரில் உள்ள நம்பிக்கை குறைந்துவிட்டது. மக்கள் வேறு, அரசாங்கம் வேறு என்று பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் ஏற்பட்ட மனோபாவம் அந்தப் பகுதி மக்களிடையே வேரூன்றிக் கொண்டிருப்பதால், அவர்களுக்கு அரசாங்கத்தின் பேரில் நம்பிக்கை இல்லை. ஆதலால் அரசாங்கத்திற்கு எதிராக கனம் அங்கத்தினர் ஸ்ரீ கலியாணசுந்தரம் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

இப்பொழுது போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்பற்றி அந்தக் கிராமங்களிலெல்லாம் கேஸ்கள் இருக்கின்றன, அவைகளெல்லாம் கோர்ட்டுகளுக்குப் போகும், ஆகையினாலே நீதி விசாரணை அவசியமில்லை என்ற ஒரு வாதம் வந்தது. கேஸ்கள் இருக்கிற விஷயங்களைப்பற்றி கோர்ட்டுகள் விசாரிக்கட்டும். ஆனால் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுபற்றி கேஸ்கள் இருக்காது. போலீஸ் மக்களை துரத்திச் சுட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். காரைத் தள்ளுங்கள் என்று கூட்டிக்கொண்டு போய் துரத்தி சுட்டார்கள் போலீஸ்காரர்கள் என்று சொல்லப்படுகிறது. போலீஸ் துப்பாக்கி ரத்தக் கரையை அரசாங்கம் கையிலே ஏந்திவிட்டார்கள். மூன்று, நான்கு கிராமங்களிலே துப்பாக்கி சூடுகளைப்பற்றி கண்டிப்பாக ஒரு "ஜுடிஷியல்" விசாரணை நடத்தவேண்டும். சர்க்கார் தான் செய்தது சரி என்று நினைத்தால் நீதி விசாரணைக்கு ஏன் பயப்படவேண்டும்? "ஜுடிஷியல்" விசாரணையில் இதே முடிவு வேண்டுமானாலும் சொல்லட்டும். 'விசாரணை நடந்தது, சாட்சிகளை விசாரித்தார்கள், குறுக்கு விசாரணை செய்தோம், கடைசியில் "(finding) பைன்டிங் சர்க்கார் சார்பில் இருக்கிறது" என்ற ஒரு திருப்தி ஏற்படும். அந்த முடிவையும் நாங்கள் ஏற்றுக் கொள்வோம். ஆதலால், போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றி கண்டிப்பாக விசாரணை நடத்தவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI R. CHIDAMBARA BHARATHI :** முடிந்தவுடன் கேளுங்கள் சொல்லுவார்கள் என்று கூறினீர்கள். எமான்யுவலை நன்கு தெரியும், அவரைக் கொலை செய்தது தப்பு, கொலை செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். சுடப்பட்ட ஐந்து பேர்களைப்பற்றியும் அம்மாதிரி சொன்னார்கள். அவர்களோடு அங்கத்தினருக்கு பழக்கம் உண்டா? அவர்களை முன்பு தெரியுமா? ஏனென்றால் ஒருவரைப்பற்றி பேசும்போது அவரைப்பற்றி தெரியாமல் ஒன்றும் சொல்ல முடியாது. அதுபற்றி விவரம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த விசாரணையில் ஸ்ரீ வெங்கடேஸ்வரன் அது பற்றி கூறினார்கள் என்று சொல்லுகிறார்கள். எந்த அர்த்தத்தில் கூறினார் என்றும் விளக்கம் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER :** அங்கத்தினருக்கு பதில் அளிப்பதற்கு இனி மேல் அவருக்கு நேரம் கிடையாது. அங்கத்தினர் பேசும்பொழுது அதற்கு பதில் சொல்லலாம் என்று தான் நான் இந்த நேரத்தில் சொல்ல முடியும்.

**SRI P. S. SANTHANAM :** தலைவர் அவர்களே, "ஒன்றே குலம், ஒருவனே தேவன், எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்கிற முறையில் தான் பேச முன் வந்திருக்கிறேன். பஞ்சாப் மாகாணத்தில் ஹிந்து பாதுகாப்பு கமிட்டியினர் செய்யும் பிரகாரம் தமிழகத்தில் ராமநாதபுரத்தில் நடக்கின்ற சாதிப் போராட்டப் புரட்சியைப் பார்த்து, ஆசியாவின் சோதியும், அமெரிக்காவின் நண்பரும் இந்தியாவின் முடிசூடா மன்னரும் ஆகிய பண்டித நேரு அவர்கள் இன்று "இச





சகிக்க முடியாதது" என்று வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிற இந்த வேளையில் ராமநாதபுரம் ஜில்லாவில் நடந்த சம்பவங்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

உண்மையில் இந்தச் சர்க்காருக்கு ஹரிஜனங்களுக்கு நல்லதொரு பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் என்ற இருதயம் இருந்தால் பொதுத் தேர்தலுக்குப் பின்னால் நடந்த சில சம்பவங்களைக் கண்டவுடனாவது அளிக்க முன் வந்திருக்கவேண்டும்.

கொண்டலாதி கிராமத்தில் கிணற்றில் சிம்மினி எண்ணெயை ஊற்றினார்கள், மலத்தைப் போட்டார்கள் என்கிற செய்தி அரசாங்கத்திற்கு வந்திருந்தும் ஹரிஜனங்களுக்கு நல்லதொரு பாதுகாப்பை அளிக்க முன்வர வேண்டும் என இவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால் இந்த மாதிரியான சம்பவங்கள் எதுவும் நடந்திருக்காது. உண்மையில் சர்க்கார் அதைச் செய்யத் தவறியதன் காரணமாகத்தான் அதைத் தொடர்ந்து இன்னும் அனேக சம்பவங்கள் நடந்துவிட்டது. ஏழை பாமர பட்டாளி ஹரிஜன மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள்.

**SRI T. L. SASIVARNA THEVAR :** On a point of order கொண்டலாதி கிராமத்தில் ஹரிஜனங்களுடைய கிணற்றில் மண் எண்ணெ ஊற்றிய நிகழ்ச்சியைப்பற்றி கனம் அங்கத்தினர் சொல்கிறார். அந்தச் சம்பவம் குறித்து கேஸ் கோர்ட்டில் இருப்பதனால் அதைப்பற்றி குறிப்பிட வேண்டாம் எனத் தாங்கள் உத்தரவு கொடுக்க வேண்டும்.

**MR. SPEAKER :** கோர்ட்டில் ஒரு வழக்கு இருந்துகொண்டிருந்தால் அதைப்பற்றி ஒரு அங்கத்தினர் இங்கே பேசக்கூடாது. இந்த வழக்கு கோர்ட்டில் இருக்கிறது என ஸ்ரீ சசிவர்ண தேவர் சொல்வதனால், இதைப்பற்றிப் பேசவேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** கனம் சந்தானத்திற்கு ஒரு விஷயம். கோர்ட்டில் ஒரு வழக்கு இருந்தால் அதைப்பற்றிய சம்பவத்தைக் குறிப்பிடக்கூடாது என்று இல்லை. நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். ஆனால் யார் யார் அந்தச் சம்பவத்திற்குக் காரணமாக இருந்தார்கள் என்று குறிப்பிட்டுப் பேசுவது கூடாது.

**MR. SPEAKER :** ஆம். மந்திரி சொன்னது தான் சரி.

**SRI P. S. SANTHANAM :** பொதுத் தேர்தலுக்குப் பின் தான் இப்படிப்பட்ட சம்பவங்கள் அநேகம் நடப்பதற்குக் காரணமாக பலர் இருந்தார்கள். 'பா'வின்னா 'பி'ன்னா கட்சித் தேர்தலுக்குப் பிறகு அனேக சம்பவங்கள். நான் நேரில் அந்தச் சமயத்தில் அங்கு இல்லாமல் இருந்திருந்தாலும் அந்த இடங்களுக்கு எல்லாம் அப்புறம் சென்று விசாரித்ததில் கேள்விப்பட்டேன். அதைப்பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** நடந்த சம்பவங்களை, நேரில் கண்டு அறிந்தவற்றைச் சொல்லலாம். இன்னார் அதற்குச் சம்பந்தம் என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது என்றுதான் சபைத் தலைவர் சொன்னார்.

**SRI P. S. SANTHANAM :** நிற்கவும், ராமநாதபுரம் ஜில்லாவில் ஆதித் திராவிடர்களுக்குக் கொடுத்த தொல்லை கொஞ்சநஞ்சமல்ல. வீராம்பல் என்ற கிராமத்திற்கு நானே நேரில் சென்று கேள்விப்பட்டேன். அதனால் பாதிக்கப்பட்டவர்கள், கற்பை இழந்தவர்கள், அந்தத் தொல்லையில் மரணம் அடைந்தவர்களை இழந்து நிற்பவர்கள், தாலியை இழந்து நிற்பவர்கள், பொருள் எல்லாவற்றையும் இழந்து ஓட்டாண்டியாக காட்சி அளிப்பவர்கள் அவர்களை எல்லாம் கண்டு கேட்ட உண்மை வரலாற்றைத் தான் சொல்லப் பிரியப்படுகிறேன். நல்லதோ, கெட்டதோ சர்க்கார் தான் இதற்குக் காரணம் என்ற கருத்து அங்கே ஏற்பட்டிருக்கிறது.

1957-ம௵ செப்டம்பர்௴ 10௳ அன்று ஒரு சமாதானக் கமிட்டியைக் கூட்டியபோது தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக பரமக்குடி இமானுவேல்சேகரன், வீரம்பல் வேதமாணிக்கம், ஆலங்குடி கம்பர் இன்னும் சிலர் கலந்துகொண்டிருக்கிறார்கள். சாதி இந்துக்களின் பிரதிநிதிகளாக முத்துராமலிங்க தேவர், எம். பி. சசிவர்ண தேவர், எம்.எல்.ஏ., ஆப்பனூர் அர்ச்சுன தேவர், சித்திரமுடி சுப்பிரமணிய தேவர், முத்துதுரைசாமி தேவர், சம்பூர் கருப்பைய தேவர் இவர்கள் எல்லாம் கலந்துகொண்டிருக்கிறார்கள். பொதுவில் வேலுச்சாமி, அருணகிரி, சீனிவாச அய்யர் இவர்கள் எல்லாம் அந்தக் கமிட்டியில் போய் இருந்ததாகவும், கலெக்டர் சமாதானக் கமிட்டியில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதில் எல்லோரும் கையெழுத்திடவேண்டுமென்று கட்டளையிட்டதாகவும், ஹரிஜனப்பிரதிநிதியாக இமானுவேல்சேகரன் கையொப்பமிட்டவுடன், முத்துராமலிங்க தேவர் மிகவும் கேவலமாக மதித்து, அவன் கையிட்ட இடத்தில் தான் கையெழுத்திடமாட்டேன் என்று மறுத்து அந்த இடத்தில் ஒரு கேவலமான பிரச்னையை எழுப்பிவிட்டதாகவும் நான் கேள்விப்பட்டேன். இப்படி அவர் ஹரிஜன சமூகத்தை இழிவுபடுத்தும் முறையில் அரசாங்க உயர்தர அதிகாரியின் முன்னால் நடந்துகொண்டிருந்தும் சர்க்கார் உண்மையிலேயே அந்தச் சமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதாக இருந்தால் ஏன் அவர் பேரில் நடவடிக்கை எடுத்திருக்கக்கூடாது? ஹரிஜனங்களை யாராவது இழிவு செய்தால் அவர் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் எனச் சட்டம் செய்திருப்பது இந்த அரசாங்கம் தான். இந்த அரசாங்கத்தின் உயர் அதிகாரியின் முன்னே அவர் அப்படிச் செய்தபோது அவர் பேரில் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்.

**Sri T. L. SASIVARANA THEVAR** : கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் இங்கே கனம் அங்கத்தினர் சீனுவாச அய்யர் பேசுகின்ற காலத்தில் தேவர் அவர்கள் தூண்டுதலினாலே சிதம்பரர் என்ற தாசில்தார் வெட்டுப்பட்டு இறந்துபோனார் என்று சொன்னார். எங்கள் தாலுக்காவில் அந்த மாதிரியாக வெட்டுப்பட்டு இறந்துபோன தாசில்தார் யாருமே கிடையாது. அதே மாதிரி கலெக்டர் சமாதானக் கமிட்டியில் நிறைவேற்றிய தீர்மானத்தில் இமானுவேலைக் கையெழுத்துப் போடச்சொல்லிவிட்டு, தேவரை கையெழுத்துப் போடச் சொன்னதற்கு, அவர் ஒரு ஹரிஜனன் என்கிற முறையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தை இழிவு செய்யும் வகையில் அவர் கையெழுத்திட மறுத்ததாக இவர் பேசுகின்றார். அங்கே நடந்த விஷயம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளாமல் இப்படி ஆதாரமற்ற வகையில் பேசுவது சரியில்லை. இது தவறான பிரசாரம் ஆகும் என ஒழுங்குப் பிரச்னையை எழுப்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இதில் இருக்கக்கூடிய சிக்கல் இதுதான். நேற்றைய தினம் கனம் அங்கத்தினர் பேசும்போது தான் கேட்டறிந்ததாகப் பல விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். இன்றைய தினம் இவர்தான் கேட்டறிந்த விஷயங்களைக் குறிப்பிடுகிறார். எது சரி எது தப்பு என்பதை சபையினர் விசாரித்து அறிந்துகொள்ள முடியும். அவர் சொல்லுவதைச் சொல்ல அனுமதி அளிக்கவேண்டியதுதான்.

**Sri K ANBAZHAGAN** : இப்போது பேசிக்கொண்டிருக்கிற ஸ்ரீ சந்தானம் அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சமாதானக் கமிட்டியில் ஹரிஜன சமூகத்தை இழிவுபடுத்தும் முறையில் முத்துராமலிங்க தேவர் கையொப்பம் இட மறுத்ததாகச் சொல்லப்பட்டால், ஏன் அப்போதே ஹரிஜன சமூகத்தை அவர் இழிவுபடுத்திய குற்றத்திற்காக அரசாங்கம் அவர்பேரில் வழக்குப் போடவில்லை என்பதைத்தான் கேட்கிறார். அவர் அப்படி நடந்துகொண்டார் என்பது உண்மையானால் அரசாங்கம் ஹரிஜன சமூகத்திற்குப் பாதுகாப்பு அளிக்கிறோம் எனச் சொல்லிக்கொள்கிறவர்கள் ஏன் அப்போதே நடவடிக்கை எடுக்கக்கூடாது என அரசாங்கத்தின்மேல் குற்றச்சாட்டைப் போடுகிறார். அவர் பேச்சை தப்பாகப் புரிந்துகொண்டு அவரைக் குறுக்கிடவேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்.





**Sri K. PERIANNAN** : கனம் தலைவர் அவர்களே, சந்தானம் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக வேண்டுமானாலும் இருக்கட்டும். அவர் ஒரு ஹரிஜனன். ராமநாதபுரம் ஜில்லாவில் ஹரிஜன சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளை உணர்ந்து மனம் குமுறிப் பேசுகிறார். கனம் சீனுவாச அய்யர் நேற்று தாசில்தார் வெட்டப்பட்டு இறந்தார் என்று சொல்லவில்லை. வெட்டப்பட்டார் என்றுதான் சொன்னார். சந்தானம் போல ஒரு ஹரிஜன் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் இன்றைக்கு ராமநாதபுரத்தில் நடந்திருக்கும் அட்டூழியங்களைப் பார்த்து மனம் குமுறத்தான் குமுறுவார். அவர் அங்கு நடந்த விஷயங்களைப் பேசிக்கொண்டுபோக தாங்கள் உரிமை அளிக்க வேண்டும்.

**Mr. SPEAKER** : தயவு செய்து இந்த மாதிரியாகப் பேசிக்கொண்டுபோவது சரியில்லை என்பதை உணரவேண்டும். உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்ல பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பக்கூடாது. ஸ்ரீ சந்தானம் அவர்களைத் தொடர்ந்து பேசும்படியாக அழைக்கிறேன்.

**Sri P. S. SANTHANAM** : நான் சொல்வதெல்லாம் நேரிலே அங்கு சென்று, கிராம மக்களைக்கேட்டு சம்பவங்கள் எந்த முகாந்திரத்திலே எந்த வழியிலே நடந்தன என்று கேள்விப்பட்டுத்தான் உண்மையிலேயே சொல்லுகிறேன். பத்திரிகைகளைப் பார்த்தோ வேறு விதத்திலோ இந்த விஷயத்தை சொல்லவில்லை. சர்க்காரால் கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனையின் பேரிலே நான் பேசவில்லை. ஆனால் முதுகுளத்தூர் சென்று, தாலுக்கா ஆபீசிலே சில பியூனைக் கேட்டு அங்கு நடந்த சம்பவங்கள் என்னவென்று கேட்டுத்தான் பேசுகின்றேன். திரு. முத்துராமலிங்க தேவர் வெளியே வந்து அவரைப்பார்த்து "தாழ்த்தப்பட்டவன் ஒரு கிருஸ்தவன் பேசுகின்றானே அதற்கு நீங்கள் அனுமதி கொடுத்திருக்கிறீர்களே. உங்களுக்கு ரோஷம் உண்டா" என்று சொல்லப்பட்டது. இதைக்கேட்ட ஆதித்திராவிடத் தலைவருக்கும் உண்மையிலேயே தன்மான உணர்வு இருக்கிறது. கண்ணியம், கடமை, கட்டுப்பாடு ஆகிய மூன்று திராவிட முன்னேற்றக் கொள்கையை உடைய நான் அறிந்து சொல்லுகிறேன் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஜாதி துவேஷத்திற்கும் நான் கட்டுப்பட்டவன் அல்ல. நடந்தது உண்மை என்ற கருத்துடன்தான் முதுகுளத்தூர் தாலுக்கா ஆபிசிலே என்ன நடந்தது என்று கேட்டு, இமானுவல் எப்படி கொலைசெய்யப்பட்டார் என்று கேட்டபோது அப்போது அவர்கள் சொன்னார்கள். இமானுவல் சரிசமமாக உட்கார்ந்திருப்பதை பொறுக்காமல் தேவர் நாற்காலியில் உட்காரவில்லை என்று சொல்லுகிறார்கள். நமக்குச் சமமாக ஒரு பிற்பட்ட இனத்தவன் பிற்பட்ட மக்களால் மதிக்கப்படுவதா என்ற எண்ணம் தேவருக்கு இருந்ததாகச் சொல்லப்படுகிறது. 11-ம் தேதி இரவு இமானுவல் கொலைசெய்யப்பட்டார் என்று நான் சொல்ல விரும்பவில்லை. அங்குள்ளவர்கள் சொல்லுகிறார்கள். கொலை செய்தபோது பார்க்கவில்லை. அதிக நாள் சென்று அங்கு போய் விசாரிக்கும்போது இம்மாதிரி சம்பவம் நடந்ததாகத்தான் கேள்விப்படுகிறேன். உண்மையாக ஒரு ஹரிஜனனை பாதுகாக்கவேண்டும் என்ற உள்ளன்பு சர்க்காருக்கு இருந்திருக்குமேயானால் அப்போதே சட்டரீதியிலே ஜாதி துவேஷ தடுப்பு சட்டத்தின் கீழ் தேவர் அவர்களை அரஸ்ட் செய்திருந்தால் அவர் மீது நடவடிக்கை எடுத்திருந்தால் இம்மாதிரியான சம்பவங்கள் ஏற்பட்டிருக்காது. ஆகவே இதற்கு அரசாங்கம்தான் பொறுப்பாளி என்பதை நான் இந்த இடத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இம்மாதிரியான சம்பவங்கள் அருங்குளம், பரமக்குடி, பெருமச்சேரி போன்ற முக்கியமாக 8 கிராமங்களிலே அதிகமாக ஹரிஜனங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற இடங்களிலே சொல்பமாக இருந்திருக்கிறது. மேற்படி 8 இடங்களிலே ஹரிஜனப் பெண்களை கற்பழித்திருக்கிறார்கள். பெண்ணென்றால் பேயும் இறங்கும் என்று சொல்வார்கள். ஆனால் மனுஷ ஜன்மமாய் பிறந்தவர்கள் அந்த இடத்திலே ஓடி உதவி செய்திருக்கவேண்டும். அப்படி இல்லாமல் கதறி அப்பா அம்மா என்று கன்னிப் பெண்கள் கதறுகின்ற நேரத்திலே கயவாளிகள் மூர்க்கத்தனமாக

நடந்துகொண்டிருக்கிறார்கள். நிர்வாணத்தோடு பெண்களை தெரு வழியே ஓடவிட்டதாக கேள்விப்பட்டு வருத்தம் அடைகிறேன். ஒரு கட்சி ரீதியிலே தேசத்தின் பக்தியிலே இருக்கக்கூடிய மனித ஜன்மமாக இருக்கக் கூடிய பாமர ஏழை மக்களை விரட்டி விரட்டி இருப்பதை நான் மாத்திரம் அல்ல இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஏறக்குறைய முக்கால் பங்கு ஜனத்தொகையினர் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறதென்றால் உண்மையிலேயே நமது தேசத்திற்கு அல்ல, கடவுள் இருக்கிறது என்று சொல்லுகிறார்களே அந்தக் கடவுளுக்குக்கூட பொறுக்காது ; உண்மையிலேயே கேட்டிருந்தால் இங்கே அங்கத்தினர் அத்தனை பேரும் சர்க்காரும் அந்த பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்கொடை மூலம் உதவி செய்யவேண்டும். தேசிங்கு ராஜா எங்கோ போய் பதுங்கி இருப்பதாகச் சொல்வார்கள். அதைப்போல அந்த பகுதியில் உள்ள பல கிராமங்களில் மறவர்கள் பதுங்கி நின்று ஹரிஜனங்களைத் தாக்கி இருக்கிறார்கள். குறிப்பாக வீராம்பல் என்னும் இடத்தில் துரத்தப்பட்ட மக்கள் ஆண்டவனிடமாவது புகலிடம் கிடைக்குமா என்று நினைத்து மாதாகோவிலுக்குள் மறைந்துவிட்டார்கள். அப்பொழுதும் விடேன் என்று துரத்தி மூர்க்கர்கள் உள்ளே சென்று கதவுகளை உடைத்து தீ வைத்து ஜன்னல்களை அழித்து மக்களை கதற அடித்திருக்கின்றார்கள். அந்த கோவிலின் கதவுகளையும் ஜன்னல்களையும் சுவர்களையும் பார்க்கும் பொழுது, அவைகள் சாட்சி சொல்லும். அவைகளின்மேல் துப்பாக்கிக் காயங்கள் இன்னும் இருக்கின்றன. உண்மையிலே அந்த கோரக் காட்சியைப் பார்த்தோமானால் நம்முடைய உள்ளம் பதறக் கூடியதாக இருக்கும். அம்மாதிரி நடைபெறாத வண்ணம் பார்த்துக்கொண்டிருக்க முடியும், சர்க்கார் முன் ஜாக்கிறதையாக நடவடிக்கை எடுத்திருந்தால். என்ன காரணமோ தெரியவில்லை. உண்மையிலேயே இதற்கு சர்க்கார் தான் பொறுப்பாளி. உண்மையிலேயே இதை உள் மனதோடு கண்டித்திருப்பதற்கு முன்னமே நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டிருக்காது.

தலைவர் அவர்களே, இந்த சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன. ஏதோ அடிப்பதுபோல் அடிக்கிறோம் அழுவதுபோல் அழுங்கள், ஏதோ நாங்களும் ஆதரிக்கிறோம் என்று சொல்வது போதாது. பாதிக்கப்பட்ட ஏழை ஹரிஜனங்களுக்கு குந்த நிழல், குடிக்கக் கஞ்சி, கட்ட ஆடை இவைகளுக்கான ஏற்பாடுகளை செய்துகொடுக்கவேண்டும். பீதிகொண்ட ஹரிஜனங்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்பட்டவர்களுக்கு சர்க்கார் ஏதேனும் ஒரு கொடை அளிக்கிறதா என்று பார்த்தால் ரூ. 200 ஒரு குடிசைக்கு அளிக்கும் என்று ஏட்டளவில் எழுதப்பட்டிருக்கிறது. அது ஏழை ஆதிதிராவிட மக்களுக்குப் போதுமா என்று பார்ப்போமேயானால் உண்மையிலேயே போதாது. ரூபாய் 300 கொடுத்தாலும்கூட வீராம்பலில் உள்ள மக்களுக்குப் போதாது.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 30 கொடுக்கப்படுகிறது. வீடிழந்தவர்களுக்கு ரூ. 100 வீதம் உதவி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

**Sri P. S. SANTHANAM** : நானும் சந்தோஷப்படுகிறேன். ரூபாய் 100 கொடுத்தால் போதாது. சமுதாய வளர்ச்சி திட்டத்தின் கீழ், தீ வைக்கப்பட்ட கிராமங்களில் உள்ள இந்த மக்களுக்கு தீயினால் பாதிக்காத வகையில் கூரைவீடுகளுக்கு பதிலாக கல்வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். இன்றைக்கு அவர்கள் தெருக்களிலே இருப்பதாக கேள்விப்படுகிறோம். ஆகவே உடனடியாக அவர்களுக்கு இவ்வசதியை செய்துகொடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வெற்றிலைக் கொடி படருவதற்கு அவுத்தி செடிகள் வளர்ப்பதுண்டு. அதுபோல மிராஸ்தார்களுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் இன்னும் மற்ற மேல் வகுப்பினர்கள் வெற்றிலைக்கொடியைப்போல இருக்கிறார்கள் என்றால்



அவர்களுக்கு உதவியாக இருக்கக்கூடியவர்கள் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்கள் அவுத்தியைப்போல் இன்றியமையாத தன்மையில் இருந்து வருகிறார்கள் என்பதை சர்க்கார் உணரவேண்டும்.

அப்பேர்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏதோ ஒரு ஜாதியின்பேரால் தீங்கு இழைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்தில் ஏதோ தேவர்கள் மூன்று குலமாகப் பிரிந்து அழித்தமாதிரி இப்பொழுது ஏழை பாமர மக்களை அழித்த காட்சியைக் கண்டு வருத்தம் அடைகிறேன். இம்மாதிரி மீண்டும் ஏற்படக்கூடாது. ஹரிஜன சமுகத்தின் பேராலும் கட்சியின் பேராலும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். முதுகுளத்தூர் தொகுதியிலே ஜாதி ஹிந்துக்களால் துன்புறுத்தப்பட்ட ஏழை விவசாய மக்கள் வீடிழந்து கோழிகளையெல்லாம் தீக்கு இரையான செய்தியைப்பற்றியும் வீட்டு குடிசையில் முறம்கூட எரிந்துபோய்விட்டதாகவும் அதற்கு ஏதாவது சர்க்கார் நன்கொடை செய்யுமா என்று என்னிடம் கூக்குரல் இட்டார்கள். என்ன செய்வதென்று எனக்கு ஒன்றும் புரியாத நிலைமையில் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டு வந்தேன். ஏழை சர்க்காராக இருந்தாலும் ஹரிஜனங்களுக்கு ஒரு ஜதை மாடும், ஆடை வசதியும், குந்த நிழலும் சௌகரியம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதை வரவேற்கிறோம். அதற்காக வாழ்த்துகிறோம். இது, ஏழை மக்களின் சர்க்கார் என்று மக்கள் உணர வழி காட்டியாக இருந்து ராமநாதபுரத்தில் ஜாதிக் கொடுமையால் கஷ்டப்படும் மக்களுக்கு அங்குள்ள புறம்போக்கு நிலங்களை பதித்துக்கொடுத்து, அதற்கு வேண்டிய கருவிகளையும் கொடுத்து தேவர்களைப் போலவே அசுரர்களையும் கொண்டுவந்தால் அங்குள்ளவர்கள் க்ஷேமமாய் இருப்பார்கள் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். உண்மையிலே சொல்கிறேன். ஜாதி துவேஷம் இந்த நாட்டில் மறுபடியும் வராது இருக்கவேண்டுமானால், ராமநாதபுரத்தில் கலவரம் நடந்த பிரதேசத்தில் ஒரு தண்ட, அபராத தீர்வை விதித்து பாதிக்கப்பட்ட ஹரிஜன மக்களுக்கு கொடுப்பார்களேயானால் இந்தமாதிரி துவேஷ உணர்ச்சி, ஜாதி சண்டை அங்கு ஏற்படாது. இந்த சர்க்கார், ஜாதி பூசலை, ஜாதி அகம்பாவத்தை, ஜாதி வெறியை ஒடுக்கவேண்டுமென்ற நோக்கம் சர்க்காருக்கு இருந்தால், ஒரு கூட்டு அபராதத்தை விதித்தால் உண்மையில் இனி அங்கே ஜாதி துவேஷம் ஏற்படாது. அதை அடக்க இதுதான் ஒரு வழி என்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri R. CHIDAMBARA BHARATHI** : கனம் சபாநாயகர் 10-5
அவர்களே, இன்றோடு மூன்று தினங்களாக நாம் எல்லோரும் முதுகுளத்தூர் சம்பவத்தைப்பற்றி கேட்டுவருகிறோம். இந்தப் பிரேரணையைப் பிரேரேபித்த கனம் நண்பர் கல்யாணசுந்தரம் அவர்களும், அதை ஆமோதித்துப் பேசிய நண்பர் சசிவர்ணத் தேவர் அவர்களும் தவிர மற்ற எல்லோரும் பேசியதிலிருந்து இரண்டு விஷயங்களை ஆலோசிக்க நாம் கடமைப்பட்டு இருக்கிறோம். ஒன்று, முதுகுளத்தூரில் பலாத்காரச் செயல்கள் நடைபெற்றிருக்கின்றன. அதற்குக் காரணமாக உ. முத்துராமலிங்க தேவர் அவர்கள் இருந்து வந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அம்மாதிரியான பலாத்காரச் செயல்களுக்குத் தனியாக அவர் மீது நடவடிக்கைகள் எடுத்திருக்கவேண்டும். எடுத்திருக்கலாம். எடுக்கச் செய்யலாம். எடுக்க முயற்சிக்கலாம். முயற்சித்திருந்தால் நானும் அதற்கு உதவி புரிந்திருக்கக்கூடும் என்றெல்லாம் பேசினார்கள். ஆனால் சமூக கலகம் அல்ல ; சமூக கலகமாக சர்க்கார் சொல்வது நியாயமற்றது என்பதை அவர்கள் இரண்டாவதாகக் கூறுகிறார்கள். இதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். கனம் சசிவர்ண தேவர் அவர்கள் கூறுவது, சமூக கலகமே அல்ல, பலாத்காரச் செயல்கள் அங்கு நடைபெறவில்லை, தூண்டியவர்கள் சர்க்கார், முதலமைச்சராக இருக்கக்கூடிய கனம் காமராஜ் அவர்களும், அவரைச் சார்ந்த நண்பர்களும் 14, 15, 16-ம் தேதி மதுரையில் இருந்த காலத்தில் கற்பிக்கப்பட்டது என்றும் சசிவர்ணத் தேவர் அவர்கள் கூறுகிறார்கள். இந்த இரண்டு விஷயங்களையும் மனதில் வைத்துக்கொண்டு நான் பின்னால் சொல்லக்கூடிய

[Sri R. Chidambara Bharathi] [30th October 1957

அனுமானங்கள் நியாயமா என்று யோசித்து, நீங்கள் நன்கு யோசித்து, உங்கள் மனதிலே உண்டாகக்கூடிய அபிப்பிராயங்கள் இவைகளைக் கொண்டு நீங்கள் தீர்மானம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், சர்க்கார் எங்கிருந்தாலும், எந்த சர்க்காராய் இருந்தாலும், சர்க்கார் அமைக்கப்படும்போது மக்களுடைய க்ஷேமத்தில் அதற்கு எவ்வளவு அக்கறையுண்டோ அதேபோன்று மக்களைப் பாதுகாப்பதிலும் சர்க்காருக்கு கடமையிருக்கிறது. அதைத்தான் நாம் சர்க்கார் என்று கூறுகிறோம். பாதுகாப்பு இல்லாத நாடு, பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யாத ஒரு சர்க்காரை சர்க்கார் என்றே கூறமுடியாது. அது மட்டுமல்ல. ஒரு சிறு குழந்தைகூட, ஏன் ஒரு மாடுகூட தன்னந்தனியே பயமின்றி ஒருவராலும் துன்புறுத்தப்படாமல் பார்த்துக் கொள்வது சர்க்காரின் கடமையாகும். இதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த சர்க்கார் நம்முடைய சர்க்கார். நாம் சர்க்காரின் பிரதிநிதிகள். மக்கள் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம், பயமின்றி அவர்கள் வாழவேண்டுமென்பதுதான். பயமின்றி வாழும் தன்மையில் முதுகுளத்தூர் பகுதி சுமார் 35 வருஷங்களாக இருந்து வந்திருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நேற்று நடந்த சரித்திரத்தை வைத்துக்கொண்டு மாத்திரம் நீங்கள் எதையும் தீர்மானிக்க வேண்டாம். இதை நான் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், நாம் சுதந்திரம் அடைந்த காலம் குறுகியது. அதற்கு முந்திய காலம் அதிகம். நாம் பொறுப்பு எடுத்துக் கொண்ட காலம் குறுகியது. அதற்கு முந்திய காலம் நம் பொறுப்பில் இல்லாதது. ஆகவேதான் இதைச் சொல்கிறேன். முதுகுளத்தூரில் பயமின்றி வாழமுடியவில்லை, வாழ முடியாது என்ற நிலைமையை ஏன் அந்தச் சர்க்கார், நம்முடைய சர்க்கார் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்கும் ஆத்திரம் வருகிறது. அதில் சந்தேகமில்லை. இங்கு பேசிய சசிவர்ண தேவர் அவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் எவ்வளவு ஆத்திரம் கொண்டார்களோ அந்தவித ஆத்திரம் எனக்கும் வருகிறது. ஆனால் இந்த இடத்தில் நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த சர்க்காருக்கு, நம்முடைய சர்க்காருக்கு நாம் எவ்வளவோ தூரம் உதவியாக இருக்க கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். எந்தக் கட்சியாயிருந்தாலும் சரி நிலைமையைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். முக்குலத்தோர் யார் என்று முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். ராமனாதபுரம் ஜில்லாவில் இரண்டு பக்கமும் சமுத்திர கரைகளால் சூழப்பட்டு ரோடுகள் இல்லாத இடம், பள்ளிக்கூடங்கள் இல்லாத இடம், படித்தாலும் நீங்கள் புத்திசாலித்தனமாக இருக்கமுடியாது என்று பிரசாரம் செய்பவர்கள் இருக்கும் இடம். ரோடுகள் போட்டால் நீங்கள் செய்யும் குற்றங்களிற்காக போலீஸார் வந்துவிடுவார்கள், நீங்கள் கைதுசெய்யப்படுவீர்கள் என்று சொல்லக்கூடிய தலைவர்கள் உள்ள பகுதிதான் அது என்பதை நீங்கள் ஆலோசிக்கவேண்டும். நாம் இந்த நாட்டை சுதந்திரமாக ஆளமுற்படுவதற்கு முன்பாக அங்கே என்ன நடந்திருக்கும் என்பதைப்பற்றி நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அங்கு மக்கள் அடக்கப்பட்டார்கள். அங்கு செய்யப்படும் குற்றங்களைத் தடுக்க முடியாமல், குற்றம் செய்யாமல் இருப்பதற்கு வேண்டி அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். அந்தப் பகுதி முக்குலத்தோர் இனத்தைச் சார்ந்த மறவர்கள் வாழும் மிகுதியான இடமாகும். மற்ற இனத்தவர்களும் இருக்கிறார்கள். அகம்படியர்கள் இருக்கிறார்கள், அம்பலக்காரர்கள் இருக்கிறார்கள், வேறு இனத்தவரும் இருக்கிறார்கள். ஆனால் அவ்விதம் இருக்கக்கூடிய இனத்தவரில் குற்ற பரம்பரை இனத்தவர் என்று கூறப்பட்டவர்கள் அங்கே அதிகமாக வாழக் கூடியவர்களாகிய மறவர்களாவார்கள். அவர்களுடைய குணங்களைத் திருத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்க சர்க்கார் எந்தவிதமான முன் ஏற்பாடுகளும் செய்யவில்லை. அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவும் இல்லை. மேலும் மேலும் அவர்கள் குற்றம் புரியும் காலத்தில் குற்றத்திற்காக தண்டிக்க முற்பட்டாரே தவிர குற்ற சுபாவத்தை அவர்களிடமிருந்து களைய எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளப் படவில்லை. நாம் சுதந்திரம் அடைவதற்கு வெகு சொற்ப காலத்திற்கு



30th October 1957] [Sri R. Chidambara Bharathi]

முன்னிருந்த ராஜாஜி ஆட்சி காலத்தில் சி.டி. ஆக்டை எடுக்கவேண்டுமென்று தமிழ்நாடு பூராவிலும் செய்த கிளர்ச்சியின்போது அங்கு எம்மாதிரியான குற்றங்கள் நடைபெற்று வந்தன என்று நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். ஆகவே அதில் காலம் மிகுதி செலவிட நான் ஆசைப்படவில்லை.

அதற்கடுத்ததாக சுதந்திர சர்க்கார் வந்தது. 1947-ல் சுதந்திரம் கிடைத்தது. அதன் பிறகு அந்த தொகுதியிலிருந்து அதன் பிரதிநிதியாக சட்டசபைக்கு வந்துகொண்டிருப்பவர் நண்பர் கனம் உ. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் என்பதை சட்டசபை அங்கத்தினர்களாகிய உங்கள் எல்லோருக்கும் தெரியும். யாராய் இருந்தாலும் ஒரு தொகுதியிலுள்ள மக்களுடைய காரியங்களை சர்க்கார் மூலமாக செய்து கொடுக்க முயற்சி செய்ய ஒவ்வொரு தொகுதி பிரதிநிதிகளும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு அங்கத்தினர் முயற்சி செய்யவில்லை என்பதற்காக விட்டுவிடவேண்டும் என்று அர்த்தமல்ல. இன்று காங்கிரஸ் கட்சி அதிகாரத்தை நடத்துகிறது. எதிர்கட்சி அங்கத்தினர்கள் 54 பேர்கள் வீற்றிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் சர்க்காரிடத்தில் கூறுவதெல்லாம், அது கம்யூனிஸ்டு கட்சியாக இருந்தாலும்சரி, திராவிட முன்னேற்ற கட்சியாக இருந்தாலும்சரி இவைகள் எல்லாம் சட்டசபையில் பேசும்போதெல்லாம் எங்கள் ஜில்லாவுக்கு பள்ளிக்கூடம் வேண்டும், எங்கள் ஜில்லாவுக்கு நீர்பாசனம் வேண்டும், எல்லா ஜில்லாக்களைவிடவும் எங்கள் ஜில்லா தாழ்ந்த நிலையில் இருக்கிறது என்று கூறிவருகிறார்கள். இதை நீங்கள் யாரும் மறுக்க மாட்டார்கள், இந்த ஸெஷனில்கூட பல அங்கத்தினர்களும் எங்களுக்கு நீர்பாசனம் வேண்டும், எங்களுக்கும் பல வசதிகள் வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் அந்தப் பகுதியினுடைய அங்கத்தினர் சட்டசபை கூட்டத்திற்கு பெரும்பான்மையாக வருவதே கிடையாது. அவ்விதம் வந்தாலும் கையெழுத்து போடுவாரே தவிர சட்டசபை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது கிடையாது. இதை சட்டசபை டயரிகளில் பார்த்தால் தெரியும். அப்படி ஏதாவது வரவேண்டிய சந்தர்ப்பம் வந்தாலும் சுபாஷ் வருவார், ஆசிய ஜோதி தோன்றும், இவ்விதமாக சில விஷயங்களை கூறுவாரே தவிர அந்த பகுதியின் நன்மைக்கான, அந்த பகுதியின் முன்னேற்றத்திற்கான காரியங்களைப்பற்றி பேசியதே கிடையாது என்பதை யாரும் மறுக்க முடியாது. மறுக்க முயற்சித்தால் அது பொய் என்றே கூற முடியும். இதுதான் அவர்களுடைய பிரதிநிதியினுடைய நிலைமை. இதே சமயத்தில் அந்த பகுதி மக்களுடைய நிலைமை என்ன? அந்த பகுதி மக்கள் பெரும்பாலும் என் இனத்தவர்கள், என்னுடைய சகோதரர்கள். அவர்களுடைய ஒரு சொட்டு ரத்தம் சிந்துகிறது என்றால் என்னுடைய நூறு சொட்டு ரத்தம் கொதிக்கின்றது. தக்க தலைவனைப் பின்பற்றாமல் இவ்விதமாக ரத்தம் சிந்தப்படுகின்றது. சர்க்காருக்கும் வீணாக தொந்தரவு ஏற்படுகிறது. அந்தப் பகுதியில் பல நல்ல முன்னேற்றகரமான திட்டங்களை நிறைவேற்ற வேண்டியதிருக்க வீணாக மக்களுடைய ரத்தம் சிந்தப்படுகிறது. பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இவைகளைப்பற்றி நாமும் இரண்டு தினங்களாக பேசவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆனால் இந்த நிலைமையைப்பற்றி அவர்கள் எண்ணிப்பார்த்திருக்க வேண்டும். இதனால் இன்றைக்கு நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரக்கூடிய நிலைமையில் இது தூண்டிவிடப்பட்டிருக்கிறது என்பதை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும். நான் அதிக நேரம் பேச விரும்பவில்லை. முடிந்தவரை சுருக்கமாகவே பேசி முடிக்கப் பார்க்கிறேன். இதைப்பற்றி இன்னும் பல நண்பர்கள் பேச இருக்கிறார்கள். நான் பேசும்போது நீண்டு போகிறது என்று யாரும் கருதக்கூடாது. முக்கியமான சில விஷயங்களை உங்களுக்கெல்லாம் தெரியாத சில விஷயங்களை நான் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் அந்த பகுதியை சேர்ந்தவன், நான் அந்த இனத்தவர்களைச் சேர்ந்தவன், நண்பர் உ. முத்துராமலிங்க தேவர், திரு. சசிவர்ணத் தேவர் இவர்களோடு பழகி, அன்பாகவும், சந்தோஷமாகவும் பல பல வருஷங்களாக இருந்து பல நல்ல காரியங்களைச் செய்யத் தூண்டிய ஒருவன் நான். ஆகவே எனக்கு பல விஷயங்கள் தெரியும்.

[Sri R. Chidambara Bharathi] [30th October 1957

இந்த நிலைமையிலுள்ளவர்கள்தான் அதிகமாக அங்கிருக்கிறார்கள். பரம்பரையாக அங்குள்ள மக்கள் குற்ற பரம்பரையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். குற்றங்கள் செய்தேயாகவேண்டும், அதை வைத்துத்தான் வாழவேண்டும் என்கின்ற நிலைமையில் அங்குள்ள மக்கள் இருக்கிறார்கள். ஆகவே அங்குள்ள மக்களின் பிரதிநிதி அவர்களின் முன்னேற்றத்திற்கு எந்தவிதமான முயற்சியும் செய்வது கிடையாது. அதே சமயத்தில் காலம் மாறிவிட்டது, காலவித்தியாசத்தின் காரணமாக எனது மதிப்பிற்குரிய நண்பர் முத்துராமலிங்க தேவர், சசிவர்ணத் தேவர் இவர்களுடைய பழைய நண்பர் இன்று முதலமைச்சராக இருக்கின்றார். அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இம்மாதிரி சம்பவங்கள் வந்துகொண்டு இருக்கின்றன. 1947-ல் சுதந்திரம் அடைந்தோம். அதன் பிறகு இரண்டு தேர்தல்கள் நடந்தது. இதில் காங்கிரஸ் கட்சி சர்க்காரை ஏற்று நடத்துவதில் ஏற்பட்ட பிரச்னைகளை நீங்கள் சிந்தித்து பார்க்கவேண்டும். இவ்விதமிருந்தும் பல காரியங்கள் முதுகுளத்தூர் பகுதியில் இந்த சர்க்காரால் செய்யப்பட்டிருக்கிறது. மக்களுடைய எந்த மகஜரும் இல்லாமல், ரோடு வேண்டும், பள்ளிக்கூடம் வேண்டும், எலக்ட்ரிஸிட்டி வேண்டும், நீர்பாசன வசதி வேண்டும் என்கின்ற கோரிக்கைகள் இல்லாமல், எந்தவிதமான முயற்சிகளும் இல்லாமல் இன்றையதினம் (பிளாக் டெவலப்மெண்ட்) சமுதாய அபிவிருத்தி திட்டங்கள் எல்லாம் இந்த கலகம் வருவதற்கு முன்பே அந்த பகுதிகளுக்கு புகுத்தப்பட்டிருக்கிறது. நான் அந்த பகுதிக்கு சென்றபோது " எலக்ட்ரிக் வொயர் " கொண்டுபோவதையெல்லாம் நான் பார்த்தேன். இதனால் அங்கு இருக்கிற நாடார்கள், கோனார்கள், சேர்வைக்காரர்கள் இவர்கள் எல்லாம் இதை உபயோகப்படுத்துகிறார்கள். மறவர்கள் இப்போதும் கத்தியை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நிலைமை எப்படியிருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். இதுதவிர பல பயிர்கள் பயிரிடப்படுகின்றன. பலர் வியாபாரம் செய்து வருகிறார்கள். நல்ல நஞ்செய் நிலமாக இருந்து வருகிறது. புகையிலை பயிரிடப்படுகிறது, கரும்பு, வாழை இவைகள் எல்லாம் பயிரிடப்படுகிறது. நான் இவைகளை கற்பனையாகச் சொல்லவில்லை. அங்கு சென்று பார்ப்பீர்களானால் இவைகளை எல்லாம் காண முடியும். மறவர்கள் குடியிருப்பு இல்லாத கிராமங்களில் வாழை, கரும்பு இவை அதிகமாக இருக்கின்றன. புகையிலை வளருகின்றன. ஏன் இந்த மறவர்கள் மாத்திரம் இந்த முயற்சிகள் செய்யவில்லை ? அவர்களுக்கும் இவ்விதமெல்லாம் வாழவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் இல்லை. அவர்களுக்கும் எண்ணம் மிகுதியாக இருக்கிறது. அதற்கான வழிகள் அவர்களுக்குத் தெரியாது. ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன். நான் ஒரு நாள் அந்தத் தொகுதிக்கு போயிருந்தேன். நண்பர் சசிவர்ணத் தேவர் அவர்கள், நான் அந்த தொகுதிக்கு கனம் தத்தாருடன் போகவில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு முந்தின நாள்தான் சென்னையிலிருந்து வந்தேன், கமுதியின் பக்கத்திலுள்ள புதுக்கோட்டைக்குப் போயிருந்தேன். தத்தார் அவர்களின் பயணத்தின்போது அங்கு இருந்தேன். அப்போது அவர்களை வேப்பங்குளம் என்ற கிராமத்திற்கு அழைத்துக்கொண்டு போனார்கள். எனக்கு அங்கிருந்து போவதற்கு ஜீப் காரில் இடம் இல்லாததினால் நான் போக முடியவில்லை. நான் அங்கேயே இருந்தேன். அங்கு மறவர்கள் சிலர் இருக்கிறார்கள், சில கோனார்கள் இருக்கிறார்கள், பள்ளர்கள் இருக்கிறார்கள். அந்த இடம் மிகச் செழிப்பாக இருந்தது. என்னைச் சுற்றி பல மறவர்களும் பலரும் கூடி நின்றார்கள். இந்த இடம் நன்றாக இருக்கின்றதே என்று நான் அவர்களிடம் கேட்டேன். நாங்கள் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு காய்கறிகள் எல்லாம் கொண்டு போகிறோம். நல்ல வருமானமும் கிடைக்கிறது. எங்களிடையில் கேஸ்கள் ஒன்றும் கிடையாது. கிரிமினல் கேஸ்கள் எல்லாம் பக்கத்திலுள்ள கிராமங்களில் தான். எங்கள் கிராமத்தில் ஒன்றும் கிடையாது என்று அவர்கள் சொன்னார்கள். இவைகளையெல்லாம் சில பத்திரிகை நிருபர்களும் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். அதன் பின்னால் 'இங்கு தண்ணீர் வசதிக்கு ஏதாவது கிணறுகள் இருக்கிறதா என்று கேட்டேன். அப்போது இங்கு



30th October 1957] [Sri R. Chidambara Bharathi]

ஒரு கண்மாய் இருக்கிறது என்று என்னிடம் சொல்லப்பட்டது. அந்தக் கண்மாய் சிறிய கண்மாயாக இருந்ததால், " வருஷத்தில் ஒரு தடவை விவசாயத்திற்காவது இதில் தண்ணீர் நிரம்புமா ? " என்று அவர்களிடம் கேட்டேன். " இது மழைக்காலக் கண்மாய். எப்படியாவது ஒரு வருஷத்திற்குத் தண்ணீர் நிரப்பிவிடுவோம். இங்கே 200 கிணறுகள் இருக்கின்றன. மழை காலத்தில் கண்மாயிலிருந்து நிரப்பி விடுகிறோம் " என்று அவர்கள் பதில் சொன்னார்கள். உடனே நான் " பக்கத்திலுள்ள கமுதியில் மின்சாரம் இருக்கிறதே அங்கிருந்து இங்கே மின்சாரத்தைக் கொண்டு வரலாம். நீங்கள் யாராவது மின்சார இலாகாவினரிடம் மின்சாரம் கேட்டீர்களா ? மின்சாரத்தை உபயோகித்தால் நீங்கள் விவசாயத்தில் இன்னும் அதிக லாபமடையலாமே " என்று சொன்னேன். அப்போது அவர்கள் " எப்படி இங்கே மின்சாரம் கொண்டுவருவது ? இங்கே வருபவர்களிடம் சொல்லிச் சொல்லிப் பார்க்கிறோம். யாரும் மின்சாரம் கொண்டுவரவில்லை ? " என்று சொன்னார்கள். ஆகையால் மறவர்கள் என்றால் அவர்கள் தவறே செய்பவர்கள் என்று கருதவேண்டாம். அவர்கள் உழைக்கும் உணர்ச்சியுடையவர்கள், உழைப்பதற்கு ஆசையுடையவர்கள். உழைத்துத்தான் உண்ணவேண்டும் என்ற பெருமைப்படத்தக்க கொள்கை உடையவர்கள். அப்படிப்பட்டவர்களுக்குத் தகுதியான தலைவர்கள் இல்லை ; தகுதியானவர்களை அவர்கள் அடையவும் இல்லை. தகுதியுள்ளவர்களை அடைவதற்கு முயற்சித்தால், கழுத்து போகும். இதற்கு சரித்திரங்களும் ஆதாரங்களும் இருக்கின்றன. அந்த கிராமத்திற்கு 4 மைல்களுக்கு அப்பால் உள்ள மின்சாரத்தை அங்கே கொண்டுவரமுடியும். அங்குள்ளவர்களில் பலர் ரூ. 500—1,000—2,000 ரொக்க வசதி உள்ளவர்கள். அந்த கிராமவாசிகளிடம் நான் " இங்கே பம்பு செட்டு வைப்பதற்கு ரூ. 1,000 செலவு செய்ய உங்களால் முடியுமா ?" என்று கேட்டேன். அப்போது அவர்கள், " நல்லவேளையாக நீங்கள் இங்கே வந்து எங்களிடம் இந்த யோசனையைச் சொன்னீர்களே " என்று கூறினார்கள். " அந்தப் பிராந்தியத்தில் கடந்த 15—20 வருஷகாலத்தில் போலீஸ் ஸ்டேஷன்களில் எத்தனை வழக்குகள் ரெஜிஸ்டராகியிருக்கின்றன? அவைகளில் எத்தனை மறவர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் ? " என்ற புள்ளி விவரங்களைச் சேகரித்து, அவைகளை, இந்தச் சபையின் தலைவராகிய கனம் நிதி மந்திரி அவர்கள் பேசும்போது கொடுத்தால், நான் சொன்ன விஷயங்களைப்பற்றி எல்லோரும் சிந்தித்துப் பார்ப்பார்கள். அங்குள்ளவர்களுக்கு குற்றம் புரியும் (criminal) மனோபாவமே இல்லை என்றும், ஆனால் குற்றம்புரியும் மனோபாவம் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் நான் சொன்னால், அதை எனது கனம் சக அங்கத்தினர்கள் தவறாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கின்றேன். அந்தப் பிராந்தியத்தில் ரோடு வசதி செய்து கொடுப்பதற்கோ, பள்ளிக்கூட வசதிகளை அதிகப்படுத்துவதற்கோ, மின்சாரம் போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கோ, அங்குள்ள ஓரிருவர் முயற்சி செய்தால், அவர்களுடைய மாடுகள் களவு போய்விடும் ; பம்பு செட்டுகள் களவு போய்விடும் ; விவசாயப் பயிர் பலனாகி வரும்போது பலன் களவுபோய்விடும். இம்மாதிரியான காரியங்கள் பற்றிய வழக்குகள் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் எவ்வளவு மிகுதியாக இருக்கிறது என்பதுபற்றி சிந்திக்கவேண்டும். அங்கே இதே வேலையாக இருக்கிறது என்று எடுத்துக்கொள்ளவேண்டாம். ஆனால் அங்கே இது மிகுதியாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அங்கே நிலைமை இப்படி இருக்கும்போது, கடந்த பொதுத் தேர்தலின்போதும், உபதேர்தலின்போதும், அதற்கு முந்திய தேர்தல் காலங்களிலும் அங்கே துவேஷத்தை உண்டாக்கியவர்கள், காங்கிரஸ்காரர்கள் என்று கூறப்பட்டது. காங்கிரஸ்காரர்கள் என்று சொன்னபோது என்னைத்தான் குறிப்பிட்டார்கள் என்று நான் கருதவில்லை. அப்படிச் சொல்லியிருந்தாலும், கனம் அங்கத்தினர் தம் கட்சிக்காக அப்படிச் சொல்லியதை நான் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் தவறு என்னுடையது அல்ல. அவர் அவர்களுடைய பிரதிநிதி. காங்கிரஸ்காரர்கள் அந்த ஊருக்குச் சாமானியமாகச் செல்லமுடியாது. மழை காலத்தில் அங்கே நடந்துகூடப் போகமுடியாது. சாதாரண காலங்களில் ஜீப் காரில்தான்

போகவேண்டும். அங்கே பழக்கமுள்ளவர்கள்தான் போக முடியும். ஒரு பகுதி பூமி இடுப்புவரையில் உடலை இழுக்கும், மற்றொரு பகுதி கரம்பைப் பகுதி; அதில் கால்கள் வழுக்கிக்கொண்டே போகும். சாமார்த்தியமுள்ளவர்கள்தான் அங்கே போகமுடியும். இம்மாதிரியான பகுதிக்கு நாங்கள் சென்றால் "அப்பா இப்போதானே வருகிறார்கள், காங்கிரஸ்காரர்கள்" என்று அங்குள்ளவர்கள் கூறுவார்கள். அப்போது, அங்கே ரோடு வசதியைப் பெறுவதற்கு முயற்சி செய்யலாம் என்று கூறினால் "இல்லை. ரோடு வேண்டாம். ரோடு வந்தால் ரொம்ப ஆபத்து. நாங்கள் எதாவது கோபத்தில் சண்டையிட்டு அடித்துக்கொள்வோம். உடனே போலீசில் புகார் கொடுக்கத் தோன்றும். ஆனால் ரோடு வசதி இல்லாததால் உடனே புகார் கொடுக்க மாட்டோம். பிறகு 4—5 நாட்கள் ஆனவுடன், நாங்களே பஞ்சாயத்துப் பண்ணிக்கொள்வோம். ஆகவே ரோடு வந்தால் ரொம்ப ஆபத்தாகிவிடும்" என்று அவர்கள் சொன்னார்கள். அங்கே நிலைமை இப்படி இருக்கிறது. அந்தக் கிராமத்தில் எனக்கு பல சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். ஆகவே அங்குள்ளவர்களுடன் பழகவேண்டிய பிரமயம் எனக்கு இருக்கிறது. அங்கே சென்றபோது அங்குள்ள நிலைமை இப்படி இருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். "இப்போது இங்கே ரோடு இல்லாததால் உங்களுக்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. உதாரணமாக, நீங்கள் உற்பத்தி செய்த நெல்லில் ஒரு மூட்டையை வெளியூருக்கு விற்பனைக்கு கொண்டுபோக வேண்டுமென்றால், அப்போது ஆயிரம் ரூபாய் விலையுள்ள இரண்டு மாடுகளையும் வண்டியையும் பூட்டி, அதன் பிறகும் பல இடங்களில் வண்டியை பலர் சேர்ந்து தள்ளிக் கொண்டு போகவேண்டியிருக்கிறது; சாதாரணமாக 20 மூட்டை நெல் கொண்டுபோகக்கூடிய வண்டியில் 5 மூட்டைகள்தானே கொண்டுபோக முடிகிறது; ரோடு வசதி இருந்தால் 20 மூட்டைகள் கொண்டுபோக முடியும். மேலும் சீக்கிரமாகவும் கொண்டுபோகலாம். இத்தகைய செலவுகளால் உங்கள் நெல்லின் கிரயம் குறைகிறதே? ரோடு வசதி இல்லாததால் அடுத்த ஊரிலிருந்து இங்கே வருபவர்களுக்கும் சிரமம் ஏற்படுகிறதே?" என்று நான் கூறினேன். உடனே அவர்கள் "எங்கள் தேவர் ரோடு போடக்கூடாது என்று சொன்னார்" என்று கூறினார்கள்.

**MR. SPEAKER** : கனம் அங்கத்தினருக்கு இன்னும் 5 நிமிஷங்கள் தான் இருக்கின்றன.

* **SRI R. CHIDAMBARA BHARATHI** : எனக்கு இன்னும் 5 நிமிஷங்கள் போதாது.

**MR. SPEAKER** : எல்லா கனம் அங்கத்தினர்களுக்கும் 15 நிமிஷங்கள் தான் கொடுத்தேன். தாங்கள் சீக்கிரம் முடித்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **SRI R. CHIDAMBARA BHARATHI** : இது சமூகக் கலவரம் அல்ல என்று தோன்றுமாறு சில விஷயங்களை நான் சொல்வதாக நினைக்கவேண்டாம். அங்கே சமூகக் கலவரம் வேண்டுமென்றே உண்டாக்கப்பட்டது என்று நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். அங்கே பலாத்காரம் இருப்பதை பெரும்பான்மையான கனம் அங்கத்தினர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். பலாத்காரத்தை அங்கே தூண்டியவர்கள் யார் என்பதை அவர்கள் அறிந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படும்படியாக நிலைமை இருக்கிறது என்பதையும் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

ஸ்ரீ இமானுவேல் கொலை சம்பந்தம் இருக்கட்டும், சென்ற உப தேர்தலுக்குப் பிறகு, அவர் தேர்தலில் எதிரிகளுக்கு உதவி செய்யவில்லை என்பதற்காக சுமார் 50 வழக்குகள் போலீஸில் ரெஜிஸ்டர் பண்ணப்பட்டிருக்கிறது. அங்கே பல கோர்ட்டுகளில் உள்ள வழக்குகளை எடுத்துக் கொண்டால் ஹரிஜனங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் 11; சேர்வைக்



காரர்கள் மற்ற சமூகத்தவர்கள் போன்றவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் 39. இம்மாதிரியான வழக்குகள் இருந்தபோது, இவ் வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டும். அப்படிச் செய்து மேலும் நம் செல்வாக்கைப் பெற வேண்டும் என்று யோசித்து அவர்கள் சதி செய்தார்கள். இதற்கெல்லாம் காரணஸ்தர்களாக இருப்பவர்கள், சாதாரணமாக, தடுக்கவும் திருத்தவும் முடியாத விரோதிகள் என்று யாரையாவது கருதினால், அவர்களைக் கொலை செய்வதைத் தவிர வேறு எதுவும் செய்யமாட்டார்கள். இதுதான் அங்கே சகஜமாக நடக்கும். பலதடவைகள் இந்த மாதிரியான காரியங்கள் நடந்திருக்கின்றன. கமுதியில் ஸ்ரீ ஷண்முகவேலு சேர்வை விஷயத்தை எடுத்துக்கொள்ளலாம். வழக்கு நடந்திருக்கிறது. இவர்கள் செய்த பல கொலைகளைப்பற்றி ஸ்ரீ குற்றாலலிங்கம் பிள்ளை அவர்களுடைய தீர்ப்பிலும், ஸ்ரீ தாம்ஸன் அவர்களுடைய தீர்ப்பிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரியாகத்தான் அவர்கள் செய்வது வழக்கம். சமீபத்திய கலவரம் சம்பந்தமாக 6 பேர்கள் பல காரியங்களைச் செய்தனர். அவர்கள் 6 பேர்களும் சதி செய்தார்கள் என்று கூற முடியாது; ஆனால் அது சதி என்று கருதப்பட்டிருக்கலாம். "இங்கே பல இடையூறுகள் நடக்கின்றன. ஹரிஜனங்கள் எங்களைத் தாக்க ஆரம்பிக்கிறார்கள். போலீசாரிடத்தில் இதுபற்றிக் கூறினால் அவர்கள் ஒன்றும் செய்வது இடையாது. ஆகவே கலெக்டர் சில காரியங்களைச் செய்யவேண்டும். சில போலீஸ் அதிகாரிகளை மாற்றவேண்டும்" என்று அவர்கள் கூறினார்கள். எந்த போலீஸ் அதிகாரிகள் நல்லவர்களாகவும், திறமைசாலிகளாகவும் இருக்கிறார்கள் என்று கருதப்பட்டார்களோ, அவர்களை அங்கிருந்து மாற்ற வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். வேறு யாரையும் மாற்ற வேண்டும் என்று அவர்கள் கூறவில்லை. இதை கனம் அங்கத்தினர்கள் அக்கறையோடு மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அதை நீங்கள் அக்கறையோடு, ஞாபகமாக கவனிக்கவேண்டும். அதன் நோக்கத்தைப் பார்க்கவேண்டும். கலெக்டர் அவர்கள் அதை உணர்ந்து இருக்கிறார். அந்த மாதிரி ஒரு உணர்ச்சி இல்லாமல் 'சமாதானக் கமிட்டி ஒன்று ஏற்பாடு செய்கிறேன், டி.ஐ.ஜி. முதலியவர்களைக் கலந்துகொண்டு' என்று கூறினார். அதன் பிரகாரம் செப்டம்பர் மாதம் 10-ம் தேதி சமாதானக் கமிட்டி கூட்டப்பட்டது. சமாதானக் கமிட்டியில் தேவர் அவர்கள் இம்மானுவேலைப் பார்த்துத் தவறாகக் கூறினார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஏனென்றால் நான் அந்த சமாதானக் கமிட்டியில் அங்கத்தினரும் இல்லை, அல்லது அந்த நிகழ்ச்சி நடந்த இடத்தில் இருக்கவுமில்லை. மற்றவர்களைப் போன்றே விசாரித்துத் தெரிந்துகொண்டதுதான். இதை நான் முக்கியமாகக் கருதவில்லை. நண்பர் சசிவர்ணத் தேவரைக் கேட்டுக் கொள்கிறேன். சென்ற பொதுத் தேர்தல் சமயத்தில் கோல்வால்கர், இந்து மகாசபைத் தலைவர் மதுரைக்கு வந்தார்கள். அவருக்கு ஒரு பண முடிப்புக் கொடுக்கப்பட்டது. பண முடிப்புக் கொடுக்கும் செயலிலே, சிறப்பு செய்யவேண்டுமென்று நண்பர் முத்துராமலிங்கத் தேவர் ஏற்பாடு செய்யப்பட்டார். பண முடிப்புச் கொடுக்கும்போது அவர்கள் பேசிய பேச்சைமட்டும் தெரிவிக்கிறேன். அதை யாரும் மறுக்க முடியாது என்று நம்புகிறேன். பொய்யாகக்கூட மறுக்கத் துணிய மாட்டார்கள் என்று கருதுகிறேன். "ஹிந்து மதத்தின் விரோதி மகாத்மா காந்தி. ஆதலால்தான் நான் கோல்வால்கர் அவர்களுக்குப் பண முடிப்புக் கொடுக்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இசைந்தேன்" என்றார். இந்த வார்த்தைகளை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். காந்தி அவர்கள் ஹரிஜன மக்களை முன்னேற்றம் செய்வதில் ஈடுபட்டிருந்தாரே அது மிக முக்கியமான காரியம். மற்றவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நாமெல்லோரும் அங்கத்தினர்களாக, சுதந்திரமாக சில வருஷங்கள் இருந்து நல்ல காரியங்களைச் செய்ய ஆசைப்படுகிறோம். அன்றைய தினம் காந்தி அவர்கள் அம்பேத்கார் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து இந்த மாதிரியான ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்காவிட்டால், இன்றைய தினம் நீங்கள் இந்த மாதிரி காரியம் செய்ய முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அம்பேத்கார் அவர்களின் அபிப்பிராயத்திற்கு இணங்காமல், அந்த

[Sri R. Chidambara Bharathi] [30th October 1957

ஒப்பந்தத்திற்கு விரோதமாக அன்றைய தினம் பல அபிப்பிராயங்கள், பல பேச்சுக்கள், பல செயல்கள் செய்து, செயலளவில் காந்தி அவர்களுக்கு விரோதமாக இருந்திருக்கிறார். காந்திக்கு எதிராக இருந்து அவர்கள் செத்தது நியாயம் என்று கூறக்கூடிய கோல்வால்கருக்குப் பண முடிப்புக் கொடுக்கும் வைபவத்தில் கலந்துகொண்டவர், ஹரிஜனங்களுக்கு நண்பராக எப்படி இருக்க முடியும் என்பதைப் பார்க்கவேண்டும். நான் அனுமானிக்கின்றேன். நான் கேள்விப்படுகிறேன். வாஸ்தவம் என்று நம்புகிறேன். "நீங்களும் நானும் சேர்ந்து கையெழுத்திட்டு நோட்டீஸ் அச்சடித்து மக்களிடத்தில் கொடுத்தால் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களா ? கலகம் விளைவிப்பார்களா ? நீங்கள் உங்களைப் பின்பற்றுகின்றவர்களிடம், ஹரிஜனங்களை ஹிம்சிக்கவேண்டாம் என்று சொன்னால், அவர்கள் பின்பற்றமாட்டார்களா ? அதிலிருந்து தவறி விடுவார்களா ?" இப்படிச் சொன்ன காலத்தில், "என் அளவு நீ பெரிய ஆளாக, பெரிய தலைவனாக ஆகி விட்டாயா ? உன்னோடு சேர்ந்து நானும் இந்தக் கடிதத்தில் கையெழுத்திடவேண்டுமா ?" என்று சொல்லியிருக்கிறார். கோல்வால்கருக்கு பண முடிப்புப் கொடுக்கும் காலத்தில் மேற் சொன்ன அபிப்பிராயத்தைச் சொன்ன முத்துராமலிங்கத் தேவர் ஏன் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார் என்று நம்பவேண்டியிருக்கிறது. அவர் சொல்லியிருப்பார். ஆகையினால், இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களால் வேண்டுமென்றே சர்க்காருக்கு எதிராகப் புரட்சி உண்டாக்க திட்டமிட்டுப் பல சதித் திட்டங்களின் காரணமாக, ஹரிஜனங்கள் மீது சாதாரண உயர்ஜாதி மக்களின் மனதிலே அவர்கள் மீது கோபத்தை உண்டாக்க, பெரும் புரட்சிகரமாக, இந்த மந்திரி சபைக்குக் களங்கம் உண்டுபண்ண ஏற்படுத்தப்பட்ட ஒரு சதித் திட்டமென்று நான் நினைக்கிறேன். இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நான் அனுமானிக்கிறேன். இதை நன்கு ஆலோசித்துப் பார்க்கவேண்டும். ஆதலால் நீங்கள் எல்லோரும் யோசித்துப் பார்க்கவேண்டும். வீரனை வீரன் சண்டை போடலாம். திருடனை, மறைந்து திருடும் சுபாவ முள்ளவனை, குற்றத்திலிருந்து விலக்க முடியாது. குற்றம் புரிந்த பிறகு தான் கண்டிக்க முடியும். இது என் அனுபவபூர்வமான அபிப்பிராயம். இந்தமாதிரி செயல்களைப் பார்த்துவிட்டு சர்க்கார் என்ன செய்யும். என்னென்ன குற்றங்களைச் செய்தால், என்னென்ன செயல்களைச் செய்தால், நிச்சயமாக என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்று நினைத்து, 'அந்த விளைவுகள் ஏற்பட்டால் நாம் பெரும் தலைவராக கீர்த்தியை அடையலாம், நம்மிடம் காமராஜர் சரணாகதியடைவார், சர்க்கார் நமக்கு மரியாதை கொடுக்கும்' என்ற அபிப்பிராயத்தில் செய்திருந்தால் இதைக் காங்கிரஸ் சர்க்கார் தடுக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கடைசியாக கூறிய காலத்து கனம் சசிவர்ணத் தேவர் அவர்கள் நான் தத்தாருடன் மானாமதுரைக்கு வரவில்லை என்று கூறினார்கள். இந்தக் கலகம் ஏற்பட்டது 10-ம் தேதியும் 11-ம் தேதியும். 12-ம் தேதி காலை இந்தக் கலகத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட பிறகு அதே ஜோலியாக என் தொகுதியிலும், முதுகுளத்தூர் தொகுதியிலும் சுற்றிக்கொண்டிருந்தேன். பல கிராமங்களுக்குச் சென்றிருந்தேன். அமைதியை ஏற்படுத்துவதில் முற்பட்டிருந்தேன். இம்மாதிரி செய்துகொண்டுவரும் காலத்தில் எனக்குச் சில கடிதங்கள் வந்தன. அதைச் செய்வதும், இதைச் செய்வதும் சொந்த இனத்தவனுக்கு நல்லது செய்வதாக இல்லை. அதை நான் சில முக்கியஸ்தர்களிடம் காண்பித்து இம்மாதிரி உணர்ச்சி ஏற்பட்டால் எப்படி முன்னேற்றம் ஏற்படும். இந்தக் காலத்திற்கு இது நல்லதல்ல என்று சொன்னேன். முதல் நாள் தத்தார் அவர்களுடன் நான் ஏன் வரவில்லையென்றால், வரவேண்டாமென்பதற்காக இல்லை, பல வேலைகளால் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. ஆகவே . . .

**Mr. SPEAKER :** எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு ஒரு சட்டம் போட்டுவிட்டு அதே சட்டத்தை கனம் அங்கத்தினர் விஷயத்தில் சும்மாயிருந்துவிட்டால் நன்றாக இருக்காது. நான் அங்கத்தினருக்கு அரை மணி நேரம் கொடுத்தேன். தயவுசெய்து உடனே முடித்துவிடவேண்டும். அங்கத்தினர்



30th October 1957] [Mr. Speaker ]

மேலும் பேசுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். அங்கத்தினர் பேசும் நேரத்தில் ஒவ்வொரு 15 நிமிஷ நேரத்திற்கும் ஒரு காங்கிரஸ் அங்கத்தினர் வீதம் கம்மி பண்ணிவிடுவேன் என்று சொல்ல விரும்புகிறேன். அங்கத்தினர் ஒரு மணி நேரம் பேசலாம். அப்படியானால் 4 காங்கிரஸ் அங்கத்தினர்கள் பேச முடியாது. சுருக்கமாக முடிக்கவேண்டியது அங்கத்தினரின் கடமை. 11-30 p.m.

**Sri R. CHIDAMBARA BHARATHI :** தலைவர் அவர்கள் தயவுசெய்து எனக்கு இன்னும் கொஞ்சம் நேரம் கொடுக்கவேண்டும். ஏனென்றால் தவறாக மக்கள் மனதில் சந்தேகம் ஏற்படவேண்டுமென்று (இச்சந்தர்ப்பத்தில் அங்கத்தினர் ஒரு பத்திரிகையைப் படிக்க எடுத்தார்).

**Sri M. KALYANASUNDARAM :** அங்கத்தினர் பத்திரிகையிலிருந்து படிக்கலாமா ?

**Sri R. CHIDAMABARA BHARATHI :** கா.சி.க. மகாநாடு 28, 29, 30 தேதிகளில் நடந்தது. 29-ந் தேதி காலையில் ஒரு மறவர் துரைசாமித் தேவர் என்று நினைக்கிறேன் வந்து கதறினார், கண்ணீர் சிந்தினார், மிகவும் பரிதாபகரமாயிருந்தார். இவ்வாறு தினமணியில் கொட்டை எழுத்தில் வந்தது.

**Mr. SPEAKER :** தயவு செய்து உட்காரலாம். அடுத்தது கனம் மருதாசலம் அவர்கள் பேசுவார்.

(ஸ்ரீமதி டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன் தலைமை வகித்தார்.)

**Sri N. MARUDACHALAM :** கனம் சேர்மன் அவர்களே, ராமநாதபுரம் ஜில்லா முதுகுளத்தூரில் மறவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நடந்த தகராறையொட்டி கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். ராமநாதபுரத்தில் முதுகுளத்தூர் பிராந்தியத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மறவர்களுக்கும் தகராறுகள் நடந்தது என்றால் அந்தத் தகராறுக்கு என்ன காரணம் என்று குறிப்பிடவில்லை. அந்தத் தகராறு 1930 வருஷத்திலிருந்து 1949 வரையில் நடந்துகொண்டே வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தச் சமூகப் பூசல்களுக்கு இன்று வரையில் இந்த அரசாங்கம் ஆதரவு கொடுத்ததாகத்தான் தெரிகிறது. 1957-ல் நடந்த ஒரு சமூகப் பூசல் சம்பந்தமாக தகராறு ஏற்பட்டு அதைத் தீர்த்து வைக்க பல நண்பர்கள் அங்கே போய் தகராறைத் தீர்த்து வைப்பதற்கு முடியவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே தகராறு நடந்த இடங்களிலும் இன்னும் மற்ற இடங்களிலும் இந்த அரசாங்கம் நடந்துகொண்ட முறை மிகமிகத் தவறான முறை என்றும் அது ஜனங்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய முறை அல்லவென்றும் தெரிகிறது. அதனால் தான் நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

எனக்கு முன்னதாகப் பேசிய தேவர் அவர்கள் ராமனாதபுரம் ஜில்லா, அந்தப் பகுதியைப்பற்றி சொல்லிவிட்டார். அங்குள்ள மக்களுக்கு இந்த அரசாங்கம் எந்த விதமான சௌகர்யமும் செய்துகொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். அதற்குக் காரணம் என்ன சொன்னார் என்றால் சென்ற காலங்களில் அந்தத் தொகுதியில் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் அடிக்கடி வெற்றி பெற்ற காரணத்தால் அந்தத் தொகுதியில் எந்த விதமான முன்னேற்றக் காரியங்களும் செய்யக்கூடாது என்றும் எதிர்க்கட்சிக்காரரர்கள் ஜெயித்துவரக்கூடிய தொகுதிகளுக்கு காங்கிரஸ்காரர்கள் எந்த விதமான வேலைகளும் செய்யக்கூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதாகவும் எனக்குத் தெரிகிறது. அதுதான் என்னுடைய அபிப்பிராயமும். அங்கேயுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி வசதியோ அல்லது போக்குவரத்து வசதியோ, தண்ணீர் வசதியோ எதுவும்

செய்து கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே காங்கிரஸ்காரர்களுக்கு எதிராக உள்ள கட்சிக்காரர்கள் எந்த இடங்களில் ஜயித்திருக்கிறார்களோ அந்தத் தொகுதிகளில் எந்த வசதியும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்து கொடுப்பதில்லை என்ற திட்டத்தை இந்த அரசாங்கம் வைத்திருக்கிறார்களோ என்னமோ தெரியவில்லை. ஆகவே காங்கிரஸ்காரர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு அநீதி இழைத்துக்கொண்டு தங்களுடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வதற்கு இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களை ஒரு கருவியாக உபயோகப்படுத்திக்கொண்டு இருப்பதாகத்தான் நான் கருதுகிறேன். இன்று அங்கே தகராறுகள் நடந்து கொண்டிருக்கும்போது அங்கே துப்பாக்கிப் பிரயோகம் நடந்துகொண்டிருக்கிறது. அப்பொழுது மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஏன்? ஓர் இடத்தில் தண்ணீர் வந்துவிட்டது என்றால் அந்த இடத்திற்கு அவர்கள் அவசர அவசரமாகப் போகிறார்கள் மக்களைக் காப்பாற்ற. அதைப் போலவே துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்போது அங்கே ஏன் மந்திரிகள் போகவில்லை? ஒருவரை ஒருவர் சுட்டுக்கொண்டிருக்கும்போது மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார்களே தவிர மக்களுக்கு உதவி செய்ய போகவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கனம் அங்கத்தினர் சொல்வது ஒன்றும் புரியவில்லை. மந்திரிகள் சுட்டுக்கொண்டிருக்கும் போது அங்கே சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள் என்று சொல்லுகிறாரா என்பது புரியவில்லை. அல்லது சுட்டுக்கொண்டிருக்கும்போது அங்கே மந்திரிகள் செல்லவில்லை என்று சொல்லுகிறாரா என்பது புரியவில்லை.

**SRI N. MARUDACHALAM :** சுட்டுக்கொண்டிருக்கும்போது அங்கே மந்திரிகள் அந்த இடத்திற்கும் செல்லவில்லை. தீ வைத்துக்கொண்டு பிணக்காடாக இருக்கிறது, சுடுகாடாக இருக்கிறது அந்த இடத்திற்கு மந்திரிகள் போகவில்லை என்று குறிப்பிட்டேன். இந்த ஜாதிக் கொடுமை என்பது அந்த இடத்தில் மாத்திரம் இல்லை. எல்லா இடங்களிலும் இருக்கிறது. அதைப்பற்றி இந்த அரசாங்கம் கவலைப்படவே இல்லை. ஒவ்வொரு இடங்களாக என்னால் சொல்ல முடியும். இன்றைக்கு தஞ்சாவூர் ஜில்லாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் ரொம்பவும் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய உரிமைகளைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். கோவை ஜில்லா, பீளமேடு என்ற இடத்தில் ஒரு ஹரிஜன வாலிபன் ஒரு நாயுடுப் பெண்ணை கலியாணம் செய்துகொண்ட காரணத்தினால் அந்த ஊரை விட்டே அவனைத் துரத்திவிட்டார்கள். அவன் வேலை இல்லாமல் திண்டாடும் நிலைமையில் இருக்கிறான். இம்மாதிரி பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. பலன் தரக்கூடிய எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இன்றைக்கு அரசாங்கம் சொல்லுகிறார்கள் 'பல சட்டங்களை இயற்றி இருக்கிறோம் அதனால் தாழ்த்தப்பட்டவர்களுடைய குறைகளெல்லாம் தீர்ந்துபோய்விடும்' என்று சொல்லுகிறார்கள். கோவிலைத் திறந்துவிட்டால் மட்டும் போதாது. கோவிலுக்குப் போக கற்பூரம் வாங்குவதற்கு வசதி செய்துகொடுக்கவேண்டாமா என்று கேட்கிறேன். கோவிலைத் திறந்துவிட்டால் அவர்கள் முன்னுக்கு வந்துவிடமாட்டார்கள். அவர்கள் உண்மையில் முன்னுக்கு வரவேண்டும் என்று அரசாங்கம் கருதினால் அவர்களை பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையச் செய்யவேண்டும். அவர்களும் ஜாதி ஹிந்துக்களைப்போல் வாழ்க்கையை நடத்தவேண்டும் என்றால் அதற்குத் தக்க பொருளாதார உதவி அளிக்கவேண்டும். அதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு இந்த அரசாங்கத்தின் போக்கு எப்படி இருக்கிறது என்றால் ஆட்டுக்கடாக்களை முட்டிக்கொள்ள விட்டு வேடிக்கைப் பார்ப்பது போல் தாழ்த்தப்பட்டவர்களுடைய நிலைமையை பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வதற்கு இரண்டு வகுப்பையும்





மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதுபோல் இருக்கிறது. ஆகவே இன்றைக்கு அரசாங்கத்தினுடைய போக்கு மக்களுடைய நம்பிக்கையை இழந்துவிட்டது என்பது புலனாகிறது. ஆகவேதான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையொட்டி சில குறிப்புகளை குறிப்பிட்டிருக்கிறேன். அதை மாத்திரம் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

*** SRI P. K. MOOKIAH THEVAR :** கனம் தலைவி அவர்களே, கனம் கலியாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையொட்டி நான் பேச முன் வந்திருக்கிறேன். இதற்கு முன் பேசிய பலர் அதிலும் குறிப்பாக கனம் பாரதியார் அவர்கள் பேசும்போது தேவர் அவர்களுக்கு நெருங்கிய நண்பர் என்றும், கனம் சசிவர்ண தேவர் அவர்களுக்கு ஒரு நண்பர் என்றும், முதுகுளத்தூர் மக்கள் தனக்கு சொந்தக்காரர்கள் என்றும் குறிப்பிட்டார். அப்படி சொல்லிக்கொண்டு தனக்கு அரசியல் பொறுப்பு இருக்கிறது என்றும் சொல்லிக்கொள்ளுகிறார். அந்தப் பக்கத்திலுள்ள மக்கள் திருந்த வேண்டுமென்று குற்ற பரம்பரைச் சட்டம் போட்டிருந்தும் கூட அங்குள்ளவர்களுக்கு நல்ல முறையில் வாழவேண்டும் என்று வாய்ப்புக் கொடுத்திருந்தும் அவர்கள் அவைகளை உபயோகப்படுத்திக் கொள்ளாமல் இருந்தும் காட்டு மிராண்டிகளைப்போல் இருந்தார்கள் என்றும் அவர்களுக்குத் தலைவராக தேவர் அவர்கள் இருந்தார் என்றும் சொன்னார். அப்படி அவர் சொன்னது அவருக்கு மிகவும் அழகாக இருந்தது. அப்படிப்பட்ட மக்களும் அவர்கட்கு ஒரு தலைவரும் அந்தப் பக்கத்தில் இவ்வளவு காலம் இருந்திருக்கிறார் என்று சொன்னதும் ஆச்சரியமாக இருந்தது. அது எதைக் காட்டுகிறது என்றால் இதுவரையிலும் அங்கே அரசாங்கம் நடைபெறவில்லை என்றுதான் காட்டுகிறது, என்ற அந்த தொனியில் அவர் பேசினார். அந்தப் பகுதி இந்த நாட்டில் தானிருந்ததா அல்லது வேறெங்குமிருந்ததா அதே பிறப்பட்ட பகுதியைச் சேர்ந்தவரும், அரசாங்கத்தை நடத்தத் தெரிந்தவரும் ராமனாதபுரம் ஜில்லாவாசியும், ஆதி தியாகியாகவும் தலைவராகவும் இருக்கும் முதல் மந்திரி காமராஜ் அவர்கள் வந்த பிறகும் அங்கு ஏன் முன்னேற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்பது தெரியவில்லை.

தெரிந்திருந்தும் ஏன் அதைப் புறக்கணித்தார்கள்? இந்தக் குற்றம் யாரைச் சார்ந்தது? நாட்டு மக்களோடு மக்களாகக் கருதாமல் அவர்களைக் குற்றபரம்பரைச் சட்டத்தில் வைத்து இருந்தார்கள் வெள்ளைக்காரர்கள் வெள்ளைக்காரர்களுக்குத்தான் தேவர்களும் பள்ளர்களும் வேண்டாதவர்களாக இருந்தார்கள் என்று சரித்திரம் சொல்லும். அந்தப் பகுதி வெள்ளைக்காரர்கள் காலத்தில்தான் புறக்கணிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் கஷ்டப்பட்டார்கள். உசிலம்பட்டி பிராந்தியத்திலே குற்ற பரம்பரைச் சட்டத்தை எதிர்த்தவர்களை 20 பேருக்கு மேல் சுட்டு எரித்தார்கள். அன்று வெள்ளை அரசாங்கம் அப்படிச் செய்தது. வெள்ளைக்காரர்கள் தான் செய்தார்கள் என்றால், இந்தக் காலத்திலும் அந்தப் பகுதியைப் புறக்கணிப்பதும், புறக்கணிக்கப்பட்டதற்குக் காரணம் தேவர் தலைவர் என்று சொல்வதும் சரியல்ல. 'மக்களுக்கு அவர் நன்மை செய்யவில்லை. யானால் அரசாங்கம் நடத்தும் இவர்கள் ஏன் அந்த மக்களுக்கு நன்மை செய்யவில்லை? இவர்கள் பேசுகிற பேச்சு எப்படியிருக்கிறதென்றால், வெள்ளைக்காரர் அன்றைக்குப் பேசிவந்ததைப்போல இருக்கிறது. அவர்களைப் பின்பற்றி இவர்களுடைய பேச்சும் இருக்கிறது.

(Mr. Speaker in the Chair)

காமன்வெல்தில் இந்தியா இருப்பதைக் குற்றமாகச் சொல்லி தேவர் அவர்கள் போராட்டத்தைச் செய்து சதித் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அதற்காகத்தான் அவரைப் பிடித்து வைத்திருக்கிறோம் என்று அதில் ஒரு கலகத்தை மூட்டி தேவர் மீது கொலை குற்றம் சொல்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? அன்றிருந்த வெள்ளைக்கார மனப்பான்மையைக் காட்டுகிறது. அவர் ஒரு காட்டு மிராண்டி, ஒரு கொலைகாரர், ஜாதி விரோதத்தை தூண்டிவிட்டார் என்று குற்றத்தைச் சாட்டி, வெள்ளைக்காரர்கள் வழியில்

[Sri P. K. Mookiah Thevar] [30th October 1957

இவர்களும் போகிறார்களேயொழிய, இந்த நாட்டு மக்களிடமிருந்து வரி வாங்குகிறோமே, அவர்கள் பேரால் ஆளுகிறோமே, ஆகவே, அவர்களுக்கு நாம் ஏதாவது செய்யவேண்டாமா என்று அவர்கள் சிந்திக்கவில்லை. தேவர் அவர்கள் இன்று வேண்டாதவர்களாக இருக்கலாம். அந்தப் பகுதியிலுள்ள மக்களிடமிருந்து பரம்பரையாக வரிப் பணம் வாங்குகிறார்களே ? அதற்காகவாவது அவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று ஏதாவது சிந்தனை செய்து பார்த்தார்களா ? இல்லை.

கனம் அங்கத்தினர் பாரதி அவர்கள் அந்தப் பகுதியினருக்குச் சொந்தக்காரராக இருந்தும், அவர்களைக் காட்டுமிராண்டிகள் என்று சித்தரிப்பது வேடிக்கையாக இருக்கிறது. அப்படிச் சித்தரித்ததோடு, அவர்களுக்கு தேவர் உடந்தையாக இருந்தார் என்று சொன்னார்கள். 1936, 1937-ம் வருஷங்களில் தேவர் இல்லையென்றால் அந்தப் பிராந்தியத்தில் காங்கிரஸ் இல்லை என்பதை அவர்களே உணருவார்கள். மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அன்று காங்கிரஸ் காப்பாற்றப்பட்டிருந்ததற்குக் காரணம், தேவர் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். சரித்திரம் சொல்லும். காட்டுமிராண்டி என்று இன்றைக்குச் சித்தரிக்கப்படும் தேவர் அன்றைக்கு காங்கிரசுக்குத் தேவையாக இருந்தது.

**SRI R. CHIDAMBARA BHARATHI** : கனம் நண்பர் சொல்வதை நான் மறுக்கிறேன். நான் ஒப்புக்கொள்ளவில்லை.

**MR. SPEAKER** : அது ' Point of order ' இல்லை.

**SRI P. K. MOOKIAH THEVAR** : நீங்கள் மறுக்கலாம், சரித்திரம் மறக்காது. பாரதி போன்றவர்களை அன்றைக்கு பாம் கேஸில் சம்பந்தப்படுத்தி தண்டிக்கவேண்டுமென்று முயற்சி செய்த காலத்தில், காங்கிரஸ்காரர்கள் பலரும் விரோதமாக இருந்த காலத்தில் இவரை அதே தேவரும், சசிவர்ண தேவரும் காப்பாற்றினார்கள் என்பது இந்தச் சபைக்குத் தெரியாது சரித்திரம் சொல்லும், இன்றைக்கு மறைக்கப்பட்டிருந்தாலுங்கூட மானம், மரியாதையை நல்ல முறையில் காப்பாற்றி, காங்கிரசைக் காப்பாற்றி, பலமுறையில் சிறை சென்றார் தேவர் என்பது நாளை தெரிந்துவிடும்.

ராஜாஜி மந்திரி சபையில்கூட அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அன்றைக்கு விவசாயப் போராட்டத்திற்கு, தொழிலாளர் போராட்டத்திற்காக 1937-ல் சிறை சென்றார். ராஜாஜி காங்கிரஸ்காரராக இருந்தாலுங்கூட, அன்று ராஜாஜி அவர்களுக்கும் சத்தியமூர்த்தி அவர்களுக்கும் போட்டி இருந்தது. சத்தியமூர்த்தி அவர்களுக்கு நமது காமராஜ் சிஷ்யராக விளங்கினார்கள். பாமரர் என்று இப்பொழுது சொல்லப்படும், பாமரர்களுக்குத் தலைவர் என்று சொல்லப்படும் தலைவர் தேவர் அவர்கள், அன்று சத்தியமூர்த்திக்கு உடந்தையாக இருந்தார், காமராஜ் அவர்களுக்கு உடந்தையாக இருந்தார். 1946-லே ராஜாஜி அவர்களை எதிர்த்து தேவர் அவரது தலைமையை மாற்றினார். காரணம் அதற்கு முன்னால் நடந்த 1942-ம் வருஷத்திய போராட்டத்தில் கலந்து கொள்ளாது கலந்தவர்களை காலிகள் கூலிகள் என்று ராஜாஜி சொன்னதுதான் தேவர்தான் பீடத்தில் இன்றுள்ள காங்கிரஸ்காரர்களை அமர்த்தினார்கள் என்பதை மறுக்க முடியாது. இது சரித்திரம். இப்படி இருக்கும்போது, தேவரைத் தனிப்பட்ட முறையில், கொலைக் குற்றம் செய்தார் என்றோ, அக்கிரமக்காரர் அநியாயக்காரர் என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்ளுங்கள். ஆனால், அந்தப் பகுதி மக்களுடைய சொந்தக்காரர் என்று சொல்கிற பாரதி போன்றவர்கள் அவர்களைக் காட்டுமிராண்டிகள் என்று சித்தரிக்கிறது வேடிக்கையாக இருந்தாலும் மனதைப் புண்படுத்துகிறது என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

முதுகுளத்தூரில் நடந்தது என்ன ? எல்லோரும் குறிப்பிட்டார்கள். குறிப்பாக ஹரிஜன அங்கத்தினர்கள் நொந்துகொண்டார்கள். அந்தப் பகுதி மக்களுக்குள்ள ஜாதி வெறி காரணமாக, பொருளாதாரத் துறையில் முன்னேறவேண்டுமென்று ஒரு சாரார் விரும்பியதன் காரணமாக, வளர்ச்சித் திட்டங்களில் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு என்று சொல்லி,



30th October 1957] [Sri P. K. Mookiah Thevar]

அவைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்ததன் காரணமாக அங்கு நடந்துவிட்டது கலவரம். கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கண்ணீர் வடிக்கின்றோம், வருந்துகிறோம்.. நாம் பொறுப்புள்ள அங்கத்தினர்களாக வந்திருக்கிறோம். அமைதியை நிலைநாட்ட அரசாங்கம் தவறிவிட்டது. 1930, 1932-ம் வருஷத்திலிருந்து வளர்த்துக்கொண்டே வந்தார்களே, இவ்வளவு காலமாக அவர்கள் வேடிக்கையா பார்த்தார்கள் ? ஜாதிச்சண்டை நாட்டிலே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறதென்றால் அது வளரட்டும் என்று 1957-ம் ஆண்டு வரை ஏன் சும்மா இருக்கவேண்டும். அதற்குப் பின்னால் முடிவு கட்டவேண்டும் என்று இருந்தார்களா ? இப்படிச் சுட்டுத் தள்ளி, அரசியல் கட்சிக்குப் பலம் தேடிக்கொள்ளலாம், அதற்கு வாய்ப்பு வரும் என்று இவ்வளவு நாளாக விட்டுக்கொண்டுவந்தீர்களா ? அந்தத் திட்டம் போட்டு வேலை செய்தீர்களா ? காலாகாலத்தில் ஏன் முடிவு செய்யவில்லை. எத்தனை கேஸ் போட்டீர்கள் ? எத்தனை பிரசாரம் செய்தீர்கள் ? தீண்டாமைப் பிரசாரம் நடந்ததா ? அந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்ட பகுதி என்று தத்தார் அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். இப்படி புறக்கணிக்கப்பட்டு வந்திருக்க, இப்பொழுது என்ன திடீரென்று அக்கறை வந்துவிட்டது ? துப்பாக்கியால் சுடவேண்டிய நிலைமை என்ன வந்துவிட்டது ? அங்குள்ள பள்ளர்களும் தேவர்களும் தாய்-பிள்ளை உறவு கொண்டு இருக்கிறார்கள். இதைக் கெடுக்கப்பார்க்கிறீர்கள் இனி இது முடியாது.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டார்கள். 1893-ம் வருஷத்தில் சிவகாசியில் கொள்ளை அடித்தார்கள் நாயுடுக்கள், பள்ளர்கள், தேவர்கள். நாடார்கள் வியாபாரத் துறையில் முன்னேறி இருக்கிறார்கள் என்று அவர்கள் மீது போர் தொடுத்தார்கள். நாடாருக்கு விரோதமாக அப்பொழுது பள்ளர்கள் சண்டை போட்டார்கள் என்ற காரணத்திற்காக இன்று பதவிக்கு வந்துவிட்டோம், ஆகவே, அவர்களை பழிவாங்கவேண்டுமென்ற நோக்கங்கொண்டுதான் இப்படிச் செய்தீர்கள் என்று நான் காமராஜ் அவர்களைப்பற்றி ஏன் சந்தேகம் கொள்ளக்கூடாது ? அதனால்தான் முதுகுளத்தூர் கலவரத்தை பள்ளர் தேவர் சண்டை என்று சித்தரிக்கிறார்களா என்று கேட்கிறேன். இதைச் சொல்ல எனக்கு உரிமை இல்லையா ? அவர்கள் சொல்லிக்கொள்வது போல் எனக்கும் அந்த உரிமை இருக்கிறது.

அன்றிலிருந்து சக்கிலியர்கள், பறையர்கள், பள்ளர்கள் இவர்களிடையே வேற்றுமை இருந்து வருகிறது. பறையர்களுக்கும் மற்ற ஜாதி இந்துக்களுக்கும் உள்ள வேற்றுமையைக் காட்டிலும், பள்ளர்களுக்கும் பறையர்களுக்கும் இடையே வேற்றுமை அதிகமாக இருக்கிறது. பள்ளர்களுக்கும் பறையர்களுக்கும் போட்டா போட்டி இருக்கிறது. ஸ்ரீ கக்கன் அவர்களைக் கேட்கிறேன்,—இதுவரை பள்ளர் யாராவது மந்திரியாக வந்தார்களா ? தென் ஜில்லாவில் பள்ளர்கள் இதைச் சொல்லி பிரசாரம் பண்ணுகின்றார்கள். ஹரிஜனங்கள், பாதிக்கப்பட்ட மக்கள், அவர்களுடைய கொள்கையை எடுத்துச் சொன்னதால், இந்த நிலைமை உண்டாகியிருக்கிறது என்று நான் சொல்ல உரிமை இல்லையா ? பிரச்னையைச் சிக்கல் செய்ததால் என்ன நிலை ஏற்பட்டிருக்கிறது ? பள்ளர் பறையர் நிலைமையை வைத்து, கக்கன் அவர்கள் மந்திரியான உடன் பள்ளர்களை பழிவாங்கும் நோக்கத்தோடு சதி செய்யப்பட்டது என்று சொல்ல எங்களுக்கு அந்த உரிமை இல்லையா ?

எல்லா இடத்திலும் வித்தியாசம் இருக்கிறது. வித்தியாசத்தைப் பெரிதுபடுத்தி சமூகத்திலுள்ள அமைதியைப் பாதிக்கக்கூடிய முறையில் நடந்துகொள்ளக்கூடாது என்று நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**SRI M. C. MUTHUKUMARASWAMY** : சபாநாயகர் அவர்களே கனம் அங்கத்தினர் அவர்கள், பேசும்போது, பள்ளர் யாரும் மந்திரியாக வர முடியாது, அதற்கு வசதி இல்லை என்று சொல்கிறார்கள். திரு எம். பி. பெரியசாமி அவர்கள் சட்டசபை ஆரம்பித்த முதலே அங்கத்தினராக இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி சர்க்கார் அவர்களுக்காக விட்டுக்கொண்டிருக்கும்போது, இம்மாதிரி குற்றம் சாட்டுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**SRI. P. K. MOOKIAH THEVAR:** அங்கத்தினராக இருக்கலாம் அமைச்சராக இல்லையே அம்மாதிரி சம உரிமை கொடுக்கப்பட்டால் அதை நான் வரவேற்கிறேன். நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். சகல நன்மையையும் செய்யவேண்டும், ஆத்திரம் கொள்ளக்கூடாது என்று சொல்லுகிறார்கள். மூவேந்தர்கள், ஆண்டவர் பரம்பரை, இன்று மனிதர்களாகப் பிறந்திருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. அது சரியல்ல. நீண்ட காலமாக ஹரிஜனங்களுக் குள்ளே அந்த வித்தியாசம் இருந்து வந்திருக்கிறது. அதைப் போக்க வேண்டுமென்ற நிலைமையில்தான் இதைப்பேசுகின்றேனேயொழிய வேறொன்றுமில்லை. தேவர்கள் அவர்கள் ஹரிஜனங்களுக்குப் பாடுபட்டது, அவர்கள் செய்த தொண்டு மற்றவர்கள் யாரும் செய்திருக்க முடியாது, அந்தப் பகுதி சம்பந்தப்பட்டவரை. தேவர் அவர்கள் காந்திஜியையே மதுரையில் ஒரு தடவை கண்டித்துப் பேசியிருக்கிறார், காந்திஜிக்கே இந்தக் கதியென்றால் ஹரிஜனங்கள் நிலை எப்படி இருக்கும்? என்று பாரதி சொன்னார்கள் அதே கூட்டத்தில் சட்ட நிபுணர் அம்பேத்காரைப் படிக்க வைத்த பெருமை திலகரைச் சாரும் அந்தப் பரம்பரையில் வந்தவன் நான் என்று தேவர் பேசினதை பாரத் ஏன் குறிப்பிடவில்லை. சிறு வித்தி யாசங்களைப் பெரிதாக்கி, அரசியல் காரணங்களுக்காக உபயோகப்படுத்தினால் யார் பாதுகாக்கப்படவேண்டுமென்று சொல்கிறோமோ அவர்கள் பாது காக்கப்பட முடியாமல் போகும். ஜாதிச்சண்டை ஜாதிச் சண்டை என்று பேசிக்கொண்டிருப்பது நாட்டில் நிரந்தரமான அமைதியை ஏற்படுத்தாது. தலைமை தாங்கக்கூடியவர்கள் எவரோ அவர்களைப் பின்பற்றித்தான் நாடு போகிறது. அவர்களைப் பின்பற்றித்தான் நாடு வாழுகிறது. ஜாதிச் சண்டை, ஜாதிச் சண்டை என்ற நிலைமை நின்றால், வருங்கால சரித்திரத்தில் நாட்டில் முன்னேற்றத்தை எதிர்ப்பார்க்கவும் முடியாது.

முதுகுளத்தூர் சண்டை ஜாதிச் சண்டை ஆக்கப்பட்டுவிட்டது. நியூ யார்க் டைம்ஸ் என்னும் பத்திரிகையும், பி.பி.ஸி. ரேடியோவும் இதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். "இந்தியாவில் ஜாதிப் பூசல் இருக்கிறது, உள் நாட்டுக் குழப்பமிருக்கிறது அதனால், அயல் நாட்டிலிருந்து நாங்கள் கடன் கொடுக்க முடியாது. அவர்களை நம்பி நாங்கள் எப்படிக் கடன் கொடுப் போம்" என்ற முறையில் வெளிநாட்டுப் பத்திரிகையில் எழுதுகிறார்கள். முதுகுளத்தூர் கலவரத்தால் ஐந்தாண்டுத் திட்டமே பாதிக்கப் பட்டிருக்கிறது டைம்ஸ் பத்திரிகை என்ன சொல்கிறது? "கவர்ன்மெண்ட் சுட்டது தவறு, என்குவைரி போடவில்லை, ஜட்ஜைப் போட்டு விசாரிக்காமல் இருக்கிறது" என்று எழுதுகிறது. இதிலிருந்து வருகிற அவமானம் நாட்டில் பிறந்த எல்லோருக்கும் தான், வரி கொடுக்கிற மக்கள் எல்லோருக்கும் ஏற்படக்கூடிய அவமானம் இது. அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய அவமானம் எங்களையும் சார்ந்ததே. அதைக் கேட்க எங்களுக்கு உரிமை இல்லையா என்று நான் கேட்கிறேன். இந்த நிலையில் ஜாதி வித்தியாசத்தை யாரும் விரும்பவில்லை. மனித னாகப் பிறந்தவர்கள், நாகரிகம் உள்ளவர்கள் யாரும் விரும்பமாட் டார்கள். நாங்கள் ஹரிஜனங்களுக்கு விரோதி அல்ல. ஹரிஜனங்கள் ஆயிரம் அடி அடித்தாலும் நாங்கள் தாங்கிக்கொள்ள தயாராக இருக் கிறோம். அங்குள்ள விவசாய நிலைமையையும் நிலத்தின் நிலைமையையும் பெரிதாக்கவேண்டாம், நாங்களும் விவசாயி, அவர்களும் விவசாயி, ஒரே வாய்க்காலில் படுக்கிறோம், ஒரே வரப்பில் படுக்கிறோம் அந்த நேரத்தில் சிறு சண்டைகள் நேரிடலாம். ஒருவர் 'பண்ணை' மற்றொருவர் ஆண் டிருக்கலாம். இந்த சண்டைகளையெல்லாம் பெரிதாக்கி வியாபாரம் செய்து அரசியல் விவகாரமாகச் செய்வது மிகவும் அவமானகரமாகும். நாடு விளங்காது. அதற்காக துப்பாக்கி கொண்டா தாக்கவேண்டும்? அதற்கு சட்டம் இருக்கிறது. கோர்ட்டுகள் இருக்கின்றன. நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். ஆட்சேபணை இல்லை. முத்துராமலிங்கத் தேவருக்கு நீங் கள் நன்மை செய்தால் தேவர்கள் உங்களுக்கு உதவி செய்யலாம். துப் பாக்கி மூலமாகவா ஹரிஜனங்களுக்கு சேவை செய்யவேண்டும்? உங்கள் காந்தீயக் கொள்கை என்ன ஆயிற்று? அஹிம்சை என்ன ஆயிற்று? பஞ்சசீலக் கொள்கை என்ன ஆயிற்று? துப்பாக்கி கொண்டு சுடவேண்டிய





அவசியம் ஏற்பட்டதா? துப்பாக்கி கொண்டு சுடுவதற்கு முன்னால் தடி கொண்டு அடிப்பது வழக்கமில்லையா? உங்களிடம் டியர் காஸ் இல்லையா? அதை ஏன் உபயோகப்படுத்தக்கூடாது? உங்களிடம் போலீஸ் படை இல் லையா? 1930-வது வருஷத்திலிருந்து யோசித்துக்கொண்டிருக்கிறீர்களே? 1932-வது வருஷத்திலிருந்து யோசித்து திட்டம் போட்டிருக்கிறீர்களே? ஏன் கலகம் வராமல் தடுப்பதற்கு ஏராளமான போலீஸ் படையை பாதுகாக்கும் முறையில் வைத்திருக்கக்கூடாதா? அவர்களுக்கு எச்சரிக்கை கொடுத்து தண்டிக்கக்கூடாதா? கேஸ்கள் போடக்கூடாதா? அரசாங்கமே அரசியல் சண்டையை ஜாதிச் சண்டையாக்க அத்தனை முயற்சியும் எடுத்திருக்கிறது மிகவும் மோசமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. உலக சரித்திரத் திலேயே ஒரு மோசமான நிலைமை ஏற்படுத்தியிருக்கிறது. காமராஜ் அவர் களுக்கும் ஸ்ரீ தேவர் அவர்களுக்கும் பல காரணங்களைக்கொண்டு அரசியல் ரீதியில் பல விரோதங்கள் இருக்கலாம். ஒரு கட்சிக்குள்ளேயே இருப்பவர் களிடம் அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். போட்டிகள் ஏற்படலாம், அதற்காக வாய்ப்பு வந்தவுடன் தலைவர்களை பின்பற்றிய ஜனங்களை பழி வாங்குவது மிகவும் அவமானம். அதே ஜில்லாவிலே 'புயல் வெள்ளம் ஏற்பட்ட பொழுது முழங்கால் தண்ணீரிலே இறங்கி உழைத்தார் காமராஜ் அவர்கள். அப்படியிருக்கும்பொழுது அங்கு ரத்த ஆறு ஓடும்பொழுது அவர் அங்கு ஏன் சுற்றுப்பிரயாணம் செய்யவில்லை. அதற்கு முன்னால் 20 வருஷ விரோதம் கலகத்துக்கு காரணம் என்று அவர் வாயாலேயே சொன்னார். நால்வர் கமிட்டி போட்டு தேவரை சந்திக்க தாயாரர்க இருக்கிறார்களா என்று கேட்டால், தேவர் வந்தால் அமைதி ஏற்படுத்தி விடுவார் என்ற பொறாமையினால் அவர் மறுத்துவிட்டார். இதெல்லாம் அரசியல் ஆகாத தேவர் துப்பாக்கியை சோளத்தட்டை என்று சொன்னதற் காகவா ஐந்து துப்பாக்கி கொண்டு சுட்டீர்கள்? ஜாதிச் சண்டை அங்கு இல்லை. வருஷக்கணக்கில் ஹரிஜனங்களும் நாங்களும் ஒன்றாக வாழ்ந்து வருகிறோம். இந்த அவமானம் எங்களைச் சார்ந்தது அல்ல, மக்களைச் சார்ந் தது அல்ல, உங்களைத்தான் சாரும். ஹரிஜனங்கள் எங்களோடு நிலத்தில் இருக்கிறார்கள். எங்களையும் அவர்களையும் பிரிக்க முடியாது. நாங்கள் மனிதனைச் சுரண்டி பிழைக்கவில்லை. நிலத்தை சுரண்டி பிழைக்கிறோம். நாங்கள் மழையை நம்பி பிழைக்கிறோம். தயவுசெய்து எங்கள் மனதை புண்படுத்தவேண்டாம். நாங்கள் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க தயாராக இருக்கிறோம். சபையில் உள்ளவர்கள் கட்சி பிரதி கட்சி இல்லாமல் ஒரு கமிட்டி போட்டு விசாரணை நடத்தட்டும். நாங்கள் குற்றம் செய்திருந்தால் பிறகு தண்டனையை ஏற்றுக்கொள்ள தயா ராக இருக்கிறோம். பல கட்சிக்காரர்கள் பலவிதமாக புகார்கள் செய்கிறார்கள். எத்தனை பயங்கரமாகப் பேசுகிறார்கள்? உங்கள் அஹிம்சை தத்துவம் எங்கே போயிற்று? ஊழியர்களாக இருந்து, தலைவர்கள் ஆகி மந்திரிகள் என்று சொல்லிக்கொண்டு தமிழ் நாட்டிற்கே மனித வர்க்கத்திற்கே அவமான மான காரியத்தைச் செய்திருக்கிறீர்கள். அதற்காக நீங்கள் ராஜிநாமா செய்துவிட்டு அந்தப் பாவத்தை கழுவவேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

***DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN:** சபைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே முதுகுளத்தூர் வட்டா ரத்தில் நடந்த விஷயங்கள் பற்றி பேசுவது மனதுக்கு கஷ்டத்தையும் வேதனையையும் கொடுக்கிறது. ஆனால் சட்ட சபையின் பொறுப்பு அதைப் பற்றி பேசவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் சொன்னது, இவர்கள் சொன்னது அல்ல, நான் கண்டது கேட்டது முக்கிய மாக சில விஷயங்களைப்பற்றி மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ராமநாதபுரம் ஜில்லா கீழ் தாலூகாக்களின் நிலைமையை இரண்டு பக்கத்திலும் எனக்கு முந்தி பேசியவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நான் அது சம்பந்தமாக ஒன்று மட்டுமே சொல்ல விரும்புகிறேன். கீழ்ப்பக்கத்து தாலூகாக்கள் அந்தக் காலத்திலிருந்து பல நூற்றாண்டு களாக ஜமீன்தார்கள் ராஜாக்கள் அவர்களுடைய ஆளுகையிலே இருந் தது என்பது நமக்குத் தெரியும். அந்த ஜமீன்தார்களைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய சொந்தக்காரர்கள், சிறு ஜமீன்தார்கள் மறவர்கள். அவர்

[30th October 1957
[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

கள் ஆளும் கட்சியினரைப் போல் அங்கு இருக்கிருர்கள். ஆதலால் மறவர்களுக்கு அந்தப் பக்கத்திலே ரொம்ப செல்வாக்கு உண்டு. அவர்கள் எஜமானர்கள் என்ற மனப்பான்மை அங்கு உண்டு. அவர்களுடைய படைவீரர்கள் போல் ஹரிஜனங்கள், முக்கியமாக பள்ளர்கள். நான் பள்ளர்கள் என்று பிரித்து சொல்லுவதற்கு விரும்பவில்லை. இருந்தாலும், ஹரிஜனங்கள் தேவமார்கள் சண்டை என்று சொல்லுவது சரியல்ல. ஆனல் பள்ளர்கள் மட்டும்தான் இதில் பங்கெடுத்துக்கொண்டார்கள், கஷ்டப்பட்டார்கள். ஆதலால் பள்ளர்கள் மட்டும் என்று குறிப்பாக பிரித்து சொல்லிவிட்டு, இனிமேல் ஹரிஜனங்கள் என்றே குறிப்பிடுகிறேன். ஆண்டை, அடிமை என்று பொதுவாக இது இந்தியா பூராவுமே இவர்கள் உறவு இருந்திருக்கிறது. நம் நாட்டிலே ஹரிஜனங்களை தாழ்த்தி வைத்திருக்கிருேம் என்பது எனக்குத் தெரியும். அந்த இடத்திலே ஒற்றுமையாக தாயும் பிள்ளையுமாக பல நூற்ருண்டுகளாக இருந்திருக்கிருேம் என்று சிலர் சொன்ஞர்கள். தாயும் பிள்ளையும் என்ற தன்மை எப்படிப்பட்டது என்பது புரியவில்லை. கீழ் தாலூகாக்களில் நான் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறேன். அருப்புக்கோட்டை, திருப்பாசேத்தி, திருப்புவனம் முதலிய இடங்களிலுள்ள ஜனங்களை ஓரளவு புரிந்துக்கொள்ளக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. வெள்ளமும் புயலும் வந்த பொழுது 6 வார காலம் அங்கே சுற்றியிருக்கிறேன். காந்தி கிராமத்திலிருந்து 180 மாணவர்கள், ஆசிரியர்கள், தோழர்கள் அங்கு போயிருக்கிருேம். சர்க்காரும் கிராம சேவக் மாணவர்களை நிறைய அனுப்பி வைத்தார்கள். கல்லுப்பட்டி கிராம சேவக் மாணவர்களுக்கும் என்னுடைய ' பிராஜக்ட் ஸ்டாப் மெம்பர்களுக்கும் ' முதுகுளத்தூர் தாலூகாவில் வேலை செய்து ஜனங்களோடு தொடர்பு சொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அருப்புக்கொட்டை, திருச்சுழி முதலிய இடங்களிலெல்லாம் உடனடியாக அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளவேண்டுமென்று நாங்கள் அப்பொழுதே சர்க்காருக்குச் சொல்லியிருக்கிருேம். ஆனல் ஆச்சரியம் என்னவென்ருல், அந்த வட்டாரத்தில் நாங்கள் போனதும் ' தேவர் எங்கே ' என்று விசாரித்தேன். அது அவருடைய தொகுதியாதலால் அவரைப்பற்றி விசாரித்தேன். எனக்குச் சொல்லபட்ட பதில் அவர் பர்மா போயிருக்கிருர் என்பது தான். அவர் ரொம்ப அதிர்ஷ்டக்காரர், அவர் தொகுதிக்குப் போகாமலே ஜெயித்து வரக்கூடிய சக்தி அவருக்கு இருந்தது. வெள்ளமும் புயலும் வந்த காலத்திலே பக்கத்து ஜில்லாவிலிருந்து நாங்கள் அங்கு வேலை செய்யப் போகும்பொழுது அந்த வட்டாரத்து எம்.எல்.ஏ. அங்கு இல்லை. ஜனங்களிடம் எந்த விதத்திலே சக்தி வளருகிறது, பொறுப்பு எந்த விதத்தில் இருக்கிறது என்ற ஒரு விஷயத்திற்காக மட்டும் இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு அந்த வட்டாரத்தைப்பற்றி மற்றவர்கள் சொல்லிவிட்டார்கள். அங்கே கல்வி வசதி கிடையாது, போக்குவரத்து வசதி கிடையாது, ஒரே போக நிலங்கள், இந்த மாதிரி பலவிதமான சிக்கல்கள் இருப்பதனல் பொருளாதாரத்திலும் மிகவும் பிற்போக்காக இருக்கின்ற பிரதேசம் எனப் பலர் சொல்லிவிட்டார்கள்.

ஆனல் அந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு நல்ல துணிச்சல், தைரியம், சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்படக்கூடிய தன்மை எல்லாம் நிறைய இருக்கிறது. இதை நாம் மறக்கக்கூடாது. அந்தத் துணிச்சலை தைரியத்தை, உணர்சசியை நல்ல முறையில் செலுத்துவதா ? அழிக்கிற முறையில் செலுத்துவதா என்பதை நாம் கவனிக்கவேண்டும். மறவர்கள் உணர்ச்சிவசப்படக்கூடியவர்கள், யாருக்கும் அடிமைப்படமாட்டோம் என்கிற நெஞ்சத் துணிவு உள்ளவர்கள். சுதந்திரப் போராட்ட காலத்தில் எத்தனை சம்பவங்கள் அவர்களினல் நடந்திருக்கின்றன, அவர்களுடைய தேசாபிமானம் எவ்வளவு என்பது எல்லாம் நமக்குத் தெரிந்திருக்கிறது. ஆகேவேதான் இதைச் சொல்லுகிறேன்.

வெகுகாலமாக அந்தப் பிரதேசத்தில் உள்ளவர்கள் தாயும் பிள்ளையுமாக இதர சாதியாருடன் இருந்து வந்தார்கள் என இங்கே சொல்லப்பட்டது. அதைப்பற்றித்தான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள்



30th October 1957]
[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

எப்படித் தாயும் பிள்ளையுமாக இருந்தார்கள் என்பது நமக்கு எல்லாம் தெரியும். சமீபத்தில் நான் அங்கே போயிருக்கிற காலத்தில் முக்குலத்துப் பெண்கள் என்னிடம் கேட்டார்கள், " ஹரிஜனங்கள் முக்குளத்தாரைப் பார்த்து பெண் கேட்க வந்தார்களாமே ? பெண் கேட்க வருவதற்கு அத்தனை துணிச்சலா ? " என்பதாக. ஹரிஜனங்கள் உயர்சாதிப் பெண்களைக் கேட்கவந்தார்கள் என்கிற வதந்தி அங்கே எப்படியோ பரப்பப்பட்டிருக்கிறது. இத்தனை உணர்ச்சியோடு தாய்மார்கள் கேட்டார்கள் என்ருல் ஆண் மக்களுக்கு எத்தனை உணர்ச்சி அதனல் எற்பட்டிருக்கும் எனச் சொல்லமுடியாது. தாயும் பிள்ளையுமாக இருக்கக்கூடிய பிரதேசத்தில் இப்படிப்பட்ட வ்தந்தி எப்படிப் பரப்பப்பட்டது என்று கேட்கிறேன். அதுவும் அவர்களுடைய குணம் சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்படுவது என்று சொன்னேன். ரொம்ப தைரியமானவர்கள், உயிருக்கு அஞ்சாதவர்கள், அவர்களிடத்தில் இப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் நம் சமூகத்தினிடம் வந்து பெண் கேட்டார்கள் என்கிற வ்தந்தியைப் பரப்பவிட்டிருக்கிருர்கள் என்ருல் இதனல் பெண்களே கொதிப்படைந்து என்னிடம் கேட்டார்கள் என்ருல் இதைச் செய்தது யார் ?

SRI P. K. MOOKIAH THEVAR : On a point of order அம்மையார் அவர்கள் அங்கே சென்றபோது பெண்கள் இப்படிச் சொன்னதாகச் சொல்கிருர்கள். எப்போது போனர்கள் ? காந்தி கிராம சாந்தி சேனையோடு போனபோது அப்படிச் சொன்னர்களா ? ஸ்ரீ தத்தருக்குப் பின்னல் காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஆகப் போனபோது இந்தத் தகவல் அவருக்குக் கிடைத்ததா என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : இது point of order இல்லை.

* DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : கலவரம் நடந்த சமயத்தில், இப்போது நான் போகவில்லை. காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஆகவோ, மந்திரி சபையிடம், அரசாங்கத்திடம் அனுமதி வாங்கிக்கொண்டு போனபோது இல்லை. எந்தப் பிரதேசத்தில் துன்பம் ஏற்பட்டாலும் எங்கள் சாந்தி சேனையுடன் சென்று உதவி அளிப்பது என்பது எங்கள் கொள்கை. அப்படி அங்கே போகும்போது தான் அந்த மாதிரியாகச் சொன்ஞர்கள். இது எதிர்க் கட்சிக்காரருக்கும் தெரியும். ஆகவே அதை விளக்கவேண்டியது இல்லை.

அடுத்தபடியாக கொலை செய்யப்பட்ட இமானுவேலைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஞாபகம்கூட இல்லை. இப்பொழுது அந்த இடத்திற்குப் போனபோதுதான் மிஸஸ் இமானுவேல் ஞாபகப்படுத்தினர்கள்.

ஏழு வருஷங்களுக்கு முந்தி முக்குலத்தோரைச் சேர்ந்த ஜகந்நாதனுக்கும்—அவர் முதுகுளத்தூர் தாலுக்காவைச் சேர்ந்தவர்தான். அவர் இப்போது பூதானக் கமிட்டி செயலாளராக இருக்கிருர்—ஒரு ஹரிஜனப் பெண்ணுக்கும் எங்கள் தலைமையில் தான் விவாஹம் நடந்தது. அந்த கிருணம்மா அம்மையார் காந்தி கிராமத்திற்கும் வேண்டியவர். இவரும் வேண்டியவர்தான். பெற்ருேர்கள் இந்தத் தாழ்த்தப்பட்ட பெண்ணை ஜகந்நாதன் மணப்பதை விரும்பவில்லை. இருந்தாலும் நாங்கள் கல்யாணத்தைப் பண்ணிவைத்துவிட்டு அம்மா அப்பா இரண்டு பேரிடமும் சென்று அவர்கள் ஆசி செய்ய மறுத்தாலும் அவர்களுக்கு வணங்கி வாருங்கள் என்று சொன்னேம். நானும் பின்னேடு போயிருந்தேன். பெண் நன்கு படித்தவள் தான். ஏழு வருஷத்திறகு முந்தி நடந்தது.

கல்யாணமானபின் அவர்களுடைய கிராமத்திற்கு போய்விட்டு நாங்கள் திரும்பும்போது ஒரு கிராமத்திலிருந்து ஹரிஜனங்கள் கூட்டமாக எங்களுக்கு வரவேற்பு அளிக்க எதிரில் வந்தார்கள். செல்லூரைச் சேர்ந்த அடுத்த ஊரிலிருந்து இமானுவேல் தலைமையில்தான் அந்த ஹரிஜன மக்கள் இப்படி ஒரு சீர்திருத்தக் கல்யாணம், ஹரிஜன சமூகத்தையே உயர்த்தக் கூடிய கல்யாணம் நடந்ததுபற்றி மகிழ்ச்சியோடு எங்களை வரவேற்ருர்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்ருல் அன்றைக்கு ஹரிஜனங்களுக்குத் தலைமை தாங்கி வந்தவர் இமானுவேல்தான்

[30th October 1957
[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

என்பதை இப்போது எனக்கு மிஸ்ஸஸ் இமானுவேல் ஞாபகப்படுத்தினார்கள். அன்றைக்கே அவர் இப்படிச் செய்திருக்கிறார் என்றால் நிச்சயமாக அவர் தன்னுடைய சாதியின் முன்னேற்றத்திற்காக எவ்வளவு துணிச்சலோடு பணியாற்றி வந்திருக்கிறார்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். அந்தத் துணிச்சல் அவருக்கு இருந்திருக்கிறது என்பதைச் சொல்லத்தான். இதைச் சொல்கிறேன். இப்படி இமானுவேல் ஹரிஜனங்களுடைய உண்மையான தலைவர் என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்தது.

செப்டம்பர் 11-ந்தேதி அன்றைக்கு பாரதி அமரர் ஆனதினம். பாரதியைப்பற்றி அன்றைக்கு இரவு அவர் பேசிவிட்டு வீட்டுக்கு 8½ மணிக்குத்தான் வந்திருக்கிறார். சாப்பிட்ட கை உலரவில்லை. உடனே வெளியில் கிளம்பும்போது அவருடைய மனைவி அவரிடம் சொன்னாளாம் "நீங்கள் இப்படி நாட்டைக் காப்பாற்றப் போவதாகச் சொல்லிக்கொண்டு சாப்பிட்டும் சாப்பிடாததுமாக ஓடிக்கொண்டிருக்கிறீர்கள். உங்கள் உயிர் காப்பாற்றப்படாமல் போய்விடும்போல் இருக்கிறதே, இன்றைக்கு எங்கும் வெளியில் போகவேண்டாம்" என அவருடைய மனைவி சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னதாக அந்தப் பெண்ணே என்னிடம் சொன்னாள். வேறு யாரும் இல்லை. "நான் ஒருவன் இறந்து போனால் பரவாயில்லை. என்னுடைய சாதியின் முன்னேற்றத்திற்கு நான் ஒருவன் இறந்து போனால் என் சமூகத்தைச் சேர்ந்த நூறு பேர்கள் உயிரைவிட வருவார்கள். என் சமூக முன்னேற்றம் தான் உயிரைவிடப் பெரிது" எனச் சொல்லிவிட்டு அவர் வெளியே போயிருக்கிறார். வெளியில் வந்தவர் கொஞ்சதூரம் கூடப் போகவில்லை. கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவரைக் கொலை செய்தது இன்னார் என்று நான் குறிப்பிடவில்லை.

பரமக்குடி போல இருக்கிற தாலூகாவில், தலைநகர ஊருக்குள், நகரத்து வாசலிலே, எல்லாக் கடைகளும் திறந்து இருக்கிற நேரத்திலே வேல், கம்பு, வாள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு கூட்டமாக வந்து அவரை வெட்டிப் போட்டிருக்கிறார்கள் என்றால் அதைத் தடுக்க மாட்டாது கடைக்காரர்கள் எல்லாம் பயந்துகொண்டு ஓடியிருக்கிறார்கள் என்றால் அது நமக்குத்தான் வெட்கம். எந்தச் சர்க்கார் தான் இப்படிப்பட்ட கோழைகளுக்கு எந்தப் பாதுகாப்பை அளிக்க முடியும் என்று கேட்கிறேன். போலீஸ் ஸ்டேஷன் அந்த இடத்திற்கு இரண்டு பர்லாங், நான்கு பர்லாங் தள்ளி இருக்கலாம். சம்பவம் நடக்கிற இடத்தைச் சுற்றி பல கடைகள் இருந்திருக்கின்றன, பல ஜனங்கள் இருந்திருக்கின்றனர். ஒருவர் கோரமாக கொலை செய்யப்படும்போது அத்தனை மக்களும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் ஓடியிருக்கிறார்கள் என்றால் சரித்திரம் உள்ளமட்டும், இந்தச் சர்க்கார் இந்த ராஜ்ய மக்கள் அத்தனை பேரும் வெட்கப்படவேண்டிய விஷயம் இது என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது. இது மனித சமூகத்திற்கு சரித்திரம் உள்ள வரைக்கும், ஒரு கறையாக, ஒரு சவாலாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இது சாதிச் சண்டையா, அரசியல் சண்டையா என்றால் மனச்சாட்சியைத் தட்டிப்பார்த்து ஒவ்வொருவரும் சொல்வதானால் இது சாதியும், அரசியலும் கலந்த சண்டை என்பதை யாவரும் ஒத்துக்கொள்ளத்தான்வேண்டும். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்—ஹியர் ஹியர்) சாதிக் கலப்பு இல்லாமல் இல்லை. நிறைய இருக்கிறது. அரசியலும் சேர்ந்து கொள்ளுகின்ற ஒரு சூழ்நிலை வரவே இது பெரிய எரிமலையாக வெடித்திருக்கிறது. அதற்கு முதல் பலி இமானுவேல். அவர் கொல்லப்பட்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. மார்ச்சு மாதம் நடந்த தேர்தலிலும், ஜூலை மாதம் நடந்த தேர்தலிலும் இதுவரையிலும் அந்தப் பிரதேசத்தில் காங்கிரஸ் பிரசாரம் செய்வதற்கு சாத்தியப்படாத முறையில் மிகத் தீவிரமாக, துணிச்சலாக இமானுவேல் காங்கிரஸ் பிரசாரம் நடைபெறுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறார். அங்கே கம்சனைப் பற்றியும் சிசுபாலனைப் பற்றியும் என்ன என்னவோ பேசப்பட்டதாகச் சொன்னார்கள். நான் அதற்குப் போகவில்லை. ஹரிஜனங்களுடைய மகத்தான தலைவராக



30th October 1957]
[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

இருந்த இமானுவேல் இந்தத் தேர்தலில் மகத்தான சேவை புரிந்திருக்கிறார். அவரை இழந்துவிட்டது அந்த சமூகத்தாருக்கு எல்லாம் துக்கம்தான். ஒவ்வொரு இடத்திலும் "தேவருக்குச் சமானமாகப் பேசுகின்ற தலைவரை நாங்கள் இழந்துவிட்டோமே. எங்களுக்கு எல்லாம் தலைவராக இருந்த அவரது தலையே போய்விட்டதே. இனி என்ன செய்வோம்" என்று ரொம்ப துக்கப்பட்டார்கள். "சர்க்கார் இருக்கிறதா? அவரைக் கொலை செய்தவர்கள் யாரையும் அரஸ்டுகூடப் பண்ணவில்லையே" என ஏங்கினார்கள். அதை மந்திரி அவர்களிடமும் வந்து சொன்னேன். மற்றவர்களிடமும் அப்போதே சொல்லி இருக்கிறேன்.

அந்த இடத்திலே நாங்கள் அவர்களுடைய உணர்ச்சியைக் கொஞ்சம் கூட மேலும் தூண்டவில்லை. "நீங்கள் கவலைப்படாதீர்கள். அமைதியாக இருங்கள்" என்று சொன்னோம். இது எல்லாருக்கும் தெரியும். இதை மறுக்க முடியாது. காலம் மாறலாம். ஆனால் உண்மையாகவே ஹரிஜனங்களுடைய தலைசிறந்த தலைவனாக இருந்த இமானுவேல், மிகவும் துணிச்சலாக, தைரியத்தோடு சாதி முன்னேற்ற வேலைகளில் ஈடுபட்டிருந்த இமானுவேல் கொலை செய்யப்பட்ட கறையை நம்மால் எந்தக் காலத்திலும் போக்கிக்கொள்ள முடியாது என்பதை நான் சொல்லத்தான் விரும்புகிறேன். புது சீர்திருத்தம் கொண்டுவருவதில் யாருக்கும் வருத்தம் ஏற்படப்போவதில்லை. மிகவும் பிற்போக்கில் இருக்கக்கூடிய நிலைமையிலேயும், பின்தங்கிய கூட்டத்திலேயும் அவர்கள் இல்லை என்று சொல்ல விரும்புகின்றேன். உண்மையைத் தெரிந்துகொண்டு தான் அவ்விதம் சொல்ல விரும்புகின்றேன். இந்த முதுகுளத்தூர் வட்டாரத்திலே இந்த முக்குலத்தோர் வீட்டுக்கு வீடு புகுந்து ஒரு ஹரிஜன வீடுகூட பாக்கியில்லாமல் கொள்ளை அடித்திருக்கிறார்கள். பல சாமான்களை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். கோழிகளைக்கூட விடாமல் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இதன் பெயர் தேச பக்தியாம், தேச மக்களுக்காக பாடுபடுகிறார்களாம். அந்தப் பகுதியிலே அந்த அளவிற்கு அவர்கள் அக்கிரமம் செய்திருக்கிறார்கள். போலீசாருக்குத் தகவல் அனுப்பி அவர் வந்து விசாரித்தால் அவர்களுக்கு சாட்சி சொல்வதற்குக்கூட பயப்படுவார்கள். அப்படி யாராவது சாட்சி சொன்னால் அவர்கள் படும்பாடு வேறு. ஆதலால் முக்குலத்தார் எவ்விதமான சதி நோக்கத்தோடு ஹரிஜனங்களை துன்புறுத்தினாலும், குற்றம் செய்தாலும் அவர்களை போலீசார் கேஸ் போடாதபடி அவர்கள் யாரும் சாட்சி சொல்ல வரமாட்டார்கள். ஆகவே போலீஸ்காரர்கள் சாட்சி கிடைக்கவில்லை என்று கேசை பதிவு செய்யமாட்டார்கள். இவ்விதமாக எல்லாம் அவர்களுக்குச் சாதகமாகவே இருப்பதால் அங்கே என்ன நடந்தாலும் மற்ற பகுதியில் இருக்கும் மக்களுக்கு ஒன்றும் தெரியாமல் போய்விடுகிறது. எந்தவிதமான கொலையும் நடக்கும் எதற்கெடுத்தாலும் அறிவாளும், கம்பும்தான் எடுத்துக்கொள்வார்கள். சாதாரண வண்டிக்காரன் மாட்டுப்பையன் செய்துவிடுவான். இந்த மனப்பான்மைதான் அந்த இடத்திலே நிலவி வந்தது.

வீராம்பல் பகுதியிலே இருக்கும் மக்கள், இளஞ்சம்பூருக்குப் போவதும் அங்கிருக்கும் மக்கள் இங்கே வருவதுமாக இருப்பார்கள். திடீரென்று கலவரம் ஏற்படும். துப்பாக்கி சத்தமும் வெடிகுண்டு சத்தமும் ஏற்படும். யாருக்கும் ஒன்றும் புரியாது. அவர்கள் வைத்திருக்கும் துப்பாக்கிகளெல்லாம் எங்கிருந்து கிடைத்ததோ தெரியவில்லை. இவ்வாறாக சட்டதிட்டங்களை மீறி பல காரியங்களில் பங்கு கொள்வார்கள். ஸ்ரீ முத்துராமலிங்க தேவரைக் கேட்டால் அவர்கள் இதற்குக் காரணம் என்ன சொல்லுவார்களோ தெரியவில்லை. அவர்கள் வைத்துக்கொண்டிருக்கின்ற இந்தத் துப்பாக்கிகள் எங்கிருந்து கிடைத்திருக்கிறதோ தெரியவில்லை. இதைத் தவிர ஸ்ரீ முத்துராமலிங்க தேவருடன் நின்ற ஹரிஜன அபேட்சகர் ஜெயிக்கவில்லை. காங்கிரஸ் கட்சியில் நின்று ஜெயித்தவர் ஸ்ரீ ஆர். எஸ். ஆறுமுகம் அவர்கள். இன்னும், அவர் ஜெயித்த பிறகு முக்குலத்தாருக்கு சொல்லவா வேண்டும். அவர்களின் சதி வேலைகள் இன்னும் அதிகமாகிக்கொண்டே போயிற்று. அங்கே சதி நடந்ததற்கும் இது ஒரு காரணமாக இருக்கும்.

[30th October 1957

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

வீராம்பலில் நடந்த விழாவில் இந்த முக்குலத்தார் வந்து கூட்டத்தைக் கலைத்து அங்கிருந்த வீடுகளிலெல்லாம் நெருப்பு வைத்தார்கள். இவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து, கிராமம் கிராமமாகச் சென்று கன்னிப் பெண்களைக் கெடுத்தும் விதவைகளை மானபங்கம் செய்தும், பெண்களை, நிர்வாணமாக ஆக்குவது போன்ற பல அக்கிரமக் காரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள். இவ்வாறு நடந்ததெல்லாம் பள்ளர்கள் வீட்டிலேயும் பறையர்கள் வீட்டிலேயும்தான். அவர்கள் வீட்டிலிருக்கும் பொருள்களையெல்லாம் சூறையாடியிருக்கிறார்கள். ஹரிஜனப் பெண்களை இப்படியெல்லாம் கற்பழித்திருக்கிறார்கள். இது வகுப்பு வாதம் இல்லையா ? அவர்கள் செய்த அட்டூழியத்தை எல்லாம் அங்கிருந்து வந்த மக்களே, நேரிலே பார்த்தவர்களே சொல்லுகிறார்கள். முதுகுளத்தூர் கிராமத்தில் இருந்த 130 வீடுகளையும் எரிய விட்டிருக்கிறார்கள். இதை முக்குலத்தோர் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த ஊரில இருந்த வைக்கோல் போர்களையெல்லாம் தீக்கு இரையாக்கி இருக்கிறார்கள். அந்த நெருப்பிலேயே கோழிகளைச் சுட்டு சாப்பிட்டிருக்கிறார்கள். இருபதாவது நூற்றாண்டிலே கூட இந்த விதமான அக்கிரமமா ?. போலீசாருக்கு இவர்களையெல்லாம் அடக்குவதற்கு திறமையில்லாததினால் அல்ல. தேவர்களின் கொடுமை அதிகமாகி இருக்கிறது. இங்கே மறவர்கள் பிற்போக்குள்ளவர்களாகவும், இருப்பதாக சொல்லுகிறார்கள். உண்மை என்பதைத் தெரிந்துக்கொள்ளத்தான் சொல்லுகிறேன்.

இந்த முக்குலத்தார்கள் கும்பல் கும்பலாக எங்கே எங்கே போகிறார்களோ அங்கே எல்லாம் நெருப்பு வைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே சில வீடுகள் செங்குந்தர் வகுப்பைச் சேர்ந்தது. ஆனால் அவர்களின் வீட்டிற்கு நெருப்பை வைப்பதோ அல்லது மற்ற தீங்குகளையோ விளைவிக்கவில்லை. ஆனால் காமராஜர் வகுப்பு வாதத்தைக் கிளப்பி விட்டதாகச் சொல்லுகிறார். எங்கெங்கே பள்ளர்கள் பறையர்கள் வீடுகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் சதி செய்திருக்கிறார்கள். மற்றவர்கள் வீடுகளுக்கோ அவர்களின் பொருள்களுக்கோ பாதகம் ஏற்படாமல் இருந்திருக்கிறார்கள். வீடுகளிலே தீ வைத்துக்கொண்டே வந்துவிட்டு, அங்குள்ள வைக்கோல் போரில் எல்லாம் நெருப்பை வைத்திருக்கிறார்கள். போலீசார் அங்கு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் போலீஸ் வந்த உடனே எல்லோரும் வாபஸ் பெறவேண்டும் என்று சொல்லுகிறார்கள். நிலைமை இப்படி இருக்கும்பொழுது எப்படி போலீசை வாபஸ் வாங்குவது. முக்குலத்தோர்தான் அடிக்கடி இவ்விதமாக வந்து பள்ளர்கள் வீடுகளைப் பாழ் செய்கிறார்களே. எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வது போல் எப்படி வாபஸ் பெறுவது.

ஜனங்களை ரொம்பவும் நம்பி சர்க்கார் மத்தியஸ்தம் பண்ணவிட்டார்கள். மனிதர்கள் மனிதர்களாக இருப்பார்கள் என்று நம்பி போதுமான போலீஸ் படையை வைக்காதிருந்தது, ஜனங்களை நம்பியிருந்தது ஒரு குற்றம் என்றால் நம் சர்க்கார் ஒரு குற்றம் செய்திருக்கிறது. ஏனென்றால், 11-ம் தேதி இமானுவேல் கொலை நடந்தவுடன் கடுமையான நடவடிக்கைகள் ஒரு சில எடுத்திருந்தால் இவ்வளவு அதிகமாக வந்திருக்காது என்றாலும், எதிர்க்கட்சிக்காரர்கள்தான் போலீஸ்காரர்களை வாபஸ் வாங்கவேண்டுமென்று சொன்னார்களே. ஒரு அவுட் போஸ்டில் உள்ள நாலைந்து போலீஸ்காரர்கள் ஆயிரக் கணக்கில் ஜனங்கள் போகிறபோது அவர்கள் செயலற்றிருந்தார்கள் என்று சொன்னால், அவர்கள் செயலற்றுப் போகத்தான் செய்வார்கள். நாலைந்து போலீஸ்காரர்கள் ஆயிரக் கணக்கில் வரும் ஜனங்களை எதிர்த்து என்ன செய்வார்கள் ? கிராந்தையில் ரோந்து போலீஸ் படை ஜனங்களைக் காப்பாற்றியது. போலீஸ் ரோந்து படை ஜனங்களைக் காப்பாற்ற முன் வந்தாலும் போலீஸ் படை பற்றாது என்று தெரிகிறது. வெளியிலிருந்து போலீஸ் படை அதிகம் வந்தபோதுதான் கலகம் ஓரளவு அணைந்து போயிற்று. போலீஸ் படையைப் பற்றி ஒரு வார்த்தை. போலீஸ்காரர்களின் மனப்பான்மை அயல் நாட்டு சர்க்காரில் இருந்ததுபோல்தான் இப்பொழுதும் இருக்கிறது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வது சரியா ? இல்லை. நான் போலீஸ்காரர்களுக்காக



30th October 1957]

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

வக்காலத்து வாங்கிக்கொண்டு வரவில்லை. அவர்கள் கஷ்டமான சூழ்நிலையில் எப்படி சமாளிக்க முடியும் ? இரண்டு பேர்கள் எப்படி 500 பேர்களைச் சமாளிக்க முடியும். கீழத்தூவல் துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி நான் ஒரு பக்கமாகவும் சொல்ல விரும்பவில்லை. கையைக் கட்டி, காலைக் கட்டிச் சுட்டார்கள் என்று சொன்னார்கள். மூன்று தினங்கள் சென்று கேள்விப்பட்டோம் அவர்களை விரட்டி அடித்துச் சுட்டார்கள் என்று. பேப்பரில் என்னவெல்லாமோ வந்திருந்தது. நான் சொல்வதெல்லாம் ஒன்றுதான். கடைசியாக ஒரு வேண்டுகோள். நாம் இதைப்பற்றி விவாதிக்கும்போது கண்ணால் கண்டதையும், காதால் கேட்டதையும் சொல்ல வேண்டியிருக்கிறது. எதிர் காலத்தில் நாம் போலீஸை நம்பி வாழ்க்கை நடத்த முடியாது. நமக்குள்ளேதான் நடத்திக்கொள்ளவேண்டும். சாந்தி சேனையைப்பற்றி இகழ்ச்சியாகச் சொல்லலாம். சிக்கல் வட்டாரத்திலுள்ள ஹரிஜனங்களுக்கு பீதி அதிகமாக இருந்தது. அவர்கள் ராத்திரி முழுக்க காவல் காத்து வந்தார்கள்—சாந்தி சேனை. ஒவ்வொரு இடத்திலும் சாந்திப் பட்டாளம் வேலை செய்ய சொல்லி அதைப்போல அந்த கிராமங்களில் ஏற்படுத்திக் காவல் ஏற்பாடு செய்யச் சொன்னோம். காங்கிரஸ் எம்.எல்.ஏ. என்ற முறையில் பேசுகிறேன். அதைப்பற்றி சந்தேகமே வேண்டாம். ஒவ்வொரு கிராமத்திலும் பட்டி தொட்டிகள் இருக்கும். ஒவ்வொன்றிலும் போலீஸ் ஸ்டேஷன் அமைக்க எப்படி முடியும் ? அதற்கு பணம் எங்கே இருக்கிறது ? ஆகவே, கிராம ஜனங்களிடையே பரஸ்பர நல்லெண்ணமும், நம்பிக்கையும் இருந்தால்தான் கிராமங்கள் நல்ல முறையில் இருக்கும், அதுதான் கிராமங்களுக்கு நல்லது. கட்சி பிரதி கட்சிக்கு இங்கு இடமில்லை. மக்கள் நன்கு வாழவேண்டும். அவர்கள் நல்ல முறையில் வாழவேண்டும். அதற்கு முதல்படியாக, ஜாதி பிசாசு ஒழியவேண்டும். நாடு நல்ல முறையில் அமையவேண்டுமென்றால் ஜாதிப் பூசல் ஒழியவேண்டும். ஆகவே, அந்தந்தத் தொகுதியிலிருந்து வருகிற எம்.எல்.ஏ.-க்கள் ஜாதி வெறியைக் கிளப்பி விடாத முறையில், ஜாதி பிசாசை ஒழிக்க பாடுபடவேண்டும். இப்பொழுது சில இடங்களில் நடந்திருப்பதைப் பார்த்தால் மனிதன் மனிதத் தன்மையையே இழந்துவிடுகிறான். ஆகவே நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன், சமாதான தூதர்கள் என்ற முறையில் நாம் போய், ஜாதி என்பதையும் அரசியல் என்பதையும் நம் மனதிலிருந்து ஒழித்துவிட்டு நொந்துபோய் கிடக்கும் ஜனங்களுக்காக பாடுபடவேண்டும். கசப்பு மனப்பான்மை வளராதிருக்கச் செய்வோம். கடுமையாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமா, சர்க்காரின் செயல் நல்லதா என்று ஆலோசித்துப் பார்த்து உங்கள் தீர்ப்பைச் சொல்லுங்கள் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த துரதிர்ஷ்டவசமான, துக்ககரமான சம்பவங்கள் பற்றியும், சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் ஒரு அறிக்கை, அன்று மன்றத்தின் முன் சமர்ப்பித்தேன். அதற்கு மேல் நான் சாதாரணமாக இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேச விரும்பியிருக்க மாட்டேன். எரிகிற புண்ணிலே விரலை விட்டுப் பார்ப்பது சரியல்ல. அதை நான் ஒருக்காலும் செய்யமாட்டேன். அதை, யாரும் செய்யமாட்டார்கள். இந்த விவாதத்தில் கலந்துகொண்ட அங்கத்தினர்கள் சில அதிகாரிகள் மீது குற்றம் சாட்டினார்கள். சில சம்பவங்களைப்பற்றி திரித்துக் கூறினார்கள். பொதுவாக சர்க்கார் மீது குற்றஞ் சாட்டினார்கள். ஆகவே அவைகளைப்பற்றி விளக்கிக் கூறுவது எனது கடமையாகும். ஆகவேதான் நான் சில வார்த்தைகள் பேச முன் வந்திருக்கிறேன். சபாநாயகர் அவர்களே, முதலிலே நான் ஒன்றை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த விவாதத்தில் கலந்துகொண்ட அங்கத்தினர்கள் பலருக்கும் பலமான உணர்ச்சியுண்டு என்பதை நாம் அறிவோம். முக்கியமாக ஒரு சில அங்கத்தினர்களுக்கு, ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அதிகம் ஆழ்ந்த உணர்ச்சி இருப்பதற்கு இடமிருக்கிறது என்பதையும் நான் உணர்கிறேன். மற்ற பக்கத்திலும் உணர்ச்சியுண்டு. இருந்தாலும், 12.20 p.m.

தாங்கள் விரும்பியபடி, தாங்கள் எதிர்ப்பார்த்தபடி இந்த விவாதம் மிகவும் உயர்ந்த தரத்திலே நடத்தப்பட்டு வருவது இந்த மன்றத்திற்கும் தங்களுக்கும் பெருமையை அளிக்கக்கூடியதாகும். அன்று நான் அறிக்கையை சமர்ப்பித்தபோது வேண்டிக்கொண்டபடி மீண்டும் வேண்டிக்கொள்ளுகிறேன். நடந்தது இருக்கட்டும். தமிழ் நாட்டிற்கு ஏற்பட்ட இந்த இழுக்கை அறவே அகற்றி இவ்வாறு இனியும் நடைபெறாதவாறு எல்லா வகுப்பினரும், மக்கள் அனைவரும் சமாதான முறையில் சகோதரத்துவ முறையில் வாழ முற்படவேண்டும். அதற்கு நாம் எல்லோரும் நம்மால் இயன்றதைச் செய்யவேண்டும், அதற்குக் குறுக்கே நிற்கக் கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த விவாதத்தில் கலந்துகொண்டு கனம் சசி[illegible]ண தேவர் அவர்கள் பேசினார்கள். அது, அவர்களுடைய "மெய்டன் ஸ்பீச்"சாகும். அவர்களுக்கும் உணர்ச்சியுண்டு, உணர்ச்சியுடனேதான் பேசினார்கள். அவர்கள் தமக்கு அனுபவம் இல்லையென்று சொன்னபோதிலும் சிறந்த முறையில் பேசினார்கள், அவர்களுக்கு எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன். மற்ற அங்கத்தினர்களும் உணர்ச்சியுடன்தான் பேசினார்கள். இருந்தாலும் உயர்ந்த ரகத்தில்தான் பேசினார்கள். அவர்கள் பேசியதை மறுப்பதற்கு எனக்கு இடமுண்டு. இருந்தாலும் பேசிய தரம் உயர்ந்தது என்பதை நான் மீண்டும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் பிரேரணையை பிரேரேபித்த கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் பேச்சைப்பற்றி எனக்குப் பெரிய ஏமாற்றம் உண்டு. இதுவா மந்திரி சபையின் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம். மந்திரி சபையின் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்றபோது பரபரப்பும், காரமான, இல்லாவிட்டால், ருசிகரமான விவாதமும், உயர்ந்த பேச்சுகளை எல்லாம் எதிர்ப்பார்த்தேன். அதிலும் 'கல்யாணசுந்தரம் அவர்கள் இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்களில் வைத்து ஒரு சிறந்த பேச்சாளர் என்பது எல்லோருக்கும் தெரியும். நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தைப் பிரேரேபித்த அவர்கள் அதற்கு ஏற்றவாறு ரொம்பவும் பலமாக நம்மைத் தாக்குவார்கள், அதற்கு நாம் நம்மை தயாரித்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்து அதற்காக நான் என்னைத் தயாரித்துக் கொண்டதெல்லாம் வீணாகிப் போய்விட்டதே என்ற ஏமாற்றம் எனக்குண்டு. அவருக்கு திறமைக்குறைவில்லை. அதற்குக் காரணம் அவர் எடுத்துக்கொண்ட விஷயம் தான் என்று நினைக்கிறேன். மற்றொன்று இந்த விவாதத்தில் கலந்துகொண்டவர்களில் எதிர்க் கட்சியில் வீற்றிருக்கும் பெண்மணி அவர்கள் உருக்கத்தோடு பேசினார்கள். சர்க்காரையும் தாக்கி பேசினார்கள். அவர்கள் சொன்னவற்றை எல்லாம் நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லுகிறேன். உண்மையான உணர்ச்சியுடன் அவர்களையே பின்பற்றி எதிர் கட்சியில் இருக்கும் சந்தானம் அவர்களும் உணர்ச்சியோடு பேசினார்கள். அவ்வாறு பலரும் பேசினார்கள். அவர்களுக்கு எல்லாம் என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த விவாதத்தில் ஒரு காரியத்தைப்பற்றி திரும்பித் திரும்பிப் பேசப்பட்டது. இது வகுப்பு வாதம் என்று சொல்லப்படுகிறது, வகுப்புவாதம் அல்ல, அங்கு அரசியல் தான் புகுந்துகொண்டது, இல்லை இல்லை வகுப்பு வாதம் தான் புகுந்து கொண்டது என்ற வாதப்பிரதிவாதங்கள் இங்கு அதிகமாக கையாளப்பட்டது. நான் மீண்டும் சொல்லுகின்றேன். வகுப்புவாதம் என்பது தனியான விஷயம் அல்ல. அரசியல் வாதத்தோடு சேர்ந்துதான் வகுப்பு வாதமும் வளருகின்றது. அரசியல் வாதம் இல்லாமல் வகுப்பு வாதம் இல்லை. நெடுங்காலமாக இருக்கின்ற சரித்திரத்தை நாம் பார்த்திருக்கின்றோம். ஆங்காங்கு நடக்கக்கூடிய வகுப்பு வாதங்களோடு அரசியல் வாதத்தை புகுத்திக்கொள்வதுதான் நடந்திருக்கிறது. வகுப்புவாதம் ஒரு பக்கம், அரசியல் வாதம் ஒரு பக்கம், பலாத்காரம் ஒரு பக்கம். வகுப்புவாதம், அரசியல் வாதம், பலாத்காரம் இந்த மூன்றும் இணைக்கப்பட்டது. அதைத்தான் ராமனாதபுரம் சம்பவங்களிலே நாம் பார்க்கின்றோம். வீரத்துடன் வாழக்கூடிய மக்கள் அங்கு இருக்கின்றார்கள். இந்த வீர உணர்ச்சியை நான் வரவேற்கிறேன். ஆனால் வீர உணர்ச்சி நல்ல காரியத்திற்குப் பயன்படவேண்டும். நம்மை வளர்த்துக்கொள்வதற்கு



அந்த வீர உணர்ச்சி வேண்டியதுதான். நம்முடைய நாட்டை பாதுகாத்துக்கொள்ள நமக்கு வீர உணர்ச்சி வேண்டும். இதையே தான் திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் அவர்கள் "கட்டபொம்மன்" நாடகத்திற்கு தலைமை வகித்து பாராட்டி பேசியிருப்பதாக பத்திரிகையில் பார்த்தேன். கட்டபொம்மனுடைய வீரம் அந்நியர்களை இந்த நாட்டிலிருந்து போக்கடிப்பதற்கு, எதிர்த்து நிற்பதற்கு பயன்படுத்தப்பட்டது. ஆனால் இன்று அந்த வீரம் வேறு வழியில் போய்க்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருப்பதை நான் பார்த்தேன். கட்டபொம்மனுடைய வீரம் வேண்டியதுதான். ஆனால் நம்மை நாமே அழித்துக்கொள்வதற்கு வீரத்தை பயன்படுத்தக்கூடாது. நம்மை நாமே நாசமாக்கிகொள்வதற்கு வீரத்தை உபயோகிக்கக்கூடாது. ஆகவே இம்மாதிரியான வீரத்தை உபயோகித்து சண்டையிட்டுக் கொண்டிருப்பது முறையற்ற செயலாகும். ஆனால் அங்கிருக்கின்ற மக்களைப்பற்றி நான் குறை கூறவில்லை. நான் அடிக்கடி சொல்வதுபோல் நமக்கு ஆற்றல் இருந்தால் அதை நல்ல காரியங்களில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஆகவே இந்த வீர உணர்ச்சியை நான் வரவேற்கிறேன். ஆனால் இதை வேறு எந்த வகையிலும் புகுத்தி பலாத்காரத்தை வளர்க்கக்கூடாது. அதுபோல் தான் தன்னுடைய அல்லது தங்களுடைய நோக்கங்களுக்காக இந்த உணர்ச்சியை சிலர் பயன்படுத்தி வருகிறார்கள். அது தான் தவறு. வீரம் என்பது பரம்பரையாக பிறக்கும் மக்களுக்கும் ஏற்படுகிறது. அதிலே தவறு ஒன்றும் இல்லை. ஆனால் இதை சில தலைவர்கள் வேறுவழியில்தான் ஈடுபடுத்திவிடுகிறார்கள். இதிலேதான் நிலைமை கெட்டுபோகின்றது. சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தைக் கேள்விப்பட்டேன். நீதிபதிகளிலே ஒருவர் அஸ்ஸாம்நாட்டிற்கு போயிருந்தாராம். அங்குள்ள உத்தியோகஸ்தர்கள் அவரை நாகர்கள் வாழ்ந்து வருகின்ற ஒரு வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனார்களாம். அங்கு ஒரு சிறிய பெண், இவரைப் பார்த்ததும் "இன்று என்னுடைய பாம்புக்கு மனித இரத்தம் கிடைத்துவிட்டது" என்று சொன்னாளாம். என்ன இரத்தம், எங்கே இருந்து வந்திருக்கிறது என்று கேட்டாராம் அந்த நீதிபதி. உடனே அங்கிருந்த பெட்டியை அந்த பெண் திறந்தபோது அதிலிருந்து ஒரு பெரிய சர்ப்பம் வெளியே வந்ததாம். அதை அவர்கள் வளர்க்கிறார்கள். அதற்கு அவ்வப்போது மனித ரத்தம் கொடுக்கவேண்டும் என்பது அவர்கள் வழக்கமாக இருந்து வருகிறது. "இன்று உன்னை பார்த்தவுடன் மனித ரத்தம் வந்துவிட்டது" என்று எங்களுக்கு தோன்றிற்று என்று சொன்னார்களாம். இதைக் கேட்டதும் அவருக்கு மனது பதைரென்றதாம். ஆகவே எந்த வீரமாக இருந்தாலும் எந்த பண்புகள் இருந்தாலும் நம்மைப் போன்றுதான் நம் குழந்தைகளுக்கும் இருக்கும். ஆகவே இந்த மாதிரி பல சம்பவங்கள் இந்த பிராந்தியத்தில் நடைபெற்றிருக்கின்றன. படைகள் எல்லாம் எல்லா ஜில்லாக்களிலும் இருப்பதாக இங்கு சொன்னார்கள். படை திரட்டுவது என்பது இந்த இடத்தில் தவிர வேறு எந்த இடத்திலும் இல்லை. எல்லா கிராமங்களிலும் இம்மாதிரியான சண்டைகள் நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இம்மாதிரியாக படை திரட்டுவது, போர் செய்வதற்காக கொடி பிடிப்பது என்பதெல்லாம் நாம் எங்கும் காண முடியாது. எந்த ஜில்லாவிலும் இந்த வழக்கம் கிடையாது. சண்டைக்கு வந்தால் மஞ்சள் துணி கட்டுவது எல்லாம் இங்கு தவிர வேறு எங்கும் நாம் பார்க்க முடியாது. அங்கு சண்டைக்கு உபயோகப்படுத்துகிற ஆயுதங்களை எல்லாம் நாம் எங்குமே கண்டிருக்க முடியாது. அவைகளையெல்லாம் பார்த்தால் உங்களுக்கு எல்லாம் புதிதாக இருக்கும். அந்த பிராந்தியத்தில், ராமனாதபுரம் ஜில்லாவை தவிர வேறு எந்த ஜில்லாக்களிலும் காண முடியாது. அது மாத்திரமல்ல, இப்படி பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டவர்கள், வகுப்புவாத உணர்ச்சி கொண்டவர்கள், அங்கு அதிகமாக இருப்பதால் அங்கிருக்கின்ற அதிகாரிகளுக்குக்கூட பயமாயிருக்கிறது. அதே நிலைமையில் தான் அங்கு போட்டி வகுப்புவாத உணர்ச்சி இருந்துகொண்டு வருகிறது. அங்கே எல்லாம் ஹரிஜன மக்களும் மற்ற மக்களும் சேர்ந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்று பலர் சொன்னார்கள். சேர்ந்து வாழ்ந்தார்கள் என்பது உண்மை தான், ஆனால் அவர்கள் எந்த வகையில் வாழ்ந்தார்கள் என்பதை நாம்

எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்களோடு சம நிலையில் வாழவில்லை. இந்த வகுப்பினரின் கையாட்களாக வாழ்ந்து வந்தார்கள். கையாட்களாகவே கருதி வந்தார்கள். முன் எல்லாம் ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் சண்டை ஏற்பட்டால் இரண்டு மறவ தலைவர்களுக்குள் சண்டை ஏற்படும். அப்போது ஒருவருக்கொருவர் சண்டையை நடத்துவதற்கு இந்த ஹரிஜனங்களை பயன்படுத்தி வந்தார்கள். நீ இளம்பு 200, நீ இளம்பு 300 என்று சண்டைக்கு உதவியாகத்தான் இவர்களை வைத்திருந்தார்கள். இவர்களை வைத்துக்கொண்டு தான் சண்டை போட்டார்கள். இப்போது ஹரிஜனங்களிடம் ஆயுதங்கள் இருக்கிறதென்றால், அவைகள் எங்கிருந்து கிடைத்தன என்பதை ஆராய்ந்து பார்த்தால் அவைகள் எல்லாம் இந்த சண்டைக்காரர்களிடமிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆயுதங்கள் தான் என்பது தெரியவரும். இந்த உணர்ச்சி மாறி பின்னால் சிறிதுவிழிப்பு ஏற்பட்டது. அந்த விழிப்பு ஏற்பட்டதென்றால் அதை அவர்களால் பொறுக்க முடியவில்லை, உயர் ஜாதி ஹிந்துக்களால் இவைகளை சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. அவ்வாறுதான் தகராறுகள், சம்பவங்கள் எல்லாம், கொடுமைகள் எல்லாம் பற்பல நிகழ்ச்சிகளும். ஆனால் பலாத்காரத்திலே நம்பிக்கை கொண்டவர்கள் மற்ற ஜில்லாக்களிலும் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் வேல்கம்பு என்ற வார்த்தையே நாம் எங்கும் கேட்டிருக்க முடியாது. சுப்பிரமணிய ஸ்வாமி கையில் வேல் வைத்துக் கொண்டு ஸம்ஹாரம் செய்தார் என்று கேட்டிருக்கின்றோம். இம்மாதிரியான வேல்கம்பு என்ற ஆயுதத்தை இந்த ஜில்லாவைத் தவிர வேறு எந்த ஜில்லாவிலும் காண முடியாது. செங்கல்பட்டு ஜில்லாவிலோ அல்லது தஞ்சாவூர் ஜில்லாவிலோ அல்லது திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலோ பார்க்க முடியாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். இதனால் தான் இந்த சூழ்நிலையில்தான் அங்குள்ள உத்தியோகஸ்தர்கள்கூட என்ன ஆகுமோ என்று பயந்துகொண்டிருந்தார்கள். முன்னால் நடந்திருக்கின்ற சம்பவங்களைப் பார்த்தால் ஒரு அஸிஸ்டன்ட் தாசில்தாருடைய கால் வெட்டப்பட்டிருக்கிறது. இன்னொருவர் அடிக்கப்பட்டிருக்கிறார். இன்னொரு சப்-மாஜிஸ்ட்ரேட் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இப்படியெல்லாம் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இப்படிப்பட்ட சம்பவங்கள் மற்ற இடங்களில் சர்வ சாதாரணமாக நடக்கின்றனவா என்று கனம் அங்கத்தினர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மற்ற இடங்களில் இப்படி கொலைகள் செய்யப்படுகின்றனவா ? அப்படிப்பட்ட நிலைமை இருந்தால் அதிகாரிகளுக்கும் பயம் ஏற்படுகிறது. அது மாத்திரமல்ல இன்னொரு விசித்திரமான விஷயம் என்னவென்றால், இங்கே பொய் வழக்குகள்கூடப் போடுவது வழக்கம். 107-வது பிரிவுப்படி நடந்த விசாரணையில் அந்த நீதிபதி இதைக்கூடக் குறிப்பிட்டிருக்கிறார். பொய்க் கேசுகள் போடுவது வழக்கமாகி இருந்தது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதிகாரிகள் பேரில்கூட பொய் வழக்குகள் போடுவது உண்டு. எந்த எந்த விதத்தில் மற்றவர்களை பயமுறுத்தி, அந்தப் பிரதேசத்தை தங்கள் ராஜ்யமாக ஆக்கிக்கொண்டு, அங்கே தாங்களே ராஜாக்களாக இருக்கலாமோ அந்த விதத்தில் தான் அங்கே கொஞ்ச காலமாகக் காரியங்கள் எல்லாம் நடந்துவந்திருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம், அங்கே அவர்களுக்கு ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் போன்றவர்கள் தலைவர்களாக ஆனார்கள் என்பது தான். அவர்கள் தலைவர்களாக இருக்கலாம். இந்த சபையிலுள்ள கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் பிராந்தியங்களில் தலைவர்கள் தான். ஆனால் ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரை எடுத்துக்கொண்டால், அவரை ஒரு குட்டி 'பாஸிஸ்ட்' என்று சொல்வதுதான் சரி. "தான் சொல்வது தான் சரி. அதை எல்லோரும் கேட்கவேண்டும். யாரும் மறு பேச்சுப் பேசக்கூடாது. அதற்கு ஒரு படை, ஒரு வகுப்பு, ஒரு சமுதாயம்." என்ற முறையில்தான் அந்தப் பிராந்தியத்தில் அவர் இருந்தார். அவரைப்பற்றி நான் புதிதாகச் சொல்லவேண்டியதில்லை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ சசிவர்ணத் தேவர் அவர்களே சொன்னார்கள். "இங்கே ஒரு கூட்டத்தில் பேசியபோது, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கள்ள நோட்டு அடிக்கிறார்கள் என்று ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் பேசியிருக்கிறார் என்பதைச் சொல்லி, அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை" என்று குறிப்பிட்டு அதை ஒரு குற்றச்சாட்டாக ஸ்ரீ சசிவர்ண தேவர் கூறினார்.





**Sri T. L. SASIVARNA THEVAR :** கனம் சபாநாயகர் அவர்களே, "கனம் முதல் அமைச்சர் அவர்கள் கள்ளநோட்டு அடிக்கிறார்கள்" என்று ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் பேசியதாக நான் சொன்னேன் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். "கள்ள நோட்டு அடிக்கும் தொழில் தமிழகத்தில் நடைபெறுகிறது. இதில் முதல் அமைச்சருக்குத் தொடர்பு உண்டு" என்று ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் பேசினார் என்று தான் நான் சொன்னேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** அப்படி நான் சொல்லவில்லை. கனம் அங்கத்தினர் சொன்னதை நான் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை. "கள்ள நோட்டு அடிப்பதில் கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குப் பங்கு உண்டு என்று ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் சொன்னார்" என்பதை அவருடைய அத்யந்த சிஷ்யரான கனம் அங்கத்தினரே சொன்னார் என்றுதான் நான் கூறுகிறேன். ஆகையினால், ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய பேச்சு எப்படிப்பட்டது ? அவருடைய பேச்சுக்களை பல கனம் அங்கத்தினர்கள் நேரில் கேட்டிருப்பார்கள், பத்திரிகைகளில் படித்தும் இருப்பார்கள். அவர் பேசும்போது எல்லோரைப்பற்றியும் அவதூறாகவும், ஜாதி வெறியைக் கிளப்பியும் ரொம்ப மட்ட ரகத்தில் பலரைப்பற்றிக் கேவலமாகவும் பேசுவது வழக்கம். அவர் பலரை ஜாதிப் பெயரைச் சொல்லியும் கேவலப் பெயர்களைச் சொல்லியும் பேசுவது வழக்கம். இப்படிப் பேசினால் சமூகத்தில் ஜாதி உணர்ச்சியும் பலாத்கார உணர்ச்சியும் வளராமல் அந்த உணர்ச்சிகள் எப்படிக் குறையும் ? அவர் இந்த மாதிரி அலட்சியமாகவும், கண்டபடியும், வாய்க்கு வந்தபடியும் பேசுவது உண்டு. இந்த மாதிரி "கள்ள நோட்டு அடிக்கிறார்கள்" என்று அவர் பேசுவது உண்டு. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படாததால் அதை ஒரு குற்றச்சாட்டாக கனம் அங்கத்தினர் கூறினார்கள். அந்தக் குற்றச்சாட்டில் நம்பிக்கை இல்லை. அதனால் தான் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் அதை முதல் அமைச்சர் ஒத்துக் கொண்டார் என்று நான் சொல்லவில்லை. அந்த பேச்சின்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கனம் அங்கத்தினர் கேட்டார். இந்த மாதிரி எத்தனையோ பேச்சுக்கள் யார் வேண்டுமானாலும் பேசுகிறார்கள் அந்தப் பேச்சுக்களின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. சில பத்திரிகைக்காரர்கள் மிகவும் அவதூறாக எழுதுகிறார்கள். இவ்வாறு எழுதுவதற்கு ஆங்கிலத்தில் 'எல்லோ ஜர்னலிஸம்' என்று சொல்லப்படும், இம்மாதிரி அவதூறாக எழுதுகிறார்கள். நமது முதல் மந்திரி அவர்களைப்பற்றி மட்டுமல்ல ; நம்முடைய ஒப்புயர்வற்ற பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேருவைப்பற்றிகூட அவதூறாக எழுதுபவர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம் இல்லை. "ஒரு நாள் ஒருவர் ஏதாவது அவதூறாகப் பேசவோ எழுதவோ செய்துவிட்டு, மறு நாள் அப்படிப் பேசியதன் மீதோ எழுதியதன் மீதோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதால் அது உண்மை என்று அவர் கூறலாம்" என்ற வாதத்தை இந்த சபை அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

கீழ்த்தரமான முறையில் ஜாதி வெறியைக் கிளப்பும் வகையில் மட்டும் அவர் பேசவில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பிரேரேபித்த ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களே "சுபாஷ் சந்திர போஸைத் தாம் நேரில் பார்த்ததாக ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் பேசினார்" என்று சொன்னார்கள். அவர் அப்படிப் பேசியிருப்பது எல்லோருக்கும் பிரத்தியட்சமானது. அவர் தம்முடைய கடைசி பிரசங்கத்தில்—மதுரையில் பேசியபோது—"நான் கொரியாவிற்குச் சென்று கொரியா யுத்தத்தில் கலந்துகொண்டேன். ஆகவே எனக்கு யுத்தப் பயிற்சிகூடத் தெரியும்" என்று பேசியிருக்கிறார். இவர் இந்த மாதிரியெல்லாம் பேசினால் ஒன்றும் தெரியாதவர்கள் இவர் பேசுவதை அப்படியே நம்பிவிடுவார்கள். அப்படிப்பட்டவர்களிடையே ஒரு உணர்ச்சியை வளர்க்கவேண்டும் என்ற முறையில் ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் அவர்கள் இந்த மாதிரியெல்லாம் பேசிக்கொண்டு அவர்களுக்குத் தலைமைதாங்கிக்கொண்டு வந்தார்கள்.

[Sri M. Bhaktavatsalam] [30th October 1957

ஆனால், இப்போது எனக்கு ஒரு திருப்தி ஏற்பட்டிருக்கிறது. அதாவது, இப்படியெல்லாம் பலாத்காரத்தை வளர்த்துவந்த ஸ்ரீ முத்து ராமலிங்க தேவர் அவர்கள் இப்போது, கொஞ்ச காலமாக, சர்க்கார் இந்த நடவடிக்கைகளை எடுத்த பிறகு, "எனக்கு அமைதியே வேண்டும். எல்லோரையும் அமைதியாக இருக்கச் சொல்லுங்கள்" என்று சொல்வது குறித்தும், அவர்கள் அப்படிச் சொல்வது வெளியே வருவது குறித்தும், எனக்கு திருப்தி ஏற்பட்டிருக்கிறது. இதை நான் வாதத்திற்காகக் கூறவில்லை. இதற்கு முன்பு அவர் அமைதி வேண்டும் என்று சொன்னதாகத் தெரியவில்லை. ஆகவே, அவர் அமைதி வேண்டும் என்று சொல்லும் அளவிற்கேனும் அவருக்கு மனமாறுதல் ஏற்பட்டிருப்பது குறித்து நான் திருப்திப்படுகிறேன். அவருக்கு ஏற்பட்டுள்ள இந்த மனமாறுதல் நாங்கள் எடுத்த நடவடிக்கைகளின் விளைவு என்பது குறித்து நான் திருப்திப்படுகிறேன். "இதுவே, சர்க்கார் எடுத்த நடவடிக்கை சரியானதுதான், தக்க சமயத்தில் சர்க்கார் நடவடிக்கை எடுத்தார்கள் என்பதைக் காட்டுகிறது" என்பதை ருசுப்படுத்துவதற்காக இந்த சமயத்தில் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

போலீஸ் நடவடிக்கைகளைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இந்த விஷயத்தில் முக்கியமாக, எதிர் கட்சியில் வீற்றிருக்கும் கனம் பெண் அங்கத்தினர் குற்றம் சாட்டினார். எதிர் கட்சியில் இருந்து பேசிய திரு. சந்தானம் அவர்களும் "சமாதான மகாநாட்டில் ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் பேசியதாகச் சொல்லப்பட்டது. கலெக்டர் அவர் பேசும்போது எப்படி பார்த்துக்கொண்டிருந்தார்?" என்று கேட்டார்கள். போலீசார் அப்போதைக்கப்போது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு தான் வந்தனர். ஆனால் உடனடியான தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது சரியல்ல. அப்போதே தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டினால், அந்தக் குற்றத்திற்கு ஆதாரம் இல்லை என்று தான் நான் சொல்வேன். "போலீசாரைக் கொண்டு வந்ததற்குப் பதிலாக ராணுவத்தினரை ஏன் கொண்டுவரவில்லை?" என்று கேட்கலாம். ராணுவம் அவசியமாக இருந்தால் அப்போது ராணுவத்தைக் கொண்டுவருவதில் தவறுதல் ஒன்றுமில்லை. ஆனால் இங்கே ராணுவத்தைக் கொண்டுவருவதற்கு அவசியம் ஏற்படவில்லை. போலீசாரை வைத்தே கலகத்தை அடக்கப் பார்த்தோம்; அடக்கினோம். எது எது அவசியமோ அதையே தான் செய்யவேண்டும். அவசரப்பட்டு அதி தீவிரமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்காது. எவ்வளவோ நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டப்படுவதிலிருந்தே, "அரசாங்கம் நிதானமாக, போதிய நடவடிக்கையை எடுத்திருக்கிறது" என்பது தெரியும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நான் உபதேர்தல் பிரசாரத்தில் ஏதேதோ சொன்னேன் என்று சொல்லப்பட்டது. சில கூட்டங்களில் சில விஷயங்களை வற்புறுத்திக் கூறினேன் என்று சொல்லிக்கொள்கிறேன். நான் சொன்னதெல்லாம் "எல்லோரும் சுதந்திரமடைந்திருக்கிறோம். எல்லோருக்கும் இப்போது வோட்டுரிமை இருக்கிறது. அவரவர்களுக்குப் பிடித்தவர்களுக்கு அவரவர்கள் ஓட்டைப் போடுவதற்கு ஏன் பயப்படவேண்டும்? இஷ்டம் போல் ஓட்டைப் போடப் பயப்பட்டால் அது எவ்வளவு கேவலமான நிலை; அப்படிப்பட்ட நிலைக்கு நீங்கள் இடம் கொடுக்கக்கூடாது. எந்தக் கட்சிக்கும் இஷ்டப்படி ஓட்டுப் போடுங்கள்" என்று பேசினேன். "பயம் இல்லாமல் இஷ்டப்படி ஓட்டுப்போடுங்கள். அது தான் ஜனநாயக முறை. ஜனநாயகத்திற்கு ஹானி ஏற்படுவதை அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்காது" என்று இரண்டு மூன்று கூட்டங்களில் பேசினேன். "எந்தக் கட்சிக்கு வேண்டுமானாலும் ஓட்டுப் போடுங்கள்" என்று இரண்டு மூன்று கூட்டங்களில் சொன்னேன். அதைப்பற்றியெல்லாம் வெளியிடுவதற்கு பத்திரிகை நிருபர்களுக்கு அக்கறை இல்லை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ சசிவர்ண தேவர் அவர்களுக்கு ஒரு பத்திரிகை நிருபர், பத்திரிகையில் வந்ததைக் கொடுக்கவில்லை. பத்திரிகைக்குத் தான் எழுதியனுப்பியதை அவருக்கு சாட்சியமாகக் கொடுத்திருக்கிறார். ஏதோ சிசுபாலன் கதையைப்



30th October 1957] [Sri M. Bhaktavatsalam]

பற்றி நான் குறிப்பிட்டதை திருப்பித் திருப்பிச் சொல்லுகிறார்கள். எத்தனையோ ராக்ஷஸர்களை சிசுபாலன் வதை செய்திருக்கலாம். சிசுபாலன் கதையில் எத்தனையோ ராக்ஷஸர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கலாம். சிசுபாலன் கதையைப்பற்றி ஒரு தடவைதான் நான் குறிப்பிட்டேன். பத்திரிகைகளில் அதைப்பற்றி எப்படி எழுதப்பட்டிருந்ததோ, எனக்குத் தெரியவில்லை.

கனம் அங்கத்தினர்கள் இதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்ற முறையில்தான் நான் சொன்னேன். பத்திரிகை நிருபர்கள் எழுதி அனுப்பியதில் என்ன தெரிகிறது என்றால் நான் அப்படி பல கூட்டங்களில் பேசியதாக தெரிகிறது. கூட்டத்தில் நான் பேசியபோது குறுக்கே பேசினார்கள். போலீஸ்காரர்கள் சும்மா இருங்கள் என்று சொன்னதைக்கூட கேட்காமல் எதிர்த்துப் பேசினார்கள். பிறகு அமைதி ஏற்பட்டது. அதற்குப் பிறகு எப்படியெல்லாமோ பேசினார்கள் சிசுபாலன் கதையைப்பற்றி சொன்னபோது தவறான முறையில் அர்த்தம் வைத்துச் சொல்லுகிறார்கள். ஜனநாயக முறையில் தான் அரசாங்கம் நடத்தப்படவேண்டும் என்று சொன்னேன். அதற்காகத்தான் சிசுபாலன் கதையைச் சொன்னேன். எல்லோரும் பொறுமையாக இருக்கவேண்டும் என்று தான் சொன்னேன். என்னுடைய மதிப்பிற்குரிய சகா......

**Sri T. L. SASIVARNA THEVAR** : பிரசங்கத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டார். சிசுபாலனை எப்படி கிருஷ்ணன் சக்ராயுதத்தை பிரயோகித்து வதம் செய்தானோ அப்படிச் செய்வேன் என்று சொன்னதான செய்தி ஹிந்து பத்திரிகையிலும் வந்திருக்கிறது, தினமணி பத்திரிகையிலும் வந்திருக்கிறது. அந்தப் பிரதியின் "கட்டிங்கை" நான் வைத்திருக்கிறேன். அது மாதிரி சொன்னது உண்டா? என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ஹிந்துப் பத்திரிகையிலும் தினமணிப் பத்திரிகையிலும் வந்தது என்னமோ அது எனக்குத் தெரியாது. சக்ராயுதத்தை வைத்துக்கொண்டு கிருஷ்ணன் எப்படி சிசுபாலனை வதைத்தானோ அப்படி நானும் செய்கிறேன் என்று நான் ஒருக்காலும் சொல்லவில்லை. அப்படி என்னால் சொல்லவும் முடியாது. அப்படிப்பட்ட வார்த்தைகள் என்னிடமிருந்து எதிர்ப்பார்க்கவும் முடியாது.

மதிப்பிற்குரிய சகா கனம் கக்கன் அவர்கள் ஏதேதோ பேசியதாக கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஹரிஜனங்களை பலாத்காரத்தில் இறங்கவேண்டும் என்று தூண்டிவிட்டதாக கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். அவர்களுக்கு இதைப்பற்றி எப்படித் தெரிந்ததோ தெரியவில்லை. நான் பேசியதை எவ்வளவு அக்கரையோடு பிரசுரித்தார்களோ அவ்வளவு அக்கரையோடு இதையும் பிரசுரித்திருக்கலாம். கனம் கக்கன் அவர்கள் பேசும்போது எங்கேயாவது ஹரிஜனங்களை பலாத்காரத்தில் இறங்குங்கள் என்று சொல்லியிருப்பாரா என்பதை கவனிக்கவேண்டும். அவர் அப்படிச் சொல்லக்கூடியவரா? அப்படிச் சொல்லி இருந்தால் அதற்குச் சாட்சியங்கள் கொடுங்கள் என்று கேட்டேன் அல்லது உங்களுக்கு தகவல் இருந்தால் அதைக் கொடுங்கள் என்று பத்திரிகைகளைக் கேட்டேன்.

**Sri T. L. SASIVARNA THEVAR** : கனம் கக்கன் அவர்கள் பிரசாரம் செய்யும் காலத்தில் அவர் எந்த இடத்திலும் பகிரங்கமாக கூட்டம் போட்டு பேசவில்லை. இது அவருக்கே தெரியும். ஒரே ஒரு ஊரில் தான் சிறிய கூட்டத்தில் பேசினார். மற்ற இடங்களிலெல்லாம் ஹரிஜன கிராமங்களுக்கு நேரில் சென்று மக்களைக் கூப்பிட்டு பிரசாரம் செய்தார். பகிரங்கமாக கூட்டம் போட்டு பேசவில்லை என்று சொன்னேன். கனம் கக்கன் அவர்கள் சொன்னதற்கு ஆதார பூர்வமாக சாட்சியம் இருக்கிறது. அதற்கு வேண்டிய ஒரு ஜூடிஷியல் விசாரணை நடத்தினால் அங்கே மக்கள் நேரடியாக வந்து அதைப்பற்றி சொல்லுவார்கள்.

THE HON. SRI P. KAKKAN : முதுகுளத்தூரில் பொதுவாக பேசவில்லை, ஹரிஜனங்கள் இருக்கக்கூடிய இரண்டு இடங்களில் நான் பேசினேன். முதுகுளத்தூரில் நான் பேசிய பிறகு திருநெல்வேலி ஜில்லா முக்குலத்தோர் சங்கத்தை சேர்ந்த செல்லபாண்டியன் நான் பேசியதற்குப் பிறகு கூட்டத்தில் பேசி இருக்கிறார். இளஞ்சாம்பூர் ரத்ன தேவர் மகன் செல்லப்ப தேவர் கடைசியாக பேசியிருக்கிறார். நான் பேசியதெல்லாம் புது அரசியல் சட்டப்படி உங்களுக்கு எல்லோருக்கும் வோட்டுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது, அதை நியாயப்படி யாருக்குக் கொடுக்க வேண்டுமோ அவர்களுக்குக் கொடுங்கள் என்றுதான் சொன்னேன். வோட்டுப் போடாமல் மட்டும் இருக்கவேண்டாம் என்றும் சொன்னேன். பலாத்காரத்தையோ அல்லது வேறு எதையுமோ தூண்டிவிடக்கூடிய அளவில் நான் எதுவும் பேசவில்லை என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எப்படிப் பேசியிருந்தாலும் அதற்கு வேண்டிய சாட்சியங்களைக் கொடுத்திருக்கலாம். பத்திரிகைக்காரர்களைப்பற்றி கனம் அங்கத்தினர் கே. ராமச்சந்திரன் அவர்கள் பாராட்டிப் பேசினார். என்னுடைய வேண்டுகோள் எல்லாம் அவர்கள் நீதி தவறாமல் நடந்துகொள்ளவேண்டும் என்பதுதான். அவர்கள் எவ்வளவு பாராட்டுதலுக்குத் தகுதி உடையவர்களாக இருந்தாலும் அவர்கள் சாட்சியம் கொடுத்திருக்கலாம், சாட்சியம் இருந்தால். சில தினங்களுக்கு முன்னதாக பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் பேசியபோது பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய வகையில் அவர் பேசியதாக ஒரு பத்திரிகையில் வந்ததை நான் பார்த்தேன். அதைப் பார்த்தவுடன் அதற்கு வேண்டிய ஆதாரங்கள் எல்லாம் என்னவென்று நான் கண்டுபிடிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறேன். சில ஆதாரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளின் பேரிலும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறேன். அதன்மேல் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளமுடியுமோ அவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் பத்திரிகை நிருபர்களிடமிருந்து வந்த ஆதாரங்களுக்கும் எனக்குக் கிடைத்த ஆதாரங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அதனால் அவர்களை அவர்கள் கொடுத்த ஆதாரங்கள் எப்படி கிடைத்திருக்கிறது என்று கேட்டிருக்கிறேன்—அவர்களுக்கு எப்படி தகவல் கிடைத்ததோ அதைப்பற்றி நமக்கு அக்கரை இல்லை. பத்திரிகைகளில் வெளியானதுதான் நமக்கு அக்கரை. நிருபர்கள் எது வேண்டுமானாலும் எழுதியிருப்பார்கள் அதைப்பற்றி நமக்கு அக்கறை இல்லை. நான் அவர்களைக் கேட்டிருக்கிறேன். " உங்களுக்குக் கிடைத்த ஆதாரத்தைக் கொடுத்தால் உபயோகமாக இருக்கும் " என்று கேட்டிருக்கிறேன். அதற்குக்கூட அவர்கள் என்னுடன் ஒத்துழைக்க தயாராயில்லை. என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி யாரும் கொடுக்க முன்வரவில்லை. ஆட்சேபகரமான பேச்சுகளாக இருந்தால் அதற்கு வேண்டிய ஆதாரங்களைக் கொடுத்தால் அதன் மேல் அதைப்பற்றி விவாதிக்கலாம். ஆனால் எதிர்க் கட்சியில் உள்ளவர் எல்லோரும் சேர்ந்து திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் மூலமாக ஒரு நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதாவது மந்திரிகள் மீது குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் நாங்கள் அவர்கள்மீது குற்றம் சாட்டுகிறோம். இப்பொழுது ஒரு துக்ககரமான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்த பயங்கரமான நெருக்கடியை பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய கட்சிபலத்தை அதிகரித்துக்கொள்வதற்காக இதை பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. இந்தக் குற்றச் சாட்டுக்கு என்னிடம் ஆதாரம் இருக்கிறது. அப்படியே இந்த மன்றம் முடிவு செய்யவேண்டும். இதற்கு ஒரு பழமொழி உண்டு. அதாவது " ரோமாபுரி தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கும்போது நீரோ என்ற அரசன் பிடில் வாசித்துக்கொண்டிருந்தான் " என்று சொல்வது உண்டு. பாட்டுப் பாடிக்கொண்டிருந்தாலும் சரி அல்லது வீணை வாசித்துக்கொண்டிருந்தாலும் சரி அதைப்பற்றி அக்கறை இல்லை. அங்கே பரிதாபகரமாக நிலை ஏற்பட்டிருக்கிறது, மக்களைக் காப்பாற்றவேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்





ளாமல் எரிந்த வீட்டில் பிடுங்கியது லாபம் என்று சொல்வதுபோல் இந்த முறையைக் கையாளப்படுகிறது. இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் விரோதத்தைக் கையாளப்படுகிறது. இது ரொம்பவும் தவறுதலானது என்று நான் சொல்லுகிறேன். கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் இந்தப் பிரேரணையைக் கொண்டுவந்திருக்கிறார். அவருக்கு ஹரிஜனங்களிடத்தில் ஆத்திரம் வருவதற்கு இடம் இருக்கிறது. கொஞ்ச நாளைக்கு முன்னதாக அவர்கள் ஹரிஜனங்களை நம்பினார். அதற்குப் பிறகு ஹரிஜனங்கள் விழித்துக்கொண்டார்கள். கம்யூனிஸ்ட்களைப்பற்றி அவர்கள் தெரிந்துகொண்டார்கள். சென்ற சட்டசபை தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி தஞ்சை ஜில்லாவில் படுதோல்வி அடைந்தது. அதனால் ஹரிஜனங்கள் பேரில் அவருக்கு ஆத்திரம் இருக்கத்தான் செய்யும். எதை மறந்திருந்தாலும் மனித சுபாவம் இருக்கிறதே அது ஒரு நாளும் மறக்காது. அது ஆத்திரத்தைத்தான் உண்டுபண்ணும். அதனால் தான் அவர் இத்தகைய ஒரு போக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார். இல்லாவிட்டால் அப்படி எடுத்துக்கொண்டிருக்கமாட்டார். அதனால்தான் எதிர் கட்சி தலைவர்கள் எங்கே எங்கே சம்பவங்கள் நடந்திருக்கிறதோ அங்கேயெல்லாம் போயிருக்கிறார்களா ? இந்தச் சம்பவங்கள் நடந்துகொண்டிருந்தபோது பார்த்தார்களா ? முதலமைச்சரிடம் பேசியவர்கள்கூட மதுரையிலிருந்து பரமக்குடிக்கும், பரமக்குடியிலிருந்து மதுரைக்கும் திரும்பிவிட்டார்கள். அந்த இடங்களில் தத்தார் அவர்கள் வரும்போது போனார்களே தவிர, இரண்டு நாள் முன்னாலே போனார்களா ? சம்பவங்கள் நடந்துகொண்டிருந்தபோது யார் போனார்கள் ?

இதே மாதிரி புயலின் காரணமாக கோரமான விபத்து ஏற்பட்டது அந்தப் பிராந்தியத்தில். அதனால் மக்கள் பரிதவித்தார்களே அப்பொழுது எந்த எதிர்க் கட்சியினர்—காங்கிரஸ் அல்லாத மற்ற கட்சியினர் அங்கே சென்று நிவாரண வேலையில் ஈடுபட்டார்கள் ? அவர்களுக்கு ஒரு பத்திரமான வாழ்வு அளிக்க எந்த எதிர்க்கட்சி முன்வந்தது ?

SRI P. S. CHINNADURAI : ஒரு லட்சம் ரூபாய் எங்கள் பங்காக கொடுத்திருக்கிறோம் என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பணம் கொடுப்பது சுலபம். அதுவும் தொழிலாளர் தலைவருக்குச் சுலபமாகக் கிடைக்கும். (சிரிப்பு) தொழிலாளர்கள் கொடுத்தார்கள் ; ஆனால், சின்னதுரை அவர்கள் என்ன செய்தார் ?

SRI P. S. CHINNADURAI : ஏற்பாடு செய்து கொடுத்தார் என்பதை நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முதலமைச்சர் அதற்குள்ளாக என்னை மறந்திருப்பது பரிதாபத்துக்குரியது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நன்றி செலுத்த வேண்டியதற்கு நன்றி செலுத்தத் தவறமாட்டோம்.

SRI P. S. CHINNADURAI : நான் நன்றியை எதிர்பார்க்கவில்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காங்கிரஸ் கட்சி செய்தது இருக்கட்டும். ராமகிருஷ்ண மிஷனுக்கு என்ன வந்தது ? அவர்கள் மகத்தான வேலை செய்தார்கள். இப்பொழுது இருக்கும் பரபரப்பு, இப்பொழுது இருக்கும் அக்கரை அப்பொழுது எங்கே போயிற்று ? கடல் கொந்தளிக்கும்போதும் மீன் பிடிக்கலாம் என்ற மனோபாவம் தானே ?

SRI K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்னையொன்றை எழுப்ப விரும்புகின்றேன். " இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட பெரும் புயலின்போது எந்த எதிர்க் கட்சிக்காரர்கள்

[Sri K. Anbazhagan] [30th October 1957

அங்கே சென்றார்கள் ? " என்ற கேள்வியை அமைச்சரவர்கள் எழுப்பினார்கள். அதற்கு பதில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் அந்த வட்டாரத்திற்கு பின்னர் சென்று தங்களுடைய அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு முன்னாலேயே புயலால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுடைய உழைப்புக்கேற்றபடி பணம் திரட்டி, அதற்கு அளித்திருக்கிறார்கள். கைத்தறி ஆடைகளை இளைக் கழகத் தோழர்கள்மூலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுத்து தங்கள் கடமையை நிறைவேற்றி இருக்கிறார்கள். அமைச்சர்களுக்கு உள்ள பொறுப்பை கையாளாது வேறு எதிர்க்கட்சிக்காரர்களிடமிருந்து அத்தகைய பொறுப்பை எதிர்ப்பார்ப்பதும், குற்றம் சாட்டுவதும் பொருந்தாது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் குறிப்பிடும் போதெல்லாம், " இந்தச் சம்பவங்களில் இவ்வளவு அக்கரை எடுத்துக் கொண்ட கட்சி " என்று சொன்னேன். திராவிட முன்னேற்ற கழகத்தை நான் அதிலே சேர்க்க முடியாது. ஆகையால் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை என்று நான் சொல்வதாக, தவறாக அவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது. (கவனிப்பாளர் காலரியிலிருந்து கைதட்டல்) " போலீசார் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை, இந்தச் சம்பவம் முற்றிப்போய் விட்டது, அதனால் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் " என்று சொல்லப் பட்டது.

MR. SPEAKER : I find that people in the visitors' galleries are participating in the proceedings by clapping hands. It is against rules. If it is repeated, I will have to clear the galleries of visitors. Let them not, therefore, repeat it and show their approval or disapproval by clapping hands.

இந்தச் சபையிலே நடக்கும் விவாதத்திற்கு ஆதரவு கொடுப்பதும் எதிர்ப்பைக் காட்டுவதும், அந்த ரீதியில் கை தட்டுவதும் இந்தச் சபையின் அங்கத்தினர்களுக்கு இருக்கக்கூடிய உரிமையே தவிர, காலரியில் உட்கார்ந்திருப்பவர்களுக்குக் கிடையாது. ஆகையால், காலரியில் இருப்பவர்கள் அம்மாதிரி கைதட்டக்கூடாது. இனி அவர்கள் கைதட்டினால் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். ஆகையால், காலரியில் உள்ளவர்கள் தயவுசெய்து கைதட்டக்கூடாது. சந்தோஷத்தையோ துக்கத்தையோ தெரிவிக்கவேண்டாம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : " போலீசார் ஏன் முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை ? தேவர் மீதோ அல்லது மற்றவர்கள் மீதோ ஏன் ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை ? ஆகையால், அவர்கள் பொறுப்பு " என்று ஒரு சில எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். குற்றம் சாட்டினார்கள். ஆனால், நான் அதை மறுக்கின்றேன். போலீசார் அப்போதைக்கப்போது நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வந்தார்கள். நான் முன்பு குறிப்பிட்டபடி, உடனடியாக தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. அப்படி எடுத்துக்கொள்வதும் சரியல்ல, உடனடியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்வது சரியல்ல என்று கருதி உடனடியாக தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை.

" ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் பலாத்காரப் பிரசங்கங்கள் செய்தார்கள் ; ஆதலால், அவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை ? " என்று சிலர் கேட்டார்கள். எடுத்துக்கொள்ளாததற்குக்காரணம் தேர்தல் காலத்தில் பேசிய பேச்சுக்களின் பேரில் நடவடிக்கை ஒன்றும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சர்க்கார் அனுசரித்து வருகிற கொள்கைதான். அந்தக் கொள்கையை அனுசரித்த காரணத்தினால்தான் தேர்தல் பிரசங்கங்களின்பேரில் ஒன்றும் செய்யவில்லை. முதலில்



30th October 1957] [Sri M. Bhaktavatsalam]

பொதுத்தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலுக்குப் பிறகு மறுபடியும் சீக்கிரத்திலே உபதேர்தல் வந்தது. அந்தத் தேர்தலுக்கும் உப தேர்தலுக்கும் நடுவில் நடந்த தேர்தல் பேச்சுக்கள் ஆட்சேபகரமாக இருந்தபோதிலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று இருந்தோம்.

இந்தப் பக்கத்திலிருந்து பேசின பெண்மணி ஒருவர் குறிப்பிட்டார், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு போலீஸ் ஸ்டேஷன் வைக்க முடியாது என்று. ஆனால், போதிய போலீஸ் பந்தோபஸ்து வைக்கப்பட்டுத்தான் இருந்தது. இரண்டு எஸ்.ஏ.பி. படைகள், ஒரு எம். எஸ். பி. கம்பெனி நான்கு இரும்பு ரிசர்வ் போலீஸ் செக்ஷன்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்தத் தாலுகா பூராவாக பரப்பி வைக்கப்பட்டிருந்தன. ஆபத்து இருந்தால் உடனே மற்ற போலீசாருக்கும், அதிகாரிகளுக்கும், ஸ்டேஷன்களுக்கும் தகவல் தெரிவித்து நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு நான்கு ' வயர்லெஸ் ' செட்டுகளும் வைக்கப்பட்டிருந்தன. உத்தியோகஸ்தர்களும் இரும்பு போலீசுடன் ஊரைச் சுற்றிக்கொண்டுதான் இருந்தார்கள். அப்போதைக்கப்போது எச்சரிக்கை செய்யப்பட்டது. க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின் 107-வது பிரிவின்கீழ் 50 கேஸ்கள் அப்போதே போடப்பட்டன. 150 கேஸ்கள் போடுவதற்கு தயாரிக்கப்பட்டிருந்தன. அந்தச் சமயத்தில் தான் இந்தச் சமாதான மகாநாடு வந்தது. சமாதான மகாநாட்டைக் கலெக்டர் கூட்டியதற்குக் காரணம் என்ன ? வெறும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு போவதைக் கொஞ்சம் நிறுத்தி, அவர்களை எச்சரிக்கை செய்வோம், அவர்களுக்கு யோசனை சொல்வோம், புத்தி சொல்வோம், எல்லோரையும் சேர்த்துப் பேசுவோம் என்ற சீரிய நோக்கத்துடன் கலெக்டர் அவர்கள் சமாதான மகாநாட்டைக் கூட்டினார்கள். அந்த மகாநாடு வரைக்கும் 150 கேஸ்கள் போடவில்லை.

அதுவும் அல்லாமல், புகார்கள் வந்ததையெல்லாம் அப்போதைக்கப்போது விசாரித்து, நடவடிக்கை எடுக்கப்பட்டுத்தான் வந்தன. மறவர்களால் கொடுக்கப்பட்ட 6 மனுக்கள் மீது விசாரித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். பொதுவாகச் சொல்கிறேன்—அவர்களுக்கு எத்தகைய வீர உணர்ச்சி என்றால், அவர்கள் புகார் சொல்வது இல்லை. ' நாமே பார்த்துக்கொள்ளலாம் ஒரு கை ' என்று புகார் அதிகமாக போலீசுக்கு வருவது இல்லை. மறவர்களுக்கு எதிராக 32 ஹரிஜனங்களிடமிருந்து புகார்கள் வந்து, அவைகள் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம தவிர, மற்ற இனம் தெரியாத இடங்களிலிருந்து 6 மனுக்கள் வந்து, அவைகளின் பேரிலும் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

SRI T. L. SASIVARNA THEVAR : சபாநாயகர் அவர்களே, சென்ற முதல் தேர்தலுக்குப் பின்னாலும், உபதேர்தல் முடிந்த பிற்பாடும் சற்றேறக்குறைய 80, 89—புகார்கள்—கொடுக்கப்பட்டிருக்கின்றன, பார்வார்டு பிளாக் கட்சியைச் சேர்ந்தவர்களிடமிருந்து. அந்தப் புகார்களிலே—எனக்குத் தெரிந்த அளவிலே—ஒரு புகாரிலேகூட போலீசார் விசாரணை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அதற்கு ஏதாவது ஆதார பூர்வமாக கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒரு புகாரைப் பற்றியும் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதற்கு ஆதாரம் கனம் அங்கத்தினர் சொல்லவில்லை. ஏனென்றால் தெரியாது. புகார்கள் யாரிடமிருந்து வந்தாலும், எந்தக் கட்சியினிடமிருந்து வந்தாலும், எந்த வகுப்பாரிடமிருந்து வந்தாலும் அவைகள் மீது போலீசார் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தி வருகிறார்கள். அப்படிப் போலீசார் கவனம் செலுத்திவரவில்லை என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அரசாங்கம் உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுதான்வருகிறது என்று நான் சொல்லுகிறேன்.

[Sri M. Bhaktavatsalam] [30th October 1957

"போலீசார் ப்ளான் போட்டுச் செய்தார்கள், அரசாங்கம் ப்ளான் போட்டு கொலை நடந்தது, மூன்று படுகொலைகள் நடந்தன" என்ற முறையில் பேசினார்கள். படுகொலை என்று எதைக் குறிப்பிட்டார்கள்? போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்—**Firing**—செய்வதைக் குறிப்பிட்டிருப்பார்கள். போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது என்பது எனக்குக் கொஞ்சம்கூட பிடிக்காதது என்று நான் சொல்லுகிறேன். யாருக்கும் பிடிக்காது. துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவது தவறுதான். யாரும் விரும்பத்தக்கது அல்ல. ஒரு இடத்தில் பெரிய ஆபத்து வருகிறது. நூறு பேர்கள் கொல்லப்படுகிற நிலையிலே, அவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்த நடவடிக்கைகள் மூலம் 4 பேர், 5 பேர் கொல்லப்படலாம். மற்றவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள் என்றால் 4 அல்லது 5 பேர் கொல்லப்பட்டாலும் அது தவிர்க்க முடியாத விஷயம். அப்படிக் கொலையொன்றும் இல்லாமல், கலவரத்தை அடக்க முடியுமா, இந்தத் தீமையைத் தவிர்க்க முடியுமா, படுகொலை நடக்காமல் ஏதாவது செய்ய முடியுமா என்று இன்னும் ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், நிபுணர்களுடைய ஆராய்ச்சியின் விளைவு இன்னும் ஏற்படவில்லை. ஆராய்ச்சியின் பயனாக ஏதாவது ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டு, துப்பாக்கிப் பிரயோகம் என்பதே இல்லாமல் அதைக் தவிர்க்க முடியும் என்றால் எலோருக்கும் சந்தோஷம்தான். எனக்கும் மிகுந்த பிரியம். ஆனால், இந்தப் போலீசார் நிலைமையைக் கையாளுவது மிகவும் கஷ்டமான நிலை. இதற்கு முன்னால் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டபடி போலீசார் ஒரு கஷ்டமான நிலையில் இருந்தார்கள். திடீரென்று அங்குள்ளவர்களுக்கு வீர உணர்ச்சி வந்திருக்கிறது. போலீசாரானாலும் கவலை இல்லை. சுட்டால் இன்னும் எதிர்த்து வருகிறார்கள். ஆகவே, அப்படியே அதை விட்டுவிட்டால் போலீசார் அதோகதியாகி வீழ்த்தப்பட்டிருப்பார்கள். மக்கள் ஒருவருக்கு ஒருவர் தாக்கிக்கொண்டு அதிகமாக வீழ்த்தப்பட்டிருப்பார்கள். அம்மாதிரி நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமலிருந்தால், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சேதத்தைவிட 100 மடங்கு அதிகமான சேதம் ஏற்பட்டிருக்கும். அதைத் தவிர்க்க, போலீசார் மிகுந்த கஷ்டமான நிலையிலே மிகவும் தீர உணர்ச்சியுடனும் நியாய புத்தியுடனும் நடந்துகொண்டார்கள் என்பதை நான் இந்தச் சபையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**Dr. Srimathi SATHIYAVANIMUTHU**: தலைவர் அவர்களே, போலீஸை எதிர்நோக்கி பெரிய படை வந்தது என்றும், அதன் காரணமாக இப்படிப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். கீழத்தூவல் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தபொழுது போலீஸ்காரர்கள் எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்ற புள்ளி விவரத்தை கனம் அமைச்சர் அவர்கள் தருவாரா என்று கேட்கிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: கீழத்தூவல் துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றி விசாரணை நடத்திய அதிகாரியின் விவரப்படி 300 பேர்கள் போலீஸாரை எதிர்த்து வந்தார்கள். அப்பொழுது இருந்த போலீஸ்காரர்கள் சுமார் 30, 31 பேர்கள் இருக்கும். அப்படி எதிர்த்து வந்ததினாலே முதலில் எச்சரிக்கை செய்துவிட்டு அதற்குமேல் சுட வேண்டியிருந்தது என்பதுதான் அங்கு நடந்த சம்பவம்.

**Dr. Srimathi SATHIYAVANIMUTHU**: தலைவர் அவர்களே, இந்தக் கலவரத்திலே ஈடுபட்ட மக்கள், அதாவது பாதிக்கப்பட்ட மக்கள் அதிகமாக கொடூரங்களை செய்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. மறவர்களைப்பற்றியும், அவர்களுடைய தலைவர்களைப்பற்றியும் இந்த மன்றத்திலே இப்பொழுதுதான் அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். அவர் கடவுள் தன்மை படைத்தவர்; ஏறத்தாழ அந்தப் பகுதி மக்கள் அவரை கடவுள் 'ஸெமி காட், டெமி காட்' என்று எண்ணி அவர் வாக்கை தெய்வ வாக்காக கருதியவர்கள் என்று சொல்லப்படுகிறது. வீரத்துடன் எதிர்த்து வரும் தன்மை பொருந்திய மக்களிடமிருந்து பாதிக்கப்பட்டிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று சொல்லுகிற சர்க்கார், கடவுள் என்று



30th October 1957] [Dr. Srimathi Sathiyavanimuthu]

ஈடுபட்ட ஒரு தலைவரைக்கொண்ட வெறிகுணம் படைத்த அப்பேர்ப்பட்ட மறவர்களை ஒடுக்குவதற்கு 30 பேர் கொண்ட போலீஸ் படையைத்தானா அனுப்பவேண்டும்? அதுதான் நான் சொன்னேன் போதுமான போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்று.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: 300, 400 பேர் எதிர்த்து வந்தார்கள். எவ்வளவு பேர்கள் எதிர்த்து வருகிறார்களோ அவ்வளவு போலீஸ் படைகளை கொண்டுபோவது அசாத்தியம். ஆகவேதான் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கூட்டத்தில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்களோ அவ்வளவு போலீஸ் படையை வைத்திருப்பது என்பது எந்த நிர்வாகத்தினாலும் நிறைவேற்றப்படமுடியாத ஒரு காரியம்.

கனம் சசிவர்ணத் தேவர் மூன்று சம்பவங்களைப்பற்றி குறிப்பிட்டார். கீரமடையில் என்ன குற்றச்சாட்டு என்றால்: அங்கே வைத்திருந்த போலீஸ் படையை வாபஸ் பெற்றதால்தான் அந்த சம்பவம் நடந்தது என்பது. ஏதோ வேண்டுமென்றே ப்ளான் செய்து போலீஸை வாபஸ் பெற்றதாகச் சொன்னார்கள். ஒரு விஷயத்தை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். எந்த இடத்திலே போலீஸ் வேண்டுமோ அந்த இடத்திலேதான் வைத்துக்கொள்ளவேண்டும். ஸ்ரீ சசிவர்ண தேவர் அவர்கள் அருங்குளத்தில் போலீஸை வாபஸ் பெற்றதால்தான் வீடுகள் தீப்பற்றி எரிந்தது என்று சொன்னார். ஆதலால் போலீஸின் அவசியத்தை அந்த அளவுக்கு அவர் உணர்ந்திருக்கிறார் என்பதில் எனக்கு திருப்தி. ஆனால், மற்றொரு பக்கத்திலே போலீஸை வாபஸ் வாங்கவில்லை என்று பேசுகிறார்கள்.

**Sri T. L. SASIVARNA THEVAR**: என்னுடைய $2\frac{1}{2}$ மணி நேர பிரசங்கத்தில் நான் ஒரு வார்த்தைகூட போலீஸை வாபஸ் வாங்க வேண்டுமென்று குறிப்பிடவில்லை. நான் சொல்லாததைச் சொல்லுகிறார்.

**Mr. SPEAKER**: அங்கத்தினர் பேசும்போது 'பாயிண்டு ஆப் ஆர்டர்' இல்லாமலே குறுக்கே பேசுவது சரியல்ல. அம்மையார் அவர்கள் பேசும்பொழுது அவரை தடுக்க எனக்கு இஷ்டமில்லை. 'ஆதலால் பாயிண்டு ஆப் ஆர்டர்' இருந்தால் குறுக்கே பேசலாமே தவிர, 'பாயிண்டு ஆப் இன்பர்மேஷன், பாயிண்டு ஆப் எக்ஸ்பிளனேஷன்' பிரசங்கம் முடிந்த பிறகுதான் கேட்கவேண்டும். ஆதலால், கனம் அங்கத்தினர் சசிவர்ண தேவர் அவர்கள் ஏதாவது கேட்க இருந்தால் பிரசங்கம் முடிந்த பிறகு கேட்கலாம்.

(Sri A. Govindaswami rose.)

**Mr. SPEAKER**: No interruption, please.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: கனம் சசிவர்ணத் தேவர் அவர்கள் போலீஸை வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல்லவில்லை என்று சொல்லுவது மிகவும் திருப்திதான். அவர் கட்சியைச் சார்ந்தவர்கள் அந்தக் குற்றச்சாட்டை வைத்துக்கொண்டு சொல்லியதை குறித்துதான் நான் இதை குறிப்பிட்டேன்.

ஊத்தமடையில் வண்டியில் போய் கொலை செய்தார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். அது அல்ல நடந்தது. நரிக்குடி பக்கத்திலே வீடுகள் பற்றி எரிந்துக்கொண்டிருந்ததைப் பார்த்தார்கள். அதைத் தவிர்ப்பதற்கு போலீஸார்கள் போனார்கள். போலீஸ்காரர்கள் ஒரு மொபைல் பார்டியாக ஆங்காங்கு சுற்றிக்கொண்டிருந்தார்கள். நெருப்பு வைப்பதைப் பார்த்தார்கள். ஆகையால் அவர்களை துரத்திக்கொண்டு போனார்கள். அவர்கள் எதிர்த்து வரவே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியிருந்தது.

அம்மாதிரிதான் கீரமடையிலும். அவர்களே ஒப்புக்கொண்டார்கள், நான் சொல்லவில்லை அங்கு வந்தவர்கள் மஞ்சள் துணி கட்டிக்கொண்டு வந்தார்கள் என்று. அங்கும் வேறுவகையில்லாமல் சமாளிக்க முடியாமல் போனதால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டியிருந்தது.

கிழத்தூவல் பற்றி அதிகமாகப் பேசப்பட்டது. அந்த சம்பவம்பற்றி விசாரணை நடத்திய அதிகாரியைப்பற்றியும் பேசினார்கள். அதுபற்றி சில விஷயங்கள் இந்த சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அந்த அதிகாரி நியாயமாக நடந்துகொள்ளவில்லை, தவறுதலாக நடந்துகொண்டார்கள் என்று சொன்னார்கள். நான்தான் அதற்கு காரணம் என்று தோன்றுகிறது. ஏனென்றால், முதலிலேயே நான் சொன்னேன். முறையைப் பற்றி கண்டித்தாலும், அந்த அதிகாரியின் யோக்கியதைப்பற்றியோ நேர்மையைப்பற்றியோ யாரும் குறை கூறவேண்டாம் என்று சொன்னேன். ஒருவேளை அதன் காரணமாக கனம் அங்கத்தினர்கள் அந்த அதிகாரியைப் பற்றி குறை கூறியிருக்கலாம். அந்த அதிகாரியைப் பொறுத்தமட்டில் அவர் மிகவும் உயர்ந்த நேர்மையான குணம் படைத்தவர். அரசாங்கமாயிருந்தாலும் சரி, யாராயிருந்தாலும் சரி, தன்னுடைய மனச்சாட்சிக்கு விரோதமாக எள்ளளவும் ஒரு காரியத்தைச் செய்யமாட்டார் என்று நான் இந்தச் சபையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய உயர்ந்த குணம் படைத்த நேர்மையான அதிகாரியை விசாரணை நடத்தச் சொன்னோம். அவர் வக்கீல் வாதங்களை கேட்கவில்லை என்று சொன்னார்கள். வக்கீல்கள் எழுதிக்கொடுத்ததை அவர் எடுத்துக்கொண்டார். சாட்சிகளை விசாரிக்க 'பெர்மிட்' பண்ணவில்லை என்று சொன்னார்கள். நேரிலே பார்த்தவர்களெல்லாம் விசாரிக்கப்பட்டார்கள். மற்றவர்களெல்லாம் சம்பவத்தைப்பற்றி ஒரேமாதிரியாகச் சொல்லவில்லை, அவர்களையெல்லாம் கலந்துகொண்டு சாட்சிகளை பொறுக்கி எடுத்துக்கொண்டார்கள். இதற்குமேல் எத்தகைய நீதி விசாரணை வேண்டும், எந்த நாட்டு நீதிபதி வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. பிறகு 'மெடிகல் எவிடன்ஸ்' இருக்கிறது. சுடப்பட்டவர்கள் 15 கெஜ தூரத்திற்கப்பால் இருந்திருக்கவேண்டுமென்று 'மெடிகல்' எவிடன்ஸிலிருந்து விளங்குகிறது. சுடப்பட்டவர்களில் 2 பேர்களுக்கு முதுகிலே காயம் இருந்ததாக சொல்லப்பட்டது. மண்டியிடும்படிச் செய்து சுட்டார்கள் என்று சொல்லுவது எப்படி சரியாக இருக்கும்? அப்படி இருந்தால் எப்படி முதுகில் காயம் ஏற்படும்? இதை நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். சசிவர்ணத் தேவர் அவர்கள் ஏதோ தந்தி வந்ததாகச் சொன்னார்கள். எந்தத் தந்தி முதலிலே வந்தது. நான் அதைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அது யார் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை என்று வேண்டுமானால் இப்பொழுது சொல்லலாம். முதுகுளத்தூரிலிருந்து சசிவர்ணத் தேவருக்கு வந்தது இந்த விசாரணையில் இது ஒரு எக்ஸிபிட். இதை சசிவர்ணத் தேவர் அவர்களே விசாரணை அதிகாரியிடம் சமர்ப்பித்திருக்கிறார். '**Filed by**' குப்புசாமி அய்யர் என்று கையெழுத்து இருக்கிறது. **Police raised fire Thooval more than five casualties**. இந்தத் தந்தி முதன் முதலில் சசிவர்ண தேவருக்கு வந்திருக்கிறது. அதை விசாரணை பண்ணியவரிடமும் கொடுத்திருக்கிறது. இதைக் கொடுத்திருக்கிறவர் திருக்கணத் தேவர். கண்ணைக் கட்டிவைத்துச் சுட்டார், கட்டிப்போட்டுச் சுட்டார்கள் என எவ்வளவோ சொல்லப்பட்டது. எல்லாம் அதற்கு பின்னால். இது முதல் தந்தி. நியாயமான முடிவு ஒன்றுக்கு வருவதற்கு இது நமக்கு மிகவும் உபயோகப்படும்.

இதைப்பற்றி நானும் விசாரித்தேன். எஸ்டேட் மானேஜர் நான்கு மணிக்கு வந்திருக்கிறார். அவர் ஒன்றும் பார்க்கவில்லை. அந்தக் கட்டிடத்தில் 30 பேர் அடைக்கப்பட்டிருந்தார்கள், சுற்றி ஏகப்பட்ட பேர்கள் இருந்தார்கள் என்பது ஒரு குற்றச்சாட்டு. நான்கு மணிக்கு அங்கே வந்த எஸ்டேட் மானேஜர் இதைப் பார்க்கவில்லை. கொலை என்றால் அதற்கு மோடிவ் என்பது ரொம்ப முக்கியம். மோடிவ் இல்லாமல் ஒரு கொலையும் நடக்காது. அந்தப் பக்கம் இருக்கக்கூடிய நல்ல வழக்கு அறிஞர்—க்ருமினல் விசாரணை செய்துகூட அனுபவம் உள்ளவர்—இதை ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். மோடிவ் முக்கியம். இந்த ஐந்து பேர்கள் என்ன செய்தார்கள்? இவர்களை எதற்காக கொலை செய்ய வேண்டும்? ஊர் தலைவர்கள் எல்லாம் வெளியில் இருந்திருக்கிறார்கள் அவர்கள் சுடப்படவில்லை. வெளியில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஐந்து பேரைக் கொன்றிருக்கிறார்கள். மோடிவ் என்ன? சம்பவம்



நடந்த உடனேயே இன்வெஸ்டிகேட்பண்ணி இருக்கிறது. வேண்டுமென்றே சுட்டார்களா, இல்லையா என்பதுபற்றி. அந்த அதிகாரியின் முடிவையே ஆட்சேபித்து அவர் முதல் அமைச்சரோடு பேசினார், சீப் செக்ரடரியோடு பேசினார் என அதற்கு மேல் குற்றச்சாட்டு. முதல் மந்திரி நான் பேசவே இல்லை என மறுத்தார். பிரதம காரியதரிசியோடு ஒரு முறை பேசியது வாஸ்தவம். ரகசியமான விஷயம், யாருக்கும் தெரியக்கூடாத விஷயம் என்றால் அப்படி அவர் **open**ஆக பரமக்குடி போஸ்டாபீஸ் வாசலில் நிற்பவர்களுக்குக்கூடத் தெரியும்படி பேசியிருப்பார்களா? எங்களுக்கு பேச வேறு வசதி கிடையாதா? வயர்லஸ் வசதி இருக்கிறது. வேண்டுமானால் அப்படிச் சொல்லியிருக்கலாம். இதை யோசித்துப்பார்த்து எதையும் சொல்லவேண்டும். விசாரணை அதிகாரி அங்கே பல அரசாங்க உத்தியோகஸ்தர்களோடு பேசினார் என்பது ஒரு குற்றச்சாட்டா? அவர் போர்டு மெம்பர். அங்கே நடக்கக்கூடிய நிர்வாகம், எப்படிப்பட்ட நிலைமை இன்னும் நீடித்துக்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி பூரா விசாரித்து வைத்துக்கொள்ளவேண்டிய முழுப்பொறுப்பு உடையவர். அவருக்கு அக்கறையும் உண்டு. அதைத் தவிர அவர் எந்த சாட்சி விஷயத்தில், ஜனங்களிடத்தில் தலையிட்டார்? ஒன்றுமே இல்லை.

மற்றொன்று இங்கே பேசிய நல்லசிவம் அவர்கள்தான் அங்கே போய்ப் பார்த்ததாகவும், சூளை அப்படியே இருக்கிறது, ஏன் எடுக்கவில்லை, கல்லை எடுத்திருந்தால் குறையாதா எனக் கேட்டார். இவர்கள் எல்லாம் எங்கே போய்ப் பார்த்தார்களோ? அங்கே கல் இருக்கிறது. எடுத்து உபயோகித்திருக்கிறார்கள். இல்லை என்று சொல்வது தவறு.

SRI K. R. NALLASIVAM: என்னிடம் சூளை 'போட்டோ' இருக்கிறது. அதைக் காட்டுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஊரில் செங்கல் சூளை இல்லாத இடத்தை படம் பிடித்துக் காட்டினால் இதை ஒத்துக்கொள்ளுகிறேன். எங்கே செங்கல் இல்லை என்று படம் பிடித்துக் காட்டட்டும்

இன்னும் சில குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. கருகிய வைக்கோல் போருக்குள் எலும்புகளைக் காட்டினார்கள். பிணத்தை வைக்கோல் போருக்குள் வைத்துவிட்டு அதை கொளுத்திவிடுங்கள். அடியில் எலும்பு தானா இருக்கும் எனப் பாருங்கள். இப்படி பல. இதைப்பற்றி நான் போயிருந்தபோது ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அவர்களை நாங்களும் சந்தித்துத்தான் பேசினோம்.

அடுத்தபடியாக ஸ்ரீ சசிவர்ண தேவர் பெரிய குற்றச்சாட்டு ஒன்று சொன்னார். "யாரோ ஒரு பெண்பிள்ளை. அவளை சிலர் துரத்திக்கொண்டு போனார்கள். வழியில் டி.எஸ்.பி. இன்ஸ்பெக்டர் எல்லாரும் இருந்தார்கள். அவர்களிடம் இவள் சரணாகதி அடைந்தாள். அவர்கள் "போ போ" என்று சொல்ல உதவி செய்யவில்லை, என்று சொன்னார்கள் துரத்தி வந்தவர்கள் அவளைக் கொன்றுவிட்டார்கள். இப்படியாகச் சொன்னார்.

அவர் எந்தப் பெண்ணைச் சொல்லுகிறாரோ அவளே சாகும்போது மரண வாக்குமூலம் கொடுத்திருக்கிறாள். அதுவும் இங்கே இருக்கிறது. அதைப் படிக்கிறேன்.

MR. SPEAKER: **The Hon. the Minister will finish in fifteen minutes, I suppose. Shall we sit till then and hear him finish his speech? Is it the desire of the House?**

HON. MEMBERS: **Yes.**

THE HON. SRI M. BHAKTAVATSALAM: **Dying declaration of Angammal, wife of Chinnaswami, Arungulam. Statement recorded on 13th September 1957 at 6 p.m. by Sub-Magistrate, Paramakudi at Paramakudi.**

[Sri M. Bhaktavatsalam] [30th October 1957

"என் வீடு தீ பிடித்தது. சட்டி எல்லாம் உடைத்து போட்டாங்கோ. நான் வெங்கல பாத்திரங்களை அள்ளி கொல்லை காட்டில் போட்டுவிட்டு மூணு பிள்ளைகளுடன் உட்கார்ந்திருந்தேன். செம்பக் குடும்பன், இன்னொருவன், ஆள் தெரியவில்லை, இரண்டு பேரும் முன்னுக்கு ஓடி வந்தாங்கோ. பாதி பேர் நின்னுங்கோ. பாதி பேர் ஓடினுங்கோ. உழுதகாட்டுக்குள்ளே மூணு பிள்ளைகளையும் கூட்டிக்கிட்டு ஓட முடியவில்லை. ஓடினவன் பிள்ளையை கீழே போட்டுக்கிட்டு விழுந்துவிட்டேன். பொம்பளை என்ன செய்யப்போறுங்கோ என்று மொத்தமாய் நின்றுவிட்டு அப்புறம் ஓடினுன். எங்கள் தாயார் ஒன்று எங்ககூட வந்திருச்சு. ஓடி வந்தவர்களில் முந்தி வந்த செம்ப குடும்பன் இன்னொருவனும் வந்தாங்கோ. 'நான் பொம்பளே விட்டுவிடுங்கோ' என்றேன். அவள் தான் குறிச்ச பொம்பளே. அம்பிட்டுபேரும் ஓடிப்போய்விட்டாங்கோ. இவ புருஷன் தான் அடிக்கிறது முன்னத்தி ஆளா நின்றவன் குத்துங்கடா என்று சொன்னுன். வயித்திலே ஒரு குத்து. செம்ப குடும்பன் குத்தினுன். குடல் வெளியே தள்ளிவிட்டது. முழங்காலால் வைத்து அமுக்கிக்கிட்டு குத்தவைத்து போட்டேன். கையை ஏந்தினேன். ஏந்தவும் மத்தவன் நின்னவன் குத்திட்டான். குத்தவும் எங்கள் ஆத்தா ஓடிவந்தா என் பிள்ளை செத்துப் போச்சே. இப்படி கொல்லுகிறீர்களே அசலூருடா என்று என் அம்மா சொல்லிச்சு. அதற்கு ஒரு குத்து விலா இடையில். அப்புறம் அவள் குப்புற படுத்து இருந்தா. அப்போது இடது மேல் கையில் குத்தினுன். முதுகில் ஒரு குத்து, என் மகளை வைத்துகிட்டு இருந்தாள். மண்டையில் ஒரு குத்து. விலாவில் ஒரு குத்து. மயங்கி விழுந்துவிட்டாள். சர்பானே அரிசி பத்து பதினைந்து படி வைத்திருந்தேன். அதை அள்ளிகிட்டு போய்விட்டாங்கோ."

இதுதான் அவள் கொடுத்த வாக்குமூலம். போலீஸ் ஒன்றும் வரவில்லை. இவள் போய்ச் சொன்னுள். அவள் உதவி செய்யவில்லை என்பது ஒன்றும் இல்லை. இந்தச் சமயத்தில் இன்னென்று சொல்ல விரும்புகிறேன். மற்றொரு ருசிகரமான மரண வாக்குமூலம். முத்துராமன் சேர்வை. சாகப்போகிறபோது 'நான் ஒரு அரிஜன், அரிஜன வீட்டை நானே கொளுத்தினேன்' என சொல்லிவிட்டு ஒருத்தன் செத்திருக்கிருன். செத்தபின் மறவர்கள் தன் சாதி என்று வந்து கேட்டார்கள். பிணத்தைக் கொடுத்தது. அவன் இப்படி மரண வாக்குமூலத்தில் தான் ஒரு அரிஜனன். நானே கொளுத்தினேன் எனச் சொல்லியிருக்கிருன். இப்படி ஊரிஜனங்களே ஹரிஜனங்கள் வீட்டுக்கு நெருப்பை வைத்தார்கள் என்று தோன்றும்படி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு தூரம் தயாரித்திருக்கிருர்கள். இன்னும் கீழத்தூவலுக்கு ஏன் போலீஸ் போகவில்லை, அங்கு கொலை நடந்ததை ஏன் போலீசார் தடுக்கவில்லை என்றெல்லாம் குற்றம் சொல்லப்பட்டது. ஆனுல் கலகம் நடந்த பகுதியிலே ஸ்பெஷல் ஆர்ம்டுரிசர்வ் போலீஸ் படை அனுப்பப்பட்டது. அந்த போலீஸ் படை கலகம் நடந்த பகுதியிலேயே சுற்றி வந்தார்கள். தீ அணைக்கும் படை கொண்டுவரப்பட்டதா என்று கேட்டார்கள். இந்தத் தகவலைக் கேட்டு போலீசார் சென்றிருந்தார்கள் இல்லை என்று சொல்வது தவறு என்றுதான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

வீராம்பலில் சம்பவம் நடக்காமல் போலீசார் ஏன் தடுக்கவில்லை என்று சொன்னுர்கள். ஏற்ற அளவு அங்கு போலீஸ் படை இல்லை. தொடர்ந்து போலீஸ் படை கொண்டுவரப்பட்டு அங்கே தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள்.

1932-ம் ஆண்டிலிருந்து 1947-ம் ஆண்டு வரை என்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டு பேசினுர்கள். இடையில் இருக்கும் வருஷங்களில் சம்பவங்கள் நடந்துகொண்டுதான் இருந்தது. அப்போதைக்கப்போது போலீசாரின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிருர்கள். ஆனுல் இப்பொழுது நடந்ததுபோல் அவ்வளவு பயங்கரமான சம்பவங்கள் நடைபெறவில்லை,



30th October 1957] [Sri M. Bhaktavatsalam]

மற்றொரு பெரிய குற்றத்தைப்பற்றி நான் அறிவித்த அறிக்கையில் இருப்பதாகச் சொன்னுர்கள். இறந்தவர்கள் 13 பேர் அல்ல, 14 பேர்கள் என்று சொன்னுர்கள், வாஸ்தவம்தான்; 13 பேர் அந்த இடத்திலேயே இறந்தார்கள். ஒருவர் ஆஸ்பத்திரியில் இறந்தார்.

மத்திய சர்க்கார் மந்திரி ஸ்ரீ தத்தார் அவர்கள் தன் சுற்றுப் பிரயாணத்தின்போது எதிர்க்கட்சித் தலைவர்களை கலந்தாலோசித்தார்களா என்று கேட்டார்கள். எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும் பார்த்து பேசியிருக்கிருர். அந்த வட்டாரத்து மக்கள் பிரதிநிதிகளைக் கண்டு பேசியிருக்கிருர். இவைகளை எல்லாம் ஸ்ரீ தத்தார் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர். ஆனுல் அவர்கள் குறுக்கு விசாரணையின்போது அவர்களை இல்லை என்று சொல்லுவது தவறு. திரு. ராமச்சந்திரன் அவர்கள் ஸ்ரீ தத்தார் அவர்களோடேயே இருந்தார். ஸ்ரீ தத்தார் அவர்களின் பேச்சுக்களை மொழிப் பெயர்த்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் ஸ்ரீ கே. டி. கே. தங்கமணி அங்கே இருந்தார்.

**Sri P. K. MOOKIAH THEVAR** : கனம் மந்திரி அவர்களே சொல்லுகிருர்கள் தலைவர்கள் வாபஸ் வாங்கிவிட்டார்கள் என்று. அந்த இடத்தில் ஹரிஜனத் தலைவர்களை விசாரிப்பது சரி இல்லை சிலர் ஊரிலே இல்லை என்பதற்காகவும்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ஸ்ரீ தத்தார் அவர்கள் தமது அறிக்கையில் இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிருர். எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

முத்துராமலிங்க தேவர் இதைப்பற்றி பேசுகையில் இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிருர்.

சிலர் கூறினுர்கள் விபத்து நேர்ந்த இடத்திலே ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று.

10-ந் தேதி முதல் 16-ந் தேதி வரையிலும் அங்கே நிலவரம் எப்படி இருந்தது என்பது அறிக்கையில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இதைக் கவனிக்கவேண்டும். இன்னொரு குற்றச்சாட்டு என்னவென்றுல் நாங்கள் அதிகாரிகளை அங்கிருந்து மாற்றவில்லை என்று. நம்பிக்கை சிலரிடத்திலாவது இருக்கிறது. அது அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது. அதிகாரிகளை அடிக்கடி மாற்றினுல் நிர்வாகத்தைச் சரிவர நடத்தமுடியாது.

**Sri M. KALYANASUNDARAM** : எதிர்க்கட்சிக்காரர்களும் ஸ்தலப் பிரதிநிதிகளும் ஸ்ரீ தத்தார் அவர்களுடன் சென்றதை ஒப்புக்கொண்டு பார்த்தால், அறிக்கைக்கும், இவர் சொல்வதற்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிகிறது.

**Mr. SPEAKER** : Are you raising point of order?

**Sri M. KALYANASUNDARAM** : கம்யூனிஸ்ட் கட்சிகூட அதில் கலந்துகொண்டது என்பதை அறிந்து கொள்ளத்தான். கட்சி பிரதிநிதிகள் அங்கத்தினராக இருந்தால் தவறு இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இன்னொரு குற்றம் சொல்லப்படுகிறது. நெருப்பு அணைக்கும் படைகள் எல்லாம் அந்த வட்டாரத்தில் இல்லை என்று சொன்னுர்கள். சின்ன சின்ன ஊரிலே நெருப்பு அணைக்கும் படைகள் இருப்பதில்லை. ஆகவே நெருப்பு அணைக்கும் படை பக்கத்து ஊரிலிருந்து எப்பொழுது எல்லாம் தீ ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அனுப்பிவைக்கப்படுகிறது.

[Sri M. Bhaktavatsalam] [30th October 1957

இன்னொரு அங்கத்தினர் கேட்டார்கள் என் ஒவ்வொரு கிராமத்திலும் என் ஒரு போலீஸ் ஸ்டேஷனை அமைக்கக்கூடாது என்று சொல்லு கிருர்கள். அப்படி அமைப்பது கிடையாது. நல்ல ரோடுகள் உள்ள பெரிய கிராமத்தில்தான் போலீஸ் ஸ்டேஷன் அமைப்பது வழக்கம்.

இப்பொழுது மீண்டும் சபையில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்பு கின்றேன். பல அங்கத்தினர்கள் உணர்ச்சியோடு பேசினுர்கள். முது குளத்தூர் மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கையில் அரசாங்கம் பாது காப்பு அளிப்பதற்குக் கவலேப்படவில்லே என்றெல்லாம் பேசினுர்கள். ஆனல் சர்க்கார் எந்தெந்த முறையில் துரிதமாக பாதுகாப்பு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்தந்த முறைகளில் எல்லாம் நட வடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. நாட்டின் அமைதியைப் பாது காப்பதற்கு சர்க்கார் வேண்டிய பாதுகாப்பு அளித்துத்தான் வருகிறது. சட்டத்தையும், அமைதியையும், ஒழுங்கையும் பாதுகாப்பதற்கு எல்லோ ருடைய ஒத்துழைப்பு தேவைபடுகிறது. ஆகவே எல்லோரும் கட்சி பாகு பாடின்றி ஒற்றுமையாக இன்புற்று இருக்கவேண்டும் என்பதுதான் அர சாங்கத்தின் விருப்பம்.

MR. SPEAKER: The House will now adjourn for lunch and meet again at 2-30 p.m.

**(After lunch—2-30 p.m.)**

*SRI K. SATTANATHA KARAYALAR: சபாநாயகர் அவர்களே, இந்த மந்திரி சபையின் மீது நம்பிக்கையில்லே என்ற தீர்மானத்தின்மீது விவாதம் நடத்தும்போது இன்று மேலோங்கி நிற்கக்கூடிய ஒரு விஷயம், இராமனுதபுரம் வட்டாரத்திலே முதுகுளத்தூரில் கழிந்த மாதம் முழுதும் அல்லது சமீப காலம் வரையிலும் நடந்துகொண்டிருக்கிற சம்பவங்கள் பற்றியும் அதில் சர்க்கார் கையாண்ட முறையும் தான்.

MR. SPEAKER: ரொம்பவும் சப்தம் ஜாஸ்தியாயிருக்கிறது. தயவு செய்து காலரியில் இருப்பவர்கள் சப்தம் செய்யாதிருந்தால் நன் ருகயிருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கத்தினர் பேசும்போது அதற்கு தடையாயிருக்கக்கூடாது.

SRI K. SATTANATHA KARAYALAR: சபாநாயகர் அவர்களே, இன்று நாட்டில் இருக்கக்கூடிய ஜாதி சண்டை இன்று நேற்று தோன்றியது அல்ல. எனக்கு முன்பு பேசிய பல நண்பர்களும் அதை குறிப்பிட் டார்கள். பிராமணர்களே வெறுப்பதிலிருந்து ஆரம்பித்து, உயர் ஜாதி தாழ்ந்த ஜாதி என்று பிரிந்து, இன்று நாடார், கோனர், மறவர் அல்லது தேவர் என்ற அடிப்படையிலே பிரிந்து இன்று கடைசியாக இருக்கக்கூடிய ஹரிஜனங்களேயும் பாதிக்கக்கூடிய அளவிற்கு அவர்களின் உட்பிரிவுகளில் கூட வித்தியாசம் கற்பிக்கும் அளவிற்கு ஜாதிச் சண்டை ஓங்கிக்கொண்டே போகிறது. இது, அரசியலில் இருக்கக்கூடியவர்களுக்கு அவர்கள் சூதாட் டத்தில் பயன் தருவதாயிருக்கலாம். காந்தீயத்தைச் சொல்லிக்கொண்டு, கதர் ஆடை புனைந்துகொண்டு, காங்கிரஸ்காரர்களும் இந்த வெறியைத் தான் தூண்டியிருக்கிருர்கள். இந்த சட்டசபையில் இதற்கு முன்பு பேசிய நண்பர் சிலர் முத்துராமலிங்க தேவர் அவர்களேப்பற்றி கூறும்போது அவர்கள் தான் முக்கியமாக மறவர் இனத்தைத் தட்டி எழுப்பி, அவர் களின் உணர்ச்சியை ஹரிஜனங்களுக்கு எதிராக அணிவகுத்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆனல், துர்அதிர்ஷ்டவசமாக ஜாதி உணர்ச்சியை வளர்த்ததில் அவர்களுக்கு எந்த அளவு பொறுப்பு உண்டோ; அதைவிட பன்மடங்கு இன்று காங்கிரசின் பெயரால், காந்தியின் பெயரால் நாட்டை ஆளுகிற காங்கிரஸ்காரர்களும், ஜாதிச் சண்டையை வளர்க்க காரணமா யிருந்திருக்கிருர்கள். அதோடு இல்லாமல் இந்த ஜாதி வெறியை அரசியல் குரோதத்திற்கு பயன்படுத்திக்கொண்டார்கள். ஆட்சியில் இருக்கக்கூடிய வர்கள் ஹரிஜனங்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் இருக்கிரும் என்று சொல்கிறவர்கள் அவர்களின் குறைகளே நீக்கிக் கொடுக்காது



30th October 1957] [Sri K. Sattanatha Karayalar]

அவர்களுக்கு அல்லல் ஏற்படும்போது அதை அகற்றி அவர்களின் ஆதரவைப் பெருது அந்நிலே ஏற்படும்போது வேடிக்கை பார்த்துக்கொண்டு வருகிருர்கள். இதற்கு எத்தனேயோ உதாரணமுண்டு. எனது தொகுதி யில் உள்ள சுமார் 5,000-க்கும் மேற்பட்ட ஹரிஜன மக்கள் இம்சிக்கப் படும்போது அதுபற்றி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று நான் இந்த சட்டசபையில் கூறியபோதெல்லாம் எந்தவிதமான உதவியும் செய்யாது இருந்தது இந்த சர்க்கார். அவர்களின் குடிதண்ணீர் கிணற் றில் விஷமிட்டு ஆயிரக்கணக்கான மக்கள் அவதிப்பட்ட காலத்தில் உதவி செய்யாமலும் அவர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டபோது தடுக் காமலும், இன்று நீலிக்கண்ணீர் வடித்துக்கொண்டு ஹரிஜனங்களுக்காக நாங்கள் வக்காலத்து வாங்கிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்வது வேடிக்கையாகவும், விந்தையாகவுந்தான் இருக்கிறது. இன்று 7,000 ஆலய நிர்வாகத்தில் நூற்றுக்கணக்கான உத்தியோகஸ்தர்கள் இருக்கும் போது இரண்டே இரண்டு ஹரிஜன அன்பர்கள்தான் ஆலய நிர்வாக உத்தியோகஸ்தர்களாக இருக்கிருர்கள் என்று எனக்குத் தந்த சர்க்காரின் பதிலிலிருந்து கிடைத்துள்ளது. இவைகள் எதைக் காட்டுகிறது? கட்சிக்கு பயன்படுமானல் ஹரிஜனங்களேப்பற்றிப் பேசுவது. அவர்களுக்கு உதவும் விஷயத்தில் உங்கள் வர்க்க உணர்ச்சி குறுக்கே நிற்கிறது.

கழிந்த மாதத்தில் ராமனுதபுரம் வட்டாரத்தில் பல சம்பவங்கள் தொடர்ச்சியாக நடந்தது. இமானுவேல் அவர்களின் கொலேயும் அதற் குப்பிறகு கீழத்தூவலிலும், கீருந்தையிலும், உளுத்தமடை போன்ற யிடங்களிலும் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் மன வருத்தத்தையும், வேதனையையும் தருவதாகும்.தரும் விஷயங்களாகும். தோழர் இமானுவேல் அவர்களே யார் கொலே செய்திருந்தாலும்சரி, அரசியல் நோக்கத்தோடோ அல்லது ஜாதி துவேஷத்தாலோ அல்லது இரண்டையும் அடிப்படையாகக் கொண்ட காரணத்தாலோ இருக்கலாம். அது எதுவாயிருந்தாலும் நாம் வெட்கித் தலே குனியவேண்டிய காரியமாகும். இந்த நீசச் செயல் கண் டிக்கவேண்டிய செயலாகும். அதேபோல் வீராம்பலில் ஹரிஜனங்களேத் தாக்கி இம்சை செய்ததும் மிகமிக வருந்தத் தக்க காரியமாகும். ஜாதியின் அடிப்படையில் ஹரிஜனங்களே துன்புறுத்திய சம்பவங்கள் பல இங்கு கொண்டுவரப்பட்டது.

(இந்த சமயத்தில் சில மெம்பர்கள் [illegible] பர் எரிவது போன்ற வாடை இருக்கிறது என்று செ[illegible]கள்.)

MR. SPEAKER: I am look[illegible] the matter. [illegible] hon. Member proceed with his speech.

SRI K. SATTANATHA KARA[illegible]LAR: [illegible] இமானுவேல் [illegible]லேக் குப்பிறகு அந்த வட்டாரத்தில் உள்ள [illegible]க்கள் பூராவும் பீதியும் [illegible]ரமும் அடைந்திருந்தார்கள். குழப்பம் வ[illegible] என எதிர்ப்பார்த்தார்[illegible] அப் பொழுது சர்க்கார் கையாண்ட கொள்[illegible] என்ன?

(Deputy Speaker in the Chair.)

சர்க்கார் போலீஸ் படையை அனுப்பி அங்கு[illegible] நிலேமையை சமா ளித்தார்களா? அல்லது சமாதான தூதர்களாக அங்கு சென்ருர்களா? இரண்டும் இல்லே. ஆட்சியில் இருப்பவர்கள், அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள், இந்த நிலேயை எப்படிச் சமாளித்தார்கள் என்று பார்க்கவேண்டும். இமானுவேல் 11-ம் தேதி கொலே செய்யப்பட்டார். கீரந்தையிலும், எலஞ்சம்பூரிலும், அத்தனே காலமும் தேர்தலுக்கு முன் இருந்தே போலீஸ் பந்தோபஸ்து இருந்து வந்தது, குழப்பம் இருக்கக் கூடிய நிலேயிலே கலவரம் இருக்கும்போது பாதுகாப்பிற்காக இருந்த இந்த போலீஸ் படையை சர்க்கார் பின் வாங்கியிருக்கிருர்கள். இதன் உண்மை என்ன? அப்படி போலீஸ் படையை பின் வாங்கியிருந்தால் அது எதைச் சுட்டிக் காட்டுகிறது? பாதுகாப்பற்று இருக்கக்கூடிய இடத் தில், கலவரத்தில் ஈடுபட்டிருக்கும்போது, அது மறவர்களாலுலும்சரி,

ஹரிஜனங்களானாலும்சரி, ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ள சந்தர்ப்பம் அளிப்பதாயிருக்கிறது. அப்படி ஒரு சந்தர்ப்பம் கொடுத்து கலவரத்தை வளர்த்துவிட்டு மக்கள், குய்யோமுறையோ என்று கதறும்போது அந்த சந்தர்ப்பத்தை அடக்குமுறையை அவிழ்த்துவிட சர்க்கார் பயன்படுத்திக்கொண்டார்களா? என்று கேட்க ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக வெங்கடேஸ்வரன் அவர்களின் விசாரணை விஷயம். கீழத்தூவல் சம்பவத்திற்கு மோட்டிவ் என்ன, உட்கருத்து அல்லது நோக்கம் என்னவென்று அதில் கேட்கப்படுகிறது. போலீஸ் நடந்துகொண்ட முறைக்கு காரணம் என்ன? மோட்டிவ் என்னவென்று கேட்கப்பட்டது. அதில் சாட்சியம் சொன்ன 12 வயது பாலகனும், 43 வயது பெண்மணி ஒருவரும் சொன்ன சாட்சியம் சரியாக இல்லை. மோட்டிவ் என்னவென்று அவர்கள் சரியாக சாட்சியம் கொடுக்க முடியவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. அரசியல் சூதாட்டக்காரர்கள் செய்யும் சதி, தங்கள் கட்சியை வளர்க்கவேண்டும் என்று அவர்கள் செய்யும் சதி "அன்ஸொபிஸ்டிக்கேட்டட் வுமனிற்கு"-ம் பாலகனுக்கும் எப்படித் தெரியும்? அவர்களால் இதை புரிந்துகொள்ள முடியாது. அவர்களை அரசியல்காரர்கள் சூதாட்டக் காய்களாக உபயோகிக்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரிந்துகொள்ள முடியாதுதான். அரசியல் கட்சிகள் இந்த நிலைமையை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்கள் என்று எனக்கு முன் பேசிய நண்பர்கள் பலரும் குறிப்பிட்டார்கள். நான் கூறுவது எல்லாம், இன்று காங்கிரஸ் பாகத்திலிருந்து முத்துராமலிங்க தேவர் அவர்கள் ஜாதி வெறியைத் தூண்டிவிட்டார்கள் என்று எப்படி குற்றம் சாட்டுகிறார்களோ, அதே குற்றச்சாட்டு இன்று ஆட்சி பீடத்தில் இருக்கக்கூடிய காமராஜ் அவர்களையும் சாராதா என்று கேட்கிறேன்? இன்று நாட்டிலே முத்துராமலிங்க தேவர் அவர்களும் தேவர்களின் உணர்ச்சியை தட்டி எழுப்பினார்கள் என்றால் அதே முறையில் காமராஜ் அவர்களும் ஜாதி வெறிக்கு பலியாகவில்லையா? அதற்காக அவர்கள் இன்னொரு பக்கத்தில் ஹரிஜனங்களை முதுகுளத்தூர் வட்டாரத்தில் தூண்டிவிடவில்லையா? அல்லது போலீஸை மறைமுகமாக உபயோகித்து இந்த ஜாதி குழப்பத்தை பயன்படுத்திக்கொண்டு தனக்கு எதிராக உள்ளவர்களை அடித்து அடக்க பயன்படுத்திக் கொள்ளவில்லையா? என்று கேட்கிறேன்.

இங்கு அமைதி நிலவ வேண்டுமென்று விருப்பமிருந்தால் அதற்கான உடனடி நடவடிக்கை எடுத்தீர்களா? அமைதி நிலை நாட்டுவதற்காக நடவடிக்கை எடுத்ததாக சொல்லப்படுகிறது. எப்போது? எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டது? அது அல்லாமல் புயல் வீசின காலத்தில் முதன் மந்திரி போய் நிவாரண நடவடிக்கை எடுத்தது மாதிரி இங்கு ஏன் நேரிலேயே போய் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிறேன். அது இல்லாமல் அந்த காலத்தில் பஞ்சாப் படுகொலை நடந்த சமயத்தில் அங்கு மக்களை சுட்டு குவித்த ஓடயர் போன்ற ஒரு "ரே" என்ற போலீஸ் அதிகாரியை அனுப்பினீர்கள். அந்த உத்தியோகஸ்தரின் பேரில் ஏற்கனவே இரண்டு பேரை சுட்டு கொன்றதாக குற்றச்சாட்டு இருக்கிறது. இவ்விதமாக பரம்பரையாக குற்றச்சாட்டு இருக்கிற இந்த "நொட்டோரியஸ்" அதிகாரியை அங்கு அனுப்பியது ஏன்? கலகத்தை வளர்ப்பதற்கா அல்லது அமைதியை நிலை நாட்டவா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** இந்த குற்றச்சாட்டு எப்போது? எங்கே? என்கிற விவரங்களையும் கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**Sri K. SATTANATHA KARAYALAR:** இதற்கு முன்பு கண்ணனூர் சிறையில் இருந்த இரண்டு பேர்களை வெளியே கொண்டுபோய் சுட்டுக் கொல்லப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. நான் இங்கு அதை குறிப்பிட்டதின் நோக்கம் நிரபராதிகளானவர்களும் அரசியல் காரணங்களால் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் என்பதற்கும் ஆகும். நிரபராதிகளை சுட்டுக் கொல்வது என்றால் அதை யாரும் நியாயம் என்று சொல்லமுடியாது. இன்றுள்ள நிலையில், கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு கொண்டு வந்திருக்கும் நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது பேசும்





போதும், அதன் மீது வோட்டு கொடுக்கும்போது நாம் சிந்தித்து பார்க்க வேண்டியதெல்லாம், இந்த சர்க்கார் இவ்விதமாகவே போய்க்கொண்டிருந்தால் இந்நாட்டில் நியாயத்திற்கும் நேர்மைக்கும் புறம்பாக நடக்கும் காரியங்களை இந்த சர்க்கார் அனுமதித்துக்கொண்டிருக்கும் என்று தான் நாம் எண்ணவேண்டியிருக்கிறது. நியாயமற்ற முறையில் நடந்திருக்கக் கூடிய செயல்களை விசாரணை செய்வதற்காக ஒரு நீதிமன்ற விசாரணை (ஜுடிஷியல் என்கொயரி) நடத்தவேண்டும் என்று கேட்கும்போது, அதை அங்கீகரிப்பதற்கு இல்லாமல் சர்க்கார் பின்வாங்கி வருவதைப் பார்த்தால் இவர்களின் கை இந்த கலகங்களுக்கு அல்லது இந்த நியாயமற்ற செயல்களுக்கு உடந்தையாக இருந்திருக்கக்கூடும் என்று ஏன் நாங்கள் சந்தேகிக்கக்கூடாது? நாங்கள் அஞ்சுவதெல்லாம் இந்த நாட்டில் நேர்மைக்கும் நியாயத்திற்கும் பாதுகாப்பு இல்லாமல் போய்விடுமோ என்று தான். இந்த நாட்டிலுள்ள மக்களை இவர்களால் பாதுகாக்க முடியவில்லை. ஒரு இமானுவேலை பாதுகாப்பதற்கு இந்த சர்க்காரால் முடியவில்லை. நிரபராதியான பலருக்கும் பாதுகாப்புக் கொடுக்க முடியவில்லை. எந்த பக்கத்தில் மக்கள் இருந்தாலும் அந்த மக்களை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு இந்த சர்க்காருடையது. அதைவிட்டு விட்டு நாட்டிலே இவர்களுக்கு எதிராக இருந்தால் போலீஸ் மூலம் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள் என்ற நிலைமைதான் வளர்ந்துகொண்டு வருகிறது என்று அஞ்சவேண்டிய நிலையிலிருக்கிறோம். இவர்களுக்கு எதிராக இருந்தால் எந்த அதிகாரங்களை வேண்டுமானாலும் அவர்கள் மீது உபயோகப்படுத்தப்படுமோ என்று பொதுமக்கள் நினைக்கவேண்டிய அளவுக்கு இன்றைய நிலைமை இருக்கிறது. ஸ்ரீ தேவரை பாதுகாப்புக் கைதியாக வைத்திருப்பது இதை ஊர்ஜிதப்படுத்துகிறது. இதை பார்த்தால் இன்றைக்கு எதிர்கட்சியில் இருப்பவர்களுக்கு நல்ல பந்தோபஸ்து இருக்கிறதா என்றுகூட அஞ்சவேண்டியிருக்கிறது. இதை நினைக்கும்போது என் நினைவுக்கு ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. 1938-ம் ஆண்டில் திருவிதாங்கூர் சட்டசபையில் ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் சபாநாயகராக இருந்து சபை நடத்துகொண்டிருந்த காலத்தில் பாலகிருஷ்ணன் தம்பி என்ற அங்கத்தினர் ஒருவர் அப்போதுள்ள ஆட்சியை எதிர்த்து சபையில் காரசாரமாக பேசினார். அவர் பேசி வெளியே வந்ததும், அங்கே மறைவாக "மப்டி"யில் நின்றுகொண்டிருந்த போலீஸ் அதிகாரியினால் அந்த இடத்திலேயே கைது செய்யப்பட்டார், யார் பேசினாலும் இந்த வித நிலைமை அங்கு இருந்துகொண்டிருந்தது அப்போது. இன்றைக்கு நாமும் அதே சர்வாதிகார நிலையில் போய்க் கொண்டிருக்கிறோமோ என்று நான் அஞ்சுகிறேன். நாங்கள் செய்தது சரி, எந்த நீதி மன்ற விசாரணைக்கும் நாங்கள் தயார் என்று மந்திரிசபை சொல்லியிருக்குமானால் அவர்களின் கையில் ரத்தக்கறை ஒன்றும் இல்லை என்று நாம் தெளியலாம். அவ்விதம் இரத்தக்கறை ஒன்றும் இல்லாமல் இருந்தால் ஏன் நீதி மன்ற விசாரணைக்கு அஞ்சவேண்டுமென்று கேட்கிறேன். அது மாத்திரமல்ல, திரு. முத்துராமலிங்க தேவர் தான் இக்கலவரங்களுக்கு காரணம் என்றால் அவர் இதற்காக வேலை செய்தார் என்றால் ஏன் அவர்கள் மீது முன்னாலேயே நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிறேன். டிஸ்ட்ரிக்ட் போர்ட் தேர்தல் காலத்திலேயிருந்து பல ஆண்டுகளாக அங்கு இவ்விதமான சண்டைகள் நடந்துகொண்டு வந்திருக்கின்றது. அப்போது எல்லாம் அவர் உங்கள் கட்சியில் இருந்ததால் ஒன்றும் செய்யாமல் இருந்துவிட்டு இப்போது மாத்திரம் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்றால் இதில் ஏதோ சதி திட்டம் இருக்கிறது என்று தானே அர்த்தம். இவைகள் எல்லாம் நீதி மன்ற விசாரணைக்கு முன்னால் வெளியே வந்துவிடும் என்று தானே அஞ்சுகிறீர்கள். இந்த எண்ணம்தான் இன்று பொதுமக்கள் முன்னிலையிலும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதற்கு இடம் கொடுக்காத முறையில் ஒரு நீதி மன்ற விசாரணைக்கு இந்த சர்க்கார் ஒத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றில்லாவிட்டாலும் நாளையாவது நீதி மன்ற விசாரணையை நீங்கள் அங்கீகரிப்பீர்கள் என்றால் இந்த சபை முன் வந்திருக்கும் இந்த மசோதாவின் மீது வோட்டு கொடுக்கும்போது என் போன்றவர்கள் பலமுறை யோசித்து பார்த்து வோட்டு கொடுக்கவேண்டிய நிலைமை

ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். இனிமேலாவது அந்த சந்தர்ப்பத்தை உண்டாக்குங்கள் என்று கூறிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

2-45 p.m. **SRI SAMI SAHAJANANDA :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சந்தர்ப்பத்தில் எனக்கும் பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்கு என் மனமார்ந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்த சட்டசபையில் 31 ஆண்டுகளாக தொடர்ந்து இருக்கக்கூடியவன். ஒரு ஹரிஜன ஊழியன், ஹரிஜன மக்களுக்காகவே வாழ்ந்து வருகின்றவன். ஆனால் என்னுடைய அறிவில் இப்போது நடந்திருப்பது போல் எந்த காலத்திலும் நடந்தது கிடையாது. முன்னால் சில இடங்களில் எல்லாம் ஒரு சில கிராமங்களில் எல்லாம் ஒருவர், இருவர் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் தாலூகா தாலூகா வாரியாக ஒரேயடியாக ஹரிஜன மக்களுக்கு இவ்வளவு கொடுமை ஏற்பட்டிருப்பது எப்போதுமே கிடையாது. பெண்களை குழந்தைகளை கொன்று குவித்தார்கள் என்றால் அதை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும். இது அரசியல் காரணமாக வந்தது, ஜாதி சண்டை காரணமாக வந்தது என்று எல்லாம் பலர் பல விதமாக சொன்னார்கள். ஆனால் இயற்கையிலேயே உயர்ந்த ஜாதி மக்களுக்கு, கள்ளர்கள், மறவர்கள் போன்ற மக்களுக்கு அங்கு ஹரிஜனங்கள் சட்டை போடக்கூடாது, குடை பிடிக்கக்கூடாது, நல்ல ஆடை அணியக் கூடாது என்று அசூயை எப்போதுமே இருந்து வந்திருக்கிறது. இதனால் அங்கு இந்த சண்டைகள் எல்லாம் வந்திருக்கிறது. அதோடு அரசியலும் சேர்ந்தது. திருவாளர் முத்துராமலிங்க தேவர் அவர்கள் எலக்ஷனில் நின்ற போது அங்குள்ள ஹரிஜனங்களில் சிலர் காங்கிரசுக்கு வோட்டு அளித்தார்கள். இதை கண்ட அவருக்கு கோபம் வந்துவிட்டது. நமக்கு எதிராக இருந்து காங்கிரசுக்கு வோட்டு போடுகிறவர்களை அடியோடு தொலைக்க வேண்டும் என்று அவருக்கு ஒரு எண்ணம் வந்துவிட்டது. இந்த ஆத்மீக நாட்டில், மறவர்கள், நாட்டில் ஹரிஜனங்களை ஒழித்துத்தான் தீர வேண்டும் என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். அதன் மேல் ஆங்காங்கு இருக்கின்ற வீராதி வீரர்கள் எல்லாம் கும்பல் கும்பலாக சேர்ந்துகொண்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் போவது, தீ வைப்பது, கொலை செய்வது, ஆட்களை தீயில் தூக்கி தூக்கி போடுவது இவைகள் எல்லாம் நடந்திருக்கின்றன. ஏதோ ஜாதி காரணத்திற்காக ஆயிரக்கணக்கான பேர்களை கொன்று கொன்று வெட்டி, வெட்டி நெருப்பில் போட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி ஒருவரும் பரிந்து பேச முன்வரவில்லை. எங்களுக்கு இங்குமா ஆதரவு இல்லை என்று வருத்தத்தோடு கேட்க ஆசைப்படுகிறேன். . . .

**SRI P. S. CHINNADURAI :** Sir, point of order, கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் ஹரிஜனங்களும் மறவர்களும் இரு தரப்பினரும் கொலை செய்யப்பட்டிருக்கின்ற நிலைமையில் கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு தரப்பினர் மாத்திரம் கொலை செய்யப்பட்டார்கள் என்று குறிப்பிடுவது ஜாதி துவேஷத்தை மேலும் வளர்ப்பதாக இருக்கிறது. ஆகவே இது இந்த விஷயம் சம்மந்தப்பட்ட வரையில் இது ஒழுங்குக்கு உட்பட்டதுதானா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**DEPUTY SPEAKER :** It is not a point of order. The hon. Member simply gives his opinion.

**SRI SAMI SAHAJANANDA :** அதாவது போலீஸ் அமைச்சர் அவர்கள் கொடுத்த ரிப்போர்ட்டில் எத்தனை ஹரிஜனங்களுடைய வீடுகள் நெருப்பு வைக்கப்பட்டன, எத்தனை மறவர்களுடைய வீடுகள் நெருப்பு வைக்கப்பட்டன என்பதை நாம் பார்க்கவேண்டும். ஹரிஜனங்களின் 2,735 வீடுகள் நெருப்புக்கு இரையாகி இருக்கின்றன. அதே சமயத்தில் 107 மறவர்களுடைய வீடுகள் மாத்திரம் தான் நெருப்புக்கு இரையாகி இருக்கின்றன. இவ்விதம் ஆயிரக்கணக்கான பேர்கள் இறந்து போயிருக்கிறார்கள். மறவர்கள் அவ்வளவாக இறந்து போகவில்லை, என் பதை பலமாக சொல்லவேண்டியிருக்கிறது. இந்த ஹரிஜனங்களை, வோட்டு





கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக இவ்வாறு தண்டிக்கவேண்டுமென்று சொன்னால், இது எந்த நீதியில் இருக்கிறது, இவைகள் மனசாட்சிக்கு பொருந்துமா என்பதை நீங்கள் சிந்தித்து பாருங்கள். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சட்ட சபையில் ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் அங்கத்தினராக இருந்ததை நான் அறிவேன். சென்ற சட்டசபை கூட்டங்களில், கவர்னர் மாளிகையிலுள்ள சட்ட சபையில், எதிர் பக்கத்தில் அவர் நிறைய விபூதி இட்டுக்கொண்டு சிவப்பழமாக இருப்பார். இந்தப் பக்கத்தில் நான் நாமம் போட்டுக்கொண்டிருப்பேன்; எங்கள். இரண்டு பேரால் தான் ஹிந்து மத ஐதீகம் நிலை நாட்டப்படுவது போல் இருக்கும். சிதம்பரத்திற்கு அவர் அடிக்கடி வந்து பிரசங்கம் பண்ணுவார். அங்கே கும்பாபிஷேகம் நடந்தபோது நானும் அவரும் பிரசங்கம் பண்ணினோம். நாங்கள் இரண்டு பேரும் வித்வான்கள் தான். ஆனால் அவர் யோக்கியராக இல்லாமல் இருந்திருக்கிறார். நைந்துபோகும்படி அடிப்பவர்களை ஞானிகள் என்று சொல்ல முடியாது. சிலர் சில சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட காரியங்கள் செய்தால் அவர்களை வீராதிவீரர்கள் என்று சொல்லலாம். வீரன் என்றால் தன்னை எதிர்ப்பவர்களை எதிர்க்க வேண்டும். ஆனால் ஏழை ஹரிஜனங்களையும் ஏழைப் பெண்களையும் கொல்லலாமா ? அப்படிப்பட்ட காரியங்கள் செய்பவர்களுக்கு தக்க தண்டனை கொடுக்கவேண்டும். ஒருவன் கொலை செய்தால் அவனை தூக்கிலிடுவது வழக்கம். ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் செய்துள்ள பெரும் பிழைக்கு அவரை எந்தத் தூக்கில் போடுவது ? இதுபற்றி யார் வாயிலிருந்தும் வார்த்தை வரவில்லை ? சர்க்கார் கொஞ்சம்கூடப் பார்க்காமல் அவரைத் தூக்கிலிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப் பட்டவர்களை சி.ஐ.டி. மூலமாகப் பிடித்து தண்டிக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், "இந்த நாட்டில் அரசாங்கம் இருக்கிறதா ?" என்று சிலர் சொல்வதை நாங்களும் சொல்லும்படி நேரிடும். ஆகையால் அரசாங்கம் அவரை தகுந்தபடி தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பசுமலைக்குப் பக்கத்தில் உள்ள சின்னமடை என்ற ஊரில் போன மாதம் 6-ம் தேதி 9-மணிக்கு ஏழு பேர்கள் வந்து, ஒரு வாத்தியாரையும் அவருடைய மக்கள் இரண்டு பேர்களையும் வெட்டு வெட்டு என்று வெட்டியிருக்கிறார்கள். அவர் கையெடுத்துக் கும்பிட்டு ஒன்றும் செய்யவேண்டாம் என்று சொல்லியும் அவர்கள் இப்படிச் செய்திருக்கிறார்கள். வீராம்பல் சம்பவத்தை எடுத்துக்கொள்வோம். கோவிலுக்குள் அடைக்கலம் புகுந்தவர்களைக் கொன்றார்கள் என்றால், அதைவிடக் கொடுமையானது வேறு உண்டா ? நான் கனம் போலீஸ் மந்திரி அவர்கள் சொன்ன விஷயங்களை ஒத்துக்கொள்கிறேன். அங்கே போலீஸ் இருப்பதால் தான் அமைதி நிலவுகிறது. போலீஸ் இருப்பதால் தான் எங்கள் பள்ளிக்கூடத்தில் உள்ளவர்கள் அமைதியாக இருக்க முடிகிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் உள்ளவர்கள் "இங்கே பயம் அதிகமாக இருக்கிறது. போலீஸ் இருப்பதால் தான் நாங்கள் அமைதியுடன் இருக்கிறோம்" என்று எனக்கு எழுதியிருக்கிறார்கள். அத்துடன், தங்களை கலகக்காரர்கள் எதிர்த்து தாக்க வந்த போது, தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போலீசார் சுட்டது நியாயம்தான். அப்படி அவர்கள் சுட்டது தவறு என்று சொல்வது தவறு. போலீசார் தங்கள் உயிரை அப்படிக் காப்பாற்றிக் கொள்ளாவிட்டால் வேறு யாரைத்தான் காப்பாற்ற முடியும் ? இதைப் பிரமாதப்படுத்தி சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருப்பது தவறு. மேலும், ஸ்ரீ சசிவர்ணத் தேவர் அவர்கள் உண்மைகளை மறைத்து மறைத்துப் பேசினார்கள். சமாதானக் கூட்டத்திற்கு ஸ்ரீ எமானுவேல் வந்திருந்த போது அவரை ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் ஒரு கேள்வி கேட்டார். "இங்கே ஹரிஜனங்கள் எல்லோரும் மறவர்கள் மீது போட்டுள்ள வழக்குகளை வாபஸ் வாங்கினாலொழிய நான் சமாதானத்திற்கு வர முடியாது" என்று ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் சொன்னார். அப்போது "அப்படியானால் மறவர்கள் எல்லோரும் ஹரிஜனங்கள் மீது போட்டிருக்கும் வழக்குகளை வாபஸ் வாங்கி நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும்" என்று ஸ்ரீ எமானுவேல் கூறினார். உடனே ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் ஸ்ரீ எமானுவேலை

"பள்ளப்பயலே" என்றும், மற்ற வார்த்தைகளையும் சொல்லி "உன்னைப் பார்த்துக்கொள்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். மறுநாள் ஸ்ரீ எமானுவேல் கொலையுண்டார். ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் யாரையாவது ஒரு கருவு கருவினால் அவர்களுடைய தலை போய்விடும். அபிராமத்தில் முஸ்லீம்களுக்கும் மறவர்களுக்கும் கலகம் ஏற்பட்டு விசாரணை நடந்தபோது உத்திரகோசமங்கை ஜட்ஜ் ஸ்ரீ பெரியண்ணத் தேவரை "நீ சொல்வது தப்பு, உன் கையை வாங்கிவிடுகிறேன்" என்று அவர்கள் சொன்னார்கள். மறுநாள் அந்த ஜட்ஜே கொலையுண்டார். அங்கே அதிகாரிகளும் ஒன்றும் செய்யமுடியாது. யாராவது அங்கே பஞ்சாயத்து செய்துவைப்பதற்குச் சென்றால், நல்லபடியாக அவர்களுடன் பேசிவிட்டு முடிவில் அவர்களைக் கொலைசெய்து விடுவார்கள். வீரம்பலில் எப்படிப்பட்ட அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன ? அங்கே இரண்டு ஹரிஜனப் பையன்கள் தாங்கள் முஸ்லீம் மதத்தில் சேரவேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். உடனே அவர்களுடைய ஸெக்ரடரியையும். பிரஸிடெண்டையும் கொலை செய்துவிட்டார்கள். ஆகையால் அங்கே கொலைகள்தான் பிரதானமாக இருந்தனவேயொழிய யாரையாவது அவர்கள் காப்பாற்றினார்கள் என்பது கிடையாது. "ஹரிஜனங்களுக்குக் கெடுதல் செய்யக் கூடாது. அப்படிக் கெடுதல் செய்தால் என் இரத்தத்தைத் குடித்தது போல் ஆகும்" என்று ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் சொன்னதாகச் சொல்லப்பட்டது. அப்படி அவர் சொன்னது உண்மையானால் இந்த சம்பவங்களுக்குக் காரணம் என்ன ? ஸ்ரீ சசிவர்ணத் தேவராவது ஸ்ரீ மூக்கையத் தேவராவது "யாரும் கலகம் செய்யக்கூடாது" என்று பிரசாரம் செய்திருந்தால் இந்தக் கொலை செய்யும் சம்பவங்கள் நிகழ்ந்திருக்குமா ? ஆகவே இவர்கள் எல்லோரும் அந்தக் கொலை சம்பவங்களில் சம்மந்தப்பட்டவர்கள் என்று நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். சர்க்கார், ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரை, அவர் செய்த குற்றத்தை உணரும்படி செய்யவேண்டும். விசாரணை செய்து தண்டிக்கபட வேண்டியவர்களைத் தகுந்தபடி தண்டிக்க வேண்டும். ஆகையால் சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை சரியானது என்பதை. . . .

**Sri N. K. PALANISAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை. தற்சமயம் பேசிக் கொண்டிருக்கும் கனம் அங்கத்தினர் அவர்களும், ஸ்ரீ மூக்கையத் தேவர் அவர்களும் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது எப்படி என்று அவர்களைக் கேட்கின்றேன்.

**Sri SAMI SAHAJANANDA** : ஸ்ரீ சசிவர்ணத் தேவரும் ஸ்ரீ மூக்கையத் தேவரும் "யாரும் கலகம் செய்யக்கூடாது, மற்றவர்களுக்குத் தீங்கிழைக்கக்கூடாது" என்று பிரசாரம் செய்திருந்தால் ஜனங்கள் தவறு செய்யாமல் இருந்திருப்பார்கள். அவர்கள் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் ஆனதால் அவர்கள் சொல்வதை அந்தப் பகுதி மக்கள் மீறமாட்டார்கள். அவர்கள் அப்படிப் பிரசாரம் செய்யாததால் இந்த சம்பவங்கள் நிகழ்ந்தன என்பதால் அவ்விதம் சொன்னேன்.

**Sri K. ANBAZHAGAN**: கனம் தலைவர் அவர்களே, பொறுப்புள்ள உறுப்பினர்களாக இருப்பவர்கள் தங்களுடைய கடமையைச் செய்யாத காரணத்தால் தான்—தாங்கள் சொல்லவேண்டிய வார்த்தையைச் சொல்லாமலிருந்த காரணத்தால் தான்—இந்தப் படுகொலை நடந்திருக்கிறது என்று குறிப்பிடுவதானது, சட்டசபை உறுப்பினர்களின் கண்ணியத்தைக் குறைபடுத்துவதாக இருக்குமானால், அது சட்ட சபை ஒழுங்குக்கு உட்பட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.

**DEPUTY SPEAKER** : The hon. Member should not make a personal charge against any member. If he has made such a charge, he should withdraw it.





**Sri K. ANBAZHAGAN** : கனம் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். அவர் குறிப்பிட்டுப் பேசிய வார்த்தைகளை வாபஸ் பெறுவது தான் சட்டமன்ற விதிகளுக்கு உட்பட்டது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**Sri SAMI SAHAJANANDA** : கனம் சபாநாயகர் அவர்களே, தர்க்க சாஸ்திர முறைப்படி, அவர்கள் பேசாமலிருந்ததால் கொலை தடுக்கப்படவில்லை ; ஆகவே அவர்கள் கொலைக்கு காரணமாக இருந்தார்கள் என்று தர்க்க சாஸ்திர முறைப்படி ஆகிறது. அவர்கள் பேசித் தடுத்திருந்தால் அந்தக் கொலையே நடந்திருக்காது. ஆகையால் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை நான் ஆமோதிக்கிறேன்.

**Sri P. K. MOOKIAH THEVAR** : கனம் சபாநாயகர் அவர்களே, முதுகுளத்தூரில் கலவரம் நடந்தது. நான் அந்தத் தொகுதியுடன் சம்பந்தப்பட்டவன் அல்ல. அங்கே நான் போய் பிரசாரம் செய்து கலவரங்களை நிறுத்தக்கூடியதாக அங்கே நிலைமை இல்லை. மேலும், ஸ்ரீ தேவர் அவர்களும் அங்கே சொன்னார்கள். அவர்கள் சொல்லியும் அந்த ஜனங்கள் கேட்பவர்களாக இல்லை. ஆகவே இந்த மாதிரியான காரியங்கள் அங்கே நடந்தன. "ஸ்ரீ தேவர் அவர்கள் சொல்லியிருந்தால் அந்த ஜனங்கள் கேட்டிருப்பார்கள். அவர்கள் சொல்லாததால் அந்த ஜனங்கள் கொலைக் குற்றம் செய்தார்கள்" என்று சொல்லி ஸ்ரீ தேவர் அவர்கள் மீது குற்றம் சாட்டுவதையும், ஒவ்வொருவர் மீதும் . . . .

**DEPUTY SPEAKER** : கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஸ்வாமி ஸகஜானந்தா அவர்களுக்கு அந்த மாதிரி அபிப்பிராயம் இல்லை : அவர்கள் அப்படிச் சொல்லவில்லை.

**Sri N. K. PALANISAMI** : கனம் சபாநாயகர் அவர்களே ஒரு ஒழுங்குப் பிரச்னை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஸ்வாமி ஸகஜானந்தா அவர்கள் ஒரு கனம் அங்கத்தினர் இன்ன கொலையில் சம்மந்தப்பட்டிருக்கிறார் என்று சொன்னார்கள். . .

**DEPUTY SPEAKER** : அவர் அப்படிச் சொல்லவில்லை.

The hon. Member Sahajananda has not said like that.

**Sri K. VINAYAKAM** : ஒரு அங்கத்தினர் பேசிக்கொண்டிருக்கும் நேரத்திலே "பாயிண்டு ஆப் ஆர்டர்" என்று வேண்டுமென்று சொல்லி "டாயிண்டு ஆப் டிஸ்ஆர்டர்" உண்டாக்குவதிலிருந்து ஏதாவது protection உண்டா ?

**DEPUTY SPEAKER** : கனம் விநாயகம் "டிஸ்ஆர்டர்" செய்தாரே தவிர "பாயிண்டு ஆப் ஆர்டர்" இல்லை.

**Sri A. A. RASHEED** : How can there be a point of order on a point of order.

**DEPUTY SPEAKER** : There can be no point of order on a point of order.

**Sri T. S. RAMASWAMY PILLAI** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஏறக்குறைய 17 வருஷங்களாக பொது வாழ்விலே நான் ஈடுபட்டிருக்கிறேன். இரண்டு முறை சட்டசபையிலே நான் அங்கத்தினராக இருந்திருக்கிறேன். இது மூன்றாவது முறை. இதற்கு முன்னால் ஒரு துப்பாக்கி பிரயோகத்தைக் குறித்து ஒரு நம்பிக்கையில்லா தீர்மானத்தை நானே கொண்டுவந்து ஒரு அரசாங்கத்தை வெளியேற்றிய எனக்கு இந்தத் தீர்மானத்தைப் பொறுத்த அளவிலே அதிலே இன்றைய கட்டத்திலே மிகவும் சிக்கலான முறையிலே இருக்கிறது என்பதை நான் மிக்வும் தெளிவாகக்

கூற விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் இன்றையதினம் நம்மை எதிர் நோக்கிக்கொண்டிருக்கிற பிரச்னை இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் மட்டுமல்ல. நாம் பொது வாழ்விலே பலாத்காரமும் ஜாதி துவேஷமும் தாண்டவமாடுவதைத்தான் பார்க்கிறோம். இந்தப் பிரச்னையை கட்சி வித்தியாசமின்றி, ஜாதி வித்தியாசமின்றி, மத வித்தியாசமின்றி எல்லோரும் நல்ல எண்ணத்தோடு அணுகவில்லை என்றால் பிரயோஜனமில்லை. பலாத்காரத்தினாலும், துவேஷத்தினாலும் ஒரு நல்ல சமூக வாழ்க்கையை சிருஷ்டித்துவிட முடியாது. அத்தகைய ஒரு அபாயகரமான நிலைமையில் நாம் இப்பொழுது இருக்கிறோம். முன்பெல்லாம் பஞ்சாப், நவகாளி சம்பவங்கள் போது, தமிழ் நாட்டிலே நாம் ஜாதி துவேஷம் மதத் துவேஷமில்லாமல் ஒற்றுமையாக இருக்கிறோம் என்று பெருமைப்பட்டோம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பண்பாட்டில் வளர்ந்த நாம் இப்பொழுது தென் நாட்டிலே ஜாதி துவேஷமும் பலாத்காரமும் ஓங்கிவளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். குறுகிய கட்சி மனப்பான்மையை விட்டுவிட்டு உயர்ந்த நிலையில் நின்று இந்தப் பிரச்னையை அணுகவேண்டும். ஹரிஜனமாகப் பிறந்தாலும் சரி, அல்லது மறவராகப் பிறந்தாலும் சரி நாம் எல்லோரும் இந்தியர்கள் என்று நினைக்கவேண்டும். கண்ணோட்டம் குறுகிய ஓட்டமாக இருக்கக்கூடாது. மனத்தெளிவு இருக்கவேண்டும். ஹரிஜனத் தோழர் கொலை செய்யப்பட்டாலும் சரி, மறவர் தோழர் கொலை செய்யப்பட்டாலும் சரி, கொலை செய்வது நிச்சயமாக தவறானது. அதை எல்லாக் கட்சியினரும் சேர்ந்து பயமின்றி நிறுத்தியாகவேண்டும். அதுபோலவே கலவரங்கள் நடக்கும்பொழுது, பெரிய புரட்சிகள் நடக்கும்பொழுது காந்திஜி அவர்கள் ஜாதி துவேஷம், மத துவேஷத்தைப்பற்றி "generalisation" கூடாது என்று சொல்லியிருக்கிறார். "Generalisation is always dangerous" என்று சொல்லியிருக்கிறார். அதாவது நாடார் ஜாதியிலோ, மறவர் ஜாதியிலோ, ஹரிஜன ஜாதியிலோ யாராவது கொலை செய்தால், அந்த வகுப்பினரே கொலைபாதகர்கள் என்று சொல்லுவது நிச்சயமாக பகுத்தறிவுக்கும் விவேகத்திற்கும் புறம்பானது என்று மிகவும் பணிவுடன் கூறிக்கொள்ளுகிறேன். அம்மாதிரி செய்தால் மனித சமூகத்திலேயே ஒருவருக்கொருவர் சந்தேகம், துவேஷம், விரோதம் வளர்ந்துவிடும். அதன் காரணமாகத்தான் "Generalisation" கூடாது என்று சொன்னார் காந்திஜி அவர்கள். ஹரிஜனத் தோழர் கொல்லப்பட்டு விட்டால் அதுபற்றி நாம் சந்தோஷப்பட்டுவிட முடியுமா? அல்லது ஒரு மறவர் தோழர் கொல்லப்பட்டு விட்டால் அதுபற்றி சந்தோஷப்பட்டுவிட முடியுமா? அது தவறு. "Generalisation" எப்பொழுதும் ஆபத்து. பொதுப்படையாக பேசுவது எப்பொழுதும் ஆபத்து. பலாத்காரத்தினாலோ அல்லது வெறுப்பு உணர்ச்சியினாலோ நம்முடைய பிரச்னைகளை தீர்த்துவிட முடியாது. அஹிம்ஸை முறையில் தான் நிச்சயமாக ஜனநாயகம் வளர முடியும். சில கட்சியினர்கள் அரசியலிலே பலாத்காரத்தை புகுத்துகிறார்கள். அதிலே "பொலிடிகல் கன்விக்ஷன்" இருக்கிறது. ஜனநாயகம் இருக்கும் வரையிலே அஹிம்ஸை முறையிலே தான் ஜனநாயகத்தை மாற்ற முடியுமே தவிர, பலாத்காரத்தினால் மாற்றிவிட முடியாது. இன்றையதினம் சென்னை ராஜ்யத்திலே நாம் என்ன பார்க்கிறோம், சபாநாயகர் அவர்களே? பலாத்காரமும் ஜாதி துவேஷமும் தேர்தல் காலத்திலும் சரி, இப்பொழுதும் சரி வளர்ந்துகொண்டு வருகின்றன. காரணம் இல்லாமல் ஜாதி துவேஷத்தை வளர்க்கிறார்கள் அரசியல் நோக்கத்திற்காக. அரசியல் திட்டங்களையோ கொள்கைகளையோ எடுத்துக்கூறி புரியவைப்பது கஷ்டம் என்றால் மிகவும் லெகுவாக ஜாதியை இளக்கிவிட்டு விடுகிறார்கள். சுதந்திரப் போராட்டம் நடந்த காலத்திலே, 1942 புரட்சி காலத்திலே ராமநாதபுரம் ஜில்லாவில் சாத்தூர், முதுகுளத்தூர் முதலிய இடங்கள் முக்கியமான பங்கு வகித்தன. சுதந்தரம் பெற்ற பிறகு அந்தப் பிரதேசத்திலே இன்றைய தினம் 1,000 வீடுகள் தீக்கு இரையாகி இருக்கின்றன. பல மக்கள் பலாத்காரத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள் என்றால் அதைப் பற்றி நாம் எல்லோரும் வெட்கப்படவேண்டும். என்ன காரணம் இருந்தபோதிலும் சரி, அதற்கு நிச்சயமாக நாம் எல்லோரும் பொறுப்பாளி என்று சொல்லுகிறேன். அதுபோலவே நாம் தூத்துக்குடியில்



வாரத்துக்கு வாரம் அத்தகைய கொலைகள் **(political murders)** நடந்து கொண்டிருக்கின்றன. இன்றையதினம் பெரியார் ராமசுவாமி நாயகர் அவர்கள் பலாத்காரத்தைத் தூண்டும் முறையில் பல பிரசங்கங்களைச் செய்திருக்கிறார்கள். என்ன கூறினார்கள் என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். இதோ கொண்டுவந்திருக்கிறேன். அவர் கூறியது திராவிடக் கழகப் பத்திரிகையாகிய விடுதலையில் வெளிவந்திருக்கிறது. ஜாதியையே ஒழிக்க வேண்டுமென்றால் ஒரு வகுப்பினரையே ஒழித்துவிட வேண்டும். காந்திப் படத்தைக் கொளுத்தவேண்டும். அரசியல் சட்டத்தையே கொளுத்த வேண்டும். கத்தியை எடுத்துக்கொண்டு ஒரு ஜாதிக்காரரையே கொல்ல வேண்டுமென்ற அளவுக்கு பலாத்காரத்தை தூண்டக்கூடிய பிரசங்கங்களை அவர் செய்திருக்கிறார். அவர் வயதில் முதிர்ந்தவர். அவரே இப்படிச் சொல்லுகிறார் என்றால் ஏதோ கோளாறு இருக்கத்தான் இருக்க வேண்டும். ஆதலால் அவரை உடனே பிடித்து ஜெயிலிலே போட வேண்டுமென்று சொல்லவில்லை. எந்த முறையிலே பரிகாரம் செய்ய வேண்டுமோ அந்த முறையிலே செய்ய வேண்டுமென்று சொல்லுகிறேன். பலாத்காரம் நடப்பதற்கு முன்னாலேயே வரும் முன் காப்பானாக இருக்க வேண்டும். நம்முடைய அறிஞர் அண்ணா நேற்றைய தினம் வெகு அழகாகக் கூறினார்கள் வந்த பின் காப்பதை விட வருமுன் காப்பானாக இருக்க வேண்டுமென்று. இத்தகைய சூழ்நிலைகளை நாம் அறிந்து கொள்ளவேண்டும். சர்க்கார் தரப்பினருடைய பேச்சுகளை கேட்டோம். எதிர் தரப்பினரின் பேச்சுகளையும் கேட்டோம். ராமநாதபுரம் ஜில்லாவில் நடந்த சம்பவங்களை நாம் சென்னையில் இருந்துகொண்டு சர்ச்சை பண்ணுகிறோம். நம்முடைய வாக்கு வன்மையினாலே தீர்க்கப்பட வேண்டிய விஷயம் அல்ல இது. அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த, அல்லது அங்கு சென்ற பலர் உண்மையைச் சொல்லலாம். என்னுடைய மதிப்பிற்குரிய சசிவர்ணத் தேவர், மூக்கைய தேவர், டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன் இவர்கள் சொல்வதைக் கேட்டோம். ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொள்கிறோம். இப்படிச் சாட்டிக் கொள்வதற்கு அவசியமே கிடையாது. நான் எந்த சாதிக்கும் பரிந்து கொண்டு பேசவில்லை. இந்த சாதி, அந்த சாதி என்பது இல்லாமல் எல்லா ஜாதிகளுக்கும் பொதுவான ஒரு தொண்டன் என்கிற முறையில் தான் பேசுகின்றேன். பலர் அரசாங்கத்தின் மீது பெரிய பெரிய குற்றங்களைச் சுமத்தியிருக்கிறார்கள். அரசாங்கத் தரப்பில் இருந்து அவர்கள் மீது பலவிதமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகிறது. இதில் உண்மை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள நாம் பேசுகின்ற பேச்சுக்களினால் முடியாது. முறையான விசாரணை ஒன்றுக்கு ஏற்பாடு செய்தால் தான் அது சாத்தியமாகும். அரசாங்கத்தரப்பில் சொல்கிறபடி இவர்கள் மிகத் தவறுதலான காரியங்களைச் செய்தார்கள் என நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கட்டும். முத்துராமலிங்க தேவரைத் தடுப்புக்காவல் குற்றத்தின் கீழ் சிறையில் வைக்கவேண்டாம். அவர் செய்திருக்கும்படியான குற்றத்திற்கு ஏற்ற கடுமையான தண்டனையைக் கொடுக்கலாம். யார் யார் குற்றம் செய்தார்களோ அவர்களுக்குத் தண்டனையை வழங்கலாம். தென்னாட்டு மக்கள் எல்லாம் வெட்கித் தலைகுனியும்படியான சம்பவம் இப்போது நடந்திருக்கிறது. சர்க்காரின் பேரில் குற்றம் இல்லையென்றால் குற்றம் உள்ளவர்கள் யார் என்பதை விசாரித்துத் தண்டனை அளிக்க இந்த வழக்கை ஏன் உயர் நீதி மன்றத்திற்கு அனுப்பக்கூடாது?

மூன்று நான்கு வருஷத்திற்கு முன்னால் கன்னியாகுமரி ஜில்லாவில் பட்டம்தாணு பிள்ளை காலத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இப்போது நடந்தது போன்றது அல்ல. அவர்கள் கூட்டத்தைப் பார்த்தே தான் சுட்டார்கள். ஐந்து பேர்களை தனியாகக் கட்டிவைத்து சுட்டார்கள், தனியாக அழைத்துக்கொண்டுபோய் சுட்டார்கள் என்கிறமாதிரி இல்லை. கூட்டத்தைப் பார்த்துத்தான் சுட்டார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. அப்போதும் அவர்கள் அப்படித்தான் இதைப்பற்றி கோர்ட்டு விசாரணை என்பது அவசியம் இல்லை, அதிகாரியைக் கொண்டு விசாரித்துவிட்டோம் எனச் சொன்னார்கள். சுட்டதற்குக் காரணமும் மலையாளிகளைத் தமிழர்கள் துன்புறுத்தினார்கள் என்றுதான் சொன்னார்கள். இப்போது போலவே.

ஆனால் சட்டப்படி அது விசாரணை செய்யப்படவேண்டும் என்பதாக ஜனங்களுடைய குரலும், கட்சியின் குரலும் வந்தவுடன் பின்னால் ஒரு உயர்மன்ற நீதிபதியின் தீர்ப்புக்கு விட்டார்கள். யார் செய்தது தவறு என்பது இருக்கட்டும். அப்போதும் பட்டம்தாணு பிள்ளை போலீசார் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத்தான் சுட்டார்கள், அவர்கள் செய்தது சரி என்றார்கள்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்வது என்றால் சில முறை வேண்டும். பிரிட்டிஷ் காலத்தில் ஆடுமாடுகளைப் போல, ஈ, கொசுக்களைப்போல சுட்டுக் கொன்றார்கள். இப்போது அப்படி இல்லை. தற்காப்புக்காகச் சுடுவது என்றாலும் சுடுவதற்கு முன் கண்ணீர் புகை உபயோகப்படுத்தியிருக்கவேண்டும். வார்னிங் கொடுத்திருக்கவேண்டும். இப்படி துப்பாக்கிப்பிரயோகம் பண்ணுவது என்றால் சில கட்டுப்பாடு முறை இருக்கவேண்டும். இங்கோ ஐந்து பேர்களை, இரண்டுபேர்களை கூட்டத்தில் கூடச் சுடவில்லை. தனியாகச் சுட்டிருக்கிறார்கள் என்பது குற்றச்சாட்டு. சர்க்கார் பேரில் தவறு இல்லை என்றால் இதை நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பி, உண்மையான குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனையைக் கொடுப்பதற்கு சர்க்கார் ஏன் தயங்க வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் சந்தேகப்பட்டுக்கொண்டு இருக்க வேண்டாம். சந்தேகம்தான் துவேஷத்திற்கே காரணம். குற்றம் யாருடையது என்கிற சந்தேகம் இதில் இல்லாதிருக்கும்படி செய்ய நீதிமன்ற விசாரணைக்கு சர்க்கார் ஒத்துக்கொண்டுவிட்டால், ஜூடிஷியல் என்க்வயரிக்கு ஒத்துக்கொண்டுவிட்டால் எதிர்கட்சிக்காரர்கள் கூட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை வற்புறுத்தமாட்டார்கள் என்று நினைக்கிறேன். சந்தேகத்தை நிவர்த்திக்க ஏற்பாடு செய்யாவிட்டால் துவேஷம் வளர்வதைத் தவிர்க்க முடியாது. (**Mr. Speaker in the Chair.**) பினிக் என்ற கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. மனிதவர்க்கமாக இருந்தாலும் சரி, உயிருள்ள பிராணிகளாக இருந்தாலும் சரி சந்தேகம் வளர்ந்துவிட்டால் துவேஷம், மனக்கசப்பு எல்லாம் வளர்ந்து விடும், எனச் சொல்கிறது.

ஆகவேதான் சந்தேகம், மனக்கசப்பு எல்லாம் வளர்வதற்கு முன்பாக ஒரு ஜூடிஷியல் என்க்வயரிக்கு இந்தச் சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

3.15 p.m. ***Sri N. R. THIYAGARAJAN**: கனம் சபாநாயகர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்த நம்பிக்கை இல்லாப் பிரேரபணையை ஆணித்தரமாக எதிர்க்கிறேன். வெங்கடேசுவரன் சாட்சியாக இந்த சர்க்காரின்மீது எனக்குள்ள உறுதியான நம்பிக்கையை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீ கல்யாணசுந்தரம் நல்லவர், நானும் அவரும் ஒரே சிறையில் இருந்திருக்கிறோம். ரஷியாவுக்கு சென்று குஷியாக வந்தார். பின்னர் ருமேனியாவுக்குச் சென்றார், அங்கு அவருக்கு நிமோனியா வந்துவிட்டது பாவம்! பிறகு அவர் பேச்சு, குரல் யாவும் அடியோடு மாறிவிட்டது. அதற்காக நான் வருந்துகிறேன். நோயாளிகள் பேசுவதுபற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் பிதற்றல்பற்றி நான் அதிகம் கூறத்தேவையில்லை. அத்தகைய நிலையில் இந்தப் பிரேரபணையை கொண்டுவந்துள்ளார்.

ஸ்ரீ சசிவர்ண தேவர் அந்த வட்டாரத்தைச் சேர்ந்தவர். 'மெயில்' பத்திரிகை கூறியதுபோல, முத்துராமலிங்க தேவரின் லெப்டினண்ட் என்று கூறலாம், அவர் இரண்டரை மணியும் பேசுவார், ஏழரை மணியும் பேசுவார், ஏதுவேண்டுமென்றாலும் பேசுவார். ஆனால் கலியாணசுந்தரம் நிலையைப் பார்க்கும்போது பரிதாபப்படுகிறேன், பச்சாத்தாபப்படுகிறேன். இத்தகைய ஒரு தீர்மானத்தை இவர் கொண்டுவந்தது, ருமேனியா அருகில் உள்ள ஹங்கேரி, போலந்து நாடுகளின் அடக்குமுறை சம்பவங்களைக்கண்டு மனம் கலங்கி அங்குபோல் இங்கும் நடந்து விட்டதே என ஏங்கி இந்த தீர்மானத்தை கொண்டுவந்திருப்பார் என எண்ணுகிறேன். முத்துராமலிங்க தேவர் என்னும் பிரபல தலைவர் பேச்சை கேளுங்கள்—வரும் அக்டோபர்



28உ-யன்று யாம் செந்திலாண்டவருடன் சேவற்கொடியேற்றி வேல் கைப்பிடித்து மயிலாசனத்தில் வானத்தில் தரிசனம் கொடுப்போம். அப்பொழுது சென்னை செண்ட் ஜார்ஜ் கோட்டையில் குண்டுவீசி காமராஜரைக் கைது செய்வோம் பின்னர் டில்லி செங்கோட்டையில் குண்டுவீசி நேருவைக் கைது செய்வோம் என்று சில மாதங்களாகப் பேசி வந்தார். செண்ட் ஜார்ஜ் கோட்டையில் குண்டுவீசி தாக்கும் நன்னாளில் அவருக்கு நல்ல பிள்ளையாக ஆகிவிட எண்ணியே ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் இந்த தீர்மானத்தை கொண்டுவந்தாரோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. உங்களுக்கு சிரிப்பாக இருக்கிறது. எங்கள் பகுதியில் அதாவது பாண்டிய நாட்டில் ஸ்ரீ தேவரின் பிரசங்கங்களைக் கேட்டுக்கேட்டு ரொம்ப சீரியசாகத்தான் மக்கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டனர்.

திடீர் திடீர் என்று மேடைமீது தோன்றுவார். இதோ 50 லக்ஷம்பேர் கொண்ட படையுடன் நேதாஜி வருகிறார் என்பார், திபேத்தில் என்பார், மற்றொரு நாள் நேபாலில் என்பார் பின்னர் சிங்கியாங்கில் என்பார், மடியில் அணுகுண்டு இருக்கிறது ஜாக்கிரதை யென்பார் ஓட்டு இல்லையேல் வேட்டு என்பார், கொரியா யுத்தத்தில் வெற்றிகண்டு இப்பொழுதுதான் வருகிறேன் என கொக்கரிப்பார், இதையெல்லாம் கேட்ட பாமர மக்கள் இவர் டில்லி செங்கோட்டையை தாக்குவேன் என்கிறார், நேருவைக் கைது செய்வேன் என்கிறார் அரசாங்கம் இவரை ஒன்றும் செய்யவில்லையே என எண்ணி ஏமாந்து தேவர் கூறுவது யாவும் உண்மையோ என இவரைப் பின் தொடர ஆரம்பித்தனர். உன் நண்பன் யார்? என்று கூறு உன்னைப் பற்றிக் கூறுகிறேன், என ஒரு பழமொழி உண்டு சசிவர்ணம் பேசும் பொழுது அமைச்சர் கக்கன் அவர்களை நீ பார்த்தாயா? என்றார் போலீஸ்காரர்களை போலீஸ்காரன் என்றார், தேவரின் நண்பர் இப்படியென்றால் இனி தேவரைப்பற்றிக் கூறுவானேன். இவருடைய குருநாதர் பேச்சைக் கேளுங்கள், எனது தலைவர் காமராஜ் மட்டும் கள்ள நோட்டு அடித்ததாகக் கூறவில்லை மதிப்புக்குரிய மதுரைத் தலைவர் என். எம். ஆர். சுப்பராமன் அவர்கள் எவரெஸ்ட் ஹோட்டலில் தங்கி யிருந்ததாகவும் அவரிடமுள்ள நூறு ரூபாய் கள்ள நோட்டு ஒன்றை மாற்றியபொழுது போலீசார் பிடித்துக்கொண்டதாகவும் பின்னர் தேவர் சிபாரிசில் விடுதலையானதாகவும் கூறினார். சென்ற வருடம் மதுரையில் தமிழ் சங்க பொன்விழா நடந்தது. விழாத் தலைவர் அனுமதியின்றியே மேடையில் ஏறினார், ஒலி பெருக்கியைக் கைப்பற்றிக்கொண்டார், முதல் நாள் பேசிய எதிர்கட்சித் தலைவர்களின் ஒருவரை நாக்கில் நரம்பின்றி தேவடியாள் மகன் என்று தாக்கினார். நானும் அந்த எதிர்கட்சி தலைவரை பதினாயிரம் கூட்டங்களில் தாக்கிப் பேசியுள்ளேன், இனியும் பேசுவேன் எனினும் இவ்வளவு மட்டரகமாக என்னால் பேச இயலாது (கரகோஷம்) அதற்கு முன் அருப்புகோட்டை பார்லிமெண்ட் உப தேர்தலிலே "குலமகளல்லாத பொது மகளுக்கா ஓட்டு" எனப் பேசினார். இந்த தேர்தலிலே என்னுடைய தொகுதிக்கு வந்தார். கண்டமநாயக்கனூர் அருகே லக்ஷ்மிபுரத்தில் மறவர்கள் கூட்டமொன்றில், என்னுடன் போட்டியிடும் எதிர்கட்சி அபேக்ஷகரின் தாயாருக்கும் எனக்கும் நட்பு உண்டென்றும் தகப்பனும் மகனுமாக தேர்தலில் கூடிப்பேசி ஓட்டுப்பிரிக்க நினைக்கிறார்கள் ஆதலின் தன் கட்சி அபேக்ஷகருக்கே ஓட்டு செய்யவேண்டுமென்று அபாண்டமாக 65 வயதுள்ள அந்த அன்னையை ஆபாசமாக என்னுடன் இணைத்தார். முத்துராமலிங்க தேவருக்கு மேடையேறிவிட்டால் என்ன பேசுகிறோம் என்பது அவருக்கே தெரியாது. எது வேண்டுமென்றாலும் பேசுவார், மறுநாள் கேட்டால் பதில் கூறமாட்டார், "முக்கூடல் நக்கீரர் கூறினார் தேவர் தன் தொகுதிக்கே போகாமல் ஜெயித்தவர்" என. ஏன்? எனது ஜில்லா திண்டுக்கல் தொகுதியில் ஜெயித்த ஜமால் மொஹிதீனும் நாமினேஷன் தாக்கல் செய்யக்கூட தான் வரவில்லை தேர்தலில் ஓட்டுக் கேட்க திண்டுக்கல்லுக்கே வரவில்லை இன்னும் வரவில்லை நன்றி கூறவும் வரவில்லை சென்னையில் தான் இருக்கிறார். இதைப்போல் இன்னும் எத்தனையோ பேர், எனது தலைவர் காமராஜ், 1946 தேர்தலில் தன் தொகுதிக்கே வரவில்லை. இந்த தேர்தலிலும் நாங்கள்தான் வலுக்கட்டாயமாக தேர்தலுக்கு 2 நாள் முந்தி சாத்தூருக்கு இழுத்துச் சென்றோம், தேவரின் பார்லிமெண்ட்

[Sri N. R. Thiyagarajan] [30th October 1957

தொகுதியான சாத்தூரில் தேர்தலன்று தேவர் என் அருகில் இருந்து ஓட்டுப் பெட்டிகள் சீல் வைப்பதை பார்த்துக்கொண்டிருந்தார் அது மாத்திரமல்ல அவருடைய தொகுதியில் பல கூட்டங்களில் பேசியதற்கு ஆதாரமிருக்கிறது. " ஆதிமூலம் " என்று அலறிய யானைக்கு ஆண்டவன் அபயமளித்ததாக புராணங்களில் படித்திருக்கிறேன். இந்த முக்கூடல் நக்கீரர் ஆதிமூலத்திற்கு அந்த சிறையிலுள்ள செம்மலின் அபயக்குரல் கேட்டுத்தான் இப்படி அங்கலாயத்துக்கொள்கிறாரோ ?

முதுகுளத்தூர் சம்பவங்களுக்கு தேவர் மட்டும் பொறுப்பாளியல்ல, பத்திரிகைகளும் தன் பங்கை செய்துள்ளது. உதாரணமாக ஒரு நாள் யாதொருவிதமான அறிக்கையுமின்றி தேவரின் முழுப்படம் கைகூப்பியபடி ஒரு பத்திரிகையில் போடப்பட்டது. அன்றும் மறுநாளும்தான் ஆயிரக் கணக்கில் வீடுகள் கொளுத்தப்பட்டது, பலர் மாண்டுமடிந்தனர். எந்தப் பத்திரிகையென உங்கள் முகத்தில் கேள்விக்குறி எழுந்தது சாக்ஷாத் தினமணியேதான் இந்த கைங்கர்யம் செய்தது. இன்னும் ஒருவதந்தி உலவுகிறது. ஒரு நாளைக்கு அறிக்கையின்றி தேவர் படம் மட்டும் வரும் அன்றுதான் கலகக்கொடி தூக்கவேண்டுமென திட்டமிட்டிருந்ததாக கூறப்படுகிறது. இந்த தினமணி பத்திரிகைபற்றி 1938-ம் ஆண்டில் முத்துராமலிங்க தேவர் தலைமையில் நடந்த பெரியகுளம் தாலூகா அரசியல் மகாநாட்டில் தேவர் அவர்கள் தினமணிக்கு புளுகுமணி என பட்டம் சூட்டினார், அதுமட்டுமல்ல இந்த புளுகுமணியை யாரும் வாங்கி படிக்க கூடாதென பதினாயிரம்பேர்கொண்ட மகாநாட்டில் தீர்மானம்நிறைவேறியது. திண்டுக்கல் அப்துல் சத்தார் மட்டும் எதிர்த்தார். இதற்கு தகுந்த சாக்ஷியங்களுண்டு. இந்த பத்திரிகையை ஆதாரம் காட்டித்தான் சசிவர்ண தேவர் பேசுகிறார்.

இமானுவல் மரணம்பற்றி விவாதிக்க ஒரு தீர்மானம் அனுப்பியிருந்தேன், அது இங்கேயும் இருட்டடிப்பாகிவிட்டது, சபாநாயகர் அதை மூலையில் ஒதுக்கிவிட்டார் போலும்.

**Mr. SPEAKER :** இல்லை இல்லை. அது **out of order** என உங்களுக்கு எழுதிவிட்டேன்.

* **Sri N. R. THIYAGARAJAN :** அது தக்க சமயத்தில் கிடைத்திருந்தால் பிரஸ்தாபித்திருக்கமாட்டேன், தங்கள் கடிதம் இன்னும் கிடைக்கவில்லை.

இமானுவல் மரணமடைந்த மறுநாள் பரமக்குடி சென்றேன், மாண்ட மாவீரன் மனைவி மிஸஸ் இமானுவலைக்கண்டு ஆறுதல் கூறினேன், பின்னர் அவர் கொலைசெய்யப்பட்ட இடத்திற்கு வந்தேன், அங்கு நான்கு ரோடுகள் சந்திக்கப்படுகிறது. ஒரு பெரிய ஆர்ச் இருக்கிறது. சினிமா தியேட்டர், பஸ் ஸ்டாண்ட் யாவும் அருகில் இருக்கிறது. பட்டப்பகல்போல மின்சார விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும் நேரத்தில் பத்து பதினைந்து பேரால் தாக்கப்பட்டு சாவதானமாக கழுத்தை அறுத்திருக்கிறார்கள், வழியில் போய்கொண்டிருந்தவர்களும், கடைக்காரர்களும் பயந்து நடுங்கி பேசாதிருந்துவிட்டனர், அந்தோ பரிதாபம், மயிர் கூச்சலெடுக்கிறது. எந்த இடத்தில் கொலை நடந்தது ? எனக்கேட்டால் யாரும் கூறுவாரில்லை யாரோ ஒருவர் கண்சாடை காட்டினார் அதன் பின்னர்தான் இடம் கண்டுபிடிக்க முடிந்தது. பகிரங்கமாக கொலை நடந்த இடத்தைக் காட்டினால் தம் தலை போய்விடுமோ என பேடிகள் பயந்து சாகின்றனர். சபாநாயகர் அவர்களே ! முதுகுளத்தூரில் முத்துராமலிங்க தேவருக்கும் அவருடைய கூட்டாளிகளுக்கும் பொது மக்கள் எப்படி பயப்படுகின்றனர் என்பதை உங்கள் மூலம் இந்த சபைக்கு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இத்தகைய பயங்கர மனிதர்பற்றி எனது ஒப்பற்ற தலைவர் காமராஜிடம் பலமுறை கூறியதில், பொதுக்கூட்டத்தில் பேசுவதையெல்லாம் பொருட்படுத்தலாமா ? எனக்கூறி நீயும்தான் மேடையேறினால் வீராவேசமாக எதையும் பேசுகிறாய் எனக் கூறிவிட்டார், ஏதோ இருவருக்கும் உள்ள அதிபால்யத்தொடர்பு காரணமாக காமராஜ் அவர்களுக்கு தேவர்மீது பற்றும் பாசமும் உளதோ என சென்ற மூன்று மாதமாக வெந்து வேதனையுற்று



30th October 1957] [Sri N. R. Thiyagarajan]

மனம் புண்ணாகி சென்ற கால் நூற்றாண்டுக்கு மேலாக எனது தலைவர் காமராஜ் மீதுள்ள பக்தியிலும் விசுவாசத்திலும் மாசுண்டாகி விட்டது எனக்கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சபாநாயகர் அவர்களே, முதுகுளத்தூர் கலவரங்கள் முக்குலத்தோரால் அல்ல, நேதாஜி படையில்தான் செய்யப்பட்டது என்றும் முத்துராமலிங்க தேவரை சிறையிட முடியாது. சிறையிலிருப்பவர் அவரைப்போன்ற வேறொருவர், தேவரை சிறைசெய்ய முடியுமா ? என்றும் கந்தசஷ்டி அன்று வருவார் என்றும் கூறப்படுகிறது. கந்தசஷ்டியான முந்தாநாள் கல்யாணசுந்தரம் இந்த தீர்மானத்தை பிரரேபித்து மேலேபார்த்து பேசிக் கொண்டிருக்கையில் யானும் வானத்தை அண்ணாந்து பார்த்துதொண்ணாந்துபோனேன். தேவரும் செந்திலாண்டவரும் வரவே இல்லை. நேதாஜிக்கும் அவருடைய படைக்கும் முதுகுளத்தூர் கலகங்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதா ? என விசாரித்தறியும்படி சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன், நேதாஜி போஸ் ஹரிஜனங்களை கொன்று குவிக்க தனது படையை அனுப்பமாட்டார் என நிச்சயமாக நம்புகிறேன்.

ஜாதிச்சண்டையல்ல என சசிவர்ணம் கூறினார். ஆண்டையும் அடிமையுமாக வாழ்வதையே கூறினார்போலும் ஏனெனில் தேவர் பண்ணையில் 500 அடிமைகள் இருப்பதை ஒப்புக்கொள்கிறார். சாதிப்பிசாசு சட்டசபையிலும் இருக்கிறதே. மதுரை ஜில்லா பட்டிவீரன்பட்டியில் ஒரு சாதி ஹிந்துப் பெண்ணை ஹரிஜன் கடத்திக்கொண்டு போனதால் 100 ஹரிஜன வீடுகளுக்கு தீவைத்துக் கொளுத்தியதாக கல்யாணசுந்தரம் கூறினார். இது முழுத்தவறு. ஒரு சாதி ஹிந்துப் பெண்ணை ஒரு ஹரிஜன வாலிபன் கூட்டிச்சென்ற செய்தி கேள்விப்பட்ட உடனேயே நான் பட்டிவீரன்பட்டி சென்றேன். அந்த பெண்ணின் தகப்பனார், நகை பணத்துடன் கடத்திச் சென்றதாக போலீசில் புகார் செய்திருந்தார் அதுவும் சமதானம் செய்யப்பட்டுவிட்டது. தீப்பிடித்த 100 வீடுகளுக்கு சர்க்கார் உதவி ரூ. 30 வீதம் பணம் வாங்கிக் கொடுத்தவர் போன்று கல்யாணசுந்தரம் பேசியது அதிசயத்திலும் அதிசயமே.

சபாநாயகர் அவர்களே, கடைசியாக வெங்கிடேசுவரன் சாக்ஷியாக கல்யாணசுந்தரத்தின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கிறேன் (சிரிப்பு). வெங்கிடேசுவரன் என்னும்பொழுது திருப்பதி வெங்கடேசுவரனை நான் குறிக்கவில்லை அவர்பற்றி எனக்குத் தெரியாது. அவர் பக்தர்கள் பக்கம் சாய்ந்தாலும் சாய்வார். ஆனால் ரெவினியு போர்டு மெம்பர் வெங்கடேசுவரன் யாருக்கும் அஞ்சாதவர், நியாயம் தவறாதவர். சென்ற 1942-ல் சிறையிலிருந்தபொழுது அப்பொழுதிருந்த உடை நெருக்கடி. நூல் நெருக்கடியைத் தீர்க்க தக்க நடவடிக்கை எடுத்ததை பத்திரிகைகளில் பார்த்துள்ளேன், பல மில் முதலாளிகள் கவர்னர் ஆர்தர் ஹோப்பையும் அட்வைசர் ஸ்டிராதியையும் சிபாரிசு பிடித்ததில் எதற்கும் மயங்காமல் நீயென்ன ? உன்னை நியமித்த உன் அப்பன் அமெரியே சொன்னாலும் கேட்கமாட்டேன் எனக்கூறியதாக கேள்விப்பட்டேன். அத்தகைய நல்லவர் கூறுவதுதான் உண்மையெனக்கொண்டு சர்க்கார் மீது நம்பிக்கை தெரிவித்து என் சிற்றுரையை முடிக்கிறேன்.

* **Sri T. V. SANNASI :** உதவி தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கை 3-30
யில்லாத் தீர்மானத்தின்மீது படுகொலைக்கு உட்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த p.m.
என் போன்றவன் பேசும்போது கொஞ்சம் பதட்டமாய்தான் போய்விடும். இருந்தாலும், அன்பின் சொரூபமான காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றிவரும் நான் எனது பதட்டத்தை அடக்கிக் கொள்கிறேன். முதுகுளத்தூர் படுகொலை சம்பவங்களைப்பற்றி பலவித பிரச்னைகள் நாட்டில் கிளம்பி இருப்பதோடு யார் யாருக்கு எந்தெந்த துறையில் எந்தளவு அறிவு வளர்ந்திருக்கிறது என்பதை தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்துகொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக, பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அந்தப் பாகங்களில் சுற்றுப் பிரயாணம் செய்த தலைவர்களுடன் கலந்துகொண்டதாக பத்திரிகையில் பார்த்தேன். அவ்வாறு சென்ற பல கட்சிக்காரர்களின் அறிக்கையும் பேச்சும் எப்படி இருக்கிறதென்றால் கொலைக்குற்றம் செய்த ஒருவனின் சொந்தச் செலவில்

வரவழைக்கப்பட்ட ஒரு வக்கீல் கொலை நடந்தயிடத்தையும் பார்வையிட்டு மீண்டும் கோர்ட்டில் எவ்வாறு வாதாடுவாரோ அந்த நிலையில்தான் இருக்கிறது. இம்முறையில்தான் பல கட்சிக்காரர்களும் அங்கு சென்று தங்கள் அபிப்பிராயத்தைக் கொடுத்திருக்கிறார்களே தவிர தாழ்த்தப்பட்ட மக்கள், படும் கஷ்டத்தைப் பற்றியோ, அவர்கள் படுகொலைக் குள்ளானதை பற்றியோ ஒன்றுமே கூறவில்லை. இது எதைக்குறிக்கிறது என்றால், எந்த உயர்ந்த தத்துவத்தை எந்த அழகான மொழியில் அற்புதமாக பேசினாலும்கூட, ஹரிஜனங்களுக்கு ஆதரவு கொடுக்க, தூயமனக் கருணையோடு முன்வந்தாலும்கூட ஜாதி என்று வரும்போது மேல் மேல்தான் கீழ் கீழ்தான் என்ற நிலைமையைத்தான் இது உணர்த்துகிறது. இந்த நிலைமையில் வந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமையைச் சிதைக்கும் ஓர் வாளாகவே நான் கருதுகிறேன். (ஆரவாரம்). பிழை கண்ட இடத்து அரசாங்கத்தின் மீது குறை சொல்வது நியாயமே யானாலும், அதற்கும் ஒரு வரம்பிருக்கிறது. ஒரு சார்பிற்கு பாதகமாகவே பல கட்சிகள் சேர்ந்து குறை சொல்லுமானால் அது ஜாதியின் அடிப்படையில்தான் சொல்லமுடியும். ஜாதியின் அடிப்படையிலே காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டு அரசாங்கத்தை ஏன் குறைகூற வேண்டும் ? மந்திரிகள் மேல்ஜாதியினராயிருந்தும் கீழ்ஜாதியினர் சிலர் கொல்லப்பட்டதற்காக அவர்களுக்கு ஆதரவு காட்டும் இந்த மந்திரி சபையை ஒழித்துக் கட்டவேண்டும் என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு தான் அதை வெளிப்படையாகச் சொல்லாமல் அவ்வெண்ணத்தை நம்பிக்கையில்லாத் தீர்மான வடிவில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நான்கு தினங்களுக்கு முன்பு தாழ்த்தப்பட்ட (காங்கிரஸ்) எம். எல். ஏக்களும் மற்ற கட்சியில் உள்ளவர்களும் சேர்ந்து முதுகுளத்தூர் சம்பவத்தைபற்றி யோசிக்கலாம் என்று கூடிப் பேசும்போது ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட பிரதிநிதியும் தங்கள் ஆண்மையையும், வீரத்தையும் எடுத்துக் காட்டினார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாதகமான இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்தால் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்த நாம் அந்த சமூகத்தைக் காட்டிக்கொடுக்க ஒப்புக்கொள்வது போலாகும். தங்கள் வாழ்க்கை நலனிற்காக, சமூகத்தைக் காட்டிக்கொடுத்த சமூகத் துரோகி என்ற பட்டத்தை நாம் பெறுவோம். ஆகவே இந்தத் தீர்மானத்தை எதிர்த்தே தீரவேண்டும். ஒருக்கால் இந்தத் தீர்மானம் பாசாகுமானால் மந்திரிகள் மட்டுமல்ல நம் சமூகப் பிரதிநிதிகள் அனைவரும் ராஜிநாமா செய்வோம் என்று உறுதியளித்தார்கள். தாழ்த்தப்பட்ட சமூக நலனுக்காகவும் சமத்துவ சகோதரத்துவத்திற்காகவும் இந்த நாட்டில் காந்திஜி மட்டுமல்ல' ஒவ்வொரு கட்சியிலும் உள்ள பண்பாடுடைய அறிஞர் பலர் தியாக சிந்தையுடன் பாடுபட்டு வந்திருப்பதை நான் அறிவேன். ஆகவே, அப்பண்பிற்கு மாறான இத்தீர்மானத்தை எந்தக் கட்சியைச் சார்ந்தவரானாலும் தன்மானம் உள்ள எந்த ஆணோ பெண்ணோ இதற்கு ஆதரவு கொடுப்பதற்கில்லை. வீராம்பலில் உயிருக்குப் பயந்து கோவிலில் அடைக்கலம் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டு இருந்த நூற்றுக்கணக்கான மக்களை மற்றவர்கள் ஜன்னல் வழியாக துப்பாக்கிகளால் சுட்டபோது ஆண்களைக் கீழே போட்டு பெண்களும், குழந்தைகளும் மேலே படுத்து ஆண்களை மறைத்துக்கொண்டார்களாம். அந்தப் பெண்மணிகளின் வீரத்தைப் பாருங்கள். இதனைக் கேட்கும்போதே கண்ணீர் பெருகுகிறது. அந்த உயிர்கொலை மன்றத்தில் நடந்த சம்பவங்களைப்பற்றி சகோதரி திரு. சத்தியவாணிமுத்து அவர்கள் நேற்றையதினம் அவர்களது கருத்தைத் தெரிவித்தார்கள். எந்தக் கட்சியையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. எதையுமே அவர்கள் பொருட்படுத்தவில்லை. நான் தாழ்த்தப்பட்ட மகனுக்குப் பிறந்த தன்மானம் உள்ள ஓர் பெண் என்பதை எடுத்துக் காட்டினார்கள். படுகொலை செய்த அவர்களைத் தண்டிப்பதற்கு ஏற்பாடு செய்ததிற்காக அரசாங்கத்தின்பேரில் கொண்டுவந்திருக்கும் இந்த நம்பிக்கை இல்லா தீர்மானத்தை நேர்மையுடைய யாரும் வரவேற்கமாட்டார்கள். ஆனால், இந்த தீர்மானத்தை ஆதரிப்பதற்கு சிலருக்குக் காரணம் இருக்கிறது. அதிலேதான் அவர்கள் அரசியல் இருக்கிறது. பதவியிழந்து சும்மா இருக்கிற சில பெரிய மனிதர்களிலிருந்து, பணமிருந்தும் உயர்ந்த பதவி கிட்டாது வருந்தும் சில





மனிதர்களிலிருந்து, இந்த சர்க்காருக்கு எதிர்ப்பு தோன்றுகிறது. இவைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்துதான் நமது மதிப்புற்குரிய காமராஜ் நாடார் ஆட்சியை ஒழித்து கட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது, என்பதை நாம் பார்க்கவேண்டும். தான் பிறந்தது முதல் இந்த நாட்டில் இருப்பது வரையிலும் முதல் மந்திரியாக இருக்கவேண்டும் என்று அவருக்கோ அல்லது அவரது குழுவினருக்கோ அவ்வித எண்ணம் இல்லை. எனது மதிப்புக்குரிய சகோதரி சத்தியவாணிமுத்து அவர்கள் மாற்றுகட்சியில் இருந்தாலும்கூட காமராஜ் நாடார் மந்திரிசபை மீது குற்றம் சாட்டினார்கள். அதாவது ஒழுங்கீனமான நிலைமைகள் அங்கிருந்தும், அராஜகமான செயல் நடந்திருந்தும் இதற்கெல்லாம் தூண்டுகோலாயிருந்தவர் என்று கருதப்படுகின்ற தலைவரின்மேல் ஏன் காலாகாலத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை, ஏன் முளையிலே அதனைக் கிள்ளி எறியவில்லை என்று கண்டித்தார். அதற்கு தக்க பதிலையும் போலீஸ் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று மேல்நாட்டிலிருந்து அங்குள்ள அறிவாளிகள் செயற்கை சந்திரனை செய்து உலகத்தில் சுற்ற விடுகிறார்கள். ஆனால் இந்நாட்டிலுள்ள அறிவாளிகள் ஜாதி வெறிக்குட்பட்ட படுபாதகங்களைத்தான் நாட்டில் சுற்றவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, துவேஷம் செய்தது முத்துராமலிங்க தேவர் ஒருவர் தான் என்று சொல்லமுடியாது. இந்த நரபலி யாகத்தை நடத்த பல வேத விற்பன்னர்களும் சேர்ந்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். ஆகவே இதில் முத்துராமலிங்க தேவரைப்பற்றி நாம் குறை சொல்லவில்லை. அவர்கள் பிறந்த பிறப்புக்கும், வளர்ந்த வளர்ப்புக்கும் அவர்கள் செய்வது நியாயம் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஆகவே இவைகள் எல்லாம் அவர்களுடைய வீர பரம்பரைச் சுபாவமே தவிர அவர்கள் மேல் தப்பு ஒன்றுமில்லை. ஆனால் இந்த. கோரப் படுகொலை எண்ணமான தீயை வளர்த்து வரக்கூடிய துர்மந்திரிகளும் இதில் சேர்ந்திருக்கிறார்கள். இவைகளை வளர விட்டு வைக்கக்கூடாது. ஜட்ஜ் மூலம் நீதி விசாரணை செய்யவேண்டியது அவசியம்தான். ஆனால் இதில் இருக்கிற அடிப்படையான சில விஷயங்களை நாம் பார்க்கவேண்டும். ஏதாவது சாட்சியங்கள் சொன்னால் தலை போய்விடுமே என்று உயிருக்கு பயந்துகொண்டிருக்கின்ற மக்களிடத்திலிருந்து எந்த ஜட்ஜ் வந்தாலும் எப்படி சாட்சியங்கள் வாங்குவதற்கு முடியும் என்று கேட்கிறேன். சரியான சாட்சியங்கள் இல்லாமல் போய்விடும். ஆனால் இந்த பிரச்னையை மாத்திரம் வைத்துக்கொண்டு மேலும் சச்சரவுகள் வளர்க்கப்படுகிறது. இதற்கும் பல தலைவர்கள் இருக்கலாம். ஆகவே, இதிலுள்ள குற்றவாளிகளை மாத்திரம் கண்டுபிடித்து சிறையில் அடைத்து விட்டால் மாத்திரம் போதாது. அங்கே இருந்து கொண்டிருக்கின்ற இம்மாதிரியான தீய எண்ணங்களை மாற்றுவதற்காக ஐந்து வருஷ திட்டத்தில் பெரும் பகுதியை செலவிடப்படவேண்டும். நல்ல ஹைஸ்கூல்கள் ஏற்படுத்த வேண்டும், நல்ல சங்கங்களை ஏற்படுத்தவேண்டும், அதற்காக நல்ல வேலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**DR. SRIMATHI SATHIYAVANIMUTHU :** ஸார், **point of information** மன்ற தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் சன்னாசி அவர்கள் நான் ஹரிஜன இனத்திலிருந்து பேசினாலும் நான் என்னுடைய இயக்கத்தின் கொள்கையின் அடிப்படையில் தான் பேசினேன். அதை அவர்கள் ஒப்புக்கொண்டாலும்சரி, இல்லை யென்றாலும் சரி, திராவிட முன்னேற்ற கழகம் எப்பொழுதுமே வகுப்பு வாதத்திற்கு எதிராகத்தான் இருந்து வந்திருக்கிறது. அது மாத்திரமல்ல ; கலவரம் நடந்த பகுதியில் எங்கள் திராவிட முன்னேற்ற கழகம் அந்த பகுதியில் அவ்வளவாக பரவவில்லை. எங்கெல்லாம் திராவிட முன்னேற்ற கழகம் இருக்கின்றதோ அங்கெல்லாம் வகுப்புவாதங்கள் இல்லை, திராவிட முன்னேற்ற கழகம் இல்லாத இடங்களில்தான் வகுப்பு வாதங்கள் அதிகமாக இருந்திருக்கின்றது. ஆகவே. . . .

**MR. SPEAKER :** நீங்கள் சுருக்கமாக சொல்லவேண்டும். அதிக நேரம் பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

[30th October 1957

THE HON. SRI C. SUBRAMANIAM : பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் என்று சொல்லி இவைகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : நான் சொல்ல விரும்புவதெல்லாம் . . . .

SRIMATHI T. N. ANANDANAYAKI : Is it a point of information or a point of personal explanation?

MR. SPEAKER : The hon. Member might have committed a mistake. But I take it as a point of personal explanation.

3-45 p.m. * SRI V. SANKARAN : கனம் சபாநாயகர் அவர்களே, கொலை, கொள்ளை, கொள்ளி வைப்பது, இந்த விஷயங்களைப்பற்றி பேசுவதற்கு எனக்கு விரசமாகவும் அருவருப்பாகவும் இருக்கிறது. இந்த அக்கிரமங்கள், அநியாயங்கள் நிறைந்த குவியலில் ஒருவன் கையைவிட்டு நியாயத்தை எடுத்துக்காட்ட முற்படுவானானால், அது ஒரு அர்த்தமற்ற செய்கையாகும். இருப்பினும்கூட எதிர் கட்சியினர் எல்லோரும் ஒருபுறமாக எடுத்து சொல்லும்போது நானும் அந்த சம்பவ ஸ்தலங்களுக்கு இரண்டு தடவை போய் வந்தமையால் அவர்கள் எடுத்துக்காட்டும் நாணயத்திற்கு மறுபுறமும் இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டாது இருந்துவிட்டேனானால், உண்மையையும் நியாயத்தையும் வெளிப்படுத்துவதில் அக்கரை கொள்ளாதவனாகவும், என் கடமையிலிருந்து தவறியவனாகவும் கருதப்படுவேன் என்ற ஒரே காரணத்தினால், நான் இப்போது பேச முற்பட்டுள்ளேன். எதிர் கட்சியினர் சொல்லுவது, அரசியல் காரணங்களினால் காங்கிரஸ் தூண்டிவிட்டுத்தான் இந்த கலவரம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். அவ்விதமல்ல என்று நான் கூறவிரும்புகிறேன். முதல் தடவையும், பின் தத்தாருடன் இரண்டாம் தடவையும் நான் அங்கு சுற்றுப்பிரயாணம் செய்தபோது பாதிக்கப்பட்ட மறவர்கள் ஒருவராவது காங்கிரஸ்தான் இந்த கலவரத்தை தூண்டி விட்டது என்றோ காங்கிரஸ்காரர்கள்தான் இதற்கு காரணம் என்றோ யாரும் சொல்லவில்லை. அதேசமயத்தில் அங்கே போனபோது பல இடங்களிலும் ஹரிஜனங்கள் புதிய மாற்றமடைந்து காங்கிரசுக்கு ஓட்டுப்போட்டதால்தான் தாங்கள் துன்புறுத்தப்பட்டதாக புகார் கூறினார்கள். உண்மையில் அங்கு காங்கிரஸுக்கு ஆதரவு அதிகரித்துக்கொண்டுதான் வருகிறது. கழிந்த மூன்று தேர்தல்களை எடுத்துக்கொண்டாலும் 1952-க்கு பின்னால் நடந்த இரண்டு தேர்தல்களிலும் காங்கிரஸ் முன்னால் இருந்ததைவிட அதிக எண்ணிக்கையை பெற்றிருக்கிறது. காங்கிரஸ் ஒருகாலமும் ஏமாற்றமடையவில்லை. ஆகவே ஹரிஜனங்களை தூண்டிவிட்டு கலகம் செய்யச்சொல்லியது என்று சொல்லுவது ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமல்ல. அங்குள்ள ஹரிஜனங்கள் மேலும் மேலும் காங்கிரசுக்கு ஆதரவு கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இது ஒரு பொதுவான உண்மை. இவைகளை அங்குள்ள ஹரிஜனங்களே நேரில் சொன்னார்கள். அவர்கள் புதியதாக மனமாற்றம் அடைந்து இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். இது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மை. அவர்களையேவிட அதற்கு முதல்தரமான சாட்சிவேறு ஒன்றும் இருக்கமுடியாது. ஆதலால், காங்கிரஸ் தூண்டிவிட்டதால் கலகம் ஆரம்பமானது என்று சொல்வது ஒப்புக்கொள்ளமுடியாத விஷயம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. கனம் நண்பர் ஸ்ரீ சசிவர்ணத் தேவர் அவர்கள் பேசும்போது சுமார் நூறு கிராமங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அவைகளில் 90-க்கு மேற்பட்ட கிராமங்களில், ஆக்கிரமித்தவர்கள் மறவர்கள். பாதிக்கப்பட்டவர்கள் ஹரிஜனங்கள். ஆகவே இது காங்கிரசால் தூண்டிவிடப்பட்டு நடத்தப்பட்ட கலகம் என்பதை ஒத்துக்கொள்ளமுடியாது. அப்படி இருக்கும்போது, காங்கிரசால் தூண்டிவிடப்பட்டு நடத்தப்பட்ட கலவரம் இது என்பது நம்பத்தக்க விஷயமாக இல்லை என்று நான் நினைக்கிறேன்.



30th October 1957] [Sri V. Sankaran]

அடுத்தபடியாக, ஸ்ரீ கல்யாணசுந்தரமும் ஸ்ரீ சசிவர்ணத் தேவரும் 1947-ம் வருஷ ஜாதிச் சண்டைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னார்கள். திரு. தத்தாருடன் சென்றபோது 70-வயதிற்கு மேற்பட்ட ஒரு மறவர் பிரமுகர் " 1947-வது வருஷக் கலகத்தை மனதில் வைத்துக் கொண்டு, வஞ்சம் தீர்ப்பதற்கு தக்க சமயத்தை இவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இப்போது மறுபடியும் இந்த சம்பவங்கள் நடந்திருக்கின்றன " என்று சொல்லியிருக்கிறார்.

மேலும், முதல் முதலாக 13-ம் தேதி ராமனாதபுரம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியான ஸ்ரீ ராமசாமி நாயுடு அவர்கள்தான் " இங்கே கலகம் மூளும்போல் இருக்கிறது. எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும் " என்று கேட்டுக்கொண்டார்கள். பின்னர் இதர காங்கிரஸ் தலைவர்களின் அறிக்கைகள் வந்தன. கலவரம் ஏற்பட்ட பிரதேசங்களில் முதன்முதலாகப் புனர்நிர்மாண வேலைகளில் இறங்கியது காங்கிரஸ் ஊழியர்கள். காங்கிரஸால் தோற்றுவிக்கப்பட்ட நிர்மாண ஊழியர்கள்தான். இதையெல்லாம் பார்க்கும்போது இந்தக் கலகத்தில் காங்கிரஸ் சம்பந்தப்பட்டிருக்க முடியாது என்பது தெரிகிறது.

மேலும், காங்கிரசுக்கு தாங்கள் ஓட்டுப்போட்டதால்தான் துன்புறுத்தப்பட்டதாக அனேக இடங்களில் ஹரிஜனங்கள் சொல்லுகிறார்கள்.

சர்க்காரால் அங்கே அதிகப்படியாக போலீஸார் உபயோகப்படுத்தப்பட்டனர் என்று சொல்லப்பட்டது. இது இரண்டாவது குற்றச்சாட்டு. மொத்தம் 30 பேர் கலகத்தில் கொலையுண்டார்கள் என்று சொல்கிறார்கள். 30 பேர் அல்ல, நூற்றுக் கணக்கான மக்கள் கொலையுண்டார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். நூற்றுக் கணக்கான கிராமங்கள் தீ வைக்கப்பட்டு அழிந்தன. தீ வைக்கப்பட்டது என்றால், சாதாரண குற்றம் அல்ல. தீ வைப்பது கொலையைவிடப் பாதகமான செய்கை. தீ வைப்பவனை அவசர காலங்களில் சுடலாம் என்று சட்டம் இருக்கிறது. தீ வைப்பதன் விளைவாக ஏராளமான உயிர்ச் சேதங்களும் பொருட் சேதங்களும் ஏற்படுகின்றன. நூற்றுக்கணக்கான கிராமங்களில் தீ வைக்கப்பட்டுள்ளதால் நூற்றுக்கணக்கான கொலைகள் நடந்திருப்பதாக எடுத்துக்கொள்ளவேண்டும். மக்கள் பல இடங்களில் அகதிகளாக வந்திருக்கின்றனர். முதுகுளத்தூர், பேரையூர் போன்ற கிராமங்களில் சுமார் 300—500 குடும்பங்கள் உண்ண உணவின்றியும் உடுக்க உடையின்றியும் உறைய இடமின்றியும் உள்ளவர்களாக வந்திருக்கிறார்கள். மழை பெய்தாலும்கூட விதைத்துப் பயிர்செய்வதற்கு அவர்களிடம் தானியம் இல்லை. ஆகவே இந்தக் கலவரத்தை முழுப் படமாகப் பார்க்கவேண்டுமே தவிர 10—20 கொலைகள் நடந்ததாகப் பார்க்கக்கூடாது. நூற்றுக் கணக்கான கொலைகள் நடந்ததாகக் கருத வேண்டும். கலவரத்தின் ஆரம்பப் பகுதியில் யார் பொறுப்பாளிகளோ அவர்கள்தான் எல்லாப் பகுதிகளுக்கும் பொறுப்பாளிகள் எல்லாப் பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள இந்த விளைவுகளுக்கு அவர்கள்தான் பொறுப்பாளிகள். " உங்கள் தாலூகாவிற்கு நீங்கள்தான் பொறுப்பாளி " என்று சொன்னார்கள். அது சரியல்ல. கலகம் ஆரம்பித்த தாலூகாவில் யார் பொறுப்பாளிகளோ அவர்கள்தான் எல்லா இடங்களிலும் ஏற்பட்ட அதன் விளைவுகளுக்குப் பொறுப்பாளிகள். ஒருவர் ஒரு வீட்டுக்குத் தீ வைத்ததன் விளைவாக அந்தத் தீ மற்ற வீடுகளுக்கும் பரவினால் எல்லா வீடுகளிலும் தீப்பிடித்ததற்கும் அவர்தான் பொறுப்பாளி. அப்படிப் பார்க்கும்போது எங்கள் பகுதியில் ஏற்பட்ட சேதங்களைத் தவிர மற்ற பகுதி சேதங்களுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் இல்லை ; என்று சொன்னால் ஒப்புக்கொள்ள முடியாது ; மானாமதுரை, சிவகங்கை பிர்க்கா சம்பந்தமாக அப்படித்தான் பார்க்கவேண்டும். ஆகவே இந்தக் கலவரங்களை முழுப் படமாக எடுத்துக்கொண்டு பார்க்கவேண்டும்.

அதோடு, கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று பல கட்சிக்காரர்கள் " கோழி முதலில் வந்ததா, முட்டை முதலில் வந்ததா " என்பதுபற்றி சர்ச்சை செய்வதுபோல " யார் கலகத்தை ஆரம்பித்தார்கள் " என்பதுபற்றி சர்ச்சை செய்துகொண்டிருக்கிறார்கள். உடனடியாகச் செய்யவேண்டிய விஷயம் அது அல்ல.

இன்றைக்கு அங்கே கலகத்தால் பாதிக்கப்பட்டவர்களை எல்லாவற்றையும் இழந்து கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்வதைத்தான் இப்போது கவனிக்கவேண்டும். அதை விட்டுவிட்டு, யார் முதலில் கலகத்தை ஆரம்பித்தார்கள் என்பதுபற்றி சர்ச்சை செய்வதோ, பொது மேடைகளில் ஏறி அதுபற்றிப் பேசுவதோ, உண்மையில் கலகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்யும் சேவை ஆகாது என்று சொல்லிக் கொள்ளுகிறேன். இத்தகைய கலகங்களுக்கு உண்மையான காரணம் அந்த மக்களின் அறியாமையும் வறுமையும்தான் என்பதை அறிந்து, சர்க்கார் அவைகளை நீக்குவதற்காக முன்னேற்றத் திட்டங்களை பல இடங்களில் ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பொறுப்புணர்ச்சியுடன் சர்க்காருடன் ஒத்துழைத்து சர்க்காரை ஆதரித்தால்தான் கலகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையான ரேவை செய்ததாக ஆகும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, போலீசார் மிகவும் பாரபட்சமாக நடந்ததாகச் சொல்லப்பட்டது. பாரபட்சம் இல்லை என்பதற்கு சில விஷயங்களைச் சொல்கிறேன். ஹரிஜனங்களின் வீடுகளைக்கூட போலீசார் காப்பாற்றவில்லை என்று சில கனம் அங்கத்தினர்கள் சொன்னதிலிருந்து, கடமையிலிருந்து தவறிய குற்றமிருந்தாலும் போலீசார் பாரபட்சமாக நடக்கவில்லை என்பது தெரிகிறது. பல இடங்களில் போலீசார் மறவர்களுக்கு ஹரிஜனங்களிடமிருந்து பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக, கீரந்தையில் ஹரிஜனங்கள் மறவர்களுடன் மோதச் சென்றதை இரண்டு தடவை போலீசார் தடுத்திருக்கிறார்கள். திருஉத்திரகோசமங்கைக்குப் பக்கத்தில் இன்னிச்சேரி கிராமத்தில் மறவர்களைத் தாக்கச் சென்ற ஹரிஜனங்களைப் போலீசார் தடுத்திருக்கிறார்கள். பல கிராமங்களில், தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று இரண்டு சமூகங்களிடமிருந்தும் தந்திகள் வந்து குவிந்து இரண்டு சமூகங்களுக்கும் போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. கீரந்தை, இலஞ்சாம்பூர் என்ற இடங்களுக்குப் போயிருந்தபோது போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்று அவர்களே சொன்னார்கள்.

வேப்பங்குளம் என்ற இடத்தில் போலீஸ்காரர்கள் அக்கிரமமாக நடந்துகொண்டார்கள் என்று சொல்லப்பட்டது. அது சம்பந்தமாக அந்த கிராமத்தார் பழைய தகராறு காரணமாக வஞ்சம் தீர்க்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கே அவ்வாறு செய்தாரே தவிர இங்கே நடந்த போலீஸ் அக்கிரமத்திற்கும் கலகத்திற்கும் சம்பந்தம் இல்லை. "2, 3 மாதங்களுக்கு முன்பு அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர், இரண்டு பேர்கள் சம்பந்தமாக வாரண்டில் ஜப்திசெய்ய வந்தபோது, எங்களை உடந்தையாக இருந்ததாகக் கூற துன்புறுத்தினார். நாங்கள் அவர் மீது வழக்குப் போட்டோம். அப்போது அவர் 'பாருங்கள், சமயம் கிடைக்கும்போது நான் உங்கள் கிராமத்தைப் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்லியிருந்தார். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவர் அக்கிரமங்கள் செய்தார்" என்று சொன்னார்கள். ஆகையால் இதைக் கலகத்துடன் சம்பந்தப்படுத்தக்கூடாது.

கீரந்தையில் 3 பேர்களை வைக்கோற்போரில் வைத்து போலீசார் கொளுத்தினார்கள் என்று சொல்லப்பட்டது. இது விஷயமாக, திரு. தத்தாருடன் நாங்கள் ஸ்தலத்திற்குச் சென்றபோது அறிந்ததைச் சொல்கிறேன். பிரேதங்களை போலீஸ்காரர்கள் எரித்ததை 3 ஸ்திரீகள் பார்த்ததாக ஒரு வாலிபன் சொன்னான். 12 பேர்களை எரித்ததாக அந்த வாலிபன் சொன்னான். வைக்கோல்போர் எரிக்கப்பட்டதாகச் சொன்னானே தவிர, மேற்கொண்டு அதில் பிரேதங்களை போட்டு எரித்ததாக விசாரிக்கப்பட்ட முதல் ஸ்திரீ கூறவில்லை. இது ஒரு 'காண்ட்ராடிக்ஷன்'. பாக்கி சாட்சிகளைக் கொண்டு வந்தார்கள். அந்த வாலிபன் கூறியதெல்லாம் முழுப் பொய் என்று திரு. தத்தார் சொல்லிவிட்டார். ஆகையால் கலவரங்களை முழுப்படமாகப் பார்த்து அங்கு ஏற்பட்டவைகள் எல்லாவற்றையும் பார்க்கும்போது, சர்க்கார் பலத்தை அதிகப்படியாக உபயோகித்ததாகக் கருதமுடியாது.



கலகத்தால் பாதிக்கப்பட்டும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உடனடியாக உதவியளிக்க வேண்டும். எல்லா அரசியல் கட்சிகளும் அந்த மக்களுக்கு அரசாங்கம் உதவியாகச் செய்யும் காரியங்களுக்கு தங்கள் ஒத்துழைப்பைத் தரவேண்டும். அதை விட்டுவிட்டு அவர்கள் "கலகத்திற்கு அரசியல் காரணமா, ஜாதி காரணமா? கலகத்தை முதலில் ஆரம்பித்தவர்கள் யார்?" என்பதைப் பற்றியெல்லாம் சர்ச்சை செய்வது அர்த்தமற்றது: "எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம்" என்ற போக்கில் இந்த துர்பாக்கிய சம்பவத்தை தங்கள் அரசியல் செல்வாக்கு சம்பாதிக்க உபயோகப்படுத்த பல அரசியல் கட்சிகள் முற்படுவது பொருந்தாத செய்கை என்று சொல்லிக்கொள்கிறேன். கலகத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும். இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI C. N. ANNADURAI** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னாலே இந்த அமைச்சர் அவையின்பேரில் நம்பிக்கையில்லை என்று கொண்டுவரப்பட்டிருக்கிற கருத்தின்பேரிலே நடைபெறுகின்ற விவாதத்தில் எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கின்ற நாங்கள், நாங்கள் என்று சொல் அளவிலே இருந்தாலும், எப்படி முக்குலத்தவர் என்றால் கள்ளர், மறவர், அகமுடையர் என்று மூன்று வெவ்வேறு பிரிவினைகள் இருக்கின்றார்களோ, அதுபோலவே எதிர்க்கட்சியினர்கள் என்றிருக்கும் நாங்கள் ஐந்து குலத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையினாலே, இந்த ஆட்சியின்பேரிலே நம்பிக்கை இல்லை என்ற பொதுவான கருத்தில் நாங்கள் பிரச்னைகளை அணுகுவதில், அவரவர்கள் தம் தமது கோட்பாட்டுக்கு ஏற்ற கோணங்களில் பார்த்தால், ஏதோ எதிர்புறத்தில் உள்ளவர்களிடமிருந்து பல்வேறான கருத்துக்கள் வந்துவிட்டன என்றோ, அல்லது கனம் சன்யாசி அவர்கள் தவறாகக் கருதிக்கொண்டு சொன்னதைப்போல கட்சிகளை எல்லாம் மீறிக்கொண்டு ஜாதி உணர்ச்சி மேலிட்டுவிட்டது என்று, அந்த உணர்ச்சிக்கு அப்பாற்பட்ட என்னுடைய கழகத்தைச் சார்ந்த சத்தியவாணிமுத்துவின், போக்கை நினைக்கவேண்டிய அளவுக்கு தவறான கருத்துக்கள் பரவி இருக்கின்றன. 4 p.m.

இந்தப் பிரச்னை நாட்டு மக்களின் உள்ளத்தை மிகமிக அதிகமான அளவுக்கு பாதித்துக்கொண்டிருக்கிற பிரச்னை மாத்திரமல்ல. இதுபற்றி நாம் இங்கே பேசுகின்ற வார்த்தைகளில் எந்த அளவுக்கு பொறுப்பு உணர்ச்சியை கடைப்பிடிக்கின்றோமோ, அதைப் பொறுத்துதான் தமிழ் நாட்டின் எதிர்கால அமைதி இருக்கிறது. இங்கே நாம் ஏதாவது ஒரு பக்கத்திலே இன்றைய தினம் ஒன்றுசேர்ந்து அதற்கான ஆதாரங்களை திரட்டியும், செய்திகளை வகுத்தும் பிரித்தும் கட்சிகளின் சார்பாக செய்துவிடுகின்ற காரணத்தினாலே அங்கே இருக்கின்ற புகைச்சலை நம்மால் அடக்கிவிட முடியாது. என்னைச்சார்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் அங்கு ஆதிதிராவிட மக்களுக்கு—இன்றுமட்டுமல்ல, நீண்ட நெடுங்காலமாக—இழைக்கப்பட்டிருக்கின்ற பெரிய கொடுமைகளை அவர்கள் சகித்துக்கொண்டிருப்பதாகக் கூறினார்கள். அவர்களுக்கு வரக்கூடிய ஆபத்தை முன்கூட்டியே கண்டுபிடிப்பதற்கு வக்கு இல்லாமல் இருக்கின்ற நிலையிலே, அதனை சட்டபூர்வமாக தடுப்பதற்கு வழி இல்லாமல், இரண்டு பெரிய ஜாதியினரிடையே தீராத பகையை மூட்டிவிட்டார்கள் என்ற காரணத்தினாலே இந்த அமைச்சர் அவையின்பேரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நம்பிக்கையில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அங்கே ஆதிதிராவிட மக்களின் அல்லலை மற்றவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதனை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதுமட்டுமல்ல போலீஸ் மந்திரி அவர்கள் ரோம் நாட்டிலே ரோம் தீப்பிடித்து எரிகின்ற நேரத்திலே நீரோ மன்னர் பிடில் வாசித்ததாக பழைய வரலாற்றைக் குறிப்பிட்டார்கள், புதிய ஆராய்ச்சியாளர்கள் அப்படி நீரோ மன்னர் அப்பொழுது பிடில் வாசிக்கவில்லை என்று முடிவு கட்டியிருக்கிறார்கள், எரிகின்ற வீட்டில் ஏதோ கிடைத்தவரையில் லாபம் என்று அகப்பட்டதை பிடுங்கிக்கொண்டார்கள் என்ற தமிழ்நாட்டு பழ

மொழியை ஒரு உறுப்பினர் சொன்னார்கள். இதற்கு முன்னாலே நான் வருத்தத்தோடு கூறியிருப்பேன். இன்றைய தினம் பெருமையோடு சொல்லுகின்றேன் அந்த வட்டாரத்தில் எங்கள் கழகத்திற்கு இதுவரையிலே ஊன்றுகோல் இல்லை 25 ஆண்டுகளாக நான் பொது வாழ்வில் இருக்கின்றேன். நான் பரமகுடிக்கு அப்பால் போய் பேசியதில்லையே என்று எண்ணியது உண்டு. அங்கெல்லாம் நம் கழகம் பரவவில்லையே என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இப்பொழுது நான் எண்ணிக் கொள்ளுகிறேன் நல்ல வேளையாகப் பரவவில்லை என்று. பரவியிருந்தால், அங்கே மூட்டப்பட்ட தீயிலே எந்த அளவுக்கு எங்களுக்கும் பங்கு உண்டு என்று சொல்லப்படுமோ, அங்கே நடந்த கொலைகளுக்கு நாங்கள் எத்தனை பேர்களை தூண்டிவிட்டோம் என்று சொல்லப்படுமோ தெரியாது. எங்கள் கழகத்துக்கு ஏற்பட்ட வளர்ச்சி நல்ல வேளையாக பரமகுடிக்கு அப்பால் தாண்டவில்லை என்று இப்பொழுது கொஞ்சம் சந்தோஷப்பட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றையதினம் நம் முன்னுள்ள பிரச்னை, முதுகுளத்தூரில் நடந்தது நவகாளியா, ஜாலியன்வாலாவா, அல்லது இரண்டுமா என்பதுதான். ஜாலியன் வாலாவில் ஏற்பட்டதுபோல் பல கொலைகள் நடந்திருக்கின்றன. துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன. பல குற்றங்களுக்காக தண்டிப்பதாக கூறிக்கொண்டு பல்வேறு மக்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வட்டாரத்தில் நல்ல செல்வாக்கு படைத்த முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவருக்கும் எனக்குமோ அல்லது எங்கள் கழகத்துக்குமோ அன்போ, தொடர்போ, பற்றோ, பாசமோ இல்லை என்பதனை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளுகிறேன். ஒருக்கால் நிர்ப்பந்தம். ஏற்பட்டால் அவர் காங்கிரஸுடன் ஒன்றிப்போகமுடியுமே தவிர, எங்களோடு ஈடுபட்டு ஒன்றிப்போய்விட முடியாது என்பது அரசியல் வட்டாரத்தில் நன்றாகத் தெரியும். தடுப்புக்காவல் சட்டத்தைப்பற்றி நாங்கள் ஏதாவது பேசினால், அதிலே சம்பந்தப்பட்ட ஆட்களை மறந்து பிரச்னையைப் பற்றி அணுகுகின்றோம். தடுப்புக்காவல் சட்டத்தை ஆட்சியாளர்கள் மிகமிக தாராளமாக பயன்படுத்துகிறார்கள். அன்று துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபடுகின்ற நேரத்திலே என்ன காரணங்கள் காட்டினார்களோ, அதே காரணங்களை இப்பொழுது காட்டுகிறார்கள். முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 20 ஆண்டுகாலமாக பலாத்காரத்தில் ஈடுபட்டிருந்தால் அவர்மீது வழக்குத் தொடருவதை நியாய உள்ளம் படைத்த யாரும் மறுக்கமாட்டார்கள். கோவிந்தசுவாமி அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றது கண்டு வெற்றி பெறாத காங்கிரஸ்காரர்களின் தூண்டுதலின்பேரில் கொள்ளை, கொலை நடந்தன என்று சர்க்கார் அவர்பேரில் வழக்குத் தொடர்ந்தார்கள். 1½ ஆண்டு காலம் வழக்கும் நடந்தது. கோவிந்தசுவாமி அவர்கள் பேரில் கொள்ளைக் குற்றம்சாட்டி வழக்குத் தொடர தயாராக இருந்தவர்கள் யாரைத்தான் கொலைபாதகர்கள் என்று சொல்லமாட்டார்கள்? உண்மையான கொலைபாதகர்களை கண்டுபிடிக்க எங்களுடைய துணையை நாடியிருப்பார்களேயானால், எங்களால் முடியுமானால் அந்தப் பொறுப்பிலிருந்து நாங்கள் தப்பிக்கொள்ள மாட்டோம்.

இந்த முதுகுளத்தூர் பிரச்னையைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்று சொல்லுவார்கள். அதாவது பார்த்தவர்கள் சொல்லவில்லை, சொன்னவர்கள் பார்க்கவில்லை. என்னைப் பொறுத்தவரையிலே கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்பதல்ல. நான் நேரடியாகப் பார்க்கவில்லை, விண்டவர் கண்டு சொல்லியதை எண்ணிப் பார்க்கிறேன். இருவரும் உணர்ச்சி வேகப்பட்டிருப்பதை நான் நிச்சயமாக உணர்கிறேன். இந்த உணர்ச்சி மதவெறியின் காரணமா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. அதுபோலவே, இந்த உணர்ச்சியினால் இந்த அரசியலுக்கு லாபம் அதிகமா, அந்த அரசியலுக்கு லாபம் அதிகமா என்று சொல்ல தேவை இல்லை. என்னுடைய மதிப்பிற்குரிய கன்னியாகுமரி அங்கத்தினர் அவர்கள் ஆதித்திராவிட மக்களின் அல்லலைப்போக்க



எல்லோரும் ஒன்றாகக்கூடி அரசியல் கட்சிகள் யோசித்தோம் என்று சொன்னார்கள். அம்மாதிரி கூட்டம் நடைபெற்ற தகவல் எனக்கு இல்லை. அதுபற்றி என்னை அணுகியிருந்தால், எங்கள் திராவிட முன்னேற்ற கழகத்தினர் ஆலோசனைகூறி நாங்களே அதை நடத்த ஒத்துக்கொண்டிருப்போம். ஆதித்திராவிட மக்களைக் காப்பாற்ற இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் கொஞ்சம் அதிகசிரமமான காரியங்களில் ஈடுபட்டிருந்தால்கூட. அதை நாங்கள் தாங்கிக்கொள்ளுவோம் என்று பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால் தலைமுறை தலைமுறையாக அவர்கள் ஒடுக்கப்பட்டு பாழ்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மக்களின் உரிமை உணர்ச்சி இந்த 20 ஆண்டு காலமாகத்தான் ஏற்பட்டது. அதற்குக் காரணம் நாங்கள்தான் என்று காங்கிரஸ்காரர்கள் மார் தட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் நாங்கள்தான் என்று நாங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறோம். அதற்குக்காரணம் காலம் என்று உலக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து சொல்லுகிறார்கள். மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை தவிர்ப்பதற்கு இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் சரியான நேரத்தில் சரியான முறையை கையாளவில்லை. அவர்கள் ஏன் சரியான போலீஸ் படையை அமைத்துக்கொள்ளவில்லை. ஏன் 8 பேர்களை சிறையில் போட்டார்கள் என்று கேட்பதுமட்டுமல்ல. நமது போலீஸ் அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் முதல் பாராவில்

"I rise to make a statement on the recent outbreak of lawlessness and violence in some parts of Ramanathapuram district and the steps taken by the Government to maintain law and order and to render relief to the victims of the riots."

என்று இருக்கக்கூடிய விஷயங்களில் எவ்வளவு முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது என்பதைப் பார்த்தால் இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் அல்ல என்று தெரியவில்லையா என்று கேட்கிறேன். **Outbreak** என்று இவர்கள் சொல்வதன் அர்த்தமென்ன? திடீரென்று எரிமலையைப்போல்—அமைதியாக இருந்த பிரதேசத்தில் ஒரு கலவரம் வெடித்தால் அவுட் ப்ரேக் என்று இவர்கள் சொல்வது உண்மையாக இருக்கும்.

அறிக்கையின் பிற்பகுதியைப் பார்க்கப் போனால் சட்டத்தை மீறுகின்ற தன்மையில், பலாத்காரச் செயலில் மக்களைத் தூண்டிவிட்டு, பெரிய குழப்பங்களையும், கலவரங்களையும் உண்டுபண்ணுகின்ற நிலைமை தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது என்பதான தகவல்களை நன்றாக எடுத்துத் தந்திருக்கிறார்கள். ஆகவே இப்போது நடைபெற்ற கலவரத்தை திடீரென்று அமைதியாக இருந்த வேளையில், யாரும் எதிர்பார்க்காத சமயத்தில் எரிமலை போல் அவுட் பர்ஸ்ட் ஆன சம்பவம் என்று சித்தரிப்பது முன்னுக்கும் பின்னுக்கும் பொருத்தமில்லாத விஷயம். இந்தச் சர்க்காரிடத்தில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிவித்துக் கொள்வதற்குக் காரணம் "உங்கள் ஆட்சியிலே சட்டம் மதிக்கப்படவில்லை. பாதுகாக்கப்படவில்லை. உங்கள் ஆட்சியிலே பலாத்காரம் தலைதூக்குகின்றது. சட்டத்தை மதித்து, பலாத்காரம் தலைதூக்காமல் செய்யக்கூடிய திறமை உங்களுக்கு இல்லை. பலாத்காரத்தை ஒடுக்கத் திறமையில்லாத நீங்கள் அதை மறைத்து உங்களுடைய நலனுக்கு அதைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறீர்கள் உங்கள் பேரில் நம்பிக்கை இல்லை" எனத் தெரிவிக்கும் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் இருந்து நான் ஆதரிப்பது இதனால்தான்.

இந்த ராஜ்ய மக்களுடைய—ஆதித்திராவிட மக்களாக இருந்தாலும் சரி—பிற்பட்ட இனத்து மக்களாக இருந்தாலும் சரி—உயிருக்கோ, உடைமைக்கோ உங்களால் பாதுகாப்பு கொடுக்கமுடியவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்குப் பதிலாக, அவர்கள்மேல் எடுக்கப்படுகிற பலாத்காரச் செயல்களுக்கு, நீங்களும் உங்கள் சுயநலத்தின் காரணமாக உடந்தையாக இருக்கிறீர்கள் என்கிற காரணத்தினால் உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறேன்.

[Sri C. N. Annadurai] [30th October 1957

மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் இன்றைக்கும்கூட எண்ணிக்கையைப் பாருங்கள் என்று சொன்னார். நேற்றும் சொன்னார். சந்தர்ப்பம் கிடைக்கிற நேரத்தில் எல்லாம் சொல்வார். எத்தனை முறை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும். எண்ணிக்கையில் பெருத்தவர்கள் அவர்கள். ஆனால் நிச்சயமாக நியாயம் என்பது எண்ணிக்கையைப் பொறுத்தது மட்டும் அல்ல. எண்ணத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. மனதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

அவர்கள் 150 பேர்கள் அங்கே இருக்கிற காரணத்தினாலே நாங்கள் இங்கே 40 பேர்கள் இருக்கிற காரணத்தினாலே, இந்தப்பக்கத்திலுள்ள கந்தசாமி கருப்பாக இருக்கிறார். காக்கையும் கருப்பு தான். ஆகவே கந்தசாமியும், காக்கைதான் என்று சொன்னால், அவர்கள் 150 பேரும் ஆம் என்றால் அந்த ஒரு காரணத்தினாலே கந்தசாமியும் நிச்சயமாகக் காக்கை ஆகிவிடமாட்டார். கந்தசாமி கருப்பாக இருக்கலாம். காக்கையும் கருப்பாக இருக்கலாம். அந்த ஒரு காரணத்திற்காக கந்தசாமி காக்கை ஆகமாட்டார் என்று இந்தப் பக்கத்தில் இருக்கிற எண்ணிக்கையில் அவர்களைவிடச் சிறுத்த நாங்கள் 40 பேர் சொன்னால் எண்ணிக்கையில் சிறுத்தவர்கள் என்பதற்காக இது "இல்லை" என்று ஆகிவிடாது. இப்படித்தான் நியாயத்தை, நீதியை இந்த ஜனநாயக காலத்தில் எண்ணிக்கையைக் கொண்டு நிர்ணயித்துவிட முடியாது. நல்ல ஜனநாயகப் பண்பை ஸ்தாபிக்கக்கூடிய திறமை வாய்ந்த நிதியமைச்சர் அவர்கள் தாங்கள் எண்ணிக்கையில் பெருத்திருக்கிறோம் என்பதற்காக எண்ணிக்கையைக்கொண்டு நியாயத்தை நிலைநாட்டிவிடுவோம் என்று எண்ணி அப்படிப் பேசியிருப்பார்கள் என்றால் அது நிச்சயமாக முடியாது என்பதை எதிர்கட்சி நன்றாக உணர்ந்திருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் நேற்று சொன்னது நியாய அநியாயத்திற்கு எண்ணிக்கையைப் பாருங்கள் என்று சொல்லவில்லை. மக்கள் யார் பேரில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதற்கு எண்ணிக்கையைப் பார்க்கச் சொன்னேன். நியாய அநியாயத்திற்குச் சொல்லவில்லை. இந்த அளவு வாதத்தைச் சொல்லக்கூடிய அளவு குறைவாகப் பேசுவதற்கு நான் எப்போதும் இறங்கமாட்டேன்.

* SRI C. N. ANNADURAI : மக்கள் ஆளுகின்றவர்களிடம் நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்வது ஐந்து ஆண்டு காலத்திற்கு ஒரு முறை தான். இடையே அவர்களுக்கு ஏற்படுகின்ற நம்பிக்கையில்லாத மனக்கசப்பை, மனக்குமுறலை ஆளுகின்றவர்களுக்கு எடுத்து காட்டுவது எதிர்க் கட்சியின் பொறுப்பு.

இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானமும் கூட உங்களைப் பதவியில் இருந்து இதன் மூலம் விலக்கிவிட முடியும் என்கிற நம்பிக்கையில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படவில்லை. அப்படி எதுவும் நடந்துவிடாது என்கிற எண்ணம் உங்களுக்கும் இருக்கின்ற படியினால்தான் இங்கே உட்கார்ந்து சிறப்பான வாதங்களை எல்லாம் செய்துகொண்டிருக்கிறீர்கள். இல்லாவிடில் இங்கே உட்கார்ந்து வாதங்கள் புரிந்துகொண்டிருக்கமாட்டீர்கள். தனித்தனியாக தங்களுக்கு ஆள் சேர்க்க முயன்று கொண்டிருப்பீர்கள். ஆகையால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் மகத்தான ஆபத்து அவர்களுக்கு வந்துவிடும் என்று நாங்கள் மனப்பால் குடிக்கவில்லை. அமைச்சர் அவையைத் தள்ளிவிட இந்த தீர்மானத்தால் முடியாது என்கிற ஒரு காரணமும் இருக்கலாம், நான் இந்த தீர்மானத்தை ஆதரிப்பதற்கு.

ஆளுகின்ற அமைச்சர் அவை பிரும்மாண்டமான வலுவில் இருக்கிறது. மிகச் சிறிய எண்ணிக்கையில் உள்ள எங்களால் அவர்களுக்குப் பாடம் கற்பிக்க முடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. காலம் ஒன்றுதான் அவர்களுக்கு பாடம் காட்ட முடியும். அவர்கள் ஆளும் கட்சி, நாங்கள் எதிர்கட்சிகள்.



30th October 1957] [Sri C. N. Annadurai]

எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள் ஒவ்வொரு கோணத்தில் இருந்து இந்த நம்பிக்கை இல்லாத்தீர்மானத்தை ஆதரிப்பதற்குக் காரணம் எதிர்கால அமைதியாவது பாதுகாக்கப்படவேண்டும் என்கிற ஒரு எண்ணம்தான். சட்ட மன்றத் தலைவர் அவர்களே, உங்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல சந்தர்ப்பங்களில் நான் இங்கே பேசவேண்டும் என்று ஆசைப்பட்டேன். நீண்ட நேரம் பேசவேண்டுமென்று ஆசைப்பட்டது உண்டு. நன்றாகப் பேசவேண்டும் என்றும் ஆசை. ஆனால் எனக்குப் பேசாமல் இருக்கும் சந்தர்ப்பம் இந்தச் சமயத்தில் கிடைத்திருந்தால் நான் எத்தனையோ மகிழ்ச்சி உடையவனாக இருந்திருப்பேன். இந்தப் பிரச்னையைப் பற்றி—பொது மேடைகளிலும் சரி சந்தர்ப்பம் கிடைக்கிற நேரத்தில் மிக ஜாக்கிரதையாக நழுவவிட்டிருக்கிறேன், பேசாமல் இருந்திருக்கிறேன். பத்திரிகையில் ஒரு வார்த்தைகூட எழுதவில்லை. காரணம் ? இந்தப் பக்கத்தில் நியாயம் இருக்கிறதா? அந்தப்பக்கத்தில் நியாயம் இருக்கிறதா என்பது ஒருபுறத்தில் தெரிந்துகொள்ள முடியாத சூழ்நிலை சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல. அந்தப் பிராந்தியத்து ஜனங்கள் மிகவும் சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள்—என்று அந்தப் பக்கத்தில் இருந்து அம்மையார் சொன்னதுபோல—நாம் அநுபவிக்கின்ற அரசியல் முறை 1957போடு முடிவு அடைந்துவிடப்போகிறது இல்லை—நல்ல ஆற்றல் படைத்த மக்கள் அவர்கள்—பழி துடைக்கப்படுகிற வரையில் உள்ளம் கொதித்துக் கொண்டிருக்கப்போகிறார்கள்—இந்தச்சமயத்தில் எந்தப்பக்கத்தை ஆதரித்து நம்முடைய செல்வாக்கை அதிகப்படுத்திக்கொள்வோம் என நாங்கள் சிலரைப்போல அரசியல் தந்திரம் படைத்தவர்களாக இருக்க விரும்பவில்லை. ஒன்றைப்பற்றி எழுதினால்—ஒன்றைப்பற்றிப் பேசினால்—அதன் விளைவாக அந்தப்பகுதியில் மீண்டும் ஒரு அமளி ஏற்படுமானால்—சீக்கிரத்திலே உணர்ச்சிவசப்படக்கூடிய மக்கள் கொதித்தெழுவார்களானால் அதற்கு நாமேதான் பொறுப்பாளியாக வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கி அவர்களுக்கும் ராஜ்யத்திற்கும் தீங்கை உண்டு பண்ணாமல் அமைதியாக—அவர்களைப் பண்படுத்திவிட்டோம்—புண்ணையாற்ற நியாடமான முறையில் மருந்து போடவேண்டும் என்கிற தன்மையில் பேசாமல் இருந்தேன். இப்போதும் கூட இந்தத் தீர்மானத்தின் மீதுபேசவிரும்பவில்லை.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அமர்ந்திருக்கிற உறுப்பினர்கள் தங்கள் கருத்தை எடுத்துச்சொல்லவேண்டும் என்கிற நிலைமை வந்தால், நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை நாங்கள் எந்த எந்தக் காரணத்திற்காக ஆதரிக்கிறோம் என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். அந்த முறையில்தான் இப்போதும் பேசுகின்றேன்.

தன்னைத்தானே இப்போது செய்திருக்கும்படியான காரியத்திற்காக போலீஸ் மந்திரி அவர்கள் ஒரு பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டார்கள். நல்லதொரு நடவடிக்கையை போலீஸ்காரர்கள் எடுத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார். எதிர்கட்சிகளில் இருந்து திரு சசிவர்ண தேவர் அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைத் தெரிவித்தார். ஆதித்திராவிட மக்களுடைய முன்னேற்றத்தில், அந்தச் சமூகத்தாருக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தைத் துடைப்பதில் தாங்களும் பங்குகொள்ளத் தயார் என்பதாக அவரும் மூக்கையத்தேவரும் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கு நமது அமைச்சர் அவர்கள் நல்ல உருவம் கொடுத்துப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதும் என் அவா.

நாம் நீண்ட நாள் ஒரு சமூகத்தை பகைத்துகொண்டு வாழமுடியாது. போலீஸ் மந்திரி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி அந்த வட்டாரத்தில் நிரந்தரமாக போலீஸ் பட்டாளங்களை வைத்துக்கொண்டிருக்க முடியாது. அங்கே உள்ள சமூகத்தார்களுக்கு மனக்கசப்பையும், பகைமை உணர்ச்சியையும்தான் அது வளர்க்க உதவும்.

முத்துராமலிங்க தேவர் அவர்கள் பலகாலமாக மற்ற கட்சிகளைப்பற்றி எந்த அளவுக்குப் பேசியிருக்கிறார்கள், என்னைப்பற்றியும், என் கட்சியைப் பற்றியும் எத்தனைவிதமாகப் பேசியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவற்றையெல்லாம் நான் இப்போது இந்த மன்றத்தில் எடுத்துப் பேசப்

போவதில்லை. முதல் அமைச்சர் அவர்கள் கள்ளநோட்டு அடித்தார்கள் என்று அவர் சொன்னதாக பலர் அந்தப் பக்கத்தில் இருந்து சொன்னார்கள். தேவர் அதோடு நிற்கவில்லை. அதில் ஒரு பங்கு முதல் அமைச்சர் அவர்கள் என்னிடம் கொடுத்து இருக்கிறார் என்றும் சொல்லி இருக்கிறார். ஆகவே அவருக்கும் எனக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகவோ, பாசம் பற்று இருப்பதாகவோ எண்ணிக்கொண்டு நான் இந்தமாதிரியாகப் பேசுவதாக யாரும் நினைக்கக்கூடாது. முத்துராமலிங்கத் தேவர் 1933-ம் வருஷத்திலிருந்தே பாண்டிய மண்டலத்தில் சாதித் துவேஷம் வளர்க்கக் கூடிய வகையில் பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. வகுப்புக் கலவரம், சாதித் துவேஷம் இவை எல்லாவற்றுக்கும் அவர் உடந்தையாக இருந்து வந்தவர் என்று பேசப்பட்டது. இப்போதுதான் எனக்கு ஒரு தபால் வந்தது. அது ஒரு பத்திரிகை. ரங்கூன் நகரத்தில் கடல் கடந்து நிற்கும் தமிழர்கள் முத்துராமலிங்க தேவரின் பிறந்த தின விழாவைக் கொண்டாடும் அழைப்பிதழ். அவரைப்பற்றி இப்போது வெறுத்து ஒதுக்கத்தக்கவராகப் பேசிக்கொண்டிருக்கிறோம். அங்கே அவர்கள் உள்ளத்தில் வைத்துக் கொண்டாடுபவராக இருக்கிறார். உலகத்தார் வைத்திருக்கின்ற கருத்து இன்றைய தினம் இந்த ராஜ்ய ஆட்சியாளர் வைத்திருக்கின்ற கருத்தாகத்தான் இருக்கவேண்டும் என்பது இல்லை. அவர்கள் கருத்தே நாம் வைக்கவேண்டும் என்பது இல்லை. ஆனால் உலகத்தார் வைக்கின்ற கருத்துக்கு மதிப்பு அளிக்கவேண்டும். உலகத்தார் எல்லாம் போற்றுகின்ற உத்தமராக முத்துராமலிங்க தேவர் இருப்பாரானால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவரோடு கலந்து பேசி ஒரு சமரச சூழ்நிலையை அந்த பிராந்தியத்தில் உண்டுபண்ண ஏன் முயற்சிக்கக் கூடாது? அப்படி இவர் பேசுவதை வேண்டாமென்று யார் குறுக்கிட்டார்கள்? குறுக்கிடுகிறார்கள் என்றால் ஏன் குறுக்கிடுகிறார்கள்.

முதுகுளத்தூர் பிரச்னையாக இருந்தாலும் சரி, முரளி கபே பிரச்னையாக இருந்தாலும் சரி, எந்தப் பிரச்னையையும் முளையிலேயே அணுகினால் தான் அதை தீர்க்க முடியும் என்ற அரசியல் தத்துவத்தை உங்களுக்கு எடுத்துக்கூற கடமைப் பட்டிருக்கிறேன். ஜாதிப் பெயர் குறிக்கும் பலகையை எடுக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள். இதை நடத்துகின்றவர் பெரியார் ராமசாமி. 700 தொண்டர்களுக்கு மேல் சிறைச் சென்றிருக்கிறார்கள் என்று கேள்வி ஒன்றுக்கு பதில் சொல்லுகையில் சொன்னார்கள். நான் பத்திரிகையில் பார்த்தேன், கேரள சர்க்கார் உணவு விடுதிகளிலே ஜாதி அறிவிப்பு பலகைகளை தாங்களாகவே நீக்கிவிட வேண்டும் என்று ஒரு அறிக்கை மூலம் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அவைகளை நீக்காவிட்டால் சர்க்காரே அந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று இருக்கிறது. அதற்கு ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தில் இருந்து எடுக்க வேண்டியதில்லை. கருணையோடு மனம் வைத்தால் இந்தப் பிரச்னையை உடனடியாக தீர்க்க முடியும். திரு. இமானுவல் படுகொலை செய்யப்பட்டதைப் பற்றி இங்கு பேசினார்கள். உண்மையில் அவர் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் அல்ல, தமிழ் நாட்டிற்கே ஒரு பெரிய தியாகம் செய்திருக்கிறார். இமானுவல் ராமநாதபுரத்து மண்ணிலே மறைந்த மாவீரன் மட்டும் அல்ல, உலகமே புகழும் ஒரு வீரனாகவே அவரைக் கருத வேண்டும். நாட்டில் ஒற்றுமைக்காக பாடுபட்டு தன்னையே பலியாக்கிக் கொண்ட ஒரு தியாகியை இழந்தோம். அவர் பெயர் இந்நாட்டு சரித்திரத்திலே பொறிக்கப்பட வேண்டியது. திரு. முத்துராமலிங்க தேவர் மறவர்களுக்கு தலைவராக இருந்தார். அதே போல் ஆதிதிராவிட மக்களின் தலைவராக விளங்கினார் திரு. இமானுவல் என்பதை அமைச்சர் அவை அறியும், இந்நாடும் அறியும்.

முதுகுளத்தூர் இமானுவல் படுகொலை செய்யப்பட்ட பிறகு அங்குள்ள மக்கள் தங்கள் தலைவரை இழந்ததற்காக ஆத்திரம் கொள்வதும் ஆத்திரத்தில் பழிக்குப்பழி வாங்க முயல்வதும் இயல்பு. அவர்களின் வீரிட்டெழும் உணர்ச்சியை ஆட்சியாளர் உணர்ந்திருப்பார்களேயானால், அங்கே போலீஸ் படையை உடனே அனுப்பி இருப்பார்கள். அந்த வட்டாரம் பூராவும் போலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் அல்லது போலீஸ் நிர்வாகத்தில் வைக்கப்பட்டிருக்கும். சம்பவம் நிகழ்ந்த நான்கு நாட்களில் மேலும் கலவரம் வளராது தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காது அவசர அவசரமாக துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்ட பிறகு வெங்கடேஸ்வரனை வைத்து விசாரணை நடத்தினார்கள். அவர்களின் நிர்வாகத் திறமையைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களே சொன்னார்கள். அதிகாரிகளின் நிர்வாகத் திறமையை அறிந்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு எனக்கு அரசியல் அறிவும் இல்லை, அனுபவமும் இல்லை. 10-ம் தேதி அன்று இமானுவல் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். நான்கு நாட்கள் கழிந்து போலீஸ் படைவந்து துப்பாக்கி பிரயோகம் செய்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் போய்விட்டாரே என்று அந்த மக்கள் கொதித்தெழுவதில் என்ன ஆச்சரியம். திரு. சிதம்பர பாரதி அவர்கள் சொன்னார்கள் யாராவது இந்த தென் பாண்டிய மண்டலத்திலே திரு. முத்துராமலிங்க தேவருக்கு எதிராக பேசுவார்களேயானால் அவர்கள் தலை உருளும் என்று சொல்லுவதாகச் சொன்னார்கள். என்னைவிட அவர் தைரியசாலி, இல்லாவிட்டால் இவ்வளவு தைரியமாக பேசுவாரா? கலகம் நடந்த இடத்தில் விசாரணை நடத்துவதற்கு திரு. வெங்கடேஸ்வரன் அவர்களை விசாரணை நடத்துவதற்கு அனுப்பியிருக்கிறார்கள். தேனி தியாகராஜன் கூட இவரை புகழ்ந்திருக்கிறார். அப்பொழுது இருந்த சூழ்நிலையில் சாட்சிகள் எப்படி வருவார்கள். ஒரு பக்கம் விசாரணை நடக்கிறது, மற்றொரு பக்கம் தீ வைத்துக்கொண்டே போகிறார்கள். கனம் போலீஸ் அமைச்சர் கூறுகிறார் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்கப்பட்டது என்று. **S.A.P. 8, M.S.P. 4, Armed Reserve Police 4, Wireless set 4,** அனுப்பி வைத்திருப்பதாக புள்ளி விவரம் தருகிறார். அங்கே இருக்கும் வீடுகள் ஏராளமாக தீக்கிரையாகிக்கொண்டிருக்கும்போது தீயை அணைப்பதற்காக தீ அணைப்பு படையை அனுப்பவில்லை. சில நாட்களுக்கு முன் தான் இந்த தீ அணைப்பு வாரம் கொண்டாடினார்கள். அந்த விழாவில் ஒரு படத்தைப் பார்த்தேன். உயரமான மாடியில் தீ பிடித்துக்கொண்டால் கீழே குதித்து விடவேண்டும். கீழே ஒரு வலை கட்டப்பட்டிருக்கிறது. அந்த வலையை உபயோகப்படுத்தவில்லையானால் உயிரிழக்க நேரிடும் என்று காட்டினார்கள். ஆனால் அது போன்ற வலை நமது அரசிடம் இல்லை என்று அதிகாரி கூறினார். தீ அணைப்புப் படை அரசாங்கத்திடம் இருந்தும், பயன்படவேண்டிய சமயத்தில் உபயோகப்படுவதில்லை. அங்கு தீ பரவாமல் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அங்குள்ள கட்சித் தீ பரவாமல் தடுப்பதற்கும் தவறிவிட்டது.



திரு. ஏழுமலை அவர்கள் எங்கள் கட்சி நிதானமான கட்சி என்று சொன்னார். ஆம். யார் இல்லை என்று சொன்னது. பார்த்த பிறகு தானே தெரிகிறது. அங்கே இரண்டு கட்சிகள் ஆதிக்கம் செலுத்திவருகிறது. ஒன்று காங்கிரஸ் கட்சி, மற்றொன்று பார்வார்ட் பிளாக். நாடார்கள் தாழ்த்தப்பட்ட மக்களை தூண்டிவிட்டதாக குற்றம் சாட்டியிருக்கிறார்கள். எனக்கு காங்கிரஸ் நாடார்களைப் பற்றி தெரியாது, ஆனால் நாடார்களைப் பற்றி தெரியும். நாடார் அவைகளை நாடார்.

இந்த 10 ஆண்டு காலமாக நான் கேட்கிறேன், நீங்கள் இந்த துப்பாக்கி பிரயோகத்தை பயன் படுத்தும் அளவிற்கு எந்த ஜனநாயக சர்க்காராவது பயன் படுத்தி இருக்கிறதா? நீங்கள் வணங்கும் ஆண்டவன் பேரிலே கேட்கிறேன். நீங்கள் கடைப்பிடிக்கும் காந்திய நெறியின் பெயராலும் கேட்கிறேன், உங்கள் நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள் இத்தனை ஆண்டுகாலமாக நம் நாட்டில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் உலகத்திலே எந்த நாட்டிலேயாவது இந்த அளவுக்கு நடந்ததுண்டா ? நீங்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதை நாங்கள் கண்டித்தால் உடனே போலீஸ் அமைச்சர் " நாங்கள் இங்கு மட்டுமா துப்பாக்கி பிரயோகம் நடத்தினோம், இதற்கு முன்னேயே தூத்துக்குடியிலே நடத்தினோம், டால்மியாபுரத்தில் நடத்தினோம், வால்பாறையில் நடத்தினோம், பயித்தியக்கார மக்களே இதுதானே எங்கள் வேலை, இப்பொழுது முதுகுளத்தூரில் சுட்டதற்கு நீங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தீர்களே " என்று சொல்லுவார்கள். ஆம். இன்னும் இந்த ஐந்தாண்டு ஆட்சிகாலத்தில் இன்னும் எத்தனை முறை இந்தத் துப்பாக்கியின்

தோட்டாக்களைப் பயன் படுத்தப் போகிறீர்களோ? யார் யார் பலியாக இருக்கிறார்களோ என்று எண்ணி வேதனைப்படுகிறேன். அதனால் தான் உங்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்கிறேன். நான் பத்திரிகையில் பார்த்தேன், துருக்கி நாட்டிலே ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததற்கு அந்தக் கட்சிக்கும் மற்றொரு கட்சிக்கும் தகராறு மூண்டு ஏறக்குறைய 7,000 பேர் கலகத்தில் ஈடுபட்டவர்கள் ஆர்பாட்டம் செய்தார்கள். அந்தக் கூட்டத்தைக் கலைக்க துருக்கி சர்க்கார் உபயோகப் படுத்தியது துப்பாக்கியை அல்ல, அவர்கள் மீது தண்ணீரை இறைத்து கலைத்திருக்கிறார்கள். அங்கே ஏராளமான கூட்டம் பெரும் கலகம் விளைவித்த போதிலும், அந்த சர்க்கார் தீ அணைக்கும் படையின் உதவியினால் கலகத்தை தடுக்க அந்த மக்கள் மீது தண்ணீர் இறைத்து துரத்தியிருக்கிறார்கள். ஆனால் இங்கு நடந்ததோ என்னவென்றால் கூட்டத்தைக் கலைப்பதற்கு துப்பாக்கியை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். கீழத்தூவலில் நடந்த சம்பவத்தில் 5 பேரைச் சுட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இதற்காக போலீஸ் படை சென்றிருக்கிறது. சுடுவதற்கு அனுப்பப்பட்ட அதிகாரியும் சுடுவதிலே பழக்கப்படாதவர் அல்ல, அதில் கை தேர்ந்தவர்கள். ஆனால் சுடுவது மிருகங்களையோ, பறவைகளையோ அல்ல மக்களை என்று நினைவில் கொள்ளவேண்டும்

நான் சொல்வதென்னவென்றால், அதிகாரிகள் பாரபட்சமாக நடந்து கொண்டார்களா இல்லையா என்பதல்ல. அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பு சரியானதா இல்லையா என்பதைப்பற்றித்தான் சொல்கிறேன். ஒரு சில தினங்களுக்கு முன்னால் டெல்லியில் பாராளுமன்றத்தில் உள் நாட்டு அமைச்சர் ஒரு வாக்குறுதி அளிப்பது போல் சொன்னார்கள், **we will shoot to scare, not shoot to kill** என்று. நாங்கள் கொல்லவதற்காக சுடப் போவதில்லை. விரட்டுவதற்காகவே சுடப் போகிறோம் என்று சொன்னார்கள். அப்படி பந்த் அவர்களே சொன்னார்கள். அதைக்கண்டு, பந்த் அவர்களே இப்படிச் சொல்லியிருக்கிறார்களே; ஆகவே இனி போலீஸ் சுடமாட்டார்கள் என்று இந்த பேதை நெஞ்சம் நினைத்துக் கொண்டிருந்தது.

கொல்வதற்காகத்தான் சுட வேண்டும். சுட்டு கீழே விழுந்த பிணங்கள் மறவர்களின் பிணங்கள்தான். அவர்கள் கொடுமை செய்தவர்கள்; அதனால் அந்தப் பிணங்கள் விழுந்தால் பரவாயில்லை என்று சிலர் சொல்லலாம். ஆனால் அடுத்து குண்டு யார் பேரில் பாயும், இந்த ஐந்து வருடத்திற்குள் யார் யார் மேல் குண்டு பாயப்போகிறது, எத்தனை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் போகிறார்களோ, எத்தனை பேர்கள் அதனால் உயிர் நீக்கப் போகிறார்களோ, எந்தெந்த இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடக்கயிருக்கிறதோ என்று எண்ணிப்பார்க்கும்போது இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லத்தோன்றுகிறது. நான் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன், உங்கள் அறிவில், உங்கள் ஆற்றலில் எனக்கு சந்தேகமில்லை என்று. ஆனால் நிலைமையைக் கண்டு அறிந்துகொள்வதற்கு நீங்கள் வைத்திருக்கும் அதிகாரிகள் உங்களுக்கு சரியான தகவல் தரவில்லை, நீங்கள் நன்கு ஆள வாய்ப்புத் தரவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். முத்துராமலிங்க தேவர் அவர்கள், 30, 33-ம் ஆண்டிலிருந்து இன்றயதினம் வரையில் அங்கு பெற்றிருக்கும் செல்வாக்கைப் பற்றி எல்லோரும் எடுத்துச் சொல்கிறார்கள். சசிவர்ண தேவர் அவர்கள் எடுத்துச் சொன்னபோது, முத்துராமலிங்க தேவர் அவர்கள் மறவர்களின் சமூகத்தில் மட்டும் அல்ல, பிற சமூகத்தாரிடமும் நல்ல செல்வாக்கு பெற்றவர் என்று எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் எடுத்துச் சொல்லும்போது அவர் ஜாதி ஆதிக்கத்தால் செல்வாக்கு பெற்றார்கள் என்று சொன்னார்கள். எது எப்படியிருந்தாலும் அவருடைய செல்வாக்கு மகத்தானது என்பதை யாரும் மறுக்கவில்லை. அவருடைய இந்தச் செல்வாக்கு, இன்றயதினம் கொலைக்கும், கொள்ளைக்கும் பயன்பட்டதாகச் சொல்லும்போது, இந்த செல்வாக்குதான் காங்கிரஸிற்கு 10, 15 வருஷ காலமாகப் பயன்பட்டதல்லவா? என்று கேட்கிறேன். தேவர் அவர்கள் தரும் தொல்லைகள் பற்றி இப்பொழுது அமைச்சர்கள் அல்லல் படுகிறார்கள். ஏன்?



இப்பொழுது அவர்கள் தரும் தொல்லைகள் காங்கிரஸிற்கு ஏற்படுகிறது. அன்று நான் சேர்ந்திருந்த ஜஸ்டிஸ் கட்சி அல்லல்பட்ட காலத்தில் அவரது தொல்லைகள் பற்றி, அவர் கொடுத்த தொல்லைகள் பற்றி ஒரு வார்த்தையாவது, ஒரு சின்ன வார்த்தையாவது சொன்னதுண்டா? 1937-ம் வருஷம் கூட அவர் காங்கிரஸ் அபேட்சகராயிருந்து ராமநாதபுரம் ராஜா சுயேச்சையாக நின்றபோது எஸ்டேட் தாசில்தார் தாக்கப்படவில்லையா? அவர்களின் பேரில் நாங்களே அல்லவா வழக்குத் தொடுத்தோம் என்று நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முத்துராமலிங்க தேவரின் செல்வாக்கை நீங்கள் திருப்பரங்குன்றத்தில் உபயோகித்துக்கொள்ளவில்லையா? அப்பொழுதெல்லாம் தேவர் பலாத்கார மனிதனாக இல்லாமற்போனதேன்? நிதியமைச்சர் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர்தான். ஆனாலும் நாங்கள் சொல்வதை சற்று எண்ணிப் பார்க்கவேண்டும். அப்பொழுது நீங்கள் என்ன செய்தீர்கள்? மேலும் அவரைத்தான் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தி வைத்தீர்கள். தென்பாண்டி மண்டலத்தில் அவருடைய செல்வாக்கைக் கொண்டுதானே நீங்கள் ஆதிக்கம் பெற்றீர்கள். அவரைக் காட்டித்தானே ஜஸ்டிஸ் கட்சியை மிரட்டினீர்கள். அன்று அவரது செல்வாக்கைப் பெற்று வளர்ந்துவிட்டு இன்று அவரை பலாத்கார மனிதர் என்கிறீர்கள். அவ்வளவு பயங்கரமான மனிதரை ஏன் இவ்வளவு தூரத்திற்கு வளர்த்து விட்டீர்கள்? அங்கு இப்பொழுதுள்ள நிலைமையை அடக்குவதாகச் சொல்லி இரண்டு வகுப்பாரிடையே பகையை மூட்டுகிறீர்கள் என்று பயப்படுகிறேன். ஆகவே, நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய நிலைமை, எடுக்கப்படுகிற முறை, எடுப்பதின் அளவு இம்மூன்றிலும் நீங்கள் பெற்றிருக்கிற அரசியல் செல்வாக்கை கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல், எத்தனை அரசுகள் வளர்ந்தன, எத்தனை அரசுகள் அழிந்தன என்ற வரலாற்றை மனதில் வைத்துக் கொண்டு போலீஸ் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் சொன்னார், கீழத்தூவலில் ஐந்து மறவர்களின் கையைக்கட்டியோ காலைக்கட்டியோ கண்ணைக்கட்டியோ போலீஸார் சுட்டார்கள் என்பதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை, ஆனால் போலீஸார் அவ்வளவு பலாத்காரம் உபயோகித்திருக்க வேண்டியதில்லை என்று சொன்னார்கள். எப்படிச் சுட்டிருந்தாலும் சுடப்படக்கூடிய அளவிற்கு அங்கு உணர்ச்சி ஓங்கி இருக்கிறது. வெங்கடேஸ்வரன் அறிக்கையில் 300 பேர்கள் வந்தார்கள், பலாத்காரத்தோடு இருந்தார்கள், ஆயுதங்களை வைத்திருந்தார்கள். ஒரு முறை, இரண்டு முறை சொல்லியும் அக்கூட்டம் கலையாததால் சுட்டார்கள் என்கிறார்கள். இன்னொரு இடத்தில்,

**An armed gang of 500 Thevars which went about setting fire to Palla houses and looting properties in Pacheri, Kaloorani and surrounding villages was encountered by a Special Armed Police party under the lead of Inspector of Police, Manamadurai, at Malavarayanendal at 5 p.m. The Police ordered the mob to surrender their arms. As the mob defied the Police and pelted stones at them, the Taluk Magistrate, Sivaganga, who was with the police party, ordered the police to open fire. Even after three rounds were fired, the mob still advanced towards the police party, whereon three more rounds were fired. One person who was injured as a result of the firing died on the way to the hospital.**

என்று இருக்கிறது. இது 500 பேர். அது 300 பேர். போலீஸின முறையில் கொஞ்சம் தன்மை இருக்கவேண்டுமென்று சொல்வது, அந்த இடத்தில் போலீஸ் அதிகாரி மனிதனை மனிதரென்று சுட்டார்கள். கீழத் தூவலில் சுட்ட அதிகாரி மனிதர்களை குருவிகள் என்று நினைத்து சுட்டார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாக பதில் அளிக்கக்கூடும். 16-ம் தேதி துப்பாக்கி பிரயோகம் செய்த பிறகு 20-ம் தேதி மக்கள் அடங்கியிருந்தார்கள் என்றால், 20-ம் தேதி கையாண்ட நடவடிக்கைகளை ஏன் 16-ம் தேதி கையாண்டிருக்கக் கூடாது? அப்படியென்றால் இந்த ஐந்து பேர் செத்திருக்கமாட்டார்களே.

[Sri C. N. Annadurai] [30th October 1957

கீழத்தூவலில் போலீஸார் சுட்ட விதத்தைப் பார்க்கும்போது இமானுவேல் கொலை பற்றிய துப்புக்களையே அதனால் அழித்துவிட்டார்களோ என்று நினைக்கிறேன். பாகிஸ்தானில் லியாகத் அலிகானை ஒருவன் சுட்டுக் கொன்றபோது எப்படி அங்கிருந்த கூட்டத்தினர் அவனைப் பிடித்துப் பிய்த்துக் கொன்றுவிட்டதினால் யார் சதி செய்தார்கள் என்பதைப் பற்றிய ஆதாரமே பாகிஸ்தான் அரசாங்கத்திற்குக் கிடைக்காது போனது மாதிரி, இமானுவேல் கொலைபற்றி ஏதாவது ஆதாரம் கிடைக்கும்படி இருந்தாலும் போலீஸார் நடந்துகொண்ட விதத்தில் அது கிடைக்காமல் அதை இழந்துவிட்டார்கள். அந்த ஆதாரங்கள்கூட இந்தத் தீயில் பொசுக்கப்பட்டு போயிருக்கலாம். இது ஊகமே தவிர வேறொன்றும் இல்லை. அப்படியும் இருந்திருக்கக்கூடும். விசாரணையில் இருப்பதால் அதைப்பற்றி நான் கூடுதல் சொல்லவில்லை. நமது அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது இவ்வளவு சொல்கிறவர்கள் போலீஸை வாபஸ் வாங்கவேண்டுமென்று பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர் யாரை மனதில் வைத்துக்கொண்டு சொன்னார்களோ, தெரியாது. ஆனால் எங்கள் கழகத்தைப் பொறுத்த வரையில் எங்கள் கழகத்தின் சார்பில் பேசிய அம்மையார் அவர்கள் போலீஸை வாபஸ் வாங்கக்கூடாது என்றுதான் சொன்னார்கள். வாபஸ் வாங்க வேண்டுமென்று சொல்லவில்லை. நடைபெற்ற சம்பவங்களுக்கு ஒரு "ஜுடீஷியல் என்கொயறி" நடத்தப்பட வேண்டுமென்பதைத்தான் நாங்கள் அத்தனை பேரும் வலியுறுத்துகிறோம். அது தேவை என்று சொல்லும்போது, ஏற்கெனவே விசாரித்த அதிகாரி நல்லவர் அல்லவா, திறமைசாலி அல்லவா என்று கேட்பதில் பயனில்லை. அது, அமளி இருந்தபோது நடைபெற்றது. காலையில் ஒரு விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதை ஏற்படுத்திய காலத்தில் அமைதி நிலவும் என்று எதிர்பார்த்தோம் என்றார்கள். ஒரு பக்கத்தில் விசாரணை நடக்க இன்னொரு பக்கத்தில் அமளி நடந்துகொண்டேயிருந்தது. ஜஸ்டிஸ் கட்சி காலத்திலும் சரி, பிரிட்டிஷ் நிர்வாகமுறையிலும் அமளி எல்லாம் அடங்கிய பிறகுதான் விசாரணை நடத்துவது என்ற கொள்கையை கையாண்டிருந்தார்கள். நிதியமைச்சர் சொன்னபோது அமளி பரவாது என்ற எண்ணத்தில் அதைச் செய்தோம் என்கிறார். நாட்டு மக்கள், அதிகாரிகள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளும் அதற்குக் காட்டுகிற காரணங்களும் போதுமானதல்ல என்று எண்ணுகிறார்கள். இந்த அளவிற்குக்கூட மக்களுக்கு மதிப்பளிக்கக் கூடாதா ? எல்லாயிடங்களுக்கும் சேர்த்து ஒரு "ஜுடீஷியல் என்கொயறி" செய்வதில் என்ன தவறு இருக்கிறது ? அதற்கு ஏற்படும் தயக்கம் என்ன ? எந்தக் கட்சியையும் ஆதரிக்கவேண்டும் என்பதற்காக இந்த விசாரணை நடத்தவேண்டுமென்று சொல்லவில்லை. நாங்கள் நேரடியாக சம்பந்தப்பட்ட விஷயங்களில்கூட நீதி விசாரணை கேட்கவில்லை. ஆனால், இந்த விஷயத்திற்குக் கேட்பதற்குக் காரணம், இது, சந்தையிலும், அங்காடியிலும், வீடுதோறும், உணவு விடுதிகள்தோறும், நாலைந்து பேர்கள் கூடுகிற இடங்களில் அடிதடி ஏற்படும் அளவிற்கு இது ஒரு பெரிய பிரச்னையாய் இருந்துவருகிறது. இது பேச்சுத்திறமையைக் காட்டும் பிரச்னையாயிருந்தால் உங்கள் வாதங்களை நான் ஏற்றுக்கொள்வேன். அதனால் எனது வாதத்திறமையை உயர்த்திக்கொள்ளப் பயன்படுத்திக்கொண்டிருப்பேன். இன்று நகரத்தில் எந்தப் பக்கத்தில் போனாலும் மாலை நேரத்தில் உணவு விடுதிகளில் எல்லாம், தெருக்கோடிகளில் எல்லாம், சந்தைகளில், பஸ் ஸ்டாண்டுகளில் எல்லாம் பேசப்படுகின்ற பேச்செல்லாம் இந்தப் பிரச்னையைப்பற்றித்தான். ஐந்து பேரை கையை கட்டிவைத்து சுட்டார்களாமே, இல்லை, கையை கட்டவில்லை என்று இன்னொருவர், நீ பார்த்தாயா என்று மற்றொருவர், நான் பார்க்கவில்லை, பார்த்தவர் ஒருவர் சொன்னார் என்று இன்னொருவர், இவ்விதமாக பேசப்படுவதை நாம் கேட்கின்றோம். இந்த ஆட்சியாளர்கள் இதை ஒன்றை மாத்திரமாவது கணக்கில் வைத்துக்கொண்டு இந்த நிலைமைகளை, இந்த சந்தேகங்களை நீக்கி, நிம்மதியை உண்டு பண்ணவேண்டும். நான், அல்லது எங்கள் கட்சி, இந்த ஆட்சியாளர்களின் பேரில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுவதின் மற்றொரு காரணம், இப்போது சொல்லப்படுகின்ற, தாழ்ந்த நிலையில் இருந்த அந்த பகுதிகளை இந்த ஆட்சியாளர்கள் எந்த லட்சணத்தில் வைத்திருந்தார்கள் என்பதைப்பற்றி நாம் பார்க்கவேண்டும். போலீஸ்



30th October 1957] [Sri C. N. Annadurai]

அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் வேறு காரணங்களை காட்டலாம், அங்கேயெல்லாம் போவதற்கு ரோடு வசதியில்லை, வேறு பல வசதிகளும் இல்லாமல் இருந்தது, அதனால் தான் அந்த பகுதிகளை சீர்திருத்த முடியவில்லை, இன்று நாங்கள் அந்த பகுதிகளில் இவைகளை எல்லாம் போக்குவதற்காக முற்போக்கான பல திட்டங்களை வகுப்பதற்காக **Block Development** போன்ற பல திட்டங்களை ஆரம்பித்து இருக்கின்றோம் என்று வேண்டுமானால் நீங்கள் இன்று சொல்லலாம்.—இப்போதாவது ஆரம்பித்ததற்காக நன்றி—இதுகாறும் ஆரம்பிக்காமல் விட்டுப் போனதற்காக அனுதாபம்—16 மறவர்களை சுட்டுக் கொன்றார்கள் அல்லது 16 ஆதித் திராவிடர்களைச் சுட்டுக் கொன்றார்கள் என்பதோடு பழிக்குப் பழி சரியாகப் போய்விட்டது என்று மக்கள் கருதமாட்டார்கள். அடுத்த ஆண்டில் அவர்கள் எந்த மண்டலத்தில் இருந்தாலும் உங்களை சபிக்கப் போகிறார்கள். முன்னாலேயே படுகொலைகள் நடந்துகொண்டிருந்தது என்று கூறுகின்றீர்கள் இன்று இவற்றிற்கு எல்லாம் காரணம் என்னவென்று கருதுகின்றீர்கள்? மதிப்பிற்குரிய அரசாங்கத்தினர், ஆளும் கட்சியைச் சேர்ந்த அம்மையார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்—கலப்புத் திருமணம் எல்லாம் நடந்துகொண்டிருந்தது என்று—முக்குலத்து மக்களிடம் பெண் கேட்பதற்கு அந்தப் பகுதிகளில் போனால் குரல் கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள்—சுயமரியாதை இயக்கம் தோன்றின காலத்திலிருந்து கலப்புத் திருமணம் நடந்து வந்திருக்கிறது. உண்மையில் அந்தப் பகுதிகளில் எல்லாம் சுயமரியாதைக் கழகம் அதிகமாகப் பரவியிருந்தால் கலப்புத் திருமணம் அதிகமாக நடந்திருக்கும். சுயமரியாதைக் கழகம் மற்ற பல பகுதிகளில் அதிகமாகப் பரவியிருக்கின்ற காரணத்தினால்தான் இன்று நாட்டில் பல பகுதிகளிலும் கலப்புத் திருமணம் அதிகமாக நடைபெற்று வருகிறது. கலப்புத் திருமணத்தில்தான் சுவை இருப்பதாக அறிந்ததின் காரணமாகத்தான் பல பகுதிகள் வரவேற்றன. சுயமரியாதை இயக்கம் பரவி இருந்திருக்குமானால் முதுகுளத்தூர் வட்டாரத்திலும் ஜாதி வெறி தலைவிரித்தாடி இருக்காது. இன்றைக்கு யார் மீது குற்றச் சாட்டுகளைக் கூறுகிறீர்களோ, அவர் மூலமாகத் தான் கழிந்த 25 ஆண்டு காலமாக காங்கிரஸ்காரர்கள் வோட்டுகள் வாங்கிக்கொண்டு இருந்தார்கள். ஆனால் இன்றையதினம் அந்த வோட்டுகள் காங்கிரசுக்குக் கிடைக்கவில்லை—மேலும் எங்கே கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயம் ஆட்சியாளர்களுக்கு, எங்கே இந்த வோட்டுகளை எல்லாம் திரு வி. கே. ராமசாமி முதலியார் கொண்டுபோய் விடுவார்களோ என்ற பயம். எங்களை பொறுத்த வரையிலும் அவர்களுக்கு வாங்கிக் கொடுத்தாலும் நிச்சயமாக எங்களுக்கு வாங்கித் தரமாட்டார் என்பது நிச்சயம். ஆகவே எங்களுக்கு அதைப்பற்றிக் கவலையே இல்லை. ஆகவே வோட்டு வாங்குவதற்கு மாத்திரம்தான் இவைகளை எல்லாம் செய்கின்றார்களே தவிர அந்தப் பகுதியிலுள்ள ஆதித்திராவிட மக்கள் தலைநிமிர்ந்து நிற்கக் கூடிய அளவுக்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள். இன்றைக்கு 2,735 ஆதித்திராவிட மக்களுடைய வீடுகளும், 107 தேவர்களுடைய வீடுகளும் சாம்பலாக்கப்பட்டன என்று கணக்குக் கொடுக்கின்றீர்கள். இந்த 2,735 ஆதித்திராவிடர்களுடைய வீடுகள் எல்லாம் வெறும் ஓலைக் குடிசைகள்தானே. இவர்களை எல்லாம் இந்தக் குடிசைகளில் தானே இதுவரை விட்டு வைத்திருக்கிறீர்கள். இன்றுவரை அவர்களுக்கு என்ன செய்து கொடுத்திருக்கிறீர்கள். இதுவரை நீங்கள் எங்கே போயிருந்தீர்கள். ஆதித்திராவிடர்களாகிய அவர்கள் சதும் சொட்டச் சொட்ட முழங்கால் அளவுக்கு சேற்றிலே வாழ்கின்றார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஆதித்திராவிடர்கள் இறந்துபோனால் அவர்களுடைய பிணத்தைத் தூக்கிக் கொண்டுபோவதற்கு பக்கத்திலுள்ள வயலைத் தாண்டி கடந்து போக வேண்டும். நல்ல பாதை கிடையாது. வயல் முதலாளிகள் பாதையை விட்டுத் தரமாட்டேன் என்று சொல்லுகின்றார்கள். இதனை எல்லாம் அமைச்சர் கக்கன் அவர்கள் அங்கு வந்திருக்கும் நேரத்திலே அவர்களிடத்திலே எடுத்துக் காட்டினார்கள். நண்பர் ஏழுமலை அவர்களும் அந்தப் பகுதிகளுக்கு அவர்கள் கூட வந்திருந்தார்கள். நான் [illegible] பற்றிக் குறிப்பிடுகிறேன். நீங்கள்

இதுகாறும் ஆதித்திராவிட மக்களை சேற்றில் அழுத்தி, கொடுமையில் வைத்திருக்கவில்லை என்றால், நான் அவ்வாறு கருதமாட்டேன். இது தான் இவைகளுக்குக் காரணமே தவிர வேறு ஒன்றும் இருக்க முடியாது. இவ்வளவு நாட்களாக உங்களுடைய கவனம் எங்கே செலுத்தப்பட்டிருந்தது. அந்தப் பகுதிகளில் ஏன் உங்கள் கவனத்தைச் செலுத்தாமல் இருந்திருக்கிறீர்கள். அவர்கள் எல்லாம் காந்தீயத்தின் அடிப்படையிலே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள்தானே. நீங்கள் வேண்டுமானால் காந்தீயத்திற்குப் புறம்பாகப் போவீர்கள். சுவாமி சகஜானந்தா போன்றவர்கள் காந்தீயத்திலிருந்து. விலகிப் போக மாட்டார்கள். 2,735 வீடுகள் எரிந்து போய்விட்டன. வீடு ஒன்றுக்கு 30 ரூபாய் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. இப்பொழுது 100 ரூபாய் கொடுக்கப்பட்டதாக போலீஸ் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இவைகள் மாத்திரம் போதுமா என்று கேட்கின்றேன். நாம் பேச வேண்டியவைகளை எல்லாம் அந்தப் பகுதியில் போய்ப் பேசி இருக்க வேண்டும். இந்தச் சட்டசபைக் கூட்டத்தையே பரமக்குடியில் நடத்தி இருக்கலாம். இவைகள் எல்லாம் அந்த நாட்டில் இருக்கின்ற மக்களுக்கு தெரிந்து இருக்க வேண்டும். அதற்காகத்தான் இவைகளைச் சொல்லுகின்றேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. அமைச்சர்கள் ஏன் அந்தப் பகுதிகளுக்குப் போகவில்லை என்று தோழர் சின்னத்துரை அவர்கள் கேட்டதற்கு இவர்கள் எல்லாம் எங்கே போனார்கள் என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நாங்கள் எல்லாம் போய் என்ன செய்ய முடியும்? நாங்கள் போக வேண்டும் போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டபோது கலகம் வரட்டும் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னீர்கள். பாதுகாப்பு வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் எல்லாம் அமளிகள் வரட்டும், வந்தால் அவர்கள் அடக்கிக் கொள்வார்கள் என்று சொல்லுகின்றீர்கள். எனவே எதிர்க்கட்சிக்காரர்கள் போய் ஒன்றும் செய்ய முடியாது. ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள்தான் போய் இருக்க வேண்டுமென்று சின்னத்துரை அவர்கள் கேட்டதில் என்ன தவறு இருக்கிறது? அவர்கள் ஏதோ உணர்ச்சி வயப்பட்டு கேட்டார்களே தவிர, உங்களைப் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல. புயல் அடித்த நேரத்தில் எல்லாம் அந்தப் பகுதிகளுக்குப் போயிருந்தால் வோட்டு கிடைத்திருக்கும். நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் எனக்கு முன்பே அரசியலில் நீண்ட காலமாக அனுபவம் பெற்றிருப்பவர்கள் என்று நினைக்கின்றேன். என்னுடைய தந்தை அரசியலில் ஈடுபட்டிருந்த காலத்திலேயிருந்து ஈடுபட்டிருக்கக் கூடியவர். அவருடைய மகனுடைய வயதிற்குத்தான் நான் இருப்பேன். மகன் இருக்கிறாரோ இல்லையோ, எனக்குத் தெரியாது.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : மகன் இருக்கிறார்.

* **SRI C. N. ANNADURAI** : இருக்கிறார் என்றால் மகிழ்ச்சி. எனவே வோட்டு வாங்க வேண்டுமென்ற எண்ணமிருந்தால் புயல் அடித்த நேரத்தில் எல்லாம் அங்கு போயிருக்க வேண்டும். ஆனால் இப்போதல்ல அதற்குக் காலம். இப்போது தன்னைச் சுற்றி ஆட்களை வைத்துக்கொண்டு அடிபடாமல் திரும்பி வந்தாலே போதும். பல கலைக் கழகப் பக்கம் திரும்பாவிட்டாலும் கூட, இந்நாட்டு மக்களை, இந்த நாட்டு அரசியலை நன்றாக நிர்ணயித்து வைத்திருக்கிற நமது முதலமைச்சர் அவர்கள் புயல் அடிக்கிற நேரம் பார்த்து அங்கு போனார்கள். எந்த இடங்களுக்கு எந்த நேரத்தில் போனால் வோட்டு கிடைக்கும், எந்த நேரத்தில் போனால் வோட்டு கிடைக்கும், எப்போது வோட்டு, எப்போது வேட்டு, என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (கை தட்டல், ஆரவாரம்). அவர்கள் இதை எல்லாம் நன்கு அறிந்திருக்கின்றார்கள். எவ்விதமிருந்தாலும் இந்தப் பகுதிகளில் எல்லாம் நீங்கள் போக வேண்டிய நேரங்களில் போகவில்லை என்று தான் நாங்கள் உங்களை குற்றம் சாட்டுகிறோம். ஆகவே உங்களிடம் ஒரு துளி மாசு இருந்தாலும் கூட அதை நீக்கிக் கொள்ள வேண்டும். பாகவதம், இராமாயணம் இவைகளைப் பற்றி நமது போலீஸ் அமைச்சர் அவர்களுக்கு நிரம்ப நம்பிக்கை உண்டு என்று நம்புகின்றேன். யாரோ ஊரில் ஒருவன்



உத்தம சீதை களங்கப்பட்டிருக்கிறாள் என்று சொன்னதற்காக உத்தம சீதை நெருப்பில் இறங்க வேண்டுமென்ற கடும் சோதனையை இராமபிரான் நடத்தினதை எல்லாம் இராமாயணத்தில் நீங்கள் படிக்கின்றீர்கள். அந்த நேரத்திலும் சீதை ராமனுக்குக் கிடைக்கவில்லை. பூமி பிளந்து உள்ளே போய்விடுகின்றாள். எங்கோ ஒருவன் சொன்ன குற்றத்திற்காக ஒரு சக்கரவர்த்தியே இவ்விதம் பரிசோதனை நடத்தி இருக்கிறார் என்றால், எவ்வளவோ ஆசாபாசங்கள் நிறைந்திருக்கும் இந்த உலகத்தில் இருக்கும் நீங்கள் அதுவும் எங்களைப் போன்ற ஆட்களையும் துணைகொண்டு இருக்கக் கூடிய நீங்கள் செய்கிற காரியங்களிலும் தவறு இருக்கத்தான் செய்யும். அதை நீக்கிக் கொள்வதற்கு நீதி விசாரணை வைத்தால் என்ன? நீதி விசாரணை வைப்பதின் மூலம் நீங்கள் உங்களையே பரிசுத்தப்படுத்திக் கொள்ள முடியும். அப்போது தான் ஆளும் கட்சியினருக்கு சுட மட்டும் தெரியும் என்றில்லாமல் மருந்தும் தடவிடத் தெரியும் என்று பொதுமக்கள் புரிந்து கொள்வார்கள். அதற்காகவாவது இந்த நீதிமன்ற விசாரணையை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்கள் எதிர் கட்சிகள் அல்ல. நாங்கள் எதிர் கட்சியாக இருந்திருந்தால் 'கீழத் தூவல்' கூட ஒரு சமயம் யோசித்துத்தான் நடந்திருக்கும். இனியாவது இப்படி நடக்காமல், அதற்கு பதிலாக அற நெறியிலும் அன்பு நெறியிலும் ஆட்சி நடத்தப்படும் என்பதற்கு உத்தரவாதம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஆட்சியாளர்கள் கையாண்ட முறையில் நம்பிக்கை இல்லை என்று சொல்லி இந்தப் பிரச்னை குறித்து இப்படிப் பேசியிருக்கிறோம் என்று கூறிக்கொண்டு, இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

**MR. SPEAKER** : கடைசியாக, எதிர் கட்சித்தலைவர் ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் பேச வேண்டும். அவருடைய பேச்சு முடியும் வரையிலும் இந்த சபை உட்கார வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. உங்கள் எல்லோருக்கும் அது சம்மதம் தானே? (சிறிது நேரத்திற்குப் பிறகு) ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் பேசி முடியும் வரை இந்த சபை உட்கார்ந்திருந்து, அதன் பிறகு கலையும்.

**SRI M. P. PERIYASAMY** : கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ அண்ணாதுரை பேசியபோது, ஹரிஜனங்களைப்பற்றிய வரையில் இரண்டு விதமாகப் பேசினார்கள். ஒரு இடத்தில் ஹரிஜனங்களுக்காகப் பேசுவது போல் பேசினார். ஒரு இடத்தில் சுட்டுக்கொன்றதை மட்டும் பேசினார். ஒரு இடத்தில் ஹரிஜனங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொன்னார் போலீசார் சுட்டதைப்பற்றி....

**THE HON. SRI C. SUBRAMANIAM** : ஸ்ரீ அண்ணாதுரை அவர்கள் தான் பேசுவதற்கு முன்பு, "இந்த விவாதத்தில் கலந்து கொள்ளாமல் இருந்திருந்தால் சந்தோஷப்பட்டிருப்பேன்" என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட சங்கடமான நிலையில் அவர் பேசியிருக்கும்போது, அவரை "குறுக்கி முறுக்கி" கேள்விகள் கேட்பது பொருத்தமில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். (சிரிப்பு)

**SRI V. K. RAMASWAMI MUDALIYAR** : கனம் சபாநாயகர் 4-55
அவர்களே, இந்த மூன்று தினங்களாக, சமீபத்தில் ராமநாதபுரத்தில் p.m.
நடந்த கலவரங்களைப்பற்றி....

(சில கனம் அங்கத்தினர்கள் எழுந்து சென்றனர்.)

**MR. SPEAKER** : எதிர்கட்சித்தலைவர் பேசும்போது கனம் அங்கத்தினர்கள் எழுந்து போகவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எழுந்துசெல்வது, அவர்களை அவமதிப்பதுபோல் ஆகும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

* **SRI V. K. RAMASWAMI MUDALIYAR** : ராமநாதபுரத்தில் நடந்த கலவரத்தைப்பற்றி இங்கே பேசப்பட்ட பேச்சுகள் நல்ல முறையில் நிகழ்த்தப்பட்டன. என்னைப் பொறுத்தவரையில், அங்கே நடந்த

[Sri V. K. Ramaswami Mudaliyar] [30th October 1957

சம்பவங்களை மூன்று விதமாகப் பிரித்துக்கொண்டு பேச விரும்புகிறேன். முதலாவதாக, சமீபத்தில் நடந்த கலவரங்கள் ஜாதிச் சண்டையா அரசியல் சண்டையா என்று ஆலோசிக்கவேண்டும். இரண்டாவது, இந்தப் பிரச்னை சம்பந்தமாக, அரசாங்கம் தான் செய்ய வேண்டிய காரியங்களை நிறைவேற்றியிருக்கிறதா என்பது. மூன்றாவது, ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் மீது கொண்டுவரப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள். ஆகவே, இந்த விஷயத்தை மூன்று விதமாகப் பிரித்துக்கொண்டு என்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறேன்.

இந்தக் கலவரங்கள் ஜாதிச் சண்டை என்று சில கனம் அங்கத்தினர்களால் சொல்லப்பட்டது. சமீப காலத்தில்தான் இவை ஏற்பட்டன என்று சில கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள், தமது அறிக்கையில் முன் நாட்களில் அங்கே நடந்த விஷயங்களைப் பற்றிச் சொன்னார்கள். பத்து வருஷங்களுக்கு முன்பு இலஞ்சாம்பூர் கிராமத்தில் ஜாதிச் சண்டை நடந்தது என்று சொன்னார்கள். அந்தச் சண்டை ஹரிஜனங்களுக்கும் மறவர்களுக்கும் இடையே ஏற்பட்டதேயொழிய, அது ஜாதிச் சண்டை அல்ல. அதுவும் ஒரு நிலத் தகராறு சம்பந்தமாக ஏற்பட்டது என்று அறிந்துகொண்டேன். அப்போதுகூட இந்த மாதிரியான பயங்கர ஆயுதங்களும் குண்டுகளும் கண்டுபிடிக்கவில்லை. இப்போது அந்த மாதிரியான ஆயுதங்களைப் போலீசார் கைப்பற்றியிருக்கிறார்கள். இது ரொம்பவும் வருந்தத்தக்க விஷயம். தேர்தலில் அங்கே காங்கிரஸ் தோல்வியடைந்ததன் காரணமாக சில வகுப்பினரால் தூண்டிவிடப்பட்ட கலவரம்தான் இது என்று நான் சொல்ல விரும்புகிறேன். அங்கே காங்கிரஸ் கூட்டங்கள் போடப்பட்டு, பேச்சுக்கள் பேசி, காங்கிரஸ் பிரசாரம் செய்யப்பட்ட பிறகு, காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டது இந்தக் கலவரம். தேர்தலில் தாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு தங்களுக்கு வெற்றி கிடைக்காததால் சில பகுதியினர் ஆத்திரப்பட்டு இம்மாதிரியான காரியங்களைச் செய்திருப்பதாக நான் அறிந்தேன்.

இரண்டாவதாக அரசாங்கம் தன் பொறுப்பை இந்தப் பிரச்னை சம்பந்தமாக நிறைவேற்றியிருக்கிறதா என்பதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதலாவதாக, அரசாங்கம் இந்தக் குற்றத்தை முதலிலிருந்தே தடுத்திருக்கவேண்டும். அதை அநேக கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். மற்றொன்று, இந்தக் குற்றம் நிகழ்ந்ததற்கான அடிப்படையான காரணத்தை பரிசீலனைசெய்து கண்டுபிடித்து அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கவேண்டும். அரசாங்கம் இரண்டையும் செய்யவில்லை. தேர்தல் முடிந்த பிறகு 144 பிரிவின்படி முதுகுளத்தூரில் சில பகுதிகளில் தடையுத்தரவு போடப்பட்டது. அந்தத் தடையுத்தரவை மீறி ஒருவரும் நடக்கவில்லை. அதற்குப் பிறகு, அப்பிராந்தியங்களை சேர்ந்தாற்போலுள்ள மற்ற பிராந்தியங்களில் தடையுத்தரவை அமலுக்குக் கொண்டுவரவில்லை. இதைப் பார்க்கும்போதும் கேட்கும்போதும் நாம் ரொம்பவும் வருத்தப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்தப் பிரதேசம் பூராவிலும் 144 தடையுத்தரவைப் போட்டிருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். அங்கே கொலை நடந்தது பற்றி யாருக்கும் சந்தேகமில்லை. அது மிகவும் வருந்தத்தக்க விஷயம். ஏராளமான மக்கள் சண்டையினால் கொலையுண்டாவதை யாரும் பார்த்திருக்க முடியாது. இது ரொம்பவும் பரிதாபகரமான விஷயம். அதற்கு அடுத்தபடியாக ராமநாதபுரம் ஜில்லாவில் அந்தப் பக்கத்து சென்னை சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து கலெக்டரைப் பார்த்து, கலகங்கள் பரவி வருவதாக முறையிட்டு, அவசியமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று சொல்லியும், நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதன் காரணமாகக் கலகம் பரவியதாகவும் சொல்லப்பட்டது. சில அதிகாரிகளை மாற்றும்படி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கேற்ப தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாததாலும் கலகம் பரவி விட்டது. பின்னர் செப்டம்பர் மாதம் 10-ம் தேதி ஸ்ரீ இமானுவேல் அவர்கள் கொல்லப்பட்டார்கள். அந்தக் கொலை விஷயம் மிகவும் வருந்தத்தக்கது ; ரொம்பவும் கண்டிக்கத்தக்கது. ஆனால் அவர் கொலையுண்டவுடன் சர்க்கார் எடுக்க வேண்டிய நடவடிக்கையை சரிவர எடுக்கவில்லை. அதைப்பற்றி எனக்கு



30th October 1957] [Sri V. K. Ramaswami Mudaliyar]

முன்பு பேசிய ஸ்ரீமான் அண்ணாதுரை அவர்கள் சொன்னார்கள். இது சம்பந்தமாக நாளதுவரையிலும் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் அது பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள்.

இருந்தபோதிலும் அதற்கு எவ்வளவு அவசரமாக எந்த முறையில் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டுமோ அதை எடுக்கவில்லை. அதன் காரணமாக பின்னால் கீழ்த்தூவலில் ஒரு கலகம் ஏற்பட்டதாக வதந்தி வந்தது. இந்த கீழ்த்தூவல் கிராமத்திற்கு நானும் சிலரும் போயிருந்தோம். நாங்கள் போய் பார்த்தபோது அது ஒரு பெரிய சுடுகாடாகத்தான் காட்சி அளித்தது. நாங்கள் கிராமத்திற்கு போனவுடன் அங்கே ஒருவரும் தென்படவில்லை. அதிலிருந்து சுற்றுப்பக்கம் சுமார் இரண்டு பர்லாங்கு சுற்றளவில் சுற்றிப் பார்த்தோம். கடைசியாக எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி பயந்துகொண்டிருந்தவர்கள் இரண்டொருவராக வந்தார்கள். அவர்கள் வந்தவுடன் அங்கு நடந்த விஷயங்கள் பூராவையும் கேட்டோம். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "போலீஸ்காரர்கள் வந்தார்கள், முக்கியஸ்தர்களை பக்கத்திலுள்ள ஜில்லா போர்டு ஸ்கூலில் அடைத்து வைத்து அவர்களில் ஐந்து பேரை எடுத்து அவர்களுடைய கண்ணைக்கட்டி, கையைக்கட்டி பக்கத்திலுள்ள கண்மாயில் கொண்டு போய் சுட்டார்கள்" என்று சொன்னார்கள். இது ரொம்பவும் வருந்தத்தக்க விஷயம். அப்பொழுதும் அங்கே 144 செக்ஷன்படி உத்தரவு போட்டதாகத் தெரியவில்லை. அதன் பிறகு 16-ம் தேதி, இலஞ்சாம்பூரில் கொலை நடந்திருக்கிறது. கீரந்தையிலும் மாலை நிகழ்ச்சிகள் ஏற்பட்டு சுமார் ஏழு பேர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கு போலீஸ் பந்தோபஸ்து கொடுத்திருந்ததை வாபஸ் வாங்கி விட்டார்கள். அதனால்தான் அங்கே கொலைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. இப்படித்தான் எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. எந்தக் காரணத்திற்காக அங்குள்ள போலீஸ் பந்தோபஸ்தை சர்க்கார் எடுத்துவிட்டார்கள் என்பதைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது அதைப் பற்றி விரிவாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக அருங்குளத்தில் பெரிய கலவரம் நடக்கிறது. இப்படி கலவரம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும்போது போலீஸ் பந்தோபஸ்தை வாபஸ் வாங்க வேண்டிய அவசியம் என்ன ? பிறகு 16-ம் தேதி காலை இலஞ்சாம்பூரில் தேவர்களுக்கும் வீராம்பல் கிராமத்தின் ஹரிஜனங்களுக்கும் கைகலப்பு ஏற்படுகிறது. இது எல்லோருக்கும், முக்கிய போலீஸ் அதிகாரிகளுக்கும் நடக்கும் என்று தெரியும். இதில் ஐந்து மறவர்கள் இறந்தார்கள். இது அரசாங்கத்துக்கும் நன்றாகத் தெரியும். இப்படி இருக்கும்போது இலஞ்சாம்பூரிலிருந்து வீராம்பலுக்கு போய் ஏதாவது சண்டை நடக்கும் என்பதைப்பற்றி போலீஸார் எதிர்பார்த்திருக்க வேண்டும். அதற்கான பந்தோபஸ்து நடவடிக்கைகளை அவர்கள் எடுத்திருக்க வேண்டும். அப்படி எடுக்க தவறிவிட்டார்கள்.

பிறகு 19, 20 தேதிகளில் நரிக்குடி, உளுத்திமடை முதலிய கிராமங்களுக்கு போலீஸார் கும்பல் கும்பலாகச் சென்று லாரியில் ஜனங்களை ஏற்றிக்கொண்டு உளுத்திமடையில் ஐந்து பேர்களை கோரமாக சுட்டுக் கொன்றிக்கிறார்கள். அதைப்பற்றி சர்க்காருக்கு தந்தி மூலமாகவும் பெடிஷன் மூலமாகவும், அநேகம் மனுக்கள் மூலமாகவும் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் என்ன தெரிகிறது என்றால் ஹரிஜனங்களையும், போலீஸார் மறவர்களைச் சுட்டுக் கொல்வதற்கு உபயோகித்ததாகத் தெரிகிறது. பிறகு ஹரிஜனங்களை படுகொலை செய்யப்பட்டபோதும் போலீஸ் அதிகாரிகள் வாய் மூடிக்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இதனால் இரண்டு வகுப்பினரும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கனம் மந்திரிகள் இரண்டு பேர்கள் அந்தப் பிராந்தியத்தில் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார்கள். அவர்கள் எப்படிச் செய்தார்கள் என்றால் சுமார் 6 அல்லது 7 மணி நேரம்தான் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார்கள். அதுவும் வாயு வேகம் மனோ வேகமாகச் செய்திருக்கிறார்கள். ஒரு நாள் பூராவும் செய்யவில்லை. நிறைய போலீஸ் பந்தோபஸ்தை

வைத்துக்கொண்டு ஜீப் கார்களில் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார்கள். அங்குள்ள கிராம மக்கள் ஒருவரும் அவர்களை நெருங்கவிடாமல் போலீஸ் பந்தோபஸ்து இருந்திருக்கிறது. கிராமத்தார்கள் தங்களுடைய குறைகளைச் சொல்லிக்கொள்ள அவர்களால் முடியவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM: நாங்கள் பல கிராமத்தார்களைக் கண்டு பேசினோம். கிராமங்களுக்குச் சென்றவுடன் போலீஸ் காரர்களை ஒதுங்கி நில்லுங்கள் என்று சொல்லிவிட்டு கிராமத்தார்களை அழைத்து என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்றுதான் சொன்னோம். அதனால் எதிர்க்கட்சி தலைவருக்குக் கிடைத்த தகவல் தவறாக இருக்கும் என்று தோன்றுகிறது. அவருக்கு தவறான தகவல்தான் கிடைத்திருக்க வேண்டும்.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR: மக்கள் சொன்னதைத்தான் நான் சொல்லுகிறேன். நான் ஏன் தவறு சொல்லவேண்டும்? போலீஸ் காரர்களை வைத்துக்கொண்டு போனதால் அவர்களால் குறைகளை சொல்லிக் கொள்ள, ஒரு தகவலும் கொடுக்க முடியவில்லை. அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றுதான் எங்களிடம் அவர்கள் முறையிட்டார்கள்.

அடுத்தபடியாக ஸ்ரீ முத்துராமலிங்க தேவரைப்பற்றிய மூன்றாவது பிரிவாகிய குற்றச்சாட்டுகளைப்பற்றி சொல்லவேண்டியதாக இருக்கிறது. தேவர் அவர்களைப்பற்றி பேசும்போது 1930-ம் வருஷத்திலிருந்து 1938-ம் வருஷம் வரையில் அநேக விதமான குற்றங்கள் இருப்பதாகவும் இன்னும் பலவிதமான சந்தேகங்கள் இருப்பதாகவும் சொன்னார்கள். நாகராஜ அய்யர் கொலை செய்யப்பட்டதும் சொல்லப்பட்டது. அது தேவர் அவர்களால் செய்யப்பட்ட கொலைதானா? தேவர் அவர்களுடைய சிநேகிதன் சோலைக்குடும்பன் என்பவன் அவரை கொலை செய்ததாகச் சொல்லப் பட்டது. இது உண்மையாகவே இருந்தாலும் ஒருவன் செய்ததற்கு தேவர் என்ன செய்ய முடியும், அவரைப்பற்றி சொல்வதற்குக் காரணம் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. தவிர சில கோர்ட்டுகளில் அவருக்கு தண்டனை கிடைத்திருப்பதாகவும் நமது நண்பர் கனம் ஸ்ரீநிவாச அய்யர் சொன்னார். எனக்கு வந்த தகவலிலிருந்து என்ன தெரிகிறது என்றால் கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல என்றும் கீழ் கோர்ட்டுகளில் அவருக்கு தண்டனை இருந்தபோதிலும் மேல் கோர்ட்டில் பூராவும் அவருக்குச் சாதகமாகத்தான் தீர்ப்புச் சொன்னார்கள் என்றும் தெரிய வருகிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் ஹைக்கோர்ட்டு ஜட்ஜ்மெண்டைப் பார்த்திருந்தால் அவர் சொல்வது தவறு என்பது தெரியவரும்.

*SRI V. K. RAMASWAMI MUDALIYAR: நான் சொல்வது தவறாக இருந்தால் நாளை அவர் அதற்கு பதில் சொல்லவேண்டும். தவிர கனம் தேவர் அவர்கள் 1930–38-ல் எல்லாம் காங்கிரஸ் கட்சி சட்டசபை அங்கத்தினராக இருந்திருக்கிறார். மறுபடியும் 1945-ம் வருஷத்தில் அவர் போட்டி இல்லாமல் காங்கிரஸ் சார்பாக சட்டசபை அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதைப்பற்றி நான் மட்டும் சொல்லவில்லை. கனம் சி. என். அண்ணாதுரை அவர்களும் சொல்லி இருக்கிறார். அப்படி இருக்கும்போது இப்படிப்பட்ட குற்றங்களையெல்லாம் அவர் மீது சாட்டுவானேன்? அப்படி இருந்தும் 1945-ம் வருஷத்தில் காங்கிரஸ் சார்பாக சட்டசபைக்கு நின்று போட்டி இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டி ருக்கிறார். அது அவருடைய செல்வாக்கை காட்டுகிறது அல்லவா? இதை நன்றாக சர்க்கார் யோசித்துப் பார்க்கவேண்டும். 1947-ம் வருஷத்தி லிருந்து இன்னும் பலவிதமான சரித்திரங்களைப்பற்றி கனம் ஸ்ரீநிவாச அய்யர் சொன்னார். 1942-ம் வருஷத்திய சுதந்தரப் போராட்டத்தில் அநேகம் பேர்கள் சிறை சென்றார்கள். வெள்ளைக்கார அரசாங்கம் இருந்த போது அநேகம் பேர்கள் பேரில் குற்றச்சாட்டுகள் சுமத்தினார்கள். அநேகம் பேர்களின் பேரில் பொய்க் குற்றச்சாட்டுகள்கூட சுமத்தினார்கள். அது எல்லோருக்கும் தெரியும். தேசிய இயக்கத்தில் ஈடுபட்டவர்களும் அதேமாதிரி



காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து தியாகம் செய்து சிறை சென்றவர்கள் மந்திரி சபையிலும் வெளியிலும் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். அதேமாதிரிதான் தேவர் அவர்களும் ரொம்பவும் தியாகம் செய்து அதற்காக சிறையும் சென்றிருக்கிறார். அதையெல்லாம் காட்டி அப்படிப் பட்ட குற்றங்களையெல்லாம் சுட்டிக் காட்டுவது எப்படி பயன்படும் என்பது எனக்கு தெரியவில்லை. அது ஒரு குற்றமாகுமா என்பது என்னுடைய கேள்வி.

தேவர் அவர்களை இப்பொழுது முக்கியமாக தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் அரசாங்கம் சிறையில் வைத்திருக்கிறார்கள். இந்த சட்டமானது, "லாலெஸ் லா" என்று சொல்வார்கள். வெள்ளையர் காலத்தில் கையாண்ட சட்டம் இது. இந்த சட்டத்தைப்பற்றி சமீபத்தில் லோக் சபையில் அங்கத்தினர்கள் கேட்டபோது ஒரு கட்சியை இழிவு படுத்துவதற்காகவோ ஒரு கொள்கையை அனுஷ்டிப்பதற்காகவோ இதை உபயோகப்படுத்த மாட்டோம் என்றும் எங்கே அவசியமாக உபயோகப்படுத்தவேண்டுமோ அங்கேதான் அதை உபயோகப்படுத்துவோம் என்றும் மதிப்பிற்குரிய பிரதம மந்திரி அவர்கள் சொல்லி இருக்கிறார்.

ஆனால், இப்பொழுது என்ன நடக்கிறது என்றால், எங்கெங்கே சர்க் காருக்குச் செல்வாக்கு இல்லையோ, எப்படி எப்படி இவைகளை துஷ் பிரயோகம் செய்யலாமோ, அம்மாதிரியெல்லாம் வழி எடுத்துக்கொண்டு அவர்கள் இஷ்டப்படி தடுப்புக்காவல் சட்டத்தைப் போட்டிருக்கின்றார்கள். அவர் பேரில் கொலைக் குற்றம் இருந்தாலும் சரி, இந்தியன் பீனல் கோட் 302-வது பிரிவின் கீழ் அவரை "சார்ஜ்" செய்யலாம். அதன்படி அவரை விசாரணைக்குக் கொண்டுவரலாம். "Treason"க்காக குற்றம் சாட்டினாலும் ஏற்கெனவே இருக்கும் இந்தியன் பீனல் கோட்டின் பிரிவின்கீழ் கொண்டுவரலாம். இம்மாதிரி சட்டபூர்வமாக வழி இருக்கும் போது தடுப்புக்காவல் சட்டத்தை அவருக்கு ஏன் போட்டிருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

இது எல்லாம் அரசியல் காரணம் என்று சில பேர் சொல்கிறார்கள். அப்படி அரசியல் காரணமாயிருந்தால், எதிர்க்கட்சி வளருமா, ஜன நாயகம் வளருமா என்று நான் கேட்கிறேன். சுற்றுப் பிராந்தியங்களில் என்ன வதந்தி பரவி வருகிறது? "இந்தச் சட்டத்தை உபயோகப்படுத்தி ஸ்ரீமான் காமராஜ் நாடார் அவர்கள் பேரில் இருக்கும் எலெக்ஷன் கேசுக்காகத்தான் இம்மாதிரி தேவர் அவர்களை உள்ளே வைத்திருக்கின் றார்கள்" என்று பெரிய வதந்தி பரவுகிறது. அந்த வதந்தியை நிறுத்த வேண்டுமானால், ஸ்ரீமான் முத்துராமலிங்கத் தேவரை விடுதலை செய்ய வேண்டும். எலெக்ஷன் கேஸ் நடப்பதன் காரணமாக இம்மாதிரி செய் கின்றார் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

நீதிபதி விசாரணை தேவையில்லை என்று ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் சொன்னார்கள். உண்மை. ஆனால், க்ரிமினல் ப்ரொசீஜர் கோட் 197வது செக்ஷன்படி "எக்ஸ்ட்ராடினரி க்ரிமினல் ஜூரிஸ்டிக்ஷன்" என்று இருக்கிறது. அதற்கு கேஸ் போட்டு, மாஜிஸ்ட்ரேட் மூலமாக பிராது செய்து, ஹைகோர்ட்டு அதைக் கேட்க சர்க்கார் அனுமதி கொடுக்க வேண்டும். இராமநாதபுரம் ஜில்லாவிலே இருந்து வந்திருக்கும் மெம்பர்கள் கேஸ் போடப்போவதாகவும், அதற்கான நடவடிக்கைக்கு என்ன செய்யவேண்டுமோ, அதற்குத் தயார் செய்து வருவதாகவும் சொல்கிறார்கள். அம்மாதிரி கேஸ் போடுவதற்கு இம்மாதிரி ப்ரொவிஷன் இருக்கிறது. அதுதான் நீதிபதி விசாரணை என்று சொல்கிறார்கள். ஸ்ரீமான் ஸ்ரீனிவாச அய்யர், "நீதிபதி விசாரணைக்கு சட்டம் இல்லை" என்று சொன்னார்கள். நான் சில பேர்களைக் கலந்து ஆராய்ச்சி செய்தேன். 179-வது செக்ஷனில் ஒரிஜினல் க்ரிமினல் ஜூரிஸ்டிக்ஷன் பேரில் ஹை கோர்ட் போடவேண்டும். அதற்கு கவர்ன்மெண்ட் சாங்க்ஷன் கொடுக்க வேண்டும். அதைத்தான் நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தவிர, இந்தக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பேரிலும், உத்தி யோகஸ்தர்கள் யார் யார் சம்பந்தப்பட்டார்களோ அவர்கள் பேரில் சர்க்கார் கேஸ் போடப்போவதாகவும் நான் கேள்விப்படுகிறேன். அம்ம போடுவதற்கும் அவர்களுக்கு சர்க்கார் "பர்மிஷன்" கொடுக்கவே

[Sri V. K. Ramaswami Mudaliyar] [30th October 1957

தவிர, இந்தப் பிராந்தியத்தில் கேசில் சம்பந்தப்பட்ட அனேக போலீஸ் அதிகாரிகள் பேரில் குற்றச்சாட்டுக்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவர்களை உடனடியாக மாற்றுவதற்கும் சர்க்கார் முயற்சிக்கவேண்டும். அவர்களை மாற்றிவிட்டு எந்த அதிகாரிகளையாவது போடுவதைப்பற்றியும் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. அவர்கள்பேரிலே அனேக குற்றச்சாட்டுக்கள் போட்டு சர்க்காருக்கும் பல இடங்களிலிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றன. உடனடியாக சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இம்மாதிரி நடவடிக்கைகளை உடனே எடுத்தாகவேண்டும்.

காலையில் நமது போலீஸ் மந்திரி அவர்கள் 'அந்தப் பிராந்தியத்தில் எல்லாம் வீர உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது, மற்ற எந்தப் பிராந்தியங்களிலும் இல்லை' என்றெல்லாம் பேசினார்கள். ஆனால், அது கட்டபொம்மன், இன்னும் மற்ற ராஜாக்கள் இருந்த பிராந்தியம் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. அந்தப் பிராந்தியத்தில் மட்டும் இந்த வீர உணர்ச்சி இருப்பதைப்பற்றி ஒன்றும் ஆச்சரியம் இல்லை என்றுதான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த வீர உணர்ச்சி தேவர்களுக்கு மட்டும் இல்லை, பள்ளர்களுக்கும் உண்டு என்பதைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன்.

நமது அமைச்சர் அவர்கள் பேசும்போது, கம்யூனிஸ்டுத் தோழர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களைப்பற்றியும் சொன்னார்கள். ஏதோ 'சீப் பாபுலாரிடி'க்காக அவர் சொல்கிறார் என்று சொன்னார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் அதைச் சொல்லவில்லை. அந்தப் பக்கத்திலிருந்துபது சொன்னார்கள். அது எப்படியிருந்தாலும் எல்லோரும் சேர்ந்து வாதிப்பதென்னவென்றால், நீதியை நிலைநாட்டவேண்டும் என்பதுதான். குற்றங்கள் ஏதாவது இருந்தால் நன்றாக நிரூபிக்கவேண்டும். நீதிபதி மூலமாக விசாரணை செய்யவேண்டும் என்று சொல்லி கொண்டுவந்திருக்கும் பிரேரேபணையை எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஆதரிக்கின்றோம்.

தவிர, தேவர் அவர்களைப்பற்றி குற்றம் சொல்லப்படுகிறது. அமைதி நிலவவேண்டுமென்று பல இடங்களில் அவர் பேசியிருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. கடைசியாக எங்கள் பூர்வாங்க மகாநாட்டில் பேசியதற்குக்கூட டேப் ரிக்கார்டு செய்யப்பட்டிருக்கிறது. அப்பொழுது பேசும்போதுகூட, அவர் அமைதி நிலவவேண்டுமென்று அழுத்தந் திருத்தமாகப் பேசியிருக்கிறார்கள். அதைக் கேட்டாலும் தெரியவரும். ஆனால், அடிக்கடி அமைச்சர்கள் எல்லோரும், இப்பொழுது முக்கியமாக போலீஸ் மந்திரி அவர்கள் இன்று காலை பேசியபோது, 'இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்க்கட்சிகள் எல்லோரும் உபயோகிக்கின்றார்கள்' என்று சொல்லியிருக்கின்றார். உண்மை. ஆனால், அந்த நாளில் ஜாலியன்வாலாபாக் சந்தர்ப்பத்தை அப்பொழுது காங்கிரஸ்காரர்கள் உபயோகித்தார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. அப்பொழுது என்ன சொன்னார்கள் என்று எனக்கு ஞாபகம் இருக்கிறது. சத்யபால், கிட்ச்லு போன்ற பஞ்சாப் லீடர்கள் எல்லாரும் அப்பொழுது இருந்த வெள்ளையர் சர்க்காரைக் கேட்டார்கள். செக்ரிடெரி ஆப் ஸ்டேட் ஒரு அறிக்கை விடுத்தார்கள் :

"If the Right Hon. Sir S. Montagu, His Majesty's Secretary of State is really desirous of restoring confidence, he should first of all release all the political prisoners, recall all the men who were responsible for the military outrages, and repeal ell the repressive laws."

மும்முரமாகக் கூட்டங்கள் போடப்பட்டன. அதைப்பற்றிக் கண்டித்து பேப்பரிலே எழுதப்பட்டது. ஜாலியன்வாலாபாக் சம்பவத்தைப் பிரயோஜனப்படுத்தினார்கள். சர்க்கார் நியாய முறையிலே நடத்தியிருந்தால் எதிர்க்கட்சிகள் யாரும் உபயோகப்படுத்தியிருக்க முடியாது. எங்கு பார்த்தாலும் அமைச்சரவர்கள் அனேக இடங்களில் பேசியிருக்கின்றார்கள், "எதிர்க் கட்சி பலமாக இல்லை, நன்றாக வளர்ந்தால் நல்லது" என்று. ஆனால், வளருவதற்காக அவர்கள் பார்க்கவே இல்லை.



30th October 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : நல்ல முறையிலே வளர வேண்டுமென்றுதான் நான் சொன்னேன்.

* SRI V. K. RAMASWAMI MUDALIYAR : எதிர்க் கட்சிகள் நல்ல முறையிலே வளரவேண்டுமென்று நீங்கள் சொல்லியிருக்கலாம். "இது என்ன எதிர்க்கட்சி?" என்று சில இடத்தில் இவர் பேசியிருக்கிறார்கள். வேண்டுமானால் நான் நிரூபிக்க முடியும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : "என்ன எதிர்க்கட்சி ?" என்று சொல்வதற்கு நான் கொஞ்சம் தயங்குகின்றேன்.

* SRI V. K. RAMASWAMI MUDALIYAR : இந்த மந்திரி சபைக்கு இந்த எதிர்கட்சி போதும் என்பதுதான் என்னுடைய எண்ணம். அந்த நாளில் சத்தியமூர்த்தி போன்றவர்கள் இருந்தார்கள். அப்பொழுது திறமை வாய்ந்த மந்திரிகள் இருந்தார்கள் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. வேறு என்ன சொல்வது ?

கடைசியில் இன்று காலை போலீஸ் மந்திரி அவர்கள் பத்திரிகை பேரில் பாய்ந்தார்கள். Yellow papers என்று சொன்னார்கள். பத்திரிகை அவர்களுக்குச் சாதகமாக இருந்தபோது நன்றாகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எல்லா பத்திரிகைகளையும் Yellow papers என்று நான் சொல்லவில்லை. Yellow journalism இருக்கிறது. சில பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் என்று நான் சொன்னேன்.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR : ஏதோ சில பத்திரிகைகள் Yellow papers என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்த மட்டில், அனேக பத்திரிகைகள் நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டு வருகின்றன. கருத்துக்களையெல்லாம் நன்றாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். சர்க்காருடைய கட்டுத் திட்டங்கள் இருந்தபோதிலும் அவர்களுக்கு எவ்வளவு தூரம் இடையூறுகள் செய்யலாம் என்று இருந்த போதிலும் பத்திரிகைகள் எல்லாம் பயப்படாமல், தைரியமாக நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சர்க்காருக்கு விளம்பர இலாகா இருக்கிறது. அதன் மூலமாக சில அறிக்கைகளை சில பேப்பர்கள் வெளியிடுகின்றன. அதைப்பற்றி குறை சொல்ல முடியாது. 'எல்லோ' பேப்பர் சில பேப்பர்கள் இருக்கலாம். எங்களைப் பொறுத்த வரையில் அவர்கள் நல்ல விளம்பரம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். சிலநாட்களுக்கு முன்னால் நன்றாகத் தெரியும். லண்டன் டைம்ஸ் போல சில பத்திரிகையில் சம்பவங்களைப்பற்றி இரண்டு லீடிங் ஆர்டிகல்ஸ் எழுதினால் மந்திரி சபை கவிழ்ந்துவிடும். அப்படி மேல் நாட்டில் முக்கியமாக சீமையில் இருந்துவருகிறது. நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் பத்திரிகைகள் எந்தமாதிரி பொறுப்புடன் வேலை செய்யவேண்டுமோ அப்படித்தான் செய்து வருகிறார்கள், விவரங்களெல்லாம் கொடுத்து வருகிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

ஜனநாயகம் என்று சொல்லுகிறோமே அழிய சர்வாதிகாரமாகத்தான் இருக்கிறது. முக்கியமாக மூன்று விஷயங்களைக்கொண்டுதான் ஜனநாயகம் தழைக்க முடியும். முதலாவது 'இண்டிபென்டென்ட் ஜுடிஷியரி', நல்ல நீதிபதிகள் இருந்து நல்ல முறையில் பணியாற்றவேண்டும். இரண்டாவது ஒரு 'இண்டிபெண்டன்ட் ஆடிட்' அதாவது ஆடிடர்-ஜெனரல், இங்கு அக்கவுண்டன்ட்-ஜெனரல் நல்ல முறையில் பயமில்லாமல் எல்லா தவறுகளையும் எடுத்துச்சொல்ல வேண்டும். மூன்றாவது பப்ளிக் சர்விஸ் கமிஷன் என்று சொல்லுவார்கள். இந்த மூன்று ஸ்தாபனங்களும் இல்லாவிட்டால் ஜனநாயகம் என்பதே இருக்காது. ஜனநாயகத்திற்கு பதிலாக எந்த நாயகம் வருமோ, சொல்ல முடியாது. எல்லாம் சர்வாதிகாரமாகத்தான் இருக்கிறது.

இந்த மூன்று ஸ்தாபனங்களும் இருந்தால்தான் கொஞ்சம் ஜனநாயகத்திற்கு பாதுகாப்பு இருக்கும். ராமநாதபுரத்தில் நடந்த சம்பவங்கள் அரசியல் கலவரமே தவிர வேறு ஒன்றுமில்லை என்று விநோபாஜி அவர்களே அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். மாஜி மந்திரி கூர்மையா அவர்களும் இதேமாதிரி சொல்லுகிறார்கள். இப்பொழுதும் அந்த இடத்திலே போலீஸ் அதிகாரிகள் சரிவர நடக்கவில்லை என்ற வதந்தி பரவி வருகிறது. சமீப காலத்தில் ஒரு ஜில்லா போர்டு அங்கத்தினர் துரைராஜ் அவர்களை திடீர் என்று கைது செய்து சங்கிலியால் கட்டி நிர்வாணத்துடன் இழுத்துக்கொண்டுபோய் பாதரட்சையால் அடித்தார்கள் என்று வதந்தி வந்திருக்கிறது. இதை முக்கியமாக விசாரிக்கவேண்டும். அவரை விடுதலை செய்வதற்கு உடனே ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் போலீஸ் அதிகாரிகளை கேட்டுக் கொள்ளுவது என்னவென்றால் : ஜனநாயகம் வளரவேண்டுமானால், தர்மம் நிலைக்கவேண்டுமானால் எந்த மந்திரி சபை வந்தாலும் அவர்கள் கடமையை நல்லமுறையில் செய்யவேண்டுமென்பதுதான். கடவுள் ஒருவர் இருக்கிறார். கடைசியில் கடவுள் பெயரால், காந்திஜியின் பெயரால், ஜனநாயகத்தின் பெயரால் நான் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால் : சர்க்கார் என் வேண்டுகோளை அங்கீகரிக்கவேண்டும். உடனே நீதிபதி விசாரணை நடத்தவேண்டும். ஒருவித பயமும் இல்லாமல் நீதிபதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஸ்ரீ முத்துராமலிங்க தேவரை உடனே விடுதலை செய்யவேண்டும். உடனடியாக விடுதலை செய்வதற்கு முடியாவிட்டாலும் அவர்களை பெரோலில் விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது முதலமைச்சர் அவர்கள் கேஸ் முடியும் வரையிலாவது அவர்களை பெரோலில் விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri R. SRINIVASA IYER : On a point of personal explanation, Sir. The Leader of the Opposition referred to provisions of law referred to by me. I referred to the Preventive Detention Act (Act IV of 1950), not passed by the British regime. The other I referred to is Act LX of 1952 and the other one is Act XXXVII of 1950. The position of law referred to by my friend relates to habeas corpus petitions. Anybody interested in filing that petition can do so. But the Government cannot file a petition.

Sri V. K. RAMASWAMI MUDALIYAR : I never meant that. There is a proposal to file cases.

வந்தால் சர்க்கார் பெர்மிஷன் கொடுக்கவேண்டுமென்றுதான் கேட்டுக் கொண்டேன். 197, Cr.P.C.-யைப்பற்றி கேட்டுக்கொண்டேனே தவிர ஹேபியஸ் கார்பஸைப்பற்றி நான் சொல்லவரவில்லை என்பதை அங்கத்தினர் அவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

Mr. SPEAKER : I thought only doctors differed, but I now see that lawyers also differ.

5-25 p.m. The House will now adjourn and meet again at 9 a.m. on Thursday, the 31st October 1957.

The House then adjourned.





## Appendix.

[Vide answer to starred questions Nos. 32 and 33 asked by Sri N. K. Palanisami and Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 30th October 1957, page 239 supra.]

(a) There is only one bird sanctuary at Vedanthangal in Chingleput district.

(b) The Government are not spending any money on this sanctuary and there is no special staff at present. The only item of expenditure for the sanctuary has been towards travelling allowance granted to Sri M. Krishnan, the Ornithologist, who was engaged by the Government for the study of the birds. The amount spent is Rs. 100.

(c) Large glistening black cormorants.

Middle Cormorants.

Little Cormorants.

Snow-white Cattle Egrets.

Intermediate Egrets.

Little Egrets.

Stately Grey Herons.

The Shy Night Herons.

Ever-vigilant buff-streaked Pond Herons *or* Paddy Birds.

Dignified Snow-white Spoonbills.

Greyish White open-billed stork.

White ibises.

Painted Storks.

Silver-streaked Darters.

Grey Pelicans.

Graceful Grey and White River Terns.

Garganey ducks.

Brownish Indian Moorhen.

Shovellers.

Pintails.

Common Sandpiper.

Spotted Sandpiper.

Black-winged Stilts.

Stately Black Coots.

Plump Dabchick.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 31st October 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Monuments for Martyrs.*

*41 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of monuments erected for martyrs during Centenary Celebrations in August 1957 :

(*b*) the amount spent therefor; and

(*c*) whether the Government have received any representation from the Leader of the Tamil Arasu Kazhagam to help in erecting monuments for Kattabomman and Maruthu brothers?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Government have erected memorials to the following martyrs during the Centenary celebration in August 1957, and the amounts spent are noted against each item :—

| *Name of Martyr.* | *Amount spent.* | *Type of monuments.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | RS. | |
| (1) V. V. S. Iyer. | 6,100 | A Mandapam at Papanasam near the Kalyanathirtham waterfalls. |
| (2) V. O. Chidambaram Pillai. | 5,000 | Purchase of the house of V. O. C. at Ottapidaram for constructing a memorial at the house-site. |
| (3) Tiruppur Kumaran. | 9,040 | Statue at Tiruppur near the Railway Station. |
| (4) Tiru-Vi-Ka. | 5,000 | Bust on the pedestal at the Sembium Colony. |

(*c*) In July 1957, a representation was received by Government from the President of the Tamil Arasu Kazhagam requesting permission to instal a statue of Kattabomman near the gate to the Fort St. George, Madras. He also solicited clarification as to the scope and nature of assistance that could be expected from the

[31st October 1957

Government for the project. He was informed that assistance from the Government would be available only to schemes for the erection of a memorial to Kattabomman in the place of his birth or martyrdom or in any other place closely associated with him. The attention of the hon. Member is, in this connection, invited to the answer given on the floor of this House to Question No. 63, on 5th July 1957. No representation has been received from the leader of the Tamil Arasu Kazhagam for help in erecting monuments for the Maruthu Brothers.

**Sri N. K. PALANISAMI** : சர்க்கார் 1857ம் வருஷத்தில் இருந்து இதுவரையில் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு எடுத்துக்கொண்டவர்களுடைய ஞாபகார்த்தமாக நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு முந்தியே பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இந்த நாட்டில் வேர் ஊன்றக்கூடாது என்பதற்காக தானே எதிர்த்துக் காட்டிய கட்டபொம்மன் அவர்களின் நினைவு என்றைக்கும் அழியாதிருக்கும்படியான சின்னம் ஒன்றை ஜனங்கள் உதவியை எதிர்பாராக்காமல் அவருக்கு எழுப்ப சர்க்கார் முன்வருவார்களா ?

**The Hon Sri C. SUBRAMANIAM** : அழியாத சின்னம் என்றால் மக்கள் உள்ளத்தில் இடம் பெறுவது ஒன்றுதான். அந்த இடத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

**Sri A. P. C. VEERABAHU** : பாஞ்சாலக்குறிச்சி வீர கட்டபொம்மன் அவர்கள் பிறந்த இடத்திலே, அல்லது அதைச் சார்ந்த இடத்திலே உள்ளவர்கள் அவருடைய நினைவாக அவர் பிறந்த பிரதேசத்தை, பாஞ்சாலங்குறிச்சியை, புனருத்தாரணம் செய்ய முன்வந்தார்களானால் சர்க்கார் அவர்களுக்கு எந்த எந்தவிதமான உதவிகளை அளிக்கும் என கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : எந்த எந்த விதமான உதவிகளை சர்க்கார் அளிக்கும் என்று உடனடியாகச் சொல்ல முடியாது. திட்டத்தைத் தயாரித்து சர்க்காருக்கு அனுப்பினால் அதைப் பரிசீலித்துப் பார்த்துச் சொல்ல முடியும்.

**Sri K. SATTANATHA KARAYALAR** : செஞ்சிக் கோட்டையில் வாஞ்சி ஐயர் ஞாபகார்த்தமாகச் சின்னம் எழுப்ப சர்க்கார் வாக்குக் கொடுத்து உள்ளதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : **I am sorry, Sir, I do not have the information now.**

**Sri S. NAGARAJA MONIGAR** : **Sir, is there any proposal to raise monuments in memory of the great patriot Sri Subramania Siva ?**

**The Hon. Sri C. SUBRAMANIAM** : It need not be understood that these are the only martyrs in Tamilnad and that we have exhausted the entire list of such patriots. As a matter of fact, there are many more, known and unknown also. Therefore, it does not mean that we should be having memorials in respect of all. Wherever it has been possible, we have erected memorials. If people come forward in a particular locality for raising a memorial and if any assistance is sought, the Government will certainly consider such a proposal.

**Sri V. K. KOTHANDARAMAN** : எல்லாக் கட்சிகளும் சேர்ந்து நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு சர்க்கார் முயற்சி செய்ததுண்டா ? இல்லை என்றால் ஏன் ?



31st October 1957]

**The Hon. Sri C. SUBRAMANIAM** : எல்லாக் கட்சிகளும் சேர்ந்துதான் இந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினார்கள். கனம் அங்கத்தினர் சொல்வதைப் பார்த்தால் கம்யூனிஸ்டுக் கட்சி சேர்ந்து கொள்ளவில்லையோ என்று எண்ணுகிறேன்.

**Sri K. B. S. MANI** : இறந்து போன தியாகிகளின் ஞாபகார்த்தமாக ஆயிரக்கணக்கில் செலவழித்து இப்போது ஞாபகச் சின்னங்களை ஏற்படுத்துகிறார்கள். இவ்வாறு இறந்துபோனவர்களுக்கு ஞாபகார்த்தமாக மண்டபங்கள் எழுப்புவதை விட உயிரோடு இருக்கிற-இறந்துபோகும் தருவாயில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற தியாகிகளிடத்தில் அக்கறை காட்டி அந்தத் தியாகிகளின் ஞாபகமாக இந்தத் தியாகிகளை கௌரவித்து நன்மை செய்ய அரசாங்கத்தார் முன் வருவார்களா ?

**Mr. SPEAKER** : மூலம் கேள்வியில் இந்த கேள்வி எப்படி வருகிறது ?

**Sri M. P. SUBRAMANIAM** : திருப்பூர் குமரன், திரு. வி. க. போன்றவர்களுக்கு ஐயாயிரம், ஒன்பதாயிரம் எனச் செலவழித்து ஞாபகச் சின்னம் கட்டுகிற நேரத்தில் கட்டபொம்மன் விஷயத்தில் மக்களிடத்தில் இருந்து உதவியை எதிர்பார்க்காமல், சர்க்காரே ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்த முன்வரக்கூடாதா ? அந்த அளவுக்கு கட்டபொம்மனின் தியாகம் பொருத்தம் இல்லையா என்று கேட்கிறேன் ?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: தியாகத்தை அளவு எடுத்து சிலருக்குச் சின்னம் எழுப்பியிருப்பதாக நினைக்கக்கூடாது. 1857—1957க்குள் இவர்களைவிட அதிகமாகத் தியாகம் செய்தவர்கள் நமக்குத் தெரிந்தும், தெரியாமலும் நிறையப் பேர்கள் இருக்கலாம். நம்முடைய கௌரவத்திற்கு ஓர் அடையாளமாக, அந்த அடிப்படையில் அப்போது வந்த யோசனையை வைத்துக்கொண்டுதான் இவர்களுக்குச் சின்னம் எழுப்பப்பட்டிருக்கிறது. இதனால் இவர்களுடைய தியாகத்தைவிட மற்றவர்கள் தியாகம் குறைவானதாகவோ, மற்றவர்களைவிட எல்லாம் அதிகத் தியாகம் செய்தவர்கள் இவர்கள் என்கிற அபிப்பிராயத்திலோ இப்படிப்பட்ட காரியம் சர்க்கார் செய்யவில்லை என்பது என் அபிப்பிராயம்.

**Sri S. LAZAR** : இதுவரைக்கும் தமிழரசுக் கழகம், அதன் தலைவர்கள் கட்டபொம்மனுக்கு எத்தனை சிலைகள் வைத்திருக்கிறார்கள் ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நிறையக் கூட்டங்களில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**Sri S. B. ADITYAN** : சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு கட்டபொம்மன் நினைவாக அவர் பெயரை வைக்கவேண்டுமென்ற கோரிக்கை இருப்பது தெரியுமா ? இந்தக் கோரிக்கைக்காக திரு நல்லசிவம் அவர்கள் கோட்டை அருகில் கைதி செய்யப்பட்ட விஷயமும் தெரியுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அப்படிப் பேர் வைப்பதாக இப்போது யோசனை இல்லை. சிலபேர் பேரை மாற்றுவதனாலேயே சில காரியத்தைச் செய்துவிடலாம் என நினைப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**Sri T. T. DANIEL** : Sir, in view of the fact that Kattabomman was the first Indian to declare a war of independence on the Britishers and in view of the fact that there is a strong feeling in Tamilnad that some memorial should be erected for him, will the Government be pleased to go into the question?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : **I have already stated the position of the Government in respect of that question**

[31st October 1957

SRI M. P. SARATHI : 1806ம் வருஷத்தில் வேலூரில் வெள்ளைக் காரர்களை எதிர்த்து ராணுவப் புரட்சி ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் அதன் நினைவாக அங்கே ஓர் ஞாபகச் சின்னம் எழுப்ப சர்க்காருக்கு எண்ணமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது ஒன்றும் அதைப் பற்றிய யோசனை சர்க்காரிடத்தில் இல்லை.

SRI M. C. MUTHUKUMARASWAMI : நாட்டை மீட்ட தியாகிகளின் ஞாபகமாக இப்போது சின்னங்கள் எழுப்பப்பட்டு வருவதற்கு மகிழ்ச்சி. நாட்டை மீட்டிக்கொடுத்ததோடு, இந்த நாட்டு நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதற்கு சட்டப் புத்தகத்தையே தொகுத்துக் கொடுத்த டாக்டர் அம்பேத்காரின் நினைவாக நல்லதொரு சின்னத்தை சர்க்கார் அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர் இயற்றிக்கொடுத்த சட்டமே நல்லதொரு சின்னமாக எப்போதும் விளங்கிக்கொண்டிருக்கும். அது நம் மத்தியில் இருந்து வருகிறது.

SRI A. A. RASHEED : Sir, during the Centenary Celebrations, a documentary film was released wherein the South Indian martyrs were not mentioned. What has happened to that documentary film ?

THE HON. SRI C. SUBRAMANIAM : That mistake was accepted and the film was withdrawn from circulation.

SRI K. SATTANATHA KARAYALAR : வாஞ்சி ஐயர் ஞாபகார்த்தமாக இப்போது மூவாயிரம் ரூபாயில் மண்டபம் எழுப்பப் படுகிறது. ஆனால் வயது முதிர்ந்து அவரது மனைவியார் சென்னையில் இன்றைக்குப் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஏதாவது ஜீவனாம்சம் கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது அதைப் பற்றி எண்ணிடத்தில் தகவல் ஒன்றும் இல்லை.

SRI K. R. NALLASIVAM : தியாகிகளுடைய நினைவுச் சின்னங்களை ஏற்படுத்தும்போது, இப்போது உயிரோடு இருக்கின்ற தியாகிகளின் நினைவாகவும் ஏதாவது சின்னங்கள் ஏற்படுத்தப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இல்லை. கனம் அங்கத்தினர் தன்னை ஒரு பெரிய தியாகியாக நினைத்துக்கொண்டு சின்னம் எழுப்பப்படவேண்டுமென்று சொன்னால் அதைப்பற்றி ஆலோசிக்கிறோம்.

SRI A. GOVINDASAMI : எட்டயாபுரத்திலே மகா கவி பாரதியாருக்கு மண்டபம் எழுப்பியமாதிரி திருவள்ளுவருக்கு மண்டபம் கட்ட சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது திருவள்ளுவருக்கு மண்டபம் இருக்கிறது. அங்கே நானும் போயிருக்கிறேன்.

SRI P. S. SANTHANAM : இந்த சுதந்திர இந்தியாவில் சுமார் 10 கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக இருந்து அந்நிய ஆட்சியிலிருந்து இந்தியா விடுபடுவதற்குக் காரணமாயிருந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு 10 கோடி மக்களின் பிரதிநிதியாக ஞாபகச் சின்னம் எழுப்ப சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் முத்துகுமாரசுவாமி கேட்ட கேள்விக்கு பதில் அளித்துவிட்டாரே.



31st October 1957]

SRI K. VINAYAKAM : Sir, withdrawing such a defective documentary film, the Central Government, in their communication have declared that a suitable substitute picture would be produced including the history of martyrs of South India; were the Governmentt of Madras consulted on this by the Central Government and if so, what is the action which the Madras Government have taken to substantiate our claim to be included in the documentary?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is not merely our 'claim'. As a matter of fact, they themselves have realised that a mistake had been committed. Therefore, it is for them to rectify that mistake. I do not think I have any information regarding the re-shooting of a film with reference to that.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, காலம் சென்ற வாஞ்சி அய்யர் அவர்களுக்கு ஞாபகச் சின்னம் அமைக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இனிமேல் புதிய சின்னங்கள் எழுப்ப சர்க்கார் எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை. அப்படி இன்னொரு தக்க சமயம் ஏற்படும் போது விழா வரும்போது யார் யாருக்கு சின்னம் எழுப்பவேண்டும் என்பதை அப்போது இருக்கும் சர்க்கார் யோசித்து முடிவு செய்யும்.

SRI A. GOVINDASAMI : திருப்பூர் குமரன் நினைவாக ஒரு ஸ்தூபி நிறுத்தப்பட்டிருக்கிறது. அதில் திருப்பூர் குமரன் உருவம் ஒன்று தீட்டப்பட்டிருக்கிறது. அந்த உருவம் திருப்பூர் குமரன் உருவம் போல் அல்லாமல் வேறு மாதிரியாக இருப்பதால் மீண்டும் சரியான திருப்பூர் குமரன் உருவத்தை நிறுவ அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் தலைவர் அவர்களே, நான் அங்கு போய்விட்டு வந்திருக்கிறேன். அதில் தீட்டப் பட்டிருப்பது திருப்பூர் குமரன் உருவம் இல்லை. அங்கத்தினர் போய் பார்பார்களேயானால், கையில் ஒரு கொடியேந்திய ஒரு தொண்டனின் ஒரு உருவம் இருக்கிறது. திருப்பூர் குமரன் செய்த தியாகத்தின் காரணமாக, நம் சுதந்திரக்கொடிதாங்கிய ஒரு தொண்டனின் உருவம் போட்டிருக்கிறார்கள். அது குமரனின் உருவமாக இல்லை. மக்களுக்கு குமரனைப் பற்றி தெரிவிக்கும் ஒரு உருவமாக இருக்கிறது.

SRI R. CHIDAMBARA BHARATHI : மத்திய சர்க்கார் அந்த டாக்குமெண்டரி படத்தை வாபஸ் பெற்றுக்கொண்டதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அப்படி வாபஸ் பெரும்போது, மேற்படி படத்தை ரிலீஸ் செய்யும்போது ராஜாஜி போன்ற தலைவர்களுக்கு அதில் இடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்களுக்கே அந்த உணர்வு வரும் என்று நினைக்கிறேன். யார் யாரை எடுத்துப்போடவேண்டும் என்று அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

*Sandalwood Oil Industry.*

* 42 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to develop sandalwood oil industry?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Madras Forest Department is not distilling Sandalwood Oil. Sandalwood is being sold in public auctions after converting it to commercial roots,

billets and chip classes. The question of manufacturing sandalwood oil by Government agency in this State and pooling the resources of this State and those of Mysore was considered several times in the past, but was ultimately dropped. The question was again discussed at the meeting of the Joint Sandalwood Advisory Board held in May 1956 and the matter is under further examination.

**SRI N. K. PALANISAMI**: இது வெளிநாடுகளுக்கு அனுப்பப் பட்டு அதிக டாலர் சம்பாதிக்கக்கூடிய ஏற்றுமதிப் பொருளாக இருப்பதால், சந்தனமரம் நடுதல் போன்று வைத்து இந்தத் தொழிலை ஆரம்பிக்க சர்க்கார் யோசனை சொல்லுமா ? அல்லது வேறு எந்த யோசனை சொல்ல இருக்கிறது ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: சந்தன மரத்தை விதை விதைத்து, நாற்று நடுவது கிடையாது. சாதாரணமாக இந்த திருப்பணியை பறவைகளும் பட்சிகளும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

**SRI E. CHANDRASEKARA NAYAGAR**: வட ஆற்காடு ஜில்லாவில் வருடா வருடம் ரூபாய் 60 லட்சம் பெருமான சந்தனக் கட்டைகள் கிடைப் பதைப் பயன்படுத்தி சாத்தனூரிலுள்ள கட்டடத்தில் ஒரு சந்தனத்தைல பாக்டரி ஆரம்பிக்கப்படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: பாதுகாப்பதற்கும் அபிவிருத்திசெய்வதற்கும் அரசாங்கம் தகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

**SRI M. KALYANASUNDARAM**: பறவைகள் உதவியினால் நமக்குக், கிடைக்கக்கூடிய சந்தன மரங்களை மனிதர்கள் திருடிக்கொண்டு போய் விடுகிறார்கள். அந்தத் திருட்டு நடைபெறாமல் தடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: திருட்டு நடைபெறுகின்றது. விலையுயர்ந்ததாக இருப்பதால் அதிகமான திருட்டு நடைபெறுகிறது. இதுமாதிரி நடைபெறாமல் பாதுகாப்பதற்கு, அப்போதைக்கப்போது போலீஸ் போட்டும் மற்றவர்கள் மூலமாகவும் கண்காணிப்பு செய்து வருகிறோம். அப்படியிருந்தும் சட்டத்தை மாற்றி அமைக்க அரசாங்கம் ஒரு மசோதாவை தயாரித்துக்கொண்டிருக்கிறது.

**SRI S. NAGARAJA MONIGAR**: இந்த சந்தன மரங்கள் நல்ல முறையில் வளர முடியாமல் (Pike) பைக் நோய் என்ற ஒருவித நோய் வந்து மரங்களை அழித்துவருவது அரசாங்கத்திற்கு தெரியுமா ? இதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: மனிதர்களுக்கும், மாடு களுக்கும், வியாதி வருவது போல மரங்களுக்கும் வியாதி வருகிறது, இதில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது ; இயன்ற அளவு சிகிச்சை செய்ய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**SRI K. ANBAZHAGAN**: தலைவர் அவர்களே, சந்தன மரங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுமானால், ஏற்கனவே தொழில் துறையில் பின் தங்கியுள்ள தமிழ் நாட்டிலே ஒரு தொழில் வளர்வது தடைபடுகிறது. சந்தனமரம், நம் நாட்டு மக்களுக்குத் தேவையான சந்தன எண்ணெ எடுப்பதற்கு மிகவும் தேவைப்படுகிறது. இதை வெளிநாட்டுக்கு அனுப்பாமல், இங்கேயே தொழிற்சாலைகளை அமைப்பது சிறந்தது; 'என்று உணர்ந்து அதற்கான முயற்சியை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: சந்தன மரம் ஏற்றுமதி செய்யப்பட்டாலும் அதிகமாக மரமாக ஏற்றுமதி செய்யப் படுவதில்லை. எண்ணெ இங்கேயே உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த எண்ணெதான் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது.



**SRI P. S. SANTHANAM**: பறவைகளை நம்பியிருப்பதைவிட மனிதர்களைக் கொண்டு ஒழுங்காக நல்லமுறையில் அவைகளை அதிகப்படியாக வளர்க்க புதிய முறைகளை கையாளுவதற்கு அரசாங்கம் ஆராய்ந்திருக்கிறதா ? ஆராய்ந்திருந்தால் அந்த முறையை கையாள சர்க்கார் முன் வருவார் களா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: சந்தனமரத்தை உண்டாக்குவதில் மனிதர்களைவிட பறவைகள் உருப்படியான சேவைபுரிந்து வருகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**SRI M. KALYANASUNDARAM**: சந்தனமரம் தனியார்களிடம் சொந்தத்திற்கு விட்டு விட்டிருப்பதால் சர்க்காருடைய காட்டிலுள்ள மரங்கள் திருட்டுப்போக சாத்தியமாகயிருக்கின்றது. அதைவிட்டு சந்தனமரம் எங்கு முளைத்திருந்தாலும் அது சர்க்காரைச் சேர்ந்தது என்று இப்போதுள்ள சட்டத்தைத் திருத்துவதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: சந்தனமரம் தனி நபர்கள் நிலங்களிலும் வளருகிறது. ஆனால் கனம் அங்கத்தினர்தெரிவித்தது போல் அப்படியே அரசாங்கம் எடுத்துக்கொள்வதென்ற விதி விதிக்காமல், சந்தனமரம் தனி நபர்கள் நிலத்தில் விளைந்தாலும் அதை அரசாங்கத்திற்கே கொடுக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட விலைக்கும் கொடுக்கவேண்டும் என்ற முறையிலே இருக்கிறது. இப்போது இருக்கின்ற முறையிலே அரசாங்கத்திற்கு கொடுப்பதைத்தவிர வேறு யாருக்கும் விற்கமுடியாது.

**SRI A. VEDARATNAM PILLAI**: எந்தப் பறவை மூலமாக இந்த சந்தன மரங்கள் அபிவிருத்தி செய்யப்படுகிறதோ அந்தப் பறவைகளை வளர்த்து அதன் மூலமாக சந்தன மரத்தை விருத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: அந்தப் பறவைகளை வளர்ப்பதற்கு, மனிதனின் உதவி வேண்டியதில்லை. இயற்கை உதவி யளிக்கிறது.

**SRI A. GOVINDASAMI**: எங்கள் மாவட்டத்திலுள்ள கள்ளக்குறிச்சி தாலுகாவில் கடைய கவுண்டன், குறும்ப கவுண்டன் மலைச்சரிவிலுள்ள காடுகளில் சந்தனக் காடுகள் ஏராளமாக இருக்கிறது. அதை பாதுகாக்கவும், வளர்க்கவும் முயற்சி எடுத்துக்கொண்டு அதிலிருந்து சந்தன எண்ணெ உற்பத்தி செய்ய கள்ளக்குறிச்சியில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிப்பார்களா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: எங்கெங்கே சந்தனக் காடுகள் இருக்கின்றவோ அவைகளில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது. ஆனால் இது வரையிலும் அரசாங்கம் நேரிடையாக சந்தன எண்ணெ உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபடவில்லை. அது தனி நபரிடந்தான் இருக்கிறது.

**SRI P. S. SANTHANAM**: செங்கம் தாலுகா ஜெவ்வாது மலை யில் உள்ள சந்தனக் காடுகளில், சாத்தனூர் டாமிற்கு பழுது வராமல், அங்கிருந்து கிடைக்கும் சந்தனத்தைக் கொண்டு எண்ணெ தயாரிக்க அங்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

**MR. SPEAKER**: அதை முந்தியே கேட்டாகிவிட்டது.

**SRI V. SANKARAN**: சாதாரணமாக மரம் வளர்ப்பிலே ஒரு குறைந்த பட்ச தூரம் மரத்திற்கு மரம் தூரமிருந்தால்தான் அதனால் அதிக பலனுண்டு என்று சொல்வார்கள். ஆதலால் பறவைகள் விதை பரப்புவதில் அந்த விதிப்படி அவ்வளவு அதிக பலன் கிடைக்க முடியாது. ஆகவே, மனித யத்தனத்தைக் கொண்டு செய்தால் அதிகப் பலன் கிடைக்கும் என்பதைப்பற்றி சர்க்கார் ஆராய்ந்து வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமா ?

[31st October 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பறவைகளின் உதவிக்கு மேல் மனிதனின் கண்காணிப்பு எவ்வளவு வேண்டுமோ அது செய்யப்பட்டு வருகிறது.

SRI R. KRISHNASWAMY NAYUDU : பல அங்கத்தினர்கள் சொல்வதிலிருந்து சந்தன மரங்கள் உயரமாக வளர சாத்திய கூறுகள் பல பிரதேசங்களில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். எங்கள் பகுதியில் அவ்வளவு உயர்ந்த மரத்தைப் பார்த்ததில்லை. ஒரு தலைமுறைக்கு முன் வாழ்ந்த சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார்,

> " அந்தரம் உருவி வளர்ந்திந்திரனுலகு கடந்
> தப்புரம் போய் நின்றகையும் சந்தன மரம். " . . .

என்று பாடியிருக்கிறார். ஆகவே எந்தப் பிரதேசத்தில் இவ்வளவு உயரமாக சந்தன மரம் வளர்ந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தப் பாட்டு எந்தப் பிராந்தியத்தைக் குறிக்கிறது என்று தெளிவாகத் தெரியவில்லை. சந்தன மரங்கள் உயரமாகவே வளர்கின்றன. ராமநாதபுரம் ஜில்லாவில் அப்படியில்லாதிருக்கலாம்.

SRI K. R. NALLASIVAM : மைசூரில் இருந்து வரும், காவேரிக் கரையோரங்களில் இருக்கும் சந்தன மரங்களை பாதுகாக்க விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் எங்கெங்கு சந்தன மரங்கள் இருக்கின்றனவோ அவைகள் கூடிய வரையிலே நன்கு கவனிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.

SRI A. A. RASHEED : Sir, what is the total area of sandalwood plantations and the total income from the sandalwood plantations ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Notice, Sir.

SRI K. VINAYAKAM : எந்தப் பறவை இந்த சந்தன மரத்தைப் பரப்புவதற்கு உதவுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்தப் பறவையாயிருந்தாலும் அதற்கு நாம் நன்றி செலுத்தப் போவதில்லை. ஆகவே அதைப்பற்றி அரசாங்கம் ஆராய்ச்சி செய்யவில்லை.

*Dramas and Films.*

* 43 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to start schools for training students to act in dramas and films ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : தமிழ் ஆட்சி மொழியாக தீர்மானம் போட்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் கலையையும், அதன் இலக்கியத்தையும் வளர்க்கும் பொறுப்பு சர்க்காருக்கு அதிகம் இருக்கிறது. ஆகவே, அதையனுசரித்து நாடகத்திலும் சினிமாவிலும் ஜனங்கள் அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில், அவைகளில் நடிக்க எண்ணங்கொண்ட, விரும்பும் பையன்களைச் சேர்த்து பையன்களுக்கு பயிற்சி கொடுக்க ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?



31st October 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : மாணவர்கள் இதில் பயிற்சி பெற ஒரு ஏற்பாடும் செய்யவில்லை. ஆனால் முதன் முதலாக நாடகக் கலையில் பயிற்சி பெற சங்கீத நாடக சங்கத்தின் கீழ் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு, மூன்றரை மாதம் முடிவடைந்து அதன் கழிந்த விழாவிலும் கலந்து கொள்ள எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அது தொடர்ந்து நடக்கும்.

*Dental Hospital Van.*

* 44 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government are using for medical purposes the dental moving hospital van donated by Czeachoslovakia, in 1956 ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI N. K. PALANISAMI : அதில் 20 டாக்டர்கள் வருஷம் ஒன்றுக்கு பரீட்சை பாஸ் பண்ண வேண்டுமென்று விதியிருக்கிறது. அப்படியானால் அந்த டெண்டல் ஸர்ஜரி காரை ஓட்டுவதற்கு ஆள் சேரவில்லை என்று சொல்லப்படுகிறது வாஸ்தவந்தானா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அங்கத்தினர் அவர்கள் எப்போதோ அந்த வானை பார்த்துவிட்டுச் சொல்கிறார்கள். இப்பொழுது அது செங்கல்பட்டில் சுற்றிக் கொண்டிருக்கிறது. அநேக கிராமங்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

*Textile Mills.*

* 45 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of spindles permitted to be installed in textile mills in 1957 ?

THE HON. SRI R. VENKATARAMAN : In 1957, the Government of India have so far issued licences for the installation of 28,624 spindles in the Madras State. No information regarding the licences issued for the installation of spindles in the whole of India is available with this Government.

SRI N. K. PALANISAMI : இப்பொழுது இருக்கக்கூடிய ஸ்பின்டில்லைவிட அதிகம் கொடுக்க உத்தேசமா ? அல்லது இப்படியே நிறுத்தப் போகிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இண்டஸ்ட்ரீஸ் கண்ட்ரோல் அண்ட் டெவலெப்மெண்ட் ரெகுலேஷன் ஆக்ட் பிரகாரம் ஸ்பின்டில்கள் கொடுக்க வேண்டியதின் பொறுப்பு மத்திய சர்க்காருடையதாகும். மாகாணத்தில் புது தறிகள் வைக்க முன் வந்தால் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யப்படும்.

SRI V. SANKARAN : மதுரையில் எந்தெந்த மில்களுக்கு எவ்வளவு எவ்வளவு ஸ்பின்டில்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கேள்வி புதிதாக கொடுக்கப்பட்ட ஸ்பின்டில்களை-ஐக் குறித்தது. ருக்மணி மில்ஸ், லிமிடெட், மதுரைக்கு 12,000 கதிர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : அதிகப்படியாக நூற்கும் கதிர்களை மட்டும் அதிகரித்துக்கொண்டு போகிறார்கள். நம் ராஜ்யத்தில் கைத்தறிக்குத் தேவையான நூலை அதிகரிக்க அதற்கு சமமாக தறிகளையும், விசைத்தறிகளையும் அதிகப்படுத்தப் போகிறார்களா ?

[31st October 1957

THE HON. SRI R. VENKATARAMAN : விசைத்தறிகளை அதிகப்படுத்துவதைப் பற்றிய பிரச்னை தனியானது. இம்மாகாண கைத்தறி நெசவாளர்களுக்கு அதிகப்படி நூல் கொடுப்பதற்குள்ள மாகாண சர்க்காரின் வேண்டுகோளின் பேரில் நான்கு கூட்டுறவு மில்கள் வைக்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானால் அதைச் சொல்கிறேன்.

SRI M. R. KANDASWAMY MUDALIAR : இப்பொழுது கைத்தறி துணி தேங்கிக் கிடந்து விற்பனையாகாமல் கூட்டுறவு சொஸைட்டிகளைச் சேர்ந்தவர்களும், தனிப்பட்ட நெசவாளர்களும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கும்போது மில்லிற்குள்ள கதிரை அதிகப்படுத்துவதால் மில் துணி உற்பத்தி அதிகமாகி அதனால் கைத்தறி பாதிக்கப்படுமா ? அப்படியென்றால் சர்க்கார் அவர்களைக் காப்பாற்றுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கதிரைத்தான் அதிகப்படுத்துகிறோம். தறிகளை அதிகப்படுத்தவில்லை. ஆகவே மில் துணி அதிகம் உற்பத்தியாகிவிடும் என்று பயப்படுவதற்கில்லை. ஸ்பின்டில்ஸ் அதிகப்படுத்துவதால் கிடைக்கும் நூல் கைத்தறி நெசவாளர்களுக்குத்தான் கிடைக்கும்.

SRI P. S. CHINNADURAI : கோயம்புத்தூர் ஜில்லாவில மாஜி ராணுவத்தினர் எல்லோரும் சேர்ந்து ஒரு நூற்பு ஆலை நிறுவுவதற்கு அனுமதி கோரியிருக்கிறார்கள். அந்த வேண்டுகோள் சம்பந்தமாக அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : கடந்த ஒரு வருஷ காலமாக புதிதாக கதிர் கொடுப்பதில்லை என்ற கொள்கையை மத்திய சர்க்கார் அனுஷ்டித்து வந்தது. நாம் ஏற்கெனவே கூட்டுறவு முறையில் நடத்துகிற கைத்தறி நெசவாளர்களுக்கு கதிர் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியதின் பேரில் கைத்தறி நெசவாளர்கள் நடத்துகிற கூட்டுறவு மில்களுக்கு லைசென்ஸ் வாங்கி யிருக்கிறோம். மாஜி ராணுவத்தினருக்கு ஒன்றும் கொடுக்கப்படவில்லை.

SRI S. PAKKIRISAMY PILLAI : இப்பொழுது நம்மைப் பொறுத்தளவில் சில ஜில்லாக்களில் மாத்திரம் இந்த ஸ்பின்னிங் மில்ஸ் திறக்கப்பட்டு வருகின்றன. பரவலாக இதர ஜில்லாக்களிலும் இருக்கும்படியான விதத்தில் ஸ்பின்னிங் மில்லை திறந்து வைக்க வேண்டுமென்ற ரீதியில் இந்த சர்க்கார் செங்கல்பட்டு ஜில்லாவில் அந்த மாதிரி மில்களை அதிகமாக திறந்து வைக்க சிபார்சு செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : வசதியுள்ள இடங்களில்தான் மில்கள் திறப்பதற்கு தனியார் துறையில் முன் வருகிறார்கள். சில ஜில்லாக்களில் இயற்கை வசதிகள் அதிகமாக இருப்பதால் அங்கு தனியார் துறையில் மில் வைக்க வேண்டுகோள் வந்து கொண்டிருக்கிறது. இதர ஜில்லாக்களிலிருந்தும் வருமானால் அதைப்பற்றியும் பரிசீலிக்கலாம்.

SRIMATHI KAMALAMBUJAM AMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கொடுக்கும் ஏற்பாட்டில் ஒரு தறி மாத்திரம் வைத்திருப்பவர்களுக்கும் நூல் கிடைக்க செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இப்போது நூல் கிடைக்கவில்லை என்ற எந்தவிதமான புகாரும் கிடைக்கவில்லை. எல்லா கைத்தறிகளுக்கும் நூல் கிடைத்து வருகிறது.

SRI A. VEDARATNAM PILLAI : நமது மாகாணத்தில் நான்கு கூட்டுறவு மில்கள் ஆரம்பிக்கப் போவதாகவும், வேண்டுமானால் அதையும் தெரிவிக்கலாம் என்று சொன்னார்கள். ஆகவே அதை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



31st October 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : அப்பர் அடிகள் கூட்டுறவு மில், திருநெல்வேலி, ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு மில், ஸ்ரீவில்லிபுத்தூர், திருச்செந்தூர் கோவாப்ரட்டீவ் டெக்ஸ்டைல் மில், திருச்செந்தூர், நாங்குநேரி கோவாப்ரட்டீவ் டெக்ஸ்டைல் மில், திருநெல்வேலி, இவைகள் தான்.

SRI A. GOVINDASAMI : புதிய மில்லை துவக்குவதற்கு மத்திய சர்க்கார் கதிர் வழங்கி வருவதாக சொல்லப்பட்டது. இவைகள் நம் நாட்டுக்கு அதிகமாக கொடுக்கப்படாததின் காரணம் அந்நிய நாட்டு செலாவணி இல்லை என்ற காரணத்தினாலா ? நம் நாட்டு நூலை கொடுத்தால் கதிர் கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : திட்டகமிஷன் இந்த நாட்டுக்கு எவ்வளவு கதிர்கள் வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது. அதன் பிரகாரம் ஆங்காங்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஆட்டோமாடிக் மில்களுக்கு கதிர்கள் கொடுப்பதாக நிச்சயித்து வைத்திருக்கிறது.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நம் நாட்டில் பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் பின்தங்கியிருக்கின்ற கிழக்கு ராமனாதபுரம் போன்ற பகுதிகளில் இம்மாதிரியான கூட்டுறவு மில்களை அதிகமாக நிறுவுவதற்கு அரசாங்கம் உடனடியாக ஏதாவது ஏற்பாடு செய்ய முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நிச்சயமாக கவனிக்கப்படும்.

SRI A. GOVINDASAMI : நமக்கு வேண்டிய கதிர்களை எவ்வளவு என்று நிச்சயிக்க வேண்டியது மத்திய சர்க்காரா அல்லது ராஜ்ய சர்க்காரா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நாடு பூராவுக்கும் எவ்வளவு கதிர்கள்வேண்டும் என்று முதலாவது நிர்ணயம் செய்யப்படுகிறது. அதன் பிறகு நம்முடைய ராஜ்யத்திற்கு எவ்வளவு கதிர்கள் என்று நிர்ணயிக்கப்படுகிறது.

SRI K. ANBAZHAGAN : இந்தியா பூராவுக்கும் எவ்வளவு கதிர்கள் வேண்டும் என்று நிர்ணயிக்கிற பொறுப்பு மத்திய சர்க்காருக்கே இருந்தாலும் இந்த ராஜ்யத்திற்கு எவ்வளவு வேண்டும் என்பதை எந்தெந்த அடிப்படையில் நிர்ணயிக்கிறார்கள் என்பதையும் எப்படிப்பட்ட அடிப்படைகளில் நிர்ணயிக்க வேண்டும் என்று எடுத்து சொல்வதற்கு சென்னை ராஜ்யத்திற்கு உரிமை இருக்கிறதா என்பதையும் தெரிவிப்பீர்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதாவது நம் ராஜ்யத்திற்கு எவ்வளவு கதிர்கள் வேண்டும் என்று நாம் தான் சொல்லுகின்றோம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மதராஸுக்கு அதிகமாக கொடுத்து விட்டார்கள் என்று மற்றவர்களின் புகாராக இருக்கிறது.

SRI N. K. PALANISAMI : இப்போது நான்கு மில்கள் ஆரம்பிக்கப் போவதாக தெரிவித்தார்கள். 1952-ல் இம்மாதிரி மில்கள் ஆரம்பிப்பதற்கு வேண்டி குறைந்த விலை பெறக்கூடிய மில்லை அதிக விலை கொடுத்து வாங்குவதற்கு தீர்மானித்து, அதைப் பற்றி இந்த சபையில் விவாதித்து அப்போது வாங்கப் போவதாக இருந்ததை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதைத்தான் இப்போது வாங்கப் போகிறார்களா, அதன் நிலை என்ன?

THE HON SRI R. VENKATARAMAN : இதற்குத் தனிக் கேள்வி கேட்கவேண்டும்.

[31st October 1957

*Deep-sea fishing.*

* 46 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have represented to the Central Government in 1956 or 1957 to start a deep-sea fishing station; and

(*b*) if so, whether any survey has been conducted in this regard?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) The Madras Government proposed to include a scheme for starting a Deep Sea Fishing Station on the East Coast in the Second Five-Year Plan but the Government of India did not accept the proposal as they said that the Station at Cochin would serve East Coast also. This Government pressed for a separate station on the East Coast. The Government of India have since decided to pool the Deep-sea fishing vessels on a regional basis for satisfactory operations. Under the scheme, Tuticorin would be the regional Station for Madras, but the scheme has not yet come into force.

(*b*) The Government of India have not yet commenced any survey. However, preliminary surveys conducted so far by Mr. G. Illugason, F.A.O. Fishery Engineer, assigned to this State with the two vessels allotted to this State have revealed the existence of rich fishing grounds off Ennore, Cuddalore, Pulicat, Tuticorin, Palk Straits and Rameswaram.

*Reserve forest in Coimbatore district.*

* 47 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the extent of Reserve forest in Cinchona plantations, Anamalai Hills, Coimbatore district; and

(*b*) whether there is any proposal to bring the forest area under cultivation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Director, Cinchona Department, has reported that the total area so far taken over by the Cinchona Department from the Forest Department on the Anamalai Hills of Coimbatore district is 7,345 acres.

(*b*) There is no proposal to bring into cultivation of Cinchona any new forest areas.

SRI N. K PALANISAMI : ஸர், ஏழாயிரம் ஏக்கர்களுக்கு மேல் சிங்கோனு பயிரிடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருந்தும் அதில் ஐந்து ஆயிரம் ஏக்கர் வரையிலும் இப்போது தரிசாக போட்டிருக்கிறார்கள். இதில் டீ வைத்து பயிர் செய்தால் ஏக்கர் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும் என்று தெரிகிறது. இதை செய்யாமல் ஏன் தரிசாக போட்டிருக்கிறது என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிங்கோனு பயிர் செய்வதற்கென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் இடங்கள் ஒன்றும் தரிசாக போடவில்லை. எல்லா நிலங்களையும் உபயோகிக்கப்பட்டுதான் வருகிறது. இப்போது அதில் எல்லாம் சில மருந்து வகையான செடிகள் பயிரிடப்பட்டு வருகிறது. இவைகளில் எல்லாம் சிங்கோனு பயிர் செய்யப்படும்.



31st October 1957]

SRI A. GOVINDASAMI : வங்காளத்தில் கிடைத்து வரும் சிங்கோனு நம் நாட்டிலிருந்து கிடைத்து வரும் சிங்கோனுவை காட்டிலும் விலை குறைவாக விற்று வருவதால் நம் நாட்டிலுள்ள சிங்கோனு தேங்கி கிடப்பதாக சொல்லப்படுகிறது. ஆகவே இதை மாற்றி சிங்கோனுவுக்கு ஒரே விலையை நிர்ணயிக்க மத்திய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க நமது அரசாங்கம் சிபார்சு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

*Lecturers in affiliated colleges.*

* 48 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the salaries of lecturers in affiliated colleges; and

(*b*) whether the Government have issued any note to raise their salaries?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Yes, Sir. The matter is under consideration.

SRI K. ANBAZHAGAN : இணைப்புக் கல்லூரி ஆசிரியர்கள் ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்ற புதிய திட்டம் ஆலோசனையில் இருந்த போதிலும், சில இணைப்புக் கல்லூரிகளில் ஆசிரியர்களுடைய தகுதியின் தன்மையும், அவர்களுடைய பல ஆண்டு உழைப்பின் தன்மையையும் கருதி அவைகளுக்குத் தகுந்தபடி அவர்களது ஊதியம் உயர்த்தப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லோருக்கும் ஒரே ரீதியில் சம்பளம் இருக்க வேண்டும் என்று கருதிதான் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI S. NAGARAJA MONIGAR: ஐஸன்ஹோவர் என்ன என்றால் அது ஒரு நதியின் பாலத்தின் பெயர் என்றும், நேரு யார் என்று கேட்டால் அது ஒரு மரத்தின் பெயர் என்றும் இப்போது கலாசாலையிலுள்ள மாணவர்கள் பப்ளிக் ஸர்விஸ் கமிஷனில் பதில் சொல்லுகிறார்கள். இவ்விதம் இருக்கும் போது இந்தவிதமான கலாசாலை ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டியது அவசியம்தானு என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : I do not think the Hon. Minister need answer that question.

SRI A. A. RASHEED : What is the percentage the Government will bear in the increase in salaries of lecturers in affiliated colleges?

THE HON. C. SUBRAMANIAM : The matter is under consideration and we are hoping to get some assistance from the University Grants Commission or from the Government of India. So I am sorry, I will not be able to give the exact percentage we will bear.

SRI K. ANBAZHAGAN : அரசாங்கக் கல்லூரிகளிலும் இணைப்புக் கல்லூரிகளிலும் பணியாற்றும் தமிழ்த்துறை ஆசிரியர்கள் பிற வகை துறைகளில் உள்ள ஆசிரியர்களை விடப் பலதரமாகப் பிரிக்கப்பட்டு சிலர் மிகத் தாழ்ந்த நிலையில் பணியாற்றுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த குறை அதிகமாக நீங்கி விட்டது என்று நம்புகிறேன். இன்னும் குறை இருந்தால் நீக்குகிறேன்.

SRI N. K. PALANISAMI : கனம் மந்திரி அவர்கள் எல்லோருக்கும் ஒரே விகிதத்தில் சம்பளம் கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். அது எப்போது கொண்டுவரப்படும் என்று தெரிவிக்குமாறு கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு கொஞ்சம் பண வசதி வேண்டியிருக்கிறது. பண வசதி இருந்தால் இதை செய்ய முடியும்.

### *Slums.*

* 49 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any amount from the Centre in July 1957 for slums clearance; and

(*b*) if so, the number of slums to be cleared in the Madras City this year?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) As many as 16 slums are proposed to be taken up this year for improvement.

SRI N. K. PALANISAMI : மத்திய சர்க்கார், இந்த ராஜ்யத்திலுள்ள குடிசைகளைப் பூராவும் சீரமைப்பதற்கு 'பண உதவி செய்கிறோம்' என்றாவது சொல்லியிருக்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த வருஷம் அதிகப் படியாக ரூ. 20 லட்சம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

SRI T. SAMPATH : Will this scheme be extended to the Major Municipalities, Sir?

THE HON. SRI R. VENKATARAMAN : This scheme is confined to the City of Madras.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. Minister kindly tell us when exactly the promised amount will be made available to this Government by the Central Government. We are already at the end of October and November is coming. It is hardly four or five months for the financial year to end. Even if they give the grant now it is not possible to spend it before the end of 31st March 1958.

THE HON. SRI R. VENKATARAMAN : We have submitted schemes for the improvement of 16 slums in the City. Schemes for the improvement of nine slums have been accepted by the Central Government. The cost of these schemes alone will come to Rs. 21·68 lakhs. Therefore I do not think there will be much difficulty in spending the money.

SRI P. G. MANICKAM : "ஸ்லம் க்ளியரன்ஸ் அண்ட் டவுன் பிளானிங் ஆக்ட்" பிரகாரம் மேஜர் பஞ்சாயத்துக்களிலும் முனிசிபாலிடி களிலும் சேரி ஒழிப்புத் திட்டம் நடைபெறும் என்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இத்திட்டம் 1957–58 வது வருஷம் அமலுக்கு வருகிறது. அப்படி அமலாக்கப்படுமானால் அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?



THE HON. SRI R. VENKATARAMAN : இந்த மூலக் கேள்வி சென்னையில் இருக்கிற குடிசைகளில் வாழ்பவர்களைப் பொறுத்தது. இந்த வருஷம் எடுத்துக் கொள்ளப்படும் வேலை சென்னையில் செய்யப்படும் "ஸ்லம் க்ளியரன்ஸ்" தான்.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த வருஷம் சீரமைப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் இந்த ஒன்பது குடிசைப் பிரதேசங்களின் பெயர்கள் என்ன ? இந்த வருஷம் எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் எல்லா குடிசைப் பிரதேசங்களின் பெயர்களையும் கனம் மந்திரி அவர்கள் தயவு செய்து சொல்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய சர்க்காரின் அனுமதி பெற்ற ஒன்பது திட்டங்கள் இந்த வருஷம் நிறைவேற்றப்படவிருக்கின்றன. அந்தத் திட்டங்களின் பெயர்களைச் சொல்கிறேன். (1) திருவேங்கடபுரம்—180 குடும்பங்கள் "ஸ்லம் க்ளியரன்ஸ்" செய்யப்படவிருக்கிறது ; மொத்தச் செலவு ரூபாய் 1,63,000. (2) மல்லிக்குப்பம்—266 குடும்பங்களுக்கு வசதி செய் யப்படும் ; மொத்தச் செலவு ரூபாய் 3,57,000. (3) நொச்சிக்குப்பம்—364 குடும்பங்களுக்கு வசதி செய்யப்படும் ; மொத்தச் செலவு ரூபாய் 2,67,000. (4) திருவள்ளுவர் குப்பம்—இது கொஞ்சம் பரிசீலனையில் இருக்கிறது. (5) லாக்நகர்—115 குடும்பங்களுக்கு வசதி செய்யப்படும். (6) மீனாம்பாள் சிவராஜ் குப்பம். 450 குடும்பங்களுக்கு வசதி செய்யப் படும்; மொத்தச் செலவு ரூபாய் 4½ லட்சம். (7) வாழைப்பூச்சேரி—228 குடும்பங்களுக்கு வசதி செய்யப்படும்; மொத்தச் செலவு ரூபாய் 2,28,000. (8) கரிபேடுச்சேரி—290 குடும்பங்களுக்கு வசதி செய்யப்படும் ; மொத்தச் செலவு ரூ. 2,90,000. (9)-வது நடைபாதையில் வசிப்பவர்களுக் கான திட்டங்கள்—101 குடும்பங்களுக்கு வசதி செய்யப்படும் ; மொத்தச் செலவு ரூ. 1,01,000.

SRI K. VINAYAKAM : Sir, it has been agreed between the Corporation of Madras and the City Improvement Trust that the former should improve all the slums lying in the north of Madras and the latter the slums slying in the south of Madras. Are the Government aware of the fact that the City Improvement Trust has not taken even one slum in the south of Madras for the past three years as a result the Corporation is neglecting those slums. No roads have been laid, no lights fitted up, no taps installed in any of the slums and these slums have gone into disrepair. They are all just patches of hell on earth.

THE HON. SRI R. VENKATARAMAN : The Government strongly repudiate the suggestion made by the hon. Member. On the contrary the City Improvement Trust has done good work.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that at the rate of slum clearance it will take another 20 years to complete all the slums in the City of Madras?

THE HON. SRI R. VENKATARAMAN : Possibly, yes or even more.

SRI M. KALYANASUNDARAM : இதர முனிசிபாலிடிகளுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்று கேட்டகேள்விக்கு தற்சமயம் சென்னை நகரத்திற்கு மட்டும் தான் இது இருக்கிறது என்று கனம் மந்திரி அவர் கள் பதிலளித்தார்கள். ஒவ்வொரு வருஷமும் ஒதுக்கப்படும் தொகையில் ஒரு பகுதியை திருச்சி, மதுரை போன்ற முனிசிபாலிடிகளுக்கு உதவியாக அளிக்கும் யோசனையை சர்க்கார் அலோசிக்குமா ?

[31st October 1957

THE HON. SRI R. VENKATARAMAN : This is a suggestion for improvement.

SRI K. ANBAZHAGAN : ஏற்கெனவே உள்ள குடிசைகள் நிரம்பிய சேரிப் பகுதிகளை சீர்திருத்தவும், அங்கு வாழ்பவர்களை வேறு நல்ல இடங்களுக்கு மாற்றப்படவும் திட்டங்களைத் தரும் இந்த அரசாங்கம், புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் சேரிகளைச் சீர்திருத்தவும், அங்கு வாழ்பவர்களை, குறிப்பாக கூவம் ஆற்றின் கரைகளில் வரிசை வரிசையாகக் காணப்படும் குச்சு, குடிசைகளில் வாழ்பவர்களை, வேறு நல்ல இடங்களில் குடியேற்றத் தக்க திட்டத்தையும் வகுத்திருக்கிறதா ? இது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறதா ? இது குறித்து அந்த வட்டார சட்ட மன்ற உறுப்பினரின் ஆலோசனை கேட்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த வட்டார சட்ட மன்ற உறுப்பினர் தயவு செய்து அந்தச் சேரிகளில் எந்தப் பகுதிகளை சரியாக சீரமைக்க வேண்டும் என்பதை எழுதிக் கொடுக்கும்படித் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன். கூவம் நதிப் பிரதேச மக்கள் மிகவும் கஷ்டத்துடன் வாழ்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இப்போது எந்த எந்தத் திட்டங்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லப்பட்டது. வேறு திட்டங்களும் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI K. R. NALLASIVAM : சேரி ஒழிப்பு வந்துள்ள பகுதிகளிலும் வராத பகுதிகளிலும், மழை காலங்களில் மழைத் தண்ணீர் தேங்கிவிடுகிறது. சேரி ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு, அங்கெல்லாம் மழைத் தண்ணீர் வடிப்பதற்கான முயற்சியை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக, தண்ணீரை வெளியேற்றுவதற்கு அங்குள்ள ஜனங்களே பாதையை வெட்டிவிடலாம். இதை சர்க்கார் வந்து செய்யவேண்டும் என்று காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI V. SANKARAN : சேரிகள் நிலைமை மதுரை போன்ற மொபசல் (Mufassal) [illegible]ங்களில் சென்னையைவிட மோசமாக இருப்பதால், அங்கேயும் சேரிகளைப் புனரமைக்கும் திட்டத்தை சர்க்கார் உத்தேசத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறதா ? அப்படியில்லை யானால், இனிமேலாவது உத்தேசத்தில் எடுத்துக்கொள்ளுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : முதல் பகுதிக்கு இப்போது உத்தேசம் இல்லை என்று சொல்கிறேன். இரண்டாவது பகுதிக்கு, சர்க்கார் இந்த யோசனையை ஏற்றுக்கொள்ளுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI K. VINAYAKAM : I am sorry I have not been properly understood, Sir.

MR. SPEAKER : By whom?

SRI K. VINAYAKAM : By the Hon. Minister-in-charge, Sir. (Laughter.) The City Improvement Trust, has done very good work in floating new schemes and colonies but it is not clearing any existing slum. That is our complaint. What provision is there to compel the City Improvement Trust to give at least rudimentary amenities to the existing slums which it is its duty and not that of the Corporation? So long as the Corporation neglects to do that work, the slums continue to be what they were. Will the Government take steps to instruct the Trust to attend to the slums in addition to the good work which they are already turning out?

THE HON. SRI R. VENKATARAMAN : I shall transmit the opinion of the hon. Member to the City Improvement Trust.



31st October 1957]

SRI K. ANBAZHAGAN : சேரிகள் சீரமைப்பு சம்பந்தமாக ஒரு கருத்தினை அறிய விரும்புகின்றேன். நகரின் நடுப் பகுதிக்கு வந்து உழைத்து வாழும் ஏழை சேரிவாழ் மக்களுக்கு அருகாமையில் குடிசைகள் இல்லாததால், அவர்கள் தாங்கள் வேலை செய்யும் இடங்களிலிருந்து 3 மைல், 5 மைல், 7 மைல் தொலைவில் வாழ வேண்டியிருப்பதால், அவர்களுக்கு மன நிம்மதியும் இட வசதி பற்றி முழுத் திருப்தியும் அளிப்பதாக இல்லை. நகரில் இம்மக்களுக்கு வசதியான குடியிருப்பு அமைக்கக் கூடியதாக ஜமீன்தார்களுக்குச் சொந்தமான பல நிலங்கள் காலியாக இருக்கின்றன. அவைகளை இந்த ஏழை மக்களுக்காக பெற்று அங்கே குடிசைகளைக் கட்டித் தருவதற்கு அரசாங்கம் திட்டமிடுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குடிசைவாழ் மக்களுக்காகப் புதிதாக இடம் வாங்க வேண்டுமென்றால், சர்க்கார் அவைகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டும். மற்ற இடங்களில் 100 பேர்களுக்கு இட வசதி செய்து கொடுக்கமுடியுமானால், கனம் அங்கத்தினர் குறிப்பிடும் இடங்களில் ஒருவருக்கோ அல்லது 10 பேர்களுக்கோ தான் வீடுகள் கட்டித் தர முடியும். இந்த விஷயம் நிலத்தின் விலையைப் பொறுத்திருக்கிறது. குறைவான விலைக்கு எவ்வளவு அதிகமான இடத்தைப் பெற முடியும், எவ்வளவு அதிகமான பேர்களுக்கு இட வசதி செய்து கொடுக்கமுடியும்—என்று பார்த்துத் திட்டமிட வேண்டியிருக்கிறது.

SRI P. G. MANICKAM : மெட்ராஸ் சிடி ஸ்லம் இம்ப்ரூமெண்ட் ஆக்ட்-ஐ மேஜர் பஞ்சாயத்துக்களிலும் முனிசிபாலிடிகளிலும் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

SRI M. R. KANDASAMI-MUDALIAR : இப்போது நடந்து வரும் சேரி ஒழிப்புத் திட்டங்கள் எல்லாம் நகரப் பிரதேசங்களில் இருக்கிறது. இது கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : சென்னை நகரத்தில் சேரிகள் பிரச்னை மக்களை மிகவும் கொடுமையாக பாதிக்கிறது என்பதால், முதன் முதலாக ஒரு திட்டத்தை சென்னை நகரத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறோம். பிற இடங்களில் விஸ்தரிப்பது பற்றி பிறகு ஆலோசிக்கப்படும்.

SRI T. KARIA GOUNDER : கனம் தலைவர் அவர்களே, ஜமீன்தார்கள் அதிக நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கனம் நண்பர் ஸ்ரீ அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே, ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டப்படி ஜமீன்தாரிடமிருந்து சர்க்கார் நிலங்களைக் கைவசம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஜமீந்தார்களுக்குச் சொந்தமான காலி நிலங்களை எடுத்துக்கொள்வதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : The Hon. Minister need not answer this question.

*Rice bran.*

* 50 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of rice bran allowed to be exported during 1957–58 from the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The quantity of rice bran allowed to be exported during 1957–58 is reported to be 105 tons.

SRI N. K. PALANISAMI : வெளி நாடுகளுக்குத் தவிர அனுப்புவதில் என்னென்ன விதிகள் செய்யப்பட்டிருக்கிறது ?

[31st October 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த அரசாங்கத்தைப் பொருத்தமட்டில், வெளி நாடுகளுக்கு தவிடு அனுப்பப்படக் கூடாது, இந்த நாட்டிலேயுள்ள மாடுகளுக்குத் தேவையாயிருக்கிறது என்று மத்திய அரசாங்கத்தின் ஜாயிண்ட் சீப் கண்ட்ரோலர் ஆப் எக்ஸ்போர்ட்ஸ் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இந்தத் தவிடானது ரயில் மூலமாக அனுப்ப முடியாது என்று அமைச்சர் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் லாரி மூலமாக அரசாங்கத்திற்குத் தெரியாமல் தவிடு ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரிகிறது. இதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏற்றுமதிப் பிரச்னையெல்லாம் இந்த இந்திய நாட்டைவிட்டு அயல் நாட்டுக்குப் போகும்போது தான் ஏற்படும். லாரியில் அனுப்பும் பிரச்னை இல்லை. ஆகவே, ஏற்றுமதி செய்வது கண்டிப்பாக எதிர்க்கப்பட்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : இது நம்முடைய துறைமுகத்தில் நேரடியாக ஏற்றுமதி செய்யப்படவில்லை. நம்முடைய ராஜ்யத்திலிருந்து வேறு நாடுகளுக்குக் கொண்டுபோய் வேறு துறைமுகங்களிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாகத் தெரிகிறது. அப்படிப் போகாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம் ராஜ்யத்திலிருந்து வேறு ராஜ்யங்களுக்குத் தவிடு போவதென்றால் அது தவறென்று சொல்வது சரியல்ல. ஆனால் கூடிய வரையில் அது ஏற்றுமதியாகிப் போகக் கூடாது என்று தடுக்கவேண்டுமென்பது தான் இந்த அரசாங்கத்தின் அபிப்பிராயம்.

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER.

### MESSAGES FROM THE COUNCIL

MR. SPEAKER : I have to announce to the House the following message, dated the 29th October 1957, from the Hon. the Chairman, Madras Legislative Council :—

" In accordance with Rule 115 of the Madras Council Rules, I transmit a copy of the Madras Registration of Veterinary Practitioners Bill, 1957 (L.C. Bill No. 2 of 1957) as passed by the Legislative Council on the 29th October 1957 and signed by me for the concurrence of the Assembly."

I have also to announce to the House the following message, dated 30th October 1957, from the Hon. the Chairman, Madras Legislative Council :—

" In accordance with Rule 115 of the Madras Council Rules, I transmit a copy of the Motor Vehicles (Madras Amendment) Bill, 1957 (L.C. Bill No. 3 of 1957) as passed by the Legislative Council on the 30th October 1957 and signed by me for the concurrence of the Assembly."



31st October 1957] [Mr. Speaker]

Before we begin discussion on the ' No-Confidence ' Motion, I have to inform the House that to-day is a non-official day and the hon. Member, Sri Kalyanasundaram is asking for leave to introduce a Bill to amend the Madras Cultivating Tenants Protection Act.

## III.—NON-OFFICIAL BUSINESS BILL.

### THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION (AMENDMENT) BILL, 1957.

SRI M. KALYANASUNDARAM : Sir, I beg leave to introduce the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1957.

MR. SPEAKER : Does the Hon. Minister want to make any answer?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Government do not propose to say anything at the introduction stage, Sir.

MR. SPEAKER : The question is—

" That leave be granted to introduce the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1957."

The motion was put and carried.

SRI M. KALYANASUNDARAM : Sir, I beg to introduce—

" The Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1957."

MR. SPEAKER : The Bill will be published in the *Fort St. George Gazette* and will be taken up in the due course.

## IV.—MOTION UNDER RULE 23 (1) (II) OF THE ASSEMBLY RULES *RE* CHANGE IN THE ORDER OF BUSINESS.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

" That item III of the Agenda, viz., discussion of No-Confidence Motion against the Ministry be taken up."

MR. SPEAKER : The question—

" That item III of the Agenda, viz., discussion of No-Confidence Motion against the Ministry be taken up."

The motion was put and carried.

MR. SPEAKER : We shall now proceed with the discussion of the No-Confidence Motion. The Hon. Finance Minister will first make his speech. I want to make it clear that I want to take up voting on this motion at 1-15 p.m. There will be in all three speeches, first the Hon. Leader of the House, then the hon. Member Sri Kalyanasundaram by way of reply to the discussion and third by the Hon. the Leader of the House in his right to give final reply. All this therefore should be over by 1-15 p.m.

## V.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY—*cont.*

**THE HON. SRI C. SUBRAMANIAM :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்திற்கு பதில் சொல்லுவதற்கு ஆரம்பிக்குமுன், இந்த இராமநாதபுரத்தில் நடந்த சம்பவங்களின் காரணமாக உயிர் நீத்தவர்கள், காயம் பட்டவர்கள், சொத்தை இழந்தவர்கள், இவர்களெல்லோருக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதிலும் முக்கியமாக ஹரிஜனங்களில் இறந்தவர்களுக்கும் கஷ்டப்படுகின்றவர்களுக்கும் முக்கியமாக இந்த அனுதாபத்தைத் தெரிவிப்பது சர்க்காரின் சார்பாக என்னுடைய கடமையாக இருக்கிறது. அதற்குக் காரணம், தாழ்த்தப்பட்ட இவர்களுடைய நன்மை, இவர்களுடைய பாதுகாப்பு எல்லாம் சர்க்காருடைய பொறுப்பாக இருக்கிறது. அந்தப் பொறுப்பு இருந்தும் இவ்வளவு ஹரிஜன மக்கள் கொலையுண்டு மாளக் கூடிய நிலைமை ஏற்பட்டதற்கும், அவர்கள் கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டதற்கும் நான் மிகுந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைப்பற்றிப் பேசும்போது, ஹரிஜன நண்பர்கள், ஹரிஜன அங்கத்தினர்கள், மிகுந்த உணர்ச்சியுடனும் உருக்கத்துடனும் பேசினார்கள். எனக்கே அது கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவர்கள் இவ்வளவு அடக்கத்துடன் பேசியது. அவர்களுக்கு இன்னும் அதிகமாகக் கோபித்துக்கொள்ள உரிமையுண்டு. இருந்தாலும் பரம்பரை பரம்பரையாக கஷ்டத்தை அனுபவித்து வந்த காரணத்தால்தான், அந்த சகிப்புத் தன்மை பூராவாக இருக்கும் காரணத்தால்தான் இவ்வளவு நிதானமாக, உணர்ச்சியை காட்டக்கூடிய சம்பவங்களாக இருந்தாலும்கூட கோபப்பட்டுக்கொள்ளாமல், நிதானமாக விஷயத்தை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கும் என்னுடைய முக்கியமான பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் காரணத்தாலேயே இந்த சபைக்குத்தாழ்த்தப்பட்டவர்களுடைய விஷயத்தைப்பற்றி நல்ல முறையிலே, பொறுப்புடனே ஆலோசிக்கவேண்டிய தனிப்பட்ட கடமை ஏற்படுகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிகளின் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகள், பலன்கள், இவைகளெல்லாம் நம்முடைய ராஜ்யத்தைப் பெரிதளவிலும் பாதிக்கக் கூடியவைகளாக இருக்கிறது என்பதை அங்கத்தினர்களெல்லோரும் உணருவார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் பின்னால் பேசுவதாக உத்தேசித்திருக்கிறேன். ஆனால் இந்த இவ்வளவு குரூரமான சம்பவங்கள் நடந்தாலும் ஒரு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்தச் சபைமுன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயத்தைப்பற்றி, இந்தப் பிரச்னைகளைப்பற்றி, ஆலோசிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை நம் எல்லோருக்கும் கொடுத்திருக்கிறது. அப்படி இந்தப் பிரச்னைகளைத் ஆலோசித்து இந்தப் பிரச்னைகள் தீர்வதற்கான ஏற்பாடுகளை யோசிப்பதற்கான ஒரு வாய்ப்பையும் இது அளித்திருக்கிறது என்று நான் நம்புகின்றேன்.

ஆகவே, நான் முதல் முதலில் பேச விரும்புவது, இந்த சம்பவங்களுக்கு அடிப்படையான காரணங்கள் என்ன என்பதைப்பற்றி எனக்குத் தெரிந்த வரையில், நான் தெரிந்துகொண்ட வரையில், என் மனதில் படுவதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். நான் சொல்வதை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்கள் முன்னிலையில் சொல்ல வரவில்லை. இது ஒரு யோசிக்கவேண்டிய விஷயம் என்கிற அடிப்படையில் என்னுடைய சில கருத்துக்களை உங்கள் முன்னிலையில் வைக்க விரும்புகிறேன். அந்தக் கருத்துக்களை யோசிக்கும்போது நான் இந்த சம்பவங்கள் ஏதோ ஒரு தனிப்பட்ட சில நிகழ்ச்சிகளின் காரணமாக நடந்தது என்று ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இதை நம்முடைய சமூகத்திலே நிறைந்து பரவலாக இருக்கும் ஒரு வியாதியின் சின்னமாகவே நான் எடுத்துக்கொள்கிறேன். உடம்பிற்குக் காய்ச்சல் வருகிறது என்றால், காய்ச்சல் ஒரு வியாதி. உடம்பிற்குள்ளே இருக்கும் வியாதியின் சின்னமாகவே இந்தக் காய்ச்சல் வந்திருக்கிறது.





அந்தக் காய்ச்சல் அதிகமாக இருக்குமேயானால் அதை உடனடியாக போக்குவதற்கு மருந்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி மருந்து கொடுக்கும்போது உஷ்ணம் குறைந்தால் மட்டும் போதாது. உடலில் இருக்கக்கூடிய வியாதிதான் காய்ச்சலாக வருகிறது. அந்தக் காய்ச்சலைப்போக்குவதற்கு டாக்டர்கள் முதலில் உடலில் இருக்கக்கூடிய வியாதியை போக்குவதற்கு மருந்து கொடுக்கிறார்கள். வியாதி என்ன, உடலில் உள்ள கோளாறு என்ன என்பதைக் கண்டுபிடித்து இதற்கு மருந்து கொடுக்கிறார்கள். அதே மாதிரி தான் இன்றைக்கு ராமநாதபுரத்தில் இப்பொழுது சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அங்கே ஏற்பட்டிருக்கக்கூடிய சில நிகழ்ச்சிகளின் காரணமாக அங்கு பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றனவா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதை ஆராய்ந்து பார்த்து அங்கே வேர் ஊன்றி இருக்கக் கூடியது என்ன வியாதி என்ற ஒரு முடிவுக்கு வந்தால் அந்த வியாதியை வேருடன் களைந்து எறிவதற்கு நமக்கு கடமை இருக்கிறது. அது நம்முடைய கடமையுமாகும். அந்த வியாதியைப்பற்றி பரிசீலனை செய்யும்போது அந்த வியாதி எப்படி ஏற்பட்டது என்பதையும் பரிசீலிக்கவேண்டியதாக இருக்கிறது. அதற்காக ராமநாதபுரத்தில் சரித்திர வரலாற்றைக் கொஞ்சம் யோசித்து ஓரளவு ஆராய்ந்து பார்க்கவேண்டியதாக இருக்கிறது. அதை ஆராய்ந்து செய்து பார்ப்பது கூட அவசியம் என்றே நான் நினைக்கிறேன்.

ராமநாதபுரம் கீழ் பகுதியில் நடந்த சில சம்பவங்களைப்பற்றி நாம் ஆராய வேண்டியதாக இருக்கிறது. அந்தக் கீழ் பகுதியில் ஏழு தாலூகாக்கள் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். அதில் இரண்டு தாலூகாக்கள் சிவகங்கை, திருப்பத்தூர். மற்ற ஐந்து தாலூகாக்களும் ராமநாதபுரத்தைச் சேர்ந்தவைகள். சிவகங்கை, திருப்பத்தூர் தாலூகாக்கள் அநேகமாக கள்ளர்களும், செட்டிமார்களும் இருக்கக்கூடிய தாலூகாக்கள். அங்கே ஒவ்வொருவரும் விவசாயத்துடன் மட்டும் நில்லாமல் வேறு தொழில்களிலும் ஈடுபட்டு அதை நடத்திக்கொண்டு வருகிறார்கள். உள்ளூர் விவசாயத்தொழிலுடன் நின்றுவிடாமல் வெளிநாடுகளுக்குச் சென்று வர்த்தகத் தொழிலும் செய்து வருகிறார்கள். அப்படி அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வர்த்தகம் முதலிய தொழில்களில் ஈடுபட்டுக்கொண்டு வருவதால் அவர்கள் கொஞ்சம் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். அதனால்தான் அந்தத் தாலூகாக்கள் கொஞ்சம் முன்னேற்றமடைந்திருக்கின்றன. மற்ற ஐந்து தாலூகாக்களும், அதாவது, சிவகங்கை, திருப்பத்தூர் தாலூகா பகுதிகளைத் தவிர மற்ற ஐந்து தாலூகாக்கள் மிகவும் பிற்போக்கான பகுதிகள். அப்படியே அவைகள் தொன்று தொட்டு பிற்போக்கான பகுதிகளாகவே இருந்துகொண்டு வருகிறது என்பதை நாம் நன்றாக கவனிக்க வேண்டும். இங்குள்ளவர்கள் விவசாயத்தில் கூட முன்னேற்றமடையவில்லை. அங்கு இயற்கை வளம் இல்லை என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. சமீபத்தில் தான் எனக்கு அந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்க்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அதைப் பற்றி பின்னால் சொல்லுகிறேன். அப்படிப் போய் பார்க்கும்போது அங்கு நீர்வளமும் நிலவளமும் இருப்பதைக்கூட பார்த்தேன். அப்படி இருந்தும்கூட அங்கேயுள்ள மக்கள் விவசாயத்தில் முன்னேற்றம் காண முடியவில்லை. பல நண்பர்களும் சொன்னார்கள். எனக்கும் அதுதான் நியாயம், உண்மை என்றும் புலப்பட்டது. அப்படிப்பட்ட நில வளம், நீர் வளம் மட்டும் கோயம்புத்தூர் பகுதியில் இருந்திருந்தால் அங்குள்ளவர்கள் பவுன் போட்டு பவுன் எடுத்துவிடுவார்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன். நிலவளம், நீர்வளம் எவ்வளவு நன்றாக இருந்தாலும்கூட அங்கே விவசாய முன்னேற்றம் அடையாமல் அப்படியேதான் முன்னேற்றமடையாத நிலைமையில் தோற்றம் அளித்தது. அதற்குக் காரணம் பல இருக்கின்றன என்பதைப்பற்றி அங்கே நான் விசாரித்துத் தெரிந்து கொண்டேன்.

ஒரு முக்கியமான காரணம் என்னவென்றால் அங்குள்ளவைகளை எல்லாம் ஜமீன் பிரதேசம் என்றும் அங்கு விவசாயம் செய்தால் அதில் விளையும் வரும்படியில் பெரும் பங்கு ஜமீந்தார்களுக்குக் கொடுக்க வேண்டியதாக இருந்த காரணத்தால் விவசாயம் செய்வதில் அங்குள்ளவர்களுக்கு

உற்சாகமும் ஆர்வமும் இல்லாமல் இருந்ததாகத் தெரிய வருகிறது. அதனால்தான் அங்கு விவசாயம் முன்னேற்றமடையாத நிலைமையில் இருந்திருக்கிறது என்று அங்குள்ள விஷயம் தெரிந்தவர்கள் சொன்னார்கள். அது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமாக எனக்குத் தோன்றியது. ஆகவேதான் அங்கே விவசாயத் துறையிலும் முன்னேற்றம் கிடையாது, தொழில் துறையிலும் முன்னேற்றம் கிடையாது. மற்றும் போக்குவரத்து சாதனங்கள் அங்கே இல்லை என்பதைப்பற்றி அங்கே போயிருந்த அங்கத்தினர்கள் அதைப்பற்றி குறிப்பிட்டார்கள். இவ்வளவு பிற்போக்கான பகுதியில் வாழக்கூடிய மக்களைப்பற்றியும் நாம் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அங்கே இருக்கக்கூடிய மக்களைப்பற்றி எல்லோரும் சொன்னார்கள். அங்குள்ளவர்கள் எல்லோரும் வீரர்கள் என்றும், வீர உணர்ச்சி உடையவர்கள் என்றும், அங்குள்ளவர்கள் மறவர்கள் என்றும் சொன்னார்கள். அதைப்பற்றி சந்தேகம் கிடையாது. அங்குள்ள சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் யாரும் பயப்படக்கூடியதாக இருக்கும். அங்குள்ளவர்கள் வீர மனப்பான்மையுடையவர்களாக இருந்ததும் தெரியவரும். அவர்கள் எந்த நிலைமையில் வாழ்ந்து வந்தார்கள் என்பதும் தெரியும். வீர உணர்ச்சி படைத்த மக்கள் அங்கே இருந்திருக்கிறார்கள். இன்னும் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

அத்துடன் அங்கே இருக்கக்கூடிய சமூக அமைப்பை நாம் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். நமது ஹிந்து சமூக அமைப்பின் பலனாக ஜாதி அடிப்படையில் மேல் ஜாதி என்றும் கீழ் ஜாதி என்றும் ஜாதி பாகுபாடு அமைத்து யார் யார் எந்த எந்த வேலைகளைச் செய்யவேண்டும் என்கின்ற அடிப்படையில் இந்த சமுதாயம் இந்த ஹிந்து சமூகம் இயங்கி வந்திருக்கிறது என்பதை பார்க்கும்போது அது பயன்படக்கூடிய அமைப்பாய் இருந்து இருக்கவில்லை. அதைப்பற்றி இங்கே சொல்லவேண்டிய அவசியம் இல்லை, அதை ஆராய வேண்டிய அவசியமும் இல்லை. நம்முடைய பிரச்னையைப் பொருத்தவரையில் அந்த சமூக அமைப்பு தொழிலில் இருக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஒத்ததாக இல்லை என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்பதில் ஐயம் கிடையாது. ஆகவே இந்த சமூக அமைப்பு மேல் ஜாதி கீழ் ஜாதி என்கின்ற அமைப்பில் எதிர்கால நிலைக்கு ஒத்ததாக இல்லாமல் இருந்ததால் ராமனாதபுரம் ஜில்லாவைப் பொறுத்த வரையில் அது ஒரு "ப்யூடல் ஸிஸ்டம்" என்று சொல்லுவார்கள். அதைப் போல் அது தொடர்ந்து வந்திருக்கிறது. இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்பதை அங்கே இருக்கக்கூடிய சமூக அமைப்புக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. சந்தேகமும் கிடையாது. அங்கே அப்பேற்பட்ட சமூக அமைப்பு ஒரு காலத்தில் ஒத்ததாக இருந்தாலும் தற்காலத்தில் அப்படி இருக்க முடியாது. ஆனால் அங்கே அது தொடர்ந்து இருக்கக்கூடிய நிலைமையில் இருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட பிற்போக்கான பகுதிகளில் இருக்கும் மக்கள் தங்களுடைய வாழ்க்கையை எப்படி நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட பிற்போக்கான பகுதிகளில் வாழும் மக்களுக்குப் போதிய வாழ்க்கை வசதி கிடையாது, வேண்டிய அளவு வருவாய் கிடையாது. அப்படி வேண்டிய வருவாய் அல்லாமல் போகுமானால் அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு அத்யாவசியமான பொருள் வேண்டியதாக இருக்கிறது. அந்த சூழ் நிலையில் அவர்கள் பிச்சை எடுத்து பிழைக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் வேறு ஊர்களுக்குச் சென்றோ பிச்சை எடுக்க வேண்டியதாகவோ இருக்கிறது. தங்களுடைய வாழ்க்கைக்கு வசதி இல்லாமல் போனால் அவர்கள் பிச்சை எடுத்து பிழைக்க வேண்டியதாக இருக்கிறது. எங்கே சுமுகமான வாழ்க்கை இருக்கிறதோ அங்கே சுலபமாக பிச்சை எடுத்துப் பிழைப்பார்கள். ஆனால் வீரம் படைத்தவர்களும் உணர்ச்சி பெற்றவர்களும் இந்த மாதிரியான இழிவான பாதைக்குப் போக அவர்கள் இணங்க மாட்டார்கள். ஆகையால் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் தங்களிடத்திலுள்ள வீர உணர்ச்சியின் காரணமாக என்ன செய்கிறார்கள் என்றால், நாம் போய் பிச்சை எடுப்பதாவது, அந்த இழிவான தொழிலுக்குப் போவதாவது என்று சட்டத்தை மீறியாவது தங்களுடைய



வாழ்க்கையை நடத்தவேண்டும் என்று நினைக்கிறார்கள். அதற்கு வேண்டிய நிர்ப்பந்தமும் அவர்களுக்கு ஏற்படுகிறது. அதனால் அவர்கள் திருட்டு, கொள்ளை முதலிய தொழில்களில் ஈடுபடுகிறார்கள். சமுகத்தில் சிலர் தங்களுடைய வாழ்க்கையையே தியாகம் செய்துகொண்டு தங்களுடைய வாழ்க்கையை இழிவுபடுத்திக்கொண்டு பிச்சை எடுத்துக்கொண்டு பிழைக்கிறார்கள். அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் பிச்சை எடுத்துப் பிழைப்பது சமுதாயத்தை பாதிக்கப்படுவது இல்லை என்று நினைக்கிறார்கள். பிச்சை எடுத்து பிழைத்தால் போதும் என்றும் திருப்தி அடைகிறார்கள். பிச்சை எடுப்பது சமுக சூழ்நிலையினால் ஏற்படக்கூடிய கேடுகள் என்பதை நாம் உணருகிறோம். சிலர் தங்களுடைய மனப்பான்மையின் காரணமாக தங்களுடைய வாழ்க்கையையே இழிவுபடுத்திக்கொண்டு என்னளவு தங்களுடைய வாழ்க்கையையே தியாகம் செய்துகொண்டு பிச்சை எடுத்துக்கொண்டு வாழ்கிறார்கள். பிச்சை எடுப்பதன் காரணமாக சமுதாயம் எந்த வகையிலும் பாதிக்கப்போவது இல்லை. பிச்சை போடுவதையே நல்ல காரியம் என்று ஒரு சிலர் கருதுகிறார்கள். அந்த முறையிலும் தங்களுடைய வாழ்க்கையில் கொஞ்சம் தியாகத்தையும் செய்கிறார்கள். சிலர் தங்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் நடத்தவேண்டும் என்று நினைக்கும்போது தங்களுடைய வாழ்க்கைக்கு சிலவற்றை அத்யாவசியமாக பெறவேண்டியதாக இருக்கிறது. அதனால் அவர்கள் கொள்ளை திருட்டுகளில் இறங்குகிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் அங்கே வாழ முடியாது. ஆகையால்தான், வீரர்கள் நிறைந்த அந்தப் பகுதியிலே அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு களவு, கொள்ளை, இம்மாதிரி ஏற்பட்டது என்றால் அதற்கு அங்கிருக்கக்கூடிய சூழ்நிலைதான் காரணமே தவிர, வேறு ஒன்றும் அல்ல என்று நாம் நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும். இதை நான் ஏதோ வாதத்திற்காகச் சொல்ல வரவில்லை. அங்கிருக்கக்கூடிய குற்றங்கள் எப்படி அதிகப்படுகின்றன, எப்படிக் குறைக்கப்படுகின்றன . . .

SRI T. L. SASIVARNA THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் கிளப்புகின்றேன். கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது, "அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பூராவும் தங்களுக்கு ஏற்பட்ட வறுமையின் காரணமாக, அவர்கள் வீர குணம் படைத்தவர்கள் என்ற முறையில், திருட்டு, கொள்ளை முதலிய காரியங்களில் ஈடுபடுகிறார்கள்" என்று ஒரு பகுதி மக்களைக் குறிப்பிட்டு கனம் அமைச்சர் சொல்வது முறையா என்று கேட்பதோடு அதை நான் ஆட்சேபிக்கிறேன்.

இரண்டாவதாக, அந்தப் பகுதி மக்கள் 1955, 1956, 1957 வருஷங்களில் எத்தனை கொள்ளை கேசுகள், களவு கேசுகளில் ஈடுபட்டார்கள், எத்தனை கேசுகள் போலீசாரிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதன் விவரத்தை கனம் மந்திரி அவர்கள் சபைக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் இதைப்பற்றி சவிஸ்தாரமாகப் பேசப்போகிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப் பற்றி கோபப்படக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப் பற்றிப் பேசுவதிலே எனக்கும் சந்தோஷம் கிடையாது. ஆனால், எப்படி டாக்டர் ஒருவர் வியாதியைப் பார்த்து பெரும் வியாதி என்று அவர் சொன்னால் நம் மனது கஷ்டப்படுமோ அதைப்போல பெரும் வியாதி என்று தோன்றுகிற அதைச் சொல்லி அதற்கான ஒரு சிகிச்சையைச் செய்துகொள்ளவேண்டியது அவசியம் என்கிற முறையில் எனக்கு என்ன கருத்து தோன்றுகிறதோ அதை சபை முன்னால் வைக்கின்றேன். என்னுடைய கருத்துக்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற அவசியம் இல்லை. எனக்கு மனதிலே தோன்றுகிற கருத்துக்களை சபை முன் வைக்கிறேன். அவைகளைப் பரிசீலனை செய்து பாருங்கள். இதுதான் நோய் என்றும், இதுதான் காரணம் என்றும் ஒப்புக்கொண்டால், இந்த வியாதியை எப்படி நீக்குவது என்பதிலே நாம் எல்லோரும் சேர்ந்து யோசிக்

கலாம். என்னுடைய கருத்துக்களை நான் சொல்வதை ஸ்ரீ சசிவர்ண தேவர் ஆட்சேபணை சொன்னால், அதை நான் ஏற்றுக்கொள்வதற்கு தயாராயில்லை.

ஆகையால்தான், இன்றைக்கு ஒரு பகுதியிலே,—அங்கு மட்டுமல்ல, இன்னும் பல இடங்களில் இருக்கின்றது—இருக்கக்கூடிய நிலைமைகளைச் சொன்னேன். பல இடங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருந்தாலும், இந்தப் பகுதியைப் பற்றி பேசுகிற காரணத்தால் அதைப்பற்றி குறிப்பிட்டேன். மற்ற இடங்களில் திருட்டு இல்லையா ? கொலை இல்லையா ? கொள்ளை இல்லையா ? இருக்கிறது. இருந்தாலும், களவு, கொள்ளை முதலியன ஏற்படுகின்ற காரணத்தைச் சொன்னேன். ஒரு பகுதியைப்பற்றி சொல்லும்போது, மற்ற இடங்களிலேயும் களவு, கொள்ளை இருக்குமானால், அதற்குக் காரணம் இதுதான் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். இது அவர்களுக்கு இயற்கையாக ஏற்பட்ட குணம் என்று சொன்னால் அது அவருடைய அபிப்பிராயமாக இருக்குமேயொழிய நான் மாறுபட்ட கருத்து உடையவனாக இருக்கிறேன். இம்மாதிரி குற்றங்கள் ஏற்படுவதற்கு சமூகத்தில் ஏற்பட்ட சூழ்நிலைதான் காரணம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதை நிரூபிப்பதற்குத்தான் சில விஷயங்களைச் சொல்ல முன்வந்தேன்.

என்ன காரணத்தினால் இது சரி என்று தோன்றுகிறது என்றால், சென்ற 50, 60 வருஷ காலமாக இந்தப் பகுதியிலே குற்றங்கள் எந்தக் காலத்தில் அதிகரிக்கின்றன, எந்தக் காலத்தில் குறைகின்றன என்பதை நாம் ஆராய்ந்து பார்த்தால், எவ்வெப்போது நல்ல வெள்ளாமை இருந்து, காலம் சுபிட்சமாக இருந்திருக்கிறதோ அப்போதெல்லாம் குற்றங்கள் குறைந்திருக்கின்றன. எப்போதெல்லாம் பஞ்சம் ஏற்பட்டு, சற்று அதிகமாக இருக்கிறதோ, அப்போதெல்லாம் இந்தக் குற்றங்கள் அதிகமாகியிருக்கின்றன. இது எதைக் காண்பிக்கிறது ? இந்தக் குற்றங்கள் செய்யப்படுவதெல்லாம், பொருளாதார நெருக்கடியின் காரணத்தினாலேதான் என்பதைக் காட்டுகிறது. அங்கு இருக்கக்கூடிய பொருளாதாரக் கஷ்டத்தின் காரணத்தால்தான், சமூக சூழ்நிலையின் காரணத்தால்தான் இந்தக் குற்றங்கள் ஏற்படுகின்றன என்பதைப்பற்றி அதிகமான மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து,—ஒரு சில அங்கத்தினர்கள் வேறுபட்ட கருத்து கொண்டாலும் கூட.

அந்த முறையிலே வாழ்க்கை நடத்தும்போது, சமூக அமைப்பும் அதற்குத் தகுந்த மாதிரி இயங்கி வருகின்ற மாதிரி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெரிய ஜமீன்தார். அவருக்குக் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தனிப்பட்ட கிராமத் தலைவன். அதற்குக் கீழ் வேலை செய்யக் கூடியவர்—அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். அதற்கு அடுத்தபடியாக, சமுதாயத்தின் கீழ்ப்படியில் இருந்துகொண்டு, எல்லோருக்கும் கீழ்ப்படிபவர்களாக இருக்கக்கூடிய ஒரு அமைப்பு இருக்கிறது. அந்த முறையிலே அவர்களுடைய வாழ்க்கை தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது என்பதை நாம் பார்க்கின்றோம்.

ஆகையால்தான், இன்றைக்கு அந்தப் பகுதியிலே நாம் சாதாரணமாகப் பேசுவோமானால் கீழ் ஜாதி, மேல் ஜாதி என்று அங்கே வளர்க்கப்படுவதைப் போல வேறு எங்கும் இருப்பதாக நான் கேட்டதில்லை. இது வேறு பக்கம் இல்லையா ? என்று கேட்கலாம். வேறு இடங்களிலும் இருக்கின்றன. இதற்கு ஒரு சின்ன உதாரணம் சொல்லவேண்டுமென்று சொன்னால், சாதாரணமாக வாழ்க்கையிலே எல்லோரும் பார்த்திருக்கும் உதாரணத்தைச் சொல்கிறேன். நெய் உருக்குவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்—நான் குறிப்பிடுவது கலப்பு நெய் அல்ல—நல்ல நெய். கரூர் நெய் அல்லது காங்கேயம் நெய் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதை உருக்கும்போது, பாதி சமயத்தில் பாதி உருகியிருக்கும். அப்பொழுது சிறு சிறு குறுணை காணப்படும். ஒன்றிரண்டு மட்டும் திட்டாக கெட்டியாக இருக்கும். அந்த நிலைமையில் தான் நாம் இன்றைக்கு இருக்கிறோம். உருக ஆரம்பித்திருக்கிறது. மாறுதல் ஏற்பட ஆரம்பித்திருக்கிறது. ஆனால், இந்த மாறுதல்களுக்கு மத்தியிலும் ஒவ்வொரு [illegible]திலும் இந்தச் சிறு சிறு குருணை இருக்கிறது. சில கட்டியாக



இருக்கின்றன. அந்த ஒரு கட்டிதான் இராமநாதபுரம் கட்டி என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்குத் தனிப்பட்டது அல்ல. அதனுடைய சிறு சிறு குறுணை எல்லா பக்கமும் வியாபித்திருக்கின்றது. ஆனால், அது சிறு அளவிலே இருக்கிறது. அது அவ்வளவாக நம்மைப் பாதிக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**Sri M. KALYANASUNDARAM :** நெருப்பை எடுத்து நெய்யிலே கொட்டி யாரும் உருக்கவில்லையே ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** உதாரணம் எந்த அளவுக்கு போகவேண்டும் என்று இலக்கியம் படித்த அண்ணா அவர்களைக் கேட்டால் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். (சிரிப்பு).

இன்றைக்கு இருக்கக் கூடிய சமுதாய அமைப்பில், மற்ற இடங்களில் பல வேறு மாறுதல் ஏற்பட்டிருந்தாலும், அந்த இடத்தைப் பொறுத்த வரை இன்னும் கெட்டியாக இருக்கிறது. அங்கே உருக ஆரம்பித்திருக்கிறது. இதனுடைய எதிரொலி அங்கு ஏற்படாமல் இல்லை. இருந்தாலும் இன்னும் கட்டியாகத்தான் இருக்கிறது என்பதை உங்கள் மத்தியில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பேர்ப்பட்ட பகுதிகளை பிரிட்டிஷார் அன்றைக்குத் தனியாகக் கவனித்து வந்தார்கள். மற்ற பகுதியில் இல்லையா என்பதைப் பற்றிக் கேட்கலாம். ஆனால், எல்லாப் பகுதியிலும் அம்மாதிரியான சமூக அமைப்பு காணப்படவில்லை. பொருளாதார நெருக்கடி எந்தப் பகுதியிலே மிகவும் நெருக்கடியாக இருந்ததோ அந்தப் பகுதியில் இந்தப் பிரச்னையைத் தவிர்க்க என்ன முறையைக் கையாண்டார்கள் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். இந்தப் பகுதியை பிரிட்டிஷார் தனிப்பட்ட முறையில் வைத்து நடத்தி வந்தார்கள். அதனுடைய பிரதிபலனைத்தான் நாம் இன்றைக்கு அனுபவிக்கிறோம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அவர்கள் எந்த முறையைக் கையாண்டார்கள் ? இந்த வகுப்பினரையெல்லாம் குற்ற பரம்பரையிலே சேர்த்து, போலீஸ் கண்காணிப்பில் வைத்து இருந்தார்கள். போலிஸ் பாதுகாப்பு அடிப்படையில் தான் இதைத் தவிர்க்க முடியும் என்று நினைத்து போலீஸ் ஆட்சியை அங்கு நிறுவினார்கள் என்பதைப் பார்க்கின்றோம்.

(ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் இத்தருணத்தில் தலைமை வகித்தார்.)

போலீஸ் ஆட்சியை நிறுவி அதன் மூலமாக பிரச்னையைத் தீர்க்க முடியுமா என்பதைப் பற்றி அப்பொழுது இருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள், பிரிட்டிஷ் நிபுணர்கள் எல்லாம் எழுதி வைத்திருக்கும் குறிப்புக்களைப் படித்துப்பார்த்தேன். பலர் குறிப்பிட்டிருக்கின்றார்கள் அதன் மூலாமக இந்தப் பிரச்னையைத் தீர்க்கவே முடியாதென்று. பொருளாதார அடிப்படையில்தான் இதைத் தீர்க்கவேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய குற்றங்கள் அந்த முறையில் தான் தவிர்க்கப்படவேண்டும். இது என்னுடைய தனிப்பட்ட கருத்து அல்ல, சமுதாய சூழ்நிலையின் அடிப்படையில் ஏற்பட்ட குற்றங்களை அவர்களும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்காகத்தான் நல்ல வருஷங்களிலே குற்றம் குறைவு, மற்ற வருஷங்களிலே குற்றம் அதிகம் என்று எடுத்துக் காட்டி, பொருளாதார அடிப்படையில்தான் இதைத் தவிர்க்கவேண்டும், அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும் என்று பலர் இந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், பிரிட்டிஷ் ஆதிக்கத்திலே இந்த ஒரு பகுதியில் பொருளாதார முன்னேற்றத்தைக் கொடுத்தால் மற்ற இடங்களுக்கும் கொடுத்தாகவேண்டும். ஆகவே, பொருளாதார முன்னேற்ற முயற்சிகளைச் செய்வதில் பிரிட்டிஷாருக்கு அக்கரை இல்லாமல் போய்விட்டது, வசதி இல்லாமல் போய்விட்டது. ஒரு பக்கத்தில் செய்வதற்கு ஆரம்பித்தால் மற்ற இடங்களிலும் இதைச் செய்தாக வேண்டுமென்ற காரணத்தால் அவர்கள் ஆட்சிமுழுவதும் போலீஸ் அதிகாரத்தைக் கொண்டே, போலீஸ் அதிகாரத்தை உட்படுத்தியே இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும்.

இதன் காரணத்தால் என்ன ஆயிற்று ? இவர்கள் எப்படியும் வாழ்க்கை நடத்தியாகவேண்டும். அதற்காக அவர்கள் பரம்பரையாகச் செய்து வந்த குற்றங்களைத் தவிர்க்கமுடியாத நிலைமையிலே செய்யவேண்டிய நிலைமை வருகிறது. எதற்கும் போலீஸ் கண்காணிப்பு, எந்த நிர்வாகத்திற்கும் போலீஸ் கண்காணிப்பு என்று வரும்போது, அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கும் போலீசாருக்கும் பெரிய முரண்பாடு ஏற்பட்டது. அதன் காரணமாக, அங்கிருக்கும் ஒவ்வொரு குடும்பத்தினரும் குற்ற பரம்பரைச் சட்டத்திற்கு உட்பட்ட காரணத்தால் இந்த நிர்வாகத்தையும், போலீஸ் அதிகாரிகளையும் அவர்கள் தங்களுடைய ஜன்ம விரோதிகளாகக் கருதக்கூடிய நிலைமையும் சூழ்நிலையும் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகையால் தான், இன்றைக்கும் அவர்கள் போலீஸ்காரர்களைப் பார்த்தால் அவர்களை ஜன்ம விரோதிகளாக மக்கள் கருதுவார்களேயானால், அது இன்றைக்கு ஏற்பட்டது அல்ல. சரித்திர நிகழ்ச்சி. இவ்வளவு கண்காணிப்பின் காரணமாக, இவ்வளவு நிர்ப்பந்தத்தின் காரணமாக, அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள், அவர்களின் வாழ்க்கை நடத்த முடியாமல், ஏதோ சாப்பிட மட்டும் அல்ல, மண வாழ்க்கை கூட நடத்த முடியாது. பத்து, இருபது மைல் தூரத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களிலே போய் படுத்திருக்கவேண்டுமென்று அந்தச் சட்டம் அமுல் நடத்தப்பட்ட காரணத்தால் உண்டான வெறுப்பு உணர்ச்சி, பகைமை உணர்ச்சி காரணமாக போலீசையும், போலீசுக்கு ஜவாப்தாரியாக இருக்கக்கூடிய சர்க்காரையும் வெறுக்கக்கூடிய பகைமை உணர்ச்சி வளர்ந்தது என்றால் அதைப்பற்றி நாம் ஆச்சரியப்பட முடியுமா என்று கேட்கிறேன். ஆகையால் தான் அவர்களுடைய வீரத்தையும் ஓரளவுக்கு விட்டுக்கொடுத்து இந்த பலாத்காரம் அவர்களுடைய உணர்ச்சியை விட பெரிய பலமாக இருந்ததின் காரணத்தினால் அவர்களுக்கு அடி பணிந்து வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. அப்படி ஏற்பட்ட உணர்ச்சி—பெரியவர்களுக்கு மட்டுமல்ல, ஆண்கள், பெண்கள் எல்லோருக்குமே—அவர்கள் மனதில் மேலும் வளரக்கூடிய நிலைமையிலே, சூழ்நிலையிலே பிரிட்டிஷ் ஆட்சி நடந்து வந்தது.

**Sri T. L. SASIVARNA THEVAR** : இந்த நான்கு தாலூக்காக்களிலும் எல்லா குடும்பத்தினரும் "வி.டி.ஆக்டுக்கு" உட்படுத்தப்பட்டார்கள் என்று சொல்லுவது தவறான காரியம். இந்தப் பிராந்தியத்திலும் முதுகுளத்தூரில் 369 குடும்பத்தினர்கள் "வி.டி. ஆக்டுக்கு" உட்படுத்தப்பட்டார்கள். பிறகு நாங்கள் ஒரு "கான்பரன்ஸ்" நடத்தி தூதுகோஷ்டி சென்று அதை 69 குடும்பத்தினர்களாகக் குறைத்தோம். 6 மாதங்களுக்குப் பிறகு அவர்கள் கூட "வி.டி. ஆக்டிலிருந்து" நீக்கப்பட்டார்கள். அப்படியிருக்கும்பொழுது நான்கு தாலூக்காக்களிலுள்ள குடும்பங்களும் "வி. டி. ஆக்டுக்கு" உட்படுத்தப்பட்டார்கள் என்று சபை முன்பு ஒரு அபாண்டமான புளுகை அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அபாண்டமான புளுகு என்று ஸ்ரீ சசிவர்ணத் தேவர் சொல்கிறார். அதை நான் பொருட்படுத்தவில்லை. உணர்ச்சியின் காரணமாக அவர் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். நான் நடந்ததைச் சொல்லுகிறேன். நான் அங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையை எடுத்துச் சொல்லுகிறேன். ஒரு குடும்பத்தை "வி. டி. ஆக்டிலிருந்து" சேர்க்கவும் தவிர்க்கவும் சட்டத்தில் இடம் இருக்கிறது. நான் அங்கு பரவலாக இருக்கக்கூடிய சூழ்நிலையை விவரித்தேனே தவிர வேறு ஒன்றுமில்லை. நான் எல்லோரையும் குற்றம் செய்தவர்கள் என்று சொல்ல வரவில்லை. அங்கு சமூக அமைப்பு எப்படி இருக்கிறது, நிலைமை எப்படி வளர்ந்து வருகிறது என்பதை யோசிக்க வேண்டுமென்ற முறையிலே உங்கள் முன்னிலையிலே பேசுகிறேன். யாரும் ஆத்திரப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த நிலைமை ஏற்பட்டது பற்றி எல்லோரும் தலை குனியவேண்டியது தான். யாரும் பெருமைப்பட வேண்டிய அவசியமில்லை. உணர்ச்சியை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்து விட்டு எல்லோரும் சேர்ந்து அமைதியான முறையிலே இங்கு இருக்கக்





கூடிய சூழ்நிலையை ஆராய்ந்து பார்க்கவேண்டும். என்ற அடிப்படையிலே இந்தப் பிரச்னையை நான் உங்கள் முன்னிலையில் வைக்கிறேன். ஆகையினால் சசிவர்ணத் தேவர் அவர்கள் ஆத்திரப் படவேண்டிய தேவையில்லை. என் குறிப்புகள் தவருக இருக்கலாம். என் கருத்துகள் கூட தவருக இருக்கலாம். நான் எப்பொழுதும் தவறுகளை திருத்திக் கொள்ள தயாராக இருக்கிறேன். நான் முன்பே சொல்லிக்கொண்டு ஆரம்பித்தேன் நான் சொல்வது பூராவும் ஒத்துக்கொள்ளவேண்டியதில்லை என்று. என்ன வியாதி என்பதை நாம் அலசிப்பார்க்கவேண்டுமென்பதை நான் உங்கள் முன்னிலையிலே சமர்ப்பிக்கிறேன். தயவுசெய்து யாரும் உணர்ச்சி வசப்படவேண்டாம். சசிவர்ணத் தேவர் அவர்கள் அந்த பகுதியிலிருந்து வரக்கூடியவர். ஆகையினால் ஏதோ அங்கு இருக்கும் மக்கள் குற்றவாளிகள் என்று நான் சொல்லுவதாக நினைத்துக்கொண்டு அவர் ஆத்திரப்படுவதில் ஆச்சரியமில்லை. அவர்கள் எல்லோரும் குற்றம் செய்தார்கள் என்று நான் சொல்லவில்லை. இன்றைக்கு அந்த மனப்பான்மை எல்லாக் குடும்பங்களிலும் இல்லாவிட்டாலும் சில குடும்பங்கள் இம்மாதிரி போலீஸ் கண்காணிப்பில் இருக்கும்பொழுது அவர்களைச் சேர்ந்தவர்களுக்கு, அங்கு இருக்கும் மக்களுக்கு போலீஸ் பற்றி அபிப்பிராயம் எப்படி இருக்கும் ? இதை நாம் யோசித்துப் பார்த்தோமானால் அங்கு போலீஸுக்கு எதிர்ப்பு மனப்பான்மை இருப்பது பற்றி ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அந்தக்காலத்தில் அப்படி இருந்தது. இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமை பின்னாலே விவரிக்கிறேன்.

இந்தச் சமயத்தில் தான் சுதந்திர இயக்கம் வந்தது, மகாத்மா அடிகள் சுதந்திர இயக்கத்தை எடுத்துக்கொண்ட பிற்பாடு தேசம் முழுவதும் சுதந்திர இயக்கம் பரவியது. சுதந்திர இயக்கத்தில் லட்சக்கணக்கான மக்கள் பங்கு எடுத்துக்கொண்டார்கள். எல்லோரும் ஒரே அடிப்படை லட்சியத்திலே பங்கு எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்ல முடியாது. நேற்று அண்ணா அவர்கள் சொல்லியது போல, எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் காங்கிரஸ் சர்க்காருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவரவர் கோணத்திலிருந்து பார்த்து அதற்குத் தகுந்தவாறு சர்க்காரை எதிர்க்கிறார்கள். காந்திஜி அவர்கள் சுதந்திர இயக்கம் அரசியல் இயக்கமல்ல. தேசிய இயக்கம் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். ஆகையினாலே அன்னிய ஆட்சியை ஒழிக்கவேண்டுமென்று தேசிய இயக்கத்திலே சேரும்போது அவரவர் கோணத்திலிருந்து அவரவர் மனப்பான்மையிலிருந்து பார்த்து சேர்ந்தார்கள். முதலாளிகளை எடுத்துக்கொண்டோமானால், வெள்ளைக்காரர்களை வெளியே அனுப்பினால் தான் தாங்கள் பெரு முதலாளிகளாக ஆகலாம் என்ற அடிப்படையிலே அவர்கள் சேர்ந்தார்கள். படித்தவர்கள் வெள்ளையர் இருக்கும் வரையில் தங்களுக்கு உத்தியோகம் கிடைக்காது என்ற ரீதியிலே சில பேர்கள் வந்து சேர்ந்தார்கள். இன்னும் சிலர் லட்சிய அடிப்படையிலே அன்னிய ஆட்சியை ஒழிக்கவேண்டுமென்று சேர்ந்தார்கள். தேசபக்தர்கள் நம்முடைய சுதந்திரம் பிறப்பு உரிமை, சுதந்திரம் பெறுவது மட்டுமல்ல, ஒரு லட்சிய சமுதாயத்தை அமைக்க பாடுபட வேண்டுமென்ற அடிப்படையின் காரணமாகச் சேர்ந்தார்கள். அதனால் தான் மகாத்மாஜி அவர்கள் இது அரசியல் இயக்கமல்ல, மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களும் கூட எல்லோரும் சேர்ந்து சீராக நடத்தக்கூடிய தேசீய இயக்கம் என்று சொன்னார்கள். இந்தப் பகுதி மக்களின் உணர்ச்சிக்கும் நிர்வாகத்திற்கும் இருந்த எதிர்ப்பின் காரணமாக ராமநாதபுரம் பகுதியிலே அன்னிய ஆதிக்கத்தை ஒழிக்க பெரிய பலம் கிடைத்து, அங்கு இருக்கக்கூடிய மக்கள் அதற்கு பேராதரவு கொடுத்தார்கள் என்பது பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை. அவர்கள் அளித்த உதவிக்கு என்றும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். குற்ற பரம்பரையினர் முன்னால் போலீஸை எதிர்த்தவர்கள், நிர்வாகத்தை எதிர்த்தவர்கள் என்ற அடிப்படையிலே, சுதந்திர இயக்கத்திலே அன்னிய ஆதிக்கத்தை எதிர்க்கும்பொழுது போலீஸ் நிர்வாகத்தை எதிர்க்கும் பொழுது தேசபக்தர் என்ற பெயர் ஏற்படக்கூடிய சூழ் நிலை ஏற்படும்பொழுது, அன்னிய ஆதிக்கத்தை எதிர்ப்பதில், போலீஸ் நிர்வாகத்தை எதிர்ப்பதில் மற்றவர்களை விட இந்தப் பகுதி மக்கள் ஆர்வ உணர்ச்சியுடன் அதிக

பலத்தோடு சுதந்திர இயக்கத்தில் சேர்ந்தார்கள் என்றால் அது பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதற்காக நாம் அவர்களையும் பாராட்டுகிறோம். அன்னியர் வெளியேறவேண்டுமென்று எல்லோரும் சேர்ந்து உழைத்ததில் எந்த உணர்ச்சியோடுகூட உழைத்தாலும் நாம் அவர்களை பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அந்த முறையிலே பெரிய அளவிலே அங்கு இருக்கும் தலைவர்கள் சுதந்திர இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்தார்கள். இந்த மரபைச் சேர்ந்தவர்கள் கூட அப்பொழுது இருப்பது போலவே எப்பொழுதும் இருந்துகொண்டு போகலாம் என்று அன்றைக்கு நினைத்திருக்கலாம். பெருவாரியாக நாம் பார்க்கும்பொழுது அன்னிய ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு, போலீஸ் நிர்வாகத்தை எதிர்ப்பதற்கு சுதந்திர இயக்கத்தில் சேர்ந்து பெருவாரியான மக்கள் ஆதரவு கொடுத்தார்கள். இது இயற்கை விதிக்கு ஒத்தது தான், மனித சுபாவத்திற்கு ஒத்தது தான் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : அந்தப் பகுதியிலே உள்ள பொதுமக்களின் மன நிலையைப்பற்றியும், சூழ்நிலையைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் விவரித்தார்கள். ஜாதி வித்தியாசமில்லாமல் மக்கள் எல்லோரையும் பொதுவாக குறிப்பிடுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லோரையும் தான் குறிப்பிடுகிறேன். அங்கே கீழ் ஜாதி மேல் ஜாதி என்ற வித்தியாசமிருந்தாலும் கூட அவர்களிடம் ஒன்றுபட்ட ஒரு ஐக்கியம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். எந்த அடிப்படையில் என்றால் கனம் சசிவர்ணத் தேவர் அவர்கள் கூறியது போல் தகப்பன் பிள்ளை என்ற அடிப்படையில், தாய் பிள்ளை என்ற அடிப்படையில் இல்லை. தகப்பன் போட்ட கோட்டிற்கு பிள்ளை தாண்டக்கூடாது என்ற அடிப்படையிலே அங்கு வாஸ்தவமாக ஒற்றுமை இருக்கிறது. அந்த அடிப்படையிலே தான் கீழ் தட்டில் இருப்பவர்கள் மேல் தட்டில் இருப்பவர்கள் கூறுவதை மீறக் கூடாது என்ற ஒரு ஒற்றுமை இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அந்த ஒற்றுமையைத் தான் அவர்கள் விரும்புகிறார்கள். சம சுதந்திர அடிப்படையில் உட்கார்ந்து ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று இன்னும் பலர் விரும்ப வில்லை. அங்கு மட்டுமல்ல, இன்னும் மற்ற பகுதிகளில் சில இடங்களில் இம்மாதிரி உணர்ச்சி இருப்பதாக சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். சமூக அமைப்பில் ஒரு பக்கத்தில் இந்த உணர்ச்சி இருந்தால் மறு பக்கத்தில் அதே உணர்ச்சி போய்த்தான் சேரும். ஆகவே தனிப்பட்ட ஜாதியைப் பற்றி நான் கூறவில்லை. பொதுவாக அந்த சூழ்நிலையின் காரணமாக அந்தப் பகுதி மக்களுக்கு சுதந்திர இயக்கத்திலே பெரும் பங்கு எடுத்துக் கொள்ளுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படையில்தான் ஸ்ரீ தேவர் அவர்கள் "தேவர்" என்று சொல்லும்போது ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரைத்தான் குறிப்பிடுகிறேன். காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு அன்னிய ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கும் சுதந்தரத்தை நிலைநாட்டுவதற்கும் சேவை செய்தார்கள். இதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அவர் காங்கிரஸுக்குப் பலம் கொடுத்தார் என்று சொல்லப்படுகிறது, எல்லோரும்தான் பலம் கொடுத்தார்கள். அவர் ஓரளவு அதிக பலத்தைக் கொடுத்திருக்கலாம். அதைப் பற்றி இன்று விவாதிக்க நான் தயாராயில்லை. இன்று ஏற்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலைக்குக் காரணம் என்ன என்பதைப்பற்றி ஓரளவு விவரித்துச் சொல்ல ஆசைப்பட்டேன். அதை இச்சபை முன்னும் வைத்து இருக்கிறேன். அதற்குப் பிற்பாடு காங்கிரஸ் அதிகாரம் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிலைமை வருகிறது. 1938–39-ல் இங்கு காங்கிரஸ் அரசாங்கம் ஏற்படுகிறது. அப்போது காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலில் நின்று ஜெயித்தவர்கள் பலர் சட்டசபைக்கு வருகிறார்கள். போலீஸ் நிர்வாகத்தையும் காங்கிரஸ் சர்க்கார் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதன் காரணமாக, காங்கிரஸ் சர்க்காரின் கீழ் போலீஸ் நிர்





வாகம் இருந்தும் கூட, சில இடங்களில் முரண்பாடுபோல் தோன்றும் ஓர் நிலைமை ஏற்படுகிறது. அதாவது காங்கிரஸ்காரர்கள் மீதும் காங்கிரஸ் எம். எல். ஏக்கள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியதொரு நிர்ப்பந்தம் ஏற்படுகிற நிலைமையைக் காண்கிறோம். அதிகாரம் பூராவும் காங்கிரஸ் சர்க்காருக்கு வந்து விட வில்லை என்றும் இன்னும் வெள்ளைக்காரர் ஆட்சியும், வெள்ளைக்கார கலெக்டர்களும் இருக்கிறார்கள் என்றும் மக்கள் நினைக்கக்கூடிய ஒரு நிலைமை நிலவுகிறது. பெரும்பாலான மக்கள் இதைப்புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் இல்லை.

இதன் மத்தியிலே யுத்தம் வந்து, காங்கிரஸ் சர்க்கார் மறைந்து விட்டது. 1946-ல் தேர்தல் நடந்து மீண்டும் காங்கிரஸ் பதவியேற்றது. ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரும் காங்கிரஸ் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டசபைக்கு வந்தார். ஸ்ரீ தேவர் முன்பு குற்றம் செய்தவர் ஆயிற்றே, மறுபடியும் அவரை ஏன் நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள் என்று கேட்கப்படுகிறது. 1941–42-ல் தேசம் பூராவும் 'Do or Die' என்கிற இயக்கம் பெருமளவில் நடந்து ஏராளமான காங்கிரஸ்காரர்கள் அதில் பங்கெடுத்துக் கொண்டு தியாகம் புரிந்தனர், ஸ்ரீ தேவரும் அதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார். ஆதலால் அவர் முன்பு சிறிய தவறுகள் செய்திருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்டு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது காங்கிரஸ் பதவியேற்று போலீஸ் நிர்வாகமும் அதன் கையில் வந்தது முதுகளத்தூர் பகுதியிலும் போலீஸ் நிர்வாகத்தை நடத்த வேண்டிய பொறுப்பு வந்தது. குற்றப்பரம்பரைச் சட்டம் நீக்கப்பட்டாலும், அப்பகுதி மக்கள் போலீஸ் நிர்வாகம் தொடர்ந்து நீடிப்பதை பார்க்கிறார்கள். மக்களிடையே ஒருவிதமான அதிருப்தி ஏற்படுகிறது சுதந்திரம் வந்த பிறகு போலீஸே இருக்காது என்ற கனவு கண்டு வந்து அது பலிக்காததால் மனக்கசப்பு அடைகிறார்கள். இதை ஸ்ரீ தேவரும் பார்க்கிறார். தன்னுடைய மக்கள், தன்னைத் தேர்ந்தெடுத்த மக்கள் காங்கிரஸிடம் மனக்கசப்பு கொண்டதைப் பார்க்கிறார். தேர்தல் நடந்து முடிந்த உடனேயே எப்படிக் காங்கிரஸை விட்டு விலகுவது என்று யோசனை செய்கிறார். இந்நிலையில் சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டும், அங்கு போய் உடனே எப்படி காங்கிரஸை எதிர்ப்பது என்று நினைத்து சட்டசபைக் கூட்டங்களுக்கே போகாமல் இருந்து விட்டார். அவர் இவ்விதம் ஒதுங்கி நின்றதால் அவருடைய ஸ்தானம் காலியாயிற்று. அதற்கு வேறு ஒரு காங்கிரஸ் அபேட்சகர் நிறுத்தப்பட்டார். ஸ்ரீ தேவரும் உடனடியாக எப்படி காங்கிரஸை எதிர்ப்பது என்று விலகி நின்றுவிட்டார். போட்டியில்லாமலேயே அந்த அபேட்சகர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதிலிருந்து காங்கிரஸை எதிர்க்கக்கூடிய ஒரு மனப்பான்மை அங்குள்ள மக்களிடையே வளர்ந்து அதன் காரணமாக ஓர் சூழ்நிலை ஏற்படுகிறது.

(Mr. Speaker in the Chair.)

அங்கு தொடர்ந்து போலீஸ் நிர்வாகம் காங்கிரஸ் பொறுப்பில் இருந்ததாலும், அதனால் அப்பகுதி மக்களிடையே மனக்கசப்பு ஏற்பட்டதாலும், ஸ்ரீ தேவர் அங்கு தமது தலைமையை தொடர்ந்து நிலைநாட்டுவதற்காக, காங்கிரஸை எதிர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டதைக் குறித்து ஆச்சர்யப்படுவதற்கில்லை. "காங்கிரஸ் வந்த பிறகு என்ன செய்திருக்கிறது. குற்ற பரம்பரைச் சட்டம் தான் நீங்கி இருக்கிறதே தவிர மற்றப்படி பெரிய மாறுதல்கள் ஏற்படவில்லை. மக்களுடைய பொருளாதார நிலைமை அப்படியே தான் இருந்து வருகிறது. வாழ்க்கையில் சிக்கல்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. கஷ்டங்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. போலீஸ் நிர்வாகம் அப்படியேதான் இருக்கிறது. கட்டுப்பாடுகள் சற்று தளர்த்தப்பட்ட போதிலும் அமைதியான நிலை ஏற்படவில்லை" என்று அங்குள்ளவர்கள் கருதலாயினர். இவ்விதமானதொரு சூழ்நிலை அங்கு ஏற்பட்டதென்பதை கனம் அங்கத்தினர்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். 1949-ல் அவர் ஒருவருக்கும் தெரியாமல் காங்கிரசில் இருந்து விலகி Forward Block என்ற கட்சியில் சேர்ந்து அப்பிரதேசத்தில் காங்கிரஸுக்கு எதிராக வேலை செய்ய ஆரம்பித்தார். அங்குள்ள மக்களுக்கு மத்தியில் தன்னைப் பின்

ராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு பகுதி மக்கள் மறவர்கள். முக்குலத்தவர்கள். அவரவர்கள் தங்கள் தங்கள் ஆதிக்கத்தில் பிறர் குறுக்கிடாதவாறு இருக்க முக்குலமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் ஹரிஜனங்கள். ஹரிஜனங்களைவிட மேலானவர்களாக, ஆனால் மறவர்களைவிட கீழானவர்களாக நாடார்கள் அங்கே கருதப்பட்டு வந்திருக்கிறார்கள். நாடார்கள் சமூகம் அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறியிருக்கிறது. இந்த முன்னேற்றத்தைக் கண்டு பொறுக்காமல் தேவர்கள் பல காரியங்கள் செய்திருக்கிறார்கள். ஸ்ரீ ராமசாமி நாயுடு எடுத்துச் சொன்னதுபோல "அடே ஒரு நாடான் முதல் மந்திரியாக இருப்பதா ?" என இப்படிப்பட்ட கேவலமான சாதி உணர்ச்சியை இவர் வளர்த்திருக்கிறார். அவர் மக்களிடத்தில் எவ்வளவு இழிவான முறையில் எல்லாம் இந்த ராஜ்ய முதன் மந்திரியைப் பற்றி பேசியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லவில்லை. சொல்ல வேண்டுமென்றாலும் வாய் வரவில்லை. இந்த மாதிரியே தான் ஹரிஜனங்களிடத்திலும் வெறுப்பு உணர்ச்சியை வளர்த்திருக்கிறார்கள். இதையெல்லாம் தேவர் எப்படித் தன் தலைமையை வளர்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டத்தான்.

அமைச்சர் தான் சொன்னார் என்று நினைக்கிறேன். புயல் வெள்ளம் வந்த காலத்தில் இவர் பர்மாவுக்குப் போய்விட்டார். போகட்டும். திரும்பி வந்தவுடன் "அந்தப் பையன்களுக்கு இப்படி இப்படி எல்லாம் செய்ய வேண்டுமென்று உத்திரவு போட்டுவிட்டுப் போயிருந்தேனே. அவன்கள் வந்து ஒழுங்காகச் செய்தான்களா ?" என ஜனங்களிடத்தில் சொல்லுகிறார். அதாவது அவர் பர்மாவில் இருந்து டெல்லிக்குச் செல்ல, முத்துராமலிங்க தேவர் சொல்கிறார், இந்தக் காரியத்தைப் போய் உடனே கவனியுங்கள் என நேரு சென்னை காமராஜருக்கு உத்திரவு போட, இவர் அங்கே ஓடிப் போய் பல காரியங்களைச் செய்ததாகப் பேச்சு. இதுதான் அவர் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்கிற முறை. இப்படி அவருடைய தலைமை வளர்ந்து வருகிற காலத்தில், தேர்தலில் ரகசியமாக வோட்டுமுறை வந்திருக்கிறது. யாருக்கும் தெரியாமல் அவரவர்கள் அவரவர்களுக்கு இஷ்டப்பட்ட பெட்டியில் ரகசியமாக வோட்டுப்போட வசதி செய்திருக்கிறோம். மக்களும் சுதந்திர உணர்ச்சியைப் பெற்று வருகிறார்கள். ஆகையால் இந்தத் தேர்தலில் தேவர் கையாண்ட முறை வோட்டுகளை வாங்க என்ன தெரியுமா ? தன்னைத் தவிர வேறு யாருக்காவது வோட்டுப் போடுவான் என்கிற சந்தேகம் ஒருவனிடம் இருந்தால் அவன் வோட்டுச் சாவடிக்குப் போகக்கூடாது. தனக்கு வோட்டுப் போடுங்கள் என்று அவர்கள் பிரசாரம் செய்யவில்லை. சந்தேகமானவர்கள் வோட்டுச் சாவடிக்குப் போகக்கூடாது என்று பிரசாரம் செய்தார். அதற்கும் மீறி காங்கிரஸ் பெட்டியில் வோட்டுகள் விழுந்திருக்கின்றன என்றால் அத்தனைபேரும் துணிந்து முத்துராமலிங்க தேவரை எதிர்த்தவர்கள், அவருக்கு எதிராகப் போடப்பட்ட வோட்டுகள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். நூறு வோட்டுகள் சென்ற தேர்தலைவிட அதிகமாகக் காங்கிரஸ் பெட்டியில் விழுந்தது என்றால் அந்த நூறும் தேவருக்கு நேர் எதிரிடையானது என்பது அர்த்தம். 1952-ல் நடந்த பொதுத் தேர்தலைவிட, ஜூலையில் நடந்த உபதேர்தலில் காங்கிரஸ் பெட்டியில் எத்தனை வோட்டுகள் அதிகமாக விழுந்திருக்கின்றன என்று பார்க்கவேண்டும் ? 1952-லிருந்து 1957-ம் வருஷத்திற்குள் பதின்மூன்றாயிரம் வோட்டர்கள் அதிகமாகியிருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது இவ்வளவு பேர் காங்கிரஸுக்கு வோட்டுப் போடக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை அவர்கள் வெறுக்கிறார்கள். இந்த சூழ்நிலையில்தான் இப்பொழுது நடந்த சம்பவங்கள் இருக்கின்றன. இதை பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். இதில் யாருக்கும் ஆட்சேபணை இருக்கும். ஸ்ரீ தேவர் அவர்களும் இதைத் தான் பின்பற்றி இருக்கிறார் என்பதை சமர்பித்துக்கொள்ளுகிறேன். ஆகவே ஏதோ ஒரு பக்கத்திலே அவர்கள் ஜெயித்து இருந்தாலுங்கூட பெருவாரியான மக்கள் காங்கிரஸ் முன்பு நம்பிக்கை வைத்து இருக்கும்போது, அரசாங்கம் மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற அடிப்படையிலே வேலை செய்துக் கொண்டு வரும்போது இதில் ஏதோ ஒரு பகுதி மக்கள் இது மாதிரி [illegible]க்கு எதிராக வோட்டு போட்டு விட்டார்கள். இது மட்டுமா



பல இடங்களில் இருக்கின்றன. ஸ்ரீ பழனிசாமி அவர்கள் தொகுதியிலேகூட காங்கிரஸ் ஜெயிக்கவில்லை. அதனால் காங்கிரஸ் அரசாங்கம் போலீஸ் நடவடிக்கை எடுத்துக் கொண்டார்களா ?

ஆகவே இதனால் ஏதோ பெரிய கண்டிப்பு மனப்பான்மை ஏற்பட்டு விடாது. அதற்காக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்பது பற்றி ஒருபக்கம். இன்னொருபக்கம் ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் அவர்கள் கனம் முதல் மந்திரி அவர்களைப்பற்றி தாறுமாறாக பேசினார்கள். அதன் காரணமாக விரோத மனப்பான்மை வைத்து அவர்களை பழிவாங்குவதற்கு திரும்பி இருக்கிறார்கள் என்பது இன்னொரு பக்கம். இதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். இதுமாதிரி பேசுகிறவர்கள் ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் மட்டும் அல்ல. இன்னொரு பெரியார் ராமசாமி நாய்க்கர் அவர்கள் இது மாதிரியாக பேசுகிறார்கள். ஜாதி உணர்ச்சியை தூண்டக்கூடிய பேச்சுக்கள் பேசுகிறார்கள். இதில் அவர் கனம் காமராஜ் அவர்களை ஆதரித்து பேசுவதாக கூறுகிறார்கள். அது பேச்சளவிலே என்று நினைக்கின்றேன். பெரியார் அவர்கள் காங்கிரசை ஆதரிக்கிறார் என்றால் அது காங்கிரசின் பேரிலோ அல்லது ஸ்ரீ காமராஜின் பேரிலோ ஏற்பட்ட அன்பின் காரணமாக அல்ல. முன்பு காங்கிரசையும், ஸ்ரீ காமராஜரையெல்லாம் கன்னாபின்னா என்று பேசியிருக்கிறார். ஆனால் இப்பொழுது யார் பேரிலே இருக்கும் கோபம் ? எதிரிலே உட்கார்ந்துக் கொண்டிருக்கிறார்களே அவர்கள் பேரிலே இருக்கலாம். "நம்கிட்ட வளர்ந்த பையன் வந்து ஒரு பெரிய கட்சியை ஆரம்பித்து அவர் ஒரு தலைவர் ஆவதா" என்று. "அவர்கள் கட்சியை ஏற்படுத்தி இந்த சட்டசபையிலே அதிகமான அங்கத்தினர் வந்துவிட்டால் நம் தலைமை என்ன ஆவது ?" என்று பெரியார் ராமசாமி நாயக்கர் நினைத்து அதைத் தடுப்பதற்கு ஸ்ரீ காமராஜ்தான் சரி, அவரைப் பிடித்துக் கொள்ளலாம் என்று நினைத்துப் பேசுகிறார்கள். அதுதான் இங்கே வம்பாக முடிகிறது. இதில் பலர் சொல்லுகிறார்கள்—ஸ்ரீ ராமசாமி அவர்கள் குறிப்பிட்டதால் சொல்லுகிறேன். ஸ்ரீ ராமசாமி நாயக்கர் அவர்களுக்கும் காமராஜ் அவர்களுக்கும் நட்பு இருப்பதனால் அவர்கள் பேரிலே நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற குற்றம் சாட்டுகிறார்கள். ஜாதித் துவேஷம் வளர்க்கப்படுகின்றது என்று கருதுகிறார்கள். இந்தப் பேச்சுக்கள் இப்போது வந்தது அல்ல. இதற்கு முன்பு நடந்துக் கொண்டிருந்த பேச்சுக்கள்தான். இந்தப் பேச்சுக்களையெல்லாம் பொருள்படுத்தி கோர்ட்டுக்கு எடுத்துக்கொண்டு போவதனால் அதிக தீங்கு வளர்கிறது என்பதைப் பார்க்கிறோம். இதைக் கோர்ட்டுக்கு அனுப்புவதனால் அவர்களுக்கு அதிக மதிப்பு ஏற்பட்டுவிடும் என்பதற்காக அவர்களுடைய பேச்சை உதாசினப்படுத்தி விட்டால், அது அப்படியே அடங்கிவிடும் என்ற கொள்கையின் அடிப்படையிலே விட்டுவிடவேண்டும். ஸ்ரீ ராமசாமி நாயக்கர் வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள். ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் கடுமையாக தாக்கி, சாதாரண முறையில் உள்ளவர்கள்கூட பேசாத வார்த்தைகளை பேசிவருகிறார்கள். அவர்கள் மீதும் ஏன் ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையைக் கடைசியாக உணர்வார்கள். மக்கள் தீர்ப்பு சொல்லட்டும் என்று அந்தப் பேச்சுக்களுக்காக கோர்ட்டுக்குப் போகாமல் விட்டுவிடுகிறோம். இதனால்தான் விளைவுகளை இன்றைக்கு நாம் பார்க்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன். அப்படி ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் மீது நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் என்ன ஏற்பட்டது என்பதைப் பார்ப்போம். அவர்கள் என்ன சொல்வார்கள் என்றால் "மாக்னடிக் நோஸ்" என்ற ஒன்றை வைத்திருப்பதாகவும் அதனால் சமுத்திரம் பூராவும் பனிக்கட்டியாகிவிடும். கப்பல்கள் எல்லாம் அங்கங்கே ஸ்தம்பித்துப் போய்விடும். நாம் இங்கிலாந்தைப் பிடித்துவிடுவோம், அமெரிக்காவைப் பிடித்து விடுவோம், சைனாவைப் பிடித்துவிடுவோம் என்றெல்லாம் பேசினார்கள். இந்த "மாக்னடிக் நோஸ்" அவருடைய மடியிலேயே வைத்துக் கொண்டிருக்கிறார்களாம். இதையெல்லாம் மக்களிடையே சொல்லி வரும்பொழுது—கல்யாணசுந்திரம் அவர்கள் நம்புகிறாரோ இல்லையோ—மக்கள் நம்புகிறார்கள். ஆகவே இப்படியெல்லாம் பிரசாரம் இந்த அளவிற்கு செய்யப்பட்டுவருகிறது. இதனால் என்ன பலன்

பற்றக்கூடியவர்களின் மத்தியில் தன் தலைமையை நிலைநாட்டிக்கொள்வதற்காக காங்கிரஸை எதிர்த்து அங்கு பல்வேறு பிரசாரங்கள் செய்ய ஆரம்பித்தார். அங்குள்ள சூழ்நிலையை தன் புத்திசாலித்தனத்தால் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்டதால் இன்றைக்கும் அங்குள்ள மக்கள் அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேயே அவர் நின்றுவிடவில்லை.

**Sri M. D. RAMASAMY** : கனம் சபா நாயகர் அவர்களே. சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கெடுத்துக்கொண்ட அப்பகுதி மக்கள் சுதந்திரத்திற்குப் பிறகு போலீஸே இருக்காது என்று எண்ணக்கூடிய அப்பாவிகள் என்று கனம் மந்திரி அவர்கள் நினைக்கிறாரா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நாங்கள் எல்லோரும் சுதந்திரம் கிடைத்தவுடன் போலீஸார் இருக்க மாட்டார்கள் என்றும், தேனும் பாலும் நாட்டில் ஓடும் என்று பலவிதமான கனவுகளைக் கண்டுகொண்டுதான் இருந்தோம். அவ்விதமாகப் பேசியும் இருக்கிறோம்! அவரவர்கள் தங்கள் இஷ்டப்படி கனவு கண்டுகொண்டிருந்தார்கள். முதலாளிகள் ஒரு விதமாகவும், பாட்டாளிகள் ஒரு விதமாகவும் நினைத்துக்கொண்டிருந்தனர். அவரவர்கள் நினைத்தபடி காரியங்கள் நிறைவேறாதபோது அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படுகிறது. முன்பு சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் இவ்விதக் கனவுகளைக் கண்டுகொண்டுதான் இருந்தார்கள். கனம் ஸ்ரீ எம். டி. ராமசுவாமி அவர்கள் எவ்வாறு அதில் பங்கு எடுத்துக்கொண்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அதில் பங்கெடுத்து நாங்கள் அவ்வாறு பேசி இருக்கிறோம். அந்தக் கனவுகள் நனவு ஆவதற்கும், மக்களுடைய பெரும் கஷ்டங்கள் நீங்குதவற்கும், பெருமளவு உழைப்பு அவசியமாயிற்று. 1952-ம் வருஷம் நடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீ தேவர் பார்லிமெண்ட் தொகுதிக்கும் அசெம்பிளி தொகுதிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். பார்லிமெண்ட் ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்து அசெம்பிளி ஸ்தானத்தை மட்டும் வைத்துக் கொண்டார்.

ஸ்ரீ தேவருடைய பேச்சுக்களைப் பற்றி இந்த நம்பிக்கை இல்லாத தீர்மானத்தை பிரேரேபித்த ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் கூட புரிந்து கொள்ள முடியவில்லை என்று சொன்னார். ஒரு கோணத்திலிருந்து அவைகளைப் பார்த்தால் எல்லாம் புரியும் என்று நான் அவருக்குச் சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீ தேவர் தன்னை ஒரு ஹிட்லராகப் பாவித்துக் கொள்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது அவருடைய பேச்சுக்களை எல்லாம் அலசிப் பாருங்கள். எல்லாம் ஹிட்லருடைய பேச்சுகளின் அடிப்படையில் தான் இருக்கும். உலக யுத்தத்தைப் பற்றி இவர் எப்படிப் பேசியிருக்கிறார் என்று சிலர் கேட்கலாம். ஹிட்லரும் இதே மாதிரித்தான் உலக யுத்தத்தைப் பற்றியும், படைகளைத் திரட்டுவதைப் பற்றியும் பேசினார். அவ்விதமே காஷ்மீருக்கும் கொரியாவுக்கும் படை திரட்டிப் போவதைப் பற்றியும் பேசியிருக்கிறார். ஹிட்லருடைய பிரசங்கத்தையும் ஸ்ரீ தேவருடைய பிரசங்கத்தையும் வரிசையாக எடுத்துப் பாருங்கள். அப்போது ஸ்ரீ தேவர் ஹிட்லருடைய பிரசங்கத்தை அப்படியே பாடம் படித்து இருப்பது நன்றாகத் தெரியும்.

இந்த அடிப்படையில் தான் ஹிட்லரின் பேச்சுகளும் இருக்கும். "தேவருடைய பிரசங்கங்களை எல்லாம் எடுத்துப் பாருங்கள். எல்லாம் சமாதானத்தைப் பற்றியே பேசப்பட்டிருக்கும்" என்று சொன்னார்கள். ஹிட்லரின் பேச்சுக்களையும் எடுத்துப் பருங்கள். நூற்றுக்கு நூறு சமாதானத்தைப் பற்றியே தான் பேசிக் கொண்டிருப்பார். எப்படி ? "நான் பொறுமையை இழந்துவிடுவேன். பொறுமையை இழந்துவிட்டால் என்ன ஆகும் என்று சொல்ல முடியாது? இப்போது இப்படி இருக்கிறேனே என்றால் சமாதானத்துக்கும், சத்தியத்துக்கும் கட்டுப்பட்டு இருக்கிறேன். நியாயத்திற்கு கட்டுப்பட்டிருக்கிறேன். அநியாயமாக யாரும் நடந்துகொண்டு என்னைப் பொறுமையை இழக்கச் செய்துவிடக்கூடாது. என்னை வலுச்சண்டைக்கு இழுக்காதீர்கள் ? இழுத்தால் என்ன ஆகும் எனச் சொல்ல முடியாது" இப்படியே தான் அவர் பேச்சும் இருக்கும். இவரும் இப்படியேதான்



பேசி வந்திருக்கிறார். இவருடைய நடவடிக்கைகள் எல்லாம் ஹிட்லருடைய நடவடிக்கைகள் போன்றது தான் என்பதை ஒவ்வொன்றாக நிரூபித்துக் காண்பிக்க முடியும். போலீஸ் மந்திரி சரியாக "குட்டி பாஸிஸ்ட் மனப்பான்மை" என்று சொன்னார். மதப் போர்வையும் அதற்கு மேலே. வெளியிடங்களில் தன்னை மதிக்க வேண்டுமே என்பதற்காக "அருள் நெறிக் கழகம்", "சன்மார்க்க சங்கம்" இதெல்லாம். மற்றவர்கள் தன்னை நல்ல மனிதன் என்று மதிக்கவேண்டும் என்கிற வேஷம். ஆனால், அவர் பேச்சு, அவர் கொள்கை எல்லாம் ஹிட்லருடையது போன்றதுதான். இந்தக் கருத்து என்னுடையது. இதை நீங்கள் அப்படியே ஒத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளவில்லை. கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். அப்புறம் நான் சொல்வதில் சிறிதும் சந்தேகமே இடையாது என்பதை ஒப்புக்கொள்வீர்கள்.

இந்தப் அடிப்படையில் அவர் கனவுகள் பல கண்டிருக்கலாம். ஆசிய சேனை, சுபாஷ் பாபு வருவார்கள், செங்கோட்டையிலிருந்து நேருவை அகற்றுவது, செயின்ட் கோட்டையில் இருந்து காமராஜரை அகற்றுவது இப்படித் தன்னை மறந்து தன்னை ஓர் குட்டி ஹிட்லராகவே பாவித்துக் கொண்டு நடந்து வந்தார்கள் என்பது மிகை அல்ல. இதுதான் அவருடைய முக்கியமான தத்துவம். வெறுப்பு உணர்ச்சியின் அடிப்படையில் அவர் தன் தலைமைப் பதவியைப் பிடித்துக் கொண்டு, அதை நிரந்தரமாக வைத்துக் கொள்ள முயற்சி செய்திருக்கிறார். வெறுப்பு உணர்ச்சியை சாதி அடிப்படையில் வளர்க்க முயன்று இருக்கிறார்கள் என்பதை அவருடைய நடவடிக்கைகள் எல்லாவற்றையும் அலசிப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்.

அவர் காமராஜருக்கு எதிரி. காமராஜருக்கு அதனால் அவரைப் பிடிக்கவில்லை என்று சொன்னார்கள். ராஜாஜி முதன் மந்திரியாக இருந்த காலத்தில் தேவர் அவரை ஆதரித்தாரா ? முழுக்க முழுக்க எதிர்த்திருக்கிறார்கள். இப்போது ராஜாஜி வீட்டுக்குப் போய் வரலாம். அப்போது ராஜாஜி எதிர்த்தார் என்பதை பேப்பர் மூலமாகவே பலர் தெரிந்து கொண்டிருக்கலாம்.

திருப்பரங்குன்றத்தில் ராஜாஜியை எதிர்க்க வில்லையா என்றால் அந்தச் சமயத்தை அவர் தனக்குச் சாதகமாகத்தான் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இல்லை. காமராஜருக்குத் தலைமை வாங்கிக் கொடுத்ததே தேவர் தான் என்றால் இப்படி சின்னதுரை சொன்னால் அப்படியே இருக்கட்டும். காமராஜருக்கு அவர் வாங்கிக் கொடுத்த தலைமையாகவே இருக்கட்டும். ஆனால் சிலர் என்னவோ மேலே முன்னேறிப் போய்க்கொண்டே இருக்கிறார்கள். சிலர் பின்னே போகிறார்கள். அதற்காக பின்னே போகிறவர்கள் முன்னே போகிறவர்களைப் பார்த்து, ஐயோ இவன் முன்னேறிவிட்டானே எனப் பொறுமைப்பட முடியுமா ? (சிரிப்பு).

1938-ம் வருஷத்தில் மந்திரி சபை அமைத்தவுடன் ஜஸ்டிஸ் கட்சி நண்பருடன் பேசிக் கொண்டிருந்தேன். அவர் சொன்னார். "நானும் ராமநாதனும் ஒன்றாகத்தான் இருந்தோம். ராமநாதன் மந்திரியாகிவிட்டானே. நான் இப்படியே கீழே போகிறேனே" என்றார். "எப்போதுமே நான் கொஞ்சம் வாய்த்துடுக்காகப் பேசிவிட்டு மற்றவர்கள் விரோதத்தை வாங்கிக் கொள்பவன். அதனாலே அப்போதும் உடனே சொல்லிவிட்டேன். "சில தகரடப்பாக்கள் மேலே போய்க்கொண்டே இருக்கிறது. சில தகரடப்பாக்கள் கீழே விழுந்துக் கொண்டே இருக்கிறது. அதற்காக கீழே விழுகிற தகரடப்பா மேலே போகிற தகரடப்பாவைக் கண்டு பொறாமைப் பட முடியுமா ?" என்பதாக.

காமராஜ நாடார் உயர்ந்து கொண்டு போவதைப்பற்றி முத்துராமலிங்க தேவர் உள்ளுக்குள்ளே பொறாமைப்படாமல் இருக்கமுடியாது. ஆனால் அந்தப் பொறாமை உணர்ச்சியை எந்த வகையில் வெளிப்படுத்துவது என்பது இல்லையா ? பொறாமைப்படுவதோடு நின்றுவிட்டால் பரவாயில்லை. அதை அடிப்படையாகக் கொண்டு, வெறுப்பு உணர்ச்சி சாதி அடிப்படையில் பரப்புவது என்றால் நாம் சும்மா இருக்க முடியாது. இது முத்துராமலிங்க தேவர், காமராஜர் நாடார் சம்பந்தப்பட்ட சொந்த விஷயம் இல்லை.

ஏற்படும் என்பதை அங்கத்தினர் யோசித்துப் பார்க்கவேண்டும். பிற்போக்கு மக்கள் வாழும் பகுதியிலே இந்த பிரசாரம் நடக்கிறது. பிரசாரம் அத்துடன் நின்று விடுகிறதா? நின்றுவிடவில்லை. "முதல் மந்திரி காமராஜ் என்ன செய்யமுடியும், இந்த போலீஸ்காரர்கள் என்ன செய்ய முடியும். என்ன காரியங்கள் செய்தாலும் யாரும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கமுடியாது" என்றெல்லாம் பேசினார்கள். அதன் காரணமாக அங்குள்ள மக்கள் என்ன நினைக்கிறார்கள். ஸ்ரீ தேவருக்கு பலம் இருக்கிறது என்று நினைக்கிறார்கள். இல்லாவிட்டால் சர்க்கார் சும்மா பார்த்துக் கொண்டிருப்பார்களா என்று மக்கள் நினைக்கிறார்கள். அவர்கள், போலீஸ்காரர்கள் வைத்துக் கொண்டிருக்கும் துப்பாக்கிகளை யெல்லாம் சோளத்தட்டை வைத்துக் கொண்டிருப்பதாகவும் அதிலிருந்து குண்டு வராது என்றும் சொல்லுவார்கள். இவைகளை மக்கள் உண்மை என்று நம்ப ஆரம்பித்தார்கள். இது மனித சுபாவம். ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரை பெரும் தலைவராகவும், உலகத்திலேயே பெரும் தலைவர் என்றும் நினைக்கிறார்கள். சஷ்டியில் சூரசம்ஹாரம் வரப்போகிறது என்று சொல்லி மக்களை நம்ப வைத்திருக்கிறார். இந்த அடிப்படையின் காரணமாக அங்கு இருக்கும் மக்களும் நம்மை யாரும் எதிர்க்கமுடியாது என்ற மனப்பான்மை வளர்ந்து வந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

இது மட்டும் அல்ல அவர்கள் செய்யக்கூடிய காரியங்கள். இந்த அளவிற்கு நிர்வாகத்தில் தவறு இருக்கிறதென்றால், அதை ஒத்துக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன். அந்த இடத்தில் சட்டம் பரவாதது மட்டும் அல்ல, ஒரு அரசாங்கமே நடக்கிறது என்றுகூட தெரியாத நிலையில் அந்த மக்கள் இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அதற்கு நாங்கள் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் அதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

அங்குள்ள நிலைமையைத்தான் நீங்கள் இன்று யோசனை செய்து பார்க்கவேண்டும். தலைவருடைய அபிப்பிராயம், அங்கு விசாரணை நடந்த விதம், மக்களிடம் ஏற்பட்டிருக்கக்கூடிய மனப்பான்மை, இவைகளை எல்லாம் வைத்துப் பார்க்கும் போது, நான் என்ன செய்தாலும் கேட்பார் இல்லை; போலீஸ்காரர்கள் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது என்ற மனப்பான்மை அங்கு வளர்ந்து, ஒரு எரிமலைபோல் வளர்ந்திருக்கிறது என்று நான் சொன்னால் அதை நான் அதிகப்படுத்திச் சொல்கிறேன் என்று யாரும் நினைக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். முத்துராமலிங்க தேவர் அவர்கள், கீழ்ப்படியில் இருக்கக்கூடிய ஹரிஜனங்களை தைரியமாக முன்வந்து தேவருக்கு எதிராக பிரசாரம்செய்து காங்கிரஸிற்கு வோட்டுப் போடுங்கள், தேவருக்கு வோட்டு போடாதே என்று பகிரங்கமாக மேடையில் ஏறிப் பேசுகிறார்களே என்ற ஆத்திரம் அவர்களுக்கு. சசிவர்ண தேவர் அவர்கள் இங்கு பேசும்போது பல உண்மைகளை எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ்காரர்கள் கூட்டம் போட்டார்கள் முன்னும் பின்னும் போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு, என்று. ஆம் அது உண்மைதான். அந்த விதத்தில்தான் அங்கு கூட்டம் நடத்த முடியும். இல்லாவிட்டால் அவர்களின் தலை காணாது போய்விடும். (சிரிப்பு). ஆனால் ஒரு காரியம் அங்கு சாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தடவை ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டம்போட்டு பேசிவிடுவது, ஜனங்கள் கேட்கிற வரை கேட்கட்டும், அவர்களின் காதில் சில விஷயங்கள் விழட்டும் என்ற முறையில் அங்கு பிரசாரம் செய்ய முடிந்தது. அதுதான் அவர்களின் ஆத்திரம். இதுவரையிலும் போகாத இடங்களில் கூட்டம் போட்டு விட்டார்களே என்று, அவர்களுக்கு ஆத்திரம். ஒரு கூட்டத்தில் ரிவால்வரை வைத்துக் கொண்டு பேசினார்கள் என்று சொன்னார்கள். ரிவால்வரை வைத்துக்கொண்டு பேசினார்களோ என்னவோ தெரியாது. அப்படி பேசியிருக்கலாம். நாங்கள், மந்திரிகளே, போலீஸை எடுத்து விட்டோம், வேண்டாமென்று. மேற்படி சம்பவங்கள் அங்குள்ள நிலையைத்தான் சித்தரித்துக் காட்டுகிறது. அந்த உண்மையை விளக்கினதற்காக நான் அவருக்குக் கடமைப் பட்டிருக்கிறேன். அங்கு போலீஸின் உதவி இல்லாமல் கூட்டத்தில் பேசமுடியாத



தேவருக்கு அங்குள்ள செல்வாக்கு, வேறு யாரும் அங்கு போய் பேசமுடியாத அளவிற்கு அங்கு அவருக்கு செல்வாக்கு இருக்கிறது என்றால் அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். அவரைப் பற்றி குற்றம் சொல்லக் கூடாது என்ற முறையில் அவர் செல்வாக்கு பெற்றிருக்கிறார் என்றால் அதைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள். அங்கு அவரைத் தவிர வேறு ஒருவருக்கும் சுதந்திரம் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டுதானாக வேண்டும். இந்த சூழ்நிலையில்தான் அங்கு சம்பவங்கள் நடந்திருக்கிறது என்பதை இங்கு இருக்கக்கூடிய அங்கத்தினர்களும், எதிர்கட்சி அங்கத்தினர்களும், அதிலும் முக்கியமாக கல்யாணசுந்தரம் அவர்களும் அதை உணருவார்களேயானால் இன்று சர்க்கார் அங்கு எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள், எதற்காக அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் உணருவார்கள் என்று நினைக்கிறேன். அரசியல் ஒரு பக்கம் இருக்கட்டும். அதைப் பற்றி நான் பின்னால் பேசுகிறேன். கலகம் அதிகமாகப் போய் கொண்டிருந்ததால் சமாதான மகாநாடு ஒன்று கூட்டப்படுகிறது. சர்க்கார் தான் இந்தச் சூழ்நிலை நீடித்திருக்கவேண்டும், வகுப்புக் கலவரம் இன்னும் அதிகமாக இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் அவைகளைத் தூண்டி விட்டார்கள் என்று சிலர் சொன்னார்கள். கல்யாணசுந்தரம் அவர்கள், அவர்களின் பெருந்தன்மை காரணமாக, உள்நாட்டு அமைச்சர் அவர்களையும், முதல் அமைச்சர் அவர்களையும் பற்றி அவர்கள்தான் இதற்குக் காரணம் என்ற விதத்தில் குற்றம் சாட்டினார்கள். உள்நாட்டு அமைச்சர் அவர்கள் இப்பொழுது மந்திரியாய் வந்தவர் அல்ல. பத்து, 12 வருட காலமாக மந்திரியாக இருந்து வருகிறார், அவர். அவர், உத்தியோக பூர்வமாகவோ அல்லது அரசாங்கம் மூலமாகவோ அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை அங்கு ஏற்படுத்த வேண்டுமென்று நினைத்திருந்தால் அங்கு கலெக்டர் ஒரு சமாதான மகாநாட்டை போட்டிருப்பாரா? அவருக்கு அது பற்றி ஊகித்துக்கொள்ள திறமையில்லையா, அறிவு இல்லையா? அடுத்தபடியாக, அங்குள்ள நிலைமையை அடக்க அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார்கள். அமைச்சர்கள் அங்குள்ள நிலைமையை நீடித்து வைத்திருக்கவேண்டும் என்று விரும்பியிருந்தால் கலெக்டர் ஒரு சமாதான மகாநாட்டைக் கூட்டியிருப்பாரா? அது ஒரு புறமிருக்கட்டும். குற்றச் சாட்டுகளைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. அரசியல் நோக்கத்தோடு சொல்லப்படும் குற்றச்சாட்டுகளைப் பற்றி எங்களுக்கு கவலையில்லை. ஆனால் உண்மையாகவே ஏதாவது குற்றச்சாட்டுகளைச் சொன்னால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். இமானுவேலின் கொலை நடந்திருக்கிறது. அவரை யார் கொன்றார் என்பதல்ல பிரச்னை. சமாதான மகாநாடு நடைபெற்றிருக்கிறது. அங்கு சில வாக்கு வாதங்களாவது நடந்திருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். எல்லோரும் பீதி அடையும் விதத்தில் கொலை ஒன்று அங்கு நடந்திருக்கிறது. அதை யாரும் போய் தடுக்கமுடியவில்லை. யாரும் போய் அப்படிச் செய்யாதே என்று சொல்லமுடியவில்லை. பின்னால் கூட, கொலை எங்கு நடந்தது என்றோ அதைப் பற்றி சாட்சிகூடச் சொல்ல முடியாத அளவிற்கு அங்கே சூழ்நிலை இருந்திருக்கிறது. அந்த நிலைமையில் மக்கள் மனதில் என்ன எண்ணங்கள் தோன்றியிருக்கலாம் என்பதைப் பற்றி நீங்கள் ஊகித்துக்கொள்ளலாம். மந்திரிகள் அங்கு போகவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டிருக்கிறது. அமைச்சர்கள் 15-ம் தேதி போயிருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படிப் போயிருந்தால், அவர்கள் அங்கு போனது எதற்கு தெரியுமா? அங்குள்ள போலீஸைத் தூண்டி விட்டு, அவர்களைக் கொண்டு அதிகமாக சுடச் சொன்னார்கள் என்றெல்லாம் சொல்வார்கள். அவர்கள் அங்குள்ள நிலைமையைச் சீர் படுத்தப் போகவில்லை. போலீஸைக் கொண்டு, போலீஸை தங்களுக்கு எதிராகவுள்ளவர்களின் மீது ஏவத்தான் சென்றார்கள் என்றெல்லாம் சொல்வார்கள். "ஆகாத பெண்டாட்டி கை பட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம்" என்பது மாதிரித்தான் இருக்கிறது. அன்றிருந்தது லா அண்டு ஆர்டர் பிரச்னை, அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பிரச்னை. அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய ஒரு பிரச்னையாயிருந்தது. இந்த சமயத்தில்தான் சமாதான கோஷ்டி வந்தது,

உலகத்திலேயே, இன்று துரதிர்ஷ்டவசமாக, சமாதான மகாநாடுகள்தான் பகையுணர்ச்சியையும், வெறுப்புணர்ச்சியையும் வளர்க்கின்றன. யார் அதிகமாக சண்டையை விரும்புகிறார்களோ அவர்கள்தான் சமாதானம் வேண்டுமென்று வற்புறுத்துவதைப் பார்க்கிறோம். அதைப் பற்றி கூடுதல் ஒன்றும் சொல்ல நான் விரும்பவில்லை. முதல் அமைச்சர் அவர்களைப் பற்றி, அவர்களின் பேரில் குற்றஞ் சாட்டுகிறார்கள். அந்த சமாதான கோஷ்டி வேண்டியது என்ன ? முத்துராமலிங்க தேவர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் சந்திக்கவேண்டும். அவர்கள் சமாதானத் திற்காக ஒரு அறிக்கை விடவேண்டும். அவர்கள் இரண்டு பேரும் அந்தப் பக்கத்தில் சுற்றி வர வேண்டும். இதைக் கேட்டது யார். முத்துராமலிங்க தேவர் அவர்கள்தான் இதைச் சொன்னார்கள். ஹிட்லர் ம்யூனிச்சில் செய்தது போல், அதைக் காப்பியடித்து இந்த சர்க்காரால் ஒரு காரியமும் செய்யமுடியாது. ஏதாவது நடக்க வேண்டுமென்றால் என் காலில் விழுந்து என்னை அழைத்துச் சென்றால்தான் முடியும் என்று சொல்வதற்காகத்தான் இந்தத் தூது கோஷ்டியை அனுப்பினாரே தவிர வேறு ஒன்றுமில்லை.

இந்த போலீஸ் நடவடிக்கை எல்லாம் அதிகமாக போய்விட்டது என்று இன்று பலர் குற்றம் சாட்டுகிறார்கள். அவ்விதம் ஏதாவது உண்டுமா என்று நாம் பார்க்கவேண்டும். சோளத் தட்டு குண்டுகள் வருவதை யெல்லாம் நாம் பார்த்திருக்க முடியாது. இம்மாதிரியான. . .

**Mr. SPEAKER** : சத்தம் அதிகமாக இருக்கிறது. தயவு செய்து அதிகமாக சத்தம் வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். நிதி அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இந்த சோளத்தட்டு குண்டுகள் எல்லாம் அங்குள்ள மக்களுக்கு பழகிப் போய்விட்டது. இன்றைக்கு தங்களுடைய நிலைமையை காப்பாற்றிக்கொள்வதற்காகத்தான் இன்று போலீஸ் அதிகமாக துன்புறுத்தியது என்று சொல்லுகிறார்கள். ஏதோ முதலமைச்சர் அவர்கள் சமாதானத்திற்கு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். எந்தவித சமரசத்திற்கும் நமது முதலமைச்சர் அவர்கள் எப்பொழுதுமே தயாராகத்தான் இருப்பார்கள். தியாகராஜன் போன்றவர்களுக்கு இவைகள் தெரியும். இதை நாம் ஆலோசித்து பார்க்க வேண்டும். இன்றைக்கு இந்த சமாதானத்தின் மூலம் ஏதாவது நல்ல எண்ணங்களின் மூலம் அங்குள்ள நிலைமைகளை சமாளிக்கலாம் என்று உண்டுமானால் அது நல்லதுதான். ஆனால் இந்த சமாதானத்தின் மூலம் ஒரு மகா யுத்தம்தான் வரக்கூடிய நிலையில் இருந்தது. ஆகவே இருக்கக் கூடிய நிலைமையை, நெருக்கடியை தீர்ப்பதற்கு பதிலாக நோயை கூடுதலாக வளர்த்துகொண்டு போகக்கூடிய நிலைமை இருந்ததால்தான் இந்த சமாதானத்திற்கு வழியில்லாமல் போனது. இந்த அடிப்படையின் பேரில்தான் சமாதானகூட்டம் நடப்பது முடியாத காரியமாக இருந்தது. இந்த அடிப்படையில் தான் இந்த கூட்டம் நடக்காமல் இருந்தது. மேலும் சமாதானத்தை நிலைநாட்டாது என்றிருக்குமானால் இந்த கூட்டத்திற்கு வழிசெய்யவில்லை என்ற குற்றச்சாட்டிற்கு நானும் ஓரளவுக்கு பொறுப்பாளி என்பதை ஒப்புக்கொள்கிறேன். அங்கு தேவர் அவர்கள் செய்திருக்கும் அடிப்படையான செய்கைகளை நாம் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். தன்னுடைய தலைமையில்லாது அங்கு ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. நானன்றி ஒரு அணுவையும் அசைக்க முடியாது என்கின்ற அடிப்படையில்தான் அங்குள்ள மக்களை வைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த அடிப்படையின் பேரில்தான் இந்த சம்பவங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. ஆகவே இந்த அடிப்படையை எல்லோரும் ஆலோசித்து பார்க்கவேண்டும் என்று உங்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று. கீழத்தூவல் விஷயத்தைப் பற்றி எல்லோரும் அலசி ஆராய்ந்து பார்த்து பேசினார்கள். திரு. வெங்கிடேஸ்வரன் அவர்களின் ரிப்போர்ட்டை பற்றி கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் நன்றாக ஆராய்ச்சி செய்து, திரும்ப, வக்கீல்கள்கூட கண்டுபிடிக்காத முறையில் பல



நுணுக்கங்களையும் கண்டுபிடித்து நல்ல அம்சங்களை எடுத்துச்சொல்லி, இந்த வெங்கிடேஸ்வரன் அவர்கள் ஒரு மூன்றும் தர (Third class) மாஜிஸ்ட்ரேட்தான் என்று முடிவு செய்து கூறிவிட்டார்கள். இன்றைக்கு குற்றம் சாட்டுகிறவர்கள் எல்லாம் கொஞ்சம் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். ஐந்து பேர்களை கையை கட்டி, கண்ணை கட்டி போலீஸ்காரர்கள் சுட்டுக் கொன்றார்கள் என்பதுதான் அவர்கள் சொல்லும் குற்றச் சாட்டு. இவ்விதம் யாராவது, மனித தன்மை படைத்த யாராவது இந்த கொடுமையைச் செய்வார்களா என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும் என்றுதான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். போலீஸ்காரரர்கள் சுட்டுக் கொன்றார்கள் என்று சொன்னால், இந்த நாட்டிலுள்ள போலீஸ்காரர்கள் எல்லாம் எங்கிருந்தோ வந்தவர்கள் அல்ல, அவர்கள் எல்லாம் தமிழர்கள் தான், அவர்களுக்கும் தமிழ் பண்பாடு இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. தமிழ் பண்பு இருக்கிற எந்த மனிதனும் இந்த கொடுமையை செய்திருக்க முடியாது. தமிழ் பண்பாடு இல்லாதவர்கள் தான் இவ்விதம் போலீஸ்காரர்கள் சுட்டுக்கொன்றார்கள் என்ற பழியை சொல்ல முடியும். போலீஸ்காரர்கள் தங்கள் கடமையைத்தான் செய்வார்கள் எந்த போலீஸ்காரர்களுக்கும் எவரிடத்திலும் அதிலும் அந்த பகுதி மக்களிடத்தில் எந்த பகைமை உணர்ச்சியும் கிடையாது என்பதை நாம் எண்ணிக்கொள்ளவேண்டும். அவர்களுக்கும் மனித தன்மை இருக்கிறது என்பதை சொல்லிக்கொள்கிறேன். எந்த போலீஸ்காரனும் நிரபராதி களான மக்களின் மீது சுடுவதற்கு தயாராக மாட்டான். . ஒரு நிரபராதியை பார்த்து சுடு என்று சொன்னால் மனித பண்பு படைத்த, தமிழ் பண் பாட்டில் வளர்ந்த எவனும் செய்திருக்க மாட்டான் என்று உறுதியாக சொல்ல முடியும். மனித பண்பாட்டில், தமிழ் பண்பாட்டில் நம்பிக்கை யில்லாதவர்கள்தான் இவ்விதம் சொல்லமுடியும். தமிழ் பண்பாட்டில் நம்பிக்கை யிருந்திருந்தால் இவ்விதம் சொல்லியிருக்கமாட்டார்கள். (கைதட்டல்) ஏதோ நாங்கள் "ரே" என்ற போலீஸ் அதிகாரியை அனுப்பினோம் என்று சொல்லப்படுகிறது. அவர் ஒரு " ஸௌத் கானரா " வை சேர்ந்த ஆளாக இருந்தாலும் அங்கு இருந்த மற்ற ஸப்-இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் அந்நியர்கள் அல்ல, எல்லாம் நம் நாட்டிலுள்ளவர்கள்தான். அவர்கள் எல்லாம் மனித பண்பு தெரிந்தவர்கள்தான். இன்றைக்கு இத்தனைக்கும் பிறகு இவர்கள்தான் சுட்டு கொன்றிருப்பார்கள் என்று சொல்லுகிறார்கள், ஆம் என்று அதையும் ஆமோதிக்கிறார்கள். எனவே இவ்விதமான அபாண்டமான பழியை சொல்லும்பொழுது கொஞ்சம் யோசித்துப் பார்த்து சொல்லவேண்டும். போலீஸ்காரர்கள் இவ்விதம் சுட்டுக்கொன்றிருக்க வேண்டும் என்று, யாதொரு குற்றமும் செய்யாதவர்களை பார்த்து இவர்கள் தான் சுட்டுக்கொன்றிருக்க வேண்டும் என்று சொல்வதை பார்த்து, அதோடு அவ்விதம் சொல்லுவதை நம்பிக்கொள்வதற்கும் ஆட்கள் தயா ராக இருப்பதை பார்த்து நான் நம்மைப்பற்றி பச்சாதாபப்படுகிறேன்.

**Sri D. S. ADIMOOLAM** : ஸார், பாயிண்ட் ஆப் ஆர்டர், தமிழ் போலீஸார் இவ்விதம் சுடமாட்டார்கள் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வால்பாறை, டால்மியாபுரம், தூத்துக்குடி போன்ற இடங்களில் சுட்டது எல்லாம் தமிழ் போலீஸ்காரர்களா ? அல்லது வேறு எந்த போலீஸ்காரர்களா என்பதை கேட்கவிரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : போலீஸ்காரர்கள் சுடுவதைப் பற்றி நான் இப்போது சொல்ல வரவில்லை. அமைதியை நிலைநாட்டுவதற்காக நெருக்கடியான சமயத்தில்தான் இம்மாதிரி துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய நிலைமை வந்து சேருகிறது. இதற்காகத்தான் அவர்களுக்கு துப்பாக்கி கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைதியை நிலைநாட்ட அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏதோ யாதொரு குற்றமும் செய்யாதவர்களைப் பார்த்து சுடு, இவர்களை கொலை செய் என்று சொன்னால் வெறும் 20 ரூபாய், 30 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிற போலீஸ்காரர்கள் இந்த கொலையை செய்வதற்கு தயாராக இருப்பார்களா என்பதை கொஞ்சம் யோசித்து பார்க்கவேண்டு மென்று சொல்ல ஆசைப்படுகிறேன். போலீஸ்காரர்கள் எல்லாம்

கிராதகர்களோ அல்லது யமன்களோ அல்ல. அவர்கள் எல்லாம் மனிதர்கள் தான். அவர்களும் நம்முடைய சகோதரர்கள்தான். அவர்கள் தங்கள் கடமையை செய்யவேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாம பார்க்கவேண்டும். அப்படியிருந்தும் இவர்கள் கண்டிப்பாக சுட்டுத்தான் இருக்கவேண்டும் என்று பிரசாரம் செய்யப்படுகிறது. பத்திரிகைகள் எல்லாம் கொட்டை எழுத்துக்களில் பிரசாரம் செய்கின்றன. ஏதோ எந்த செய்தியானாலும் சரிஅச்சில் வந்துவிட்டால் அவையெல்லாம் உண்மையாகி விடமுடியாது. இந்த சபைமுன் நடக்கும் செய்திகளையே, உங்கள் முன் நடக்கின்ற செய்திகளையே வேறு விதமாக பிரசுரிக்கிறார்கள். சபாநாயகர் அவர்கள் இதைப்பற்றி விசாரிப்பார்கள் என்று நம்புகிறேன். போலீஸ் அமைச்சர் பேசினதாக குறிப்பிட்டிருக்கும் செய்தியில் "சிசு பாலனுக்கு எதிராக ஸ்ரீ கிருஷ்ணன் போல் சக்ராயுதம் உபயோகிக்க விரும்புவதாக ஒரு கூட்டத்தில் சொன்னேன்" என்று மந்திரி அவர்கள் ஒப்புக்கொண்டதாக சில பத்திரிகைகள் பிரசுரித்திருக்கின்றன. இந்த சபையில் நடப்பவைகளை எல்லாம், நம்முடைய பேச்சுகளை எல்லாம் நம்முடைய சுருக்கெழுத்தாளர்கள் மூலம் எடுத்து வைத்திருந்தும்கூட, நாம் எல்லாம் காதால் கேட்டிருந்தும்கூட இந்த விதமாக பிரசாரம் செய்யப்படுகிறது....

Sri K. ANBAZHAGAN : போலீஸ் அமைச்சர் பேசுகின்ற பொழுது 'சிசுபாலன் வதை இன்னொரு முறை நடைபெறக்கூடும்' என்று ஒரு முறைதான் சொன்னேன்" என்று குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி பத்திரிகைகள் இவ்விதம் பிரசுரித்திருக்குமானால் அதில் என்ன தவறு இருக்கின்றது என்று கேட்க விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் ஒருக்காலும் அப்படி சொல்லவில்லை. இங்குள்ள அங்கத்தினர்களே அதற்கு சாட்சி களாக இருக்கிறார்கள். இவ்விதம் சொல்லுவது வெறும் அபாண்டம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : Let us not have a discussion on what is not before the Honse now.

The Hon. Sri C. SUBRAMANIAM : இவ்விதம் நடந் திருக்கக்கூடும் என்று கொஞ்சமும் யோசிக்காமல் சொல்வதை பார்த்து, இவ்விதமாக பத்திரிகைகள் பிரசுரிப்பதை பார்த்து நான் தலை குனிந்து வெட்கப்படுகின்றேன். நாம் எல்லாம் மனிதர்களாக வாழ வேண்டாமா, அதற்குள்ள உரிமைகள் நமக்கில்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இப்பேற்பட்ட நிலைமையில் ஆலோசிக்க வேண்டியதைப் பார்க்கவேண்டும். நாங்கள் கோர்ட்டில் வாதம் செய்கிறோமா என்ற அடிப்படையில் அவர்கள் ஆரம்பித்தார்கள். எந்த ஜட்ஜிடம் வேண்டுமானாலும் நாங்கள் விவாதம் செய்கிறோம். ஆனால் அந்த முறையில் விவாதம்செய்ய நாங்கள் விரும்ப வில்லை. "இன்றைக்கு தமிழ் மக்கள் பண்பாடு எப்படி இருக்கிறது? அவர்கள் கூலிக்குக் கொலை செய்கின்றவர்களா?" என்ற அடிப்படையில் இதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ்காரர்கள் நமக்கு விரோதிகளா? உள்நாட்டில ஏற்பட்ட கலவரத்தைப் போலீசாரைக் கொண்டுதான் சமாளிக்கவேண்டும். அது காந்தியத்திற்கு அப்பாற் பட்டது. அதே மாதிரி வெளி நாடுகளிலிருந்து நமது நாட்டைப் பாது காத்துக் கொள்வதற்கு ராணுவ படையை வைத்துக் கொண்டுதான் இருக்கவேண்டும். காரணம், வேறுவழி கண்டுபிடிக்கப்பட வில்லை. வேறு வழிகளில் நமக்குப் போதிய அளவு நம்பிக்கை ஏற்படவில்லை. "நீங்கள் காந்தியத்தைப் பின் பற்றுபவர்கள். ஆகையால் போலீஸை எடுத்து விடுங்கள்." என்று யாராவது சொல்வதற்கு தயாராக இருக்கி றார்களா? நாங்கள் போலீஸ் இல்லாமல் செயலாற்றுவதற்கான பக்கு வத்தை அடைய வில்லை. தகுந்த அகிம்சைப் பக்குவத்தை அடையும் வரையிலும் போலீஸை வைத்துக் கொண்டுதான் இருக்கவேண்டும். "இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு நாங்கள் போலீஸ் இல்லாமல் ராஜ்யம் நடத்துவோம்" என்று சொல்லக்கூடியவர்கள் இருந்தால் அவர்கள்



எழுந்து பேசட்டும். வெளிநாடுகளிலிருந்து தேசத்தைப் பாது காப்பதற்கு ராணுவப்படை வேண்டாம் என்று சொல்லக்கூடியவர்கள் இருந்தால் அவர்கள் எழுந்து பேசட்டும். போலீசார் பழங்காலத்திலேயே, பிரிட்டிஷார் காலத்திலேயே, நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். பல இடங்களில் அவர்கள் தேசபக்தி அடிப்படையிலும், மனிதத் தன்மை அடிப்படையிலும் நடந்து கொண்டார்கள். ஆகையினால் இப்பேர்ப்பட்ட அபாண்டமான குற்றங்களைச் சுமத்துவதற்கு முன்பு, அந்தக் குற்றங்கள் சந்தேகமில்லாமல் குற்றங்கள்தான் என்று தெளிவுப்படுத்தப் பட்டிருந் தால்தான், அவற்றை நம்புவதற்கோ, சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றம் சாட்டுவதற்கோ தயாராக வரவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இன்னும் ஒவ்வொரு நிகழ்ச்சியைப் பற்றியும் நான் சொல்லிக் கொண்டு போகவேண்டியதில்லை.

மேலும், இந்த நிகழ்ச்சிகளின் விளைவுகளைப்பற்றி நான் தலைகுனிந்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுவரையிலும், எல்லா அரங்கு களிலும், சர்வராஜ்ய அரங்குகளிலும், தலை நிமிர்ந்து பேசக்கூடிய பெருமை எங்களுக்கு இருந்தது. "தமிழ் மக்கள் நிதான புத்தியுடைய வர்கள். தமிழ் மக்கள் நிதானத்தை இழந்து ஜாதிச் சண்டையோ மற்றச் சண்டைகளோ செய்யமாட்டார்கள். மற்ற இடங்களில் சண்டைகள் நடக்கலாம். நாங்கள் எதிலும் பண்பட்டவர்கள்" என்று பேசி வந்தேன். இந்தத் தடவை நான் டெல்லியில் தலை குனிந்து பேச வேண்டியிருந்தது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள் கிறேன்; இந்த வருத்தத்தை நீங்களும் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இது துக்ககரமானது மட்டுமல்ல, வெட் கப்பட வேண்டிய விஷயமும் ஆகும். இதன் காரணமாக இன்று தமிழ் மக்களின் மானமே பறிபோயிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். சிலர் நிதானமிழந்ததால் அங்கே கலவரங்கள் நடந்தன என்பது மட்டு மல்ல; தமிழ் மக்களின் பூரண ஆதரவைப் பெற்று இங்கே வந்திருக்கும் கனம் முதல் அமைச்சர் அவர்கள் தூண்டிவிட்டு கலகம் நடந்தது என்றும், அவ்வாறு பெருமையாகவும் சொன்னால், அதைப்பற்றி என்ன சொல்வது? கனம் முதல் அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் இங்கே உட்கார்ந்திருக்க வில்லை. தமிழ் மக்களின் ஆதரவைப்பெற்ற முதலமைச்சராக அவர் இங்கே உட்கார்ந்திருக்கிறார். யாருக்கு வேண்டு மானாலும் அவர்கள் பேரில் விருப்பு வெறுப்புகள் இருக்கக்கூடும். ஆனால், முதல் அமைச்சர் என்ற முறையில், 4, 5 மாதங்களுக்கு முன்புதான் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று முதல் அமைச்சராக வந்திருக்கிறார். அப்படி யிருக்கும்போது, வெட்கப்படத்தக்க முறையில், அவரும் கலகத்தில் பங்கெடுத்துக் கொண்டு, கலகத்தைத் தூண்டிவிட்டார் என்று இந்த சபையில் குற்றம் சாட்டினால், மற்ற சபைகளில் என்ன பேசுவார்கள் என்பதைப் பற்றியும், வெளி நாடுகளில் என்ன பேசுவார்கள் என்பதைப்பற்றியும் ஸ்ரீ கல்யாணசுந்தரம் யோசித்துப் பார்த்தாரா என்று தெரிய வில்லை. "பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன்" என்று அவர் சொன்னார். அதனால்தான் அதை சிகப்பு பென்சிலால் குறித்து வைத்துக் கொண்டிருக்கிறேன். "சந்தேகமாக இருக்கிறது" என்று கூறிக் கொண்டு 'நீதிமன்ற விசாரணை தேவை' என்று அவர் சொல்லும்போதே, விசாரணைக்கு முன்பே, குற்றம் சாட்டுகிறார். இதுதானா முறை? நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது எப்படி வேண்டுமானாலும் பேசு வதற்கு கனம் அங்கத்தினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அந்த உரிமையைப் பயன்படுத்தும்போது நமது மானம் கப்பலேறிப் போகாதபடி பார்த்துக் கொள்ளவேண்டாமா? "கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்தக் குற்றத்தைச் செய்திருக்கிறார்கள்" என்றால், அது நமக்கு மட்டு மல்ல தமிழ் மக்கள் அத்தனை பேருக்கும் இழுக்கு இல்லையா? அவர் குற்றவாளி என்று சந்தேகமின்றி சொல்லப்பட்ட பிறகு அவர் மீது குற்றம் சாட்டினால் அதை நான் பாராட்டுவேன். ஆனால், "முதல் அமைச்சர் அவர்கள் குற்றம் செய்திருப்பதாக சந்தேகம் இருக்கிறது" என்பதால், அவர்கள் மீது குற்றம்சாட்டி, அதன் காரணமாக "நம்பிக்கையில்லை" என்று சொன்னால் அது நியாயமா, தர்மமா என்று கனம் அங்கத்தினர் யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஆகையால், எந்த அடிப்படையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் பட்டிருக்கிறது? ராமநாதபுரம் கலவரங்கள் கனம் முதல் அமைச்சர் அவர்களால் தூண்டிவிடப்பட்டு நடந்தன என்று ஒரு சாரார் சொல்லும் குற்றச்சாட்டு ஒருபுறம் இருக்கிறது. "ராமநாதபுரம் கலவரம் சம்பவங்களின்போது சரியான முறையில் சர்க்காரால் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை" என்ற குற்றச்சாட்டுகளுடன், "இந்த சம்பவங்கள் குறித்து சிலர் சந்தேகப்படுகிற காரணத்தால் இவைகள் குறித்து நீதிபதி விசாரணை வைக்கவேண்டும்" என்ற அடிப்படையில் மற்றொரு சாரார் பேசினார்கள். உண்மையிலேயே, அந்த அடிப்படையில் எங்களிடம் வந்துபேச, "மக்கள் சந்தேகப்படுகிறார்கள். ஆகவே நீதிபதியை வைத்து விசாரணை செய்து சந்தேகங்களைத் தீர்க்கவேண்டும்" என்று யோசனை சொன்னால் நாங்கள் அதைக் கட்டாயம் கவனிப்போம். ஆனால் நடப்பது என்ன? விஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில், ஸ்ரீ கே. ஆர். நல்லசிவம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் போவதாகக் கூறினார். அப்போது நாங்கள் "நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டியது இல்லை. ராமநாதபுரம் கலவரங்கள் சம்பந்தமாக கனம் போலீஸ் அமைச்சர் அவர்களே அறிக்கை வெளியிடப் போகிறார்கள். அந்த அறிக்கையின் மீது விவாதிக்கலாம். அதற்குப் பிறகு திருத்தங்கள் கொடுக்கவேண்டுமானால் அவைகளைக்கொடுத்து அந்த விவாதங்களை எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும்" என்று சொன்னோம். அதற்கு எல்லோரும் பெரிய மனதுடன் பெருந்தன்மையுடன் ஒத்துக் கொண்டார்கள்; அங்கேயிருந்த தலைவர்கள் எல்லோரும் அதற்கு ஒத்துக் கொண்டார்கள். வெளியில் வந்ததும் என்ன நடந்ததோ, தெரியாது. ஸ்ரீ கல்யாணசுந்தரம் அந்தக் கூட்டத்தில் இல்லை; கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எந்த அங்கத்தினரும் அங்கே இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பிரேரேபித்து அதன் மூலமாகத்தான் ராமநாதபுரம் கலவரங்களைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று அவர் சொன்னதை மற்றவர்கள் எந்த முறையில் ஏற்றுக் கொண்டார்களோ, தெரியாது; அவர் இந்த மாதிரி குற்றம் சாட்டப் போகிறார் என்பது தெரிந்து அவர்கள் ஒத்துக் கொண்டார்களோ, தெரியாமல் ஒத்துக் கொண்டார்களோ, தெரியவில்லை. "ஒருவர் குற்றம் செய்திருக்கிறார் என்பது சந்தேகமாக இருக்கும்போது, அவரைக் குற்றவாளி என்று சொல்லக்கூடாது" என்பதை இங்கேயுள்ளவர்கள் உணர்வார்களானால், இவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு என்ன அடிப்படை இருக்கிறது? "நீதிபதி விசாரணை நடத்த வேண்டும் என்று இங்கே ஒரு தீர்மானம் கொண்டு வந்தோம். சர்க்கார் அதற்கு ஒப்புக்கொள்ள மறுத்து விட்டார்கள். நீதிமன்ற விசாரணை நடத்துவதற்கு மறுத்ததால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறோம்." என்ற அடிப்படையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தால் அதை ஒப்புக்கொள்ளலாம். அவ்விதமும் அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை. "சர்க்காரைப் பற்றி குறைகூறவேண்டும். மந்திரிகளைப் பற்றிக் குறைகூற வேண்டும். கனம் அங்கத்தினர்கள் ஆபாசமாகப் பேசுவது பத்திரிகைகளில் வரவேண்டும். அதன் மூலம் நம்முடைய அதிருப்தியை வெளியிடவேண்டும்." என்ற அடிப்படையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே யொழிய, "நீதிபதி விசாரணை வேண்டும்" என்ற அடிப்படையில் கொண்டுவரப்படவில்லை ; "ராமநாதபுரத்தில் கலவரத்தால் பாதிக்கப்பட்டுக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும்படி செய்யவேண்டும்" என்ற அடிப்படையிலும் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை. ஆகையால், கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் "ராமநாதபுரத்தில் நடந்த சம்பவங்களை அரசியல் சூழ்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது" என்றே சொல்லலாம். ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவ்வாறு நடந்து கொள்வாரா என்று சந்தேகப்படுகிறேன். ஆனால் "அரசியல் சூழ்ச்சி" என்பதைத் தவிர வேறு முடிவிற்கே என்னால் வரமுடியவில்லை. ஆகையால்தான் எல்லோரும் யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்



கொள்கிறேன். இதிலே, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையைப் பார்க்க வேண்டும். நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால், அமைதி, ஒழுங்கு, இந்த மாதிரியான அடிப்படையில்தான் முன்னேற்றமடைய முடியுமே தவிர, கலகம், கலவரம், இந்த அடிப்படையில் முன்னேற முடியாது. புரட்சிகளால் முன்னேற முடியாது. புரட்சிகள் நடந்த நாடுகளைப் பார்க்கலாம். எந்த நாடும் புரட்சியால் முன்னேறவில்லை. பத்து, 15 வருஷம் திட்டங்களை ஆரம்பித்து நடத்தித்தான் முன்னேற்றமடைந்திருக்கின்றன. நாம் முன்னேற வேண்டுமென்று அதற்கான காரியங்களைச் செய்து கொண்டிருக்கும்போது, அமைதியும், ஒழுங்கும் இருந்தால் சீக்கிரமாக முன்னேற முடியும். கலவரமும், குழப்பமும் இருந்தால் முன்னேற முடியாது. நாங்கள் இங்கு சாசுவதமாக இருப்போம் என்று கருதவில்லை. கனம் அண்ணாதுரை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், "நாங்களும் அந்தப் பக்கம் வந்து என்றாவது ஒரு நாள் உட்காருவோம்" என்று. யாரும் இங்கு வந்து உட்காரலாம். யாரும் நிர்வாகம் நடத்தலாம். யார் நிர்வாகம் நடத்தினாலும், அமைதி, ஒழுங்கு, என்ற அடிப்படையில் நடத்த முடியுமேதவிர, கலவரம், குழப்பம் என்ற அடிப்படையில் நிர்வாகத்தை நடத்தமுடியாது. கலகங்களை அடக்க இப்போது இருக்கும் சூழ்நிலையில், போலீஸ் படையை அனுப்புவது என்ற அந்த முறைதான் எங்களுக்குத்தெரியும். காய்ச்சல் தீர்ந்த பிறகு அதற்கு மருந்துகொடுக்கலாம். மக்கள் உயிர் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுபோல், போலீஸ்காரர்கள் உயிரும் பாதுகாக்கப்படவேண்டும். இந்த 30, 35 ரூபாய் சம்பளத்திற்கு, இந்தக் கஷ்டமான காரியத்தைச் செய்கிறார்களென்றால், அதற்கான சூழ்நிலையை, அதற்கான வாய்ப்பைக் கொடுத்தால்தான் செய்யமுடியும். கலவரப் பகுதிகளில் உயிருக்குத் துணிந்து போகும் இவர்கள் ஒவ்வொரு சமயத்திலும் ஒரு நீதிபதியின் முன் நிறுத்தப்பட்டு, எந்தக் குற்றத்திற்கு ஆளாகப் போகிறோமோ என்ற முறையிலிருந்தால் கலவரப் பகுதிகளுக்குள் புகுந்து தன் பணியை யார்தான் செய்யமுடியும். இன்றைக்கு நம் போலீஸ் படை, நல்ல திறமையாக இயங்கவேண்டுமென்று விரும்புகிறோம். அதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தாவிடில் கலவரங்களைப் பார்த்து பயந்துகொண்டு "யார் எப்படி வேண்டுமானாலும் போகட்டும். நம் உயிரைக் காப்பாற்றிக் கொள்வோம். ஏதாவது செய்தால் எந்த சமயத்தில் எந்தக் குற்றத்தை நம் மீது சுமத்துவார்களோ" என்று போலீஸ்காரர்கள் ஒளிந்துகொண்டு செல்கின்ற நிலைமை ஏற்படும். இந்த மாதிரியான ஒரு நிலைமையை சற்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

இதிலே சொன்னார்கள்—சுடுவதைப் பற்றி. கூட்டத்தைக் கலைப்பதற்காகச் சுடவேண்டுமென்று சொன்னார்கள். ஸ்ரீ பந்த் அவர்கள் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆம், பந்த் அவர்கள் பேசினார்கள். அதைப் பற்றி எங்களையெல்லாம் கலந்தாலோசித்துத்தான் பேசினார்கள். எந்த சமயத்தில் கூட்டத்தைக் கலைப்பதற்குச் சுடவேண்டுமென்று சொன்னார்கள்? கலகம், கொள்ளை, என்ற அடிப்படையில், கொலை செய்வதற்காகவே இருக்கக்கூடிய ஒரு கூட்டத்தைப் பற்றிப் பேசவில்லை. கூட்டத்தைச் சுடவேண்டுமென்று நான் விவாதம் நடத்தவில்லை. ஒரு போலீஸ் ஸ்டேஷனைத் தாக்க ஒரு கொள்ளைக் கூட்டம் வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த மாதிரியான நேரத்தில் சுடவேண்டாமென்று பேசவில்லை. அரசியல் அடிப்படையில் பல கிளர்ச்சிகள், பல கூட்டங்கள், பல ஊர்வலங்கள் வரலாம். ஆரம்பத்தில் அவர்கள் சட்டத்திற்கு உட்பட்டு இருக்கலாம். பிறகு, ஏதோ காரணத்தினால், சட்ட வரம்புக்கு மீறிப் போய்விடலாம். அந்தக் கூட்டத்தைக் கலைக்க நிர்ப்பந்தம் ஏற்படலாம். அந்த சமயத்தில் அதைக் கலைக்க, சட்டத்திற்கு மாறாகநடந்து சில பலாத்கார நிகழ்ச்சிகள் நடந்தாலும், அந்த சமயத்தில் சுட்டுக் கொல்வதற்காகச் சுடக்கூடாது. அரசியல் அடிப்படையில், ஒரு கிளர்ச்சியானது, நியாய அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டு அங்கு இருக்கக்கூடிய சம்பவங்களின் காரணமாக அங்கு இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களின் காரணமாக சட்டவரம்புக்கு மீறிப் போகும்போது அவர்களை நாம் கொல்லுவதற்குச் சுடக்கூடாது. கொல்லுவதற்காகச் சுடவேண்டுமென்று பழைய சட்டமிருக்கிறது, அதை மாற்றியமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைவிட்டு, கொள்ளைக்

கூட்டம், கொலைக் கூட்டம், எது வந்தாலும் விரட்டியடிக்க—சாதாரணக் கூட்டமாயிருந்தால் போய்விடும்—வீரர்களாக வரும்போது, அவர்கள் மேலே துப்பாக்கியால் சுட்டு ஒன்றும் ஏற்படாவிட்டால், "அந்தத் துப்பாக்கி என்ன, வெறும் சோளத் தட்டை" என்று சொன்னதுபோல, "சுட்டால் ஒரு குண்டையும் காணோம். சரிதான், அது நிஜமாகவே சோளத்தட்டைதான்" என்று எண்ணக் கூடிய நிலையேற்பட்டால் போலீஸ்காரர்களைப் பற்றி, துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி, அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

ஆகையால்தான் இன்றைக்கு போலீஸ்காரர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டதைப்பற்றி, இது மாதிரி விசாரணை செய்து அவர்களை குற்றவாளிகளாக . பாவித்து விசாரணை செய்யவேண்டுமென்பதைப் பற்றி யோசித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் கடமைகளைச் செய்கிற முறையில் கட்டுக்கு மீறிப் போய்விடலாம். போலீஸ்காரர்கள் கட்டு மீறிப் போய்விட முடியாது என்று நான் சொல்லவில்லை. ஒரு நடவடிக்கை எடுக்கும்போது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறுகிறது. உடனடியாக அங்கு இருக்கக்கூடிய ஜுடிஷியல் ஆபீஸரைக் கொண்டு விசாரணை செய்து அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு நியாயங்கள் என்ன என்பதைப் பற்றி, துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கான சூழ்நிலை இருந்ததா என்பதைப்பற்றி சர்க்காருக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். இதிலே ஏதாவது கோளாறுகள், வரம்புக்கு மீறிய செயல்கள் நடந்ததாகத் தெரிந்தால் அதற்கு மேல் விசாரணை நடத்தப்படும். இவ்விதமில்லாது, எந்தச் சுடக்கூடிய சம்பவமாயிருந்தாலும், உடனே நீதிபதியைப் போட்டு, அந்தப் போலீஸ்காரர்களை குற்றவாளிகளைப்போல் கூண்டில் ஏற்றி விசாரிப்பது என்று சொன்னால், இந்த வேலை பார்ப்பதற்கு யாரும் முன்வரமாட்டார்கள். இதற்கு இந்த போலீஸ் படையையே கலைத்து விடலாம். இவர்களுக்குச் சம்பளம் கொடுத்துக் கொண்டிருப்பதற்கு பதில், காங்கிரஸ், தி.மு.க., சேவா தளத் தொண்டர்களைப் போட்டுக் கொண்டு நடத்திக் கொள்ளலாம். போலீஸ் இல்லாமல் சமாளிக்கக்கூடிய நிலைமை, அது வேறு. போலீஸ் இருக்கின்ற வரையில் இந்த மாதிரித்தான் இருக்கவேண்டுமென்று இங்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இவ்வளவு கலவரமாகும்போது, கலவரத்தை அடக்க முயலுகிற நேரத்தில் நாம், இவர்கள் செய்யவேண்டியதையெல்லாம், சூழ்நிலை காரணமாக வரம்புக்கு மீறி நடக்காமல் இருக்கவேண்டி, உறுதியான உத்தரவுகளைப் போட்டிருக்கிறோம். அந்தப்படி போலீஸ்காரர்கள் நடக்கவில்லையென்று சொன்னால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு விதிகள் இருக்கின்றன. இந்த மாதிரிப் போலீஸ்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது மக்களின் மனப்பான்மையைப் பார்க்க வேண்டும். போலீஸ்காரர்களைப் பற்றி மக்களுக்கு என்றைக்கும் ஒரே மனப்பான்மை. ஆகவே, திறமையாக வேலை செய்கின்றவர்களை, யாரோ ஒரு சிலருக்குப் பிடிக்கவில்லையென்றால் அவர்களை உடனடியாக மாற்றி விட வேண்டுமென்று சொன்னால், அதைச் சர்க்கார் உடனடியாக செய்ய முடியுமா? அந்த மாதிரியான யோசனையை இங்குள்ள அங்கத்தினர்கள் சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

ஆகையால்தான், இன்றைக்குப் போலீஸ்படை நல்ல முறையிலே அமைய வேண்டுமென்று சொல்லும்போது, இது மாதிரி எந்த விதமான ஆதாரமும் இல்லாமல் இருக்கும்போது, ஒரு நீதிபதியைப் போட்டு விசாரணை செய்ய ஒத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னதற்கு ஒப்புக்கொள்ளாதது நியாயமில்லை என்று சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.

ஆக, இன்றைக்கு நீதிபதி விசாரணை தேவையில்லையென்று சொன்னது ஏதோ அவர்கள் அக்கிரமம் செய்து விட்டார்கள், அதை மறைக்க வேண்டுமென்றல்ல, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமையை அவர்கள் செய்தார்கள். தவிர, ஏதோ வரம்புக்கு மீறிச் செய்துவிட்டார்கள் என்று ஆதாரங்கள் இருந்தாலொழிய அவர்களை விசாரிக்க நியாயம் கிடையாது. ஏன், இந்தச் சட்டசபைக்குக்கூட நியாயம் கிடையாது. அவர்களிடம் ஒரு கடமையைக் கொடுத்துவிட்டு, அதை அவர்கள் நிறைவேற்றுகின்ற



நேரத்தில் அவர்களைக் குற்றம் சொல்லக்கூடாது. ஆகையால் தான் இந்த விதமான காரியம் செய்யமுடியாது என்று சொல்லுகிறோம். ஆதாரம் இல்லையென்று சொல்லும்போது பலர் சொல்லுகிறார்கள் "இப்போது நீதிபதியைப் போடுங்கள், எவ்வளவு பேர்கள் சாட்சியம் சொல்ல வருகிறார்கள் என்று பாருங்கள்" என்று. துரதிருஷ்ட வசமாக, நான் தலை குனிந்து சொல்லிக் கொள்கிறேன். போலீஸ்காரர்கள் மீது குற்றம் சுமத்துவதற்காக சம்பவங்களை எப்படியெப்படிச் சொல்லவேண்டுமென்பது அவர்களுக்கு இயற்கையாகவே ஏற்பட்டிருக்கிறது. நான் அங்கு சென்றிருந்தபோது பல இடங்களில் விசாரித்தேன். ஹரிஜனங்களாயிருந்தாலும், மற்றவர்களாயிருந்தாலும் தங்களைப் பாதிக்காத வரையில் வெகு அழகாக, கோர்வையாகச் சொல்லுகிறார்கள். தங்களைப் பாதிக்கும்போல் வரும்போது "ஆண்டவனுக்குத்தான் தெரியும்" என்று சொல்லிவிடுகிறார்கள். ஒரு பக்கத்தில் தீ பிடித்துக் கொண்டு எறிந்தது என்று சொன்னார்கள். மேற்குப் பக்கம் உள்ள வீடு தீ பற்றி எறிந்தது என்று சொன்னார்கள். அது எப்படிப் பற்றியிருக்கும் என்று கேட்கும்போது, ஆண்டவனுக்குத்தான் தெரியுமென்கிறார்கள். அந்த முறையில் இருக்கிறது அவர்கள் சொல்லக்கூடியது. ஆக அங்கு அவர்கள் சொல்லக்கூடிய சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, அந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு ஒரு நீதிபதி எந்த ஒரு விசாரணையும் நடத்தி ஆராய்ந்தறிய முடியாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இதைவிட முக்கியமான சம்பவம் ஒன்று சொன்னார்கள். இறக்கும் நிலைமையிலுள்ளவர்கள் உண்மையைச் சொல்லுவார்களென்று டையிங் டிக்ளரேஷன் என்று வைத்திருக்கிறது.

ஒரு மாஜிஸ்ட்டிரேட்டின் முன்னதாக வந்து சாட்சியம் சொன்னால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மற்ற சாட்சியங்களைவிட அந்த சாட்சியத்துக்குத்தான் அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சாகும்பொழுது ஒருவனும் பொய் சொல்லமாட்டான், சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கும் என்ற எண்ணம் எல்லோராலும் கருதப்பட்டு வருகிறது. சாகும் தருவாயில் அங்குள்ளவர்களிடம் வாக்குமூலம் வாங்கும் போதுகூட அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் தான் ஹரிஜன் என்றும் தானேதான் தீ வைத்துக்கொண்டேன் என்றும் மரண வாக்குமூலம் கொடுத்துவிட்டு இறந்துபோகிறான். பிற்பட்டு அவனைப் பற்றி விசாரித்தால் அவன் ஒரு மறவனாகத் தெரியவருகிறது. சாகும் பொழுதும்கூட உயிருடன் இருக்கிறவர்கள் எக்கேடுகெட்டு போகட்டும் நாம்தான் போகிறோமே என்ற மனப்பான்மையில் அவர்கள் தானே தீ வைத்துக்கொண்டோம் என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்களை அங்கத்தினர்கள் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் கூசாமல் சொல்லுகிறார்கள். வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம் வெளியே வைத்துவிட்டு தன்னுடைய வீட்டிற்கு தீ வைத்துக் கொள்ளுவார்களா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இவ்விதம் சாகும் தருவாயில்கூட பொய் சொல்வதாக இருந்தால் அவர்களுடைய வார்த்தைக்கு எவ்வளவு மதிப்புக்கொடுக்கமுடியும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அதற்கு மதிப்புக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. அதை வைத்துக்கொண்டு ஒரு நீதிபதி விசாரணை நடத்தவேண்டும் என்று சொன்னால் எப்படி நடத்தமுடியும்? சாட்சியங்கள் வந்த பிறகும் பத்திரிகைகளில் எல்லா விஷயங்களைப்பற்றி பிரசுரித்த பிறகும், நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மூலமாக எல்லாவற்றையும் பேசிய பிறகும் நீதிபதி விசாரணை வேண்டும் என்றால் அதை எப்படி ஒத்துக்கொள்ள முடியும் என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். இனிமேல் நீதிபதி விசாரணை நடத்தினால் தங்களுடைய கட்சிக்கு சாதகமாக நிகழ்ச்சிகளை திருத்திச் சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் அதை ஒத்துக்கொள்ள முடியாது.

நேற்று எதிர்க்கட்சியில் பேசும்போது ராமாயணத்தைப்பற்றி பேசினார்கள். நான் சொல்லும்போது ராட்சசர்களை ஒப்பிட்டுச் சொல்வதாக நினைத்துக்கொள்ளவேண்டாம். சாதாரணமாகத்தான் சொல்லுகிறேன். ராமாயணத்தில் மாரீசன் இறந்துபோகும்போது கூட "சீதா, லட்சுமணா" என்று

[Sri C. Subramaniam] [31st October 1957

சொல்லிக்கொண்டுதான் இறந்ததாக இருக்கிறது. அதைப்போலத்தான் இங்கேயும் அவர்கள் சாகும் தருவாயில்கூட தங்களுடைய மனதில் உள்ளதை நிறைவேற்றவேண்டும் என்ற எண்ணத்தில் பிறருக்கு விரோதமாகச் சொல்லிக்கொண்டு இறந்து போயிருக்கிறார்கள். கலகம் உண்டாக்கும் முறையில் அவர்கள் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அதை வைத்துக்கொண்டு எப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பதை கனம் அங்கத்தினர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

கீழத்தூவல் சம்பவத்தை எடுத்துக்கொள்ளுங்கள். நானும் ஒரு க்ரிமினல் வக்கீலாக இருந்திருக்கிறேன். அப்படி க்ரிமினல் வக்கீலாக இருந்தும் வேலை பார்த்திருக்கிறேன். கனம் அண்ணாத்துரை அவர்கள் நான் ஒரு சிறந்த வக்கீல் இல்லை என்று சொன்னாலும் பாதகம் இல்லை. அப்படி நான் ஒரு சிறந்த வக்கீலாக இல்லாவிட்டாலும் சில முக்கியமான கேஸ்களை நான் எடுத்து நடத்தி இருக்கிறேன். இனிமேல் நான் வக்கீல் தொழிலும் பார்க்கப்போவது இல்லை. அதனால் அவருடைய சர்ட்டிபிகேட்டும் எனக்குத் தேவை இல்லை. ஆகவே இந்த விஷயத்தை கொஞ்சம் அலசிப் பார்க்கவேண்டும். இந்த வாக்குமூலங்களை அலசிப் பார்க்கும்போது சந்தர்ப்ப சாட்சியங்களைத்தான் முக்கியமாக எடுத்துக் கொள்ளவேண்டும். அடுத்தபடியாக எந்த எந்த விஷயங்கள் சொல்லப்படுகிறதோ அந்த விஷயங்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். கனம் அங்கத்தினர் ராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது அவரை நான் ஒன்று குறுக்கிட்டுக் கேட்டேன். அவர் 14-ம் தேதி ஒரு லெட்டர் எழுதியிருக்கிறார். 14-ம் தேதி " Police Opened Fire " என்கிற அளவில் அவர் எழுதியிருக்கிறார். பிறகு 15-ம் தேதி தகவல் கிடைத்திருக்கிறது. கைகளைக் கட்டிப் போட்டு போலீஸ்காரர்கள் சுட்டிருக்கிறார்கள் என்ற அளவிற்கு தகவல் அவருக்கு வந்திருக்கிறது. இதில் எதை நம்புவது ? ஆகவே முதலில் வந்த தகவலுக்கும் பிற்பாடு வந்த தகவலுக்கும் முரண்பாடு இருக்கிறது.

கீழ்த்தூவலில் எல்லோரையும் தெற்குப்பார்க்க உட்கார வைத்து போலீஸ்காரர்கள் தெற்கே நின்றுகொண்டு சுட்டதாகச் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லும்போது இருவர்களுக்கு பின்னால் குண்டு பட்டதாகவும் சொல்லுகிறார்கள். தெற்குப்பார்க்க வைத்து தெற்கு பக்கத்தில் நின்றுகொண்டு சுட்டால் எவ்விதம் பின்னால் குண்டு படும் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவைகளையெல்லாம் கவனித்தால் இந்த சம்பவங்கள் எல்லாம் ஜோடிக்கப்பட்டிருப்பதாகத்தான் தோன்றும். எல்லோரும் திறமையாக ஒற்றுமையாக இருந்துகொண்டு சொல்லுகிறார்கள். எல்லோரும் சுட்டதைப் பார்த்ததாகச் சொன்னார்கள். அவர்கள் சொல்வதில் இயற்கையான ஒரு திறமையை நாம் காண்கிறோம். அவர்கள் எல்லோரும் சுட்டதைப் பார்த்ததாகச் சொல்லுகிறார்கள். அப்படிப் பார்த்திருந்தால் அதுவும் உண்மையாகப் பார்த்திருந்தால் ஒருவர் சொல்வதற்கும் மற்றவர் சொல்வதற்கும் கொஞ்சம் முரண்பாடு இருப்பது சகஜம். ஆனால் இவர்கள் சொல்வதில் கொஞ்சம்கூட முரண்பாடு இல்லை. இரண்டு மூன்றுபேர்கள் ஒரேசமயத்தில் பார்க்கிறார்கள், ஒவ்வொருவரும் ஒரேமாதிரியாகப்பார்க்கிறார்கள். அம்மாதிரி இருந்திருந்தால் " contradictions " இருக்கத்தான் வேண்டும். ஆனால் அவர்கள் சொல்வதில் கொஞ்சம்கூட " Contradictions " இல்லை. எவ்வளவு அழகாக சித்தரித்திருக்கிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர்கள் பார்க்கவேண்டும். இந்த அடிப்படையில் கனம் அங்கத்தினர்கள் ஒரு முடிவு செய்யவேண்டும் என்று விரும்புகிறேன். இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு சாட்சிகளை நம்பவேண்டும் என்று சொன்னால் எப்படி நம்புவது ? இந்த மூன்று பேர்கள் சொன்னதை வைத்துக்கொண்டு நம்ப வேண்டும் என்று சொன்னால் அதை எப்படி நம்புவது ? அதை ஒத்துக்கொள்வது என்பது நியாயமாகாது.

போலீஸ்காரர்களும் மனிதத்தன்மையுள்ளவர்கள்தான். நிரபராதிகளை கட்டிவைத்து சுடுஎன்று சொன்னாலும் அவர்கள் சுடுவார்களா என்பதை யோசிக்கவேண்டும். இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது அவர்கள் (போலீஸ்காரர்கள்) குற்றம் செய்திருப்பார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. அது சந்தேகமாகத்தான் இருக்கிறது. கடமையைச் செய்யும்போது அவர்கள் ஏதாவது செய்திருந்து அதற்காக அவர்களை குற்றம்



31st October 1957] [Sri C. Subramaniam]

செய்தவர்களாக்க் கருதி அவர்களைக் கூண்டில் நிறுத்தவேண்டும் என்று சொல்லி அதற்கு நாங்கள் உடந்தையாக இருக்கவேண்டும் என்றால் அதை ஒத்துக் கொள்ளமுடியாது. ராஜீநாமா செய்துவிட்டுப் போகவேண்டியதுதான். வேறு யாரிடமாவது அரசாங்கத்தை ஒப்படைத்துவிட்டு அவர்கள் நடத்தவேண்டுமேயொழிய வேறு வழியில்லை. கடமையைச் செய்யும்போது குற்றத்திற்கு ஆதாரமற்றவர்களை குற்றவாளிகள் என்று கருதி அவர்களின் பேரில் விசாரணை நடத்தவேண்டும் என்று சொன்னால் அதை ஒத்துக் கொள்ளமுடியாது. அதை ஒத்துக்கொள்வது என்பது சிரமமாகத்தான் இருக்கும்.

நீதிபதி விசாரணை வேண்டும் என்று இன்றைக்கு பல நண்பர்கள் கேட்கிறார்கள். அதைப்பற்றி யோசிக்கவேண்டியதாகத்தான் இருக்கிறது. அதைக்கேட்கும்போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அதைப்பற்றி பேசுகிறார்கள். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அரசியல் விஷயமாகப் பேசவேண்டும் என்பதற்காகத்தான் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தின் முடிவு என்னவாகும் என்பதை தெரிந்துகொண்டும் அதை கொண்டுவரவேண்டிய காரணம் என்ன என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதன் மூலம் எந்தவிதமான பலனும் கிடைக்காது என்று அவர்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தும் இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்கு பலன் ஏற்படாவிட்டாலும் பத்திரிகைகள் மூலம் பிரசார பலன் ஏற்படும் என்பதற்காகத்தான் இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதன் மூலமாக மக்களிடத்தில் ஒரு வெறுப்பை உண்டுபண்ணவேண்டும் என்ற அடிப்படையில்தான் இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

SRI D. S. ADIMOOLAM : பத்திரிகைகளில் பிரசாரம் ஆகவேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொல்லுகிறார். அப்படி அல்ல. ஒரு சமயம், நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்தால் நீதிபதி விசாரணையை ஏற்றுக் கொள்ளலாம் என்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பல்லூறு பேர்கள் அனுமதேயமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நீதிபதி விசாரணை நடத்தி யார் பேரிலாவது நடவடிக்கை எடுக்காவிட்டாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 2,000 அல்லது 3,000 ரூபாய் வரையில் உதவி செய்வதற்காவது ஓரளவு பிரயோசனமாக இருக்கும் என்ற நோக்கத்துடன்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது விளம்பர நோக்கத்துடன் கொண்டுவரப்படவில்லை என்பதை மட்டும் தெரிவித்துகொள்ளுகிறேன்.

SRI K. PERIANNAN : பாதிக்கப்பட்ட 16 குடும்பங்களுக்கு மட்டுமேதான் பாதுகாப்பு கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லுகிறார்களா அல்லது பாதிக்கப்பட்ட பாமர மக்கள் அத்தனை பேர்களுடைய குடும்பங்களுக்கும் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்கிறார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : It is not correct to ask questions like this. Members can raise points of orders and they should only refer to the procedure and not to arguments put forward. Therefore, both Mr. Authimoolam and the hon. Member there are not correct in asking questions and counter-questions. I would once again say that the Hon. the Leader of the House has got only ten minutes more and in any event I want to put the motion to vote at 1-15 and in that connexion I also give a warning.

THE HON. SRI C. SUBRAMANIAM : எப்படியாவது கனம் அங்கத்தினர்கள் எனக்கு கொஞ்சம் ஓய்வு கொடுத்ததற்கு அவர்களுக்கு என்னுடைய வந்தனத்தை செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இன்றைக்கு நாம் யோசித்துப் பார்க்கவேண்டிய விஷயத்தை எடுத்துக்

[Sri C. Subramaniam] [31st October 1957

கொண்டால் நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது வோட்டுப்போட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்து தங்களுடைய மனசாட்சிக்கு எது தோன்றுகிறதோ அதன்படி வோட்டுச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுதுள்ள மந்திரி சபையின் மீது நம்பிக்கை இல்லை என்று தோன்றினால், அல்லது இந்த நிர்வாகத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று தோன்றினால் அதன்படி மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் வோட்டுச் செய்யும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். மனச்சாட்சி சொல்லுகிற பிரகாரம் நீங்கள் வோட்டுப் போடக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

இதற்கடுத்தபடியாக நான் சொல்ல விரும்புகிறேன்: இப்பொழுது நாம் துக்கப்படவேண்டிய விஷயங்களிலே முதலிலே குறிப்பிட்டபடி ஹரிஜனங்கள் இதிலே பாதிக்கப்பட்டிருப்பது இன்னும் அதிக மோசமான விஷயம். இதைப்பற்றி அமெரிக்காவிலே எழுதுகிறார்கள், "நீக்ரோக்களுக்கு இழைக்கும் கொடுமையைப் பாருங்கள்" என்று. நாம் அவர்களைக் கேட்டால் அவர்கள் திருப்பி எழுதுகிறார்கள். "ஆம், இங்கே ஹரிஜனங்களைப் படுத்துகிற விதங்களைப் பாருங்கள்" என்று. அவர்கள் எழுதும்போது நாம் தலைகுனியவேண்டியவர்களாக இருக்கிறோம். "பதினாறு பேர் இறந்திருக்கிறார்கள்; ஆயிரக்கணக்கான பேர் கஷ்டப்பட்டிருக்கின்றார்கள்" என்று இன்றைக்குக் குற்றம் சாட்டினால், அந்த அடிப்படையில் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். எவ்வளவுதான் சமாதானம் சொன்னாலும்கூட, எவ்வளவுதான் ஏற்பாடுகள் செய்திருப்பதாகச் சொன்னாலும்கூட, அந்த ஏற்பாடுகளும் போதாமல் இவர்கள் கொலையுண்டிருக்கிறார்கள், மாண்டார்கள், என்றால் அந்த அளவுக்கு நாங்கள் தவறியிருக்கிறோம் என்று ஒத்துக் கொள்கிறேன். ஆகையால்,—மற்றவர்களைப்பற்றி சொல்லவில்லை, என்னைப் பொறுத்தவரையில் சொல்லுகின்றேன்—இங்கு இருக்கும் ஹரிஜனப் பிரதிநிதிகள் எல்லோரும் "நீங்கள் ஆட்சி நடத்துவதற்கு எங்களுக்குப் பிரியம் இல்லை" என்று சொன்னால் இன்றைக்கே விலகிக் கொள்ளுவதற்குத் தயாராய் இருக்கிறேன். ஆகையால், இதில் தனிப்பட்ட பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

ஹரிஜனங்கள் என்று சொல்லும்போது, இங்கே உட்கார்ந்திருக்கிறவர்கள் மட்டுமல்ல; அங்கே உட்கார்ந்திருக்கிறார்களே அவர்கள் மட்டுமல்ல; எல்லா மக்களுக்கும் தனிப் பொறுப்பாக நம் நாட்டின் தந்தை நம்மிடத்தில் ஒப்புவித்துப்போன அந்தப் பொறுப்பிலிருந்து எந்த விதத்திலும் தவறும்போது நாம் வெட்கப்படவேண்டியவர்கள், தலைகுனிய வேண்டியவர்கள். அங்கத்தினர்கள், நடந்த கொடுமைகளைப்பற்றி சொல்லும்போது கஷ்டப்பட்டு கண்ணீரை அடக்கவேண்டியிருந்தது. அதுபோல், மற்றவர்களுக்கும் இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஏன்? சுதந்திரம் பெற்று, நாகரீகம் பெற்று வாழக்கூடிய நாட்டிலே, கஷ்டப்படுகிறவர்கள், ஏழையாக கீழ்ப்படியிலே இருப்பவர்கள், ஜாதியின் காரணமாக அல்லது ஜாதி உணர்ச்சியும் பூசலும் சேர்ந்து—எந்தக் காரணமாக இருந்தாலும் சரி—அவர்கள் வதைக்கப்படுகிறார்கள், கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்றால் நாகரீக அரசாங்கம், நாகரீக மக்கள், நாகரீக நாடு என்று சொல்லிக்கொண்டு எப்படி வெளியே போகமுடியும்? ஆகவேதான், இதைப்பற்றி ஒவ்வொருவரும் தனிப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன். இது ஏதோ உணர்ச்சிக்காகப் பேசக்கூடிய விஷயம் அல்ல. நம்முடைய தன்மானத்தைப் பொறுத்த விஷயம்; நம்முடைய பெருமையையும் சிறப்பையும் பிற்கால முன்னேற்றத்தையும் பொறுத்த விஷயம். இந்தப் பொறுப்பிலே எவ்வளவுக்கெவ்வளவு நாம் தவறுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் கீழே சறுக்கிக் கொண்டு போனவர்களாவோம். ஆகையால்தான், போலீசாரை எடுப்பது என்பது எங்களால் முடியவில்லை. மேலும் பயமாக இருக்கிறது. பயம் நீங்கவேண்டும். யாராவது போலீசாரை அங்கிருந்து எடுக்கவேண்டுமென்றால் அந்த யோசனையை ஒப்புக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறோம். இப்பொழுது இருக்கும் கசப்பு மனப்பான்மையுள்ள நிலைமையில், ஒரு நீதிபதி விசாரிக்கும்போது இரண்டு தரப்பினர்களும் வந்து சாட்சி



31st October 1957] [Sri C. Subramaniam]

சொல்வார்கள். சாட்சி சொல்லத்தான்வேண்டும். அவர்கள் சொன்ன சாட்சியங்களும் பத்திரிகைகளில் வந்துதான் ஆகவேண்டும். அதன் காரணமாக வெறுப்புணர்ச்சி வளர்ந்துகொண்டே போகுமானால், சமாதான சூழ்நிலை ஏற்படுவதற்குப் பதிலாக இன்னும் அந்தக் கசப்பு மனப்பான்மை வளர்ந்து விடக்கூடிய நிலைமை ஏற்படும். அங்கத்தினர்கள் எங்கள் பேரில் சந்தேகிக்கப்போவதாக இருந்தாலும், இப்பொழுது அங்கே சமாதான நிலைமையை நிலைநாட்டுவதாகிய எங்கள் கடமையிலிருந்து தவறமாட்டோம். பின்னால் வேண்டுமானால் பார்த்துக்கொள்ளலாம் என்று நாங்கள் சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறோம் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகையால், இன்றைக்கு இந்த நிலைமையை நீக்கவேண்டுமானால், நான் முன்பு சொன்னதுபோல், அடிப்படையாக இருக்கும் வியாதியை நீக்கவேண்டும்; வியாதியினுடைய சின்னங்களை நீக்கவேண்டும். அங்கிருக்கும் சமுதாயத்தின் சூழ்நிலை காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த வியாதியை, அந்த சமுதாய சூழ்நிலையை மாற்றியமைப்பதன் மூலமாக, இன்றைக்கு அதற்கான பணிகளை எடுத்தாகவேண்டும். "இதுவரை என்ன செய்தீர்கள்?" என்று ஸ்ரீமான் அண்ணாதுரை அவர்கள் கேட்டார்கள். நியாயமான கேள்வி என்றே ஒப்புக்கொள்ளுகிறேன். செய்ய முயற்சி செய்திருக்கின்றோம், அதிலே வெற்றி பெறவில்லை என்பதை ஒப்புக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். சிலவற்றை மட்டும் சொல்கின்றேன். அங்கே நீர்ப்பாசன வசதி தேவை; கிணறு வெட்டவேண்டும், அதற்காக மான்யம் கொடுக்கவேண்டும்; கொடுத்திருக்கின்றோம். பக்கத்திலே இருக்கக்கூடிய ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவில் 1,200 கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்த தாலூகாவில் 1,200 கிணறுகளுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருந்தால் 100 கிணறுகள்கூட வெட்டி முடியவில்லை. ஒன்பது வருஷங்கள் ஆகின்றன. அந்தப் பகுதிக்குத் தலைவராக விளங்கக்கூடிய ஸ்ரீமான் முத்துராமலிங்க தேவர் அவர்கள் 11 கிணறுகளுக்குத் தொகை வாங்கிக்கொண்டிருந்தும் இன்னும் இரண்டு கிணறுகள்கூட வெட்டி முடியவில்லை. ஒன்பது ஆரம்பிக்கப்படவில்லை. "தொகையைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்" என்று கேட்டால், "சர்க்காருக்குச் செலுத்தும் பழக்கமே எனக்கு இல்லையே" என்று சொல்கிறார். "வரி கொடுக்கவேண்டும்" என்றால், "ஜமீந்தார் காலத்திலேயே கொடுக்கவில்லையே, கட்டபொம்மன் காலத்திலேயே கொடுக்கவில்லையே, நவாபு காலத்திலேயே கொடுக்கவில்லையே, உனக்கு எப்படிச் செலுத்துவது?" என்ற அடிப்படையிலே அவர் நடந்துகொண்டால் அங்கு காரியங்கள் நடைபெறாது. அம்மாதிரியே நடைபெறவில்லை. பல அபிவிருத்தி வேலைகளை மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்றுத்தான் நடத்தவேண்டியிருக்கிறது. எவ்வளவு பெரிய முயற்சிகள் செய்தாலும் மக்களுடைய ஒத்துழைப்பு கிடைக்கின்ற அளவுக்குத்தான் முன்னேறவேண்டியதாக இருக்கிறது. அந்த ஒத்துழைப்பைப் பெறுவதற்கான சூழ்நிலையைத் தற்போது ஏற்படுத்தியாகவேண்டும். அது இந்த வியாதி அடிப்படையில் ஏற்படமுடியாது. ஆகையால், வியாதியை அகற்ற வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்றால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கமாட்டார்கள். ஏதோ நடந்துவிட்டது, இனிமேல் அப்படி நடக்காமல் இருப்பதற்கு என்ன என்ன காரியங்கள் செய்யவேண்டும் என்று யோசனை சொல்லக்கூடிய முறையில் இன்றைய தினம் தீர்மானம் கொண்டுவந்திருப்பார்கள். வியாதி நீங்கவேண்டுமென்ற அக்கறை உள்ளவர்கள் அவ்வாறுதான் செய்திருப்பார்கள். வியாதி நீங்குவதிலே அவர்களுக்கு அக்கறை இல்லை. அதற்குள்ளே நம்முடைய காரியமும் நடக்கட்டுமே என்ற முறையில் வந்திருக்கிறது என்று நான் சொல்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய கடமைகள் என்ன? இந்த வியாதியை அறவே ஒழிப்பதற்கு அந்தப் பகுதி மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு, கல்வித்துறையிலே முன்னேற்றம் அடைவதற்கு பாடுபட வேண்டும். அங்கே வாழ்கிறவர்களுடைய இன்றைய நிலைமை என்ன? ஸ்ரீ. சசிவர்ண தேவர் அவர்களைப் போல் முன்னேறி வந்துவிட்டவர்கள் மதுரையில் போய் உட்கார்ந்துவிடக்கூடிய இந்த நிலைமை இருக்கும்வரையில் அங்கே அவ்வளவாக முன்னேற்றம் காணமுடியாது. அங்கிருக்கும்

[Sri C. Subramaniam] [31st October 1957

மக்களும் முன்னேறி அங்கே வாழமுடியாது. சூழ்நிலை அப்படி இருக்கிறது. எல்லாத் துறைகளிலும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படவேண்டுமானால், விவசாய அபிவிருத்தி ஏற்படவேண்டும், தொழில் அபிவிருத்தி ஏற்படவேண்டும், கல்வி அபிவிருத்தி ஏற்படவேண்டும். அதற்கான ஒரு சூழ்நிலை அங்கே ஏற்படுவது மிக அவசியம். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதிப்பதற்குப் பதிலாக, அங்குள்ள மக்களுக்காக என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும் என்று திட்டமிட்டு, அதற்காக இத்தனை கோடி ரூபாய் ஒதுக்கவேண்டும் என்ற முறையில் தீர்மானம் வந்திருக்குமேயானால், அது மிகவும் வரவேற்கத் தக்கது. அதைப்பற்றி பேச்சுக்களிலாவது ஏதாவது சொல்வார்களா என்று பார்த்தேன். அதைப் பற்றி ஒன்றும் இல்லை. ஒருவேளை இனிமேல் பதில் சொல்லக்கூடிய சமயத்தில் குறிப்பிடுகிறார்களோ என்னவோ.

ஒத்துழைப்பு கொடுப்பது பற்றி இங்கு பேசுகிறார்கள். ஆனால், அங்கு காரியங்கள் நடக்கும்போது நடப்பது என்ன ? எத்தனை தடைகள் ? காரியங்கள் நடக்காமலிருப்பதற்கு எத்தனை தடைகள் செய்யவேண்டுமோ அத்தனையும் செய்ய முயற்சி செய்கிறார்கள். எங்கே காங்கிரசுக்கு ஆதரவு வந்துவிடுமோ என்று நினைக்கிறார்கள். மக்கள் முன்னேறுவது அவசியமா, நம்முடைய அரசியல் செல்வாக்கை அதிகப்படுத்துவது அவசியமா என்பதைப்பற்றித்தான் யோசிக்கவேண்டும். நன்மைக்காகவோ தீமைக்காகவோ மக்களுடைய ஆதரவைப்பெற்று உட்கார்ந்திருக்கிறோம். அதன்படி திட்டம் வகுத்து நாங்கள் கடமையை நிறைவேற்றவேண்டியிருக்கிறது. தனிப்பட்ட கட்சி போட்ட தீர்மானத்தின் பேரில் நாங்கள் காரியம் செய்யவில்லை. இந்தச் சபையிலுள்ளவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து செய்த தீர்மானத்தைத்தான் நாங்கள் நிறைவேற்றுகின்றோம். நீங்களெல்லாரும் பார்த்து ஒதுக்கக்கூடிய தொகைதான் செலவழிக்கப்படுகிறது. இந்த அடிப்படையிலே எந்த நல்ல காரியங்களை ஏற்படுத்தினாலும் அங்கு கட்சி மனப்பான்மையைக் கொண்டுவராமல் நாம் எல்லோரும், அதிலும் முக்கியமாக பாதிக்கப்பட்ட பகுதியிலே, பாழடைந்திருக்கும் பகுதியிலே, பிற்போக்கு பகுதியிலே, மக்கள் துன்பப்படுகின்ற பகுதியிலே, கொஞ்சம் அரசியல் உணர்ச்சிகளை ஒதுக்கிவைத்துவிட்டு, மனித உணர்ச்சி அடிப்படையிலே பாதிக்கப்பட்டவர்களுடைய துக்கத்தைக் துடைக்கவேண்டும், அவர்களை மேலே எடுத்துவிடவேண்டுமென்ற அடிப்படையிலே முயற்சி செய்யவேண்டும் என்று நீங்கள் எல்லோரும் முன்வருவது இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து வோட்டுப்போடுவதனால் அல்ல ; அதை எதிர்த்து வோட்டுப் போடுவதன் மூலமாகத்தான், அந்த ஒத்துழைப்பு மனப்பான்மையை நீங்கள் ஏற்படுத்த முடியும் என்று சொல்லி என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER : Before I ask the hon. Member Sri Kalyanasundaram to speak, I want to know how long the Hon. Minister will require for his reply and how long the mover would like to have for his reply speech?

THE HON. SRI C. SUBRAMANIAM : Twenty minutes, Sir.

SRI M. KALYANASUNDARAM : I would like to have one hour.

The hon. Members Sri Ramasami Pillai, Sri Sasivarna Thevar and Sri Chinnathurai rose.

SRI T. S. RAMASAMI PILLAI : I want a clarification.

MR. SPEAKER : The hon. Member has no right of reply. Only Mr. Kalyanasundaram will have



31st October 1957]

SRI T. L. SASIVARNA THEVAR : I want a clarification from the Hon. Minister.

MR. SPEAKER : All right, I will allow the Members to raise their points. But the Hon. Minister will reply to them in his second speech.

SRI T. S. RAMASAMY PILLAI : I do not want to raise my point, Sir.

SRI T. L. SASIVARNA THEVAR: நான் பேசுகின்றபொழுது மூன்று இடங்களிலே நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி குறிப்பிட்டதாக நேற்று கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நேற்று போலீஸ் அமைச்சர் அவர்கள் கருங்குளத்து "எப்.ஐ.ஆர்."-ஐப் படித்தார்கள். மளவாய்நேந்தல் "எப்.ஐ.ஆர்."-ஐப் படித்தார்கள். நான் மந்திரி சபையின் பேரில் குற்றம் சாட்டிய காலத்தில் கீரந்தை கிராமத்திற்குப் போன ஒருவர் ஆஸ்பத்திரியில் மரணமான காலத்தில் கொடுத்த "எப்.ஐ.ஆர்"ஐப் பற்றி குறிப்பிட்டேன். அதைச் சபை முன்பு படிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். மளவாய்நேந்தலில் நெருப்பு பற்றி எறிந்தபொழுது கலவரம் ஏற்பட்டதால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தவேண்டியதாயிருந்தது என்று கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் கூறியதால் நான் அதைப் பற்றி பிரஸ்தாபிக்கவில்லை. கீரந்தை எப்.ஐ.ஆரை இந்தச் சபை முன்பு படிக்கும்படி அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையிலே விவாதம் நடக்கும்பொழுது அங்கத்தினர்கள் பேசும்பொழுதெல்லாம் கனம் அமைச்சர்கள் குறுக்கீடு செய்தார்கள். அந்த குறுக்கீடுகளை அங்கத்தினர்கள் மிகவும் கண்யமாக ஏற்றுக் கொண்டு இடம் அளித்தார்கள். ஆனால் இன்றைய தினம் கனம் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது அங்கத்தினர்கள் குறுக்கீடு செய்வதற்கு அவர்கள் இடம் அளிக்கவில்லை. இந்தச் சபையில் அங்கத்தினர்களுக்கு ஒரு நீதி, அமைச்சர்களுக்கு ஒரு நீதியா ?....

THE HON. SRI C. SUBRAMANIAM : குறுக்கிட்டவர்களுக்கு எல்லாம் இடம் அளித்துக்கொண்டுதான் இருந்தேன்.

MR. SPEAKER : That statement would be a reflection on the Chair as though the Chair did not allow interruption. May I remind the hon. Member Chinnadurai that it is left to the Chair to decide what interruptions must be permitted. I thought enough opportunities were given to the Members to interrupt the Minister.

I will give the hon. Member Sri Kalyanasundaram time till 12-50 to finish his speech. The Hon. the Finance Minister will begin his speech at 12-50 and will answer all the points raised.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறிய வாதங்களை நானும் வெகு திறந்த மனதோடு, அதிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன நன்மை கிடைக்க முடியும் என்கின்ற நல்ல எண்ணத்தோடு கூர்ந்து கவனித்துக் கொண்டுதான் வந்தேன். அவர்கள் ஆரம்பத்தில் கூறிய விஷயங்களிலே அநேகமாக எனக்கு உடன்பாடு உண்டு. எந்த சூழ்நிலை இம்மாதிரி ஒரு சந்தர்ப்பத்தை சிருஷ்டிக்கிறது என்பது பற்றி நிதி அமைச்சர் கூறியவற்றை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். நிதி அமைச்சர் பதில் சொல்லிய பின்பும், நேற்று போலீஸ் அமைச்சர் பதில் சொல்லிய பின்பும் என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் அதில் இருக்கக்கூடிய அரசியல் சூழ்ச்சியை—நிதி அமைச்சர் உபயோகப்படுத்திய அதே பதத்தை நான் உபயோகப்படுத்த விரும்புகிறேன்—அவர்கள் குறைக்க முடியாமல் அவர்களே

சொல்லிவிட்டார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். எப்படியிருந்தாலும் உண்மையை மறைக்க முடியாது. உண்மை எப்படியும் வெளிப்பட்டுவிடும் என்பதுதான் அவர்கள் கூறிய பதிலிலிருந்து விளங்கக்கூடியது. இந்த முறையில்தான், எதிர் கட்சிகளின் பேரில் அரசியல் சூழ்ச்சி இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். சபை என்னை மன்னிக்கவேண்டும். ஒரு சிறு உதாரணம் கொடுக்கிறேன். உதாரணத்திற்காக சொல்லுகிறேனே தவிர, நிதி அமைச்சரை குறை சொல்லுவதற்காக அல்ல. திருடிக்கொண்டு போகிறவனை விரட்டுகிறார்கள் ஜனங்கள். திருடன் ஜனங்களிடம் பிடிபடுவதற்கு பயந்துகொண்டு, " அதோ போகிறான் திருடன்" என்று அவனும் மற்றவர்களுடன் சேர்ந்து சத்தம் போட்டுக்கொண்டே போனானாம். திருடன்தான் பிடிபடாமல் இருப்பதற்காக இம்மாதிரி கூச்சல் போட்டுக்கொண்டே போனானாம். அது மாதிரி அவர்களே அரசியல் சூழ்ச்சி செய்கிறார்கள். ஆனால் அதை மறைப்பதற்காக அதே சமயத்தில் எங்களை அரசியல் சூழ்ச்சிக்காரர்கள் என்று பயமுறுத்துகிறார்கள்.

அதுவும் இது வெகு நுட்பமான பிரச்னை. அடித்தளத்தில் இருக்கக் கூடிய மக்கள் அடக்கி ஒடுக்கிவைக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களை விடுதலை செய்ய வேண்டும், மற்ற உயர்ந்த ஜாதியினரைப்போல் அவர்களை முன்னேற்றவேண்டும் என்ற ஆர்வத்தோடு இருக்கக்கூடியவர்கள் அப்பேர்ப்பட்ட மக்களை பாதிக்கக்கூடிய பிரச்னையை பயன்படுத்திக்கொண்டு எதிர்க்கட்சியினரை தாக்குவதுதான் உள் நோக்கம் என்பதைத்தான் நிதி மந்திரி அவர்களின் பிரசங்கம், ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் அவர் எதிர்க் கட்சியினரை குறை கூறிய சந்தர்ப்பங்களில், பிரதிபலித்தது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். 'எங்களிடம் விவரங்களைச்சொல்லி ஒரு நீதி விசாரணை நடத்தவேண்டுமென்று முன்பே சொல்லியிருந்தால் அது பற்றி நாங்கள் ஆலோசித்திருக்கமாட்டோமா' என்று இப்பொழுது நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான்கு நாட்களாக இந்தத் தீர்மானத்தின் பேரில் விவாதம் நடந்து வருகிறது. இந்தத் தீர்மானம் கொடுக்கப்படவிருந்த விவரம் நிதி அமைச்சர் அவர்களுக்கு தெரியாது என்பது அல்ல. சபாநாயகர் முன்னால் நானும் எதிர்க்கட்சி தலைவரும், நிதி மந்திரி அவர்களும் கூட இந்தத் தீர்மானம் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். இது " பிஸினஸ் அட்வைஸரி " கூட்டத்தில் வேண்டுமானால் வருவதற்கு தவறியிருக்கலாம். ஆனால் அவர்களுக்கு விஷயம் தெரியாதது அல்ல. அப்படியிருக்கும்பொழுது " இதைப் பற்றி நாம் விவாதிப்போம், எந்த முறையில் விவாதிப்பது என்று யோசனை சொல்லுங்கள்" என்று அவரே கேட்டிருக்கலாம். உயர்ந்த ஜனநாயக பண்புடையவர்கள், தமிழ் பண்புடையவர்கள் அம்மாதிரி கேட்டிருக்கலாம். ஸ்ரீ ராமசுவாமி பிள்ளை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்தது, " பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் " வந்திருக்கலாம். ஆனால் மந்திரி அவர்களிடத்தில் அத்தகைய பேச்சைக் காணோம். ஸ்ரீ வெங்கடேசுவரன் அவர்களின் தீர்ப்பு பிரசுரமான பிறகு, அதை சர்க்கார் ஒப்புக்கொண்ட பிறகு, இந்த ராஜ்ய மந்திரிகளும் சரி, மத்ய சர்க்காரிலிருந்து வந்து சுற்றுப் பிரயாணம் செய்த மந்திரியும் சரி திரும்பத் திரும்ப பத்திரிகையில் அறிக்கைகளின்மூலம் நீதி விசாரணை தேவையில்லை என்று வற்புறுத்துகிறார்கள். நம்முடைய போலீஸ் அமைச்சர் அவர்கள் இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் வருவதற்கு முன்னாலேயே தயாரித்த அறிக்கையில் ஸ்ரீ வெங்கடேசுவரன் விசாரணை நீதி மன்ற விசாரணையை விட சிறந்தது, அதைவிட சிறப்பான வேறு விசாரணை தேவையில்லை என்று திட்டவட்டமாக கருத்து தெரிவித்திருக்கிறார். 'மீண்டும் விசாரணை நடத்துவது பற்றி ஆலோசனை செய்யத் தயாராக இருக்கிறோம்' என்று சொல்லவேண்டியது யார் பொறுப்பு ? அது ஆளும் கட்சியின் பொறுப்பாக, நிதி அமைச்சரின் பொறுப்பாக, போலீஸ் அமைச்சரின் பொறுப்பாக இருக்குமே தவிர எதிர்க்கட்சித் தலைவரின் பொறுப்போ, அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்போ அல்லது என்னுடைய பொறுப்போ அல்லது இந்தப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கும் என்னுடைய நண்பர்கள் பொறுப்போ அல்ல என்பதை சிந்தித்துப்பார்க்கவேண்டும். எங்களுக்கு



அரசியல் உள் நோக்கம் இருப்பதாகச் சொல்லுவது, வேறு பதில் சொல்ல முடியாதவர்கள் சொல்லக் கூடிய பதில் என்பதை அது எடுத்துக்காட்டுகிறது.

நம்முடைய போலீஸ் அமைச்சர் அவர்கள் நேற்று பேசியபொழுது ஏதோ பிரமாதமாகப் பேசப்போகிறார் என்று நான் எதிர்பார்த்தேன். அவர்கள் என் பேச்சைக் கேட்டு ஏமாந்ததாகச் சொன்னார்கள். அதைவிட நான் அவர்கள் பேச்சை கேட்டு ஏமாற்றம் அடைந்தேன். ஆரம்பத்தில் நான் தீர்மானத்தைப் பிரேரேபித்து 2 மணி நேரம் பேசியபொழுது எழுப்பிய விவாதங்களுக்கு ஒன்றுக்குக் கூட அவர் பதில் சொல்லவில்லை. இந்த விவாதத்தை சபையின் அங்கத்தினர்கள் அத்தனை பேரும் இந்தப் பக்கத்தில் இருப்பவர்களும் சரி, அந்தப் பக்கத்தில் இருப்பவர்களும் சரி கண்யமான முறையில் நடத்தி வந்தார்கள். ஆனால் கண்யக் குறைவு ஏற்படக்கூடிய ஒரே ஒரு பிரசங்கம் நம்முடைய போலீஸ் அமைச்சர் ஸ்ரீ பக்தவசலம் அவர்களுடையதுதான் என்பதை நான் அழுத்தமாகச் சொல்ல முடியும். நிதி அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பைக் கோரினார்கள். ஒத்துழைப்பு வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எதிர்க்கட்சியினர்கள் அங்கே போக முற்பட்டால், " கொந்தளிக்கிற கடலில் மீன் பிடிப்பு " என்கிறார்கள். இம்மாதிரி அபாண்டமாக எதிர்க்கட்சியினரை குறை கூறலாமா ? இம்மாதிரி ஒத்துழைப்பு வேண்டுமென்று சொல்லி முரண்பாடான கருத்துக்கள் தெரிவிக்கலாமா ? இப்படி அபாண்டமாக பழி சுமத்துவதிலிருந்து அவர்களுடைய உள் நோக்கம் நன்றாக விளங்குகிறது. எதிர்க்கட்சியினரை இப்படி அக்கிரமமாகத் தாக்கலாமா ? உதாரணமாக புயலால் பாதிக்கப்பட்டபோது நாங்கள் அங்கு போகவில்லை என்று சொன்னார்கள். நாங்கள் மந்திரிகள் அல்ல. சாதாரண அங்கத்தினர்கள்தான். எங்களிடம் சர்க்கார் காரோ பணமோ இல்லை, எடுத்துக் கொண்டு உடனே போவதற்கு. அல்லது எங்களிடம் விமானம் இருக்கிறதா ?—இருந்த இடத்திலேயே இருந்து எதிர்க்கட்சியில் இருக்கக் கூடியவர்கள்—என்னுடைய கட்சியிலும் சரி, சோஷலிஸ்டு கட்சியிலும் சரி, பிரஜா சோஷலிஸ்டு கட்சியிலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக கட்சியிலும் சரி; அப்பொழுது ஸி.ஆர்.ஸி. தயாராகவில்லை—இன்னும் மற்ற அங்கத்தினர்களும் சரி அவரவர்கள் சக்திக்கு ஏற்றவாறு வசூல் செய்து அனுப்பினார்கள். ஸ்ரீ சின்னதுரை அவர்கள் ஒரு லட்சரூபாய் வசூல் செய்து கொடுத்ததாகச் சொன்னபொழுது, மந்திரி அவர்கள் " தொழிலாளர் பணம் தானே சின்னதுரை அவர்கள் என்ன கொடுத்தார்கள்?" என்று கேலி செய்தார்கள். அவர் என்னைவிட அனுபவத்திலும் வயதிலும் முதிர்ந்தவர். இந்த சபைக்கு வழிகாட்டவேண்டிய பொறுப்பு அவருடையது. ஏன், வெளியிலும் அரசியல்வாதிகளுக்கு வழிகாட்டவேண்டியது அவர்களுடைய பொறுப்பு. அந்த நிலைமையில் அவர் எதிர்க்கட்சியினரை அக்கிரமமாக தாக்குகிறார். நியாயமற்ற முறையில் நாங்கள் நடந்துகொண்டிருந்தால் தாக்கட்டும், அதற்குரிய தண்டனையை ஏற்றுக்கொள்ள எப்பொழுதும் தயாராக இருக்கிறோம், அதற்கு தயங்கமாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஒழுங்கான முறையில் பேசுவதற்கு களம் போலீஸ் அமைச்சரவர்களுக்கு வேறு விஷயமில்லை. ஆகையால் அப்படிப் பேசினார். பெரிய அளவில் தயார் செய்துகொண்டு வந்திருந்ததாகவும் சொன்னார். ஏற்கனவே அவர் 13 பக்கம் கொண்ட அறிக்கையை சபை முன் சமர்ப்பித்தார். இந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் அந்த அறிக்கையில் பக்கத்துக்கு எட்டு ஓட்டை இருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். அந்த அறிக்கையிலிருந்து சிலவற்றை அவர் வாபஸ் வாங்கவேண்டிய நிலைகூட ஏற்பட்டது. அப்படி ஏராளமான ஓட்டைகள் உள்ள அறிக்கையை சமர்ப்பித்துவிட்டு இப்போதுதான் ஏதோ பெரிய அளவில் தயார் செய்து இருந்ததாகச் சொல்லி தனக்குத்தானே புகழ்மாலை போட்டுக்கொள்வதில் அர்த்தம் என்ன இருக்கிறது?

எதிர்க் கட்சிகளை அவர் எவ்விதம் அவதூறாகப் பேசியிருக்கிறார் என்று பார்ப்போம்.

"I still do not know why representatives of the Opposition parties did not accompany Sri Dattar throughout his tour unless it be that they thought that they could escape from facts that way."

அது அவருடைய உட்கருத்தையே காட்டுகிறது. கம்யூனிஸ்ட்டு கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ தங்கமணி மற்ற எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த ஸ்ரீ மூக்கைய தேவர், ஸ்ரீ டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி, இன்னும் தமிழரசுக் கழகம், சோஷலிஸ்ட்டு கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் இவைகளைச் சேர்ந்தவர்களும் ஸ்ரீ தத்தார்கூட பிரயாணம் செய்தார்கள். ஸ்ரீ கே. டி. கே. தங்கமணி தான் ஸ்ரீ தத்தாருடைய பேச்சை மொழி பெயர்த்ததுமல்லாமல் இது சம்மந்தமாக ஒரு அறிக்கையும் விட்டிருக்கிறார், தன்னுடைய அபிப்பிராயத்தை தெரிவிக்கின்ற முறையில். ஆகையினாலே மந்திரி அவர்கள் எதிர்க் கட்சிக்காரர்கள் ஸ்ரீ தத்தாருடன் சுற்றுப் பிரயாணம் செய்யவில்லை என்று சொல்லுவது போன்ற வாதங்களை வாபஸ் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் ஒன்றையும் வாபஸ் வாங்கவில்லை, வாபஸ் வாங்கக்கூடியபடி நான் ஒன்றும் பேசவில்லை.

SRI M. KALYANASUNDARAM : இந்த சபை பூராவும் கவனித்துக்கொண்டுதானிருக்கிறது. (குறுக்கீடு) கனம் மந்திரிகள் குறுக்கிடாமல் இருந்தால் நல்லது. அவர்கள் குறுக்கிட்டால் என்னுடைய நேரம் குறைகிறது.

(The Hon. Sri P. Kakkan rose . . . . )

SRI M. KALYANASUNDARAM : தயவுசெய்து மந்திரி அவர்கள் இடைமறிக்காமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பேசும்போது நான் குறுக்கிடவில்லை. இடைமறித்தலுக்கு பயந்தோ அதற்கு பதில் சொல்ல முடியாமலோ நான் இவ்விதம் சொல்லவில்லை. எனக்கு நேரம் குறைவு. அதிக நேரம் கொடுத்தால் இதைப்பற்றி நான் கவலைப்படமாட்டேன். மந்திரி அவர்கள் எதிர்க் கட்சிகளின் கண்ணோட்டத்திற்கு நோக்கம் கற்பிக்கிறதைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன். இதனால்தான் கனம் மந்திரி அவர்கள் இம்மாதிரியான விஷயங்களில் தன்னுடைய கருத்தைத் திருத்திக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. நான் குறிப்பிட்டிருந்த பல விவரங்கள் தவறு என்றோ சரியில்லை என்றோ அவரால் சொல்ல முடியவில்லை. அதனால்தான் ஒரேயடியாக என்னுடைய பேச்சு மட்டரகமானது என்று சொல்லிவிட்டார். என்னுடைய வாதங்களுக்கு சரியான முறையில் பதில் சொல்ல முடியாததால் அவைகளில் இருந்து தப்பித்துக் கொள்ள அப்படிப் பேசினார். இன்று நமது நிதி அமைச்சர் பேசும்போதுகூட நீதி விசாரணை அவசியம் இல்லை என்பதற்கு சரியான காரணம் கொடுக்கவில்லை. அவர் சொன்ன ஒரே காரணம் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்து பயமுறுத்தப் பார்க்கிறார்கள் என்றும் அதற்கு முன் கோரியிருந்தால் நீதி விசாரணைக்கு அரசாங்கம் இணங்கியிருக்கலாம். . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆலோசிப்போம் என்றுதான் சொன்னேன்.

SRI M. KALYANASUNDARAM : அப்படியே இருக்கட்டும். நாங்கள் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தது ஒரு அரசியல் சூழ்ச்சி என்று சொல்லுகிறார்கள். நாங்கள் கொண்டுவரும் எதைத்தான் அவர்கள் அரசியல் சூழ்ச்சி என்று சொல்லவில்லை? இன்று காலையில் Cultivating Tenants Protection Bill கொண்டுவந்தபோது கூட அதுவும் அரசியல் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டது என்று சொல்லப்பட்டது. நிலங்கள் சம்மந்தமாக Ceiling நிர்ணயிக்கவேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்தால் அதுவும் இப்படியே கருதப்படுகிறது.



MR. SPEAKER : I did not want to intervene in the hon. Member's speech. Rule 74 (3) is very clear. It says: 'A member when replying shall confine himself to matters raised during the debate and shall not introduce new debatable matter.' I am afraid the hon. Member is just going into debate new matter. He was all right up till now. But I am afraid he is transgressing that limit.

SRI M. KALYANASUNDARAM : I thank you. I shall confine myself only to the points raised by the Members or referred to by the Leader of the House. I shall not go outside that limit.

MR. SPEAKER : The Cultivating Tenants Bill, to which the hon. Member referred, is a new matter.

SRI M. KALYANASUNDARAM : I cited it only as an example.

MR. SPEAKER : I rule that the hon. Member should not refer to the Cultivating Tenants Bill that was introduced this morning. He can answer *all the* points raised during the debate.

SRI M. KALYANASUNDARAM : எதிர் கட்சிகள் கொண்டு வரும் உத்யோகப்பற்றற்ற தீர்மானங்களுக்கும் அல்லது அவர்கள் போடும் கேள்விகளுக்கும் அரசியல் நோக்கம் கற்பிக்கப்படுகிறது. எதிர்க்கட்சிகள் கொண்டுவருபவைகளை ஏற்றுக்கொண்டுவிட்டால் தங்களுடைய அரசியல் கௌரவம் பாதிக்கப்படுகிறது என்று கருதுவது தவறு என்பது என்னுடைய அபிப்பிராயம். எதிர்க்கட்சிகளுக்கு ஓர் சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாது, அவர்களுக்கு அந்தஸ்தும் செல்வாக்கும் ஏற்படக் கூடாது என்கின்ற மனப்பான்மைதான் ராமநாதபுரம் ஜில்லாவில் நடந்த சம்பவங்களுக்கு அடிப்படையாக இருக்கிறது. இதையே கனம் நிதி மந்திரி அமைச்சர் பிரசங்கமும் கனம் போலீஸ் அமைச்சர் பிரசங்கமும் கோடிட்டு வலியுறுத்தி, ஞாபக மூட்டுகிறது என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. அதே நோக்கத்துடன்தான் ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரைப் பற்றி பேசும்போது அவரை ஒரு குட்டி Fascist என்றும், ஹிட்லரின் பிரதிபிம்பம் என்றும் சித்தரித்தார்கள். ஸ்ரீ தேவருடைய பிரசங்கத்தை நான் சமீபத்தில் கேட்டதில்லை. அவரும் நானும் காங்கிரஸில் இருந்தபோது ஒரே மேடையில் பேசும் வாய்ப்பு ஏற்பட்டபோதுதான் அவருடைய பேச்சை கேட்டிருக்கிறேன். 1946-ல் இருந்து 1951-ம் வருஷம் வரை நான் சிறையில் இருந்தேன். அதற்கு பிறகு அவருடைய பிரசங்கத்தை கேட்க சந்தர்ப்பம் இது வரை ஏற்படவில்லை. அவர் ஏதேதோ பேசிக் கொண்டு போகிறார் என்று சர்க்கார் கருதினால் ஏன் அவருக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். "You are creating a demon"; நீங்கள் ஒரு குட்டி Fascist யை உண்டாக்கியிருக்கிறீர்கள்; ஒரு பெரிய ராட்சசனை உண்டாக்கி அவனை ஒடுக்குவதற்கு இவ்வளவு துப்பாக்கி பிரயோகம் செய்வதற்கு சந்தர்ப்பத்தை ஏன் உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்? சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் நியாயமே என்று நிலைநாட்ட முற்படுகிறார்கள். கனம் நிதி மந்திரி அவர்கள் ஸ்ரீ முத்துராமலிங்க தேவருக்கு ஒரு கடந்த கால சரித்திரம் இருப்பதாகவும் அவர் அப்பிரதேசத்தில் கடந்த 10 வருஷ காலத்தில் ஏற்பட்ட சூழ்நிலையின் சிருஷ்டியே என்பதாகவும் சொன்னார். அந்த சூழ்நிலையை மாற்றுவதற்கு ஏன் முயற்சிக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன். அதே ஜில்லாவிலிருந்து வரக் கூடியவர்தான் இன்றைக்கு முதல் அமைச்சராக இருக்கும் திரு. காமராஜர். இருவரும் ஒரே இயக்கத்தில்தான் இருந்தார்கள். இப்போது மாறுபட்ட கருத்துக்கள் உடையவர்களாக இருக்கிறார்கள். ஸ்ரீ தேவர் ஜாதி அடிப்படையில் மக்களை பயன்படுத்திக்கொண்டார் என்று சொன்னால்

களும் முதல் அமைச்சரும் ஒரு விதத்தில் ஜாதி அடிப்படையில் மக்களைப் பயன்படுத்திக்கொள்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா என்று கேட்கிறேன். இல்லாவிட்டால் ஏன் இந்த மனோபாவம் ? சாதியும் இருக்கிறதென்று சொல்லிக்கொள்கிறேன். சாதியை அரசியலுக்குச் சரண்டாதீர்கள். முத்துராமலிங்கத் தேவர் சாதி உண்டாக்கி வருகிறார் என்றால் அதை நான் ஒரு நாளும் ஒத்துக்கொள்ளமாட்டேன். யார் அதைச் செய்தாலும் அதை நாங்கள் எதிர்க்கத் தயார்.

தேவர் அவர்களுக்கு அந்தப் பிராந்தியத்தில் இருக்கும் செல்வாக்குக்குக் காரணம், அந்தப் பிராந்தியம் மிகவும் பிற்போக்காக இருப்பது ஆகும். அதை அவர் இந்த சர்க்காருக்கு விரோதமாக நாடார்கள் வேண்டுமென்றே செய்வது போன்ற ஒரு நிலையில் சாதி வெறுப்புணர்ச்சியை உண்டாக்கி, அதை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்கிறார் என்பது உங்கள் குற்றச்சாட்டானால், இத்தனை நாளும் நீங்கள் ஏன் அந்தப் பகுதியின் அபிவிருத்தியைக் கவனிக்காமல் இருந்து வந்திருக்கிறீர்கள் ? இப்போது போலீஸ் மந்திரி சொல்லவில்லை. நிதி மந்திரி அவர்கள் அதை ஒத்துக்கொள்ளுகிறார்கள். வெளியிலிருந்து வந்த அறிவாளிகள் அதை சுட்டிக்காட்டிவிட்டுப் போய் இருப்பதனால் இப்படி அந்தப் பகுதியின் அபிவிருத்திக்குச் சில காரியங்கள் செய்யப்படவேண்டியது அவசியம் என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்க்ள் போலிருக்கிறது.

இப்படி ரோடுகள் போடுவது என்றால் ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர், மூக்கையத் தேவர் அவர்களே அதற்கு விரோதமாக இருக்கிறார்கள், அவர்களே வேண்டாம் என்கிறார்கள், செய்வதானாலும் அதற்கு எதிராக வேலை செய்கிறார்கள் என்பதாகச் சிலர் சொன்னார்கள். அவர் நம்முடைய தேசீய இயக்கத்தின் பிரதிநிதியாக இருந்து வந்திருக்கிறார். 1946-லிருந்து 1952 வரைக்கும் உங்களுக்குப் பக்கபலமாக இருந்திருக்கிறார். நமது முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பிராந்தியத்தையே சேர்ந்தவர் தான். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும் இருந்திருக்கிறார். அந்தப் பிராந்தியத்தில் காங்கிரஸுக்கு விரோதமான ஒரு சூழ்நிலையை அவர் சிருஷ்டித்து வந்தார் என்றால் அதை அப்போதே தடுப்பதற்கு இவருக்குச் செல்வாக்கு அங்கே கிடையாதா ? அவரோடு சுமுகமாக இருந்து நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கலாம்.

இப்போது ஹரிஜன மக்களுக்கு பூர்ண பாதுகாப்பு கொடுப்பதைப் பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. அதை நான் பூர்ணமாக ஆதரிக்கிறேன். ஆனால் அந்தப் பிராந்தியத்திலுள்ள இரு சமூகத்தினரிடையேயும் நல்லதொரு சுமுகமான சூழ்நிலை சிருஷ்டிக்காத வரையில் சாத்தியப்படுமா ? இன்றைக்கு ஹரிஜன மக்கள் தங்களுக்கு உறுதுணையாக இருந்த அரும்பெருந் தலைவனை வேறு இழந்து நிற்கிறார்கள். மறவர்கள் மீது நீங்கள் வேண்டுமென்றே பழி வாங்கிக்கொண்டீர்கள் என்ற களங்கம் ராஜ்யம் பூராவும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் பலவாறாக பேசிக்கொண்டிருக்கிறார் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். சர்க்காரிடம் இருக்கும் துப்பாக்கி வெறும் சோளத்தட்டை இல்லை சுட்டால் மறவர்களையும் கொல்லும் என்கிற மனோபாவத்துடன் தான் ஐந்து மறவர்கள் கட்டிவைக்கப்பட்டு சுடப்பட்டிருக்கிறார்கள் என்கிற எண்ணம் நம் ராஜ்யம் பூராவும், தேசம் பூராவும் பரவி, இருக்கிறது.

இந்தச் சமயத்தில் அந்தப் பகுதி மக்களிடையே சென்று நியாயத்தை விசாரித்து அவர்களுள்ளே சமரச மனோபாவத்தை உண்டாக்க எல்லாக் கட்சிகளுக்கும் உரிமை இருக்கிறது. தேர்தல் சமயத்தில் காங்கிரஸ் [illegible] அந்தப் பிராந்தியத்தில் பிரசாரம் செய்த முறைகளைப் பற்றிச் சொன்னார்கள். அதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. எல்லாக் கட்சிகளுக்கும், கூட்டம் போடவும், பிரசாரம் செய்யவும் உரிமை உண்டு என்கிற கொள்கை உடையவன் தான். ஆகவே காங்கிரஸ் அங்கே சென்று பிரசாரம் செய்தது தப்பு





என்று சொல்லமாட்டேன். அந்தப் பகுதி மக்களுடைய கஷ்டத்தைப் போக்குவதற்கு சில கோடி ரூபாய்கள் அங்கே செலவழிக்கப்படவேண்டும் என்று சொன்னால் அதை நாம் பூர்ணமாக ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் இப்போது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

நெய் பாதி உருகி, பாதி உருகாமல் கெட்டியாக இருக்கிறது என்றார்கள். நெய் முழுக்க உருகவேண்டியதுதான் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். நெய்யை உருக்க நெய்யுள்ள பானைக்கு அடியில் நெருப்பை வைப்பார்கள். நெய்க்குள்ளே நெருப்பை எடுத்துப் போட்டுவிடுகிறோம் என்று இவர்கள் சொல்கிறார்கள். இது சரியா ? மறவர்கள் சாதித் துவேஷத்தை வளர்க்கிறார்கள் என்றால் மறவர்களைச் சுட்டுத் தள்ளு என்கிற முறையில் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இது ஹரிஜன மக்களுடைய புண்ணைத்தான் ஆற்றுமா ? மறவர்குல மக்களுடைய நெஞ்சத்தின் புண்ணைத்தான் ஆற்றுமா ? எனக்கு ஒரு தனி மனிதனைப் பற்றிக் கவலை இல்லை. மகாத்மா காந்தி சாதி வெறிக்காக பலியிடப்பட்டார். அதைச் சொல்லித் சொல்லித்தான் இன்றைக்கு நாம் சாதி ஒற்றுமையை உண்டாக்கப் பாடுபடுகிறோம். சாதி வெறிக்காக தனிப்பட்ட ஒரு மனிதர், ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் இறந்தார் என்றாலும் பரவாயில்லை. அவரும் அதைத்தான் வரவேற்கவேண்டும். அப்போது அவர் அமரர் ஆகிவிடுவார். ஆனால் இந்த ஒரு காரணத்தைக் காட்டி நீங்கள் இப்போது செய்து கொண்டிருக்கும் காரியங்கள் சரியானதுதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

போலீஸ் அந்தப் பிராந்தியத்தை விட்டு வாபஸ் வாங்கவேண்டுமென்று நானோ என் கட்சியைச் சார்ந்தவர்கள் யாருமோ இங்கேயோ வெளியிலோ இதுவரையில் சொன்னது இல்லை. அங்கே அமைதி ஏற்படுகிற வரையில் இருக்கத்தான் வேண்டும். அதை மனப்பூர்வமாக ஒத்துக் கொள்கிறேன். ஆனால் துப்பாக்கிப் பிரயோகத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையாவது உடனடியாக அந்தப் பிராந்தியத்திலிருந்து மாற்றவேண்டும். கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்த மட்டிலும் எல்லாக் கட்சிகளுடனும் சேர்ந்து அந்தப் பிராந்திய மக்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டும் என்று தான் விரும்புகிறது. ஏதோ சில காரியங்களும் செய்துகொண்டிருக்கிறது. போதுமான அதிக நிதியை வசூல்செய்து அனுப்ப எங்களால் முடியாதிருக்கலாம். ராமகிருஷ்ண ஸ்தாபனத்தின் மூலம் ஏதோ செய்து கொண்டிருக்கிறோம். சில தொகைகள் போய்க்கொண்டிருக்கிறது. இப்போது யார் அதிகம் செய்கிறார்கள் என்பது பிரச்னை அல்ல. இன்றைக்கு நாம் அவர்களுடைய பக்கத்திலேயே சென்று அவர்களுக்கு அமைதியை உண்டுபண்ணிவைக்கக் கையாளுகின்ற முறை சரியாக இருக்க வேண்டும். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது எப்படியிருந்தாலும் ஒரு நல்ல விளைவு உண்டாகியிருக்கிறது என்று சொல்லலாம். போலீஸ் மந்திரி ஒத்துக்கொள்கிறாரோ என்னமோ ? நிதி மந்திரி அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். இனி போலீஸ் சுடுவதானால் அக்கிரமமாக உயிர்களுக்குச் சேதம் உண்டாகும் வகையில் சுடாது என்றார்கள். ஒரு போலீஸ் அதிகாரி சுடு என உத்திரவிட்டால் ஒரு போலீஸ்காரன் தவறாக நான் சுடமாட்டேன் எனத் துப்பாக்கியைக் கீழே போட்டால் அவன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? நடவடிக்கை எடுக்கப்படாது என்கிற உத்திரவாதம் சர்க்கார் கொடுக்கவேண்டும். (**The Hon. Sri C. Subramaniam:** தவறாக நடக்கமாட்டேன் என்றால் அவனுக்கு காங்கிரஸ் அரசாங்கம் பரிசு கொடுக்கும்.) இப்போது இப்படி விளைவுகளைக் கண்டு 'பிச்சுக்கொண்டு போகலாம்'. போலீஸ் அதிகாரி அப்படி உத்திரவு போடுகிறார் என்றால் அவன் பண்பு போலீஸ் மந்திரியின் பண்புதானே ? நீங்கள் மறவர்களைச் சுடுங்கள் என்று சொல்லவேண்டும்? "துப்பாக்கி சோளத் தட்டை இல்லை என்பதைக் காட்டுங்கள். அவர்களுக்கு நல்ல புத்தி கற்பியுங்கள்" என்றால் போச்சு. அதைத்தான் செய்திருக்கிறீர்கள்.

**Mr. Ray says we should shoot into the thick of the crowd and shoot to kill.**

இதுதான் எனக்கு கிடைத்து இருக்கக்கூடிய தகவல்.

THE HON. SRI C. SUBRAMANIAM : They are general instructions in respect of shooting by Police. We want to change them and the question is under consideration.

SRI M. KALYANASUNDARAM : மத்திய சர்க்காரில் இருந்து வேறு ஒரு யோசனை வந்திருக்கிறது. அதன் பிறகுகூட துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. ஆனால் நமது அரசாங்கம் போலீஸ் அதிகாரிகளுக்கு Shoot to kill என்று உத்தரவு கொடுத்தார்கள். அதாவது வேலை செய்யவேண்டுமென்று நோக்கத்தோடு இல்லாவிட்டால் அவர்கள் Shoot to dispose என்று உத்தரவு போட்டிருப்பார்கள்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Assured.

SRI M. KALYANASUNDARAM : கனம் மந்திரி அவர்கள் இந்த மாதிரி அசாதாரணமான வார்த்தைகளை உபயோகிக்கலாமா ?

MR. SPEAKER : May I request that the discussion take place in a very cool and calm manner without the Members getting excited? The Hon. Minister for Finance, when he replies, may refer to all this.

SRI M. KALYANASUNDARAM : Shoot to kill என்று தான் உத்திரவு இருக்கிறது. அதனால் துப்பாக்கி பிரயோகம் அவ்வளவு பெரும் அளவில் ஏற்பட்டிருக்கிறது. போலீஸ்காரர்கள் இந்த மாதிரி நடந்துகொண்டதற்குக் காரணம் கனம் மந்திரி அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய உத்தரவுதான். இம்மாதிரி அவர்கள் போலிஸ்காரர்களுடைய அதிகாரத்தை உயர்த்தி இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நாம் போலீஸ்காரர்களிடமிருந்து இன்னும் அதிகமாக எப்படி எதிர்பார்க்க முடியும். கீழத்தூவல் கிராமத்தில் Inspector Ray-ன் தலைமையில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது, ஒரு பச்சைக் கொலை. அதற்கு இன்ஸ்பெக்டர் " Ray " தான் பொறுப்பாளி. இதுதான் அவர் முதல் கடமை. அவர் முதல் தடவையாக கொலை செய்யவில்லை. இம்மாதிரி பல தடவை பச்சையாக கொலை செய்திருக்கிறார்.

THE HON. SRI C. SUBRAMANIAM : பத்து வருஷத்திற்கு முன் ஏற்பட்ட ஒரு துப்பாக்கி பிரயோகத்தில்தான் இவர் கலந்து கொண்டார். அதற்கு பிறகு இம்மாதிரி துப்பாக்கி பிரயோகத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை என்று ரிகார்டில் இருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : இந்த ரிகார்டுகள் எப்படி தயாரிக்க முடியும் என்று எனக்குத் தெரியும். நான் இதுபற்றிய விவரங்களை சேகரித்து இருக்கிறேன். சர்க்காருடைய உண்மையான நோக்கம் என்ன என்றால் எனக்குத் தெரியும். நிலைமை கட்டுக்கடங்காமல் உயிருக்கே ஆபத்துவரும் என்று கருதினால் தவிர, போலீஸ்காரர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்யக்கூடாது. ஆனால் இந்த சம்பவங்களில் ஜனங்கள் போலீஸ்காரர்களை எதிர்க்கிறார்கள் என்ற ஒரு காரணத்துடன்தான் முதல் தடவையாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இதை மறுக்கிறார்கள். இது சம்பந்தமாக Chief Secretaryயுடன் டெலிபோனின் மூலமாக பேசி இருக்கிறார்கள். அந்த அதிகாரி இந்தச் சதியைப் பற்றித்தான் மந்திரி அவர்களிடமிருந்து உத்திரவு எடுத்திருக்க வேண்டும். ஆனால் மந்திரி அவர்கள் அதுஇதைப்பற்றியது அல்ல என்று மறுக்கிறார். ஆனால் இந்த சதி ஆலோசனையில் மந்திரி அவர்களும் ஈடுபட்டிருக்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் 5 பேர்களை சுட்டார்கள். அது விஷயமாக 10 வயது பையன், 12 வயது பையன், 43 வயது பெண்மணியும் அந்த போலீஸ்காரர்கள் சுட்டதை தாங்கள் நேரில் கண்ணால்



பார்த்ததாக கூறினார்கள். இதை யாராவது மறுக்க முடியுமா ? Fact Finding Officer குறுக்கு விசாரணை நடத்தும் போது எத்தனையோ கேள்விகள் போட்டிருப்பார். ஆனால் போலீஸ்காரர்கள் தான் கட்டிவைத்து சுட்டார்கள் என்று அவர்கள் உறுதியாக சொன்னார்கள். இதுதான உண்மையான விஷயம். இதை முக்கியமாக கவனிக்கவேண்டும், ஆனால் விசாரணையைப்பற்றி வெங்கடேஸ்வரன் அறிக்கையில் சொல்லுவதாவது.

I have already held that the villagers' version is false. It is common ground that the five Thevars fell dead in the tank. If there was no opposition to what the Police Party was doing or wanted to do in the village, there could have been no clash between 1 p.m. the party and the villagers, and there would have been no need for the Police to resort to firing. It is undeniable, therefore that there was an attack on the Police and that Police had to open fire.

தவிர அந்த கிராமத்தில் இருந்து பெரிய மனிதர் இருவர், ஸ்ரீ செல்லத் தேவர், ஸ்ரீ சர்வைக்காரத் தேவர் என்பவரும் இந்த சம்பவங்களைபற்றி நன்றாகத் தெரியும் என்றும் Fact Finding Officer இடம் Evidence சொல்ல பயப்படுகிறார்கள் என்றும் ஸ்ரீ வெங்கடேஸ்வரன் ரிபோர்ட் இருக்கிறது. அதாவது, A.P.P. அனுப்பிய மெமொராண்டத்தை பார்த்து பயந்து இது மாதிரி சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டு பேர்கள் அப்படி சாட்சியம் சொல்லி அதனால் ஏற்படும் விளைவுகளை அனுபவித்தால்தான் என்ன? உண்மை நிலைதான் அரசாங்கத்திற்கு தெரியுமே. அதே மாதிரித்தான் சர்வைக்காரத் தேவர் விஷயத்திலும் அனுசரிக்கப்பட்டது. இந்த கீழத்தூவல் கிராமத்தில் பஞ்சாயத்தார் ஒருவர்தான் அகப்பட்டார் என்றும், அதனால் அவரை சாட்சியம் கூற வற்புறுத்தவில்லை என்று [illegible] Chella Thevan is a very material witness and I want to examine him. But the Assistant Public Prosecutor filed a memorandum on behalf of the Police pointing out that Chella Thevan is mortally afraid to come and give evidence. The only man of Kilathooval who was available for acting as panchayatdar was Servaikara Thevar, but in his case also the Assistant Public Prosecutor filed a memorandum as in the case of Chella Thevan and I decided that it would not be reasonable to compel him to give evidence.

நான் சட்டப்படி சொல்கிறேன். நியாயத்தின் பேரால் சொல்கிறேன். எங்களுக்குப் பயமாயிருக்கிறது என்று இரண்டு சாட்சிகள் சாட்சியம் சொல்ல மறுத்தார்கள். வெங்கடேஸ்வரனுக்கே சாட்சிகளைக் கூப்பிட அதிகாரமிருக்கிறது. ரிக்கார்ட்களைக் கேட்க அதிகாரமிருக்கிறது. சாட்சிகளைக்கொண்டு வாருங்கள் என்று அவர் சொன்னாரா ? என்னையும் ஒரு சதி வழக்கில் போட்டிருந்தார்கள். ஒன்றல்ல. இரண்டு சதி வழக்குகளில். ஒன்று திருச்சியில், மற்றொன்று சேலத்தில். நான் ஒரு உயிருக்கும் ஆபத்து உண்டாக்கவில்லை. ஒருவரையும் நான் தாக்கவில்லை. என் கைகொண்டு நான் ஒருவரையும் அடித்ததுகூட இல்லை. நான் அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்து பலாத்காரத்தில் ஈடுபட்டேன் என்று என் மீது குற்றம் சாட்டப்பட்டது. 52-ம் வருஷத் தேர்தலுக்குப் பிறகு அதை வாபஸ் வாங்கிவிட்டார்கள். ஆனால் மற்றவர்களின் பேரில் வழக்கு நடந்து சிலர் தண்டிக்கப்பட்டு பெருமாளனவர் விடுதலை அடைந்தார்கள். அப்பொழுது ஒருவர் சாட்சியம் சொல்ல வந்தார். அவருக்கு இரண்டு வருஷ காலம் போதுமான பாதுகாப்பு கொடுத்து, ஸ்பெஷல் பிராஞ்சின் கவனத்தில் அவரை வைத்து அவருக்கு மாதம் 150 ரூபாய் சம்பளமும் கொடுத்து அவருக்கு ஒரு வேலையும் வாங்கிக் கொடுக்கப்பட்டது. அப்படி அவருக்கு பாதுகாப்பு அளித்த சர்க்காருக்கு இன்று இரண்டு பேர்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியவில்லையா என்று கேட்கிறேன். ஆகவே, அப்படி அவர்களைச்

கூப்பிட்டு விசாரிக்க முடியவில்லை என்று வெங்கடேஸ்வரன் அவர்கள் சொன்னார்கள் என்றால், இப்படிப்பட்டவர்களை நம்பினால் மறவர்களையாகட்டும் அல்லது ஹரிஜனங்களையாகட்டும், அவர்களை எப்படி பாதுகாக்க முடியும். போலீஸ் இருக்க வேண்டியது அவசியந்தான். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் போலீஸ் மக்களின் பாதுகாவலனாக இருக்கவேண்டும். போலீஸ், மக்களின் உயிரையும், உடைமையும் பாதுகாக்க இருக்கவேண்டும். இச்சபையில் நாங்கள், கம்யூனிஸ்ட் கட்சி, இங்கு இன்று நான்கு பேர்கள் தான் இருக்கலாம். அதைப்பற்றி நீங்கள் என்ன சொன்னாலும், அதனால் எனக்கு சோர்வு ஏற்படப் போவதில்லை. நான் அகிலயிந்தியக் கட்சியைச் சேர்ந்தவன். காங்கிரஸும் அகிலந்திய கட்சிதான். அண்டை ராஜ்யத்தில், கேரள ராஜ்யத்தில் அங்குள்ள மந்திரிசபை இம்மாதிரி சூழ்நிலையில் எப்படி நடக்கிறது என்பதைப் பாருங்கள். அதேபோல் இருக்கவேண்டும். போலீஸ் வேண்டியதுதான். ஆனால் நேர்மையான போலீஸாக இருக்க வேண்டும். மக்களுக்கு சேவை செய்யும் போலீஸாக இருக்கவேண்டும். மக்கள் நடத்துகிற சட்டபூர்வமான இயக்கத்திற்கு பாதுகாப்பு கொடுக்கும் படியாக இருக்கவேண்டும். உங்கள் இஷ்டப்படியுள்ள போலீஸை வைத்துக்கொண்டும் உங்களால் இரண்டு பேர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க முடியவில்லை. ஆகவே விசாரிக்கவில்லை என்று சொன்னால் அதை நம்பமுடியவில்லை. அந்த அதிகாரியின் ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டே சொல்கிறேன். இதேபோல் ஒவ்வொரு பாகத்தையும் பிச்சுப் பிச்சுக் காட்ட முடியும். ரேயின் தலைமையில் ஐந்து பேரைக் கொன்றதற்கு மோட்டிவ் இருக்கிறதா? இருக்கிறது. அப்படி சிலரைக் கொன்றால்தான் அதற்குப் பிறகு அங்கு பயம் ஏற்படும். இதன் பின் அவர்கள் பயத்தோடு இருப்பார்கள் என்பது தானே உத்தேசம். நான் சொல்கிறேன், ஆளும் கட்சி என்றோ அல்லது எதிர்கட்சி என்றோ, வாதப்பிரதிவாதத்தில் யார் சிறந்தவர், யார் உயர்ந்தவர் என்று பிரச்னையாய் இதை ஆக்காதீர்கள் என்று ஹரிஜன மக்களின் பெயரால் உங்களை கேட்டுக் கொள்கிறேன். ஜாதிக் கொடுமையை, ஜாதியின் பெயரால் ஹரிஜனங்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை, போலீஸை உபயோகித்து, அக்கொடுமையை எதிர்த்து அவர்களைப் பாதுகாப்போம் என்று சொன்னார்கள். அதற்காவது நான் உங்களைப் பாராட்டுகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : மஹாத்மா அவர்கள், அவர்களின் உயிரையே அதற்காக கொடுக்கத் தயாராயிருந்தார்கள். அது எங்கள் பரம்பரைக் குணமாகும்.

Sri M. KALYANASUNDARAM : காந்திஜி உங்கள் சொத்து மாத்திரமல்ல. அவர் சொன்னபடியே நீங்கள் நடப்பதாக எங்களால் நினைக்க முடியாது. உண்மையில் இன்று கேரளாவில் நடக்கும் மந்திரிசபைதான் சிறந்த காங்கிரஸ் மந்திரி சபை. யாராயிருந்தாலும் சரி, சுப்பிரமணியமாயிருந்தாலும் சரி யாராயிருந்தாலும் சரி அவர்கள் சிறந்த காங்கிரஸ்காரராயிருக்கவேண்டும். நம் இஷ்டம் போல் நடக்க முடியவில்லையே என்ற அவருக்கு ஆத்திரம் வருகிறது.

Mr. SPEAKER : I know you are getting excited. Let us calmly and dispassionately discuss this. I hope you will listen to my appeal. It would be good and it would help.

Sri M. KALYANASUNDARAM : நான் சில உதாரணங்கள்தான் கொடுக்க முடிந்தது. நான் சொல்வது, விசாரணை சரிவர நடக்கவில்லை. விசாரணை ஒரு தலைப் பட்சமானது. முன்கூட்டியே ஒரு தீர்ப்பு தயாரிக்கப் பட்டது. வெங்கடேஸ்வரன் ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டே சொல்கிறேன். இதற்கென்ன தனியாக ஒரு விவாதம் நடத்துவதாயிருந்தால் இதைப்பற்றி நான் கூடுதல் விவரங்கள் சொல்லத்தயார். என்னைப்பற்றி மட்டமாகச் சொல்லி விட்டு இதைப்பற்றி ஒன்றும் கூடுதல் சொல்லாமல் போலீஸ் அமைச்சர் அவர்கள் பேசி விட்டு உட்கார்ந்து விட்டார்கள். அடுத்தபடி, நிதியமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு இழுக்கு ஏற்பட்டு விட்டது என்று பேசினார்கள். அவரைப் போல் நானும் ஒரு தமிழன் தான். தமிழ்நாட்டிற்கும், தமிழனுக்கும் இழுக்கை தேடித் தந்துவிட்டீர்களே.





10 வருஷங்களாக நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள். இந்தக் காலத்தில் நீங்கள் ஹரிஜனங்களின் மேம்பாட்டிற்காக என்ன செய்தீர்கள். சர்க்கார் கட்சியைச் சேர்ந்த சகஜானந்தா போன்றவர்கள் எல்லாம் ஹரிஜனங்களுக்குச் செய்யப்படும் கொடுமைகள் பற்றிச் சொன்னார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதுள்ள விவாதத்தின் மூலம் ராமனாதபுரத்தில் மட்டுமல்ல, மற்றப் பகுதிகளிலும் ஹரிஜனங்களுக்கு எவ்வளவோ கொடுமைகள் செய்யப்பட்டிருக்கிறது என்பது தெரிய வந்தது பற்றி எங்களுக்கு திருப்தி ஏற்படுகிறது. ஹரிஜனங்களின் மேம்பாட்டிற்காக திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று சொல்ல முடியும். அது பற்றி, ஹரிஜன மான்யம் வரும்போது சொல்லிக்கொள்கிறேன். நில உரிமைக்காக போராடிய விவசாயிகள், ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த விவசாயிகள். திருச்சியில் 400 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஹரிஜனங்கள் அல்லவா? சட்டத்திற்குப் புறம்பான உரிமைகளை அவர்கள் கேட்டார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அங்குள்ள நிலைமையை அரசியல் கட்சிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றுதான் நான் சொன்னேன்.

Sri M. KALYANASUNDARAM : எதிர்கட்சிக்காரர்கள் சொல்வதை ஒப்புக்கொண்டால் அவர்களின் செல்வாக்கு கூடி விடுமே என்ற குறுகிய புத்திதான் அதற்கு ஒப்புக்கொள்ளாததற்குக் காரணம்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : குறுகிய புத்தியோ என்னவோ. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அந்த உடன்பாட்டை ஒப்புக் கொள்ளாதது தான் அதற்குக் காரணம்.

Sri M. KALYANASUNDARAM : மந்திரிகளுக்கு இருக்கக் கூடிய ப்ரிவிலேஜ் பொஸிஷனை உபயோகித்துக்கொண்டு அவர்கள் குறுக்கு வழியில் எதிர் கட்சிக்காரர்களைத் தாக்குகிறார்கள். இப்படி குறுக்கு வழியில் தாக்கும் போலீஸ் அமைச்சர் கண்டிப்பாக சறுக்கித்தான் விழுவார்கள். எதிர்கட்சிக் காரர்கள் சொல்வதை ஒப்புக்கொண்டுவிட்டால் அவர்களது செல்வாக்கு உயர்ந்து விடுமே என்றுதான் அவர்கள் பயப்படுகிறார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலமாவது ஹரிஜன சமுதாயத்திற்கு இருக்கக்கூடிய குறைபாடுகளைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டதே இந்தத் தீர்மானம் வெற்றி பெற்றதுபோலாகும் என்று உறுதியோடு சொல்லிக்கொண்டு இந்தத் தீர்மானத்தை வற்புறுத்துகிறேன்.

Sri T. S. RAMASWAMY PILLAI : Before the Hon. the Leader of the House rise to speak, I would invite your attention to Rule 74, which says :

" . . . if the motion is moved by a non-official Member, the Minister to whose department the matter relates shall, after the mover has replied, have the right of speaking whether he has previously spoken in the debate or not."

The Hon. the Minister for Home has already spoken and can speak again but not the Hon. the Leader of the House.

Mr. SPEAKER : I have already given my ruling in the matter. The departments referred to by the Mover are represented by the Hon. the Minister for Finance and he has a right of reply.

Sri M. KALYANASUNDARAM : After all this is a motion of No-confidence. It does not mention anything specific and so any Minister can answer.

Mr. SPEAKER : Yes; any Minister can answer.

THE HON. SRI C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, திரு கல்யாணசுந்தரம் அவர்களுடைய பதிலை கேட்ட பிறகு அவைகளுக்கு திரும்பியும் பதில் சொல்லாமலிருப்பதுதான் நல்லது என்று படுகின்றது. அவர்கள் போலீஸ் மந்திரி அவர்களை குறிப்பிட்டு, இவர்கள் தான் போலீஸை கொண்டு சுட சொல்லியிருப்பார்கள் என்று அவர்கள் நேரிடையாக இதைப்பற்றி தெரியாவிட்டாலும் கூட இவ்விதமாக ஊகித்து அதை மிகவும் வற்புறுத்தி பேசினார்கள். எதிர்கட்சியில் இருக்கும் அங்கத்தினர்கள் உண்மையிலேயே திரு. பக்தவத்சலம் அவர்கள் போலீஸ்காரர்களை கொண்டு மறவர்களைச் சுடு என்று சொன்னார்கள் என்று குறிப்பிடுவதை நம்பினார்கள் அல்லது நம்புவார்கள் என்றால் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வோட்டு போடவேண்டியதுதான். கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் இந்த தீர்மானத்தை எந்த அடிப் படையில் கொண்டு வந்து வற்புறுத்துகிறேன் என்று விளக்கமாக சொல்லி யிருக்கிறார்கள். அவர்கள் ரே என்ற போலீஸ் அதிகாரியின் சாட்சியத்தை வைத்துக் கொண்டு வெளியிட்டுள்ள வெங்கடேஸ்வரன் அறிக்கையை நன்றாக அலசிப் பார்த்தும் கூட அவர் மூன்றாந்தர (Third class) மஜிஸ்ட்ரேட் என்ற அளவில்தான் இருந்து விசாரணை செய்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்த விதமாக ஒரு மூன்றாம்தர (Third class) மஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கூட விவாதம் செய்ய முடியாது.

SRI M. KALYANASUNDARAM : நான் வக்கீல் இல்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : வக்கீலாக இருந்திருந்தால் இவ்விதம் மோசமாக பேசியிருக்கமாட்டார்கள். அவர்களுடைய வாதத்தில் ரே என்ற போலீஸ் அதிகாரியின் சாட்சியத்தில் " Shoot to kill " என்ற Instruction கொடுக்கப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார் கள். இந்த instruction ராமநாதபுரத்திற்கு மாத்திரம் கொடுக்கப்பட வில்லை. இந்த instruction கொடுத்திருப்பதின் அர்த்தம் ஏதோ சுட்டுக் கொல்வதற்கு மாத்திரமல்ல. துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் பொழுது தப்பித்துக் கொள்ள முடியுமானால் ஜனங்கள் தப்பித்துக்கொள்வதற்கு தான் இந்த instruction கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு முன்னால் என்னன்ன பாதுகாப்புகள் கொடுக்க வேண்டும் என்று திட்ட வட்டமாக உத்தரவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது எல்லாக் காலங்களிலும் நடைபெறுவது கிடையாது. இந்த சட்டங்களை எல்லாம் மாற்ற வேண்டுமென்று சொல்வதில் ஒரு காரியத்தை நாம் ஆலோ சித்து பார்க்கவேண்டும். அரசியல் சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளில் கலவரங்களை அடக்குவதற்கும் பொதுக் கூட்டங்களைக் கலைப்பதற்கும் உபயோகிக்கப்பட்டு வருகின்ற முறையை மாற்ற வேண்டுமேயொழிய, கொலை, கொள்ளை, போலீஸை தாக்குவது போன்ற காரியங்கள் நடைபெறு மானால் அதை ஒடுக்கவேண்டியது சர்க்காருடைய கடமையாகும். அதற்காக இந்தச் சட்டங்களும் அவசியமாக வேண்டியிருக்கின்றன. அதெல்லாமல் போலீஸ் அமைச்சர் அவர்களை குற்றஞ் சாட்டுவதற்காக மாத்திரம் இவை களை சொல்வார்களேயானால் இதை அவர்களுக்கு விட்டு விடுகிறேன். அதே பிரகாரம் வெங்கடேஸ்வரன் அவர்களுடைய ரிப்போர்ட்டைப் பற்றி இரண்டு நாட்களாக விவாதம் நடந்தது. அதில் கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டு மணி நேரம் விவாதித்தது போதாது, இன்னும் ஒரு மணி நேரம் வேண்டும் என்றும் கேட்டார்கள். ஆகவே ஒரு முக்கியமான விஷயத்தை மாத்திரம் உங்கள் முன் சொல்ல விரும்புகிறேன். இந்த தீர்மானம் எந்த அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை ஆலோசித்துப் பார்த்து அதன் மீது முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். எனவே அங்கு இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களை வைத்துக்கொண்டு பார்த் தால், தவிர்க்க முடியாத நிலைமையில் இது நடந்திருக்கிறது என்பதை நாம் தள்ளி விட முடியாது. அங்குள்ள சந்தர்ப்ப சாட்சியங்களை வைத்துப் பார்த்தால் அங்கு நிச்சயமாக கட்டி வைத்து சுட்டது வெறும் பொய் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். ஆகவே இதற்கு இனியும்



ஒரு விசாரணை வைக்க வேண்டிய அவசியமில்லை என்பது எங்கள் அபிப் பிராயம். இவ்விதம் எண்ணுவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. அதை மறுப்பதற்கு மற்றவர்களுக்கும் உரிமை இருக்கிறது. ஆகவே கீழத்தூவல் விஷயத்தைப் பற்றி இதற்கு மேலும் விசாரணை அவசியமில்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இன்னொன் றும் சொன்னார்கள். அங்கு சாட்சியம் சொன்ன பையன்களுக்கு எல்லாம் பண்பாடு இல்லையா என்று கேட்டார்கள். அந்த இடங்களில் எந்த விதமான பண்பாடு இருந்து வந்ததோ அந்த பண்பாடு தான் அங்குள்ளவர்களுக்கும் இருக்கும். இது மனித இயற்கை. ஆகவே இதை எல்லாம் வைத்துக் கொண்டு, எவ்வித குற்றமும் செய்யாதவர்களை கட்டி வைத்து சுட்டார்கள் என்று அபாண்டமாக சொல்வதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆகவே இந்த விஷயங்களை இம்மாதிரியாக வேறு வழியில் சொன்னார்கள் என்றால் சொன்னவர்களுக்குத்தான் பண்பாடு இல்லையா, அவர்களுடைய மனம் இதைப் பற்றி ஆலோசிக்க ஏன் இடம் கொடுக்க வில்லை என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே இதில் தொடர்ந்து பதிலளிக்க எனக்கு சக்தி இப்போது இல்லை. சக்தி என்றால் என்னுடைய Physical சக்தியைத்தான் குறிப்பிடுகிறேன். இதற்கென்று நீண்ட விவாதம் இனியும் அவசியம் இல்லை என்று கருதுகிறேன். பொது வாக இன்றைக்கு வந்திருக்கக்கூடிய தீர்மானம் எந்த அடிப்படை யில் வந்திருக்கிறது என்பதைப் பார்த்து, மந்திரி அவர்கள் தான் சுட சொல்லியிருப்பார்கள், மந்திரி அவர்கள் குறுகிய புத்தியில் தான் போய் கொண்டிருக்கிறார்கள் என்றுள்ள குற்றச்சாட்டுகளை சொல்லுவதற்காக மாத்திரம் தான் இந்த தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பதை யும் பார்த்து நீங்கள் முடிவு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே தமிழ் நாட்டில் இருக்கிற மக்கள் யோசிப்பதற்கும் கடமைப் பட்டிருக்கிறார்கள், அந்த உரிமை எல்லோருக்கும் இருக்கிறது, எனவே இதை நியாய உணர்ச்சியுடன் ஆராய்ந்து பார்த்து நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் ஒரு விஷயத்தை மாத்திரம் கூற விரும்புகிறேன். இந்த தீர்மானம் வெற்றி பெறுவதாக இருந்தாலும் சரி, தோற்றுப்போவதாக இருந்தாலும் சரி, இந்த மந்திரி சபையில் இருப்பவர்கள் யாரும் தங்கள் சொந்த நலனுக்காக பதவியில் இருந்துகொண்டிருக்க வில்லை. நியாயத்திற்காகவும் நேர்மைக்காகவும் தான் இருந்து கொண்டிருக் கிறோம் என்பதை சொல்லிக்கொள்கிறேன். நியாயத்திற்கு விரோதமாக வும், தமிழர்களுடைய பண்பாட்டிற்கு விரோதமாகவும், தமிழர்களுடைய பண்பாட்டிற்கு எதிரான வழியிலும் போக மாட்டோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். இவைகளுக்கெல்லாம் இழுக்கு வராமல் தான் காரியங்களை செய்து கொண்டு வருகிறோம், மேலும் அவ்விதமே செய்துகொண்டு வருவதற்கு முயற்சிப்போம் என்றும் சொல்லிக்கொள் கின்றேன். இந்த மந்திரி சபை தான் ஆட்சியில் இருந்து வர வேண்டும் என்ற எந்த விதமான நிர்ப்பந்தமும் கிடையாது. வேறு எந்த மந்திரி சபை வேண்டுமானாலும் இங்கு ஆட்சிக்கு வரலாம். நாங்கள் தான் திறமையானவர்கள் என்று நாங்கள் சொல்ல தயாராக இல்லை. எங்கள் நிர்வாகத்திலும் பல குறைகள் இருக்கலாம். அவைகளை தீர்ப்பதற்கெல் லாம் எங்களால் இயன்ற அளவு முயற்சி செய்துகொண்டு தான் இருக்கி றோம், மேலும் முயற்சி செய்து கொண்டிருப்போம் என்று சொல்லிக் கொண்டு, இந்தத் தீர்மானத்தின் மீது முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பை எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு விட்டு விடுகின்றேன். அதோடு இந்த விவாதத்தின் கடைசியில் விவாதத்தின் தரம் கொஞ்சம் குறைந்து போனதற்காக என்னுடைய வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* SRI C. N. ANNADURAI : இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததன் நோக்கம், முதல் அமைச்சர் அவர்களின் பேரிலும், போலீஸ் அமைச்சர் அவர்களின் பேரிலும் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவருவதற்கு மாத்திரம் தான் என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நாங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கின்ற இந்த நேரத்திலே, நாங்கள் பேசுகின்ற பொழுது என்ன கூறினோம் என்பது நினைவிலே இருக்கின்றது. இந்தப் பிரச்னைக்கு

[Sri C. N. Annadurai] [31st October 1957

இரண்டு மந்திரிகள் பொறுப்பாளிகள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் ஒப்பவில்லை. விவாதத்தின் போது சர்க்கார் மீது குற்றம் சாட்டப்பட்டதற்குக் காரணம், விவாதத்தில் பேசும்போது எங்கள் கழகம் ஒரு கோணத்திலிருந்து பிரச்னையைப் பார்த்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் " Business Advisory Committee-ன் கூட்டத்தில் " கலகத்தைப் பற்றி விவாதிக்க வேண்டுமே தவிர நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டியதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது " என்பதைச் சொன்னார்கள் ; அந்தத் தீர்மானத்தை நாங்களும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், அதற்கு மாறுபட்டு இங்கு நடந்து விட்டதற்கு எங்கள் வருத்தத்தையும் எங்கள் கழகத்தின் சார்பில் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கலவரம் சம்பந்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் மீது நீதி மன்ற விசாரணை தேவையில்லை என்று கனம் அமைச்சர்கள் சொல்லும்போது, " அது தேவை " என்று வற்புறுத்த விரும்புகிறோம். ஆனால் அதை இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் வற்புறுத்துவோமானால் இரண்டு மந்திரிகளின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் வற்புறுத்துபவர்கள் ஆவோம் ; அப்படிச் செய்து அதன் விளைவுகளுக்கு கனம் அமைச்சர்களை உட்படுத்த விரும்பவில்லை. இந்தக் காரணங்களினால், இந்தச் சர்க்காரின்போக்கை நீதி விசாரணை அமைக்க ஒப்புக்கொள்ளாததற்காக கண்டிக்கும் முறையில் நானும் என்னுடைய கட்சி உறுப்பினர்களும் இப்போது இந்த மன்றத்தை விட்டு வெளியேறுகிறோம் (ஆரவாரம்). (All the D. M. K. Members staged a walk out.)

**Sri M. KALYANASUNDARAM : On a point of clarification, Sir.** நான் என் சார்பில் இப்போது ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். சர்க்கார் கட்சித் தலைவரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் சொன்னதிலிருந்து, என்னுடைய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் நோக்கமே கனம் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்களையும், கனம் ஸ்ரீ காமராஜ் அவர்களையும் அவர்களுடைய பதவிகளிலிருந்து நீக்குவது என்றும், அதற்கான குற்றச்சாட்டுகளை நான் கொண்டு வந்திருக்கிறேன் என்றும் கருதப்படுவதாகத் தெரிகிறது. ராமநாதபுரத்தில் நடந்த கலவரங்கள் சம்பந்தமாக சர்க்கார் இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்று நான் ஏற்கெனவே யோசனைகள் கொடுத்திருக்கிறேன் ; அந்த யோசனைகளை இவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை என்பது தான் என்னுடைய முக்கியமான நோக்கம். நான் கொடுத்த யோசனைகள் : (1) எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெற்று அமைதியை அங்கே நிலை நாட்டுவதற்கு ஏற்பாடுகள்செய்யவேண்டும் : (2) பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்க வேண்டும் ; (3) இந்த சம்பவங்கள் பூராவுக்கும் ஒரு பகிரங்க விசாரணை நடத்தவேண்டும் ; குறைந்த பட்சம், துப்பாக்கிப் பிரயோகங்களைப் பற்றியாவது விசாரணை நடத்தவேண்டும். துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட மற்ற இடங்களிலெல்லாம்—நடுவட்டத்திலும், டால்மியாபுரத்திலும், தூத்துக்குடியிலும்—கலகம் செய்தவர்கள் மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள். கீழத் தூவலில் கலகம் செய்தவர்கள் மீது வழக்குப் போடவில்லை ; ராமநாதபுரம் ஜில்லாவில் இப்போது நடந்த எந்த துப்பாக்கிப் பிரயோகத்தை எடுத்துக்கொண்டாலும் வழக்குப் போடவில்லை. துப்பாக்கிப் பிரயோகத்தின் மீது பகிரங்க விசாரணை நடத்த வேண்டும் என்பது என் கோரிக்கை. இவைகளையெல்லாம் இந்த சர்க்கார் செய்யத் தவறியதால் தான், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு கனம் அங்கத்தினர் move பண்ணினபோது அதை ஒரு குறிப்பிட்ட அளவு அங்கத்தினர்களாவது ஆமோதிக்கவேண்டுமென்ற விதி இருந்தது. அதன் பிரகாரம் எழுந்து நின்றவர்களில் சிலர் இப்போது வெளியில் சென்று விட்டனர் . . . .



31st October 1957]

**Mr. SPEAKER** : இந்த விஷயத்தை இப்போது கவனிக்க வேண்டியதில்லை. அந்தப் பிரேரணையை ஆதரித்து எத்தனை பேர் ஓட்டு அளிக்கிறார்கள் என்பது இப்போது சபைக்கே தெரியப்போகிறது.

I shall now put the No-confidence motion of Mr. Kalyanasundaram to vote of the House.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாண சுந்தரம் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சபையின் முன் ஓட்டுக்கு விடுகிறேன். அதை ஆதரிப்பவர்கள் " Aye " என்று சொல்லுங்கள் ; எதிர்ப்பவர்கள் " No " என்று சொல்லுங்கள்.

(ஓட்டுக்கு விடப்பட்ட பிறகு)

**Mr. SPEAKER** : " No " என்ற குரல் தான் ஜாஸ்தியாக கேட்கிறது அவர்கள் தான் வெற்றி பெற்றார்கள் என்பது என்னுடைய நம்பிக்கை.

(Sri V. K. Ramaswamy Mudaliyar and Sri M. Kalyanasundaram demanded a poll).

(The Division bell was rung.)

**Sri T. S. RAMASWAMY PILLAI** : We are not demanding a poll.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : We demand a poll.

**Mr. SPEAKER** : Any hon. Member can demand a poll. I think the Hon. the Leader of the Opposition demanded a poll. He may now go back. But that is not my point.

**Sri M. KALYANASUNDARAM** : I demand a poll, Sir.

**Mr. SPEAKER** : While the poll is being taken I request the hon. Members not to move out of their seats, not to talk or discuss till the result is announced.

(After the Division bell was over).

**Mr. SPEAKER** : Close all the doors. Now, no hon. Member can either go out or come in. Now I shall again put the motion to the vote of the House :

The question is—

'That this House expresses its want of confidence in the Ministry of which Sri K. Kamaraj Nadar is the Chief Minister '.

The Motion was put and declared lost.

The question was put and the House divided thus.

*Ayes.*

1 Sri P. S. Chinnadurai.
2 ,, A. R. Marimuthu.
3 ,, V. K. Ramaswamy Mudalier.
4 ,, T. S. Ramaswamy Pillai.
5 ,, M. Kalyanasundaram.
6 ,, S. Pakkiriswamy Pillai.
7 ,, K. Ramachandran.
8 ,, M. Jagannathan.
9 ,, N. K. Palaniswami.
10 ,, K. R. Nallasivam.
11 ,, M. D. Ramasami.
12 ,, N. Marudachalam.
13 ,, S. A. M. Annamalai Odayar.
14 ,, V. K. Kothandaraman.
15 Sri B. Doraiswami Reddiar.
16 ,, M. Jangal Reddiar.
17 ,, K. Sattanatha Karayalar.
18 ,, D. S Adimoolam.
19 ,, K. Mookiah Thevar.
20 ,, A. V. P. Periyavalaguruva Reddi.
21 ,, S. Ramasami Thevar.
22 ,, K. Gopala Gounder.
23 ,, T. L. Sasivarna Thevar.
24 ,, D. Subramania Rajakumar.
25 ,, V. Suppaya.
26 ,, Thirumalaimuthu Veera Sakkaya Thiruvenkadasami Naicker.
27 ,, P. Veerappa Koundar.
28 ,, T. Veluchami.

*Noes.*

1 Sri M. Bhaktavatsalu Naidu.
2 „ M. A. Muthia Chettiar.
3 „ C. R. Ramaswami.
4 „ M. J. Jamal Mohideen.
5 „ M. Alagirisamy.
6 „ G. Annamalaimuthuraja.
7 „ P. Appavu.
8 „ K. S. Ardhanareeswara Gounder.
9 „ M. A. B. Arumughasami.
10 „ V. S. Arunachalam.
11 „ V. Arunachala Thevar.
12 „ W. P. A. R. Chandrasekharan.
13 „ A. E. Chandrasekhara Nayagar.
14 „ R. Chidambara Bharathi.
15 „ V. Chinniah.
16 „ N. P. M. Chinniah Kounder.
17 „ S. Chinnakaruppa Thevar.
18 „ A Chinnasami.
19 „ N. V. Chockalingam.
20 „ T. T. Daniel.
21 The Hon. Sri K. Kamaraj Nadar.
22 „ C. Subramaniam.
23 „ M. Bhaktavatsalam.
24 „ M. A. Manickavelu.
25 „ P. Kakkan.
26 Sri P. G. Karuthiruman.
27 „ D. Dasarathan.
28 „ A. S. Duraiswami Reddiar.
29 „ N. Ekambara Mudali.
30 „ T. P. Elumalai.
31 „ G. Gomathi Sankara Dikshitar.
32 „ V. Govinduswami Naidu.
33 „ G. G. Gurumurthy.
34 „ K. S. G. Haja Sheriff.
35 „ P. Jayaraj.
36 „ R. Kandasami.
37 „ M. Kandasami Kandar.
38 „ M. R. Kandaswami Mudaliyar.
39 „ T. Karia Gounder.
40 „ Karuthappa Gounder.
41 „ S. Khader Sheriff.
42 „ Kolanda Gounder.
43 „ V. K. Krishnamurthy.
44 „ R. Krishnasami Gopalar.
45 „ R. Krishnasami Naidu.
46 „ R. Krishnasami Reddiar.
47 „ P. Kuppusami.
48 „ S. Lakhmana Gounder.
49 „ P. S. K. Lakshmipathiraj.
50 „ S. Lazar.
51 „ B. K. Linga Gowder.
52 „ N. Mahalingam.
53 „ T. Manavalan.
54 „ K. B. S. Mani.
55 „ P. G. Manickam.
56 „ V. S. Manickasundaram.
57 „ K. Marappa Gounder.
58 „ A. Mariappan.
59 „ M. K. Mariappan.
60 The Hon. Sri V. Ramaiah.
61 „ Srimathi Lourdhammal Simon.
62 Srimathi T. N Anandanayaki.
63 „ Hemalatha Devi.
64 „ Kamalambuja Ammal.
65 „ Kolanthai Ammal.
66 „ P. K. R. Lakshmikantam.
67 „ A. S. Ponnammal.
68 Srimathi Rajathi Kunchithapatham.
69 „ Savithri Shanmugam.
70 Sri J. Matha Gounder.
71 „ M. Mayandi Nadar.
72 „ P. M. Munusami Gounder.
73 „ K. K. Muthiah.
74 „ C. Muthiah Pillai.
75 „ V. A. Muthaiya.
76 „ M. C. Muthukumaraswamy.
77 „ M. Muthuswamy Nayagar.
78 „ S. Nagaraja Monigar.
79 „ T. M. Nallaswami.
80 „ G. Narayanaswami Naidu.
81 „ A. Nesamony.
82 „ K. N. Palanisami.
83 „ K. P. Palaniswamy.
84 „ K. G. Palaniswamy Gounder.
85 „ K. Pandiyaraj.
86 „ A. Y. S. Parisutha Nadar.
87 „ P. M. Periakaruppan Ambalam.
88 „ K. Periannan.
89 „ M. P. Periasami.
90 „ K. Ponnian.
91 „ P. P. M. T. Ponnusami.
92 „ A. Raja Gounder.
93 „ P. Ramachandran.
94 „ M. Ramachandra Reddiyar.
95 „ N. S. Ramalingam.
96 „ S. Ramalinga Padayachi.
97 „ T. R. Ramamirtha Thondaman.
98 „ S. Ramasami Naidu.
99 „ K. Ramasubbu.
100 „ S. S. Ramasamy Padayachi.
101 „ A. Chidambaranatha Nadar.
102 Srimathi Dr. Soundaram Ramachandran.
103 Sri K. L. Ramaswami.
104 „ A. A. Rasheed.
105 „ Rathnavel Gounder.
106 „ S. Sadasivam.
107 „ S. C. Sadayappa Mudaliar.
108 „ R. C. Samanna Gounder.
109 „ A. S. Sahajananda.
110 „ T. Sampath.
111 „ S. Sangili.
112 „ M. G. Sankar.
113 „ V. Sankaran.
114 „ T. V. Sannasi.
115 „ V. P. Sarangapani.
116 „ P. R. Sreenivasa Padayachi.
117 „ M. S. Selvaraj.
118 „ A. Senapathi Gounder.
119 „ T. Sivagnanam Pillai
120 „ M. K. Somasundaram.
121 „ R. Srinivasa Iyer.
122 „ A. S. Subbaraj.
123 „ T. K. Subbiah.
124 „ A. R Subbiah Mudaliar.
125 „ R. Subramaniam.
126 „ K. S. Subramania Gounder
127 „ N. S. Sundararajan.
128 „ R. Swaminatha Merkondar.
129 „ T. S. Swaminatha Odayar.
130 „ S. Thangavelu.
131 „ M. D. Thiagaraja Pillai.
132 „ N. R. Thiagarajan.
133 „ P. Urkavalan.
134 „ G. Vagheesam Pillai.



*Noes*—cont.

135 Sri K. Vasudevan.
136 „ A. Vedarathnam Pillai.
137 „ V. Vedayyan.
138 „ A. P. C. Veerabahu.
139 „ K. Vinayakam.
140 „ N. M. Vellappan.
141 Sri K. R. Viswanathan.
142 „ G. Venkatachala Nattar.
143 „ O. Venkatasubba Reddiar.
144 „ Kolandasami Gounder.
145 „ M. William.
146 „ P. Vedamanickam.

Ayes 28; Noes 146; Neutral Nil.

The motion was lost.

SRI K. VINAYAKAM: Mr. Speaker, Sir, if a member does not take part in the voting either for Ayes, Noes or Neutral, what is the position?

MR. SPEAKER: The Constitution expects every hon. Member should do his duty.

SRI K. VINAYAKAM: I want to know the provision in the Constitution.

MR. SPEAKER: There is no particular provision. We take it that all the Members have voted.

Before I adjourn the House may I take this opportunity of thanking the Members for carrying on the debate in a very high level and for avoiding unnecessary anger. I know this is a matter on which there can be much heat but the fact that the hon. Members listened to my appeal is a matter for which I am very grateful. May I once again give my grateful thanks to all the hon. Members present here for that.

The House will now adjourn and meet again at 9 a.m. on Friday, the 1st November 1957.

The House then adjourned.

61210